
கலைஞரின்
கடிதங்கள்



4

01.10.1976 - முதல்
01.04.1977 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 4

01.10.1976 - 01.04.1977

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

AVAILABLE @ :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
(சாய் பாபா கோவில் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
(SAI BABA TEMPLE BACK SIDE)
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்


KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
(கலைஞரின் செயலாளர்கள்)
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
சேகர் ஆப்செட், சென்னை–5.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
SEKAR OFFSET, CHENNAI - 5.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 1 மாதம் 6 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. 4051 **கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	தேதி	பக்கம்
301. நித்திய கலியாணியும் - சில நினைவுகளும்!	01-10-1976	23
302. குறிஞ்சி மலர் - குளிர் தரு!	02-10-1976	26
303. விடை மட்டுமல்ல; விளக்கமுங்கூட!	03-10-1976	30
304. நாடு தாங்காத - நகைச்சுவைக் காட்சிகள்!	08-10-1976	33
305. தொடரும் துன்பச் செய்திகள்!	09-10-1976	38
306. அமைதி - வீரத்தின் இலக்கணம்!	12-10-1976	41
307. விபத்தும் - வேதனையும்!	13-10-1976	44
308. "கிலுகிலுப்பையில் மயங்கி".....	14-10-1976	47
309. "தானாடாவிடினும்..."	15-10-1976	52
310. ஒரே வழி - உரிய வழி!	16-10-1976	56
311. கடும் பயணம் - கட்டைக் கால்கள்!	18-10-1976	59
312. உண்மையை அறிவீர்!	19-10-1976	63
313. பொறுத்திருந்து பார்ப்போம்!	24-10-1976	66
314. முறிந்த மரம்-முட்டுக்கொடுக்க முடியாது!	26-10-1976	70
315. நூற்றுக்கு நூறு கற்பனை!	27-10-1976	73

316. நல்ல முடிவை நாம் எதிர்பார்ப்போம்!	29-10-1976	77
317. "எக்ஸ்பிரஸ்" அன்று போலவே இன்றும்!	30-10-1976	83
318. முதுகில் விழுந்த குத்து!	02-11-1976	87
319. மார்க்கண்டேயன் மண விழா!	06-11-1976	91
320. ஓய்வுக்கு - ஒரு வேலை!	07-11-1976	96
321. சிங்கங்களும் சிறுநரிகளும்!	10-11-1976	100
322. இருக்குமிடம் தேடி...	13-11-1976	103
323. ஜனநாயகச் சோலை ஜவகர்!	14-11-1976	106
324. அவர்களை மாற்றுவது கடினம்!	15-11-1976	111
325. மீண்டும் நினைவுபடுத்துகிறேன்!	16-11-1976	115
326. மலைதரும் சந்தனம்! கடல் தரும் முத்து!	17-11-1976	119
327. வாழ்க அந்த அஞ்சா நெஞ்சம்!	18-11-1976	122
328. இந்த உடலின் மதிப்பு எவ்வளவு?	21-11-1976	125
329. தொடங்கிய பயணம் தொடருகிறது!	22-11-1976	128
330. தொடரட்டும் துயர் துடைப்புப் பணி!	27-11-1976	132
331. வாழ்த்திக் கொண்டே வளருவோம்!	31-11-1976	134
332. நன்னாளை எதிர்நோக்குவோம்!	01-12-1976	138
333. பெருநாள் வாழ்த்துக்கள்!	02-12-1976	141
334. உடுப்பியில் ஒரு பேட்டி!	05-12-1976	143
335. கோட்டூர்புரமும் - குமுதமும்!	06-12-1976	147

336. ஒவ்வொருநாளும் - நினைவு நாளே!	07-12-1976	151
337. ஏற்றுக்கொண்ட கருத்து! எச்சரிக்கையாகாது!!	09-12-1976	155
338. ஒருமித்த கருத்து உருவாக...!	10-12-1976	158
339. மறுபரிசீலனை செய்ய வேண்டுகிறேன்!	12-12-1976	161
340. 'அகில்' என விளங்கிடுவோம்!	13-12-1976	165
341. வானொலியார் கவனத்திற்கு!	14-12-1976	167
342. அள்ளக் குறையாத செல்வம்!	15-12-1976	170
343. பஞ்சாப் வாஞ்சிநாதன்!	17-12-1976	172
344. டெல்லிப் பயணம்!	19-12-1976	176
345. மகிழ்ச்சிக் கடலாகிறது, மனம்!	20-12-1976	179
346. தலைத்தாழாத் தத்துவ அறிஞர்!	21-12-1976	182
347. காடு மணக்கும் கவிதை!	22-12-1976	187
348. கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்!	24-12-1976	190
349. குளிர்நீர் கொதிக்கிறதோ?	28-12-1976	193
350. அடடா! அந்த நினைவுகள்!	29-12-1976	195
351. நாடு வாழ்ந்திட - நலிவு தீர்ந்திட!	30-12-1976	198
352. புதிய ஏடு புரள்கிறது!	01-01-1977	204
353. பாவம்! விசித்திர மனிதர்கள்!	04-01-1977	209
354. மறையாத மாணிக்கப் பரிதி!	06-01-1977	214
355. படமெடுக்கிறார்களே, என்னைப் பார்த்து - ஏன்?	08-01-1977	217

356. அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்!	09-01-1977	222
357. தெளிவுபடுத்திவிடுகிறேன்!	11-01-1977	226
358. இப்படியொரு பொங்கல் வாழ்த்து!	13-01-1977	230
359. பயிற்சி முகாமினர் படிக்க மறந்தது!	23-01-1977	232
360. அணையா விளக்கென அறிவிப்போம்!	26-01-1977	239
361. குடிலர்கள் ஜாக்கிரதை!	28-01-1977	244
362. தேய்பிறையல்ல; வளர்பிறையே!	29-01-1977	248
363. சோதிடங்கள் இன்னும் குறையவில்லை!	30-01-1977	253
364. உன்னையும் உன் உழைப்பையும் நம்பித்தான்!	31-01-1977	257
365. இந்தி எதிர்ப்பு வீரர்!	02-02-1977	263
366. "இருப்புக் கூட்டின் கதவு திறந்தது சிறுத்தையே வெளியில் வா!"	05-02-1977	269
367. வெற்றிக் கனி பறித்திடுவோம்!	06-02-1977	273
368. மதகரியா? சிறு நரியா?	07-02-1977	278
369. வருக! வெற்றியினைத் தருக!!	08-02-1977	282
370. எதிர்க்கட்சிகளின் நிலை - ஒரு எடுத்துக்காட்டு!	09-02-1977	284
371. மாலை - பூச்செண்டு - மணம் தரும் அத்தர்!	13-02-1977	288
372. மாருதி, மயிலைப் பழிக்கும் காலத்தை மாற்றிடுவோம்!	14-02-1977	292
373. என் வாழ்க்கையில் சிறந்த நாள்!	15-02-1977	296

374. அணி கண்டு எழுந்ததுபார் ஆத்திரம்!	18-02-1977	301
375. அரசியல் நாகரிகத்தை எதிர்பார்த்து....!	19-02-1977	305
376. உண்மை - உழைப்பு - ஒற்றுமை!	20-02-1977	310
377. இப்போதே புறப்படு, இனிய உடன்பிறப்பே!	21-02-1977	314
378. சுற்றுப்பயணம் - சில குறிப்புகள்!	22-02-1977	318
379. தேர்தல் வாண வேடிக்கை!	23-02-1977	321
380. நாடு விரும்புகிற நல்லதோர் மாற்றம்!	24-02-1977	324
381. நீ தேனீயே தான்!	26-02-1977	328
382. காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது!	27-02-1977	334
383. காக்கி உடையணியாத காவலராகப் பணியாற்றுக!	28-02-1977	339
384. வாகை சூடிடுவோம் வாரீர்!	10-03-1977	342
385. தேன் மழைச் செய்தி!	22-03-1977	345
386. விழா எடுப்போம் வாராய்!	24-03-1977	348
387. வெற்றிகள் நம்மை நாடி வரும்!	25-03-1977	356
388. இரட்டை நாக்குச் சின்னத்தார், இவர்!	26-03-1977	362
389. நீடித்த பதவியும் - நடத்திய பணியும்!	27-03-1977	365
390.“நெருக்கடி, எத்தனை நெருக்கடி”!	28-03-1977	368
391. புதிய நாடகத்துக்கு ஒரு ஒத்திகை!	29-03-1977	376

392. சூளுரைத்திடு; சுடர் முகந்தூக்கிடு!	30-03-1977	382
393. துள்ளிவரும் வேலெனத் தொண்டாற்றக் கிளம்பிடு!	31-03-1977	389
394. வெங்கட்ராமனும் சில விபரங்களும்!	01-04-1977	393

301. நித்திய கலியாணியும் - சில நினைவுகளும்!

உடன்பிறப்பே,

நித்திய கலியாணியைப் பற்றி ஏடுகளில் படித்திருப்பாய். பயங்கரமும் ஆபத்தும் நிறைந்த நோய் ஒன்றினைத் தீர்க்கும் அற்புத மூலிகை அதுவென்று மேல் நாட்டினர் ஆராய்ச்சி செய்து முடிவினை அறிவித்திருக்கின்றனர். இரத்தத்தின் அணுக்களை மாறச் செய்து நொடிப் பொழுதில் உடலெங்கும் பரவிக் கேடு பயக்கும் இரத்தப் புற்றுநோய்க்கு நித்திய கலியாணிச் செடியின் வேர் அருமையான மருந்தாம். இரத்தக் கொதிப்பு, இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கும் இந்தச் செடியின் வேரை மருந்தாகப் பயன்படுத்த முடியுமாம்.

மேல்நாட்டு மருத்துவ முறைகள் வந்த பிறகு நமது நாட்டு சித்த மருத்துவம், யுனானி, ஆயுர்வேதம் போன்ற முறைகளில் நாம் நம்பிக்கையிழந்துவிட்டோம். மேல்நாட்டு மருத்துவ முறைகளின் வளர்ச்சியைக் குறைத்து மதிப்பிடவும் முடியாது. அலட்சியப்படுத்தி ஒதுக்கிவிடவும் இயலாது. எனினும், நமது நாட்டில் கிடைக்கிற மூலிகைகள், கீரைகள், கிழங்குகள், காய்கறிகள், பழங்கள் இவைகளைப் பயன்படுத்துவதின் வாயிலாகப் பல நோய்களை தடுத்து நிறுத்துகிற வலிவினைப் பெற்றிட முடியும்.

இன்றைக்கு நித்திய கலியாணியைப் பற்றிய அரிய செய்தி, நமக்குக் கிடைத்திருக்கிறது. அந்தச் செடி, இதுவரையில் நமது கிராமங்களில் கேட்பாரற்றுக் காலில் மிதிபட்டுக் கொண்டிருந்தது. இப்போது அதற்கு ஓர் சிறப்பு ஏற்பட்டுள்ளது. மிக உன்னதமான மருந்தாகப் பயன்பட இருக்கிறது.

இந்த ஒரு செடி மட்டுமல்ல; செடியோ கொடியோ அல்லது மரமோ - ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான நோய்களைத் தீர்க்கப் பயன்படுகின்றன என்பதை சித்தர்கள் காலம் தொட்டு எடுத்துச் சொல்லி வருகிறார்கள்.

எடுத்துக்காட்டாக சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

வாத நோய்களைப் போக்குவதற்குச் சூரிய காந்தி.

கபம், மேல் மூச்சு, கொட்டும் இருமல் ஆகியவற்றுக்கு ஆடாதோடை, கண்டங்கத்திரி இவைகளின் சாற்றுடன் சர்க்கரையும் மிளகுத் தூளும் கலந்து காலை மாலை அருந்தினால் விரைவில் குணம் தெரியும்.

வெதுப்படக்கி அல்லது பேய் மிரட்டி என அழைக்கப்படும் செடியில் தயாரிக்கப்படும் மருந்து கடுமையான காய்ச்சலை அகற்றும்.

பல்லிப் பூண்டினையும் மிளகையும் சேர்த்து அரைத்துக் கொடுத்தால் பாம்பு தீண்டியதால் ஏற்பட்ட விஷம் இறங்கு மென்கிறார்கள்.

காமாலை நோய்க்கு, கீழ்க்காய் நெல்லியைச் சீரகத்துடன் அரைத்துப் பசும் பாலில் கலந்து கொடுத்தால் அந்த நோய் பறந்தோடும் என்பது கண்ணால் கண்ட உண்மை.

ஓரிலைத் தாமரையை அரைத்து அளவாகப் பசும்பாலுடன் கலந்து நாற்பத்தெட்டு நாட்கள் அருந்தினால் தாய்ப்பால் சுரக்கும். அமுலுக்கு அலைந்திடத் தேவையில்லை.

மருக்கொழுந்து மணந் தருவதற்கு மட்டுமே என்று கருதுகிறோம்; அந்தக் கொழுந்தைத் தவறாமல் உட்கொண்டால் பசியேற்படும். உடல் வலிவும் உண்டாகும்.

ஆகாயத் தாமரை, மூல நோயைக் கரைக்கும்.

ஓரிலைத் தாமரை - மலைப் பகுதிகளில் கிடைக்கக் கூடிய இதனைப் பக்குவப்படுத்தி முறைப்படி சாப்பிட்டு வந்தால் வீரியம் பெருகுவதோடு, விந்துவும் கட்டப்பெற்று பல நோய்களும் தீருமென்று அறுதியிட்டுக் கூறுகிறார்கள்.

கீல் பிடிப்பு, வாதங்களுக்கு - முடக்கத்தான் என்பதைத் துவையல் செய்து சாப்பிட்டால், வாதம் போன்றவைகளை வராமலே தடுக்கலாம்.

தூதுவளைச் செடியின் வேர், கபத்தைப் போக்கும், இதன் பூவை, நெய்யில் வதக்கித் தயிர்ப்பச்சடியில் சேர்த்து சாப்பிட்டால் அறிவு வளர்ச்சி ஏற்படுமாம்.

கோவை - இது ஒரு நகரத்தின் பெயரல்ல! ஒரு செடியின் பெயர்தான். இதன் இலையைக் கசக்கி நாய் கடியில் வைத்துக் கட்டினால் நஞ்சு இறங்கிவிடுமாம்.

வல்லாரையை வாடிக்கையாக உண்டு வந்தால் ஆயுள் நீடிக்குமென்கிறார்கள்.

முள்ளங்கிக் கிழங்கு ஒரு உயர்தரமான மூலிகை என்கிறார்கள். வாதம், கரப்பான், வயிற்று எரிச்சல், சூலை, குடல்வாதம், காசம், பல்நோய், குன்மம், மூலக்கடுப்பு இவைகளையெல்லாம் தீர்த்திடக்கூடிய அரிய கிழங்காகும் இது!

மாமரத்தின் வேர். சீதபேதியையும் வாந்தியையும் நீக்க வல்லது.

வில்வ மரத்தின் வேர், பல நோய்களைத் தீர்ப்பதோடு அழகையும் கொடுக்குமாம்.

புங்க மரத்தின் வேர், ரணங்களையும் புண்களையும் உடனடியாக ஆற்றக்கூடியது.

உடன்பிறப்பே, மரம், கிழங்கு, வேர், செடி, கொடிகள் எந்த அளவுக்கு நோய்களைத் தடுக்கவும், குணப்படுத்தவும் பயன்படுகின்றன என்பதற்குச் சிலவற்றையே தொகுத்து அளித்துள்ளேன்.

சித்த மருத்துவத்தில் ஆர்வங்கொண்டு அதன் முன்னேற்றத்துக்குப் பாடுபட்ட கழக அரசின் ஆதரவோடு விளக்க நூல்கள் பல வெளியிடப்பெற்றுள்ளன. அவைகளை வாங்கிப் படிப்பதின் வாயிலாக நோய்க்கு இடங்கொடாமல் கூடுமானவரையில் தடுத்துக் கொள்ளலாம்.

உடல் உறுதியாக இருந்தால்தான் - உள்ளம் உறுதியாக இருக்க முடியும்! உடனே "உன் சேதி என்ன?" என்று என்னைப் பார்த்துக் கேட்டுவிடாதே! விதிவிலக்குப் பட்டியலில் நான் ஒருவன்!

நித்திய கலியாணி பற்றிய செய்தி படித்தேன். நினைவுக்கு வந்தவற்றை உனக்கு எழுதினேன். முடிந்தவரை பயன்படுத்திக் கொள்ள முயற்சி செய்!

அன்புள்ள,

மு. க.

01-10-1976

302. குறிஞ்சி மலர் - குளிர் தரு!

உடன்பிறப்பே,

அக்டோபர் இரண்டாம் நாள்! இனி இரண்டு வித உணர்ச்சி களை இந்த நாளில் நம் இதயம் வெளிப்படுத்திக் கொண்டிருக்கும்.

குறிஞ்சி மலர்ந்த நாள் என்று இன்ப நினைவு நெஞ்சில் முளைத்திடும் - அந்தோ! குளிர் தருவொன்று சாய்ந்த நாளும் இந்த நாள்தானே என்ற துக்கம் ஒருபுறம் துளைத்திடும். தியாகத் திருவிளக்கு ஏற்றிவைக்கப்பட்ட நாள் இந்நாள்தானே என எண்ணிப் பெருமிதம் கொள்ளும்போதே; தியாகச்சுடர் ஒன்று அணைந்துவிட்டதும் இந்நாளில்தானே என்ற வேதனை வாட்டும். அதன்பின் வடிவம் பிறந்த நாள் என்று இதயம், அமுத மழை பொழியும் - ஆற்றலின் உருவம் மறைந்த நாள் என்ற நினைவு அரவமென நெளியும்! தேசத் தந்தை தோன்றிய நாள் எனும் இனிமைத் தேன் சொட்டும்! தீரர் காமராசர் நமைப் பிரிந்த நாள் என்ற கொடுமைத் தேள் கொட்டும்!

கடந்த ஆண்டு இதே நாளில் காந்தி பிறந்த நாளைக் கொண்டாட காலைக் கதிரோன் எழுந்தான். அவன் தலைமையில் வானப் பந்தரில் முகில்கள் கூடின. காந்தி வாழ்த்துப் பாடி, முழவுகளை ஒலித்தன. அண்ணலின் புகழ்பாடும் ஆனந்த நிகழ்ச்சியினூடே, பிற்பகலின் புலம்பல் சப்தம் கேட்டது! வானத்து முகில்களின் கண்ணீர் தமிழகத்துத் தலைநகரை நனைத்தது. ஏனிந்த ஓலம் எனக் கேட்டவாறு மாந்தரெல்லாம் வீடு துறந்து வீதிக்கு வந்தனர். தியாகச் சுடர் அணைந்து விட்டது! உழைப்பு, ஓய்வு பெற்றுக்கொண்டது! நாட்டின் எதிர்காலத்தை எண்ணித் துடித்துக்கொண்டிருந்த இதய நாடி, தன் துடிப்பை நிறுத்திக்கொண்டுவிட்டது!

என்ன பொருத்தம்! என்ன பொருத்தம்!!

ஒரு நாளின் முற்பகுதி காந்தியடிகளுக்காக - பிற்பகுதி காமராசருக்காக!

அக்டோபர் இரண்டாம் நாள் - இருவகை உணர்ச்சிகளின் வார்ப்படமாகிவிட்டது.

இந்த மண்ணின் விடுதலைக்காக - மக்களின் சுதந்திரத்திற்காக - அவர்களின் சுக வாழ்வுக்காகக் காலமெல்லாம் தொண்டு புரிந்தவர் காந்தியடிகள்.

தென்னாப்பிரிக்காவில் அவருக்கு ஏற்பட்ட இழிவுகளை அவர் தாங்கிக்கொண்ட காரணத்தினால்தான் உலகம் போற்றும் உத்தமராக அவரால் உயர முடிந்தது.

'டர்பன்' நகரத்து நீதிமன்றத்தில் தலைப்பாகை அணிந்து கொண்டு வழக்கறிஞராக அமர்ந்திருந்த காந்தியடிகளை, நீதிபதி ஆத்திரத்துடன் நோக்கி உடனே அதனைக் கழற்றி வைக்குமாறு ஆணையிட்டார். அதனை மறுத்து அடிகள், வெளியேறினார்.

மற்றொரு சமயம், அவர் தனது தலைப்பாகையை நீதிமன்றத்தில் மாட்டப்பட்டிருந்த மற்ற குல்லாய்களுக்கருகே மாட்டி வைத்தபோது அங்குள்ள கடைநிலை ஊழியர் ஒருவரால் கடுமையாக ஏசப்பட்டார்.

புகைவண்டியில் முதல்வகுப்புக்கான சீட்டு வாங்கியிருந்தும் கூட, கறுப்பர் என்ற காரணத்திற்காக அவரை மூன்றாம் வகுப்புக்குத் துரத்தினார்கள் அதிகாரிகள்.

ஒருமுறை தென்னாப்பிரிக்காவில் ஜோன்ஸ்பர்க்கிற்குப் போகக் குதிரை வண்டியில் அவர் ஏறிச் சென்ற போது அந்த வண்டிக்காரன் கையாலேயே பலமான அடிகளை முதுகிலும் கன்னத்திலும் பெற்றார்.

அவர் தெருவில் உலவுவதுகூட கௌரவக் குறைவானது என்று அங்குள்ள காவல்துறையினரால் தாக்கப்பட்டார்.

இந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்து எழுதிய தமிழ்த் தென்றல் திரு. வி. க. கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

> "மானக்கேடுகள், காந்தியடிகளின் பாலுள்ள களிம்பைப் போக்கும் கசப்பு மூலிகைகளாயின. மானக்கேடுகள், நிகழ நிகழக் காந்தியடிகளுக்கு ஆன்மஞான உணர்வு பெருகலாயிற்று. அப் பெருக்கம், அவரைத் தியாகமூர்த்தி ஆக்கிற்று."

அந்த இழிவுகளைத் தாங்கிக்கொள்ளாமல் மனம் இடிந்து போயிருப்பாரேயானால் இந்த நாடு ஒரு ஈடு இணையற்ற மாமணியை அன்றோ இழந்திருக்கும்.

காந்தியடிகளைப் போன்றே திடமான உள்ளமும் தியாக மனப்பான்மையும் பெற்றிருந்த காரணத்தினாலே தான் அவரது அழியாத வாரிசுகளிலே ஒருவராகக் காமராசர் திகழ்ந்தார்.

அவர் புறக்கணிக்கப்பட்ட நேரமானாலும், அல்லது அடக்கு முறைகளுக்கு ஆளாக்கப்பட்ட நேரமானாலும்-எந்த நேரத்திலும் தலைதாழாச் சிங்கமாக அவர் தனது வாழ்வை அமைத்துக் கொண்டார்.

இந்தியத் திருநாட்டு வரலாற்றிலும், சிறப்பாகத் தமிழ் நாட்டு வரலாற்றிலும் அந்தக் கர்ம வீரருக்கு நிலையான இடமுண்டு.

காந்தியடிகளின் பிறந்தநாள் விழா, வெறும் நிகழ்ச்சிக் கோவையாக முடிந்துவிடக் கூடாது!

அவர் வாழ்நாள் முழுதும் பாடுபட்ட தீண்டாமை ஒழிப்பு வெற்றி பெறவும், சாதிப் பூசல் பூண்டற்றுப் போகவும், நாடு முழுதும் மதுவிலக்குக் கொள்கை நடைமுறைக்கு வந்திடவும் அனைவரும் உறுதி எடுத்துக் கொண்டாக வேண்டும். அதுவே உண்மையான காந்தீய நெறிக்கு நாம் செலுத்தும் மரியாதையாகும்.

அண்ணல் காந்தி, ஆங்கிலப் புலமையும் இந்தி மொழித் திறனும் வாய்க்கப் பெற்றவர் எனினும் அவர், அவரது வாழ்க்கை வரலாற்றைத் தனது தாய் மொழியாம் குஜராத்தி மொழியிலேயே எழுதினார். இச் சிறப்புக்குரிய செயல், தாய்மொழிப் பற்றுக் கொள்ளுதல் எத்துணை இன்றியமையாதது என்பதை எடுத்துக் காட்டுகிறதன்றோ?

அன்பு, அமைதி, சமத்துவம், சமதர்மம், ஒழுக்கம், தாய்மொழிப் பற்று, சுதந்திரம், இன்னோரன்ன அருங்கொள்கைகளின் உறைவிட மாய் நடமாடியவர் உதயமான நாளை நாம் கொண்டாடுகிறபோது அந்தக் கொள்கை வழிநடக்கும் உறுதியினை மேற்கொள்வோம்!

அவரின் அன்பு மாணவர்களில் ஒருவராய், அயராத தியாகியாய், மக்களாட்சியின் மாண்பினை உணர்ந்தவராய், நமது மதிப்பிற்குரியவராய் வாழ்ந்த காமராசரை இழந்து கண்ணீர்

மல்கிட நிற்கும் இந்நாளில் அவரது தொண்டுள்ளத்தை உணர்ந்து தொடர்ந்திடுவோம் நமது பணியென சூளுரை ஏற்பதே மறைந்தவருக்குச் செலுத்தும் நன்றிக் கடனாகும்.

குறிஞ்சி மலர்

குளிர்தரு

இரண்டையும் நினைத்திடுவோம். அவர்தம் அழியா வாழ்வை நெஞ்சில் பதித்திடுவோம்.

அன்புள்ள,

மு. க.

02-10-1976

303. விடை மட்டுமல்ல; விளக்கமுங்கூட!

உடன்பிறப்பே,

நேற்று நான் எழுதிய கடிதத்தில் காந்தியடிகளைப் பற்றியும், காமராசரைப் பற்றியும் நமது கழகம் கட்டிக்காத்து வரும் அரசியல் பண்பாட்டுக்கேற்ப கருத்துக்களைக் குறிப்பிட்டிருந்தேன்.

மாற்றார் தோட்டத்து மல்லிகை என்பதற்காக அது மணக்காமல் இருக்காது-நிச்சயம் மணக்கவே செய்யும் என்ற அண்ணாவின் மொழிக்கொப்ப, நமது கழகத்தின் நடைமுறை களை வகுத்துக்கொண்டு "எங்கிருந்தாலும் வாழ்க!" எனும் பெருந்தன்மையை எதிர்முகாமிலே இருப்பவர்களிடத்தும் வெளிப் படுத்தி; கொள்கை வேறுபாடுகள் குறுக்கே நின்றாலுங்கூட, நாட்டுப்பணி - மொழிப்பணி - சமுதாயப்பணி ஆற்றிய பெரியவர்களை மதித்துப் போற்றும் பரந்த மனப்பான்மையைத் துளியும் இழந்துவிடாமல் செயல்பட்டு வருகிறோம் என்பதற்கு நமது கடந்த கால நிகழ்கால வரலாற்று நிகழ்ச்சிகள் சான்றாக நிலைத்துநிற்கின்றன!

தமிழ்ச் சான்றோர்களைப் பெருமைப்படுத்தி நமது நன்றி யுணர்வைக் காட்டிக்கொள்ள உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி கடற்கரையிலே சிலைகள் பல அமைத்த திருவிழா நடைபெற்ற போது, கதாபாத்திரங்களால் வேறுபட்ட கருத்துடையவராயினும் கவின்மிகு தமிழ்க்கவிதையால் கவரப்பட்டவர்கள்தான் என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம் கவிச்சக்ரவர்த்தி கம்பனுக்கும் சிலை வைக்கத் தவறவில்லை.

1959 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி நிர்வாகத்தைக் கழகம் ஏற்ற பிறகு காமராசருக்கு சிலை அமைத்து அதனைப் பண்டிதநேரு அவர்களை அழைத்துத் திறந்து வைத்த நிகழ்ச்சி தமிழ்நாட்டு சரித்திரத்தில் பொன்னேட்டில் பொறிக்கக் கூடியதாகும்.

திராவிடர் இயக்கத்தோடு நீங்காத் தொடர்பு கொண்ட பாவேந்தர் பாரதிதாசனுக்கு மட்டும் சிலையெடுத்து நிறுத்திவிட வில்லை. தேசீய மகாகவி பாரதிக்குச் சிலையெடுத்து, அவர் பிறந்து வளர்ந்த எட்டயபுரத்து இல்லத்தையும் கழக அரசு, தேசீயச் சின்னமாக்கியது.

தென்னாப்பிரிக்கா போராட்டத்தில் காந்தியடிகளுடன் இணைந்து நின்ற வீரத் தமிழச்சி வள்ளியம்மாளின் நினைவாக, தில்லையாடியில் வள்ளியம்மை நகர் உருவாக்கப்பட்டது.

கப்பலோட்டிய தமிழன் வீர சிதம்பரனார் சிறையில் இழுத்த செக்கு எங்கே எனத் தேடிக் கண்டுபிடித்து, அதனைச் சென்னையிலே காட்சிப் பொருளாக வைத்துள்ளோம்.

பெரியாருக்கும் பேரறிஞர் அண்ணாவுக்கும் நாடெங்கும் சிலைகள் எழுப்பப் பெற்றன.

மூதறிஞர் ராஜாஜி மறைந்த பின்னர் அவர் நினைவாகக் காந்தி மண்டபத்துக்கருகே ராஜாஜி நினைவாலயம் ஒன்றினை அமைத்தோம்.

தியாகச்சுடர் காமராஜரின் உடல் எரியூட்டப்பட்ட இடம், காந்தி மண்டபத்துக்கு அருகே நினைவகமாக உருவாக்கப்பட்டது. அவர் பிறந்த விருதுநகர் வீடு தேசிய சின்னமாக்கப்பட்டது.

சென்னையிலே பெரியார் பாலம், அண்ணா பாலம், காமராஜர் சாலை, திரு.வி.க. பாலம், மறைமலையடிகள் பாலம், காயிதே மில்லத் பாலம், சிதம்பரனார் நகர், வள்ளலார் நகர், அம்பேத்கர் கல்லூரி, காயிதே மில்லத் கல்லூரி, கலைவாணர் அரங்கம், தாகூர் பாரதி மண்டபம் அமைக்கும் ஏற்பாடு - திருவள்ளுவர் ஆலயம் புதுப்பித்தல், வரலாற்றுப் புகழ்மிக்க வள்ளுவர் கோட்டம், இளங்கோவின் சிலப்பதிகாரத்திற்குப் புதிய பூம்புகார், பரங்கியரை எதிர்த்த பாஞ்சாலங்குறிச்சியானின் வீரத்தைப் பறைசாற்ற எழுச்சிமிகு கோட்டை, குமரிமாவட்டத்தில் மார்ஷல் நேசமணி பாலம், இப்படி எழுதிக்கொண்டே போகலாம். இப்போது நினைவில் வந்ததை மட்டுமே தொகுத்துக் குறிப்பிடுகிறேன்; அவ்வளவு ஆர்வத்துடன் நன்றிக் கடன்கள் ஆற்றப்பட்டுள்ளன. அவை அழியாத வரலாற்றுச் சின்னங்களாகவும் ஆகிவிட்டிருக்கின்றன.

ராஜாஜி மண்டபத்திலிருந்த வெள்ளை அதிகாரிகளின் மிகப் பெரிய உருவப் படங்கள் ஒரேநாள் இரவில் அகற்றப்பட்டு அவைகள் இருந்த இடத்தில் நமது நாட்டு நாயகர்களின் திருஉருவப் படங்கள் அமைக்கப்பட்ட நிகழ்ச்சியைக் கண்டு மகிழ்ந்தவர்களும் உண்டு.

சிலைகள் அமைப்பது, சின்னங்கள் ஏற்படுத்துவது, பெயர்கள் மாற்றுவது, சாதாரண விஷயங்கள் அல்ல - அவை ஒரு சரித்திரத் திருப்பம் என்பதை எடுத்துக் காட்டுகிற வகையிலேதான் சென்னையிலே மேதகு ஆளுநர் அவர்கள் காமராஜரின் மற்றொரு சிலையைத் திறந்து வைக்கிறார். சென்னையில் பாரதி வாழ்ந்த இல்லத்தை அரசு வாங்கிடும் என அறிவித்துள்ளார். சென்னை 'பைகிராப்ட்ஸ் ரோடு' - பாரதி சாலையாகப் பெயர் மாறும் எனக் கூறியிருக்கிறார்.

சிலையில் என்ன இருக்கிறது?

பெயரில் என்ன இருக்கிறது?

இந்தக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்குத் தமிழக ஆளுநர் சுகாதியா அவர்களின் அறிவிப்புக்கள், விடைகள் மட்டுமல்ல; அரிய விளக்கங்களுமாகும்!

மக்களுக்காகப் பாடுபடுவதையும் மறந்து விடக் கூடாது! மக்களுக்காகப் பாடுபட்டவர்களையும் மறந்துவிடக்கூடாது! வரலாறுகளை உருவாக்கியவர்கள் மறைந்துவிடலாம் - ஆனால் அவர்கள் உருவாக்கிய வரலாற்றுச் சின்னங்கள் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கும்.

அன்புள்ள,

மு. க.

03-10-1976

304. நாடு தாங்காத - நகைச்சுவைக் காட்சிகள்!

உடன்பிறப்பே,

நண்பர் எம். ஜி. இராமச்சந்திரன், நிருபர்கள் கூட்டங்களிலும் சரி, 'வேனில்' சென்று நடத்துகிற புரட்சிப் பயணக் கூட்டங்களிலும் சரி; கழகத்தையும் என்னையும் மிகக் கடுமையாகத் தாக்கிப்பேசி வருகிறார். மூன்று நான்கு ஆண்டுகளாகவே இந்த அரும்பணியைத் தான் அவர் செய்து வருகிறார் என்றாலும் கூட, இப்போது மிக மிக ஆத்திரத்தோடு வாசகங்களை உதிர்த்து வருகிறார்.

அவருடைய அந்தக் கோபாவேசச் சொற்களையும், அதன் தொடர்பாக வெளிவருகிற கருத்துக்களையும் வெளியிடுகிற ஏடுகள்; வேண்டுமென்றே அவரை மக்கள் மத்தியில் கேலிக்குரிய வராக்குவதற்கான முயற்சியில் ஈடுபடுகின்றன என்றே நினைக்கத் தோன்றுகிறது. தன் மனத்தில் உதித்த ஒரு பதிலைச் சொல்ல வேண்டுமென்பதற்காக நான் அவரைப் பற்றிக் குறிப்பிடாத ஒன்றை எடுத்து வைத்துக் கொண்டு என்மீது சீறிப் பாய்ந்திருக்கிறார்.

> "பொருளாதாரத் திட்டம் என்னவென்று தெரியா தவர் புரட்சிப் பயணம் செய்கிறார் என்று கருணாநிதி பேசியிருக்கிறார், ஆட்சி செய்ய லாயக்கற்றவர் என்று விரட்டப்பட்டவர் என்னைப் பற்றிப் பேசியிருப்பது கண்டு, உண்மையிலேயே தலைகுனிகிறேன்"

இது, நண்பர் எம். ஜி. இராமச்சந்திரனின் சிங்கம் புணரிப் பேச்சு!

உடன்பிறப்பே, அவருக்குப் பொருளாதாரம் தெரியாது என்று நான் பேசியதாகக் குறிப்பிடுகிறார். நான் அப்படிப் பேசியிருக்க முடியுமா?

அவருக்கா பொருளாதாரம் தெரியாது? "கம்யூனிசம், சோஷலிசம், கேப்டலிசம்" மூன்றும் இணைந்ததே "அண்ணாயிசம்" என்று அரும் பதவுரை அருளிய அவருக்குப் பொருளாதாரமோ,

பொருளாதாரக் கொள்கைகளோ, தெரியாதென்று யாராவது கூற முடியுமா?

விவசாயத் தொழிலாளர்களுக்கு "போனஸ்" கொடுக்கப்பட வேண்டும் என்று அந்தப் பொருளாதார வித்தகர் உரைத்ததை நானும் மறக்கவில்லை; நாடும் மறக்கவில்லை!

விவசாயம் செய்யும் நிலங்கள் அனைத்தும் தேசீயமயமாக்கப் படும் என்றும் விவசாயிகளுக்கு எருவும், உரமும் இனாமாக வழங்கப்படும் என்றும்-அதுவே அவர் கட்சியின் திட்டமென்றும் அறிவித்தாரே; அப்போதுகூட "நிலங்கள் தேசீயமயமாக்கப்பட்ட பிறகு, விவசாயிக்கு இனாமாக உரம் வழங்கவேண்டிய அவசியமென்ன?" என்று யாரும் கேட்கவில்லையே! அவருடைய பொருளாதார-நிலச் சீர்திருத்தப் புரட்சிக்கொள்கையை அப்படியே ஒப்புக்கொண்டிருக்கிறார்களே!

உடைமை பொதுவாக வேண்டும்-அதுவே பொதுவுடைமைத் தத்துவம் எனக் கூறப்படுகிற கருத்துக்கு ஒருபடி மேலே போய், உழைப்பையும் பொதுவுடைமையாக்க வேண்டும் - அறிவையும் பொதுவுடைமையாக்க வேண்டும் என்று நேற்று முழங்கியிருக்கிறாரே; அதைப் பற்றிக்கூட நான் எதுவும் விமர்சிக்கவில்லையே! பாவம்; "எல்லோரும் உழைக்கவேண்டும். பாடுபடச் சிலரும், பயன்பெறச் சிலரும் என்று இருக்கக் கூடாது" என்று கூறிட நினைத்தவர்தான் தனக்கேயுரிய வழக்கமான தத்துவ விளக்க பாணியில் "அறிவும் உழைப்பும் பொது உடைமை ஆகவேண்டு"மெனக் கூறிவிட்டார் என சமாதானம் செய்துகொண்டேனே தவிர, அவருக்குப் பொருளாதாரம் புரியாது என நான் நினைத்திடவில்லையே!

மார்க்சும், லெனினும் இருந்தால் இந்தியாவுக்கு வந்து அவரிடம் புரட்சிப் பொருளாதாரத் தத்துவங்களை கற்றுக் கொண்டே போயிருப்பார்களே!

இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் வாரந்தோறும் அவர் நடத்துகிற பொருளாதார வகுப்பிலே தவறாமல் கலந்துகொண்டு பொருளாதாரப் பிரச்சினைகளைப் புரிந்துகொள்கிறார்கள் என நான் கேள்விப்பட்டுப் பூரிப்பல்லவா அடைகிறேன்; நமது பழைய நண்பருக்கு இப்படி ஒரு புதிய பெருமை கிடைத்திருக்கிறதே என்று!

ஆட்சி நடத்த லாயக்கில்லை என்று விரட்டப்பட்ட நான், அவரைப் பற்றிப் பேசியதற்காக அவர் தலை குனிகிறாராம்!

☐ ஆட்சி நடத்த லாயக்கில்லாதவன்.

☐ அதனால் விரட்டப்பட்டவன்.

என்னைப் பற்றி அவரது கணிப்பு இது! அப்படி லாயக்கற்ற நான் ஏதாவது பேசியிருந்தால் அதைப் பொருட்படுத்தாமல் பீடு நடை போட்டுத் தனது புரட்சிப் பயணத்தை நடத்த வேண்டியவர்; எதற்காகத் தலைகுனியவேண்டும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை.

என்னைவிடப் பத்து வயது மூத்தவரான எனது நண்பர் எம். ஜி. இராமச்சந்திரன்; அவரைப் பற்றி நான் ஏதோ பேசியதாகக் கற்பனை செய்துகொண்டு "தலைகுனிவது" என்பது எனக்கு மிகச் சங்கடமா இருக்கிறது. வயதில் மூத்தவரல்லவா?

ஒருவேளை நான் அவருக்குப் பொருளாதாரம் தெரியாது என்று பேசியிருந்தாலும்கூட, "லாயக்கற்றவன் பேச்சை நான் பொருட்படுத்தவில்லை" என்று அவர் கம்பீரமாகக் கூறியிருக்கலாம். "விரட்டப்பட்டவன் கூற்றுக்கு நான் விளக்கம் சொல்லத் தயாராயில்லை" என்று வீர கர்ச்சனை புரிந்திருக்கலாம். அதற்கு மாறாக "அந்தத் தலை" எதற்காகக் குனிய வேண்டும்?

"இருபது அம்சத் திட்டத்தில் பற்றில்லாத சில பேர், அதை ஒரு மந்திரம் போலச் சொல்லிப் பழகி விட்டார்கள்" என்று நான் குறிப்பிட்டு அதற்காக ஒரு நிகழ்ச்சியையும் சுட்டிக்காட்டி நான் மதுரையில் பேசியதை, அவர் தனக்கென்று எடுத்துக்கொண்டு தன்னை அடையாளம் காட்டிக்கொள்கிறார். ஆத்திரப்படுகிறார். கருணாநிதி ஒரு அரசியல் தலைவனாகக்கூட நாட்டில் உலவக்கூடாது என்று ஆணை பிறப்பிக்கிறார். உடன் பிறப்பே, என்ன வேடிக்கை பார்த்தாயா?

அதுமட்டுமல்ல; பொதுமக்களுக்கு ஒரு அறிவுரையும் கூறியிருக்கிறார். உதாரணங்கள், உவமைகள் கூறினால்தான்; தன் உரை "பேருரை"யாகும் என்று கருதிக் கொண்டு என்னுடைய பழைய நண்பர் பரிதாபமாகத் தடுக்கி விழுந்திருக்கிறார்.

துக்கம் விசாரிக்கப்போனது பற்றி ஒரு கதை உண்டு. சாவு வீட்டுக்கே போகாத ஒருவன் இனி மேல் போகவேண்டுமென்று பழகிக் கொண்டானாம். ஒரு வீட்டில் வயதான தாய் இறந்து விட்டார்கள். இந்தப் புதியவன், தன் நண்பனுடன் சென்றான். இரங்கற் கூட்டத்தில் நண்பன் பேசும்போது "அந்த அம்மாள் ஊருக்கே தாயாக விளங்கியவர்கள்" என்று குறிப்பிட்டான். இந்த வாசகத்தை அந்தப் புதியவன் மனப்பாடம் செய்துகொண்டான்.

சில நாள் கழித்து அந்தப் புதியவனின் நண்பன் இல்லத்தில் ஒரு சாவு ஏற்பட்டது. இறந்தது நண்பனின் மனைவி! இரங்கற் கூட்டத்தில் புதியவன் பேசினான். என்ன பேசினான்? என்ன விளைவு ஏற்பட்டது? இது எல்லார்க்கும் தெரிந்த கிராமியக் கதைதான்.

அந்தப் புதியவனின் நிலையில் எனது பழைய நண்பர் இராமச் சந்திரன் உவமைகளையும் உதாரணங்களையும் அள்ளி வீசுகிறார்.

> "கடித்த பாம்புதான் விஷத்தைத் திரும்ப எடுக்க வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது போலச் சிலரைத் தலைவர்களாக ஆக்கிய மக்கள்தான் அவர்களைத் திருத்தவேண்டும்."

இது அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் சிந்திய மணிவாசகம்!

கடித்த பாம்பு - அதுவும் விஷமுள்ள பாம்பு - யாருக்கு உவமையாகக் காட்டப்படுகிறது; பார்த்தாயா? மக்களுக்கு உவமை நச்சுப் பாம்பு! மக்கள் திலகமல்லவா? அதனால் மக்களைப் பாம்பு என வர்ணிக்கிறார். கடித்த பாம்பாம் பொதுமக்கள்! அவர்களின் கொடும் விஷத்தால் சிலர் தலைவர்களாகிவிட்டார்களாம்! கடித்த பாம்பு, திரும்ப விஷத்தை எடுக்க வேண்டுமாம்!

பொதுமக்களைப் பார்த்து பச்சையாகவே பாம்பு என்று சொல்லிவிட்டார்.

இதற்குக் கூடப் புது விளக்கம் அளிப்பார் அவர். "பச்சைப்பாம்பு பற்றி கருணாநிதி கேள்விப்பட்டதில்லையா? பச்சைக் குத்திக் கொண்டால்தான் பச்சைப் பாம்பைப் பற்றிப் புரியும். பாம்பு என்றால் சாதாரணமல்ல. பரந்தாமனின் படுக்கையாக இருக்கிறது. பரமசிவனின் கழுத்தில் புரளுகிறது. அந்தப் பாம்பைத்தான்

பொதுமக்களோடு ஒப்பிட்டேன். இது கருணாநிதிக்குப் புரியாது - மற்றவர்களுக்குப் புரியும்" என்று பொருள் கூறுவார்.

என் செய்வது; இந்த விளக்கங்களையும், பொருளாதார விரிவுரைகளையும் கேட்டு அவர் அருகே இருக்கிற அரசியல் தெரிந்த சிலருக்கு சிரிப்பு அடக்க முடியவில்லையாம், எனினும் பொறுத்துக் கொண்டுதான் தீரவேண்டியிருக்கிறது எனக் கட்டுப் பட்டுக் கிடக்கிறார்களாம். சிலர், குட்டுப்பட்டுக் கிடக்கிறார்களாம்.

இல்லாவிட்டால், "இந்தியாவில் இருக்கிற அனைவருமே திராவிடர்கள்தான்" என்று அவர் தெளிவுரை கூறியதை, அந்தக் கூடாரத்தில் யாராவது மறுக்காமல் இருப்பார்களா? என் செய்வது?

பொருளாதாரத்தில் புரட்சி!
வரலாற்று ஏட்டில் புரட்சி!
உவமையில் புரட்சி!
உதாரணத்தில் புரட்சி!
பயணத்தில் புரட்சி!

ஒரு கால கட்டம் வரையில் நாடு, தாங்கித்தான் தீரவேண்டும்; இந்த நகைச்சுவைக் காட்சிகளை!

அன்புள்ள,

மு. க.

08-10-1976

305. தொடரும் துன்பச் செய்திகள்!

உடன்பிறப்பே,

துன்பம் துணையோடு வரும் என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம் தொடர்ந்து பல வேதனைகள், நமது நெஞ்சைக் குழுக்கிக் கொண்டிருக்கின்றன.

தன்மான இயக்கத்தின் தளபதிகளில் ஒருவராகவும், பெரியார், அண்ணா பேரணியில் தொடக்க காலம் முதல் தொய்வின்றி உழைத்த முன்னோடிகளில் ஒருவராகவும் விளங்கிய கோபி ராஜி அவர்கள் மறைந்துவிட்டார்.

இருபது முப்பது ஆண்டுகட்கு முன்பு தமிழ்நாட்டு மேடைகளில் கொள்கை முரசு கொட்டிய சிங்க ஏறுகளின் பட்டியலில் இடம் பெற்றிருந்தவர் அவர்.

அல்லும் பகலும் இயக்கத்தின் சிந்தனைதான் அவர் உள்ளத்தில்.

ஓய்வின்றி உழைத்தார், இந்த ஒப்பற்ற இயக்கத்தை உருவாக்குவதற்காக.

கழகத்திற்குப் புதிதாக வரும் காளையரை உற்சாகப்படுத்தி, எந்த அமைப்பிலும் கசப்பு உணர்ச்சி தலைகாட்டாமல் ஒற்றுமைக்குப் பாடுபட்டு அயராப் பணி ஆற்றிய அருமை நண்பர் அவர்.

தனக்கெனக் கழகத்தில் எதையும் கேட்டவர் அல்லர் அவர்.

அவர் எதிர்பாராமலே அவரை நாடிச் சென்றது மேலவை உறுப்பினர் பதவி.

அந்தப் பதவிப் பொறுப்பை மிக்க கண்ணியத்துடன் நடத்திக் காட்டினார்.

அஞ்சாமை அவரது இயல்பு என்றாலும் அடக்கம் அவரது தனிப் பண்பாகும்.

ஆர்ப்பாட்டம் அவர் அறியாதது - ஆனால் உரிமைப் போர்ப் பாட்டு ஒலித்திடும் இதயத்தை அவர் கொண்டிருந்தார்.

கட்டுப்பாட்டின் எடுத்துக்காட்டாக, கடமையின் உருவமாக, தலைமையின் அன்புக்குரிய தளபதிகளில் ஒருவராக விளங்கிய அந்த வீர வடிவம் மறைந்துவிட்டது.

அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வோமாக.

இந்தச் செய்தியைத் தொடர்ந்து மற்றொரு துன்பச் செய்தி இடியென விழுந்தது நமது செவிகளில்.

கம்யூனிஸ்டு இயக்கத்திலிருந்து இரண்டு மூன்று ஆண்டு களுக்கு முன்பு நமது கழகத்தில் இணைந்த சகோதரி சக்தி கோதண்டம் அவர்களின் ஆருயிர்க் கணவர் கோதண்டம் அவர்கள் திடீரென மறைந்து விட்டார்.

மானாமதுரையில் நடைபெற்ற அண்ணா சிலை திறப்பு விழாக் கூட்டத்தில்தான் அவர்கள் இருவரும் கழக உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொண்டனர்.

தமிழகத்தின் பட்டி தொட்டியெல்லாம் சக்தி கோதண்டத்தின் சங்கநாதம் கேட்டுக் கொண்டிருந்தது. தனது அருமைத் துணை வியார், கழகப் பணியாற்றுவதிலே மிக்க பூரிப்பு கொண்டிருந்த நண்பர் கோதண்டம் அவர்களுக்கு இப்படி ஒரு முடிவு ஏற்படு மென்று யாருமே எதிர்பார்த்திருக்க முடியாது.

கழகத்திற்கெனத் தியாக முத்திரையையும் பெற்ற சகோதரி சக்தி கோதண்டம், சென்ற வாரம்தான் சென்னை அன்பகம் வந்து என்னையும் நாவலர், பேராசிரியர் ஆகியோரையும் சந்தித்து நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தார்.

இதற்குள், இவ்வளவு பெரிய துயரத்திற்கு அவர் ஆட்படுவார் என எண்ணிடவே இல்லை.

பொட்டும், பூவும், புன்னகையும் இழந்து நிற்கும் அந்தச் சகோதரிக்கும், இளந்தளிர்களாம் அவர்கள் பெற்றெடுத்த செல்வங் களுக்கும் எப்படி ஆறுதல் கூறுவதென்றே தெரியவில்லை.

இப்படி அடுக்கடுக்காக வரும் சோதனைகளை எதிர்பார்த்துத் தானே நமது அண்ணன்; எதையும் தாங்கும் இதயம் தேவை என்று சொல்லிச் சென்றிருக்கிறார்.

மறைந்தவர்களின் மங்காப் புகழ் வாழ்க!

என உச்சரித்தவாறு கண்ணீரைத் துடைத்துக் கொள்வோமாக!

அன்புள்ள,

மு. க.

09-10-1976

306. அமைதி - வீரத்தின் இலக்கணம்!

உடன்பிறப்பே,

ஓடிவந்தேன் உன்னைக் காண! கடந்த வாரம் மதுரையில் தொடங்கி இடையில் சில நாட்கள் சென்னையில் தங்கி மீண்டும் நேற்றைய முன்தினம் காரைக்குடி வரையில் எங்கெங்கும் நீயாகத்தான் இருந்தாய். நெஞ்சத்துக் காயங்களை ஆற்றிடும் மூலிகைகளாக உன் பார்வையமுதம் இருந்தது. சோதனைகளால் இதயம் சோர்ந்து போகாதவாறு தோள் கொடுக்கும் துணையாக நீ பேருருக்கொண்டு நிற்பதை என்னால் உணர முடிந்தது. கழகத்திற்கு இனிக் காலூன்றக் கடுகளவு இடமும் இல்லை என்ற ஆரூடப் பேச்சுக்களை நீர்க்குமிழிகளாக்கிவிட்டு சிற்றூர், பேரூர், பட்டிதொட்டி, பட்டினக்கரைகள் அனைத்திலுமே கழகத்தை இதயத்தில் ஏந்திக் கொண்டிருப்போர் இலட்சோப லட்சம் பேர் என்பதை இந்தச் சில நாட்கள் சுற்றுப்பயணத்திலேயே நீ, நிரூபித்துக் காட்டியிருக்கிற நேர்த்தியை - நான் எப்படித்தான் புகழ்ந்துரைப்பேன்!

சேயின் மீது சிறு துரும்பும், சிற்றெறும்பின் நிழலுங்கூடப் படுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாத தாயைப் போல, நீ கழகத்தைக் காத்திடும் அருமையைச் சின்னஞ்சிறு திட்டு போன்ற இடங்களிலும் என்னால் கண்டு களித்திட முடிந்தது.

அதிலும், நமது பாதையில் எள்ளளவு எதிர்ப்பு தோன்றி விட்டால்; உன் வலிவு இமயம் போல் அல்லவா எழுந்து நிற்கிறது!

என்னதான் அப்படி ஒரு பாசத்தை இந்த இயக்கத்தின் மீது கொட்டி வைத்திருக்கிறாயோ; எனக்குப் புரியவில்லையே!

என்னை ஆரத் தழுவிக் கொள்கிறாய் - கண்ணீர் கொட்டுகிறாய் - கரங்களை முத்தமிடுகிறாய் - அணையுடைத்த வெள்ளமென அன்பைப் பொழிகிறாய் - உடன்பிறப்பே! என்னை மன்னித்துக் கொள்! பல்லாயிரக்கணக்கில் கூடுகிற

எல்லோருடைய முகங்களையும் என்னால் நினைவு வைத்துக் கொள்ள முடியவில்லைதான்! ஒவ்வொரு ஊரிலும் நினைவில் நிற்கக் கூடிய முகங்கள் சில முகங்கள்தான். ஆனாலும் அத்தனை ஆயிரம் முகங்களும் ஏதோ ஒரு உணர்வால் கவரப்பட்டு என்னுள் சங்கமமாகி விடுகின்றனவே; அந்த அற்புதச் சக்தி படைத்த அந்த உணர்வுதான் என்ன?

பெரியார் நம்மை அவர்தம் பிள்ளைகளென வளர்த்தார்.

பேரறிஞர் அண்ணா நம்மை அவர்தம் உடன் பிறப்புக்களாய்த் தம்பிகளாய்த் தங்கைகளாய் ஆளாக்கினார்.

குடும்ப பாசமும், கொள்கைப்பற்றும் நம் ஊனோடும் உயிரோடும் கலந்தது என்கின்ற அந்த உணர்வுதான் இடுக்கண்கள் அடுக்கடுக்காய்ப் படையெடுத்து மோதினாலும் உடைக்க முடியாத அரணாக நமது கழகத்திற்கு அமைந்திருக்கிறது.

கூட்டங்களை ஏற்பாடு செய்கிறாய். பணியாற்றக் கிடைக்கும் நேரம், மிகக்குறைவு. விளம்பரங்களோ எல்லாப் பகுதிகளுக்கும் எட்டிடும் வாய்ப்பு கிட்டுவதில்லை. எனினும் வழியெங்கும் பல்லாயிரவர் நின்று வரவேற்கின்றனர். மண்டபங்கள், சுற்றடைப்பு மைதானங்கள் நிரம்பி வழிகின்றன - அவ்வளவு பெரிய கூட்டங்கள்!

நான் வருமிடங்களில் புதிய வாய்ப்புக்களும் கிடைக்கின்றன. மாற்றுக் கட்சியினர் ஏற்பாடு செய்கின்ற கறுப்புக்கொடி நிகழ்ச்சி, ஒட்டுகின்ற சுவரொட்டிகள் ஆகிய எத்துணை எதிர்ப்புக்கள் காட்டப்பட்டாலும் "எல்லாம் நன்மைக்கே" என்ற முடிவுடன் அமைதி காத்திட வேண்டுகிறேன்.

எப்போதுமே சட்டம், ஒழுங்கு, அமைதி காப்பதில் அக்கறையுள்ளவர்கள் நாம். அந்த மரபு மாறாமல் தமிழகத்தில் அமைதி நிலைத்திட கழகத்தினர் அனைவரும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும்.

அமைதியில்தான் உறுதி அடங்கியிருக்கிறது என்று நான் பலமுறை விளக்கிச் சொல்லியிருக்கிறேன்.

எதிர்ப்பினால் நீ மேலும் உறுதி பெற வேண்டுமே தவிர, சீற்றம் சிறிதளவும் கொண்டிடல் ஆகாது!

எந்தச் சூழ்நிலையிலும் அமைதிக்கு ஈடான ஒருமுறை இருப்பதாக யாரும் சொல்லவில்லை.

வீரம், காலத்திற்கேற்றவாறு வடிவம் பெறுகிறது. பொருள் கொள்கிறது. விளக்கம் தரப்படுகிறது.

அமைதியாக எதையும் தாங்கிக் கொள்வதும் வீரத்தின் இலக்கணம்தான்!

உடன்பிறப்பே, உன்னைக் காணும்போது இதைத்தான் உனக்குத் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். ஊர்கள் பல சுற்றி விட்டு உவகையுடன் திரும்பிய இந்த நேரத்திலும் சொன்னதை நினைவுபடுத்தத்தான் இதை எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

12-10-1976

307. விபத்தும் - வேதனையும்!

உடன்பிறப்பே,

தொண்ணூற்றி ஐந்து குடும்பங்களில் புலம்பல் ஒலியும் கண்ணீர் அருவியும் பெருக்கெடுக்க பயங்கரமான விமான விபத்து ஒன்று பம்பாயில் நடைபெற்றுவிட்டது. அயல்நாட்டுப் பயணங்களை முடித்து விட்டுத் தாயகம் திரும்பி, தாங்கள் கண்டு கேட்டவைகளை உற்றார் உறவினர் நண்பர்களிடம் உவகைப் பொங்கிட எடுத்துரைப்போம் என்ற எண்ணமுடன் விமானத்தில் ஏறியவர்கள், அரசியல் அலுவல்களை முடித்துக்கொண்டு அதுபற்றிச் சென்னையில் உள்ளவர்களிடம் கலந்து பேசும் ஆர்வத்துடன் புறப்பட்டவர்கள், பல்வேறு துறைகளில் பணியாற்றக் கூடியவர்கள் - பூக்கள், அரும்புகள், குடும்பத்துக்கு நிழல் வழங்கிய தருக்கள் - அனைவருமே ஒரு நொடியில் எரிதழலின் வாய்க்குள்ளே அகப்பட்டு உருவிழந்து போனார்கள் என்ற செய்தி, நம்மை உலுக்கிவிட்டதே!

ஆறுமணிக்குப் புறப்பட்டிருக்கவேண்டிய விமானம், இரவு ஒன்றரை மணிக்குமேல் புறப்பட்டுங்கூட, சாவூருக்கு எப்படியும் போய்த் தீர வேண்டும் என்று காத்திருந்ததைப் போல அல்லவா அந்தப் பயணிகள் காத்திருந்து மரணத்தின் தோள்மீது ஏறிக்கொண்டிருக்கிறார்கள்.

உலகத்தில் நடைபெற்றிருக்கிற பல விமான விபத்துக்கள், எத்தனையோ மேதைகள் - அரசியல் தலைவர்கள் - கலைஞர்களின் உயிரைக் குடித்திருக்கின்றன.

அந்தக் கொடிய விபத்துக்களின் வரிசையில் இந்த விபத்தும் தன் பெயரைப் பொறித்துக் கொண்டுவிட்டது.

பம்பாயில் வழியனுப்ப வந்தவர்களின் கண் எதிரிலேயே விமானம் நெருப்புக்கோளமாக மாறிக் கீழே விழுந்து சிதறி யிருக்கிறது.

அதைக் கண்டவர்கள் என்ன பாடுபட்டிருப்பார்கள்! ஆபத்தின் கரத்தில் சிக்கிவிட்டோம் - எல்லாம் முடிந்துவிட்டது - என அலறிய இதயங்கள், விமானத்துக்குள்ளே சில விநாடிகள் எப்படித் துடித்திருக்கும்!

தினமணிக் கதிர் ஆசிரியர் நண்பர் சாவி அவர்கள் வெளிநாடு சென்றிருக்கிறார். அவருடைய செல்விக்கு அண்மையில்தான் திருமணம் நடைபெற்றது. மணமகன் ராமதாசு என்பவர் "மஸ்காட்" என்னுமிடத்தில் வேலை பார்த்தார். மனைவியை அழைத்துச் செல்ல பம்பாய் வழியாகச் சென்னைக்குப் புறப்பட்டார். அவர் ஏறிய விமானம் அந்த விமானமாக இருந்தது. அன்புக் கணவர் வரவை எதிர்பார்த்து அந்த இளமங்கை சென்னையில் காத்திருக்கிறார். கணவர் வரவில்லை; கருகிவிட்டார் என்ற செய்தி வருகிறது. அந்தச் செல்வியின் தந்தையோ வெளிநாட்டில் சுற்றுப் பயணத்தில் இருக்கிறார். இந்தச் சோகத்தை விவரிக்கச் சொற்களேது?

இதுபோல, தொண்ணூற்றி ஐந்து குடும்பங்களில் வகை வகையான சோகம்! கண்ணீர்! ஓலம்! ஆறுதலை யாருக்கு யார் வழங்க இயலும்?

பத்துநாள் பாயும் படுக்கையுமாக இருந்தார் - தீர்க்கமுடியாத நோய் - போய்விட்டார் என்றாலே வேதனை தாங்கிட முடியாது என்கிறபோது நிச்சயமாகக் காலையில் திரும்பி வருவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது உச்சந்தலையில் நச்சரவு தீண்டியதுபோல முடிவு அறிவிக்கப்பட்டால் உரியவர்களுக்கு உள்ளம் உடைந்து நொறுங்காதா என்ன?

இந்த விபத்தில் பொன்னப்ப நாடார் மறைவு, மிகப்பெரும் இழப்பாகும். அவர் குமரி மாவட்டத்தில் வளர்ந்து வந்த அரசியல் தலைவர். பழைய காங்கிரஸ் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவருமாவார். சட்டப்பேரவையில் அவரோடு நெருங்கிப் பழகிடும் வாய்ப்பு பெற்றவன் நான். எதிர்க்கட்சி வரிசையில் அவர் அமர்ந்து பாராளுமன்ற ஜனநாயக நெறியின் பாதுகாவலனாக விளங்கியதை என்னால் மறக்கவே முடியாது. அடக்கத்தின் உருவம், பொறுமையின் வடிவம், எப்போதாவது ஒருசமயம் சினம் கொப்பளிக்கும். சீற்றத்துடன் பேசுவார். அடுத்த கணமே அதனையுணர்ந்து திருத்திக் கொள்வார். பழகுவதற்கு இனிய தோழர். வஞ்சகமின்றிப் பழகுவார். பாராட்ட வேண்டியதை

மனமாரப் பாராட்டி, கண்டிக்க வேண்டியதை கண்ணியமாகக் கண்டிப்பார். குமரி மாவட்டமெனும் மகுடத்தில் திகழ்ந்த கோமேதகம் அவர்! கொடிய விபத்து அவரை ருசி பார்த்துவிட்டது! நல்லவர் - நாடு வாழப் பாடுபடக் கூடியவர் - தியாகச்சுடர் காமராஜரின் அன்புக்குரியவர் - அவரது இழப்பால் அவர் கட்சியினர் கலங்குவதைப் போலவே, நானும் நமது கழகத்தினரும் அந்த நேர்மையான நண்பரின் பிரிவால் கலங்குகிறோம்.

அவரது குடும்பத்தாருக்கு இரங்கலைத் தெரிவிக்கிறோம்.

இதுபோலவே பேரிழப்புக்கு ஆளாகியிருக்கும் எல்லாக் குடும்பங்களுக்கும் ஆழ்ந்த இரங்கல் உரியதாகுக.

அன்புள்ள,

மு. க.

13-10-1976

308. "கிலுகிலுப்பையில் மயங்கி".....

உடன்பிறப்பே,

நண்பர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள்; அவரது கட்சி என்று கூறப்படுகிற ரசிகர் மன்றத்திலிருந்து மூன்று நான்கு பேர்களை விலக்கி வைத்து இரண்டு விதமான அறிக்கைகளை வெளியிட்டிருக்கிறார். அவரது ரசிகர் மன்றத்தில் இடம் பெற்றிருந்த ஒருசில அரசியல்வாதிகளில் விலக்கப்பட்ட இந்த மூன்று நான்கு நண்பர்களும், எம். ஜி. ராமச்சந்திரனின் பச்சை குத்தும் திட்டத்தையும், பொதுக்குழு, செயற்குழுக்களை கூட்டாமலே பத்திரிகையில் திடீரென ஒருநாள் பெட்டிச் செய்தி வாயிலாக "அனைத்து இந்தியா" என்று அறிவித்த ஒட்டு வேலையையும் எதிர்த்துத் தங்கள் கருத்துக்களை வெளியிட்டார்களாம். அதனால் அவர்களைப் பிரிவினைவாதிகள் என்றும், இருபது அம்சத் திட்டத்துக்கு எதிரிகள் என்றும் குற்றம் சுமத்தி விலக்கிவிட்டதாக அறிக்கை விடுத்துள்ளார்.

இது அவர்களது கட்சி அல்லது ரசிகர் மன்ற விவகாரம். இதில் நாம் ஏன் தலையிட வேண்டும்? தலையிடத் தேவையில்லைதான்.

ஆனால் எம். ஜி. ராமச்சந்திரன், விலக்கப்பட்ட தோழர்களுக்கு எழுதியதாக சில ஏடுகளில் வெளியிடப்பட்டுள்ள திறந்த மடலில் பின்வருமாறு ஒரு பகுதியை இணைத்துள்ளார்.

"நாம் கழகத்தை ஆரம்பிப்பதற்கான முழுமையான காரணங்களை நீங்கள் அப்போது தெரிந்திருக்க முடியாது. கருணாநிதி கட்சியின் - ஆட்சியின் லஞ்சலாவண்யம்-ஊழல் - சர்வாதிகாரம்-இவைகள் மட்டுமே காரணங்கள் அல்ல. அவரது பகிரங்கமான பிரிவினைப் பிரச்சாரம் ஆகியவை, அவைகளிலே முக்கியமான ஒன்றாகும்.

எம். ஜி. ராமச்சந்திரனின் இந்தக் குற்றச்சாட்டினைப் பார்த்த பிறகுதான், விளக்கம் அளிக்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது.

லஞ்சலாவண்யம்

ஊழல்

சர்வாதிகாரம்

இந்த மூன்றுடன் "பிரிவினைவாதி" என்ற அடைமொழியையும் சேர்த்துள்ளார்.

"நடிகர்கள் கறுப்புப்பணம் வாங்காமல் இருக்க முடியாது" என்று ஏடுகளுக்குப் பேட்டி அளித்தவர்-"இனி மேல் கறுப்புப் பணம் வாங்க மாட்டேன்" என்று உறுதி எடுத்து சில நாட்களுக்கு முன்பு அறிவித்தவர் - புதுக் கட்சி என்ற பெயரால் ஒன்றை அறிவித்து ஐந்தாவது ஆண்டு விழா கொண்டாடுகிற நேரத்திலும் அதற்கான சட்டதிட்டங்களையோ கொள்கைகளையோ வகுத்து இறுதி வடிவம் கொடுக்காமல், தான் வைத்ததே சட்டம்; சொன்னதே கொள்கையென்று கூறி "எல்லாம் அண்ணா சொன்னார்" என்று ஏமாற்றித் திரிபவர்; நம்மைப் பார்த்து ஊழல், சர்வாதிகாரம் என்ற வார்த்தைகளை வீசும்போது வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

மதுரை மாநாட்டிலே - ராணுவம் - சந்திப்பு - ஆகா! ஊஹூ! என்று முண்டா தட்டிக்காட்டி வன்முறைப் பேச்சுக்கு வித்திட்டவர் அதன் காரணமாகக் கட்சித் தலைமையினால் எச்சரிக்கப்பட்டு, அதில் ஏற்பட்ட எரிச்சலில் பொதுக் கூட்டங்களில் காழ்ப்பைக் கொட்டியவர் - பிரிவினை பற்றி நினைத்துக் கூடப் பார்க்காத நம்மைப் பிரிவினைவாதிகள் என்று கூறுகிறார்.

இந்த நண்பர் புதுக்கட்சி ஆரம்பித்து அதனை அவரது ரசிகர் மன்றத்தின் விளம்பர முகாமாக ஆக்கியபோது, "கட்சிக் கணக்கைக் கேட்டேன், வெளியேற்றி விட்டார்கள்" என்று தான் ஒரு கற்பனைக் காரணத்தைக் கூறினார். ஆனால் இப்போது; "கருணாநிதி பிரிவினைக் கொள்கையை பகிரங்கமாகப் பேசினார் - அதனால்தான் புதுக் கட்சி தொடங்கினேன்" என்கிறார்.

உடன்பிறப்பே, நடிக நண்பர் - மற்றொரு ஏட்டில் தனது அறிக்கையை விளம்பரமாகக் கொடுத்திருக்கிறார். அதில் உள்ள சில வாசகங்களை கவனமாகப் படித்துப்பார்.

> "உண்மையான எதிரிகளை சந்திப்பதில் நாம் அஞ்சியதில்லை. இனியும் அஞ்சப் போவதில்லை. ஆனால் நமது நண்பர்கள் என்ற போர்வையில் எதிரிகள் நம்மோடு இருந்து நம்மை அழிக்க முனைகிறவர்களிடம், நாம் மிகுந்த எச்சரிக்கையோடு இருந்தாக வேண்டும்"

1972 ஆம் ஆண்டு எம். ஜி. ராமச்சந்திரன் "நண்பர் என்ற போர்வையில்" நமது கழகத்தை அழிக்க முனைந்தபோது இதே கருத்தைத்தானே நாம் எடுத்துச் சொன்னோம். அப்போது நமது பேச்சை காதிலே போட்டுக் கொள்ளாதவர்கள், துரோகத்திற்குத் துணை போனார்கள். இன்று அவர்களையே துளைக்கிறது துரோக சக்தி! துரோகத்திற்குத் துணை போனது மட்டுமா; அப்பப்பா- நம்முடன் பழகிய பாசத்தையும் மறந்து எத்துணை இழிமொழிகள்! செவியில் ஈட்டியெனப் பாயும் சொற்கள்! இன்று அதன் பலனை அந்த நண்பர்கள் அனுபவ ரீதியாக உணரும்போதுதானே உண்மையைப் புரிந்து கொள்கிறார்கள்.

> "எதிரிகளை நம்பலாம். ஆனால் நம்மோடு இருந்து, நம்மைப் பிளவுபடுத்தி, நம்மைப் பலகீனமாக்கி, நமது கொள்கையை அழித்து, நமது கழகத்தையே அழிக்க முயலுபவர்களுக்கு எத்தகைய ஆதரவும் இடமும் தர மாட்டோம்."

இதுவும் நண்பர் ராமச்சந்திரனின் விளம்பர அறிக்கையில் ஒளிவிடும் கருத்துக்கள்தான்.

தலைவர்களிடம் உட்கார்ந்து விவாதிக்கவேண்டியதை- மறுத்தால் செயற்குழுவில் கூறவேண்டியதை-பொதுக்குழுவில் விவாதிக்க வேண்டியதை-இப்படி எந்த இடத்தையும் தேர்ந் தெடுக்காமல் திருக்கழுக்குன்றம் கூட்டத்திலும், செங்கற்பட்டு கூட்டத்திலும், ஆலந்தூர் கூட்டத்திலும், சென்னைக் கூட்டத்திலும் பொதுமக்களுக்கு முன்னால் எடுத்துரைத்து, விளக்கம் கேட்டுத் தற்காலிகமாக தள்ளிவைத்ததைக் கூட அலட்சியப்படுத்தி, கழகத்தைப் பிளக்கவும் பலவீனப்படுத்தவும், கொள்கையை

அழிக்கவும் 1972ஆம் ஆண்டு முற்பட்டாரே; அந்த "உத்தமர்"தான், இன்று ஊருக்கு உபதேசம் செய்கிறார்.

அவர் கட்சியிலிருந்து இப்போ விலக்கப்பட்டிருப்பவர்கள், அவரது கட்சிக்கு இடையிலே வந்தவர்களாம். அதனால் அவர் கட்சி தொடங்கியதின் காரணம் அவர்களுக்குத் தெரியாதாம். நடிகர் கூறுகிறார். இந்தக் கூற்று நடிகருக்கும் பொருந்தும்.

1949 ஆம் ஆண்டு தொடங்கிய தி. மு. கழகத்திற்கு இந்த நடிகர் 1953ஆம் ஆண்டுக்கு மேல் இடையில் வந்தவர்தான்!

இடையில் வந்தவர்களுக்குக் கட்சி தோன்றியதற்கான காரணம் தெரிய நியாயமில்லை என்பது இவரது வாதமானால் அந்த அற்புதமான வாதம் இவருக்கே மிகவும் பொருத்தமாக இருக்குமன்றோ!

விலக்கப்பட்டவர்கள் நிருபர்களிடத்திலே பேசியிருக்கிறார்கள்.

"எம். ஜி. ஆர். இரட்டை வேடம் போடுகிறார்"

"பொதுவாக எம். ஜி. ஆர். உண்மையே பேசுவ தில்லை. எங்கள் அனுபவம் அது"

"எம். ஜி. ஆரின் சினிமாக் கவர்ச்சி, இனிமேல் நீடிக்காது"

"முரண்பாட்டின் மொத்த உருவமாக எம். ஜி. ஆர். இருக்கிறார்"

"அ. தி. மு. க. ரசிகர் மன்றமாக இருக்கிறது. சீரியசான அரசியல் கட்சியாக இல்லை"

"எம். ஜி. ஆர். பேரில் மக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டு விட்டது. அதை திசை திருப்பவே பிறர் மீது பழி போடுகிறார்"

இவ்வளவும் அவர்களது பேட்டியில் வெளியிட்ட "பொன் மொழிகள்"

நடிகரைப்பற்றிய இந்த உண்மையான படப்பிடிப்பையெல் லாம் ஏற்கெனவே உணர்ந்துகொள்ளாதவர்கள் அல்ல அவர்கள்.

தெரிந்தும் வழுக்கு நிலத்தில் நடக்கப் போகிறோம் என்று பிடிவாதமாகச் சென்றார்கள். கீழே வீழ்ந்து அடிபட்டபிறகு - அதுவும் பலமான அடிபட்டபிறகு-பதைக்கிறார்கள், பதட்டமடைகிறார்கள்.

கிலுகிலுப்பையின் ஓசையில் மயங்கி, தாயின் மடியிலிருந்து பிள்ளை பிடிப்பவனிடம் தாவிடும் குழந்தையைப்போல ஆகாதீர்கள் என்று எச்சரித்தபோது அலட்சியம் செய்தவர்கள் இன்று அவதிப்படுகிறார்கள்.

"தேச விரோதிகள்" என்று முத்திரை குத்தப்படுகிறார்கள்.

அந்தக் கூடாரத்தில் மிச்சமிருக்கிற அரசியல்வாதிகள் தங்களுக்கும் இப்படித்தான் ஒரு எதிர்காலம் வரும் என்பதை இனியாவது உணர்வார்களோ; என்னவோ?

அன்புள்ள,

மு. க.

14-10-1976

309. "தானாடாவிடினும்..."

உடன்பிறப்பே,

எந்தக் கட்சியின் உட்பூசலையும் பயன்படுத்திக் கொண்டு அவர்களுக்குள் ஏற்படுகிற சர்ச்சைகள் - விவாதங்கள் - மோதுதல்கள் - ஆகியவைகளின் காரணமாக விளைகிற பலவீனத்தை நமது கழகத்தை வளர்க்கும் எருவாக ஆக்கிக்கொள்ள நாம் என்றைக்குமே எண்ணியதில்லை.

நமது கால்களில் நாம் நிற்க வேண்டும் என்ற கொள்கை யுடையவர்களே தவிர, எதிர் முகாமில் ஒருவர் காலை ஒருவர் வாரி விடுவதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து "பரவாயில்லை! அந்தப் போட்டியின் பயன் முழுவதும் நமக்குத்தான் கிடைக்கும்" என்று எதிர்பார்த்திருப்பதும் நமக்குப் பழக்கமான பண்பல்ல.

நமது கொள்கைகள் தூய்மையானவைகளாக இருந்தால்-நமது உள்ளம் இலட்சியத்தோடு இரண்டறக் கலந்ததாக இருந்தால் - துணிவும், தெளிவும், கனிவும் நமது குணங்களாகவும் - கடமையும், கண்ணியமும், கட்டுப்பாடும் நமது இலக்கணங்களாகவும் இருந்தால் - மக்கள் மன்றத்தில் நமக்கோர் இடம் உறுதியாகவும் நிலையாகவும் அமைந்தே தீரும்.

அதைவிடுத்து; "அடுத்த வீட்டில் இடிவிழாதா?" என்று ஏங்குகிற அசூயைக்காரனைப் போலவும் - "ஆடுகள் முட்டிக் கொள்ளாதா? இடையில் புகுந்து இரத்தம் குடிக்கலாமே" எனக் காத்திருக்கும் ஓநாயைப் போலவும் - எதிர்முகாமிலே இரைச்சலும் கூச்சலும் அமளியும் ஏற்படாதா? அதைப் பயன்படுத்தி நாம் வளரலாமே - என்று நாக்கைத் தட்டிக்கொண்டிருக்கும் சில பிறவிகள் உண்டு அரசியலில்!

நமக்கு அந்த அரசியல் ஆகாதது மட்டுமல்ல; அந்த நினைப்பே அறவழியின் பாற்பட்டதல்ல எனக் கருதுகிறவர்கள் நாம்.

எனவேதான், இன்று நடிகர் கட்சியில் ஏற்பட்டுள்ள விரிசலுக்குள் புகுந்து விளையாட விரும்பவில்லை.

ஆனால் ஒன்று - வினை விதைத்தவர்கள் வினையை அறுத்தே தீரவேண்டும்.

நமது கழகம் இன்று கடுமையான சோதனைகளைத் தாங்கிக் கொண்டு உறுதி தளராமல் - அமைதி வழிகெடாமல்-தனது பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறது.

நடிகர் கட்சியில் இன்று ஏற்பட்டுள்ள பெரும் பிளவை, நமக்குச் சாதகமாக எப்படி ஆக்கிக்கொள்வது என்ற சிந்தனைக்கேகூட இங்கு இடமில்லை.

அங்கு நடக்கிற தகராறு அங்கிருந்த அரசியல்வாதிகளுக்கும் - ரசிகப் பெருமக்களுக்கும் நடக்கிற தகராறு!

அங்குள்ள ரசிகர்கள் நண்பர் எம். ஜி. இராமச்சந்திரனைப் போற்றுவது - புகழுவது-சீராட்டுவது-பாராட்டுவது-எல்லாமே நியாயமானவைதான்! ஏற்புடையவைதான்!

ஏனெனில் தமிழ் நாட்டில் திரை உலகில் அவருக்குள்ள ரசிகர்கள் வேறு யாருக்கும் இல்லை. தமிழ்நாட்டுத் திரையுலகில் தனக்கென ஒரு புதுவகையான - புரட்சிகரமான நடிப்பையும்-கலைத்துறை ஆற்றலையும் பெற்றவர் அவர். அதனால்தான் சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு திருச்சியில் நடைபெற்ற ஒரு நாடக விழாவில் "புரட்சி நடிகர்" என்ற பட்டத்தை நான் அவருக்குச் சூட்டி மகிழ்ந்தேன். அந்தப் புரட்சி நடிகருக்கு ரசிகர்கள் பெருகியதில் வியப்பில்லை. அவர்கள், அவரைத் தொழுது நிற்ப இயற்கையேயாகும்.

ஆனால், அரசியல்வாதிகளையும் அவர் ரசிகர்களாக்க முயன்றார். சில அரசியல்வாதிகள், தங்களைத் தாங்களே ரசிகர் களாக்கிக்கொண்டு அந்தக் கூடாரத்துக்கு ஏகினர். புரட்சி நடிகரைப் புரட்சித் தலைவராக்கினர். கனவுலகில் அவரை முதலமைச்சராக்கிப் பார்த்தனர். தங்களில் சிலபேர் அந்த அமைச்சரவையில் அமர்ந்திருப்பதுபோல எண்ணிப் பூரித்தனர்.

"கணக்கு கேட்டார் எம். ஜி. ஆர்!
கருணாநிதி விரட்டி விட்டார்!"

இதே கோரஸ் பாட்டை அரசியல்வாதிகளும் ரசிகர்களும் சேர்ந்துகொண்டுதான் பாடினர்; அந்தப் "பாசறை"யில்!

இன்றைக்கு அரசியல்வாதிகள் பிரிந்து வந்து எதிர்மேடை போட்டுக்கொண்டு,

"நடிகர் கட்சி கணக்கு எங்கே?"

என்று கேட்டு அடாணா ராகத்தில் பாடுகிறார்கள்.

"கருணாநிதி, நெடுஞ்செழியன், அன்பழகன்
அனைவரும் பிரிவினைவாதிகள்"

இப்படி ஒரே குரலில் ஊர் ஊராகச் சென்று ஒலித்தார்கள்!

"தன்வினை தன்னைச் சுடும்-
ஓட்டப்பம் வீட்டைச் சுடும்"

என்று பட்டினத்தார் கூறியதுபோல - இன்றைக்கு அரசியல் வாதிகள் பிரிந்துவந்து எம். ஜி. இராமச்சந்திரனைப் பிரிவினைவாதி என்கிறார்கள். ரசிகர்களின் மகத்தான தலைவராக நின்றுகொண்டு எம். ஜி. இராமச்சந்திரன்; விலக்கப்பட்ட அரசியல்வாதிகளைப் பார்த்து நீங்கள்தான் பிரிவினைவாதிகள் என்று குற்றம் சாட்டுகிறார்.

உடன்பிறப்பே, வேடிக்கையைப் பார்த்தாயா? நம்மைப் பிரிவினைவாதிகள் என்றவர்கள்; இன்று இரு கூறுகளாகப் பிரிந்து நின்றுகொண்டு ஒருவரையொருவர் பிரிவினைவாதி என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

நான் எத்தனையோ முறை எடுத்துக் காட்டியிருக்கிறேன்; கழகத்தின் மீதோ கழகத் தலைமையின் மீதோ உள்ளூரக் கோபமில்லாமல்-உள்ளூர்க் கோபங்களால் வெளியேறி - பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் கட்டிக்காத்த கொள்கை களுக்குத் தொல்லை ஏற்படத் துணை போகாதீர்கள் என்று!

அப்போது கேட்கவில்லை. இப்போது பெரும் பழியைச் சுமந்துகொண்டு நிற்கிறார்கள்.

"என் கட்சியில் சட்ட திட்டமில்லை. கட்டுப்பாடு மீறி நடந்தால் விளக்கம் கேட்கும் வழக்கமில்லை விளக்கமளிக்க அவகாசம் கொடுக்கும் பழக்கமில்லை. பிடிக்கவில்லையென்றால் விலக்கிவிடுவேன். அதுதான்

என் முறை!”

என்று நடிகர் அறிவித்து அவர்களை விலக்கியிருந்தால் அவர் இதயத்தில் பற்று பாசத்திற்குக் கடுகளவு இடம் இருந்ததாக எண்ணிடலாம்.

ஆனால் அவரோ, அவர்களைப் பழி தீர்க்கும் வகையில் பிரிவினைத் தடைச் சட்டத்தின் முன்னே அல்லவா கொண்டுபோய் நிறுத்தி தேசத் துரோகக் குற்றவாளிகள் என்று முத்திரை குத்துகிறார்.

உடன்பிறப்பே! இவர்கள் என்னதான் அவசரத்திலும், ஆத்திரத்திலும் நம்மீது கொடிய சொற்கணைகளை வீசியிருந்த போதிலும் - இப்போது இப்படியொரு வீண்பழி சுமத்தப்பட்டு வஞ்சம் தீர்த்துக்கொள்ள வலை விரிக்கப்படும்போது- தானாடாவிடினும் தன் தசையாடும் என்பதுபோல்-நெஞ்சம் குலுங்கிடத்தான் செய்கிறது நமக்கு!

பிரிவினைவாதிகள்!

பிரதமரின் நல்ல திட்டங்களுக்கு விரோதிகள்!

இப்படி குற்றங்களை சுமத்தி, ஆகாதவர்களை அழித்து விடலாம் எனக் கருதுவது அறமாகாது! அது நடக்கவும் நடக்காது.

ஆகாதவர்களை அழிப்பது கலையுலகில் செல்லுபடியாகலாம்! அரசியல் அரங்கில் அது நடவாத காரியம்!

அன்புள்ள,

மு. க.

15-10-1976

310. ஒரே வழி - உரிய வழி!

உடன்பிறப்பே,

அச்சடிக்கும் பத்திரிகைகளை அன்றாடம் எப்படியாவது விற்று விடவேண்டும் என்கிற வியாபார நோக்கம் பத்திரிகையாளர் சிலருக்கு இருப்பது தவறில்லை. கொள்கைப் பிரச்சாரத்திற்காக நடைபெறும் ஏடுகள், வியாபார நோக்கங்கொண்ட ஏடுகளுக் கிடையே தாங்கள் பின்பற்றும் கொள்கை வலிவுக்கேற்ப மக்களிடையே பரவிக்கொண்டு இருக்கின்றன.

சில குறிப்பிட்ட கொள்கைகளுக்காகவோ அல்லது முழுக்க முழுக்க வியாபாரத்திற்காகவோ நடைபெறுகிற ஏடுகள் எதுவாயினும் அவற்றிற்குரிய - அன்றாடச் செய்தி அறிவிப்பு சுவரொட்டிகளைக் கவர்ச்சிகரமாக வெளியிடுவது இயல்பேயாகும். ஆனால், சில ஏடுகளின் சுவரொட்டிகள் கடைகளின் முகப்பில் தொங்கும்போது மக்களுக்குப் பீதியையும், தேவையில்லாத அதிர்ச்சியையும் உண்டாக்கி விடுகின்றன.

பல ஆண்டுகளுக்கு முன்பு - புகழ்மிக்க தமிழ் எழுத்தாளர் பேராசிரியர் கல்கி அவர்கள் உயிரோடு இருந்தபோது ஒரு நாளிதழின் சுவரொட்டி விளம்பரத்தில் “கல்கி மரணம்” என்று கொட்டை எழுத்தில் பொறிக்கப்பட்டிருந்தது. அனைவரும் திடுக்கிட்டுப்போய் அந்த நாளேட்டை வாங்கிப் பார்த்தபோது மன்னார்குடி கல்கி தியேட்டர் உரிமையாளர் ஒருவர் காலமாகிவிட்ட செய்தியை சிறிய அளவில் வெளியிட்டிருந்தார்கள்.

நாலைந்து நாட்களுக்கு முன்பு கடைகளில் தொங்கிய நாளிதழ் ஒன்றின் சுவரொட்டியில் “சர்க்காரியாவைக் கொல்லச் சதி” என்று பெரிய அளவில் எழுத்துக்கள் காணப்பட்டிருக்கின்றன. அதிர்ச்சியுற்றவர்கள் அந்த ஏட்டை வாங்கிப் பார்த்தபோது; எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் ஏதோ ஒரு வழக்கின்

தொடர்பாக நடைபெற்ற முயற்சியைப் பற்றிய நிகழ்ச்சியை - அதாவது ஒரு பழைய கதையை வெளியிட்டிருக்கிறார்கள் என்று தெரிந்து "இப்படியுமா ஒரு வியாபார தந்திரம்!" என்று வேதனைப்பட்டிருக்கிறார்கள்.

பம்பாய் விமானவிபத்து பற்றிய செய்திகள் எல்லாம் முடிவடைந்த பிறகு, திடீரென ஒரு மாலைப்பத்திரிகை - தமிழகக் கலையுலகில் சிறப்புற்று விளங்கும் ஒரு நடிகையின் பெயரைப் பெரிதாக விளம்பரப்படுத்தி "அவரும் சாவு" என்று சுவரொட்டியைத் தொங்க விட்டு விட்டதாம்! பின்னர் அந்த இதழை வாங்கிப் படித்த பிறகுதான் அந்தப் பெண்மணி வேறு ஒருவர் என்றும் அந்த நடிகையின் பெயரைக் கொண்டவர் என்றும் வாசகர்கள் புரிந்து கொண்டார்களாம்.

விபத்து - சாவு - இவைகளைக்கூட வியாபாரக் கவர்ச்சிக்குப் பயன்படுத்திச் செய்திகளைத் திரித்துத் திகிலடையும் வண்ணம் விளம்பரப்படுத்தி ஏடுகளை விற்றிடும் போக்கில் தந்திரம் இருக்கலாம் ஆனால் மனிதாபிமானமோ, பண்பாடோ இருப்பதாகக் கூற முடியாது.

நேற்று மாலை ஏடுகள் சிலவற்றின் விளம்பரச் சுவரொட்டி களில் மிகப்பெரிய எழுத்தில் "தி. மு. க. வுக்குத் தடை" என்று செய்திகள்!

ஆனால் செய்தி என்னவென்று பார்த்தால் விளம்பரத்திற்கும், ஏட்டில் வெளிவந்திருப்பதற்கும் தொடர்பே கிடையாது.

கழகத்திலிருந்து ஏற்கனவே தள்ளிவைக்கப்பட்டிருக்கும் ஒருவரை; அறவே கழகத்திலிருந்து விலக்கி விடுவது என்று எடுக்கப்பட்டுள்ள முடிவின் மீது வழக்கு!

தள்ளிவைக்கப்பட்டுள்ள - அதாவது தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டுள்ள நிலை; வழக்கு விசாரணை முடியும் வரையில் நீடிக்கட்டுமென்றும், அறவே விலக்கி விட்டது பற்றி 28-10-76ல் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அதற்கு முன்னதாகப் பொதுச்செயலாளர் தனது ஆட்சேபணைகளைத் தெரிவிக்கலாமென்றும் நீதிபதி அவர்கள் அறிவித்துள்ளார்.

இதைத்தான் திரித்தும், விரித்தும், "தி. மு. க. வுக்கு தடை" என்ற விதத்தில் செய்திகள் - விளம்பரங்கள் செய்யப்படுகின்றன.

பதைப்புச் செய்திகள் - பரபரப்புத் தலைப்புக்கள் - இவைகளை வைத்துக்கொண்டு மக்களைத் திகைக்க வைத்து நடத்துகின்ற வியாபாரம் நீண்ட நாளைக்கு நடக்காது.

இப்போதே அப்படிப்பட்ட ஏடுகள் சிலவற்றை "முன்னே இருந்து மூன்று பேர் தொட்டிழுக்கப் பின்னே இருந்து இரண்டு பேர் தள்ள" என்ற அளவில்தான் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

வேண்டுமென்றே திசை திருப்பும் செய்திகள், பொய்த் தகவல்கள் - இவற்றை வெளியிட்டு வியாபாரம் நடத்தும் பத்திரிகைகளை வெறுத்து ஒதுக்குவது என்ற உறுதியான முடிவை அனைவருமே எடுத்துக்கொண்டால்; அந்த ஏடுகள் நிச்சயமாகத் தங்களைத் தாங்களே திருத்திக் கொள்ளக்கூடும்.

அதற்கு ஒரே வழி; கேடு பயக்கும் ஏடுகளைக் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை என்று கடும் சபதம் மேற்கொள்வதுதான்! அதுதான் அவைகளைத் திருத்த உரிய வழி!

அன்புள்ள,

மு. க.

16-10-1976

311. கடும் பயணம் - கட்டைக் கால்கள்!

உடன்பிறப்பே,

புதிய ஏடு ஒன்றின் வெளியீட்டு விழாவில் காங்கிரஸ் கட்சி, இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்களும்-கட்சிச் சார்பற்ற பொறுப்பான பதவியிலே இருப்பவர்களும் - கலந்துகொண்டு வாழ்த்திப் பேசியிருக்கிறார்கள். அந்த ஏடு, ஒரு குறிப்பிட்ட கட்சியின் கொள்கைகளை அப்படி ஏதாவது இருந்தால் பிரச்சாரம் செய்யத் தொடங்கப்பட்டுள்ளது என்பதையும் அனைவரும் அறிவார்கள். அண்மையில் வெளிவந்த ஒரு நாவலில் அண்ணாவின் பேச்சும் எழுத்தும் இளைஞர்களை மயக்கிக் கெடுக்கும் பிரச்சாரக் கருவி என்று விமர்சனம் செய்து எழுதியிருந்த எழுத்தாள நண்பர் ஒருவர் அந்த விழாவில் "முக்கிய பாத்திரம்" ஏற்றதும் சிறப்புடைய ஒன்றாகும்.

அந்த விழாவில் இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் ஒருவர், சில அருமையான கண்டுபிடிப்புக்களையெல்லாம் அள்ளிவீசியிருக்கிறார்.

> "எம். ஜி. ராமச்சந்திரன் என்ற தனி மனிதரின் மேல் நம்பிக்கை வைத்து கம்யூனிஸ்டு கட்சி, ஆதரவு தரவில்லை. அவர் பின்னால் இருக்கும் மக்களிடம் நம்பிக்கை வைத்து ஆதரவு தருகிறோம்"

இது அவரது சொற்பொழிவில் ஒரு முக்கியமான பகுதி-ஆம்; மிக முக்கியமான பகுதி.

> "எம். ஜி. ராமச்சந்திரன், நம்பிக்கை வைக்கத் தகுதியானவரல்ல - அவர் பின்னால் இருக்கும் மக்கள்தான் நம்பிக்கைக்குரியவர்கள்"

என்று சுருக்கமாகச் சொல்ல எண்ணியதை சுற்றி வளைத்து மிகச் சாதுர்யமாகச் சொல்லியிருக்கிறார்.

"என்ன நரியாரே! அந்த மேய்ப்பனிடத்திலே போய் அடிக்கடி கொஞ்சிக் குலவிக் கொண்டிருக்கிறீர்? மேய்ப்பனிடம் உமக்கு அவ்வளவு ஆசை எப்போது ஏற்பட்டது?"

"அட! அசட்டுக் காக்கையே! எனக்கு மேய்ப்பனிடத்திலே ஆசை, துளியும் இல்லை. அவன் ஓட்டிச் செல்லுகிற அந்த ஆடுகளிடத்திலே உள்ள ஆசையில், அவனிடம் ஆசையிருப்பதாகக் காட்டிக்கொள்கிறேன்!"

அந்த விளக்கத்தைப் போலத்தான் இந்திய கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவரின் விளக்கமும் அமைந்திருக்கிறது. ஒரு கட்சியின் தலைவர்மீது நம்பிக்கை வைத்து ஆதரவு தரவில்லையாம். அந்தக் கட்சியின் கொள்கைகள்மீது நம்பிக்கை வைத்தும் ஆதரவு தரவில்லையாம்; அங்கிருக்கிற மக்களை-அதாவது கூட்டத்தை நம்பி மாத்திரமே ஆதரவு தருகிறார்களாம்.

"கண்ணே பாப்பா! இந்தா மிட்டாய்! வாடா என் தங்கம்" - எனக் கொஞ்சுமொழி பேசி மழலைகளின் கழுத்தில் உள்ள தங்க நகையின்மீது கை வைக்கும் திறமைசாலிகளைப் பற்றித் திருவிழாக் கூட்டங்களில் கேள்விப்பட்டிருக்கிறோம்.

அந்தத் திறமைசாலிக்குத் திருவிழா மீதும் நாட்டமில்லை. அந்தத் தீராத விளையாட்டுப் பிள்ளையிடமும் பாசமில்லை. எல்லாம், கழுத்தில் மின்னும் அந்தப் பொன்னுக்காகத்தான்!

"அவர் மீது நம்பிக்கை வைக்கவில்லை. அவரின் பின்னால் இருக்கும் மக்களுக்காகத்தான்"

என்ற கருத்தை - ஆமாம் அந்தப் பேருண்மையை இதை விடத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வேறு எப்படிச் சொல்ல முடியும்?

அதே விழாவில் அதே நண்பர் மற்றொரு புதிய ரகசியத்தையும் வெளியிட்டிருக்கிறார். அதுவும் ஏடுகளில் வெளிவந்துள்ளது. அந்த ரகசியம் என்ன?

"அண்ணாவும் பெரியாரும் "திராவிட நாடு" கேட்டார்கள் என்றால் நாட்டைத் துண்டாட வேண்டும் என்ற நோக்கத்துடன் அல்ல! சில சலுகைகளைப்

பெறுவதற்காகவே, திராவிட நாடு கேட்டார்கள். ஆனால் கருணாநிதி வெளிநாட்டுச் சக்திகளின் துணையுடன் நாட்டைத் துண்டாடும் முயற்சியில் ஈடுபட்டார்"

இப்படிப் பேசியிருக்கிறார் அவர்! அவருக்குள்ள தைரிய மெல்லாம், பெரியாரும் அண்ணாவும் எழுந்து வந்து அவரது கூற்றை மறுக்கவா போகிறார்கள் - என்பதுதான்! அண்ணாவும் பெரியாரும் உயிரோடு இல்லாவிட்டாலும் அவர்களின் கருத்துக்கள் - எழுத்துக்கள் - காலத்தால் அழிந்துபோய்விடவில்லை. 1962 ஆம் ஆண்டு "திராவிட நாடு" கொள்கையைக் கைவிடுவதற்கு முன்பு, அண்ணா அவர்கள் "திராவிட நாடு" பற்றி அளித்த விளக்கங்கள், மாநிலங்கள் அவையிலும், சட்டப் பேரவையிலும், நடவடிக்கை ஏடுகளில் பதிவாகியிருக்கின்றன. "நாட்டைத் துண்டாட அல்ல; சில சலுகைகளுக்காகத்தான் கேட்டார்கள்" என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சி நண்பர்; இன்று வாதிடுவது உண்மையானால் - அப்போது அண்ணாவும் பெரியாரும் கேட்ட "திராவிட நாடு" கோரிக்கையைக் கம்யூனிஸ்டுக் கட்சி எதிர்க்காமல் ஏற்றுக்கொண்டு இருந்திருக்கலாமே!

1952 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கழகம் போட்டி யிடாமல் - திராவிட நாடு கொள்கையை ஒப்புக்கொள்ளும் கட்சிகளுக்கும், வேட்பாளர்களுக்கும் ஆதரவு தரும் என்று அண்ணா கூறியபோது - கடுமையான கண்டனம் தெரிவித்து கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை விட்டதை நாடு மறந்துவிட்டதா? அண்ணா கேட்டது பிரிவினை அல்ல; வெறும் சலுகைதான் என்றால் அந்தச் சலுகைகளைப் பெற கம்யூனிஸ்டுக் கட்சி அப்போது "நேசக் கரம்" நீட்டாதது ஏன்? ஏன்?

இந்தக் கேள்விகளையெல்லாம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர் எதிர்பார்த்திருக்க மாட்டார்! எதை வேண்டுமானாலும் பேசலாம் என்றுதான்;

கருணாநிதி

பிரிவினை

வெளிநாடு

என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார்.

ஆயிரம் தடவைகள் கூறிவிட்டோம்; திட்டவட்டமாகத் தெளிவாகத் தீர்மானங்களின் மூலம் - கழக சட்ட திட்டத் திருத்தங்களின் மூலம் - பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பே "திராவிட நாடு" பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்டதாக!

இப்போது, வலதுகள் வேண்டுமென்றே நம்மைப் பிரிவினைவாதிகள் என்று வம்புக்கு இழுக்கிறார்கள். அதற்கு வலிவு தேட, அண்ணாவையும் பெரியாரையும் அழைத்து வரலாற்றுக் குறிப்புக்களையே மாற்றவும் துணிகிறார்கள்.

அண்ணா காலத்திலேயே பிரிவினைக் கொள்கையைக் கைவிட்ட கழகம், அதனை மீண்டும் எண்ணிப் பார்க்கவேயில்லை என்பதையும், அண்ணா வழி நின்று அவர் வகுத்த நெறி போற்றிப் பணியாற்றி வளர்ந்து வருகிறது என்பதையும் - அறிந்திருந்தும்கூட - அறியாதவர்களைப் போலப் பேசுவது அரசியலுக்கு லாபமாக இருக்கலாம்!

ஆனால், பொய்க்குக் கால் இரண்டும் நொண்டி!

கம்யூனிஸ்டுகளின் "கட்டைக் கால்கள்" கழகத்தை எதிர்க்கும் கடும் பயணத்திற்குப் பயன்பட மாட்டா என்பதை மட்டும் பரிவுடன் தெரிவித்துக் கொள்வது நமது கடமையாகும்.

அன்புள்ள,

மு. க.

18-10-1976

312. உண்மையை அறிவீர்!

உடன்பிறப்பே,

“ஏன் கருடா? சுகமா?” என்று பரமசிவன் கழுத்திலே தொங்கிக்கொண்டிருந்த பாம்பு கேட்டதாக; வேடிக்கைப் புராணம் ஒன்றுண்டு.

அதைப்போலச் சிலபேர் இன்றைக்குக் கருத்துக்களை வாரி இறைக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் ஒருவர் ஒரு பத்திரிகை வெளியீட்டு விழாவில் பேசும்போது “அண்ணாவும் பெரியாரும் திராவிடநாடு கேட்டது பிரிவினைக்காக அல்ல” என்று குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டி நேற்றுக் கடிதம் எழுதியிருந்தேன்; படித்திருப்பாய்.

அந்தத் தோழருடைய பேச்சு நடிகர் கட்சிக்கு இப்போது தொடர்பில்லாத ஒரு மாலை ஏட்டில் வெளியிடப்பட்டிருந்தது.

அதைக் குறிப்பிட்டுத்தான் நான் விளக்கம் எழுதியிருந்தேன்.

இன்றைக்கு ஒருவேளை “அந்தத் தோழர் அப்படிப் பேச வில்லை; ஏதோ ஒரு ஏட்டில் தவறாகப் பிரசுரித்து விட்டார்கள்” என்று செய்தி வரும் என எதிர்பார்த்தேன்.

ஆனால்; ஒட்டகக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பது போல - நடிகர் கட்சியின் ஏட்டிலேயே அந்த இந்திய கம்யூனிஸ்டு கட்சித்தலைவரின் வரலாற்றைத் திரித்துக் கூறும் பேச்சு வெளியாகியிருக்கிறது இன்றைக்கு!

> “பெரியார், அண்ணா கொள்கை, பிரிவினைக் கொள்கை இல்லை. அவர்கள் “திராவிட நாடு” கேட்டார்கள். அது, பிரிவினைக்காக அல்ல. திராவிடநாடு

என்பதைச் சொல்லி பிராமணரல்லாதவர்கள் சில சலுகை களையும் உரிமைகளையும் பெறுவதற்குத்தான்."

இந்த வாசகங்கள், அப்படியே நடிகர் கட்சி ஏட்டில் வெளிவந் திருக்கின்றன.

இந்திய கம்யூனிஸ்டு தலைவர் பேசியது தவறான கருத்து என்பதைச் சுட்டிக்காட்டிய பிறகும், நடிகர் கட்சி ஏடு அந்தப் பேச் சுக்கும்-அந்தக் கருத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்திருப்பதற்கு என்ன மர்மமான காரணமோ புரியவில்லை.

"நான் சலுகைகளுக்காக
திராவிட நாடு கேட்கவில்லை"

என்று அண்ணா, டெல்லி மாநிலங்கள் அவையில் பேசியதை இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் நினைவு வைத்துக்கொள்ள நியாயமில்லைதான்.

அண்ணாவின் கொள்கை-ஆரம்ப காலத்தில் பிரிவினைக் கொள்கை இல்லை என்றால்;

"தி. மு. க. பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டுவிட்டது" என்று அண்ணா அவர்கள் அறிக்கைவிடக் காரணம் யாது?

"காம்ரேடு"கள், விளக்குவார்களா?

ஏற்கனவே நடிகர் கட்சியில் அரசியல் குழப்பம்! அதில் இவர் வேறு புகுந்து புதிய குழப்பத்தைப் புகுத்துகிறார்!

ஒரு காலத்தில்; அண்ணா அவர்கள் பிரிவினை கேட்டதால் தானே; "இனி நான் பிரிவினை கேட்கப் போவதில்லை" என்று சொல்லவேண்டி வந்தது.

ஏ, அப்பா! எவ்வளவு பெரிய அரசியல் வரலாற்றை அப்படியே மறைத்திட முயலுகிறார் வலதுகளின் தலைவர்.

அதே விழாவில் இன்னொரு எழுத்தாளர் பேசியதாக நேற்று மடலில் குறிப்பிட்டிருந்தேனல்லவா; அவர் என்ன பேசியிருக் கிறார், பார்!

"தி. மு. க. மதுவிலக்கை ரத்துசெய்தபோது, எம். ஜி. ராமச்சந்திரன் அதைக் கடுமையாக எதிர்த்தார் என்பதை நாம் மறந்துவிட முடியாது"

இப்படிக் கூறியிருக்கிறார் இந்த எழுத்தாள நண்பர்!

மதுவிலக்கை சிறிது காலத்துக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று அரசுக்குச் சிபாரிசு செய்த தீர்மானத்தை ஆதரித்து கோவை பொதுக்குழுவில் நீண்ட நேரம் பேசியவரே எம். ஜி. ராமச்சந்திரன்தான்.

ஆனந்தவிகடன் இதழில், எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் எழுதிவந்த வாழ்க்கை வரலாற்றில்,

> “கழக அரசு, மது விலக்கை ஒத்திவைக்க வேண்டிய தவிர்க்கமுடியாத சூழ்நிலைக்கு ஆளாகியிருக்கிறது. இந்த நிலைமையில் சிறிது காலம் மது விலக்கை ஒத்தி வைப்பது தவிர வேறு வழியில்லை”

என்று திட்டவட்டமாக அவரே குறிப்பிட்டிருக்கிறார்.

மது விலக்கை ஒத்திவைக்க வேண்டுமென்பதில் எனக்கோ, நாவலருக்கோ, பேராசிரியருக்கோ, எம். ஜி. ராமச்சந்திரனுக்கோ, மற்றவர்களுக்கோ அன்றைய தினம் விருப்பமில்லைதான். ஆயினும் அன்றிருந்த சூழ்நிலையில் பொதுக்குழு, ஒருமனதாக நிறைவேற்றிய தீர்மானமாக அது அமைந்தது.

மீண்டும் மதுவிலக்குத் திட்டத்தை கழக ஆட்சிக் காலத்திலேயே கொண்டு வந்ததையும் மறந்துவிடக் கூடாது.

இந்த உண்மைகளை நினைவூட்டத்தான் இதை எழுதினேன்.

அன்புள்ள,

மு. க.

19-10-1976

313. பொறுத்திருந்து பார்ப்போம்!

உடன்பிறப்பே,

ஒரு நண்பர் - இளம் நண்பர் - வழக்கறிஞர் அவர். புதிய நிர்வாகத்தின் கீழ் வந்துள்ள ஒரு பழைய நாளேட்டில் அறிக்கையொன்று விடுத்திருக்கிறார். அவர், இந்தியத் திருநாட்டில் பெரிய கட்சியாக விளங்குகிற ஒரு கட்சியின் தமிழ்நாட்டுச் செயலாளர்களில் ஒருவராகவும் விளங்குகிறார். அறிக்கை எதைப் பற்றியது என்று கேட்கிறாயா?

நான் கடந்த 21-ஆம் நாளன்று சென்னையில் "அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள்" என்ற தலைப்பில் பேசியதைப் பற்றியதுதான் அந்த அறிக்கை.

அறிக்கையில் என்ன சொல்ல வருகிறார்? என்பது புரிய வில்லை. ஒருவேளை நான் அவர் அளவுக்குச் சட்டம் படிக்காதது காரணமாக இருக்கலாம். அந்த அறிக்கையில் அவர் அள்ளித் தெளித்துள்ள வார்த்தைகளை முதலில் உன் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"கருணாநிதி சொல்வது அபத்தம்"

"தி. மு. க. விடம் இரு வகையான பேச்சுக்களை மட்டுமே எதிர்பார்க்க முடியும். ஒன்று சவால் பேச்சு - மற்றொன்று சவடால் பேச்சு."

"தேர்தலை நடத்துங்கள் என்று கேட்பதற்குப் பதிலாக - தமக்கும் தமது கட்சிக்கும் அந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்குரிய தகுதியைக் காப்பாற்றிக்கொள்ள கருணாநிதி அக்கறை காட்டுவது நல்லது"

அபத்தம், சவால், சவடால், தகுதிப் பிரச்சினை ஆகிய சொற்களை இழையாகக் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளது அந்த அறிக்கை மாலை!

வளர வேண்டிய நண்பர், வார்த்தைகளைத் தேடி எடுப்பதில் கொஞ்சம் அக்கறை காட்டியிருக்கலாம். அவசரப்பட்டுவிட்டார். அதற்காக நான் வருத்தப்படவில்லை. நாள்தோறும் நம்மீது பொழியப்படுகிற கணைமாரியில் இந்தச் சொற்கள் - சிறு துளிகள்தான் எனினும்; சட்டம் பயின்ற நண்பரின் பேனா முனையில் சிந்தியிருக்கத் தேவையில்லை என்பதே என் கருத்து.

இந்த என் கருத்தும் "சுத்த அபத்தம்" என்று சுருக்கெனக் கூறிவிடுவாரோ என்னவோ?

சரி; அவர் என் பேச்சில் எவைகளைச் சவடால் என்கிறார்? எவற்றை அபத்தம் என்கிறார்? அதை கவனித்தாயா?

> "நாடாளுமன்றம், தன் பதவிக்காலத்தை ஓராண்டுக் காலம் நீடித்தது தவறு என்று கருணாநிதி சொல்ல வில்லை. சொல்லவும் முடியாது. ஏனென்றால் தனது ஆட்சிக்கும் பதவி நீடிப்புக் கேட்டவர் அவர்."

இப்படி ஒரு உண்மைக்கு மாறான தகவலைத் தருகிறார் அந்த இளம் நண்பர்.

கோவை மாநாட்டுத் தீர்மானத்தின்படி, 1976 - ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வேண்டும் என்று கேட்டோமே தவிர, தமிழ் நாட்டில் கழக ஆட்சிக்கு நீடிப்பு வழங்குங்கள் என்று கேட்கவில்லை. தீர்மானத்தை விளக்கி நிருபர்களிடம் பேசியபோதும்கூட இந்தக் கருத்தை நானும், நமது பொதுச்செயலாளரும் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம்.

ஆனால் வழக்கறிஞரும், பொறுப்பான செயலாளர் பதவியில் இருப்பவருமான அருமை நண்பர் அவர்கள், "எடுத்தேன் - கவிழ்த்தேன்" என்று அறிக்கை விட்டிருக்கிறார்.

> "நீடிக்கப்பட்ட பதவிக் காலத்தில் அரசியல் சாசனத்தைத் திருத்தக்கூடாது என்றால், வேறு எந்தத் திட்டத்தையும் சட்டத்தையும்கூட அமலாக்கக் கூடாது! ஏன்; இன்னும் சொல்லப் போனால் ஆட்சியேகூட செய்யக்கூடாது! கருணாநிதியின் வாதத்தை ஆழமாகப் பார்த்தால் இந்த அபத்தமான முடிவுதான் வரும்."

அன்பு நண்பர், என் வாதத்தை ஆழமாகப் பார்க்காததால் ஏற்பட்ட முடிவுதான் - அல்லது விளைவுதான் இது என்று நான் கருதுகிறேன்.

நடைமுறைத் திட்டங்களும் நடைமுறைச் சட்டங்களும் - அரசியல் சாசனத்தோடு ஒரே தராசில் வைத்துப் பார்க்கக் கூடியவைகள் அல்ல என்பது எனது தாழ்மையான எண்ணம்.

இது சவாலுமல்ல; சவடாலுமல்ல - என் தாழ்மையான எண்ணத்தைத்தான் கூறுகிறேன்.

அரசியல் சாசனம் என்பது அடித்தளம் - அவ்வப்போது நிறைவேற்றப்படுகிற சட்டங்களோ, திட்டங்களோ, அந்த அடித்தளத்தின் வடிவம் - வலிவு - அமைப்பு - தன்மை - இவைகள் எதுவும் கெடாமல் செய்யப்படுகிற சிறிய மாறுதல்கள், அல்லது காரியங்கள்.

என் சிற்றறிவு அப்படித்தான் கூறுகிறது. இப்போது அடித்தளத்தையே பெரும் மாறுதலுக்கு உட்படுத்த முனையும்போது, சாதாரண சட்ட மாறுதல்களுக்கும், நடைமுறைத் திட்டங்களுக்கும் தருகிற அளவுக்கு மதிப்பைத்தான் அதற்கும் தருவது என்பது பொறுத்தமாகத் தெரியவில்லை.

> "அரசியல் சாசனத் திருத்தம் என்பது விளையாட்டாகவோ, வேடிக்கையாகவோ, வேறு வேலை இல்லாதவர்கள் செய்யும் வேலை அல்ல"

இவ்வாறு அந்த நண்பர், சற்று ஆத்திரத்தோடு அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார். அப்படி விளையாட்டாகவோ, வேடிக்கையாகவோ, அல்லது அந்த நண்பர் சொல்வதுபோலவே ஆகிவிடக் கூடாது என்பது தான் நமது கவலை. அதனால்தான் நாடு தழுவிய விவாதம் வேண்டுமென்றும், அந்தப் பிரச்சினையை வைத்தே பொதுத் தேர்தலை நடத்தி மக்களின் கருத்தை அறிய வேண்டுமென்றும் நான் சென்னைக் கூட்டத்தில் கூறினேன். அது அநேகமாக எல்லா ஏடுகளிலும்கூட வெளிவந்திருக்கிறது.

தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதியை நானும் நமது கழகமும் காப்பாற்றிக்கொள்வதில் அக்கறை காட்டுவது

நல்லது என்று அந்த நண்பர் விடுத்துள்ள அறிவுரையை நான் அலட்சியப்படுத்திவிடமாட்டேன்.

அறிவுரைகள், ஆலோசனைகள், எங்கிருந்து வந்தாலும் அவற்றை அடக்கத்துடன் சீர்தூக்கிப் பார்த்து சிந்திப்பவர்கள்தான் நாம்.

எனவே, அவர் சுட்டிக்காட்டியவாறு நமது தகுதியை அப்படி யொன்று நமக்கு இருக்கிறது என்று அவர் ஏற்றுக் கொண்டால் காப்பாற்றிக் கொள்ள நாம் தவறவே மாட்டோம்.

அவர் கூறுவதுபோல போட்டியிடுகிற தகுதியே நமது கழகத்திற்கு இல்லாமற் போய்விட்டாலுங்கூட வாக்களிக்கிற தகுதிகூடவா நமது கழகத்தினருக்கு இல்லாமற் போய்விடும்? நிச்சயம் போகாது!

எதற்கும் பொறுத்திருந்து பார்ப்போம்.

அன்புள்ள,

மு. க.

24-10-1976

314. முறிந்த மரம்-முட்டுக்கொடுக்க முடியாது!

உடன்பிறப்பே,

இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் ஒரு விழாவில் பேசும்போது-அதாவது நண்பர் எம். ஜி. ராமச்சந்திரன் கட்சியினர் நடத்திய விழாவில் பேசும்போது "அண்ணா கேட்ட திராவிட நாடு, பிரிவினைக் கோரிக்கை அல்ல! சில சலுகைகளைப் பெறுவதற் காகத்தான் கேட்டார். அது பிரிவினையாகாது" என்ற கருத்தை வெளியிட்டிருந்தார்.

அதற்கு விளக்கமளிக்கும் வகையில் நான் உனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன்.

1962 ஆம் ஆண்டுவரையில் அண்ணா அவர்கள் பிரிவினைக் கோரிக்கையை வலியுறுத்தி வந்தார் என்றும், 1962-க்குப் பிறகு கழகத்தின் பொதுக் குழுவைக் கூட்டி விவாதித்துப் பிரிவினைக் கோரிக்கையை தி. மு. கழகம், கைவிட்டுவிட்டதென்று அண்ணா அவர்கள் நாட்டு மக்களுக்கு அறிவித்தார் என்றும்; உண்மை நிலைகளைச் சுட்டிக்காட்டிவிட்டு, அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இதுபோன்ற வரலாற்றுச் செய்திகளைத் திரித்துக் கூறக் கூடாதென்றும் குறிப்பிட்டிருந்தேன்.

1952 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் கலந்து கொண்டு வேட்பாளர்களை நிறுத்தவில்லை. ஆனால் திராவிட நாடு கொள்கையை ஆதரிக்கிற கட்சிகளுக்கும், வேட்பாளர் களுக்கும் ஆதரவு தரும் என்று அறிவிக்கப்பட்டது திராவிடநாடு என்பது பிரிவினை இல்லை என்றால்; அப்போது அந்த நிபந்தனையைக் கம்யூனிஸ்டுக் கட்சி ஏற்றுக்கொள்ள முன்வராத காரணம் என்ன? என்ற வினாவினையும் எழுப்பி இருந்தேன்.

"திராவிட நாடு" என்று தி. மு. கழகமும், அதன் தலைவர் அண்ணாவும் கேட்டது பிரிவினைக் கோரிக்கைதான். அந்தக் கோரிக்கையை 1962 ஆம் ஆண்டுக்குப் பிறகு அறவே கைவிட்டு விட்டுக் கழக சட்ட திட்டத்தில் மாற்றமும் செய்யப்பட்டாகிவிட்டது.

இதுதான் உண்மையே தவிர, வரலாறே தவிர, ஏதோ இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்; வாய் தவறியோ அல்லது வக்கணையாகவோ - கூறிய ஒன்றுக்குச் சில நண்பர்கள் வக்காலத்து வாங்கிக்கொண்டு வாதம் புரிய வந்திருப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

தி. மு. கழகம், பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டுப் பதிமூன்று ஆண்டுக் காலமாகிறது. அதற்குமுன்பு, கழகத்தின் கொள்கையாகத் "திராவிட நாடு பிரிவினை" இருந்த காரணத்தினால்தான் அதனைக் கைவிட்டு விட்டோம் என்று தீர்மானம் நிறைவேற்ற வேண்டியிருந்தது.

பாராளுமன்ற முறைகளில் நம்பிக்கையில்லாமல் இருந்த கம்யூனிஸ்ட் கட்சி, தன் நிலையை மாற்றிக் கொண்டு பாராளுமன்ற முறைகளில் நம்பிக்கை கொள்வதாக அறிவித்திடவில்லையா?

அந்த வரலாற்றுக் குறிப்பை எப்படி மறைக்க முடியாதோ; அதைப்போலத்தான் பிரிவினையில் நாட்டம் கொண்ட தி. மு. கழகம், 1962 ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரிவினைக் கோரிக்கையைத் துறந்திட்ட செய்தியையும் மறைத்திட இயலாது.

"அய்யோ! அண்ணா, பிரிவினை கேட்டார் என்றுகூறி கருணாநிதி அண்ணாவைக் காட்டிக் கொடுக்கிறாரே!"

என்று ஒரு நண்பர் அலறியிருக்கிறார்.

1962-க்குப் பிறகு அண்ணா, பிரிவினைக் கேட்டார்; என்று நானும் சொல்லவில்லை - நாடும் சொல்லவில்லை. தேவையில்லாமல் இவர்கள் சரித்திர ஏடுகளைக் கிழித்தெறிய முயலுகிறார்களே; ஏன்? எதற்காக? என்பதுதான் நமக்குப் புரியவில்லை.

உடன்பிறப்பே, ஒரு இதழின் ஆசிரியர் இந்த விவகாரம் பற்றி ஒரு நீண்ட கட்டுரையே எழுதுகிறார். அதில் மிக முக்கியமான பகுதி என்ன தெரியுமா?

"திராவிட நாடு கோரிக்கையைக் குறிப்பிட்டு ஒரு முறைகூட அண்ணா டெல்லியில் பேசியதே கிடையாது. 1962-க்குப் பிறகுதான் அவர், ராஜ்யசபை உறுப்பினரானார், அந்த சமயத்தில் தான் திராவிடநாடு கோரிக்கையும் கைவிடப்பட்டது"

இப்படி ஒரு குறிப்பை வரைகிறார்கள். இது ஆராய்ந்து பாராமல், அல்லது உண்மையைப் புரிந்துகொள்ளும் அக்கறையில்லாமல் எடுத்து வைக்கப்படுகிற வாதமாகும்.

1962ஆம் ஆண்டு மே திங்கள் 27ஆம் நாள் வெளிவந்த 'திராவிட நாடு' இதழில் "சூடும் சுவையும்" என்று தலைப்பிட்டு அண்ணா அவர்கள் தம்பிக்கு எழுதிய கடிதத்தின் சில பகுதிகளை உனக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

'மே முதல்நாள் காலை ராஜ்ய சபையில் பேசும் வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது என்று எனக்கு அறிவிக்கப்பட்டது. ..... தம்பி கருணாநிதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். பேசும் வாய்ப்புக் கிடைத்ததும் பேசிவிட்டு உடனே ஊர் திரும்புகிறேன் என்று எழுதியிருந்தேன். ..... நடைபெற்றது குடியரசுத் தலைவர் உரை மீது விவாதம். அதிலே நான் என் கருத்தினைக் கூறினேன். திராவிட நாடு பிரிவினையை எடுத்துரைத்தேன். அவையினர் கேட்டனர். அவர்களிலே நான் தவிர மற்றவர்கள் நாட்டுப் பிரிவினையை ஏற்றுக் கொள்ளாத கட்சியினர். எனவே என் பேச்சை மறுத்துப்பேசி, தமது கட்சிக் கொள்கையை விளக்கினர். பிரிவினை கிடையாது-பிரிவினை கேட்க இவன் யார்-பிரிவினைப் பேச்சு ஆபத்தானது - பிரிவினை பேசுவதை சட்ட விரோதமாக்க வேண்டும், என்று இப்படியெல்லாம் அவர்கள் பேசினார்கள்'

இந்த வாசகங்கள், அண்ணா அவர்களே, 1962 மே திங்கள் தம்பிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பவையாகும்.

இதற்கு மாறாக, அவர் ராஜ்யசபையில், 'திராவிட நாடு' பற்றிப் பேசவே இல்லை; பேசியிருக்கவே முடியாது; என்று காட்டப்படுகிற ஆதாரம்-தவறான ஆதாரம் என்று ஆகிவிடுகிறதல்லவா?

நடந்து முடிந்த உண்மை வரலாறு! கைவிடப்பட்ட கொள்கை! ஏதோ, ஒரு போலி வாதத்திற்காக வலது கம்யூனிஸ்டு தலைவர், சரித்திரச் செய்திகளை திசை திருப்பப் போய்; பாவம்-அவர் வாதத்திற்கு வலுவேற்றுவதற்காக-முறிந்துபோன மரங்களைக் கொண்டு முட்டுக் கொடுக்கச் சிலர் முயலுகிறார்கள். வீணான முயற்சி! தேவையில்லாத வேலை! என்பதை மட்டும் அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

26-10-1976

315. நூற்றுக்கு நூறு கற்பனை!

உடன்பிறப்பே,

நாடாளுமன்றத்தில் அன்பர் அளகேசனார் பேசியிருக்கிறார்; "திராவிட நாடு கோரிக்கையைக் கைவிட்டு விட்டதாகத் தி. மு. கழகம் அறிவித்துள்ள போதிலும் பிரிவினைப் பிரச்சாரத்தை அவர்கள் நிறுத்தவில்லை" என்பதாக!

பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு டெல்லி மாநிலங்கள் அவையில் அறிஞர் அண்ணா அவர்கள் அதாவது 1962 மே திங்கள் முதல் நாள் ஆற்றிய உரையில் பிரிவினைக் கோரிக்கையை வலியுறுத்தினார். அவர் பேசும்போது எழுந்த குறுக்கீடுகளுக்கு விளக்கமளித்தார். அந்த உரைக்குப் பிறகு சில மாதங்களுக்கெல்லாம் சீன ஆக்கிரமிப்பு நிகழ்ந்தது. சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து பண்டித நேருவின் கரத்தைப் பலப்படுத்துவதற்காக இந்திய நாடு ஒரு அணியில் நின்றது. அந்த அணிவகுப்பில் அண்ணா தலைமையில் தி. மு. கழகமும் இடம்பெற்றது. இந்தியநாட்டுப் பாதுகாப்பையொட்டி கழகத்தின் பிரிவினைக் கொள்கை கைவிடப்படுவதற்கான அடையாள அறிவிப்பை அண்ணா வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து 1963ஆம் ஆண்டு சென்னையில் கூடிய கழகப் பொதுக்குழுவில் விரிவான விளக்கங்களுக்குப் பிறகு - பிரிவினைக் கொள்கையைக் கழகம் அறவே கைவிடுகிறது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"அண்ணா அவர்கள், 'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி' என்ற ஆங்கில இதழுக்கு அளித்த பேட்டியில் என்ன சொன்னார் தெரியுமா?" எனக்கேட்டு-நாள் இதழ் ஒன்றில் நேற்று முன்தினம் விபரம் எழுதியிருந்தார்கள் அல்லவா? அதாவது;

"இந்திய அரசியல் அமைப்புக்குள் ஒரு திராவிட யூனியன் அமைக்கப் பாடுபடுவது"

என்பதாக 'இல்லஸ்ட்ரேட்டட்வீக்லி' இதழுக்கு அண்ணா சொன்னாரே; அதையேதான் தி. மு. கழகச் சட்டதிட்ட புத்தகத்தில் "குறிக்கோள்" என்ற தலைப்பில் அண்ணா காலத்தில் பொதுக்குழு ஏற்றுக்கொண்டது.

திராவிட யூனியன் அல்லது திராவிடக் கூட்டமைப்பு என்று கூறுவதுகூட "பிரிவினை" என்ற தவறான கருத்தை ஒருவேளை ஏற்படுத்தக் கூடுமோ என்ற எண்ணத்தின் காரணமாக - அண்ணா மறைந்த பிறகு; 1973ஆம் ஆண்டு புதுக்கோட்டைப் பொதுக் குழுவில் "இந்திய அரசுரிமை, ஒருமைத்தன்மை, அரசமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்குள் **கலாச்சார அடிப்படையில்** நெருங்கிய திராவிடக் கூட்டமைப்பாக நிலவப் பாடுபடுவது" என்று குறிக்கோள், திருத்தம் செய்யப்பெற்று **திராவிடக் கலாச்சாரம்** என்பதற்கே முக்கியத்துவம் தரப்பட்டது.

கழக சட்ட திட்டத்தில் 'நோக்கங்கள்' என்ற தலைப்பில்;

"அண்ணா வகுத்த-கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அடிப்படையில் அரசியலில் ஜனநாயக உரிமைகளைப் பாது காத்து ஆதிக்கமற்ற சமுதாயத்தை உருவாக்கவும், பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப்பணி ஆற்றிடவும், பொருளாதாரத்துறையில் வறுமையை வென்று சமதர்ம அடிப்படையில் எல்லோரும் நல்வாழ்வுபெற வழிவகை கண்டிடவும், பிற மொழி ஆதிக்கமின்றி அந்தந்த மாநில மொழிகளை வளர்த்திடவும், மாநிலங்களில் முழுமையான சுயாட்சியும் மத்தியில் கூட்டாட்சியும் அமைந்திடவும் தொண்டாற்றுவது"

என்றுதான் 1973ஆம் ஆண்டு புதுக்கோட்டைப் பொதுக்குழு "நோக்கம்" என்ற தலைப்புக்கு விளக்கமளித்து சட்ட திட்டத்தில் இடம்பெறவும் செய்தது.

"ஏற்கனவே மாநிலங்களுக்கு சுயாட்சி இருக்கிறது. அதை விரிவுபடுத்தவே Fuller Autonomy முழுமையான சுயாட்சி தேவை என்று அண்ணா அவர்கள் "இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி" பேட்டியில் கூறினார் என்று ஏடுகளில் கட்டுரை தீட்டுகிறார்கள் அல்லவா; அண்ணாவின் அந்தக் கருத்தைத்தான் புதுக்கோட்டைப் பொதுக் குழுவில் கழகம் தனது நோக்கங்களில் ஒன்றாகச் சித்தரித்துள்ளது.

1971 ஆம் ஆண்டு கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலே கூட,

"இந்தியா வலுப்பெற்றதாக இருக்க வேண்டுமென்ற இலட்சியத்துக்கு ஊறுதேடாமல், எந்தெந்தத் துறைகளில் வலுவான இந்தியா இயங்குவதற்காக மத்திய அரசு செயல்பட வேண்டுமோ அந்த அதிகாரங்களைத் தவிர இதர அதிகாரங்களை மாநிலங்களுக்கு வழங்கும் வகையில் அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும்" என்றுதான் மாநில சுயாட்சிக்கு விளக்கம் அளித்திருந்தோம்.

ஏற்கனவே மாநிலங்களுக்கு இருக்கிற சுயாட்சித் தன்மையை முழுமையானதாக விரிவுபடுத்த வேண்டுமென்பதுதான் தி. மு. கழகத்தின் கருத்தே தவிர, மற்றவர்கள் கற்பனை செய்வதுபோல பிரிவினை எண்ணம் துளி அளவுகூடக் கழகத்திற்குக் கிடையாது.

"விழுதுகள் வலிவடைவதால் ஆலமரத்தின் அடிமரம் வலுவிழந்து விடுவதில்லை. விழுதுகளும் சேர்ந்துதான் ஆலமரம் பலமுள்ளதாகத் திகழ்கிறது - அதுபோல மாநிலங்கள் அதிக அதிகாரம் பெற்றுத் திகழ்வது மத்திய அரசை வலுப்படுத்தும் வகையில்தான் அமையும், அமைய வேண்டும்.

அரசமைப்புச் சட்டத்தில் "கூட்டாட்சி என்பதற்குப் பதிலாக "ஒன்றியம்" என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பதாகவும் அப்படிப் பயன்படுத்தியிருந்தாலும்கூட நமது அரசியல் அமைப்பு கூட்டாட்சி" முறையில்தான் அமைந்திருக்கிறதென்றும் டாக்டர் அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார். அந்தக் கூட்டாட்சித் தத்துவமும் சுயாட்சித் தன்மையும் மலர்ந்து முழுமையாக மணம் பரப்ப வேண்டுமென்பது பிரிவினை வாதமல்ல"

என்று நான் சட்டமன்ற மேலவையில் நடந்த விவாதத்தின் போது தெளிவாகக் கூறியிருக்கிறேன்.

தன்னாட்சி என்பது Autonomy - தனியாட்சி என்பது Independence - அதாவது சுதந்திரம்!

சுயாட்சி வேறு; சுதந்திரம் வேறு! "சுயாட்சி" என்பது தன்னாட்சிதானே தவிர, தனியாட்சியுமல்ல; சுதந்திரமும் அல்ல!

இதனையும் நாம் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம். இந்திய ஒருமைப்பாடு - ஒற்றுமை - பாதுகாப்பு - இவற்றில்

நமக்குள்ள அக்கறையையும் ஈடுபாட்டையும் - சொல் அளவில் அல்ல; செயல் அளவில் காட்டியிருக்கிறோம்.

சீன ஆக்கிரமிப்பு -

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு -

வங்கதேசப் போர் -

இந்த நிகழ்ச்சிகளின்போது தி. மு. கழகத்தின் தூய்மையான நாட்டுப் பற்றினை உலகம் உணர்ந்திடத் தவறவில்லை.

இவ்வளவுக்கும் பிறகு, தி. மு. க. பிரிவினைப் பிரச்சாரத்தை நிறுத்தவில்லை என்று குற்றம் சாட்டுவது நூற்றுக்கு நூறு கற்பனை - கட்டுக்கதை - என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

27-10-1976

316. நல்ல முடிவை நாம் எதிர்பார்ப்போம்!

உடன்பிறப்பே,

அரசமைப்புச் சட்டம் பற்றிய தனது கருத்துக்களை எடுத்து வைத்துப் பிரதமர் அவர்கள் ஆற்றியுள்ள உரையைத் தொடர்ந்து இந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலேயே பிரிவுவாரியான கருத்துக்கள் உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டு 44-வது திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டுவிடும் என்பது தெளிவாக்கப் பட்டுள்ளது.

இறுதிக் கட்டம் வரையில் தி. மு. கழகம், தனது கோரிக்கையை வலியுறுத்துவது கட்சியின் பாற்பட்டதல்ல என்பதையும், நாட்டின் பொதுவான ஜனநாயக அமைப்பு வலிவோடு திகழவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் என்பதையும் இங்கே குறிப்பிடுவது நமது கடமையாகும்.

அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப் பாராளு மன்றத்திற்கு உரிமை உண்டு என்பதில் நாம் வேறுபட்ட கருத்துக் கொண்டவர்கள் அல்ல.

அரசியல் நிர்ணய சபை ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு அதுதான் இந்தத் திருத்தங்கள் பற்றி யோசித்து முடிவெடுக்க வேண்டுமென்று சில மாநிலக் காங்கிரஸ் கட்சிகளின் சார்பில் எடுத்துக் கூறப்பட்ட கருத்து, எந்த அளவுக்கு நடைமுறை சாத்தியமானது என்பதை சிந்திக்க வேண்டும்.

அரசியல் நிர்ணய சபை, சாத்தியமான ஒன்றல்ல என்றால் பாராளுமன்றம், விவாதித்து முடிவெடுப்பது என்ன தவறு? எனக் கேட்கப்படுகிறது.

நான் மீண்டும் கூறுகிறேன்; பாராளுமன்றம் அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் பற்றி விவாதிப்பது தவறல்ல! ஆனால்

இப்போது எழுந்துள்ள பிரச்சினை தனக்குத்தானே ஆயுட்காலத்தை நீடித்துக் கொண்டுள்ள ஒரு பாராளுமன்றம் இப்படியொரு முக்கியமான விவகாரத்திற்கு முடிவு காணுவது சரியானதுதானா? என்பதேயாகும்.

பாராளுமன்ற ஆயுட் காலத்தை நெருக்கடி நிலையின் காரண மாக ஓராண்டுக்காலம் நீடித்துக் கொண்டது தேவையா? அல்லவா? இந்த விவாதத்தில் இப்போது இறங்கிடத் தேவையில்லை.

1971-ஆம் ஆண்டு வாக்காளர்கள் வழங்கிய தீர்ப்பு-நாடாளு மன்றம், ஐந்தாண்டுக் காலம் வரை பதவியில் இருக்கலாம்; என்பதுதான்!

நெருக்கடி நிலையை முன்னிட்டு ஆயுட்காலத்தை நீடித்துக் கொண்டதுமல்லாமல் அரசமைப்புச் சட்டத்தில் அடிப்படை மாறுதல்களைச் செய்ய முற்படுவது என்பது மக்கள் 1971-ல் அளித்த தீர்ப்புக்கு மாறுபட்ட ஒன்றாகி விடுகிறது.

மன்னர் மானிய ஒழிப்பு, வங்கிகள் தேசீயமயம் போன்ற முற்போக்குத் திட்டங்களுக்கு மக்களின் கருத்தைப் பெறுவதற்காகத்தான் 1972-ஆம் ஆண்டு நடைபெற வேண்டிய தேர்தலை, ஒரு ஆண்டு முன்கூட்டியே 1971-ல் நடத்தி மக்களின் கருத்து அறியப் பெற்றது.

அன்று மக்கள் வழங்கிய ஆதரவு, அரசமைப்புச் சட்டத்தில் இதுபோன்ற மாறுதல்கள் செய்யப்படும் என்ற அடிப்படையில் அல்ல என்பதை, நாம் மறந்துவிடக் கூடாது; அப்படியே அவர்கள் ஆதரவு வழங்கியிருந்ததாக வைத்துக் கொண்டாலும், நீடிக்கப்பட்ட பாராளுமன்றத்திற்கு அந்த மக்கள் இதுபோன்ற உரிமையைக் கொடுத்திருப்பதாக எண்ணுவதும் பொருத்தமாக இல்லை.

250-க்கு மேற்பட்ட பஞ்சாப் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் களும், பாராளுமன்ற உறுப்பினர்களும், காங்கிரஸ் பிரமுகர்களும் கலந்து கொண்ட பஞ்சாப் காங்கிரஸ் கட்சியின் சட்டசபைக் கூட்டுக் கூட்டத்தில், "அரசியல் அமைப்பை மாற்றித் தயாரிக்கும் பெரும் பணியை மேற்கொள்ள அரசியல் நிர்ணய சபை ஒன்றை ஏற்படுத்த வேண்டும்" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதைப் போலவே உத்திரப் பிரதேசக் காங்கிரஸ் சட்டசபை கட்சியின் கூட்டுக் கூட்டத்தில் "அரசியல் அமைப்பைத் திருத்த பாராளுமன்றத்தையே அரசியல் நிர்ணய சபையாக மாற்றவேண்டும்" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தக் கூட்டத்தில் பிரதமர் இந்திரா காந்தி அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

அரசியல் நிர்ணய சபை தேவையில்லை என்ற வாதம் ஒத்துக் கொள்ளப்படக்கூடியது என்றாலும், பாராளுமன்றம் அதற்கான அதிகாரம் படைத்தது என்ற கருத்து ஏற்கப்பட வேண்டியது என்றாலும் - நீடிக்கப்பட்ட பாராளுமன்றம் அந்த உரிமையைப் பெறுகிறதா? அதுவும் மிகப் பெரிய இந்தப் பிரச்சினையில் நீடிக்கப்பட்ட பாராளுமன்றம் இந்தத் திருத்தங்களை விவாதித்து நிறைவேற்றுவது என்பது முறையாகுமா? என்ற வினாக்கள், நமது உள்ளத்தை உறுத்திக் கொண்டுதான் இருக்கின்றன.

திரு. சுவரண்சிங் குழுவினர் அரசமைப்புச் சட்டம் குறித்து செய்த பரிந்துரைகளின் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்ட மசோதாவின் மீது அக்டோபர் 25-ஆம் நாள் விவாதம் தொடங்கியது.

ஜனசங்கம், சோஷலிஸ்ட் கட்சி, பாரதீய லோக்தளம், பழைய காங்கிரஸ் ஆகிய நான்கு கட்சிகளும் அந்த விவாதத்தில் பங்குகொள்ள மாட்டா என்று முன்கூட்டியே அறிவிக்கப்பட்டது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும் அவ்வாறே விவாதத்தில் பங்குகொள்வதற்கில்லையென்று அறிக்கை வெளியிட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட கட்சிகள், தாங்கள் பங்கு பெற முடியாமைக்கான காரணங்களை ஏற்கனவே நடைபெற்ற பாராளுமன்ற கூட்டத் தொடரில் விளக்கியிருக்கின்றன.

தி. மு. கழகம், இந்த விவாதத்தில் ஏன் பங்கு கொள்ள இயலாமல் இருக்கிறது என்பதை 25-10-76 அன்று பாராளுமன்றத்தில் நமது நண்பர் இரா. செழியன் அவர்கள் கழகத்தின் சார்பில் விளக்கமளித்துள்ளார்.

அரசமைப்புச் சட்டத் திருத்தம் செய்யப்படுகிற நேரம், சூழ்நிலை முதலியவை பொருந்தி வரவில்லையென்பதையும், நாடு தழுவிய விவாதம் நடப்பதற்கு வசதிகள் இல்லை

என்பதையும் கழகத்தின் சார்பில் சுட்டிக் காட்டுகிற அதே நேரத்தில், அரசமைப்புச் சட்டத் திருத்தத்தில் சோஷலிசக் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக எந்தப் பிரிவு இடம் பெற்றாலும் அதனை வரவேற்க நாம் தயங்கவில்லை. அவைகளை இதயபூர்வமாகப் பாராட்டியிருக்கிறோம்.

அரசமைப்புச் சட்டத் திருத்தங்களை ஆதரித்துப் பேசியவர்கள்-அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவராயினும், அல்லது காங்கிரசின் தோழமைக் கட்சியினராயினும் - திருத்தத்தில் உள்ள எல்லாப் பிரிவுகளையும் அப்படியே ஏற்றுக் கொண்டு விடவில்லை.

மத்திய அரசு மாநிலங்களுக்கு ஆயுதம் தாங்கிய போலீசை அனுப்புகிற அதிகாரத்தை எடுத்துக் கொள்வது கூடாது என்று ஆதரித்துப் பேசியவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பொதுப் பட்டியலில் கல்வியைச் சேர்ப்பது மத்திய-மாநில உறவு நிலைமையைப் பாதிக்கும் என்று "ஆதரவாளர்கள்" வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள்.

முன்னாள் மத்திய அமைச்சர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் அவர்கள் காங்கிரஸ் சார்பில் ஆதரித்துப் பேசினாலுங்கூட;

"அரசியல் அமைப்பு 14, 19-வது ஷரத்துக்களில் சேர்க்கப் பட்டுள்ள பேச்சுரிமை, கருத்துச் சுதந்திரம், அமைதியாகக் கூட்டம் போடும் உரிமை, நாடு முழுவதும் தாராளமாக நடமாடும் உரிமை முதலியன போன்ற உரிமைகளுக்காகத்தான் நாம் போராடினோம். சமூக முன்னேற்றம் என்ற பெயரில் அந்த உரிமைகளைப் புறக்கணிக்கும் எந்தச் சட்டத்தையும் நிறைவேற்ற முடியும் என்று நினைத்தால் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கு அரசியல் சட்டரீதியாக நாம் கதவுகளைத் திறந்து விட்டுவிடக்கூடும்"

என அறிவுறுத்தி "அடிப்படை உரிமைகளை ஒரேயடியாகப் புறக்கணிக்கக்கூடாது" எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசமைப்புத் திருத்தங்களைத் தீவிரமாக ஆதரிக்கும் வலது கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் பேசிய தோழர் இந்திரஜித் குப்தா அவர்கள்;

"உறுப்பினர்களின் பதவிக் காலத்தை ஐந்திலிருந்து ஆறு ஆண்டுகள் என அதிகரிப்பதும், லோக் சபை -

ராஜ்ய சபைகளின் "கோர"த்தை நிர்ணயிப்பதுமான ஷரத்துக்களும் - தேசவிரோத நடவடிக்கை பற்றிய ஷரத்துக்களும், மசோதாவின் நோக்கங்களுக்குச் சம்பந்தப்பட்டவை அல்ல! எனவே இந்த ஷரத்துக்களும் சமூக பொருளாதார மாற்றம் சம்பந்தப்படாத ஷரத்துக்களும் வாபஸ் பெறப்பட வேண்டும்."

என்று தனது கட்சியின் சார்பில் எடுத்துக் கூறியிருக்கிறார்.

காங்கிரஸ் சார்பில் மசோதாவை ஆதரித்து உரையாற்றிய திரு. அனுமந்தையா அவர்கள்;

> "கடமைகள் சம்பந்தமாக மிகத் தீவிரம் கூடாது. அதில் சீரான சமநிலையை ஏற்படுத்த வேண்டும். சோஷலிசக் கொள்கைக்கு நான் கட்டுப்படுகிறேன் என்றபோதிலும், எதிர்கால சந்ததிகளின்மீது நமது கோட்பாடுகளைத் திணிப்பதை ஆதரிக்க இயலாது"

என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்.

முஸ்லீம் லீக் தலைவர் திரு. சுலைமான் சேட் அவர்கள் ஆதரித்துப் பேசியபோது;

> "தேச விரோத நடவடிக்கைகளைத் தடுக்கும் சட்டம் ஏற்கனவே இருக்கும்பொழுது, அரசியல் சட்டத்தில் அதற்கு விசேஷமாக ஒரு ஷரத்து சேர்ப்பது வீண் குழப்பத்தை ஏற்படுத்தும்"

என்று கூறியிருக்கிறார்.

அரசமைப்புத் திருத்த மசோதாவை ஆதரித்துப் பேசுகிறோம் என்று தொடங்கினாலுங் கூட, தேவையற்ற பிரிவுகளை அகற்ற வேண்டும் என்ற கருத்துக்களை அவர்கள் எடுத்துக் கூறி யிருக்கிறார்கள்.

ஆதரவாளர்கள் சுட்டிக் காட்டியுள்ள பிரச்சினைகள், பிரிவுகள், அந்தப் பிரிவுகளால் விளையக் கூடியவைகள் - இவற்றையெல்லாம் மனதிற்கொண்டுதான் தி. மு. கழகமும், மற்ற எதிர்க் கட்சிகளும் - இப்போது இந்த மசோதாவை ஒத்திவைத்துவிட்டு - தற்போது

நீக்கி வைக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை வழங்கி - நாடு தழுவிய விவாதத்திற்கும் வழி வகுத்து - பொதுத் தேர்தலுக்குப் பிறகு அமையும் புதிய பாராளுமன்றத்தில் விவாதித்து முடிவு செய்யலாம் என்று தெரிவித்தன.

அந்தக் கோரிக்கைக்கு ஆளுங்கட்சி உடன்படாத நிலையில் தான் விவாதத் தொடரில் பங்கேற்க இயலாது என்பதை விளக்கிவிட்டு, விவாதத்திலிருந்து ஒதுங்கிக் கொண்டுள்ளன.

பொது விவாதம் முடிவுற்று, பிரிவுகளை ஆராய்ந்து விவாதிக்கும் இந்தக் கட்டத்திலேகூட, ஆளுங் கட்சி; தனது முடிவை மறு பரிசீலனை செய்ய வாய்ப்பு இருக்கிறது.

அந்த நல்ல முடிவை நாம் எதிர்பார்ப்போமாக!

அன்புள்ள,

மு. க.

29-10-1976

317. "எக்ஸ்பிரஸ்" அன்று போலவே இன்றும்!

உடன்பிறப்பே,

ஆங்கில இதழ் ஒன்று - அதற்கு நமது கழகம் என்றாலே நீண்ட காலமாக ஒரு "அலர்ஜி!"

"அலர்ஜி" என்பது தீதானவற்றைத் தொடுவதாலோ, உண்பதாலோ மட்டும் ஏற்படுகிற ஒன்றல்ல!

சில குழந்தைகளுக்கு மல்லிகைப்பூ வைத்தாலே அந்த 'அலர்ஜி' நோய் ஏற்பட்டு விடும். இன்னும் சில குழந்தைகளைப் பொறுத்த மட்டில் வீட்டில் உள்ளவர்கள் யாராவது மல்லிகையோ முல்லையோ தலையில் சூடிக்கொண்டிருந்து அந்த வாசம்பட்டாலே 'அலர்ஜி' ஏற்பட்டுத் தொல்லை கொடுக்கும்.

சில திருமண விழா ஊர்வலங்களில் மணப்பெண் மயக்க முற்று விழுவதற்குக் காரணம்; அவர்கள் தலையில் வைத்துப் பின்னியுள்ள தாழம்பூவினால் ஏற்படுகிற 'அலர்ஜி' என்று கூறுகிறார்கள்.

குளிருக்கு மெத்தவும் பயன்படுகிற அழகான கம்பளிப் போர்வையைத் தொட்டவுடனே திடகாத்திரமுள்ள சில வாலிபர்கள் 'அலர்ஜி'யால் துன்பமுறுவதை நான் நேரிலேயே கண்டிருக்கிறேன்.

மல்லிகை, முல்லை, தாழம்பூ, கம்பளி போன்றவை மட்டுமல்ல; உணவுக்குப் பயன்படுகிற கத்தரிக்காய் சிலபேருக்கு அலர்ஜி! வெண்டைக்காய் சிலருக்கு அலர்ஜி!

இப்படி நல்லவைகள்கூட சிலருடைய உடலுக்கு ஒத்துக் கொள்ளாமல் அவர்கள் 'அலர்ஜி'க்கு ஆளாவதுண்டு.

பெரும்பாலும் 'அலர்ஜி' சிறு சிறு மாத்திரை மருந்துகளால் குணமாகி விடக்கூடும்.

ஓரிரு சமயங்களில் இந்த 'அலர்ஜி' மாற்று ஊசிகள் போடுகிற அளவுக்கு மிகுந்த தொல்லையைக் கொடுத்துப் பரபரப்பையும் ஏற்படுத்திவிடக்கூடும்.

இந்த வகையான 'அலர்ஜி'யால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு வார ஏடு; மல்லிகையைக் கண்டால் - முல்லையை முகர்ந்தால் - தாழம்பூவைத் தொட்டால் - தொல்லைக்கு ஆளாகிறவர்களைப் போல "தி. மு. க." என்ற சொல்லைக் கேட்டாலே எரிச்சலுக்கு தன்னை ஆளாக்கிக் கொள்கிறது.

சிரங்கு பிடித்தவன் தன் உடம்பை ஆசை தீரச் சொறிந்து கொள்வான். சொறியும்போது ஏதோ ஒரு வகையான இன்பம் இருக்கும். அரிப்பும் அடங்கினாற் போலத் தெரியும். சொறிந்து முடிந்து கை அலுத்துப் போன பிறகுதான் அவன் உடம்பு முழுவதும் "ரத்தினக் கல்" பதித்தது போல சிரங்கின் புண்கள் பளபளக்கும். சீழ் பிடித்த முத்துக்களைச் சொறிந்து சிதைத்ததால் உருவான ரத்தினங்கள் அவை!

அவைகளை ரசிக்க முடியுமா; என்ன? அடடா! எரிச்சலோ-எரிச்சல்!

உடன் பிறப்பே, அந்த எரிச்சல்தான் நான் குறிப்பிடும் இதழுக்கு எப்போதுமே நம்மீது!

கட்டுரையாயினும், கேலிச் சித்திரமாயினும், துண்டு துணுக்குகளாயினும், பேட்டிகளாயினும், நமது கழகத்தை நாராச முறையில் சித்தரித்துக் காட்டுவதைத் தனது வாடிக்கையாகக் கொண்டிருக்கிறது.

நாடி பார்க்கத்தெரியாதவன் "நான்தான் நாடுபோற்றும் மருத்துவ மேதை" யென்று தன்னைப்பற்றிச் சொல்லிக் கொண் டானாம். அதைப் போல அந்த ஏடு நமது நாடியைப் பிடித்துப் பார்த்ததாகக் கூறி, "சே! சே! இது பிழைக்காது" என்று உதட்டைப் பிதுக்குகிறது! பாவம்; அது பிடித்துப்பார்த்தது நாடியை அல்ல-தாடியை என்று விரைவில் புரிந்துக் கொள்ளத்தான் போகிறது. அதன் விழிக்கு ஒளியை எதிர்காலத்தில் மக்கள் வழங்கிடுவர். அதுவரையில் அந்த ஏடு தனது கண்மூடி வைத்தியத்தை நிறுத்தி வைப்பது நல்லது.

கண்ணொளியற்றவர்களிலே கூட சிலபேர் தலைசிறந்த மருத்துவ நிபுணர்களாகத் திகழ்ந்து நோயின் தன்மையையும் அதன் விளைவையும் முன்கூட்டி அறிவிக்கின்ற ஆற்றல் படைத்தவர்களாக இருந்திருக்கிறார்கள். இப்போதும்கூட இருக்கிறார்கள். விழியில் ஒளியில்லாவிட்டாலும் அவர்களுக்கு அறிவு ஒளி துணை நிற்கிறது. இந்த இரு ஒளியுமற்றவர்களின் பட்டியலிலே சிலர் இடம்பெற்று, தங்களைப் பதினெட்டுச் சித்தர்களின் பரம்பரையில் வந்தவர்கள் என்று கூறிக் கொண்டு திரிந்தால்; அது எவ்வளவு வேடிக்கையோ - அவ்வளவு வேடிக்கை, அந்த வார ஏடு - நமது நாடியைப் பார்த்ததாகச் சொல்லி நாம் எதிர்காலத்தில் இல்லாமலே போய்விடுவோம் என்று குறிப்பிடுகிற கேலிக்கூத்து!

இராமாயணத்தில் இலங்கைப் போரில் இந்திரஜித்தின் மாயக்கணையினால் மயங்கி விழுந்த இராம இலக்குமணர் படைவீரர்கள் இனி எழமாட்டார் என்று முடிவு கட்டிய போதுதான் சஞ்சீவி பர்வதத்தின் மூலிகை மகிமையினால் மீண்டும் உயிர் பெற்றெழுந்தனர் என்பதை கம்பர் அழகாகப் பாடுகிறார்.

"ஏற்றமும் பெருவலி அழகோ டெய்தினார்
கூற்றினை வென்று தம் உருவுங் கூடினார்"

இந்தக் கவிதை வரிகளுக்கு ஒப்ப, நமது கழகத்திற்கு ஏற்பட்ட சோதனை, சஞ்சீவி மலையின் மூலிகை எனப்படும் உனது திறத்தால் விலகி, கழகம்; ஏற்றமும் பெருவலிமையும் எழிலும் எய்தி கூற்றினைவென்று நடைபோடுகிற காட்சியினைக் காணத்தான் போகிறோம்!

எரிச்சல் ஏட்டாளர் எண்ணுவதுபோல என்றைக்கும் கழகம் விழப் போவதில்லை.

அன்பு உடன்பிறப்பே, வாதத்திற்காகச் சொல்லுகிறேன் - அப்படிக் கழகம் விழுந்து விடுவதாக இருந்தாலும் -

"விழுந்தாலும் விதை போல விழுவோம்!"

என்று கவிஞர் அப்துல்ரகுமான் பாடினாரே; அதைப் போல விழுவோமே தவிர, முளைப்பதற்காக விழுவோமே தவிர ஆல்போல் தழைப்பதற்காக விழுவோமே தவிர - அழிவதற்காக மாட்டோம்!

நாம் எதற்காக அழிய வேண்டும்? நாம் என்ன வன்முறை யாளர்களா? சட்டம் ஒழுங்கு அமைதிக்கு மதிப்புத் தராத கூட்டமா? நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் நமதிரு விழிகள் எனக் கருதி அண்ணா வழியில் அமைதி காக்கும் நமக்கு அழிவை அணைத்துக்கொள்ள வேண்டிய அவசியமென்ன வந்தது?

அசூயை - ஆத்திரம் - எரிச்சல் - இன்னும் வளர்கிறார்களே என்ற மனப் புழுக்கம் - இவைகளின் காரணமாக மக்களைக் குழப்புவதற்காக வரிந்து கட்டிக்கொண்டு பணியாற்றுகிற அந்த ஏட்டாளர்களின் எண்ணம் கனவிலேகூட பலிக்காது என்பதை, உடன்பிறப்பே! உனக்கு நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சஞ்சீவியாக நீ இருக்கும்போது

சாவு நெருங்குமோ நமது கழகத்தை!

இல்லை - ஒருக்காலும் இல்லை!

அன்புள்ள,

மு. க.

30-10-1976

318. முதுகில் விழுந்த குத்து!

உடன்பிறப்பே,

“என் முதுகிலே குத்திவிட்டார்கள்” இந்த உருக்கமான வாசகத்தை ஜூலியஸ் சீசரின் வரலாற்றுப் புத்தகத்தின் கடைசி பக்கத்திலே காணமுடியும்.

இராவணனை, விபீஷணன் கைவிட்டு எதிரிப் படைக்குத் தளகர்த்தனாகச் சென்றபோது விபீஷணன் கூட்டத்தாரைப் பார்த்து இராவணன் கூறியிருக்க முடியும்.

வாலி மன்னன் வதைக்கப்பட்டபோது அவனது இளவல் சுக்ரீவன் குழுவினரைப் பார்த்து வாலி உதிர்த்த வார்த்தைகள் “என் முதுகில் குத்திவிட்டார்கள்” என்பதாகத்தான் அமைந்திருக்க முடியும்.

வீரபாண்டியக் கட்டபொம்மன், எட்டப்பன் கும்பலைப்பார்த்து நெஞ்சு வெடிக்கச் சொன்ன வார்த்தைகளும் “என் முதுகில் குத்திவிட்டார்கள்” என்பதுதான்.

அறிஞர் அண்ணாவுக்கு எதிராக திரைமறைவில் சூழ்ச்சி செய்து எதிர்முகாம் அமைத்து “திருவாளர் அண்ணாத்துரையார்” என்று மேடைகளில் ஏகடியம் செய்தவர்களை நோக்கி, நாடு “முதுகில் குத்தியவர்கள்” என்றுதான் வர்ணித்தது.

அண்ணா மறைவுக்குப் பிறகு, சொந்த சுய லாபங்களுக் காகவும், சிக்கல்களுக்காகவும் அண்ணாவின் பெயரைச் சொல்லிக் கொண்டே அவர் உருவாக்கிய இயக்கமாம் தி. மு. கழகத்தின் முதுகில் குத்திடச் சிலபேர் கிளம்பினார்கள். முதுகில் குத்தவும் செய்தார்கள்.

அப்படி முதுகில் குத்திய நடிகர் கட்சியின் நண்பர் ஒருவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில், தன்னை; யாரோ முதுகில் குத்திவிட்டதாக முதலைக் கண்ணீர் வடித்திருக்கிறார்.

முதுகில் குத்தும் துரோகிகளைப் பழைய நூல்களிலும், வரலாறுகளிலும், நிகழ்கால வாழ்க்கையிலும் நாம் காணுகிறோம்.

இப்போது அதிலே ஒரு புதுமை என்னவென்றால்; முதுகில் குத்துவதையே தனதியல்பாகக் கொண்டவர்கள்; தங்கள் முதுகில் சிலபேர் குத்திவிட்டதாகக் கூச்சல் போடுகிறார்கள்.

உடன் பிறப்பே, ஒரு நிகழ்ச்சியை உனக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். 1965 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் மொழிப் போராட்டத்தின் உச்சகட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அப்போது அந்த இயக்கத்தில் மாணவர் மத்தியில் தொடர்பு வைத்துக்கொண்டு, தனது பொறிஇயல் துறைப் பணியையும் கவனித்துக் கொண்டிருந்தார் ஒருவர்.

1967 ஆம் ஆண்டில் அந்தப் பொறுப்பிலிருந்து விலகி, நாடாளுமன்றத் தேர்தலுக்குப் போட்டியிட்டார். வெற்றியும் பெற்றார்.

அண்ணாவின் மறைவுக்குப் பிறகு நடிக நண்பர் எம். ஜி. ராமச்சந்திரன் கழகக் கட்டுப்பாடுகளை மீறி நடந்து அறிக்கைகள் விட்டபோது அதனைக் கண்டித்தும் பேசினார் அந்த நாடாளுமன்ற உறுப்பினர்.

பிறகு கழகத்தின் செயற்குழு நடிகரிடம் விளக்கம் கேட்டு, அதை அவர் மறுத்த காரணத்தால் கழகப் பொதுக் குழுவில் நடிகரை கட்சியிலிருந்து விலக்கப்படுகிறது.

அதற்குப் பிறகு தஞ்சை மாவட்டத்தில் உள்ள குத்தாலம் என்ற ஊரில் ஒரு பொதுக் கூட்டம். நான் பேசுகிறேன். இந்த நாடாளுமன்ற உறுப்பினரும் வந்திருக்கிறார். அதுமட்டுமல்ல; கழகத்திலிருந்து ஓராண்டுக்கு முன்பு விலக்கி வைக்கப்பட்டிருந்த அவருடைய நண்பரான ஒரு சட்டமன்ற உறுப்பினரையும் அழைத்து வந்து கழகத்தில் மீண்டும் சேர்த்திடுகிறார், மாயூரம் பயணிகள் விடுதியில்!

அன்றிரவு குத்தாலம் பொதுக்கூட்டத்தில் நடிகரைப் பற்றி மிகக் கடுமையாகவும், தரக்குறைவாகவும் கூடப் பேசுகிறார். நான்கூட அவரிடம்; இவ்வளவு கடுமையாகப் பேச வேண்டியதில்லை என்று குறிப்பிடுகிறேன். அந்தச் சுற்றுப்பயணம் முழுதும் அந்த

நாடாளுமன்ற உறுப்பினர் என் காரிலேயே என்னுடன் அளவளா வியவாறு வருகிறார்.

பிறகு சென்னை திரும்புகிறோம். ஆட்சியில் முக்கிய பொறுப்பில் இருக்கும் ஒருவர் நடிகர் மாயையில் சிக்கியிருப்ப தாகவும் அவரைச் சந்தித்து விவாதித்து என்னிடம் அழைத்து வருவதாகவும் சொல்கிறார்.

நானும் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டு அவரை அனுப்பி வைக்கிறேன்.

சென்றவர், மறுநாள் திரும்பி வருகிறார். அவர் யாரைச் சந்திக்கப் போனாரோ; அவர் துரோகியாகிவிட்டார் என்றும் அவர் இனி நம் கட்சிக்கே தேவையில்லை யென்றும் என்னிடம் கூறுகிறார்.

“முயற்சியைக் கைவிடவேண்டாம். அவரது குறை என்ன என்பதைக் கேட்டு வாருங்கள்” என்று கூறி அவரை, அவரிடம் மீண்டும் அனுப்பி வைக்கிறேன்.

இரண்டு நாட்கள் கழித்து பத்திரிகையைப் பார்த்தால் “இவரும் நடிகர் கட்சியில் சேர்ந்துவிட்டார்” என்று செய்தி வருகிறது.

பிறகு அவருக்கு நடிகர் கட்சியில் மிக முக்கியமான பொறுப்பு கிடைக்கிறது.

எனக்கு அவர்மீது கோபம் வரவில்லை. இன்னமும் கூட அவர் மேல் உள்ள அன்பு எனக்குக் குறையவில்லை.

அப்போது நினைத்துக்கொண்டேன்; யாரையோ அழைத்து வருவதாகச் சொல்லிவிட்டுப் போய், இவரும் அங்கே போய்விட் டாரே; “இப்படி முதுகில் குத்துவார் என்று தெரியாதே!” என்பதாக!

அப்படி அன்றைக்கு நமது முதுகில் குத்தியவர், முதுகில் குத்தியவர்களின் அணிக்குத் தளநாயகராக விளங்கியவர். இன்றைக்குத் தனது நண்பர்கள் சிலர் தன் முதுகில் குத்திவிட்டதாக வருந்தி அறிக்கை விடுவதைப் பார்க்கும் போது வேடிக்கையாக இருக்கிறது.

முதுகில் குத்தியவர்களுக்கு அந்த வலியும் வேதனையும் மனப்புண்ணும் எப்படியிருக்கும் என்று தங்கள் முதுகில் அதே குத்து விழும்போதுதானே தெரியும்! அப்போது தானே தெரியமுடியும்.

எதற்கெடுத்தாலும் ஒரு பல்லவி வைத்திருக்கிறார்கள்- "அண்ணா கொள்கையைத் தி. மு. க. தலைமை, சரியாக நடைமுறைப்படுத்தவில்லை." - இதுதான் அவர்களது பல்லவி!

அண்ணாவின் கொள்கையை 1972 அக்டோபர் முதல் இந்த நாலைந்து ஆண்டு காலமாக அக்குவேறு ஆணிவேறாகச் சிதைத்து அலங்கோலமாக்கியவர்களுக்கு அண்ணாவின் கொள்கைபற்றிப் பேச என்னதான் 'தகுதி' இருக்கிறதோ; புரியவில்லை.

அண்ணா உருவாக்கிய தி. மு. கழகத்தின் சட்டதிட்டமென்ன? இவர்கள் நாலைந்து முறை அவர்களது ஏடுகளில் வெளியிட்ட அவர்கள் கட்சியின் சட்டதிட்டத்தின் கடைசிக் கதி என்ன?

"இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் திராவிடர்கள்" என்று அண்ணா எப்போது கூறினார்?

இப்படி கேள்விகள் ஆயிரம் கிளம்பும். பதில் சொல்ல இயலாது அண்ணாவின் பெயரைத் தவறாகப் பயன்படுத்துகிறவர்களால்!

இப்போது கதறுகிறார்கள்; முதுகில் குத்திவிட்டதாக!

தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தானே தெரியும் என்பது உண்மையாகிவிட்டதல்லவா?

அன்புள்ள,

மு. க.

02-11-1976

319. மார்க்கண்டேயன் மண விழா!

உடன்பிறப்பே,

மார்க்கண்டேயனுக்கு மணவிழா என்றதும் உனக்கு வியப்பு மேலிடுகிறது அல்லவா? மார்க்கண்டேயன் கதையைப் புராணங்களில் படிக்கும்போது அவன் என்றைக்கும் பதினாறு வயதுடைய சிரஞ்சீவி வரம் பெற்றவன் என்பதை மட்டும்தான் அறிந்திருக்கிறோம். அவனை அழித்திடக் காலன் வந்தபோது அவன் ஓடிச்சென்று சிவலிங்கத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டான். உடனே சிவலிங்கம் இரு கூறாகப் பிளந்து சிவனார் சூலாயுதபாணியாக வெளிப்பட்டு மார்க்கண்டேயனை அழிக்க வந்த மரணவேதனை அங்கிருந்து விரட்டியதோடு மார்க்கண்டேயனுக்கும் அழியாத வரம் அளித்து என்றைக்கும் பதினாறு வயது படைத்த இளங் காளையாகத் திகழுமாறு அருள் பாலிக்கிறார்.

இந்த தலபுராணம் திருக்கடையூர் கோயிலைப்பற்றி எழுதப் பட்டு அங்குள்ள சிவனுக்குக்கூட அமிர்தகடேசன் என்று பெயர் உண்டு என்பதை நான் இளம் வயதில் படித்த நினைவுண்டு.

இரண்டு நாட்களுக்கு முன்பு தர்மபுரி, வட ஆற்காடு மாவட்டங் களில் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன் அல்லவா; அப்போது திடீரென்று மார்க்கண்டேயனைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. வனப்பு மிகுந்த அந்த வாலிபனுக்கு மண விழாவை நடத்தி வைக்கிற பெருமையும் கூட எனக்குக் கிடைத்தது.

ஏறத்தாழ முப்பத்தெட்டு ஆண்டுக்காலம் பொது வாழ்வில் எத்தனையோ திருமணங்களுக்குத் தலைமையேற்று நடத்தி வைத்திருக்கிறேன். எத்தனையோ திருமணங்களில் வாழ்த்துரை வழங்குபவனாகக் கலந்துகொண்டிருக்கிறேன்.

மாநாட்டு மேடைகளில் திருமண விழாக்களை நடத்திவைப் பதுண்டு. சிறப்புக்கூட்ட மேடைகளில் மண விழாக்கள் நடத்தப்படு வதுண்டு. இந்தச் சுற்றுப் பயணத்தில்கூட திருப்பத்தூரில்

நடைபெற்றது சிறப்புக் கூட்டமா? அல்லது மாநாடா? என்று எண்ணத்தக்க அளவு நடைபெற்ற மாபெரும் எழுச்சி மிகு நிகழ்ச்சியில் ஒரு திருமண விழாவை நடத்தி வைத்தேன். சென்னை நோக்கி இல்லத்திற்கே வந்து தங்கள் உற்றார் உறவினர் நண்பர்கள் சூழ மண விழா நிகழ்ச்சிகளை என் தலைமையில் நிறைவேற்றிக் கொள்பவர்களின் தொகையும் அண்மைக் காலத்தில் பெருகிய வண்ணமுள்ளது.

உடன்பிறப்பே, நான் ஏதோ இறுமாப்புடன் குறிப்பிடுவதாகத் தயவு செய்து எண்ணிக்கொள்ளாதே. சுயமரியாதைத் திருமண முறையைத் தமிழகத்தில் அறிவித்து வெற்றி கண்ட வெண்தாடி வேந்தர் பெரியார் அவர்களுக்குக்கூட கிட்டாத ஒரு வாய்ப்பு- அவரது தானைத் தளபதியாக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்க்கையிலேகூட நடந்திராத நிகழ்ச்சி-எனது சுற்றுப் பயணத்தின்போது எனக்குப் பெரு வாய்ப்பாக அமைந்தது.

ஆமாம்-மார்க்கண்டேயனுக்கு மண விழா நடத்தி வைப்ப தென்றால் சாதாரணமா?

தர்மபுரி மாவட்ட நிகழ்ச்சிகளில் சிறப்புக் கூட்டங்கள், அண்ணா சிலை திறப்பு விழாக்கள் மட்டுமன்றி நாலைந்து திருமண விழாக்களிலும் கலந்துகொண்டேன். கங்காவரத்தில் காசிராஜன் - ரத்தினம்; அரங்கநாதன் - இலட்சுமி ஆகியோருக்கு நடைபெற்ற மணவிழாக்கள் பெரும் பந்தலிட்டு கொடிகள், பதாகைகள், விளங்கிட எழிலுற மேடை அமைக்கப்பெற்று நடந்தேறின.

வீரமலையெனும் சிற்றூரில் வீதிக்கு வீதி வாழ்த்தொலி முழங்க வரவேற்று, மண விழா நடைபெறும் மேடைக்கு எங்களை அழைத்துச் சென்றனர். விழாப் பந்தல் கண்கொள்ளாக்காட்சி! பந்தல் நிரம்பி வழிந்தது மக்கள் வெள்ளம். முனுசாமி-வசந்தா ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்த விழா மிகச் சிறப்புற நிறைவேறியது.

தர்மபுரியில் காந்தி அண்ணா மணிமண்டபத்தில் உள்ளும் புறமும் பல்லாயிரக் கணக்கானோர் கூடியிருக்க-சம்பத்துக்கும் சொருபராணிக்கும், செல்வத்துக்கும் - ராணிக்கும் மணவிழாக்கள் நடைபெற்றன. அதிலே ஒரு இணைக்கு நான் செல்வதற்கு முன்பே மணவிழா நடந்துவிட்டது. காரணம் சம்பந்தி வீட்டார், இராகுகாலத்திற்கு முன்பே திருமணத்தை நடத்த வேண்டுமென்று விரும்பியதுதான்! மற்றொரு மண விழா, இராகுகாலம் என்றாலும்

பரவாயில்லை; நான் வரும் வரையில் காத்திருப்போம் என்ற கொள்கைப் பற்றோடு நடைபெற்ற விழா. அதாவது புதன்கிழமை பனிரெண்டு மணிக்குமேல் நடைபெற்ற மணவிழா.

வழிநெடுக இருந்த நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு பனிரெண்டு மணிக்குமேல்தான் தர்மபுரிப் போய்ச்சேர முடிந்தது. இராகு காலத்தில் நடந்த அந்தத் திருமண விழாவில் எல்லோரும் காலமாறுதல்-விஞ்ஞான வளர்ச்சி-இப்படிப்பட்ட விரிவான விளக்கங்களைத் தந்து உரையாற்றினர்.

மறுநாள் வியாழனன்று காலை கிருஷ்ணகிரியிலிருந்து திருப்பத்தூர் செல்லும் வழியில் கருங்காலிப்பட்டி என்னும் கிராமத்தில் ஞானசுந்தரம்-வனஜா மன்றல் விழா ஏற்பாடுகள் அந்த ஊரையே வளைத்துக்கொண்டிருந்தன. நீண்ட நெடுங்காலமாகத் தன்மான இயக்கக் கோட்டையாக விளங்கும் அந்தச் சிற்றூர் அழகிய அந்தக் காலை நேரத்தில் அந்த மண விழா வாயிலாகப் புகழ்மணம் பரப்பிக்கொண்டிருந்தது. முத்துப்பந்தலிட்ட மேடையில் மணமக்கள் வீற்றிருந்த காட்சியும், ஆயிரமாயிரம் மக்கள் அந்த மணமக்களை வாழ்த்தி நின்ற மாட்சியும் - இதயத்திற்கு இதமூட்டுவதாக அமைந்ததெனில் அது மிகையாகாது.

“இப்படி ஐந்தாறு திருமணங்கள் எல்லாவகைச் சிறப்புக் களோடும் நடைபெற்றிருக்கும்போது-மார்க்கண்டேயன் மண விழாவுக்கு அப்படியென்ன புதிய சிறப்பு?-ஒருவேளை; அந்த சிரஞ்சீவி வரம்பெற்ற மார்க்கண்டேயனே உன் தலைமையில் மண விழா நடத்திக் கொண்டானா?”

என்றெல்லாம் உடன்பிறப்பே, கேட்கத்தோன்றும் உனக்கு! நீ கேட்பாய்-அதுவும் எனக்குத் தெரியும்!

தர்மபுரி, வட ஆற்காடு மாவட்டங்களில் நீயும் மற்ற உடன்பிறப் புக்களும் காட்டிய உற்சாகத்திற்கு, பொழிந்த அன்புக்கு, கழகத்தின் மீது கொண்டிருக்கிற வற்றாத பாசத்துக்கு எப்படி நன்றி கூறுவது எனத் தெரியாமல் மகிழ்ச்சிக் கடலில் திளைத்துக் கொண்டிருக்கிற எனக்கு அந்த மார்க்கண்டேயன் மண விழாவைப்பற்றி உனக்கு எழுதவேண்டும்போல் தோன்றியது. அதனால்தான் எழுதுகிறேன்.

இரண்டு நாள் நிகழ்ச்சிகளில் கண்டவை, கேட்டவை, உணர்ந்தவை அனைத்தையும் எழுதத்தான் வேண்டும். அவற்றை எண்ணி எண்ணி உவகை கொண்டிருக்கிறேன்.

என் உயிரனைய உடன்பிறப்புக்கள் தங்கள் ஆர்வத்தை இன்னும் சிறிது கட்டுப்படுத்திக் கொண்டால் நலமாக இருக்குமென்று மீண்டும் மீண்டும் நான் குறிப்பிடத்தான் வேண்டியிருக்கிறது.

கடலூர், தர்மபுரி, பொம்மிடி, திருப்பத்தூர், வேலூர் ஆகிய இடங்களில் நடைபெற்றவை சிறப்புக் கூட்டங்கள் என்றாலும் - மாவட்டக் கழகச் சிறப்பு மாநாடுகள் போலவே விளங்கின. அந்தச் சிறப்புக்கெனப் பாடுபட்ட கழகக் கண்மணிகளுக்கெல்லாம் என் இதயம் வாழ்த்துக்களைப் பொழிந்து கொண்டிருக்கிறது.

ஓரிரு இடங்களில் கட்டுக்கடங்காத கூட்டத்துக்கிடையே நான்பட்ட தொல்லைகளின் காரணமாக இரண்டொரு உடன் பிறப்புக்களின் மீது கடுமை காட்டியிருப்பேன். அவர்கள் அதனை மனத்திற்கொள்ளாமல் பொறுத்தருள வேண்டுகிறேன்.

கொடியேற்றக் கயிற்றைக் கையிலே ஒருவர் கொடுப்பது - அதே சமயம் ஒருவர் பின்னாலிருந்து கழுத்திலே மாலை போடுவது- அதைச் சமாளித்துக் கொடிக் கயிற்றை இழுக்கும்போது குழந்தையை கயிற்றுக்கிடையே நீட்டிப் "பெயர் சூட்டுங்கள்" என்பது - அதைக் கவனிப்பதற்குள் கைகுலுக்க ஒருவர் முனைவது - இன்னொருவர் வழக்கு நிதியைக் கரத்தில் திணிப்பது-இத்தனையும் ஒரு சில நொடிகளுக்குள் என்றால், இந்த உடல் தாங்குமா? அதனால் சற்றுக் கடுமைகாட்டியிருந்தால் அது உரிமையின் அடிப்படையில், உடன்பிறப்பு என்ற சொந்தத்தில் என்ற வகையில் அவர்கள் எடுத்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

என்ன இது; மார்க்கண்டேயனை நடுவீதியில் விட்டு விட்டு "மன்னிப்புப் படலம்" எழுத ஆரம்பித்து விட்டாய் என்று கேட்கிறாயல்லவா?

அதோ பார், மார்க்கண்டேயனை! மணமகள் காந்தாவுடன் நின்றுகொண்டிருப்பதைப் பார்!

நடுவீதியில்தான் நின்றுகொண்டிருக்கிறார்கள் - ஆனால் நம்பிக்கையோடு நின்று கொண்டிருக்கிறார்கள்.

என்ன இது புதிர்? வா விஷயத்துக்கு; என அவசரப்படுகிறாயா?

கருங்காலிப்பட்டி மணவிழாவை முடித்துவிட்டு, திருப்பத்தூர் புறப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம்-நாங்கள் சென்ற வழியில் நடுச்

சாலையில் நாலைந்து பேர் மேளம் முழங்கிக் கொண்டிருந்தார்கள். எங்கள் கார்கள் நிறுத்தப்பட்டன. அந்தச் சாலையோரத்து மர நிழலில் மாப்பிள்ளையும் பெண்ணும் அலங்கரிக்கப்பட்டு நின்று கொண்டிருக்கிறார்கள், அவர்களைச் சுற்றி அவர்தம் உற்றார் உறவினர்.

அனைவரும் கார் அருகே வருகிறார்கள். மணமக்கள் கூட கார் அருகே அழைத்துவரப்படுகிறார்கள். "கொஞ்சம் இறங்கி, இங்கேயே இவர்கள் திருமணத்தை நடத்திவிட்டுப் போய்விடுங்கள்" இவ்வாறு சூழ இருப்போர் கூறுகிறார்கள். அதற்குள் அந்தச் சாலையில் கூட்டம் பெருகிவிடுகிறது. புழுதி நிறைந்த சாலை யானதால் கூட்ட நெரிசலில், மணமக்களின் புத்தாடைகள் கூட வீணாகின்றன. சிறிது தாமதித்தால் மணமகன் மார்க்கண்டேயன் ஒரு புறமும்-மணமகள் காந்தா மற்றொரு புறமுமாகத் தள்ளப்பட்டு விடுவார்கள். என்னால் காரின் கதவைத் திறந்து கீழே இறங்கவும் முடியவில்லை. பிறகு மிகுந்த சிரமத்திற்கிடையே மணவீட்டார் தட்டில் வைத்திருந்த மாலைகளை எடுத்து மணமக்கள் கையிலே தந்து மாற்றிக் கொள்ளச் செய்து அந்த மணவிழாவை நிறைவேற்றி வைத்தேன். நடுச்சாலையிலேயே கெட்டிமேளம் கொட்ட, கார் அருகே இருந்தவாறே மண விழாவை முடித்தவுடன்தான், காருக்குள்ளே இருந்த நண்பர் எல். கணேசன், மணமக்களின் பெயர்களைக் கேட்டறிந்தார்.

மணவிழா முடிந்தது - எங்கள் பயணம் தொடர்ந்தது.

உடன்பிறப்பே, இப்போது சொல்-மார்க்கண்டேயன் மணவிழா, ஒரு மண் சாலையின் ஓரத்திலே, மரத்தடியிலே, நடைபெற்றாலுங்கூட அது; இதுவரையில் நாம் கண்ட மணவிழாக் களைவிட - நமதில்லங்களில் நடத்திய மணவிழாக்களைவிட - மகிமை வாய்ந்ததா- அல்லவா?

இந்தச் சுற்றுப் பயணத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள், வழங்கப் பட்ட வழக்குநிதி, பேரார்வப் பெருக்கு - அனைத்தும் என்னைக் கவர்ந்தன எனினும்; "மார்க்கண்டேயன் மணவிழா" அவற்றைக் காட்டிலும் சிறிது கூடுதலாகவே என்னைக் கவர்ந்து விட்டது.

அன்புள்ள,

மு. க.

06-11-1976

320. ஓய்வுக்கு - ஒரு வேலை!

உடன்பிறப்பே,

இன்றையக் கடிதம்; அகமா? புறமா? கலித்தொகையா? என நீ கேட்பதற்கு முன்பே சொல்லிவிடுகிறேன். தமிழ்நாட்டுப் பழம்பெரும் புலவர்களையெல்லாம் விட்டு விட்டு - உன்னை உலக மகாக் கவிஞன் ஹோமரிடம் அழைத்துச் செல்லப் போகிறேன். கிரேக்கத்து மண்ணின் அந்தக் கீர்த்தி மிகுந்த கவிஞன், "இலியத்" "ஒதஸ்ஸே" என்ற இணையற்ற இரு காவியங்களை இலக்கியப் பெண்ணின் கண்கள் எனப் படைத்தவன் எனினும், அவனோ இரு கண்களுமற்ற குருடனாக - இளைஞன் ஒருவனின் துணையோடு நாட்டின் வீதிதோறும் தனது பாடல்களை இசைத்துக்கொண்டே போவானாம்.

இலியத் - ஒதஸ்ஸே - என்ற இரு காவியங்களும் ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப் பெற்றன, அந்தக் கற்பனைக் கவியின் பேராற்றலின் மொத்த உருவங்களாக!

திடீர்த் தேவதைகள் - அக்கினித் தெய்வங்கள் - கடலைக் கலக்கும் பூதங்கள் - புயலைப் பெருமூச்சாக விடும் பயங்கரக் கடவுள்கள் - இவைகள் எல்லாம் அவன் காவியங்களில் நடமாடும் பாத்திரங்கள் என்றாலும், உவமைகள் - அலங்கரித்துக் கொண்டு ஆட்டம் பழகும் சொற்கள் - கதையோட்டத்தின் மின்னல் திருப்பங்கள் - குறைவில்லாமல் கிடைக்கும் கடற்கரையில் தானே வந்து ஒதுங்கிக் கிடக்கும் ஒளி முத்துக்களைப்போல!

அவனது முதற் படைப்பான "இலியத்" கிரேக்க மாவீரர்கள் "டிராய்" எனும் நகரை, பத்தாண்டுக் காலம் முற்றுகையிட்டு இறுதியில் அந்நகரை, மண்மேடாக்கி வெற்றி பெற்ற நிகழ்ச்சியை வீரம் சொட்டச் சொட்ட எடுத்துக்காட்டும் காவியமாகும்.

லெசிடமோன் நாட்டு மன்னன் மெனிலசின் அழகிற் சிறந்த மனைவியின் மீது மையல் கொண்டு, பிரியாம் அரசின் மைந்தன் பாரிஸ் என்பவன், அவளைத் தூக்கிக் கொண்டு போய்விடுகிறான்.

மெனிலஸ், பெரும் படை திரட்டிக்கொண்டு போருக்குப் புறப்படு கிறான். டிராய் நகரம் முற்றுகையிடப்படுகிறது. ஒன்பதாண்டுக் காலத்திற்கு மேலாக முற்றுகை தொடர்ந்து பின்னர், போரில் வெற்றி வாகை சூடி, இழந்த மனைவியை அழைத்துக் கொண்டு மெனிலஸ் திரும்புகிறான். இந்த நீண்ட போருக்கிடையே எத்தனையோ சுவைமிகு நிகழ்ச்சிகள், களியாட்டங்கள், காதல் விளையாட்டுக்கள், வீரங்கொப்பளிக்கும் கட்டங்கள்.

இந்த 'இலியத்' காவியத்தின் தொடர்ச்சிதான், 'ஒதஸ்ஸே' என்ற ஹோமரின் மற்றொரு பெருங் காவியமாகும். 'டிராய்' நகரை முற்றுகையிட்ட கிரேக்க மாவீரர்களில் ஒருவன் ஒதீதிசியஸ்- அஞ்சா நெஞ்சு கொண்டவன். 'இதாக்கா' என்ற பகுதியின் மன்னவன் அவன், அந்தப் பகுதி ஒரு தீவாகும். பத்தாண்டுக்காலப் போரை முடித்துவிட்டுத் தன்னுடைய தாயகம் திரும்பி, அன்பு மனைவியையும் ஆசை மகனையும் காணவேண்டுமென்ற துடிப்புடன் கடற்பயணம் மேற்கொள்கிறான்.

அந்தக் கடற்பயணமும் அவனுக்குப் போராட்டமாகவே ஆகிவிடுகிறது. ஓராண்டு, ஈராண்டு அல்ல - பத்து ஆண்டுக் காலப் போராட்டம் - கடல் அலைகளோடு கொடிய புயல்களோடு! முரட்டுத் தேவதைகளோடு! அதுவும் தன்னந்தனியனாகத் தொல்லைகளை ஏற்கிறான். நிம்மதி மூச்சுக்கே வழியில்லாமல் திண்டாடுகிறான்.

டிராய் நகரில் போர் செய்து களைத்துப் போனவன், மீண்டும் பத்தாண்டுகள் கடற் பயணத்தையே ஒரு போராட்டமாக மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. அதற்கிடையே "இதாக்கா" தீவில் அவனது மாளிகையைச் சூழ்ந்து கொண்டு பிரபுக்கள் கும்மாளமடிக்கிறார்கள். அந்தப் பிரபுக்களில் ஒருவனை, ஒதீசியசின் மனைவி, திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று தினந்தோறும் வற்புறுத்தப்படுகிறாள்.

அந்தக் கயவர்களை எதிர்த்துத் தனது கற்பைக் காப்பாற்றிக் கொள்ள அந்த மங்கை நல்லாள் பெரும் பாடுபடுகிறாள்.

கணவன் கடல் பயணத்திலே - கடும் சோதனைகளுக் கிடையிலே! காரிகையோ காமுகர்களின் குடிவெறிக் கூத்துக் கிடையிலே!

பயங்கரப் பயணத்தின் ஒரு கட்டமாக ஒதீசியஸ், கலிப்சா என்ற தெய்வப் பெண்ணுக்குரிய அழகிய தீவு ஒன்றுக்குப் போய்ச் சேர நேரிடுகிறது. அங்கே அவனுக்கு சுகவாசம்தான். கொடிய கோடைபோன்ற துன்பத்திற்கு மத்தியில் குளிர்ந்த தென்றல் வீசுவதுபோலத்தான் அந்தத் தீவு அவனுக்கு இருந்தது. நல்ல உள்ளம் படைத்த அந்தத் தெய்வப் பெண்ணும், அவனை மீண்டும் கடற் பயணம் மேற்கொள்ள வேண்டாமென்றும், அந்தத் தீவிலேயே தங்கி உயிரைக் காப்பாற்றிக் கொள்வது நல்லதென்றும், அவனுக்குத் தேவையானது அனைத்தையும் வழங்குவதாகவும் கூறுகிறாள்.

எதை வேண்டுமானாலும் அந்தத் தூய இதயம் படைத்த தோகையாள் வழங்கிடமுடியும்; ஆனால் அவனது 'இதாக்கா' தீவையும், இனிமை வாய்ந்த இல்லத்தையும் வழங்க இயலுமா?

இந்தப் பிரச்சினையைக் கேள்விக்குறியாக ஆக்கி, ஹோமர் எவ்வளவு அற்புதமான கட்டத்தை உருவாக்கித் தருகிறார் பார்!

"அன்பும் ஆற்றலும் வாய்ந்த ஒதீசியஸ்! நீ, மனமார நேசிக்கும் 'இதாக்கா'வுக்கு எப்படியும் திரும்பிப் போய், உன் இல்லத்தாரையும் உன் மக்களையும் பார்த்தே தீரவேண்டுமென்று அவா மிகுதியால் கவலை கொண்டிருக்கிறாய். ஆனால் ஒன்று - நீ உன் தாய்நாடு திரும்பக் கூடுமானால் எனக்கு மகிழ்ச்சியே! இடையில் உன்னைத் தொடர்ந்து எதிர்க்கும் கடல் கடவுள்கள் சிலவற்றின் கடுமையான சோதனைகளை உன்னால் சமாளிக்க முடியாது என்றே கருதுகிறேன். எனவே நீ விரும்பினால் இந்த மாளிகையில் என்றும் மாறாத வாலிப வனப்புடன் என்னுடன் சிரஞ்சீவியாக வாழலாம், என்ன சொல்கிறாய்? ஒரு தேவ கன்னிகையின் அழைப்பைப் புறக்கணித்து மானிடப் பிறவியான உன் மனைவியிடமே சென்றிட முடிவு கட்டிவிட்டாயா?"

கலிப்சா என்ற கடற் கன்னியின் கேள்வி இது! ஆம்; கனியிதழ்கள் மட்டுமல்ல - அவள் கடை விழியும் கேட்கிறது இந்தக் கவர்ச்சி மிக்கக் கேள்வியை!

அதற்கு ஒதீசியஸ் சொல்லும் பதிலை, ஹோமர் விவரிக்கிற அருமையே அருமை!

"தேவமாதே! என் சினத் தீயை மூட்டிவிடாதே! கடவுள் தன்மை வாய்ந்த உன் கட்டழகுடன் ஒப்பிடும்போது மானிட ஜாதியில் தோன்றிய என் மனைவி அழகு குறைந்தவள்தான். மாறாத இளமையும்-மங்காத வாழ்வும் உன்னைப் போலவே எனக்கும் கிடைக்குமென்று நீ கூறிய போதிலும், என் மனம் என் வீட்டையும் என் மக்களையும் காண்பதற்கே முந்துகிறது. நீ அச்சுறுத்துகிறபடி இதுவரை நான் அனுபவித்ததைப் போலவே இனியும் நான் மேற்கொள்கிற கடற் பயணத்தில் "பூகம்ப தேவனான பொசிதன்" எவ்வளவு தொல்லை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்வதென்ற முடிவுடன் புறப்பட்டுவிட்டேன்"

ஒதீசியசின் பதில், அவளுக்கு மகிழ்ச்சியே அளித்தது. அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து அந்த நல்ல பெண்மணி, அவனை மீண்டும் கடலில் வழி அனுப்பி வைக்கிறாள்.

கடலின் நடுவே, பூகம்ப தேவன், அவனைப் பார்த்து விட்டான். அவ்வளவுதான். மேகங்களையெல்லாம் கருமையாக்கி ஒரு அணியில் திரட்டி நிறுத்தி, தன் கையிலுள்ள வேலாயுதத்தால் ஆழ்கடலைக் குத்துகிறான். உடனே புயல் - சூறாவளி - கொந்தளிப்பு - ஒதீசியசைச் சுருட்டிக்கொள்ள அலைகளின் நீண்ட நாக்குகள் நீளுகின்றன.

அதிலிருந்து எப்படித் தப்புகிறான்? எப்படித் தன் அன்புக்குரிய 'இதாக்கா'வுக்குச் செல்கிறான்?

இவைகளைத் 'திரையில் காண்க' என்று கூறமாட்டேன்.

ஓய்விருக்கும்போது ஹோமரின் ஒதீசியசைப் படித்துப் பார்! உணர்ச்சிக் காவியம் அது! எடுத்தால் படித்து முடிக்காமல் கீழே வைக்க மனம் வராது.

அன்புள்ள,

மு. க.

07-11-1976

321. சிங்கங்களும் சிறுநரிகளும்!

உடன்பிறப்பே,

குட்டிக்கதை எழுதுவதில் தங்களை மூதறிஞர் ராஜாஜி என்றும், உவமைக் கதைகள் கூறுவதில் தங்களைப் பேரறிஞர் அண்ணா என்றும் எண்ணிக்கொண்டு வண்ணக் கலாபங்களுடன் சில வான்கோழிகள் போட்டி போடுகின்றன.

ஒரு காட்டில் ஒரு சிங்கம் இருந்ததாம். அதற்கு முடக்கு வாதமாம். குகையை விட்டு அது வெளியே வரமுடியவில்லையாம். எனவே அது தந்திரமாக காக்கைகளையும், வாத்துக்களையும், கழுதைகளையும், ஆடுகளையும், நரிகளையும் "உடன்பிறப் புக்களே!" என்று அன்பொழுக அழைத்ததாம். அதை நம்பி, முதலில் ஆடுகள், பிறகு கழுதைகள், மூன்றாவதாக வாத்துக்கள், குகைக்குள்ளே சென்று சிங்கத்திற்கு இரையாகி விட்டனவாம். நான்காவதாகச் சென்ற நரி, சிங்கத்தை ஏமாற்றிவிட்டு ஓடிவிட்ட தாம். சிங்கம், "வழக்கு" எனும் முடக்கு வாத நோயின் கொடுமை தாங்க முடியாமல் நாளடைவில் மாண்டு மறைந்து விட்டதாம்.

இப்படி ஒரு ஏட்டில் ஒரு குட்டிக்கதை!

முடக்குவாத நோய் சிங்கத்திற்கு வந்தாலும் சரி; அல்லது மனிதர்களுக்கு வந்தாலும் சரி; நாளடைவில் மாண்டுதான் போக வேண்டும்.

உலகில் உயிரினமாகத் தோன்றுகிற எதுவும் அழியாமல் அப்படியே இருந்துவிடுவதில்லை. எந்த மனிதர்களாக இருந்தாலும் நோய்களுக்கு விதிவிலக்கல்ல.

குட்டிக்கதை எழுத எண்ணியவர், யாரையோ இழிவுபடுத்த முயன்று -அவரை அறியாமலே அந்தப் பாத்திரத்தைச் சிங்கமாக உருவகப்படுத்தி விட்டார்.

யார் யாரையோ எச்சரிக்கை செய்து சிங்கத்தின் வாயிலே விழுந்து விடாதீர்கள் என்று எழுத வந்தவர், காக்கையையும் - கழுதையையும் - ஆட்டையும் - நரியையும் - வாத்தையும் - மற்ற வனவிலங்குகளையும் "உடன்பிறப்புக்கள்" என்று சித்தரித்து விட்டார்.

உடன்பிறப்புக்களைப் பார்த்தால் அவருக்குக் காக்கை, கழுதை, நாய், நரியாகத்தான் தெரிகிறது; அவ்வளவு பெரியவர் அவர்!

சிங்கம், தன்னுடைய இனத்திலுள்ள சிங்கங்களைப் பார்த்துத்தான் உடன்பிறப்பே என்று அழைக்குமே தவிர, கழுதையையும் நரியையும் பார்த்தா "உடன்பிறப்பே!" என்று அழைக்கும்? அழைக்காது!

"நாம், அடுக்கு மொழி பேசுகிறோம் என்று கூறிச் சிலபேர் தடுக்குமொழி பேசுகிறார்கள்" என்று அண்ணா ஒருமுறை குறிப்பிட்டது, இந்தக் குட்டிக் கதைகளைப் பார்க்கும்போது உண்மையெனப் புரிகிறதல்லவா?

சிங்கத்தின் உடன்பிறப்பாம் உன்னைப்பார்த்து கழுதை யென்றும் வாத்து என்றும் விமர்சிப்பதாலேயே நீ அந்தப் பிராணிகளாகவோ பறவைகளாகவோ ஆகிவிடமாட்டாய்!

ரோஜா மலரை; என்ன பெயர் இட்டு அழைத்தாலும் அது ரோஜாதான்! ரோஜாப் பூவை எருக்கம் பூ என்று சொன்னால், உடனே ரோஜாவுக்கு எருக்கம் பூவின் இயல்பு வந்துவிடுவதில்லை. பரங்கிப்பூ என்று பெயர் சூட்டினால் ரோஜாவின் மணம் மாறிப்போய்விடப் போவதில்லை, என்ன பெயரில் அழைத்தாலும் ரோஜாதான்!

சிங்கத்தின் உடன்பிறப்புக்கள் சிங்கங்களாகத்தான் இருக்க முடியும். அவைகளைக் கழுதைகள் என்று யாராவது சொன்னால், அதற்காக அவைகள் மூட்டை சுமக்கத் தயாராகி விடுவதில்லை. உடன்பிறப்புக்களை - இழிவுபடுத்தும் நோக்குடன் என்ன சொல்லிக் கதை எழுதினாலும், சிங்கத்தின் உடன்பிறப்புக்கள், சிங்கங்களேதான்! சிறு நரிகளல்ல!

"உடன்பிறப்புக்களே!" என்று சிங்கம் அழைக்கும்போது சிங்கக் கூட்டம்தான் அருகே ஓடிவரும்; தங்களின் உடன்பிறப்பு அழைத்ததாலே!

42211

அனுபவமற்றவர் எழுதிய குட்டிக்கதையிலே ஒன்றைத் தெளிவாக்கியிருக்கிறார். சிங்கத்தின் அருகே சென்று நரி வாலாட்ட முடியாது - தொலைவிலேயிருந்து கூச்சல் போட்டுவிட்டு ஓடிவிடும் என்பதை மட்டும் மிகத் தெளிவாக்கியிருக்கிறார்.

வாதம் வந்த சிங்கமோ, வலியால் அவதிப்படும் சிங்கமோ, காயம் பட்ட சிங்கமோ - எந்தச் சிங்கமானாலும்; அதற்கென ஒரு குகையிருப்பதை "குட்டிக்கதைக்காரர்" தன்னையறியாமலேயே ஒத்துக்கொண்டிருக்கிறார்.

கதையைத்தான் அவர் சரியாகச் சொல்லவில்லை.

என் செய்வது; வான்கோழிகள், வண்ணக்கலாபம் விரித்திடத் துடிக்கின்றன!

அன்புள்ள,

மு. க.

10-11-1976

322. இருக்குமிடம் தேடி...

உடன்பிறப்பே,

நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்துப் பழந்தமிழ் மக்கள் அவற்றிற்கேற்பத் தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டார்கள். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாகும் அவை.

அந்த ஐந்து நிலச் சிறப்புக்களைப் பின்னணியாகக் கொண்டு அக்காலத்துப் புலவர் பெருமக்கள் எழுதிக் குவித்த வளமிகு பாடல்களின் தொகுப்புக்களில் ஒன்றுதான் குறுந்தொகையாகும்.

ஐந்து நிலங்களில் மலையும் மலை சார்ந்த பகுதிகளும் 'குறிஞ்சி' என அழைக்கப்பட்டது.

கிளியும் மயிலும் குறிஞ்சி நாட்டுப் பறவைகளாகப் போற்றப் பட்டன.

சிங்கம், புலி, கரடி, யானைகள் அந்த நிலத்துக்குரிய விலங்குகள்.

அகிலும் தேக்கும் மணம் அழியாச் சந்தனமும் மூங்கிலும் அங்கு காணப்படும் மரங்கள்.

குறிஞ்சி, காந்தள், வேங்கையெனும் மலர்கள் எழில் சேர்க்கும் ஏற்றமிகு நிலமே குறிஞ்சி நிலம்.

தினையும், தேனும், மலை நெல்லும் அந்த மக்களின் உணவுப் பொருட்கள்.

ஆண்களைப் பொருப்பன், வெற்பன், சிலம்பன், குறவன், கானவன் என்றும் பெண்களைக் கொடிச்சியர், குறத்தியர் என்றும் அழைப்பர்.

அவர்கள் வழிபடு தெய்வமாக முருகனைக் கொண்டிருந்தனர்.

இந்தக் குறிஞ்சி நிலத்து நிகழ்ச்சியொன்றைத்தான் குறுந்தொகைப் புலவர்களிலே ஒருவராக ஐயூர் முடவனார் அழகுறச் சித்தரிக்கிறார்.

“அமர்க்கண் ஆமாம் அம் செவிக்குழவி
கானவர் எடுப்ப வெரீஇ, இனம் தீர்ந்து,
கானம் நண்ணிய சிறுகுடிப் பட்டென
இளையர் ஓம்ப மரீஇ, அவண் நயந்து
மன உறை வாழ்க்கை வல்லியாங்கு,
மருவின் இனியவும் உளவோ?
செல்வாம்-தோழி! ஒல் வாங்கு நடந்தே”

காதல் பிரிவுதான்! அதனால் ஏற்பட்ட கவலைதான்! கண்களிலிருந்து மழை கொட்டுகிறது. வளைகள் கழன்று வீழ்கின்ற அளவுக்கு வடிவழகி மெலிந்து விட்டாள். காதலனை மறக்கமுடியாமல் உறக்கம் துறந்துவிட்டக் கண்களை ஏசுகிறாள். இப்படிப் பல பாடல்கள் உண்டு.

“காலம் தாழ்த்தாமல் ஓடிவருவேன், வஞ்சியே! உன்னைக் கொஞ்சிட!” என்று கூறி விட்டுச் சென்றவன், இன்னும் வரவில்லை. பார்த்தாயா? அவன் உன் இயல்புக்குச் சிறிதும் பொருத்த மில்லாதவன்”

என்று சினங் கொப்பளிக்கக் கூறுகிறாள் தோழி!

பாயசக் காதல் பருகிடத் துடிக்கும் பருவ மயிலாள் அவள் எனினும் தன் தோழிக்குத் தண்மதி ஒளியென அமைதியாக, ஒரு பதிலைத் தருகிறாள்.

“அவர், என் இயல்புக்குப் பொருந்தாவிட்டாலும் நான் அவர் இயல்புக்குத் தக்கபடி நடப்பதாக இருக்கிறேன். அவர் இங்கு வராவிட்டால் என்ன? நாம் அங்கே அவர் இருப்பிடம் செல்வோம் தோழி!”

இந்த பதிலைக் கேட்ட தோழி திகைத்துப் போய்;

“என்னடி இது? அவர் இயல்புக்கு நீ உன்னை மாற்றிக் கொள்வதா? அது எப்படி முடியும்?”

எனக் கேட்கிறாள்.

தோழியின் ஐயப்பாட்டை நீக்குவதற்காக அந்தக் காதல் பறவை வழங்கிய விளக்கம்தான். இந்தக் குறுந்தொகைப் பாடலாகும்.

“பசுக்கூட்டத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கன்றுகள் இடப்பெயர்ச்சியை புரிந்துகொண்டு அந்த வீட்டின் இயல்புக்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ளும். அதுபோல காதலன் இயல்பை அறிந்து அதற்கேற்ப என் இயல்பை மாற்றிக்கொண்டு காதலன் இருக்குமிடம் தேடிச் செல்வதாக உள்ளேன்”

உடன்பிறப்பே, இலக்கியத்தின் இனிமையும் - எடுத்தியம்பும் கருத்தும் - உவமையும் - எவ்வளவு சுவைமிக்க விருந்தாக இருக்கின்றது கவனித்தாயா?

இனி, கிழமைக்கு ஒரு முறை அல்லது இரு முறை - தவறாது தருகின்றேன் இந்தத் தமிழ் இலக்கியப் படையலை!

அன்புள்ள,

மு. க.

13-11-1976

323. ஜனநாயகச் சோலை ஜவகர்!

உடன்பிறப்பே,

மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பினை உணர்ந்தவரும், உணர்த்தியவரும், அதற்கென உழைத்தவருமான பண்டித நேரு பெருமகனாரின் பிறந்தநாள் விழா, குழந்தைகள் தினமாக நாடெங்கும் கொண்டாடப் பெறுகிறது.

குழந்தையுள்ளம் படைத்தவர்-கொடுமைகள் பல ஏற்று நாட்டு விடுதலைக் கொடியை வான் நோக்கித் தூக்கிப் பிடித்தவர்-ஆண்டுக் கணக்கில் சிறை வாழ்வை ஏற்று அந்த நேரத்தை வீணாக்காமல் சிந்தனைச் செல்வங்களை எழுத்தாக்கி உலகிற்கு வழங்கியவர்-இந்தியத் திருநாட்டின் இரண்டாவது எவரெஸ்ட் சிகரமென உயர்ந்து நின்றவர்-அவரது பிறந்த நாளைக் கொண்டாடும்பொழுது அவரின் கனவுகளை நடைமுறைப்படுத்திட; நாட்டு மக்கள் அனைவரும் சூளுரை மேற்கொள்ள வேண்டும்.

வலிவு மிகுந்த அந்த நெஞ்சிலேயிருந்து பொலிவு குறை யாமல் புறப்பட்ட கருத்துக்களின் புதையலாகத்தான் அவர் எழுதிய உலக சரித்திரமானாலும்-அவர் ஆற்றிய உரைகளானாலும் விளங்கிக் கொண்டிருக்கின்றன.

அவர் ஒரு அழுத்தமான பகுத்தறிவுவாதி என்பதை அவரது எழுத்துக்களே சாட்சியங்களாக நின்று எடுத்துக் காட்டுகின்றன.

“எனக்கென்னவோ, மறு உலகத்தைப்பற்றி அக்கறை ஏற்படவில்லை. இந்த உலகில் நான் செய்ய வேண்டியது என்ன என்பதைப் பற்றியே என் உள்ளம் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. இந்த உலகில் எனக்குள்ள வழி, தெளிவானால் போதும்; அதோடு மன நிறைவு கொள்வேன். இங்கே என் கடமை என்ன? அதை விடுத்து மறு உலகைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. தேவருலகம் அல்லது சொர்க்கம் என்று எப்படிக் குறிப்பிட்டாலும்,

அதெல்லாம் ஏதோ குழந்தையொன்று தனக்கு "ஜிலேபி" கிடைக்கப் போகிறது என்கிற ஆசையில் அடங்கி ஒடுங்கி நடந்து கொள்வது போலத்தான் எனக்குத் தோன்றுகிறது. வயதானவர்களே இவ்வாறு நடந்துகொண்டால், அதைச் சிறுபிள்ளைத்தனம் என்றுதானே கூறவேண்டும்?"

இத்தகைய பகுத்தறிவுக் கருத்துக்கள் குழந்தைகள் நாளாம் நேரு பிறந்த நாளின்போது-குழந்தைகளின் நெஞ்சத்தில் பதிந்திடும் முயற்சிகளை மேற்கொள்வது நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்கும், மூடநம்பிக்கையற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கும் மெத்தவும் பயன்படுமன்றோ?

நேரு பெருமான், தனது மறைவுக்குப் பிறகு - தன் உடலை என்ன செய்யவேண்டும் என்பதுபற்றிக் குறிப்பிட்டு எழுதிய புகழ்மிக்க உயிலில் "எனது மரணத்துக்குப் பிறகு மதச் சடங்குகள் தேவையில்லை. அத்தகைய நம்பிக்கையெதுவும் எனக்கில்லை. அவை, நமக்கும் பிறருக்குமிடையே வேறுபாட்டையும், நம்மில் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் தன்மையினையும் உருவாக்கிவிடுமென்று நான் கருதுகிறேன்" எனக் குறிப்பிட்டதோடு, தனது உடல் எரியூட்டப்பெற்று அந்தச் சாம்பலை விமானத்தின் மூலம் வயல்வெளிகளில் தெளித்துவிட வேண்டுமென்றும் இறுதி வேண்டுகோளாக விடுத்திருந்தார்.

புதுமைக் கருத்துக்கள் மலரும் பூஞ்சோலையாகத் திகழ்ந்த அந்தப் பேரறிவாளர் தனது மரண சாசனத்தில் தீட்டியுள்ள உருக்கமிகு வாசகத்தில், நண்பர்களை எவ்வாறு நேசித்தார் என்பதைப் படிக்கும்போது நம்மையறியாமலே உணர்ச்சி வசப்படுகிறோம்.

"எனது பல்வேறு நண்பர்களுக்கும் தோழர்களுக்கும்
ஆழமான அன்பைத் தருவதற்கு நான் கடமைப்பட்டவன்.
நாங்கள் அனைவரும் எல்லா நிலைமைகளிலும்
தோழர்களைப் போலவே சுக துக்கங்களைச் சமமாகப்
பகிர்ந்துகொண்டவர்கள்"

நேருவின் வாழ்க்கை "நிறைந்த வாழ்க்கை"யாக இருந்தது என்பதற்கு இதைவிடச் சான்று தேவையில்லை அல்லவா?

உடன்பிறப்பே, 1965 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு வெளியிட்ட "ஜவகர்லால் நேருவின் கருத்துரைகள்" என்ற நூலில் - இந்திய நாட்டுக் கிராம வளர்ச்சி பற்றிய வளமான எண்ணக்

கருவூலங்களையும், தாய்த்திருநாடு தரணியெலாம் போற்றிடும் வண்ணம் எவ்வாறு தலை நிமிர்ந்து நடக்கவேண்டும் என்ற அவரது ஆவலையும் விரிவாகக் காணமுடியும்.

> "இந்தியாவைப்போல் உன்னதமான குறிக்கோள் களைக் கொண்டுள்ள நாடு, வேறு எதுவுமே இல்லை என்று கருதுகிறேன். இதே சமயத்தில் மற்றொன்றையும் நான் சேர்த்துச் சொல்ல வேண்டும். குறிக்கோளுக்கும், செயலுக்குமிடையே நிலவும் இடைவெளி, இந்தியாவில் இருப்பது போல் வேறு எந்த நாட்டிலும் பெரிதாக இருப்பதில்லை. ஆனாலும் ஒன்று சொல்கிறேன், நட்சத்திரங்களை எட்டி அடைந்துவிட முடியாதென் றாலும் அவ்வப்போது அவற்றின் அழகிலே ஈடுபட்டு நிமிர்ந்து பார்க்கத்தான் வேண்டும். இலட்சியத்தில் முழு வெற்றி அடையாவிட்டாலும், இலட்சியங்கள் எட்ட முடியாத அளவுக்கு உள்ளன என்பதற்காக, அவற்றின் தரத்தைக் குறைத்துக் கொள்வது சரியாகாது."

இலட்சியத்தில் எவ்வளவு பிடிப்பும் நம்பிக்கையும் கொண்டிருந்தார் என்பதையும் அதனை விரைவில் அடைய முடியாத காரணத்தாலேயே அதன் தகுதியைக் குறைத்து மதிப்பிட அவர் தயாராக இல்லை என்பதையும் எத்துணை திடமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார், பார்த்தாயா?

"உடலுழைப்புச் செய்வது, மதிப்புக் குறைவானது என்றும் - இந்த மாதிரியான வேலைகள், தாழ்ந்த சாதியாருக்கே உரியன என்றும் ஒரு விந்தையான கருத்து நமது நாட்டிலே உலவி வருகிறது. "எல்லா மக்களும் சமம்" என்று நாம் கருதுகிறோம். எல்லோருக்கும் சமவாய்ப்பு கிடைக்க உறுதி செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம். பயனுடைய எந்த வேலையையும் தாழ்வானது என்று நாம் கருதுவதில்லை. ரஷ்யா, சீனா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் எல்லாம் உடலுழைப்பின் மதிப்பு, மிகவும் போற்றப்படுகிறது. எவனொருவன் உடலுழைப்பை மதிப்புடையதாகப் போற்றவில்லையோ அவனை வெறும் சோம்பேறி என்றே நான் கருதுகிறேன். சமுதாய நீதி வேண்டும் என்று மக்கள் இன்று எண்ணிடத் தொடங்கிவிட்டார்கள். 'விதி', 'தலை எழுத்து' - என்றெல்லாம் பேசுகிற பேச்சை, இன்றைய மக்கள் குறைவாகவே மதிக்கிறார்கள்" எனக் குறிப்பிடும்

அவர்; எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும் பொறியியல் நிபுணராக இருந்தாலும் மேசைக்கு முன் உட்கார்ந்து கொண்டு உத்திரவுகள் பிறப்பிப்பதை மட்டும் கடமையெனக் கொள்ளாமல் கடினமாக உழைக்கவும் செய்யவேண்டுமென வலியுறுத்துகிறார்.

> "நாம் மேற்கொண்டுள்ள பணி மகத்தானது. பலகோடி மக்களின் முன்னேற்றத்தை நோக்குவது. அவர்களிலே பெருந்திரளானவர்கள் உங்களுக்கு உதவினாலொழிய இதைச் சாதிக்க முடியாது. ஜனநாயக வழியை நீங்கள் நாடுவதாக இருந்தால் மக்களை அணுகும் முறையிலும் ஜனநாயகம் இருக்கவேண்டும். நீங்கள் அவர்களிடம் போகவேண்டும். அவர்களுக்கு ஆணைகள் அனுப்பக் கூடாது."

அரசு அதிகாரிகளுக்கும் கிராம மக்களுக்கும் எப்படிப்பட்ட தொடர்பு இருந்திட வேண்டும் என்பதற்கு அவர் வழங்கும் அறிவுரைதான் இது!

இவற்றையெல்லாம் அவர் என்றைக்கோ சொன்னார்; இப்போது என்ன வந்தது-என்று புறக்கணித்துவிடாமல்; சமுதாயம் புதுமை பூண்டு உலவிடவும், மூட நம்பிக்கைத் தடைகளை அகற்றி முன்னேற்ற வழியில் நாடு நடைபோடவும், சமவாய்ப்பும் சமூக நீதியும் பெற்றவர்களாக மக்கள் இலட்சியப் பயணத்தில் வெற்றி கண்டிடவும்-அவர் பிறந்த நாளில் உறுதி எடுத்துக்கொண்டு உழைத்திட வேண்டும். மக்களின் உழைப்பைக் கோருகிற அதே நேரத்தில் அந்த மக்களோடு இணைந்து நின்று அதிகார அணியினர், திட்டங்களின் வெற்றிக்குப் பாடுபடவேண்டும்.

சிறையிலிருந்தபோதும் - செங்கோல் நடாத்தியபோதும் அவரது இதயம் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கான சங்கீதத்தைத் தான் பாடிக்கொண்டிருந்தது.

உடன்பிறப்பே, நேருவைப்பற்றி இன்றைக்கு ஏதோ நமது கழகம் புகழ்ச்சரம் தொடுப்பதாகச் சிலர் எண்ணிடக்கூடும்.

சிற்சில கருத்து வேறுபாடுகளுக்கிடையிலேயும் இந்தியாவின் அந்த இணையற்ற மனிதரை நமது கழகம் மதிப்பு வாய்ந்த மாணிக்கம் என்றே கருதி வந்திருக்கிறது.

> "நேரு, கட்டி முடிக்கப்பட்ட கோபுரம்,

நான் கொட்டிக் கிடக்கும் செங்கல்”

என்று அறிஞர் அண்ணா அவர்கள் பண்டித நேரு வாழ்ந்த காலத்திலேயே பாராட்டுப் பாமாலை அணிவித்திருக்கிறார்.

1964ஆம் ஆண்டு பண்டிதர் மறைந்தபோது வானொலியில் உரையாற்றிட நான் அழைக்கப்பட்டேன். அப்போது அண்ணா சென்னை சிறைச்சாலையில் இருந்தார். சிறையிலிருந்தவாறே நேருவின் மறைவு குறித்து அண்ணா அவர்கள் இரங்கல் அறிக்கை வெளியிட்டார்கள். வானொலியில் அன்று நான் நிகழ்த்திய உரையின் ஒரு பகுதியை நினைவுபடுத்தி இந்தக் கடிதத்தை முடிக்கிறேன்.

“ஜனநாயகப் பாதுகாவலர் ஜவகர் காலமாகிவிட்டார். நம்பத் தான் முடியவில்லை. ஆனாலும் நடந்துவிட்டதே. நம்பிக்கை நட்சத்திரம், மறைந்துவிட்ட ஏமாற்றத்தில் பெருமூச்சு விடுகி றோம். உலகம், வல்லூறுகளின் வேட்டைக் காடாக - நாய் நரிகள் விருந்துண்ணும் ரண களமாக - மாறிவிடக் கூடாது எனப் பாடுபட்டு அவர் பறக்கவிட்ட வெண்புறா, சிறகடித்துத் துடிக்கிறது, அவர் மறைந்த செய்தி கேட்டு! இமயம் முதல் குமரி வரையில் உள்ளோர் இதயங்களில் எல்லாம் இடம் பெற்றிருக்கும் உரிமையை உத்தமர் காந்தியடிகளுக்குப் பிறகு பெற்றிருந்த ஒரே மனிதர் - ஒரே தலைவர் - பண்டித நேரு. அவர் இன்றில்லை. அவர் பேணி வளர்த்த ஜனநாயகக் கொள்கை இருக்கிறது. அதனை மேலும் சீர்பெறச் செயல்படுத்துவதுதான் இருப்பவர்கள், மறைந்தவருக்குச் செய்யும் மரியாதையாகும். ஜனநாயகச் சோலையில் - பகுத்தறிவு மேடை கட்டி - சமாதானக் கொடியை உலகமறியப் பறக்கவிட்டவர், மறைந்த உத்தமர். இன்னும் எத்தனையோ பணிகளை நாடு அவரிடம் எதிர்பார்த்தது. அதற்குள் இயற்கை தன் பணியை முடித்துக்கொண்டு விட்டது. கிரீடம் மறைந்து விட்டது. கீர்த்தி நிலைத்துவிட்டது. வாழ்க நேருவின் புகழ்!”

அன்புள்ள,

மு. க.

14-11-1976

324. அவர்களை மாற்றுவது கடினம்!

உடன்பிறப்பே,

தேசீய பாரம்பரியம் கொண்ட ஒரு நாளிதழ் - அது எவ்வளவுதான் கொள்கை வேறுபாடு கொண்டிருந்தாலும் பத்திரிகை மரபுகளைக் காப்பாற்ற வந்தது என்ற பாராட்டுக்கு உரியதாக விளங்கிய ஏடு - அந்த ஏட்டில் ஒரு தலையங்கம் தீட்டப்பெற்றுள்ளது. அதனை நேரு பிறந்த நாளன்று எழுதி யுள்ளார்கள். அதில் ஒரு பகுதியை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

"கொள்ளையடிப்பது ஒரு கலை.....புலி, மானைக் கொல்லாமல் இருந்தால் - கொக்கு, மீனைக் கொத்தாமல் இருந்தால் நானும் கொள்ளையடிக்காமல் இருப்பேன் - என்று வெறிக் கூச்சல் போடும் ஒரு "கேடி" கதாநாயகனை தமிழ்க் காவியமான குண்டலகேசியில் புகுத்திக் கதை எழுதி, சினிமா உலகில் விபரீதப் புகழ் தேடிக் கொண்டவர் கருணாநிதி. தனது கதாநாயகனை, பணம், பாவை, பச்சை ரத்தம் - மூன்றும்தான் என் வாழ்வின் இலட்சியங்களாகிவிட்டன என்று முழங்கவும் வைத்திருக்கிறார், ஒருக்கால் அவரது கதாநாயகன், கதையின் முடிவிலே தன் தந்தையிடம் "சாகத்தான் போகிறேன், வாய் வீரம் பேசிவிட்டாவது சாகிறேன்" என்று கர்ஜிப்பதைப் போன்ற விபரீத முடிவுக்கு இந்தக் கதாசிரியரே வந்து விட்டார்?"

அந்தத் தலையங்கத்தில் இடம் பெற்றுள்ள வாசகங்களை அப்படியே உனக்கு சுட்டிக்காட்டியிருக்கிறேன். நான் எந்த முடிவுக்கு வரவேண்டும் என்று தலையங்கம் எழுதிய அருமை நண்பர் ஆசைப்படுகிறார் என்று எனக்கு நன்றாகப் புரிகிறது.

உலகில் எல்லோருமே ஒரு நாள் அந்த முடிவுக்கு ஆட்பட வேண்டியவர்களேதான்! அதனால் அவர் எழுப்பியிருக்கும்

ஐயப்பாடு பற்றியோ - அல்லது அவர் எண்ணத்தில் புகைந்து கொண்டிருக்கும் அந்த அளவில்லாத ஆசை பற்றியோ நான் கவலைப்படவில்லை.

சிரஞ்சீவி வரம் பெற்று வாழவேண்டுமென்று விரும்புகிற வனும் நானல்ல! அதைப்போலவே சிரஞ்சீவி வரம்பெற்றவர்கள் யாரும் உலகில் இல்லை என்பதையும் நானறிந்தவன். 'சாவு'-'அழிவு'-இவைகளைப் பற்றியே எண்ணிக்கொண்டு; அவைகள் என்மீது பாய்வதை விரைவில் காணவேண்டுமென்று சில நண்பர்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்களே; அவர்களோடு சேர்ந்து இந்த நண்பர் நீடுழி காலம் வாழ வேண்டுமென்பதுதான் என் ஆசை!

குண்டலகேசி காவியத்தில் ஒரு கொள்ளைக்காரக் கதா நாயகனை நான் புகுத்தியிருக்கிறேனாம்! அதை அவரது பழக்கமான மொழியில் "கேடிக் கதாநாயகன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'குண்டலகேசி' என்பது என்ன என்று அவர் முதலில் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி - ஆகிய ஐந்தும் ஐம்பெருங்காப்பியங்கள் என அழைக்கப்படும். அவற்றில் வளையாபதி, குண்டலகேசி காப்பியங்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை. கால வெள்ளத்தில் அவை அழிந்தும் மறைந்தும் இப்போது எஞ்சியவை மிகக் குறைவேயாகும்.

குண்டலகேசியில் நமக்குக் கிடைத்த கருப்பொருள் என்ன தெரியுமா?

> "அரண்மனை அரச குருவின் மைந்தன் ஒரு கொள்ளைக்காரன். அவனைச் சிறைபிடித்துத் தூக்கு மேடைக்குக் கொண்டு செல்லும் வழியில் அமைச்சரின் மகள் அவனைப் பார்த்துக் காதலிக்கிறாள். அமைச்சரின் முயற்சியால் அவன் விடுவிக்கப்படுகிறான். அவனுக்கும் அமைச்சர் மகளுக்கும் மணம் நடந்தேறுகிறது. ஒரு நாள் தம்பதிகளுக்குள் ஏற்பட்ட தகராறு காரணமாக, அவளை மலையுச்சியில் இருந்து உருட்டிவிட்டுக் கொன்றுவிட அவன் தீர்மானிக்கிறான். அவளோ அவனைத் தந்திரமாகக் கொன்று விடுகிறாள்."

இதுதான் 'குண்டலகேசி' என்ற பெயரில் கிடைத்தது! அதை விரிவாக்கி நான் எழுதிய நாடகமும் - அந்த நாடகத்தில் சில

மாற்றங்கள் செய்து நான் படைத்ததும்தான்; "மந்திரிகுமாரி" என்ற திரைப்படக் கதையுமாகும்.

நாடகத்தைக் கண்ணுற்ற கவிஞர் கா. மு. ஷெரீப் அவர்கள் அப்போது அவர் பணியாற்றிக் கொண்டிருந்த சேலம் மாடர்ன் தியேட்டரில் பாராட்டிப் பேசியதைத் தொடர்ந்து அதனைப் படமாக்க வேண்டுமென்று திரையுலக மேதைகளில் ஒருவரான மறைந்த திரு. டி. ஆர். சுந்தரம் விரும்பினார்.

கவிஞர் ஷெரீப் ஆரூருக்கு அடுத்த வேளுக்குடியைச் சேர்ந்தவர். இலக்கியங்களை முறையாகப் பயின்றவர். 'நுனிப்புல்' மனிதரல்ல. எனவே குண்டலகேசியில் நான் செய்திருந்த மாற்றங்களைப் பெரிதும் புகழ்ந்தார்.

குண்டலகேசியிலேயே இடம்பெற்றுள்ள கொள்ளைக்காரனை நான் "மந்திரிகுமாரி" படத்தில் புகுத்தினேன் என்று குற்றம் சாட்டுவது தலையங்கம் எழுதியவருக்கு ஏற்பட்ட தடுமாற்றத்தின் விளைவே தவிர வேறல்ல!

இன்னொரு வேடிக்கை, அந்தப் படத்தில் கொள்ளைக்காரன் கதாநாயகனாக வருகிறானாம். அதனால் அவன் பேசுவதெல்லாம் கதாசிரியராகிய என் கொள்கைகளாம்! இப்படி ஒரு கருத்தை வலிந்து எதிரொலிக்கிறார் அந்த நண்பர்.

தமிழ் நாடகங்களிலும் படங்களிலும் கதாநாயகன் யார்? வில்லன் யார்? என்பதற்கான சில குணாதிசயங்களை தமிழ் நாட்டு மக்கள் வரையறுத்து வைத்திருக்கிறார்கள்.

மந்திரி குமாரி-படத்தில் "கொள்ளையடிப்பது சிறந்த கலை" என வாதிடும் பார்த்திபன் என்ற பாத்திரம் "வில்லன்" பாத்திர மாகத்தான் படைக்கப்பட்டுள்ளது.

அந்தப் படத்தில் கதாநாயகன் பாத்திரத்திற்குப் பெயர் "வீரமோகன்" என்பதாகும்.

வீரமோகன்தான் அந்த நாட்டின் தளபதியாகத் திகழ்கிறான். பார்த்திபன் கொள்ளைக்காரனாகத் திரிகிறான்.

தலையங்கம் எழுதியவர், படத்தின் வசனங்களை மறக்காமல் நினைவில் வைத்திருக்கிறார். ஆனால் கதாபாத்திரங்களைத்தான் மறந்து விட்டார்.

ஒரு கதையிலோ, நாடகத்திலோ, திரைப்படத்திலோ உலவுகிற பாத்திரங்கள் அனைத்துமே அதன் ஆசிரியரின் உள்ளத்துப் பிரதிபலிப்புகள் அல்ல என்பது பாமர மனிதனும் புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றாகும்.

கொள்ளையடிப்பதைக் கலையாகக் கருதுகிறவன்-பணம், பாவை, பச்சை ரத்தம் மூன்றையும் வாழ்வின் இலட்சியமாகக் கருதுகிறவன் - எந்த முடிவுக்கு ஆளானான்? என்று அந்தக் கதையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. - அதைப் புரிந்துகொண்டால்; கதாசிரியரின் இலட்சியத்தோடு அந்தக் கயவனின் இலட்சியத்தையும் இணைத்து முடிபோடுவதற்கு யாரும் முன்வரமாட்டார்கள்.

கம்ப ராமாயணத்தில் இராவணன் பேசுவதெல்லாம் கம்பரின் கொள்கையா?

பாரதக் கதையில் சகுனி அளிக்கும் விளக்கங்கள் எல்லாம் வேதவியாசர் விரும்பி ஏற்றுக்கொண்ட இலட்சியங்களா?

அதைப்போலத்தான் ஒரு கதையில் வரும் தீய பாத்திரங்கள் பேசும் தத்துவங்கள், கதாசிரியர் ஏற்றுக்கொண்ட கொள்கைகள் ஆகமாட்டா!

இதைப் புரிந்துகொள்வது சுலபம் - புரிந்தவர்கள், புரியாதவர்களைப் போலப் பேசினால் அவர்களை மாற்றுவது கடினம்.

அன்புள்ள,

மு. க.

15-11-1976

325. மீண்டும் நினைவுபடுத்துகிறேன்!

உடன்பிறப்பே,

“1973 ஆம் ஆண்டு புதுக்கோட்டைப் பொதுக் குழுவில் நிறைவேற்றப்பட்ட மாநில சுயாட்சி தீர்மானம் தி. மு. கழகம் பிரிவினைக் கொள்கையைக் கைவிடவில்லை” என்பதைக் காட்டுகிறது என்பதாகத் திரு. ஓ. வி. அளகேசன் எம். பி. அவர்கள் பேசியதாக ஏடுகள் சிலவற்றில் செய்தி கண்டேன்.

ஏறத்தாழ பதின்மூன்று ஆண்டுகட்கு முன்பே கழகம், பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடுவதாகத் தீர்மானம் நிறைவேற்றி இந்திய ஒருமைப்பாட்டிலும் - இந்திய பாதுகாப்பிலும் தனக்குள்ள ஆழமான நம்பிக்கையை செயல் மூலமாகவும் காட்டியிருக்கிறது.

இவற்றை விளக்கி நான் 27-10-76-ல் முரசொலி வாயிலாக உனக்கு எழுதிய கடிதத்தை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அந்தக் கடிதத்தின் சில பகுதிகள் பின்வருமாறு:-

நாடாளுமன்றத்தில் அன்பர் அளகேசனார் பேசியிருக்கிறார்: “திராவிடநாடு கோரிக்கையைக் கைவிட்டுவிட்டதாகத் தி. மு. கழகம் அறிவித்துள்ள போதிலும் - பிரிவினைப் பிரச்சாரத்தை அவர்கள் நிறுத்தவில்லை” என்பதாக!

பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு டெல்லி மாநிலங்கள் அவையில் அறிஞர் அண்ணா அவர்கள் அதாவது 1962 மே திங்கள் முதல் நாள் ஆற்றிய உரையில் பிரிவினைக் கோரிக்கையை வலியுறுத்தினார். அவர் பேசும்போது எழுந்த குறுக்கீடுகளுக்கு விளக்கம் அளித்தார்.

அந்த உரைக்குப் பிறகு, சில மாதங்களுக்கெல்லாம் சீன ஆக்கிரமிப்பு நிகழ்ந்தது. சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து பண்டித நேருவின் கரத்தைப் பலப்படுத்துவதற்காக இந்திய நாடு ஒரு அணியில் நின்றது. அந்த அணிவகுப்பில் அண்ணா தலைமையில் தி. மு. கழகமும் இடம்பெற்றது. இந்தியநாட்டுப் பாதுகாப்பை யொட்டி கழகத்தின் பிரிவினைக் கொள்கை கைவிடப்படுவதற்கான அடையாள அறிவிப்பை அண்ணா வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து 1963 ஆம் ஆண்டு சென்னையில் கூடிய கழகப் பொதுக் குழுவில், விரிவான விளக்கங்களுக்குப் பிறகு - பிரிவினைக் கொள்கையைக் கழகம் அறவே கைவிடுகிறது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"அண்ணா அவர்கள், 'இல்லஸ்ட்ரேட்டட்வீக்லி' என்ற ஆங்கில இதழுக்கு அளித்த பேட்டியில் என்ன சொன்னார் தெரியுமா?" எனக் கேட்டு - நாள் இதழ் ஒன்றில் நேற்று முன்தினம் விவரம் எழுதியிருந்தார்கள் அல்லவா? அதாவது;

"இந்திய அரசியல் அமைப்புக்குள் ஒரு திராவிட யூனியன் அமைக்கப் பாடுபடுவது."

என்பதாக 'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி' இதழுக்கு அண்ணா சொன்னாரே; அதையேதான் தி. மு. கழகச் சட்ட திட்ட புத்தகத்தில் "குறிக்கோள்" என்ற தலைப்பில் அண்ணா காலத்தில் பொதுக்குழு ஏற்றுக்கொண்டது.

திராவிட யூனியன் அல்லது திராவிடக் கூட்டமைப்பு என்று கூறுவது கூட "பிரிவினை" என்ற தவறான கருத்தை ஒருவேளை ஏற்படுத்தக்கூடுமோ என்ற எண்ணத்தின் காரணமாக - அண்ணா மறைந்த பிறகு; 1973-ஆம் ஆண்டு புதுக்கோட்டைப் பொதுக் குழுவில் "இந்திய அரசுரிமை, ஒருமைத் தன்மை, அரசமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்குள் **கலாச்சார அடிப்படையில்** நெருங்கிய திராவிடக் கூட்டமைப்பாக நிலவப் பாடுபடுவது என்று குறிக்கோள், திருத்தம் செய்யப்பெற்று **திராவிடக் கலாச்சாரம்** என்பதற்கே முக்கியத்துவம் தரப்பட்டது.

கழக சட்ட திட்டத்தில் "நோக்கங்கள்" என்ற தலைப்பில்;

"அண்ணா வகுத்த - கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அடிப்படையில், அரசியலில் ஜனநாயக உரிமைகளைப்

பாதுகாத்து, ஆதிக்கமற்ற சமுதாயத்தை உருவாக்கவும் பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப் பணி ஆற்றிடவும், பொருளாதாரத் துறையில் வறுமையை வென்று சமதர்ம அடிப்படையில் எல்லோரும் நல்வாழ்வுபெற வழிவகை கண்டிடவும் அந்தந்த மாநில மொழிகளை வளர்த்திடவும் மாநிலங்களில் முழுமையான சுயாட்சியும் மத்தியில் கூட்டாட்சியும் அமைந்திடவும் தொண்டாற்றுவது."

என்றுதான் 1973-ஆம் ஆண்டு புதுக்கோட்டைப் பொதுக்குழு "நோக்கம்" என்ற தலைப்புக்கு விளக்கமளித்து சட்ட திட்டத்தில் இடம்பெறவும் செய்தது.

"ஏற்கனவே மாநிலங்களுக்கு சுயாட்சி இருக்கிறது - அதை விரிவுபடுத்தவே Fuller Autonomy முழுமையான சுயாட்சி தேவை என்று அண்ணா அவர்கள் "இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி" பேட்டியில் கூறினார்" என்று ஏடுகளில் கட்டுரை தீட்டுகிறார்கள் அல்லவா? அண்ணாவின் அந்தக் கருத்தைத்தான் புதுக்கோட்டைப் பொதுக் குழுவில் கழகம் தனது நோக்கங்களில் ஒன்றாகச் சித்தரித்துள்ளது.

1971-ஆம் ஆண்டு கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலே கூட,

"இந்தியா வலுப்பெற்றதாக இருக்க வேண்டுமென்ற இலட்சியத்திற்கு ஊறு தேடாமல், எந்தெந்தத் துறைகளில் வலுவான இந்தியா இயங்குவதற்காக மத்திய அரசு, செயல்பட வேண்டுமோ அந்த அதிகாரங்களைத் தவிர, இதர அதிகாரங்களை மாநிலங்களுக்கு வழங்கும் வகையில் அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும்" என்றுதான் மாநில சுயாட்சிக்கு விளக்கம் அளித்திருந்தோம்.

ஏற்கனவே மாநிலங்களுக்கு இருக்கிற சுயாட்சித் தன்மையை முழுமையானதாக விரிவுபடுத்த வேண்டுமென்பதுதான் தி. மு. கழகத்தின் கருத்தே தவிர மற்றவர்கள் கூறுவதைப்போலவே பிரிவினை எண்ணம் துளி அளவு கூடக் கழகத்திற்குக் கிடையாது.

இதே கருத்துக்களை நான் சட்டமன்ற பேரவை மேலவைகளில் நடந்த விவாதத்தின்போது தெளிவாகக் கூறியிருக்கிறேன்.

தன்னாட்சி என்பது Autonomy-தனியாட்சி என்பது Independence-அதாவது சுதந்திரம்!

சுயாட்சி வேறு; சுதந்திரம் வேறு! 'சுயாட்சி' என்பது தன்னாட்சி தானே தவிர, தனியாட்சியுமல்ல; சுதந்திரமும் அல்ல!

இதனையும் நாம் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம். இந்திய ஒருமைப்பாடு-ஒற்றுமை-பாதுகாப்பு-இவற்றில் நமக்குள்ள அக்கறையையும் ஈடுபாட்டையும்-சொல் அளவில் அல்ல; செயல் அளவில் காட்டியிருக்கிறோம்.

சீன ஆக்கிரமிப்பு-

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு-

வங்கதேசப் போர்-

இந்த நிகழ்ச்சிகளின்போது தி. மு. கழகத்தின் நாட்டுப் பற்றினை வெளிப்படுத்தியிருக்கிறோம்.

இவ்வளவுக்கும் பிறகு, தி. மு. க. பிரிவினைப் பிரச்சாரத்தை நிறுத்தவில்லை என்று குற்றம் சாட்டுவது சரியல்ல என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

16-11-1976

326. மலைதரும் சந்தனம்! கடல் தரும் முத்து!

உடன்பிறப்பே,

“குடும்பத்தைப் பற்றிக் கவலைப்படாமல் கொள்கை-கொள்கை என்று அலைகிறானே!”

“பெற்ற தாயை மறந்துவிட்டுப் பிறந்த பொன்னாடே சிறந்தது எனத் திரிகிறானே!”

“வீடு, வாசல், பிள்ளை, தாய், தந்தை, மனைவி அனைத்தையும் இரண்டாம் இடத்திற்குத் தள்ளிவிட்டுப் பொதுத் தொண்டினை முதல் இடத்தில் வைத்துப் பூஜை செய்கிறானே!”

இவனைத் திருத்தி, குடும்பத்தைக் கவனிக்குமாறு யாராவது அறிவுரை கூறக் கூடாதா? இப்படிப்பட்ட ஏக்கம் நிறைந்த கேள்விகள் எத்தனையோ இல்லங்களில் எழக் கேட்டிருக்கிறோம். இன்று நேற்றல்ல எத்தனையோ ஆண்டுக் காலமாக!

கட்சியால் தனக்கு என்ன லாபம் என்று கணக்கிடாமல் தன்னால் கட்சிக்கு என்ன லாபம் என்று கணக்கிடுகிற தூய்மை உள்ளம் படைத்தவர்கள்தான் ஒரு கட்சியின் உயிரோட்டமுள்ள நாடிநரம்புகளாவார்கள்.

அப்படிப்பட்டவர்கள் இருக்கிற எந்தக் கட்சியும் இடையிடையே தோன்றுகிற இடுக்கண்களைத் தாங்கிக் கொண்டு தனது இலட்சியப் பயணத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டே தானிருக்கும்.

அந்தப் பயணத்திற்குத் துணையாகவும்-அற்ற குளத்து அறுநீர்ப் பறவைகள்போல இல்லாது அக்குளத்துக் கொட்டியும் ஆம்பலும் போலவும் சந்தர்ப்பவாதம்-சபலம்-சலனம்-எதற்கும் இடம் தராமலும்-விளங்குகின்ற வீரமணிகள்தான் நெடும் புகழுக் குரியவர்கள்.

அவர்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே 'கலித்தொகை' நூலினைப் புரட்டிக் கொண்டிருந்தேன். ஒரு பக்கத்தில் என் பார்வை நிலைத்து நின்றது.

காட்டுப் பாதையில் தாய் ஒருத்தி வேகமாக ஓடுகிறாள். அந்தப் பாதையில் நடந்து கொண்டிருக்கும் சில பெரியவர்களைப் பார்த்து; "அய்யா! என் மகள் ஒருத்தி இளம் பெண்-காதல் வயப்பட்டு காளையொருவனுடன் என்னைப் பிரிந்து சென்றுவிட்டாள், அவர்களிருவரையும் நீங்கள் இந்த வழியில் கண்டீர்களா?" எனத் துடிப்போடு கேட்கிறாள்.

"பார்த்தோம் அம்மா!" என்று அவர்கள் பதில் சொல்கிறார்கள். அத்துடன் நிறுத்தவில்லை. அந்தத் தாய்க்கு ஆறுதலும் கூறி அழகான விளக்கமும் தருகிறார்கள்.

"பலவுறு நறும்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும், மலைக்கு அவைதாம்
என்செய்யும்?
நினையுங்கால் நும்மகள், நுமக்கும் ஆங்கு அனையளே;
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என்செய்யும்?
தேருங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே;
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும்?
சூழுங்கால்; நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே"

"தாயே! நறுமணம்மிக்க சந்தனக்கட்டை மலையில்தான் வளர்கிறது. ஆனால் அது தன்னை அரைத்துப் பூசிக் கொள்பவர்க்குப் பயன்படுவதல்லாமல் தான் பிறந்த மலைக்கு எந்தவிதத்திலும் பயன்படுவதில்லை. கடலில் பிறந்த முத்துக்கள், தன்னை அணிபவர்க்கு அழகு தருகின்றனவே அல்லாமல் உற்பத்தியான கடலுக்கு ஒருவகையிலும் பயன்பட்டது கிடையாது. ஏழுவகை இன்னிசை, யாழில்தான் தோன்றுகிறது. எனினும் கேட்போர் செவிக்கும் சிந்தைக்கும் இன்பம் வழங்குகிறதேயன்றி அந்த இசை, யாழுக்கு இன்பம் அளிப்பதில்லை. அதைப் போலத்தான் உன் மகளுக்கும் உனக்கும் உள்ள உறவும் ஆகும்"

உடன்பிறப்பே, இந்தப் பாடலையும் இதற்குரிய பொருளையும் படிக்கப் படிக்க, எனக்கு உன்னைப் போன்ற உடன்பிறப்புக்களின் நினைவே நெஞ்சில் அலைமோதியது.

எந்தவொரு இயக்கத்திலும் தூய தொண்டுள்ளம் கொண்ட தியாக மலர்கள் பலர் இருக்கவே செய்கிறார்கள். அவர்கள் வீட்டுக்கு தாங்கள் சொந்தமல்ல - நாட்டுக்கே சொந்தமென எண்ணி வாழ் கிறார்கள்.

மலைதரும் சந்தனம்-

அதன் மணம், மற்றவர்க்கு உரியது - மலைக்குப் பெருமை தான் உரியது!

கடல் தரும் முத்து-

அதன் ஒளி, அணிவோர்க்கு உரியது - அது பிறந்ததால் ஆழ் கடலுக்குப் பெருமைதான் உரியது.

அதுபோலவே தன்னலமற்ற தொண்டர்கள் எந்த இயக்கத்தில் இருந்தாலும் - அவர்கள் அந்த இயக்கத்துக்கு - நாட்டுக்கு - உரியவர்கள்! அவர்களை ஈன்றளித்த வீட்டுக்குப் பெருமை மட்டுமே உரியது!

கலித்தொகையில் நான் கண்ட காட்சி, காதலைப் பற்றியது என்றாலும்; என் உள்ளம், அந்த விளக்கத்தை உனக்கும் உன்னைப் போன்ற உண்மைத் தொண்டர்களுக்கும் பொருத்திப் பார்த்துப் பூரிப்பு அடைகிறது.

அன்புள்ள,

மு. க.

17-11-1976

327. வாழ்க அந்த அஞ்சா நெஞ்சம்!

உடன்பிறப்பே,

கப்பலோட்டிய தமிழன் தீரர் சிதம்பரனார் மறைந்து நாற்பதாண்டுகள் ஓடிவிட்டதை நினைவு கூர்ந்திடும் நாள் நவம்பர் பதினெட்டாம் நாளாகும். அந்நிய ஆதிபத்தியத்தின் அச்சாணியை முறித்து - அடிமை விலங்கை ஒடித்து - உரிமைக் குரல் எழுப்ப அரிமா எனக் கிளம்பிய அந்த வீர மனிதர், சிறைச் சாலையில் சித்ரவதைகளை ஏற்றுக்கொண்டு செக்கிழுத்தார் என்பதைச் செங்குருதி சூடேறப் படித்திருக்கிறோம். அந்த உத்தமத் தியாகி இழுத்த செக்கு எங்கிருக்கிறது எனத் தேடி, அதனைக் கொண்டு வந்து சென்னை அரசினர் தோட்டத்தில் கழக அரசின் காலத்தில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டது. இன்றைக்கும் அவர் இழுத்த அந்தச் செக்கினைக் காணும்போது வரலாற்றின் தியாக முழக்கம் நம் செவிகளில் ஆங்காரமாக ஒலித்திடவே செய்கிறது.

இந்திய நாட்டு விடுதலைப் போரின் மற்றொரு பாசறையாக சுதேசி இயக்கம் உருவெடுத்து, அந்நியப் பொருள்களைப் பயன்படுத்துவதை அறவே புறக்கணிக்க வேண்டுமென்று போர் முரசு கொட்டியது.

அந்தப் போர்ப் பரணிக்குச் செயல்வடிவம் கொடுக்கும் முயற்சியில் ஈடுபடத்தான் சுதேசிக் கப்பல்களை ஓட்டுகிற நிறுவனத்தைத் தொடங்கிக் 'கப்பலோட்டிய தமிழன்' என்ற சிறப்பினையும் பெற்றார் சிதம்பரனார். இதன் விளைவாக ஆங்கில ஆதிக்கக்காரர்களின் ஆத்திரத்துக்கு ஆளானார்.

நேரம் பார்த்திருந்த அந்த ஏகாதிபத்தியம், கலெக்டர் விஞ்ச் துரையின் வாயிலாகத் தனது எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டது.

தூத்துக்குடியில் வ. உ. சிதம்பரனாரும், சுப்பிரமணிய சிவாவும் தடையை மீறி ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடத்தினார்கள் என்று குற்றம் சுமத்தி அதன் தொடர்பாக "ராஜத் துவேஷ" வழக்கொன்றும் ஜோடனை செய்யப்பட்டது.

அந்த வழக்கில் சிதம்பரனாருக்கு இரட்டை ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. சுப்பிரமணிய சிவாவுக்கு பத்து ஆண்டு தண்டனை அளிக்கப்பட்டது. சிதம்பரனார் சார்பில் மேல் முறையீடு செய்து கொள்ளப்பட்டு இரட்டை ஆயுள் தண்டனைக் காலம் அவருக்குப் பத்து ஆண்டு தண்டனைக் காலமாக மாற்றப்பட்டது.

இந்த நிகழ்ச்சியை வைத்துத்தான் பாரதியார் இரு பாடல்களை உணர்ச்சி பொங்கிட எழுதினார்.

விஞ்ச் துரையும், வீரர் சிதம்பரனாரும் வாக்குவாதம் செய்வது போன்ற பாடல் அது. அதில் சில வரிகளை மட்டும் நினைவூட்டுகிறேன்.

"நாட்டிலெங்கும் சுதந்தர வாஞ்சையை
நாட்டினாய்; கனல் மூட்டினாய்.
வாட்டி உன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன், வலி காட்டுவேன்,"

இப்படி நெஞ்சுயர்த்திப் பேசுகிறான், நஞ்சனைய விஞ்ச் துரை.

அதற்குச் சிதம்பரனார் சீறியெழுந்து சொன்ன பதில் என்ன தெரியுமா? பாரதியின் வாயாலேயே கேட்போம்.

"சதையைத் துண்டு துண்டாக்கினும் என் எண்ணம்
சாயுமோ? ஜீவன் ஓயுமோ?
இதயத்துள்ளே இலங்கு மகா சக்தி
ஏகுமோ? நெஞ்சம் வேகுமோ?"

இவ்வாறு வேங்கைப் புலியென உறுமி, இந்திய நாட்டின் சுதந்திர வேட்கையை வெளிப்படுத்திய அந்தச் செம்மல், நாடு விடுதலைப்பெற்ற காட்சியை காண முடியாவிட்டாலும் - அவரைப் போன்ற தியாக வேந்தர்கள் சிந்திய ரத்தமும், ஏற்றுக் கொண்ட அடக்குமுறையும்தான் சுதந்திரப் பயிர் முளைக்க உரமாக விளங்கின என்பதைச் சரித்திரம் கம்பீரமாக இசைத்துக் கொண்டு தானிருக்கிறது.

உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது அண்ணா அவர்களின் முயற்சியால், சிதம்பரனாரின் சிலையை சென்னைத் துறைமுகத்துக்கருகே மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டது.

தூத்துக்குடி துறைமுகத்தில் கடந்த இரண்டு மூன்று ஆண்டு களுக்கு முன்பு இந்தியப் பிரதமர் அவர்கள் சிதம்பரனாரின் சிலையைத் திறந்து வைத்தார்கள்.

சென்னை 'ஜார்ஜ் டவுன்' சிதம்பரனார் நகர் என்று பெயர் மாற்றம் செய்யப்படும் என்று கழக அரசின் காலத்திலேயே அறிவிக் கப்பட்டது.

சென்னை இராஜாஜி மண்டபத்தில் உள்ள வெள்ளையர் படங்களை அகற்றி விட்டு நம் நாட்டுச் சான்றோர் படங்களை வைத்தபோது சிதம்பரனார் படமும் அதில் முக்கிய இடம் பெற்றுள்ளது.

சிதம்பரனார் நினைவாக இன்னும் எத்தனை சின்னங்கள் எழுந்தாலும் அவை அவர் காட்டிய தீரத்துக்கும்-ஏற்றுக்கொண்ட சோதனைகளுக்கும் ஈடு ஆகமாட்டா என்பது மட்டும் உண்மை! அவ்வளவு பெரிய விடுதலைச் சிங்கமாக அவர் உலவியிருக்கிறார்.

நாட்டின் மீது அவர் கொண்டிருந்த பற்றுக்கும் பாசத்திற்கும் அவர் எழுதிய பாடல் ஒன்றே சான்று பகரும்.

"திருவும் புகழும் சிறந்தன பிறவும்
மருவற நிற்கும் என் மாசிலா மனைவியே
என்னரும் உயிரினும் என்னுயிர் உளத்தினும்
மன்னுறப் பாதியை மகிழ்ந்துனக் களித்தேன்
பின்னுறப் பாதியை பெரிய நம் தேயத்தின்
தன்னடிக் களித்தேன் சத்தியம் இஃதே"

ஆருயிர்த் துணைவிக்கு அவர் எழுதிய கவிதை மடல் இது!

அந்த உறுதி வாய்ந்த நெஞ்சத்துக்கு இன்று நாம் மலர் தூவுவோம்!

அந்த வீரமறவருக்குப் புகழாஞ்சலி பாடிப் போற்றுவோம்!

அந்த தியாகச் செம்மலுக்கு வீர வணக்கம் செலுத்துவோம்!

வாழ்க, வ. உ. சி. யின் பெயர்!

வாழ்க, அந்த அஞ்சா நெஞ்சம்!

அன்புள்ள,

மு. க.

18-11-1976

328. இந்த உடலின் மதிப்பு எவ்வளவு?

உடன்பிறப்பே,

“ஊத்தைக் குழியிலே மண் எடுத்து
உதிரப்புனலிலே உருண்டை சேர்த்து
வாய்த்த குயவனார் பண்ணு பாண்டம்
வரகோட்டுக்கும் ஆகாதென்று ஆடு பாம்பே!”

எனச் சித்தர்களும் சீவன் முக்தர்களும் மனித உடலைப் பழித்துப் பாடியுள்ள பாடல்கள் ஏராளம் உண்டு.

“நந்தவனத்தில் ஓர் ஆண்டி – அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டுவந்தான் ஒரு தோண்டி – அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி”

பத்து மாதம் கருவிலே உருவாகி குழந்தையாய்ப் பிறந்து மனிதனாக நடமாடி இறுதி மூச்சை வெளிப்படுத்தி, இனி விழிப்பதில்லை என்ற உறுதியோடு இறுகக் கண்களை மூடிக்கொண்டவுடன் அந்த உடல், வரகோட்டுக்கும் ஆகாத ஒன்றாகவும் – கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைத்த மண் குடமாகவும் ஆகிவிடுகிறதென்றுதான் நமது முன்னோர்கள் எழுதி வைத்தார்கள்.

“காயமே இது பொய்யடா
காற்றடைத்த பையடா”

எனக் காறி உமிழப்பட்ட இந்தச் சரீரத்தின் மொத்த மதிப்பு ஐந்து கோடி ரூபாய் என்று இப்போது கணக்கிடப்பட்டிருக்கிறது.

சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த பீட்டர் ஈட்டன் என்ற விஞ்ஞானியொருவர் பின்கண்டவாறு மனித உடலுக்கு மதிப்பை நிர்ணயித்திருக்கிறார். ஒரு ஆணை உருவாக்குவதற்கு ஆறு

மிலியன் டாலர் அதாவது ஐந்து கோடி ரூபாய் ஆகிறதாம். பெண்ணின் உடலை உருவாக்குவதற்கு அதைவிட அதிகம் செலவாகுமாம்.

ஒரு மனிதனின் உடலில் உள்ள எல்லாப் பொருட்களின் மதிப்பையும் அவற்றின் ரசாயன மதிப்புகளுக்கு ஏற்ப அவர் கணக்கிட்டுப் பார்த்து, அதன்படி அத்தகைய ரசாயனப் பொருட்களைக் கொண்டு ஒரு மனிதனை உருவாக்க அந்தத் தொகை தேவைப்படும் என்று கூறியிருக்கிறார்.

அவர் குறிப்பிடுவது மனித உடலில் உள்ள ரசாயனப் பொருட்களின் மதிப்பே தவிர, அந்தப் பொருட்களை வாங்கி ஒரு மனிதனை உருவாக்க முடியும் என்று அல்ல!

பெண்களின் உடலில் உள்ள கருப்பை சுரப்பிகள், தாய்ப்பால் உற்பத்தி செய்யும் சுரப்பிகள்-ஆகியவற்றைச் சிறப்பு அம்சங்களாகத் தயாரிக்கத் தேவைப்படும் ரசாயனப் பொருட்களின் மதிப்பு, ஆண்களுக்குத் தேவைப்படுவதைவிட அதிகம் என்றும் அவர் ஆராய்ந்து கண்டறிந்துள்ளார்.

நாற்ற உடல்-காற்றுப்பை - பிடி சாம்பல்-நீர்க்குமிழி-என்றெல்லாம் அலட்சியமாகச் சித்தரிக்கப்பட்ட மனித உடலுக்குத் திடீரென ஏற்பட்டுவிட்ட மதிப்பைப் பார்த்தாயா?

இவ்வளவு விலை உயர்ந்த உடல், தேர்தல் நேரங்களில் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் என்ற வகையில் வாக்குச் சீட்டுகளுக்காக விலை போய் விடுகிறதே!

பஞ்சாயத்து யூனியன் தேர்தல் என்றால் பத்தாயிர ரூபாய்க்கும், முனிசிபல் தலைவர் தேர்தல் என்றால் முப்பதாயிர ரூபாய்க்கும் எவ்வளவு சாவ சாதாரணமாக விலைபோய்க் கொண்டிருக்கிறது.

ஒரு மனித உடல் ஐந்து கோடி ரூபாய் - அப்படியானால் நம் வீட்டில் ஏழெட்டு மனித உடல்கள் உற்பத்தி செய்யப்படுமானால் நம்மையும் சேர்த்து மொத்தம் பத்து உடல்கள் - அவைகளின் கூடுதல் மதிப்பு ஐம்பது கோடி ரூபாய் - அப்போது நம்மைவிடப் பெரும் சீமானோ கோமானோ நாட்டிலிருக்க முடியாது எனக் கணக்கிட்டு குடும்பநலத் திட்டத்தை யாராவது மீறத் தொடங்குவார்களேயானால் - நாட்டின் பொருளாதார மதிப்பு எங்கேயோ ஒரு கோடிக்குப் போய்விடக்கூடும்.

மனித உடலின் மதிப்பையும், மாண்பையும் அந்த விஞ்ஞானி வெளியிட்டிருப்பதற்குக் காரணமே, நான் அறிந்த மட்டில்; "இவ்வளவு மதிப்பு வாய்ந்த உடலை வெறும் சோம்பல் சுரங்கமாக வளர்க்காமல், சோற்றுத் துருத்தியாக ஆக்கிவிடாமல், மாமிசப் பிண்டமாக உலவ விடாமல் - புகழ்க் கோபுரத்தின் கலசமாக ஆக்கிக் கொள்ள வேண்டும்" என்ற கருத்தாகத்தான் இருக்க முடியும்.

ஆகா! ஐந்து கோடி ரூபாய் மதிப்பு நமது உடல் என்றதும் பண்பையும், கொள்கையையும் விற்று வாழும் பெண்ணோ, ஆணோ அதற்கான விலையை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று சிந்திக்காமல், இவ்வளவு மதிப்பு வாய்ந்த உடலை மாண்பும் மரபும் மானமும் கெடாமல் காப்பாற்ற வேண்டும் என்ற முறையில் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

விஞ்ஞானி வெளியிட்டுள்ள கணக்கு; விவேக புரியினர்க்கே தவிர - விலை பேசிகளுக்கு அல்ல!

சமுதாயம் முழுமையும் விவேகபுரியாக விளங்கிட, இந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்பு உதவட்டும்.

அன்புள்ள,

மு. க.

21-11-1976

329. தொடங்கிய பயணம் தொடருகிறது!

உடன்பிறப்பே,

நவம்பர் இருபதாம் நாளன்று தஞ்சை நகரில் தத்துவமேதை டி. கே. சீனிவாசன் அவர்கள் எழுதிய "மலர்ச்சியும் வளர்ச்சியும்" என்ற நூல் வெளியீட்டு விழா ஒரு சிறப்புக் கூட்டமாக ஏற்பாடு செய்யப் பெற்று நுழைவுக் கட்டணம் செலுத்தி ஆயிரக் கணக்கானவர்கள் கலந்துகொண்டு ஏற்றமிகு நிகழ்ச்சியாக நடைபெற்றது.

"மலர்ச்சியும் வளர்ச்சியும்" என்பது ஒரு அருமையான கதைப் புத்தகம் என்றாலும் - அந்தப் புத்தகம் வெளியிடப்பட்ட நவம்பர் இருபதாம் நாள் என்பது; என்னைப் பொறுத்தவரையில் சிறப்புக் கூட்டத்துப் பேச்சுக்கு ஏற்ற தலைப்பாக அமைந்தது என்றால் அது மிகையாது.

இன்று திராவிட முன்னேற்றக் கழகமாக மணம் வீசி வளர்ச்சி பெற்றிருக்கும் இந்த இயக்கத்திற்கான மலர்ச்சி 1916ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இருபதாம் நாளன்றுதான் ஏற்பட்டிருக்கிறது. தஞ்சையில் 1976 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ஆம் நாள் "மலர்ச்சியும் வளர்ச்சியும்" என்ற தலைப்பில் உரையாற்றும்போது - இந்த இயக்கத்திற்கு அறுபது ஆண்டு மணி விழா ஆண்டாக வன்றோ திகழ்கிறது என்பதனை எடுத்துக் கூறினேன்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்புதான் சென்னையில் டாக்டர் நடேசனார் எனும் அறிஞர் பெருமகன் திருவல்லிக்கேணியில் "திராவிடர் சங்கம்" என்ற ஒரு அமைப்பை உருவாக்கினார்.

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய நியாயங்கள் எல்லா துறைகளிலும் கிடைத்தாக வேண்டும் என்ற குறிக்கோளுடன் நடேசனார் உழைத்தார். இந்திய தேசீய காங்கிரசில் இணைந்து உழைத்துப் பிறகு விலகிக் கொண்ட

தியாகராயரின் உள்ளத்தை டாக்டர் நடேசனார் கொண்டிருந்த இலட்சியங்கள் ஈர்த்திடத் தொடங்கின.

சமுதாயப் பணியொன்றினால் மட்டும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் - குறிப்பாக பிராமணரல்லாத மக்களுக்கும் - நன்மைகளைச் செய்துவிட முடியாது என்றும் அரசியலிலும் அந்த மக்களைப் பங்குபெறச் செய்ய வேண்டு மென்றும் அந்த இருபெரும் மேதைகளும் முடிவு செய்தனர்.

காங்கிரஸ் கட்சியில் இருந்த டாக்டர் நாயர் அவர்களும் அந்தக் கட்சியிலிருந்து விலகி இவர்களோடு இணைந்தார்.

மூவரின் சிந்தனையிலே விளைந்திட்ட முத்தாகத்தான் 1916 நவம்பர் இருபதாம் நாள் சென்னையில் கூட்டப்பெற்ற மாநாட்டில் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தோன்றியது.

அந்த அமைப்பின் கொள்கைப் பிரச்சாரத்திற்காகத் தமிழிலே "திராவிடன்" என்ற ஏடும், தெலுங்கிலே "ஆந்திர பிரகாசினி" என்ற ஏடும் - ஆங்கிலத்திலே "ஜஸ்டிஸ்" என்ற ஏடும் - நாளேடுகளாகத் தொடங்கப் பெற்றன.

"திராவிடன்" என்ற ஏட்டின் பெயரால் திராவிடர் கட்சி என்றும் 'ஜஸ்டிஸ்' என்ற ஏட்டின் பெயரால் "ஜஸ்டிஸ் கட்சி" அல்லது நீதிக்கட்சி என்றும் அமைப்பின் பெயர் விளங்கலாயிற்று.

நடேசனாரின் உணர்விலே எழுந்து, நாயரின் துணையுடன் தியாகராயரின் பேராற்றலினால் மலர்ச்சி பெற்ற மாபெரும் இயக்கத்தின் வளர்ச்சிதான் இன்றைய தி. மு. கழகம் என எண்ணிடும்போது அறுபதாண்டு கால வரலாற்றின் கடந்த கால நிகழ்ச்சி ஏடுகள் அகக்கண் முன்னே எத்துணை கம்பீரமாகப் புரள்கின்றன தெரியுமா?

வெள்ளுடை வேந்தர் தியாகராயர், வெள்ளையருக்குத் தாசர் என்று இகழப்பட்ட காலமெல்லாம் இருந்ததுண்டு. ஆனால் அவர் தலை தாழாச் சிங்கமாகத் தன்மானச் சுடரொளியாக உலவினார் என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுக்கள் உண்டு.

சென்னை மாநகராட்சியின் தலைவர் பொறுப்பைத் தியாகராயர் ஏற்றிருந்த காலம் - அப்போது சென்னைக்கு வருகை தந்த கன்னாட் பிரபு என்ற ஆங்கிலேயருக்கு மாநகராட்சியில்

வரவேற்பு வழங்கிட முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சியில் உள்ள பெரும் அதிகாரிகளையோ, தலைவர்களையோ வரவேற்பது என்றால் உடை அணிவதிலே கூட சில முறைகள் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்படவேண்டும். தலைப்பாகை அணிந்துகொள்ள வேண்டும். நீளமான கறுப்புக் கோட்டும், வெண்மையான கால்சட்டையும் போட்டுக் கொள்ள வேண்டும். இந்தச் சம்பிரதாயத்தைத் தியாகராயர் ஏற்றுக்கொள்ளவில்லை. வழக்கமாகத் தான் அணியும் தூய்மையான வெள்ளுடையைத்தான் அணிந்து கொள்ள முடியும் என்று கூறிவிட்டு, வரவேற்புக்குத் தான் வரஇயலாதென்றும் நகராட்சியின் துணைத் தலைவர் வருவார் என்றும் செய்தி அனுப்பிவிட்டார். அப்போது சென்னை கவர்னராக இருந்த வெல்லிங்டன் பிரபு, இந்தச் செய்தியைக் கேள்வியுற்று உடனே தியாகராயருக்கு வேண்டுகோள் விடுத்தார். கன்னாட்பிரபுவை வரவேற்க, தியாகராயர் வழக்கமான வெள்ளுடையிலேயே வரலாம்-வரவேண்டும் என்பதுதான் வேண்டுகோள்.

தொடக்கத்திலே இந்தியர்களுக்கு உத்தியோகச் சலுகைகள், உத்தயோக உயர்வுகள் போன்ற கோரிக்கைகளின் அடிப்படையிலே உருவான காங்கிரஸ் இயக்கம், காலக்கட்டத்திலே இந்திய நாட்டு விடுதலை இயக்கமாக வளர்ச்சி பெற்றது.

அதைப் போலவே தென்னிந்தியாவில் பெரும்பான்மையான மக்களுக்கு உத்தியோகங்களில் உரிய நியாயங்கள் கிடைக்க வில்லையென்று அதிக இடங்களைப் பெற்றிட வேண்டுமென்று தொடங்கிய திராவிடர் சங்கம், நீதிக்கட்சியாக வளர்ந்து ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலித்து ஆட்சிப் பொறுப்பையும் ஏற்று நடத்தி - இடையிலே நடை தளர்ந்து, பிறகு பெரியாரும் அண்ணாவும் அந்த இயக்கத்தின் சேவை, நமது மக்களுக்கு எந்த அளவுக்குத் தேவை என்பதை எடுத்துக் கூறி-பங்களாக்களிலும், தோட்டங்களிலும், அரண்மனைகளிலும், ஆடம்பர விழாக்களிலும் சுருங்கிவிட்ட அந்த இயக்கத்தை மக்களின் இயக்கமாக மாற்றித் திராவிடர் கழகமெனவும் பெயர்சூட்டி வளர்த்தனர்.

சமுதாயத் துறையிலே தனிக் கவனம் செலுத்திய பெரியார், திராவிடர் கழகத்தை நடத்திடவும் - அரசியல் ரீதியாகவும் நமது மக்களுக்கு தொண்டாற்ற வேண்டுமென்று விரும்பிய அண்ணா

அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை நடத்திடவும் தலைமை யேற்றனர்.

பெரியாரின் சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளை இதயத்தில் ஏந்தி, அண்ணாவின் பண்பாடு மிகுந்த அரசியல் கருத்துக்களை - கொள்கைகளை - குறிக்கோள்களை - உயிர் மூச்செனக் கொண்டு இன்று பணியாற்றுகிற திராவிட முன்னேற்றக் கழகம், தனது அறுபதாண்டு கால இலட்சியப் பயணத்தைத் திரும்பிப் பார்த்து - அந்தப் பயணத்தில் ஈடுபட்டு கொள்கை மாறாது குன்றென நிமிர்ந்து நின்று - மறைந்துவிட்ட மாவீரர்களுக்கெல்லாம் வணக்கமும் நன்றியும் தெரிவித்து - மேலும் தொடர்ந்து நடந்திட, உறுதியுடன் திகழ்கிறது என்பதைத் தஞ்சை விழாவிலே நான் விரிவாக எடுத்துச் சொன்னேன்.

இந்த மாபெரும் இயக்கத்தை அறுபதாண்டு காலமாகக் கட்டிக் காத்த இலட்சியவாதிகளையெல்லாம் அந்தப் பெருவிழாவிலே நினைவு கூர்ந்தேன்.

தொடங்கிய பயணம், தொடருகிறது-இடையிலே சிலர் வருவார்-போவார்! அந்தச் சிலரை நினைத்துக்கொண்டு-பலருக் காக நாம் நடத்துகிற பயணத்தை நிறுத்திவிட முடியாதல்லவா?

எனவே, என் அன்பு உடன்பிறப்பே, நீ என் அருகிலே இருந் தாலும்-அல்லது எவ்வளவு தொலைவிலே இருந்தாலும்-நம் இதயங்கள், இந்த இலட்சியப் பயணத்திற்காக எப்போதோ பிணைக்கப்பட்டு விட்டவை என்பதை உணர்ந்து நடந்து கொண்டே இருப்போமாக!

அன்புள்ள,

மு. க.

22-11-1976

330. தொடரட்டும் துயர் துடைப்புப் பணி!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சென்னை மாநகரிலும் கடு மழையின் காரணமாகவும் புயல், வெள்ளப் பெருக்கு ஆகிய வற்றின் காரணமாகவும் உயிரிழந்த, உடைமைகளிழந்த குடும்பங்கள் அனைத்துக்கும் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் இதயமார்ந்த ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிசைகளைப் பறிகொடுத்த மக்களைப் பாதுகாக்க அரசினர் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதுபோன்ற இயற்கையின் சீற்றத்தால் அவதிப்பட்டு அல்லலுறும் மக்களைக் காப்பாற்றித் துயர் துடைக்கும் பணியில் அரசு மட்டுமே தனித்து நின்று செயலாற்ற வேண்டுமென்று இல்லாமல் வாய்ப்பும் வசதியும் உள்ள பொதுமக்களும் பொது வாழ்வில் தங்களை ஒப்படைத்துக் கொண்டுள்ள கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஓரணியில் நின்று ஒத்துழைப்பினை நல்கிட வேண்டும்.

அந்த முறையில் கழக உடன்பிறப்புக்கள் ஆங்காங்குள்ள அமைப்புக்களின் வாயிலாக ஒருமுகமாக நின்று செயல்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளைச் செய்திட வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

25-11-76 மாலையில் தான் மழை மேகம் குறைந்து, வானம் நீலவண்ணத்தைக் காட்டத் தொடங்கியது. மழை நின்றபோதிலும் அதன் விளைவாக ஏற்பட்ட வேதனைகள் நகரத்தில் நின்றபாடில்லை. எங்கும் ஒரே வெள்ளக்காடு.

25-ந் தேதி இரவே நமது தலைமைக் கழக அலுவலகமாம் அன்பகத்தில் பெரிய பெரிய அடுப்புக்கள் மூட்டப்பெற்று அண்டாக்களும் பெரும் தவலைகளும் அடுப்புக்களில் ஏற்றப்பட்டன. கழகக் கண்மணிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், அமைப்புக்களின் செயல் வீரர்கள் அனைவருமே சமையல் பணிகளில் இரவோடு இரவாக ஈடுபட்டனர்.

நானும், தலைமைக் கழகப் பொறுப்பாளர் சாதிக்கும், முன்னாள் அமைச்சர் நண்பர் ராசாராமும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று இயன்ற வரையில் ஆறுதல் கூறினோம்.

கழகத்தின் சார்பில் துயர்துடைப்புப் பணிகளுக்காகத் தமிழக அரசின் தலைமைச் செயலாளரிடம் இருபத்தி ஐயாயிர ரூபாய் நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

26-ந் தேதி நிதியினை வழங்கியது மட்டுமின்றி, பதினையாயிரத்துக்கு மேற்பட்ட உணவுப் பொட்டலங்களை சென்னை நகரின் பல்வேறு பகுதிகளிலும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

பெரிய அளவில் அரசு, உதவிகளைச் செய்கிறது எனினும் நம்மால் முடிந்த அளவுக்கு நமது கடமைகளைச் செய்திட வேண்டுமல்லவா?

தமிழகத்தில் எங்கெங்கே மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்களோ அங்கெல்லாம்-உடன்பிறப்பே! உன்னுடைய உதவிக்கரம் நீட்டப்பட வேண்டும்.

இந்த என் வேண்டுகோளை, வெறும் சம்பிரதாய வேண்டுகோளாகக் கருதிக்கொள்ளாமல் உடனடியாக ஆங்காங்கு தொண்டினைத் தொடங்கித் தொடர்ந்து நடத்திடுவாய் என்பதும் எனக்குத் தெரியும்.

- அரசு அதிகாரிகளுடன் உடனிருந்து ஒத்துழைத்துப் பாதிக்கப்பட்டோருக்கு ஆவன செய்தல்.
- எங்கெங்கே மக்கள் ஆதரவற்ற நிலையில் இருக்கிறார்கள் என்பதை உரியவர்களிடத்திலே எடுத்துரைத்தல்.
- அமைப்புக்களின் சார்பாக முடிந்த அளவு உணவு தயாரித்து இயன்ற அளவுக்கு ஏழை எளியோர்க்கு வழங்குதல்.

இப்படிப் பல்வேறு இன்றியமையாத நற்பணிகளை ஆற்றிட நமது கழக உடன்பிறப்புக்கள் முன்வந்திட வேண்டும்.

இப்போது அந்தப் பணிகளில் சலியாது ஈடுபட்டிருக்கும் உடன்பிறப்புக்கள் அனைவரையும் வாழ்த்திப் பாராட்டுகிறேன்.

மேலும் தொடரட்டும் துயர்துடைப்புப் பணி; என்று கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

27-11-1976

331. வாழ்த்திக் கொண்டே வளருவோம்!

உடன்பிறப்பே,

அர்ச்சனை தொடருகிறது.

அபிஷேகம் நடந்துகொண்டே இருக்கிறது.

ஆராதனை நிற்கவில்லை.

என்ன சொல்லுகிறேன்; யாரைப் பற்றிச் சொல்லுகிறேன் என்று கேட்கிறாயா?

நடிகர் கட்சி நண்பர்கள் சிலர் நம்மீது நடத்தும் அக்கினிச் சொல் அர்ச்சனைகளையும், அவதூறு அபிஷேகங்களையும், ஆபாச மொழி ஆராதனைகளையும் பற்றித்தான் குறிப்பிடுகிறேன்.

ஏன் அவர்களுக்கு அவ்வளவு ஆத்திரம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கான காரணம் நமக்குப் புரியாமல் இல்லை.

அவர்கள் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கிற உடைப்பு விளைவித்துள்ள வேதனைகளால் மிகவும் மிரண்டு போயிருக்கிறார்கள் பாவம்!

அவர்களால் "பிரிவினைவாதிகள்" என்று குற்றம் சாட்டப் பெற்று விலக்கப்பட்டவர்களைப் பற்றி ஏதாவது பேசினாலோ, எழுதினாலோ, அதற்குச் சுடச் சுடப் பதில் அவர்கள் பாணியிலேயே கிடைக்கிறது. அந்த எதிரொலியைத் தாக்குப் பிடிக்க முடியாமல் நம்மீது பாய்ச்சலைத் தொடருகிறார்கள்.

- கட்சியின் சட்டதிட்டங்கள் பொதுக்குழுவில் அறிவித்தது ஒன்றாகவும், ஏடுகளில் வந்தது வேறொன்றாகவும் இருக்கிறதே; என்ன காரணம்?
- அண்ணா வழியில் நடப்பதாகச் சொல்லிக் கொண்டு "அனைத்து இந்தியா" என்ற அடை மொழியை முன்

கூட்டியே பத்திரிகையில் பல நாட்கள் வெளியிட்டு விட்டு; அதற்குப் பிறகு பொதுக் குழுவைக் கூட்டி அனைத்து இந்தியக் கட்சி என்று ஒப்புக் கொள்ளச் சொல்கிறீர்களே; இது என்ன ஜனநாயக முறை?

- பல செயலாளர்கள் மாநில அளவில் விலகிய பிறகு, இருக்கிற செயலாளர்களைக் கூட்டி, பொதுச் செயலாளராக எம். ஜி. ராமச்சந்திரனை மீண்டும் தேர்ந்தெடுத்ததாக ஏடுகளில் செய்தி வெளியிடு கிறீர்களே; இது எந்தக் கட்சியிலும் இல்லாத முறையாக இருக்கிறதே! பொதுக்குழு அல்லவா பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்? கட்சியின் பதினேழுலட்சம் உறுப்பினர்களும் பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுப்பார்கள் எனச் சொன்னீர்களே; அது என்னவாயிற்று?

- கணக்கு கேட்பதில் புலியெனப் பெயர் எடுத்தவரே! உமது கட்சியின் பதினேழு லட்சம் உறுப்பினர்கள் செலுத்திய சந்தாத் தொகை எந்த வங்கியில் இருக்கிறது? கணக்கு எங்கே?

- தேர்தல் நிதி - என்று பத்திரிகையில் வெளியிட்டு, முதல் நாள் வரை வந்த நிதியையும் குறிப்பிடாமல், ஒவ்வொரு நாளும் மொத்தம் கட்டிக் கூட்டிப் போடாமலும் பிரசுரிப்பதின் மர்மம் என்ன?

- கம்யூனிசம், சோஷலிசம், கேப்டலிசம் மூன்றும் சேர்ந்ததே அண்ணாயிசம் என்று விளக்கமளித் தீர்களே; அந்த விளக்கம், கட்சியின் சட்ட திட்டத்தில் இடம் பெறாத காரணமென்ன?

- இன்றைய இந்திய மக்கள் அனைவரும் திராவிடர் கள்தான் என்று அறிவித்தீரே; அந்தப் புதிய ஆராய்ச்சிப் புத்தகம் எப்போது வெளிவரப் போகிறது?

- கட்சிக்கு வருபவர்களை நீதிபதி விசாரணைக் குழு மூலம் விசாரித்து வடிக்கட்டிய பிறகு தான் கட்சியில் சேர்ப்பதாக அறிக்கை விடுத்தீரே; அந்த அறிக்கைக்குப் பிறகு மூன்றாண்டுகள் கழித்து

நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதிபதி என்ன ஆனார்?

- அந்த நீதிபதியிடம் எத்தனை பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள்? திண்டுக்கல் வைரம் புகழ் ஜோதிமஸ்தான் திலகம் மதுரையாரின் நில புலங்கள், வீடுகள், பங்களாக்கள் பற்றியெல்லாம் விசாரணை முடிந்துதான் அவரைக் கட்சியில் சேர்த்துக் கொண்டீர்களா?

- 1973-ல் அடிக்கல் நாட்டப்பெற்று அண்ணா மேம்பாலத்தருகே பெரியார் சிலை அமைக்கப் பீடம் கட்டினீர்களே; சிலை ஏன் மூன்று ஆண்டுகள் முடிந்தும் வைக்கவில்லை?

- அண்ணாவின் உண்மையான தம்பிகள் கட்சிக்குக் கட்டுப்பட்டு பச்சை குத்திக் கொள்ளவேண்டும் என்று ஆணை பிறப்பித்து விட்டு - இப்போது அது கட்டாயமில்லை என்று அறிவித்திருக்கிறீரே; எது கட்டாயமில்லை? அண்ணாவின் உண்மையான தம்பியாக இருப்பதா?

- "தி. மு. க. என்னைத் தூக்கி எறிந்துவிட்டது" என்று அலறிக்கொண்டிருந்தவராகிய நீர், புதிய கட்சி தொடங்கிய பிறகு இந்த நாலைந்து ஆண்டுகளில் பெட்டிச் செய்தி வெளியிட்டு தூக்கியெறிந்த வர்களின் எண்ணிக்கை ஏட்டில் அடங்குமா? எழுத்தில் கொள்ளுமா?

இப்படிப்பட்ட கேள்விகளை நாமல்ல; நடிகர் கட்சியிலிருந்து அண்மையில் விலக்கப்பட்டவர்களும் விலகியவர்களும் சரமாரியாகத் தொடுத்தனர்.

அதற்குப் பதில் அளிக்க முடியாதவர்கள் - பயந்து பல்லைக் காட்டி நிற்பவர்கள் - நம்மீது நாராச மொழிகளை அள்ளி வீசுகின்றனர்.

அவர்கள் யார்? எப்படிப்பட்டவர்கள்? என்பதை நாடு, நன்கு உணர்ந்தே இருக்கிறது.

நன்றாக அவர்கள் வசை பாடட்டும்!
நாவலிக்கத் திட்டித் தீர்க்கட்டும்!

"வாழ்க வசைவாளர்கள்" என்று அண்ணா அவர்கள் வாழ்த்தியது போலவே நாமும் அவர்களை வாழ்த்துவோம்!

பல கட்டங்களைச் சந்தித்து வளர்ந்து வரும் நமது இயக்கம் இன்று ஏறுநடைச்சிங்கமென எதையும் தாங்கும் இதயத்துடன் உலாவந்துகொண்டிருக்கிறது.

வசைமாரி பொழிவோர், தங்கள்
பணியை நிறுத்தாமல் நடத்தட்டும்!

நாம் அவர்களை வாழ்த்திக் கொண்டே வளருவோம்.

அன்புள்ள,

மு. க.

31-11-1976

332. நன்னாளை எதிர்நோக்குவோம்!

உடன்பிறப்பே,

இன்று காலை ஏடுகளில் ஒரு இனிப்பான செய்தி வந்துள்ளது. "பினாமி சொத்துக்களும், பினாமி பேரங்களும் பரவலாக இருப்பதை ஒடுக்குவதற்காக மத்திய அரசின் சட்ட அமைச்சகம், ஒரு மசோதாவைத் தயாரித்து வருகிறது. இந்தப் பினாமி ஒழிப்புச் சட்டம் கடுமையானதாக இருக்குமென்றும் பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டத் தொடரில் வரக்கூடுமென்றும் தெரிகிறது. பினாமி ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதானது, நகர்ப்புற உச்சவரம்புச் சட்டங்களை அமலாக்கவும் வரிகளை நன்கு வசூலிக்கவும் உதவுவதோடு விவசாய சொத்து உச்சவரம்புச் சட்டங்களையும் நன்கு நடைமுறைப்படுத்த முடியும் என்ற அடிப்படையில் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் மேற்குவங்கமும், தமிழ்நாடும் கணிசமான அக்கறையைக் காட்டியுள்ளன" என்பதுதான் நான் படித்த செய்தியின் சுவைக்குக் காரணமாகும்.

"நிலங்களில் மட்டுமல்ல வீடு, மனை போன்ற பல்வகை சொத்துடைமைகளிலேகூட இருக்கிற பினாமி முறைகளுக்கு ஒரு முடிவுகட்ட, மத்திய அரசு-தனது கவனத்தைத் திருப்பவேண்டும் என்பது நமது முறையீடாகும்"

என்று நான் உனக்கு எழுதிய கடிதங்களில் பலமுறை குறிப்பிட்டிருக்கிறேன். நமது கழகம் இந்தக் கருத்தை அடிக்கடி வலியுறுத்தி வந்திருக்கிறது.

நில உச்சவரம்பு, நகர்ப்புற உச்சவரம்பு போன்ற சட்டங்கள் எதிர்பார்த்திடும் அளவுக்கு வெற்றிகரமாக அமைய முடியாமல் இந்த பினாமிமுறைதான் குறுக்கே நின்று கொண்டிருக்கிறது.

பினாமி ஒழிப்புச் சட்டம் ஒன்று விரைவில் நிறைவேற இருக்கிறது என்று ஆறு மாதங்களுக்கு முன்பு செய்திகள் அறிவிக்கப்பட்டபோதே சட்டம் கொண்டுவரும் அந்த நல்ல

நோக்கத்தை வரவேற்று நமது கழகத்தின் சார்பில் அறிக்கை வெளியிட்டிருக்கிறோம்.

இப்போது அடுத்த கூட்டத் தொடரிலேயே அந்தச் சட்டம் வரப்போகிறது என்பது சமதர்ம நோக்குடையோர்களுக்குத் தெம்பூட்டும் தகவலாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நிலச் சீர்திருத்தம், பல கட்டங்களில் நிறைவேற்றப்பட்டு வந்துள்ளது. 1960 ஆம் ஆண்டில் நில உச்சவரம்பு முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று சட்டம் கொண்டுவரப்பட்டபோது முன் எச்சரிக்கையாகப் பலபேர் தங்கள் நிலங்களைப் பல பெயர்களில் பிரித்து வைத்துக்கொண்டார்கள். அந்தச் சட்டம் வந்தபோது கரும்பு சாகுபடி, மேய்ச்சல் நிலங்களுக்கு விதி விலக்குகள் அளிக்கப்பட்டது.

அந்த விதிவிலக்குகளில் புகுந்து கொண்டு தங்கள் நிலங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியாதவர்கள், பினாமி தாரர்களைப் பிடித்து அவர்களுக்கு விற்பனை செய்தது போலப் பத்திரங்களை எழுதிப் பதிவு செய்து கொண்டு உரிமையைப் பினாமிகளின் பெயரில் வைத்துக்கொண்டு பயனைத் தாங்கள் வளமாக அனுபவித்துக்கொண்டு சட்டத்திலிருந்து தப்பித்துக் கொண்டனர்.

தஞ்சை மாவட்டத்திலே மட்டுமே 1959 ஆம் ஆண்டு 138 நிலப்பிரபுக்களுக்கு சொந்தமாக இருந்த மொத்த நிலம் 48,924 ஏக்கர்கள். ஆனால் 1960 ஆம் ஆண்டு உச்சவரம்பு சட்டப்படி அரசுக்கு அந்த 138 பிரபுக்களிடமும் இருந்து கிடைத்த உபரி நிலம் 6624 ஏக்கர்கள்தான்! எனவே பினாமிமுறை எந்த அளவுக்கு அந்த உச்சவரம்பு சட்டத்தைப் பாதித்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஒரு நிலக்கிழார், தன்னுடைய வீட்டில் உள்ள கிருஷ்ணன் படத்து பூஜைக்கு என்று பெருமளவு நிலத்தை டிரஸ்ட் எழுதி வைத்துவிட்டு அதன் பயனைத் தானே அனுபவித்துக்கொண்டார். இந்தக் காரணங்களால் 1960 ஆம் ஆண்டு உச்சவரம்பு சட்டப்படி அரசுக்கு உபரியாகக் கிடைத்த நிலம் 16,350 ஏக்கர்களாக மட்டுமே இருந்தது.

1970 ஆம் ஆண்டு முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதை பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் எனக்குறைத்து உச்சவரம்பை நிர்ணயித்தும், கரும்பு, மேய்ச்சல் நிலங்களுக்கு இருந்த

விதிவிலக்குகளை ரத்து செய்தும் கல்லூரி, உயர்நிலைப்பள்ளி, மாணவர் விடுதி, அனாதை இல்லங்கள் ஆகியவற்றுக்கு விதிவிலக்கு அளிக்காமல் அந்த அறக்கட்டளைகளுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு உச்சவரம்பு நிலங்களை அனுமதித்தும் சட்டத்தை நிறைவேற்றிய பிறகு அரசுக்குக் கிடைத்த உபரி நிலம் 1975 ஆம் ஆண்டு கணக்கின்படி 1,08 068 ஏக்கர்களாகும்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நியமித்த நிலச் சீர்திருத்த சட்ட ஆய்வுக் குழுவினர் தமிழ்நாட்டில் உச்சவரம்பு சட்டம் நல்ல முறையில் பலன் அளித்து பெரும்பான்மையோருக்கு உபரி நிலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன எனப்பாராட்டி ஒரு அறிக்கையே கூட அப்போது வெளியிட்டிருக்கிறார்கள்.

படிப்படியாக செய்யப்பட்டுள்ள இந்த நில உச்சவரம்புச் சட்டத்தின் முழுப்பயனையும் பெறவேண்டுமென்றாலும், இன்னும் அதிகமான உபரி நிலங்களை அரசு எடுத்து நிலமற்றோருக்கு வழங்கவேண்டுமென்றாலும், அதற்குத் தடைக்கல்லாக இருக்கிற பினாமி முறையைத் தகர்த்து எறிந்தாக வேண்டும்.

பினாமிகளின் பெயரால் உள்ள நிலமானாலும் வேறு சொத்துக்களானாலும் அதை அவர்களுக்கே உரிமையாக்கி விடவேண்டும் என்ற அடிப்படையில்கூட சட்டத்தை உருவாக்கப் போவதாகச் சில மாதங்களுக்கு முன்பு யூகங்கள் கூறப்பட்டன.

இப்போதே பல விவகாரங்களில் பினாமிகளின் பெயரால்தான் நிலங்களோ வேறு உடைமைகளோ இருக்கின்றன. ஆனால் அதன் பயன்கள் அவர்களுக்குக் கிடைக்காமல் தனியார் சிலர்தான் மறைமுகமாகத் தங்களைக் கொழுக்க வைத்துக் கொள்கிறார்கள். இப்படி ஒரு தந்திரமான ஏற்பாடு நிலவி வருகிறது.

இந்தச் சிக்கலை எப்படித் தீர்ப்பது என்பதை மத்திய அரசு ஆழ்ந்து சிந்தித்து சட்டத்தைத் தயாரிக்கிறது என்ற செய்தி, மகிழ்வூட்டத் தக்கதாகும்.

விரைவில் அந்தச் சட்டம் உருப்பெற்று நடைமுறைக்கு வரும் நன்னாளை எதிர்நோக்குவோமாக!

அன்புள்ள,

மு. க.

01-12-1976

333. பெருநாள் வாழ்த்துக்கள்!

உடன்பிறப்பே,

உலகின் எல்லாப் பகுதிகளிலும் வாழ்கிற இஸ்லாமியப் பெருமக்கள் இத்திங்கள் இரண்டாம் நாளன்று பக்ரீத் பண்டிகையினைக் கொண்டாடுகிறார்கள். இஸ்லாமியச் சகோதரர்களோடு இரண்டறக் கலந்து பாசமும் பற்றும் குறையா இதயங்களின் பிணைப்போடு வாழ்ந்து வருகிற இயக்கத்தின் சார்பில் இந்தத் திருநாளில் நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நேற்று நினைத்து இன்று வழங்குகிற வாழ்த்துக்கள் அல்ல இவை!

நீண்ட நெடுங்காலமாக அவர்களுக்கும் நமக்கும் இந்த உறவு இருந்து வருகிறது. "அவர்களுக்கும் நமக்கும்" என்று தனித்தனியாகக் குறிப்பிடுவது கூடத் தவறானதாகும். "நாம்" என்பதில் அவர்களும் அடங்குகிறார்கள்.

இஸ்லாமியர்களுக்கென அமைந்துள்ள நீதி முறைகள், கடமைகள் - அதைப்போலவே மற்ற மதங்களில் எடுத்துக்கூறப்படும் நீதிமுறைகள், கடமைகள் - ஆகியவற்றுக்கிடையே சிறுசிறு வேறுபாடுகள் இருந்தாலும் வாழ்க்கை நெறியைப் பொறுத்த மட்டில் அடிப்படை முரண்பாடுகள் எதுவுமில்லை.

அந்தந்த மார்க்கங்களைப் பின்பற்றுகிற மனித சமுதாயத்தினர், தாங்கள் ஏற்றுக்கொண்ட மார்க்கங்களைப் பெயரளவுக்குப் பயன்படுத்திக் கொண்டு, தங்கள் வழிகளைத் தனி வழிகளாக அமைத்துக் கொண்டதால் கால கட்டத்தில் அந்தத் தனி வழிகள், தவறான வழிகளாக அமைந்து விட்டன.

நேர்வழி, நேர்மை வழி செல்வதற்கேற்ற கடமைகளை உணர்த்துகிற தங்கள் கோட்பாடுகளை நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டு இந்த நாளில் எடுக்கும் விழா மூலம் நல்ல விளைவுகளை உருவாக்கக்கூடிய இஸ்லாமிய சமுதாயத்தினருக்கு நமது வாழ்த்துக்கள் உரியவையாகின்றன.

இந்தக் கருத்தை வலியுறுத்துகிற வகையில்தான் திருமறையின் வாசகமொன்று அமைந்திருக்கிறது.

> "மனிதன், தன் செய்கைகளை ஒருவரும் பார்க்கவில்லை என்று நினைக்கின்றானா? அவனுக்குக் கண்கள் இல்லையா? நாவும் உதடுகளும் அருளப்படவில்லையா? அவனுக்குத் தெளிவான வழி காட்டப்படவில்லையா? ஆனால் அவனோ கடினமாயுள்ள "அகபா" என்னும் கரடு முரடான மலை வழியை நோக்கிச் செல்ல முயற்சிப்பதில்லை. தனக்குக் கடினமாகத் தோன்றும் வழிமுறையைப் பின்பற்றாமல், இலகுவாகத் தோன்றும் பாதையில் செல்லவே முனைகிறான். கடின வழியில் செல்வோர் யார்? ஆதரவற்றவர்களை நேசிப்பவர்கள், உண்மையின் விசுவாசிகள், பொறுமையின் மேன்மையை உணர்ந்தவர்கள், கருணையைப் பிறர் மீது பொழிபவர்கள்."

கடின வழி எது என்பதற்குத் திருமறை அளிக்கும் விளக்கம் இது.

இன்னல்களும், இடையூறுகளும் நிறைந்த வழியில் நெடும் பயணம் நடத்தித்தான் நபிகள் நாயகம், உலகத்து இஸ்லாமியப் பெருமக்களின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார்.

கொண்ட கொள்கையை எடுத்துச் சொல்லக் குன்றென நிமிர்ந்து நின்ற நாயகம் அவர்களின் வாழ்க்கையில் ஏற்றிவைக்கப்பட்ட தியாகச் சுடர்களின் ஒளி வெள்ளப்பெருக்கின் சின்னங்களாகத்தானே மெக்காவும், மெதினாவும் திகழ்கின்றன.

அந்தத் திருநகர்களுக்குச் செல்வதைத் தங்கள் வாழ்வின் பெருங் குறிக்கோளாகக் கொண்டல்லவோ இஸ்லாமியர் திகழ்கின்றார்கள்.

அந்த இனிய உடன்பிறப்புக்கள் கொண்டாடுகின்ற இந்தத் திருநாளில் என்றும் போல் நமது நட்பும் உறவும் தழைக்கட்டும் என்று கூறி என் வாழ்த்துக்களை ஏற்றுக்கொள்ளுமாறு என்றும் வற்றாத அன்புடன் வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

02-12-1976

334. உடுப்பியில் ஒரு பேட்டி!

உடன்பிறப்பே,

கர்நாடக மாநிலத்தில் உடுப்பி என்னுமிடத்தில் படப் பிடிப்புக்கு போயிருக்கிற நண்பர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் சென்னை மாநகரத்து வெள்ளத்தைக் கேள்விப்பட்டு உடனே விமானத்தில் பறந்து சென்னைக்கு வருவதற்காக எவ்வளவோ முயற்சி செய்தாராம். கடந்த ஒன்பது அல்லது பத்து நாட்களாக மழையின் காரணமாக விமானப்போக்குவரத்துத் தடைப்பட்டு விட்டதால் அவரால் வரமுடியவில்லையாம். இப்படி அவருடைய கட்சியின் முதல் வரிசைத் தலைவர்கள் கூட்டங்களில் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

மழை, புயலின் காரணமாக ஒருநாள் விமானப் போக்குவரத்து தடைப்பட்டது உண்மை! அதற்குப் பிறகு எந்தத் தொல்லையும் இல்லாமல் விமானங்கள் சென்னைக்கு வந்து கொண்டு தானிருக்கின்றன.

டெல்லியிலிருந்து சஞ்சய் காந்தி, ஓம் மேத்தா ஆகியோரும், ராஜஸ்தான் சென்றிருந்த கவர்னர் சுகாதியாவும் விமானங்களின் மூலம்தான் சென்னைக்கு வந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் வழங்கினர்.

நடிக நண்பர் வராவிட்டாலும் கூட அவரது கட்சியினர் ஆங்காங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதில் ஒத்துழைத்தனர் என்பதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

கட்சிச் சார்பற்ற முறையில் பொதுத் தொண்டில் ஈடுபட்டு இப்படிப்பட்ட நேரங்களில் ஓரணியில் நின்று அனைவரும் பணியாற்றுவதே பாராட்டுக்குரிய பண்பாடாகும். இந்த மாதிரி இன்னல்களைக் களைய கட்சிக் கண்ணோட்டமின்றி செயல்படும் பரந்த மனப்பான்மை; வரவேற்கத்தக்க அரசியல் நாகரீகமாகும்.

அந்த வகையில் நடிகர் கட்சித் தொண்டர்களும் தங்களால் இயன்ற அளவு பாதிக்கப்பட்டோருக்கு உறுதுணை புரிந்திருக்கின்றனர்.

அத்துடன் அதனை விட்டுவிடாமல், தங்கள் தலைவர் உடுப்பி படப்பிடிப்பிலிருந்து வரமுடியாததற்கு ஒருதேவையற்ற கற்பனைக் காரணத்தை அந்தக் கட்சியின் முதல் வரிசை முன்னோடிகள் சிருஷ்டிக்க நினைத்தது கேலிக்குரியதாக ஆகிவிட்டது மட்டுமல்ல; விமானப் போக்குவரத்தே பத்து நாட்களாக சென்னைக்குக் கிடையாது என்ற உண்மைக்கு மாறான தகவலையும் தருவதாக அமைந்துவிட்டது.

சரி; வரமுடியாதவர் - உடுப்பியிலிருந்து படப்பிடிப்பு வேலை களுக்கிடையே நிருபர்களைச் சந்திக்கிறார். அந்த நிருபர்கள் பேட்டியில் அகில உலக விஷயங்களை அலசுகிறார். "சோலை" நடுவே இருந்து அவர் அளிக்கிற அற்புதமான பேட்டிகளில், நமது கழகத்தையும் எதற்காக வீண் வம்புக்கு இழுக்கிறார் என்பதுதான் புரியவில்லை.

ஒரு நிருபர் கேள்வி கேட்கிறார். மிக முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் கேள்வி.

"நீங்கள் இப்போது நடிக்கும் இந்தப் படத்தின் மையக் கருத்து என்ன?"

"ஏகபோக முதலாளித்துவத்தை எதிர்க்கின்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட கதை"

"இருபது அம்சத் திட்டத்தின் கருத்துக்கள் இந்தப் படத்தில் இருக்கின்றதா?"

"இருபது அம்சத் திட்டம் என்றால் தொழிலாளர், மாணவர், பெண்கள், மீனவர் என்று எல்லோருக்கும் பொதுவான திட்டம். அதன் வெற்றி செயல்படுத்தும் போதுதான் தெரியும். எந்த முன்னேற்றக் கருத்துக் களையும் தீவிரம் - மிதவாதம் இரண்டின் மூலமும் செயல்படுத்தலாம்"

உடன்பிறப்பே, இந்தப் படத்தில் இருபது அம்சத் திட்டத் திற்கு இடம் உண்டா என்று கேட்ட நிருபர் திணறித்தான் போயிருப்பார்.

இந்த அருமையான பதிலை, இந்திய கம்யூனிஸ்டு தலைவர் களுக்கு ஒரு "புரட்சிப்பரிசு" என்ற வகையில் விழா நடத்திக்கூட வழங்கலாம்.

முன்னேற்றக் கருத்துக்களைப் படிப்படியாகச் செயல்படுத்த வேண்டும்-செயல்படுத்தலாம்-என்று அவர் கருதியிருக்கக் கூடும். அதற்குச் சரியான வார்த்தை "மிதவாதம்" என்று அவர் எண்ணியிருக்கக்கூடும்.

தலைவரின் பெயருக்கு முன்னால் அடைமொழியாக ஆர்த்தெழுந்து நிற்கிற சொல்; "புரட்சி" என்பதாகும்.

அந்தப் புரட்சி, மிதவாதத்திற்கு வக்காலத்து வாங்குகிற காட்சி யைப் பார்த்து அவரது முற்போக்கு அணியினர் திகைக்கக் கூடும்.

அவர் எதையோ சொல்லிவிட்டுப் போகிறார்; உனக்கென்ன வந்தது எனறு நீ சலிப்புடன் கேட்கிறாய்-அதுவும் என் காதில் விழுகிறது!

ஆனால் அந்தப் படப்பிடிப்புச் சோலையின் பேட்டியில் அவர் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார், அதாவது;

> **"பழைய காங்கிரஸ் கட்சிக் கூட்டங்களுக்கு அதிக அளவில் கருணாநிதிக் கட்சியினர் சென்று கலந்து கொள்வதாகவும், கருணாநிதிக் கட்சிக் கூட்டங்களுக்கு பழைய காங்கிரஸ் கட்சியினர் பெருமளவில் செல்வதாகவும் பேசப்படுகிறது. என் காதிலும் விழுகிறது"**

இதனால் பழைய காங்கிரசுக்கும், தி. மு. க. வுக்கும் உறவு இருப்பதாகத் தந்திரமாக நிரூபிக்க முனைகிறாராம்; அப்படி ஒரு நினைப்பு அவருக்கு!

அந்தந்தக் கட்சிக் கூட்டங்களுக்கு அந்தந்தக் கட்சியைத்தவிர வேறு கட்சியினர் செல்லக்கூடாது என்பதும், அப்படி சென்றால் அவர்களுக்குள்ளே உறவு இருக்கிறது என்பதும் அவருடைய வாதம் போலும்!

எத்தனையோ கூட்டங்களில் நமது கழக முன்னணியினர் பேசும்போது, இப்போதல்ல - பல ஆண்டுக்காலமாகவே - பேச்சை ஆரம்பிக்கும்போது - "தலைவர் அவர்களே! தோழர்களே!

ஒலிபெருக்கி வாயிலாக எங்கள் உரையைக் கேட்டுக் கொண்டிருக்கும் மாற்றுக் கட்சி நண்பர்களே!" என்றுதான் குறிப்பிட்டிருக்கிறோம்.

ஆக, மற்றக் கட்சி கூட்டங்களுக்கு பிற கட்சியினர் வருவ தென்பது தொன்று தொட்டு வழக்கமான ஒன்று!

அண்மையில் நான் தஞ்சை சிறப்புக் கூட்டத்துக்குச் சென்றிருந்தேன். அந்தக் கூட்டத்திற்கு நடிகர் கட்சியைச் சேர்ந்த முக்கியமானவர்களே கூட வந்திருந்தார்கள். இது யாரோ சொல்லி என் காதில் விழுந்ததல்ல. அவர்கள் கூட்டத்தில் இருப்பதை நானே நேரடியாகவே பார்த்தேன்.

இதிலிருந்து கழகத்துக்கும் நடிகர் கட்சிக்கும் உறவு ஏற்பட்டு விட்டதாகச் சொல்லிவிட முடியுமா?

பழைய காங்கிரசுக்கும் தி. மு. க.வுக்கும் உறவு என்ற கற்பனையை உருவாக்கி நண்பர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் எத்தகைய அரசியல் ஆதாயம் அடையப் பார்க்கிறார் என்பது நமக்கு விளங்குகிறது.

இந்த விதமான தந்திரப்பேச்சுக்களில் உடுப்பி நிருபர் ஏமாற லாம் - இங்குள்ளோர் யாரும் ஏமாறத் தயாராக இல்லை!

அன்புள்ள,

மு. க.

05-12-1976

335. கோட்டூர்புரமும் - குமுதமும்!

உடன்பிறப்பே,

சென்னையில் மழை; வெள்ளப்பெருக்கு; வேதனையால் பல பகுதிகள் பாதிக்கப்பட்டு, துயர் தணிப்புப் பணிகளை அரசாங்கமும், அரசுக்கு ஒத்துழைக்கும் வகையில் பொதுநலனில் நாட்டமுள்ளோரும், கட்சிச் சார்பற்ற முறையில் அனைவருமே மேற்கொண்டு; நிலைமைகள் இப்போது படிப்படியாகச் சீர்பெற்று வருகின்றன.

சில ஏடுகளில் மட்டும் இந்த வெள்ளக் கொடுமையால் மக்கள் பாதிக்கப்பட்டதற்கும் தி. மு. க. ஆட்சிதான் காரணம் என்று கற்பனைக் கதைகளைத் தீட்டி, உண்மைகளைத் திசை திருப்பும் முயற்சி நடைபெற்று வருகிறது.

"கோட்டூர்புரம் - கோட்டூர்புரம்" என்று மனம் போன போக்கில் எழுதித் தீர்க்கிறார்கள்.

செம்பரம்பாக்கம் ஏரியின் தண்ணீரை அடையாற்றில் விடவேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதால் - அடையாறு திடீரென கோட்டூர்புரத்துக்குள்ளே உடைப்பெடுத்துக் கொண்டு பெருகிவிட்டது. கோட்டூர்புரத்தில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பாகக் கட்டப்பட்டுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட குடியிருப்புக்கள் - முதல் தளத்தின் முக்கால் பகுதி வரையில் தண்ணீரில் மூழ்கி மேலேயிருந்த இரண்டு மாடிகளில் மக்கள் போய் அமர்ந்து கொண்டார்கள். இரண்டொரு நாட்கள் அந்தக் குடிசைமாற்று வாரிய வீடுகள் கட்டப்பட்டிருந்த இடம் ஒரு தீவு போல் விளங்க வேண்டியிருந்தது.

அந்த வீடுகள், கட்டப்படாமல் இருந்திருந்தால் அங்கே சுமார் இரண்டாயிரம் குடிசைகள் இருந்திருக்கும், பொங்கியெழுந்த அடையாறு வெள்ளத்தில் அத்தனை குடிசைகளும், அதில் வாழும் உயிர்களும் அடித்துச் செல்லப்பட்டிருக்கும்.

தண்ணீரெல்லாம் இப்போது வடிந்து காந்தி மண்டபத்தில் தங்கி இருந்த மக்கள் கோட்டூர்புர குடிசை மாற்றுவாரியக் கட்டிடங்களுக்கு மீண்டும் குடி புகுந்து விட்டார்கள் என்று செய்தி வந்துள்ளது. துயர் தணிப்புப்பணிகளை ஒருங்கிணைத்து நிறைவேற்றும் அதிகாரி திரு. கே. ஆர். ஷெனாய் அவர்களிடம விசாரித்தபோது - கோட்டூர்புரத்தில் வெள்ளத்தில் மூழ்கியதால் வசிக்க லாயக்கானவைகள்தானா என்பதைக் கண்டறிய நியமிக்கப்பட்ட பொறியியல் துறை வல்லுநர் குழுவினர்; அந்தக் குடியிருப்புக்களைப் பார்வையிட்டு, அவை வசிக்கத் தகுதியானவைதான் என்று அறிவித்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். இந்தச் செய்தியும் ஏடுகளில் வெளி வந்துள்ளது.

நமது கழகப் பொறுப்பாளர் சாதிக் அவர்களும், நண்பர் ராஜாராம் அவர்களும் இன்றுகூட பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்து விட்டு, கோட்டூர்புரம் பகுதிக்கும் சென்று வந்து விவரங்களைக் கூறினார்கள்.

கோட்டூர்புரத்தில் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் 1974 ஆம் ஆண்டு தொடங்கி, 1976 ஜூன் மாதம் முடிவுற்ற கட்டிடங்களில் ஒரு கட்டிடம் இடிந்து விழுந்து அதில் 24 குடியிருப்புகள் சேதமுற்றிருக்கின்றன.

அதுபற்றி விசாரணை செய்து அறிக்கை தருமாறு அரசாங்க சார்பில் ஒரு குழு நியமிக்கப்பட்டிப்பது தேவையான ஒன்றேயாகும்.

இதற்கிடையே 'குமுதம்' போன்ற சில ஏடுகள், கோட்டூர் புரத்தில் கட்டப்பட்ட ஆயிரத்துக்கு மேற்பட்ட குடிசைமாற்று வாரிய வீடுகளுமே தரைமட்டமாகி விட்டதைப் போலக் கேலிச் சித்திரம் வரைந்து நிலைமையைக் குழப்பித் தங்களுக்குத் தாங்களே மன நிம்மதி கொள்கின்றன.

அதே குமுதம் ஏட்டில் வெளிவந்துள்ள கட்டுரையில்

"மழை ஓய்ந்து நாலு நாட்கள் ஆன பிறகும் பார்க்க வேதனையாக இருந்த பகுதிகளில் ஒன்று வியாசர்பாடி" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"சுமார் நாலாயிரம் குடிசைகள் இங்கு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு உள்ளே கால் வைக்க இயலாமல் சகதியாகிக் கீழே சாய்ந்து விட்டன" என்றும் குமுதம் எழுதியிருக்கிறது.

அதே இதழில், குமுதம் அலுவலகத்தில் உள்ள இயந்திரங் களும், தாள்கட்டுக்களும் தண்ணீரில் மூழ்கியிருக்கிற புகைப் படமும் வெளியிடப்பட்டிருக்கிறது.

நாங்கள் நேரிலே சென்று பல பகுதிகளைப் பார்த்தபோது ஐ. சி. எப். தொழிலாளர்களுக்கு அண்ணா நகருக்கு அருகே கட்டித் தரப்பட்டுள்ள நூற்றுக்கு மேற்பட்ட "காங்ரீட்" வீடுகள், தண்ணீருக்குள் அமிழ்ந்து கிடந்த காட்சியைக் கண்டோம்.

சென்னை நகரிலும், நகரைச் சுற்றிலும் பல பகுதிகளில் பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவதியுற்றிருக்கின்றனர்.

கடந்த ஆண்டுகளில் சென்னையில் குடிசை மாற்று வாரி யத்தின் சார்பில் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட குடியிருப்புக்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

எங்கே, குடியிருப்பு கட்டுவதானாலும் அங்குள்ள குடிசைவாழ் மக்கள் அங்கிருந்து வேறுபகுதி குடியிருப்புக்களுக்குச் செல்ல விரும்புவதில்லை. தங்களுடைய தொழில்களை முன்னிட்டு, தங்கள் குடிசைகள் இருந்த பகுதியிலேயே குடியிருப்புக் கட்டிடங்களை விரும்புகிறார்கள்.

இவ்வளவு குடியிருப்புப் பகுதிகளிலும் மக்கள், தங்களைப் பாதுகாத்துக் கொண்டதோடு, குடிசையிழந்த மக்களுக்கும் அந்தப் பகுதிகள் இந்த வெள்ள நேரத்தில் பயன்பட்டிருக்கின்றன.

குடிசை மாற்று வாரியத்தின் அவசியத்தை உணர்ந்த காரணத்தால்தான் இன்றுள்ள அரசு தொடர்ந்து அந்த வாரியப் பணிகள் நடைபெற வழிவகைகளை வகுத்துள்ளது என்பதை மறந்து விடக்கூடாது.

துயரமிகுந்த இந்த வெள்ளக் கொடுமையில் துயர் தணிப்பு முயற்சிகளில் அரசியலைக் கலக்க வேண்டாம் என்று அரசுத் தரப்பில் கூறப்பட்டிருப்பதை ஏனோ, சில ஏடுகள் மறந்து விட்டன.

கோட்டூர்புரத்தில் பெரும் சீமான்கள் வீடுகள் எல்லாம் கூட இருக்கின்றன. அவைகள் கூட தண்ணீரால் சூழப்பட்டுத்தான் இருந்திருக்கின்றன.

வீட்டு வசதி வாரியத்தின் 24 குடியிருப்பு அடங்கிய ஒரு கட்டிடம்தான் விழுந்திருக்கிறது. அதன் காரணத்தையும் குழு, ஆராய்கிறது. அங்கே ஒரு பிள்ளையார் கோயில் கூட இடிந்து விழுந்து நொறுங்கிக் கிடப்பதை ஏடுகள் படமெடுத்து வெளியிட்டிருந்தன.

தண்ணீர் - மென்மையானதுதான்! ஆனால் அது வெள்ளமாகச் சீறும்போது மிக வன்மையானதாக மாறி விடுகிறது. அதன் வேகத்தைத் தடுப்பது சாதாரணமல்ல.

எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்பட்ட வெள்ளம் இது!

சென்னையில் பல பகுதிகள், ஏற்கனவே ஏரிகளாக இருந்தவைதான்-இன்று நகரப் பகுதிகளாக மாறியிருக்கின்றன.

நடந்ததை எண்ணி, இனி எதிர்காலத்துக்கு ஏற்ற திட்டங்களைத் தீட்ட அரசு எடுக்கும் முடிவுகளுக்கு ஆலோசனையும் ஒத்துழைப்பும் வழங்குவதை விடுத்து; இதிலும் கழகத்தைக் காய்வதற்கு வாய்ப்பு கிட்டாதா என்று குமுதம் போன்ற ஏடுகள் ஏங்கி நிற்பது வேடிக்கையானது - வேதனையானதுங்கூட!

அன்புள்ள,

மு. க.

06-12-1976

336. ஒவ்வொருநாளும் - நினைவு நாளே!

உடன்பிறப்பே,

அண்ணன் தம்பி இரண்டுபேர், அன்பால் பிணைக்கப் பட்டவர்கள். பள்ளியொன்றில் பயின்று கொண்டிருந்த அந்த இளைஞர்களுக்குத் தங்கள் தந்தையைக் காண வேண்டுமென்று ஆவல் எழுந்தது. தந்தையோ வேறு ஒரு ஊரில் பணியாற்றி வருகிறார். அந்த ஊருக்குச்செல்ல முதலில் புகைவண்டியில் ஏற வேண்டும். பிறகு புகைவண்டி நிற்கும் ஊரிலிருந்து நடந்தோ அல்லது மாட்டு வண்டியிலோ செல்ல வேண்டும். தாங்கள் வரும் நாளைக் குறித்துத் தந்தைக்குக் கடிதம் எழுதிவிட்டு, அதேபோலத் தந்தையும் குறிப்பிட்ட ரயிலடிக்கு வந்திருப்பார் என்று எதிர்பார்த்து அண்ணனும் தம்பியும் பயணம் புறப்பட்டார்கள்.

குறித்த நேரத்தில் தந்தைக்குக் கடிதம் கிடைக்காததால் அவர் ரயிலடிக்கு வரவில்லை. அதனால் ஏமாற்றமடைந்த அந்தச் சகோதரர்கள், ஒரு மாட்டு வண்டியை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு அதில் தங்கள் தந்தையிருக்கும் ஊர் நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

வழியில் வண்டிக்காரன் அந்தச் சிறுவர்களைப் பற்றிய விபரங் களையெல்லாம் கேட்டுக் கொண்டே வண்டியை ஓட்டினான். அவர்களும், வண்டிக்காரன் தங்கள் மீது கொண்டுள்ள அக்கறையை வியந்தவாறு தங்களைப்பற்றிச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். இரு இளைஞர்களும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உண்மையையும் அவர்கள் வண்டிக்காரனுக்குத் தெளிவு படுத்தினார்கள்.

தாழ்த்தப்பட்ட இனம்-என்ற வார்த்தை காதில் விழுந்ததுதான் தாமதம்; உடனே வண்டிக்காரன் புலியாக மாறினான், அவனுக்கு எதிரே அந்த இரு இளைஞர்களும் மான் குட்டிகளாகக் காட்சியளித்தனர். எரிமலைக் குழம்பு போல் அவன் வாயிலிருந்து

சொற்கள் புறப்பட்டன. வண்டியை அப்படியே குடை சாய்த்து அந்த இளந்தளிர்களைக் கீழே தள்ளி மண்ணில் உருட்டினான். நெருப்பில் விழுந்த மலர்களைப்போல் அந்தச் சகோதரர்களின் முகமும் அகமும் மாறின.

"பாவிப் பயல்களே! தாழ்த்தப்பட்ட உங்களை ஏற்றியதால் என் வண்டியின் தூய்மையே கெட்டு விட்டதே!" என்று வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு அவர்களையும் கடித்துக் குதறத்துடித்தான்.

சாதி வெறிபிடித்த அந்த வண்டிக்காரனிடமிருந்து எப்படியாவது தப்ப வேண்டுமென்று இரு இளைஞர்களும் அவனிடம் தந்திரமாகப் பேசி ஏற்கனவே ஒத்துக்கொண்டதைவிட வண்டிக்கு அதிக வாடகை தருவதாகக்கூறி அவனை வசப்படுத்தினார்கள். அதற்கு ஒத்துக்கொண்ட வண்டிக்காரன், ஒரு நிபந்தனை விதித்தான்.

வண்டியில் தம்பி உட்கார்ந்துகொள்ள வேண்டும். அண்ணன் வண்டியை ஓட்ட வேண்டும். அவர்களோடு வண்டியில் உட்காருவது சாஸ்திர விரோதம் என்பதால், வண்டிக்காரன் வண்டியின் பின்னால் நடந்தே வர வேண்டும்.

இந்த நிபந்தனையை ஏற்றுக்கொள்ள அந்தச் சகோதரர்கள் மறுக்கவில்லை என்றாலும் இளையவனின் இதயத்தில் அந்த நிபந்தனையில் அடங்கியிருக்கிற சாதி ஆணவத்தின் கழுத்தை என்றைக்காவது ஒருநாள் முறித்தே ஆகவேண்டும் என்ற உணர்ச்சி கொழுந்துவிட்டுக் கிளம்பியது.

அவர்களின் பயணம் தொடர்ந்தது. வழியில் அவர்களுக்குத் தாகம் ஏற்பட்டது. சாதியின் காரணமாக யாரும் அவர்களுக்குத் தண்ணீர் வழங்கத் தயாராக இல்லை. இறுதியாகத் தந்தையின் வீட்டை அடைந்து தங்களுக்கு ஏற்பட்ட அவமானகரமான அனுபவத்தைக் கண்கலங்கச் சொன்னார்கள். அதைக்கேட்டு இளைஞர்களின் தந்தையார் விழிகளில் நீர்பெருக்கெடுக்க அழுதார்.

உடன்பிறப்பே, அப்படி அழுத தந்தையின் பெயர்-இராம்சி!

அந்த இராம்சிக்குப் பதினான்கு குழந்தைகள் பிறந்தார்கள்.

பதினாலாவது குழந்தைக்குப் பெயர்தான் பீமராவ் இராம்சி என்பதாகும்!

அந்தப் பீமராவ் இராம்சியும் அவரது அண்ணனும் தான் வண்டிக்காரனின் சாதி ஆணவத்தால் அவமானப்படுத்தப் பட்டவர்கள்.

பீமராவ் இராம்சி என்பவர் யார் என்று தெரிகிறதா?

இந்திய நாட்டில் தலைவிரித்தாடிய சாதிக் கொடுமையின் மண்டையில் பெரிய சம்மட்டிக் கொண்டு தாக்குதல் நடத்திய டாக்டர் அம்பேத்கர்.

அம்பேத்கர் என்று அவருக்கு எப்படிப் பெயர் வந்தது என்பதே மிக உணர்ச்சிகரமான சரித்திர நிகழ்ச்சியாகும்.

அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் பீமராவ் இராம்சி என்பது. அந்தக் காலத்தில் தங்கள் பெயருக்குப் பின்னால் தங்கள் முன்னோர் பிறந்த ஊரின் பெயரையும் இணைத்துக்கொள்வது வழக்கமாயிருந்தது. அதற்கேற்ப அவர் "பீமராவ் இராம்சி அம்பாவதேகார்" என்று அழைக்கப்பட்டார். "அம்பாவதே" என்பது அவரது முன்னோர் பிறந்து வாழ்ந்த ஊரின் பெயராகும்.

"அம்பாவதேகார்" என்பது "அம்பேத்கர்" என்று எப்படி மாறியது?

அவர் படித்த உயர்நிலைப்பள்ளியில் உயர் வகுப்பைச் சேர்ந்த ஆசிரியர் மாணவர் அனைவருமே அவரை மிக இழிவாக நடத்தினர். பார்ப்பன குலத்தில் பிறந்த ஆசிரியர் ஒருவர் அந்தப் பள்ளியில் இருந்தார். அவர், இவரிடம் மிகுந்த அன்பு காட்டி சம உரிமை கொடுத்துப்பழகினார். அந்த ஆசிரியரின் பெயர் அம்பேத்கர் என்பதாகும்.

எத்தனையோ பெரும் எதிர்ப்புக்கிடையே தன்னிடம் பேரன்பு செலுத்திய அந்த ஆசிரியர் பெயரான "அம்பேத்கர்" என்பதைத் தன் பெயருடன் இணைத்துக்கொண்டு பீமராவ் இராம்சி அம்பேத்கராகத் திகழ்ந்தார். இது தனது ஆசிரியருக்குக் காட்டிய நன்றியின் அடையாளம் என அவர் நவின்றார்.

சாதி என்பது ஒரு அமைப்பே தவிர, தனிப்பட்டவர்களை எதிர்ப்பதால் அந்த அமைப்பு சரியாது - எனவே சாதி எனும்

அமைப்பையே எதிர்த்துத் தகர்க்க வேண்டும் என்பதற்கு; அம்பேத்கரின் இளம் வாழ்க்கையில் தோன்றிய ஆசிரியரும் - வண்டிக்காரனும் சான்றுகளாக விளங்குகிறார்கள் அல்லவா?

நன்றிக்கு இலக்கணமாகத் திகழ்ந்த அந்த நல்லவர்தான், நமது இந்தியாவின் அரசமைப்புச் சட்டத்தையே உருவாக்கிய வல்லவராக வளர்ந்தார்.

மதத்தின் பெயரால் - கடவுளின் பெயரால் - கட்டுக்கதைகளின் பெயரால் - மக்களை மாக்களாக்கிடும் கொடுமைகளை எதிர்த்துப் போர் வாள் தூக்கினார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் ஒளிவிளக்கேற்றும் தலைவனாகப் பீடு நடை போட்டார்.

புரட்சிகரமான சீர்திருத்தச் சிற்பியான அவர் இறுதியில் புத்த மார்க்கமே தனது புதிய பாதைக்கும், புரட்சிக் கருத்துக்களுக்கும் ஏற்ற மார்க்கமெனக் கொண்டு அதில் இணைந்தார்.

1956 ஆம் ஆண்டு டிசம்பர் பதினாறாம் நாள் அவர் பிறந்த மராட்டிய மண்டிலத்தில் பத்து லட்சம் தாழ்த்தப்பட்ட மக்கள், புத்த மதத்தில் சேருவார்கள் என்று அறிவித்தார்.

அதற்குள் டிசம்பர் ஆறாம் நாள் அவர் நம்மை விட்டுப் பிரிந்தார்.

இந்தியாவில் உள்ள எல்லா எதிர்க்கட்சிகளையும் இணைத்து "குடியரசு கட்சி" எனும் புதிய கட்சியை அவர் தொடங்கி, அந்த முயற்சியில் முழு வெற்றி பெறுவதற்குள் அவர் மறைந்துவிட்டார்.

அந்த அறிவுலகப் புரட்சி மேதையின் நினைவுநாள் டிசம்பர் ஆறாம் நாள் என்றாலும்-ஒடுக்கப்பட்ட மக்கள் விழித்தெழும் ஒவ்வொருநாளும் அவர் நினைவு நாளேயாகும்.

அன்புள்ள,

மு. க.

07-12-1976

337. ஏற்றுக்கொண்ட கருத்து! எச்சரிக்கையாகாது!!

உடன்பிறப்பே,

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் மத்திய உள்துறை அமைச்சர் மாண்புமிகு பிரம்மானந்த ரெட்டி அவர்கள் உரை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, மொழி, கலாச்சாரம் குறித்து பெருமைப்பட எவருக்குமுள்ள உரிமை, வேற்றுமையிலும் ஒற்றுமை, சகிப்புத் தன்மை, இணக்கம், பிற்போக்கு சக்திகளையும் புறங்கண்டு பகுத்தறிவையும் விஞ்ஞான அறிவையும் வளர்ப்பது, ஆகிய அரும்பெருங்கருத்துக்களை உள்ளடக்கி மாணவர்கள், நாட்டின் எதிர்காலத் தலைவர்களாகவும் வழிகாட்டிகளாகவும் விளங்க வேண்டுமென்ற ஆர்வத்தையும் உள்துறை அமைச்சர் அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்.

பட்டமளிப்பு விழா உரையில் அரசியல் ஒளிச்சுடர் காட்டப் படுவது ஏற்கத்தக்க ஒன்றேயாகும். திருவள்ளுவர் யாத்த திருக் குறளில் அரசியலுக்கென அதிகாரங்களே ஒதுக்கப்பட்டிருப்பதை மறந்துவிடுவதற்கில்லை.

திரு. ரெட்டியார் அவர்கள், பொதுவாக இளைய தலை முறைக்குத் தேவையான எண்ணங்களை எடுத்துச் சொல்லி ஆற்றியுள்ள உரையை சில நாளேடுகள் அரசியல் உரை என்பதற்கு மாறாக; அரசியல் கட்சி உரை என்பதுபோலத் தலைப்புத் தந்து கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டிருப்பது வியப்புக்குரியதாக இருக்கிறது.

“அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் தி. மு. க. பற்றி மத்திய மந்திரி எச்சரிக்கை”

என்பதாகத் தலைப்புச் செய்திகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அவரது பட்டமளிப்பு விழாப்பேருரையின் எந்த இடத்திலும்

தி. மு. க. என்று குறிப்பிடப்படவில்லை. அவரது கட்சி மேடைகளில், அவர் - தி. மு. க. பற்றி விமர்சிக்கிறார்; அதை அரசியல் ரீதியாக நாமும் அணுகுகிறோம். ஆனால் அதற்கு மாறாக அவர், பல்கலைக் கழகப் பட்டமளிப்பு உரையில் குறிப்பிடாத ஒரு கட்சியின் பெயரைத் தேவையில்லாமல் அவரது பேச்சின் தலைப்பாக மாற்றி, தங்களுக்கு தாங்களே மன ஆறுதல் பெறும் போக்கு நல்லதல்ல என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

> "மொழிகளில் மட்டுமின்றி மதம், இனம், வட்டாரம் போன்ற நமது வேறுபாடுகள் அனைத்திலும் முளைத் துள்ள பிரிவினைச் சக்திகள் தேச ஒற்றுமையையும் பலத்தையும் பலவீனப்படுத்த முயல்கின்றன"

நமது கழகத்தைப் பொறுத்தவரையில் இதற்கு எள் அளவு மாறுபாடான கருத்தும் கொண்டவர்களல்ல நாம் என்பதைப் பல நேரங்களில் எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

> "தமிழ் இலக்கியச் செல்வம், பல நூற்றாண்டு களுக்கு முந்தியது. தமிழ் மக்களின் மதிப்புமிக்க பாரம்பரியத்தையும், உண்மையில் நமது நாட்டின் பாரம்பரியத்தையும் அது பிரதிபலிக்கிறது. மொழி, கலாச்சாரம் குறித்துப் பெருமைப்பட எவருக்கும் உரிமை உண்டு. ஆனால் அந்தப் பற்று வட்டாரக் காழ்ப்புணர்ச்சியாக மாறிவிடக் கூடாது."

உள்துறை அமைச்சர், தனது உரையில் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ள கருத்தும் நமக்கு உடன்பாடான ஒன்றேயாகும்.

நாம் வரவேற்று மகிழத்தக்க கருத்துக்களை உள்துறை அமைச்சர் கூறியிருக்கும்போது; தி. மு. க. வுக்கு எச்சரிக்கை செய்தார் என்று செய்தியைத் திரிக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது?

> "வள்ளுவர், கம்பர் போன்ற தமிழ்ப்புலவர்கள், இந்தியா முழுவதுக்கும் சொந்தமானவர்கள்"

பட்டமளிப்பு பேருரையில் திரு. ரெட்டியார் அவர்கள் பெருமிதத்துடன் எடுத்தியம்பியுள்ள இந்தக் கருத்தும் 'நமக்கு' இனிக்கும் கருத்துத்தான்! தமிழ்நாட்டில் மாத்திரமன்றி இத்தகைய இலக்கிய மேதைகளை, அறவுரை கூறிய சான்றோர்களை, இந்தியா முழுமையும் போற்றிப் பாராட்டி, சிறப்பு செய்ய வேண்டுமென்பது

நமது நெடு நாளைய அவாவாக இருந்து வருகிறது. அதற்கு வலிவூட்டும் வண்ணம், மத்திய அமைச்சர் அவர்களின் பேச்சு அமைந்திருக்கிறது என்றே கூற வேண்டும்.

> "பிற்போக்கு சக்திகளை முறியடிக்க ஒரே வழி, மக்களிடம் பகுத்தறிவையும், விஞ்ஞான உணர்வையும் வளர்ப்பதேயாகும்"
>
> இதுவும் அவரது பேருரையில் ஒரு முக்கியமான பகுதியாகும்.

பகுத்தறிவு இயக்கத்தின் பின்னணியில் வளர்ந்தவர்களாகிய நமக்கு, விஞ்ஞான உலகின் விரைவான வளர்ச்சியில், மூட நம்பிக்கைகளின் காரணமாகப் பின் தங்கியிருக்கும் சமுதாயத்தைத் திருத்திப் புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்த வேண்டுமென்று நீண்ட காலமாக இயக்கம் நடத்தும் நமக்கு மிகுந்த ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிக்கக் கூடிய உரையாகும் அது!

நாம் ஏற்றுக்கொண்டுள்ள கருத்துக்கள் நமக்கு எச்சரிக்கையாக முடியாது என்பதை மட்டும் அந்தச் சில ஏடுகளுக்குத் தெரிவித்துக் கொள்வது நமது கடமையாகும்.

அன்புள்ள,

மு. க.

09-12-1976

338. ஒருமித்த கருத்து உருவாக...!

உடன்பிறப்பே,

முக்கியமான அலுவல்களின் காரணமாக இத் திங்கள் 11, 12 நாட்களில் முறையே வடஆற்காடு மாவட்டத்திலும், கர்நாடகத் தலைநகரிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சிகளை, நான் ஒத்திவைக்க நேர்ந்துள்ளது குறித்து நமது தலைமைக் கழகப் பொறுப்பாளர் சாதிக் அவர்கள் அறிவித்துள்ளதைப் பார்த்திருப்பாய்.

அப்படியென்ன முக்கியமான வேலை என்று நிகழ்ச்சிகளை மெத்தவும் ஆர்வத்துடன் ஏற்பாடு செய்த ஆருயிர் உடன் பிறப்புக்கள் ஏக்கமுறுவர் என்பதை நான் அறியாதவனல்ல.

வழக்குகள் பற்றிய வேலையாக இருக்குமோ என்று எண்ணிடக்கூடும். அதுதான் காரணமென்றால், ஞாயிற்றுக்கிழமை பெங்களூர் நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கத் தேவையில்லையே என்ற விளக்கமும் முந்திக்கொள்ளும். வழக்குகளைப்பற்றி வழக்குரைஞர்களுடன் கலந்துரையாடல், அவற்றின் தொடர்பான பணிகளில் ஈடுபடுதல் முக்கியமான அலுவல்கள்தான் எனினும், அவைகளின் காரணமாக அந்த நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப் படவில்லை.

வேறு சொந்த வேலைகளின் காரணமாக இருக்குமோ- என்று யாரும் எண்ணிடமாட்டார்கள் என்பது எனக்கு நன்றாகவே தெரியும்.

சொந்த வேலைகளுக்காகக் கழகக் கூட்டங்களை ஒத்தி வைக்கும் வழக்கத்தை நானோ, நமது கழகத் தலைமை முன்னணி யினரோ மேற்கொண்டதில்லை என்பதை நீ நன்கு அறிவாய்.

கௌகத்தி காங்கிரஸ் மாநாட்டில் இந்தியப் பிரதமர் அவர்கள் "எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை" குறித்து சில கருத்துக்களை

வெளியிட்டதையொட்டி நமது கழகத்தின் சார்பில் கொண்டுள்ள எண்ணங்களை உனக்கு எழுதிய இரண்டொரு கடிதங்களில் குறிப்பிட்டிருக்கிறேன்.

ஏற்கனவே, நமது செயற்குழு, பொதுக்குழு, மாநாடுகள் ஆகியவற்றில் "பேச்சுவார்த்தைகளின் வாயிலாகப் பிரச்சினைகளுக்கு சுமுக முடிவு காணலாம்" என்பதை தீர்மானங்கள் மூலம் சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

அந்தத் தீர்மானங்களை நினைவுபடுத்தித்தான் உனக்குக் கடிதங்களை எழுதினேன்.

பிரதமரின் கௌகத்திப் பேச்சு பற்றி, நாம் நமது கருத்துக்களை வெளியிட்டது போலவே-வேறு பல கட்சித் தலைவர்களும், அரசியல் கணிப்பாளர்களும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

பிரதமருடன் பேச்சுவார்த்தைக்கான வாய்ப்பு ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாகுமேயானால்-அப்போது எதிர்க்கட்சிகளின் சார்பில் இரு சாராருக்கும் உடன்பாடான கருத்துக்களை விவாதிப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்ற அடிப்படையில் தி. மு. கழகத்தின் சார்பில் சிந்திக்கப்பட்டது.

அதற்கிடையே தனித்தனி அபிப்பிராயங்கள் எழுவதால் பேச்சுவார்த்தையின் மூலம் ஏற்படக்கூடிய நல்விளைவுகளுக்குத் தடங்கல் ஏற்பட்டுவிடக்கூடாது என்பது கழகத்தின் எண்ணமாகும்.

எனவே, எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் முதலில் ஒரு இடத்தில் கூடிக் கலந்து விவாதித்து; பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்த எந்த அடிப்படையில் அணுகுவது என்பதில் ஒருமித்த கருத்துக்கு வருவதே சிறந்தது எனக் கழகம் கருதியது.

இந்தக் கருத்தின் அடிப்படையில் அனைத்திந்திய அளவில் உள்ள எதிர்க் கட்சிகளின் தலைவர்களைக் கழகச் சார்பில் அணுகியதில், அவர்களிடமிருந்து இந்த முயற்சிக்கான ஊக்கமும் உற்சாகமும் கிடைத்துள்ளது.

சென்னைக்கோ, வேறு பகுதிகளுக்கோ கட்சிகளின் தலைவர்கள் வருவது என்பதில் பயணச் சிரமங்கள் இருக்குமென்பதால் டெல்லியிலேயே அந்தக் கலந்துரையாடல் கூட்டத்தை வைத்துக் கொள்ளலாமென்று முடிவு எடுக்கப்பட்டு

வரும் 15ஆம் நாளன்று டெல்லியில் நண்பர் இரா. செழியன் அவர்கள் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முக்கிய எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்ள ஒப்புதல் தந்துள்ளார்கள்.

அந்தக் கலந்துரையாடல் கூட்டம், எந்த ஒரு எதிர்க்கட்சியின் தனிப்பட்ட சிக்கல்கள், பிரச்சினைகளை முன்வைத்து நடைபெறப் போகிற கூட்டமல்ல!

"இந்தியாவின் வலிவும் வளமும் ஓங்கிடவும் காப்பாற்றப்படவும் எதிர்க்கட்சிகள் எப்படி ஒத்துழைக்கப் போகின்றன?" என்று பிரதமர் அவர்கள் எழுப்பியுள்ள கேள்வியின் அடிப்படையிலே-பிரதமர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த எத்தகைய ஒருமுகமான போக்கை வடித்தெடுப்பது என்பதே அந்தக் கூட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

அந்தக் கூட்டத்தில் நானும், நண்பர்கள் ராஜாராம், இரா. செழியன் ஆகியோரும் கலந்துகொள்கிறோம்.

அந்தக் கூட்டத்திற்கு வருகைதர ஒப்புதல் தந்தவர்களோடு தொடர்பு கொள்ளவும், அந்தக் கூட்டம்; சுமுகமான நிலைமையை ஏற்படுத்திடத்தக்க வகையில் அமைந்திடவும் ஆற்றிடவேண்டிய பணிகளைத்தான் "முக்கியமான வேலை" என்று குறிப்பிட்டு வடஆற்காடு, பெங்களூர் நிகழ்ச்சிகளை ஒத்திவைத்திருக்கிறேன்.

இந்த விளக்கத்திற்குப் பிறகு, நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்தமையால் வேதனையுற்ற உடன்பிறப்புக்கள் என்னைப் பொறுத்தருள்வார்கள் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

மு. க.

10-12-1976

339. மறுபரிசீலனை செய்ய வேண்டுகிறேன்!

உடன்பிறப்பே,

டெல்லியில் வரும் 15-ஆம் நாளன்று நடைபெற இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் யாரும் கலந்துகொள்ளப் போவதில்லையென்று அந்தக் கட்சியின் தலைவர்கள் அறிவித்துப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

> "அந்தக் கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சித்தலைவர்கள் கலந்து கொள்வார்கள் என்றும் அதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளார்கள் என்றும் கருணாநிதி கூறியிருப்பதை ஈ. எம். எஸ். நம்பூதிரி பாட்டும், பி. ராமமூர்த்தியும் மறுத்துள்ளனர்"

என்று சில மாலை இதழ்களில் செய்திகள் திரித்து வெளியிடப் பட்டிருப்பதையும் நான் கண்டு வியப்படைந்தேன். எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு நான் அழைப்பு மடல்கள் அனுப்பியது உண்மை. எந்தக் கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் விளக்கியிருக்கிறேன். 'சமாசார்' நிறுவனத்திலிருந்து என்னைக் கேட்டபோதுகூட மார்க்சிஸ்ட் தலைவர்கள் ஈ. எம். எஸ். அவர்களுக்கும், பி. ராமமூர்த்தி அவர்களுக்கும் அழைப்பு அனுப்பியுள்ளேன், இன்னும் அவர்களிடமிருந்து எனக்குப் பதில் மடல் எதுவும் வரவில்லை என்றுதான் விடையளித்திருக்கிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, கலந்து கொள்வதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளது என்று நான் யாருக்கும் கூறவில்லை.

நான் கூறாத ஒன்றை, இட்டுக்கட்டிச் சில ஏடுகள் வெளியிட்டு "ஆகா, கருணாநிதி தவறான தகவல்கள் தந்துவிட்டார். மார்க்சிஸ்ட் கட்சி மறுத்து விட்டது பாரீர்" என்று சிறிது நேரம் மகிழ்ச்சி அடைவதில் அவைகளுக்கு ஒரு ஆறுதல்! எரிச்சலை அடக்கிக் கொள்ள இந்த மருந்தாவது கிடைத்ததே என்ற திருப்தி!

டெல்லியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்கள் கலந்துகொள்ள இயலாத காரணத்தை எனக்கு ஒரு பதில் மூலம் தெரிவிக்கா விட்டாலும், ஏடுகளுக்குத் தந்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். அதுபற்றி வாதப் பிரதிவாதங்களில் இறங்கிட நான் விரும்பவில்லை.

ஒவ்வொரு கட்சிக்கும் உள்ள தனித்தன்மைகளையோ - கொள்கை மாறுபாடுகளையோ முன்னுக்கு வைக்காமல் - எதிர்க்கட்சிகள்கூடி தங்களுக்குள் ஒரு உடன்பாடான கருத்தை உருவாக்கிக் கொண்டு அந்தக் கருத்தின் அடிப்படையில் பிரதமர் அவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதின் வாயிலாக சுமுகச் சூழ்நிலையை ஏற்படுத்தலாம் என்கின்ற ஒரே விருப்பத்தோடுதான் இந்த முயற்சி, தி. மு. கழகத்தின் சார்பில் தொடங்கப்பட்டுள்ளது.

“மக்களைப் பாதிக்கும் எந்தப் பிரச்சினை மீதும் எந்தக் கட்சியோடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சி ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது,”

என்று திரு. பி. ராமமூர்த்தி அவர்கள் கூறியுள்ள கருத்தின் அடிப்படையிலேதான், டெல்லிக் கூட்டத்திற்கு மார்க்சிஸ்ட் உள்ளிட்ட மற்ற எதிர்க்கட்சிகளுக்கெல்லாம் அழைப்பு அனுப்பப் பெற்று ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

டெல்லிக் கூட்டம், எதிர்க்கட்சிகளுக்குள்ளே உள்ள உறவு - கொள்கை உடன்பாடு - இவைகளைப் பற்றி விவாதிப்பதற்காக அல்ல!

பிரதமர் அவர்கள் கௌகத்தி மாநாட்டில் எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தைக்கான வாய்ப்பு எப்போது அமைய முடியும் என்ற அடிப்படையில் கூறியுள்ள கருத்துக்களை எதிர்க்கட்சிகள் கலந்து பேசி ஒருமுகமான வகையில் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்து வதற்கான நிலைமையை எப்படி உருவாக்கலாம் என்பதற்கா கத்தான் டெல்லியில் 15 ஆம் நாள் கூட்டம் நடைபெற இருக்கிறது என்பதை அழைப்பு மடலிலேயே சுட்டிக் காட்டி யிருக்கிறேன்.

எனவே இதை ஒரு முக்கியமான பொதுப்பிரச்சினையாகக் கருதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி ஒத்துழைப்புத் தரும் என்று நாங்கள் எண்ணியதில் தவறில்லை.

உடன்பிறப்பே, உனக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன். மறந்திருக்க மாட்டாய். 1975-ஆம் ஆண்டு நவம்பர் 18, 19 ஆகிய இருநாட்களில் சென்னை பெரியார் திடலில் பெரியவர் மணலி கந்தசாமி தலைமையில் ஒரு மாநாடு தி. மு. கழகத்தின் சார்பில் நடத்தப்பட்டது. அந்த மாநாட்டின் பெயர் பாசீச எதிர்ப்பு மாநாடு.

அந்த மாநாட்டில் கலந்து கொண்டவர்கள்-அதாவது ஒரே மேடையில் நின்று கருத்துக்களை வழங்கியவர்கள் யார் யார் என்ற பட்டியலை எண்ணிப்பார்த்தேன்.

நமது கழகச் சார்பில் நான், நாவலர், பேராசிரியர், டி. கே. சீனிவாசன், ராஜாராம், ஆசைத்தம்பி, மாதவன், இரா. செழியன், எஸ். எஸ். மாரிசாமி, முரசொலி மாறன் ஆகியோரும் வழக்கறிஞர், மாத்ருபூதம் போன்றவர்களும் உரையாற்றினோம்.

மற்ற கட்சிகளின் சார்பில் கலந்து கொண்டவர்களின் பெயர்கள் பின்வருமாறு:

- ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட் மார்க்சிஸ்ட் கட்சி
- டாக்டர் சந்தோஷம் பி. எல். டி.
- வி. பி. சிந்தன் மார்க்சிஸ்ட்
- சுப்பிரமணியம் சர்வோதயா
- சிலம்புச்செல்வர் தமிழரசுக் கழகம்
- வீரமணி திராவிடர் கழகம்
- ஏ. ஆர். பெருமாள் பார்வர்டுபிளாக்
- லத்தீப், பீர்முகமது முஸ்லிம் லீக்

நினைவுகள் அந்த மாநாட்டை நோக்கி ஓடின. நினைவுகளுக்குக் கடிவாளமிட்டு நிறுத்திவிட்டு வேறு பணியைப் பார்க்க முடியுமா? அந்த நினைவின் தொடர்ச்சியாகத்தான் இப்போது நாம் விரும்புகிற சுமுக சூழ்நிலை ஏற்படுவதற்கான பேச்சு வார்த்தைகளின்போது அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்க பொதுவான முடிவுகளை எடுக்க எதிர்க்கட்சிகள், தங்கள் தனித்த பிரச்சினைகளை முக்கியத்துவப்படுத்தாமல் கூடிக் கலந்து பேச வேண்டுமென்று விரும்பியதற்கேற்ப அழைப்புக்களை அனுப்பியுள்ளோம்.

மெத்த மகிழ்ச்சி தெரிவித்து நிறுவனக் காங்கிரஸ் கட்சியின் அனைத்திந்தியத் தலைவர் திரு. அசோக் மேத்தா அவர்கள் கடிதம் எழுதியிருப்பதோடு கூட்டத்தில் கலந்து கொள்வதாகவும் ஒப்புதல் அளித்துள்ளார்.

பி. எல். டி. கட்சியின் தலைவர் திரு. சரண்சிங் அவர்கள் லக்னோவிலிருந்து கொடுத்துள்ள தந்தியில் 15-ந்தேதி கூட்டத்தில் கலந்து கொள்ளச் சம்மதம் தெரிவித்துள்ளார்.

சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவர் திரு. கோரே அவர்கள் பம்பாயிலிருந்து தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு டெல்லிக் கூட்டத்திற்கு வருவதற்கான ஒப்புதலைத் தெரிவித்துள்ளார்.

ஜனசங்கம், அகாலிதளம், புரட்சி சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர்களும் அன்றைய கூட்டத்தில் கலந்து கொள்கிறார்கள். ஜனசங்கத்தின் சார்பில் ஒ. பி. தியாகி, யு. பி. படேல் ஒப்புதல் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கூட்டம், தேர்தல் உடன்பாடு போன்ற பிரச்சினைகளுக்காகக் கூட்டப்படுகிற கூட்டமல்ல! இந்தக் குறிப்பிட்ட கட்சிகளின் வேலைத் திட்டங்களை வகுப்பதற்காகக் கூட்டப்படுகிற கூட்டமும் அல்ல! இவை அனைத்தையும் கடந்த பொதுப் பிரச்சினை ஒன்றுக்காக நடத்தப்படுகிற கூட்டம்.

ஆகவே, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர்கள் தங்கள் முடிவை மறு பரிசீலனை செய்ய நேரமில்லாமல் போய் விடவில்லை. செய்வார்கள் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

12-12-1976

340. ‘அகில்’ என விளங்கிடுவோம்!

உடன்பிறப்பே,

சிலர் நமது கழகத்தைத் தாக்கி எழுதுவதையும் பேசுவதையும் கண்டு சில நேரங்களில் நீ வருந்துகிறாய் அல்லவா? நீண்ட காலமாக மாற்றுக் கட்சி அணியிலே இருப்பவர்களைக் காட்டிலும் மிக வேகமாகவும் கடுமையாகவும் நம்மைத் தாக்குகிறவர்கள் அண்மைக் காலம் வரையில் நம்முடன் அண்ணன் தம்பிகளாய்ப் பழகியவர்கள்தான்! அவர்கள் நெருப்புமிழும் சொற்களை நம்மீது வீசுகிறார்கள். நாவினால் சுடுகிறார்கள். நாம் அழிவது ஒன்றே-அல்லது நம்மை அழிப்பது ஒன்றே - தாங்கள் பிறவி எடுத்தமைக்குரிய பெருமையாகும் எனக் கோடையிடி கிளப்புகிறார்கள்!

பழகிய பாசம் -

பெற்றிருந்த நேசம் -

அனைத்தையும் மறந்து அனலிடை நம்மைத் தள்ளிவிட்டு ஆனந்த பள்ளுப் பாடிடத் துடிக்கிறார்கள். அவர்கள் என்னதான் எழுதினாலும் பேசினாலும் நாம் நமது அரசியல் பண்பாட்டிலிருந்து விலகிக்கொண்டு அவர்களைப் போலவே பதிலுக்குச் சுடுகணைகளைத் தொடுத்திடப் போவதில்லை.

பழங்காலத்தில் மலைப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் தினை விதைப்பதற்கு ஏற்றவகையில் நிலங்களைச் செம்மைப்படுத்துவார்களாம். அதற்காக அந்தப் பகுதியில் உள்ள மரங்களுக்குத் தீ வைப்பார்களாம். தீப்பிடித்து எரியும் மரக் கூட்டத்திற்கிடையே அகில்களும் இருக்குமாம். அந்த அகில் மரக்கட்டைகள் எரிந்தாலும் கூட, அதன் மணம் அவற்றை எரித்தவர்களின் வீடுகளுக்கும் பரவி மகிழ்வூட்டுமாம்.

"நறை அகில் வயங்கிப

நளி புன நறும் புகை

உறை அறு மையின் போகி....."

குறுந்தொகைப் பாடல் ஒன்று இவ்வாறு தொடங்குகிறது.

எரிக்கப்பட்ட பல மரங்கள், கருகிடும் வாடையை வீசுகின்றன.

ஆனால் **அகில்** மரக்கட்டையோ, எரித்தவர்கள் மீது ஆத்திரம் கொள்ளாமல், தன் இயல்புக்கு ஏற்ப அவர்கள் இல்லமெலாம் மணம் பரப்பி இன்பத்தை வழங்குகிறது.

தீயிட்டுக் கொளுத்துகிற போதும் பதிலுக்கு மணம் வழங்குகிற **அகிலைப்** போல, நம்மைத் தீ நாக்குகளால் சுடுகிறவர்களுக்கும் நாம் "**அகில்**" போல விளங்கிடுதலே நாம் கற்ற அரசியல் நாகரிகமாகும். அதனை எந்த நிலையிலும் இழந்திடாமல் காப்பதுதான் அண்ணன் வழியில் நாம் நடந்திடுகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

அன்புள்ள,

மு. க.

13-12-1976

341. வானொலியார் கவனத்திற்கு!

உடன்பிறப்பே,

நமது சென்னை வானொலியில் நாட்டுத் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளையும், புலவர்கள், மேதைகள், விஞ்ஞானிகள், சீர்திருத்தச் செம்மல்கள் ஆகியோரின் சரித்திரக் குறிப்புக்களையும் அடிக்கடி பல்வேறு கோணங்களில் ஒலிபரப்பி வருவது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

அத்தகைய அறிஞர்கள், ஆற்றல் படைத்தவர்களின் வாழ்க்கைப் பாதையை இளந்தலைமுறையினர் பின்பற்ற வேண்டுமென்பதற்காக - அவற்றைப் பாடல்கள் வாயிலாகவும், ஓரங்க நாடகங்களாகவும், உரையாடல் நிகழ்ச்சிகளாகவும் அமைந்திடுவதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

இந்த நிகழ்ச்சிகளுக்கு மாணவர்கள் பங்குகொள்ளும் வகையினையும் கடைப்பிடித்து வருகிறார்கள்.

நான் அடிக்கடி இத்தகைய 'வானொலி' நிகழ்ச்சிகளை விருப்பத்துடன் கேட்பதுண்டு.

12-12-76 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-15 மணி அளவில் தொடங்கி, பாரதியார், அம்பேத்கர், இராஜாஜி ஆகியோர் பற்றிய மாணவர்களின் உரையாடல் நிகழ்ச்சிகளை வானொலி நடத்தியதையும் நான் ஆர்வத்துடன் கேட்டேன்.

அந்த உரையாடல் நிகழ்ச்சிகளில் ஏற்பட்ட சில குறைகளை நான் சுட்டிக் காட்டுவதால் அடுத்தடுத்த நிகழ்ச்சிகளில் அவைகள் திருத்தப்படும் என்று இதயமார நம்புகிறேன்.

ஏனெனில் வானொலி நிலையத்தில் ஆர்வமும், அறிவுத் திறனும், குறைபாடுகள் சுட்டிக் காட்டப்படும்பொழுது திருத்திக் கொள்கிற பண்பும் படைத்தவர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் நன்று அறிவேன்.

ஞாயிறன்று பிற்பகல் நடைபெற்ற உரையாடல் நிகழ்ச்சியில் "அம்பேத்கருக்கும் அம்பத்தூருக்கும்" தொடர்பு ஏற்படுத்தி ஒரு கருத்து வெளிப்படுத்தப்பட்டது, அது எவ்வளவு பொருத்த முடையது என்று எனக்குப் புரியவில்லை.

அதைத் தொடர்ந்து இராஜாஜியின் வரலாற்றை இரண்டு மாணவர்கள் "கேள்வி பதில்கள்" என்ற முறையில் விளக்கினார்கள்.

கேள்வி:-

இராஜாஜிக்கு ஏன் சக்ரவர்த்தி என்ற பட்டப் பெயர் வந்தது?

பதில்:

அவர் சக்ரவர்த்தித் திருமகன் என்ற ஒரு நூல் எழுதினார்! அதனால் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி என்று பட்டம் கொடுக்கப்பட்டது.

இது ஒரு நகைச்சுவைக் காட்சியாக சித்தரிக்கப்பட்டிருந்தால் நாமும் கூட ரசித்திருக்கலாம். அப்படியல்ல! இராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றைத் தெளிவான முறையில் இளைஞர்களுக்கு வழங்கவேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் நடத்தப்பட்ட அந்த ஒலிபரப்பில் இப்படித் தவறான தகவல்கள் இடம்பெறக் கூடாதல்லவா?

இராஜாஜியின் மூதாதையர் குடும்பத்துக்குச் சக்ரவர்த்தி குடும்பம் என்ற அடைமொழியே உண்டு. இரண்டு நாட்களுக்கு முன்புகூட காந்தியடிகள் - இராஜாஜி ஆகியோரின் பேரப்பிள்ளை யான ராஜ்மோகன் காந்தி எழுதியுள்ள கட்டுரையொன்றில் "நீண்ட காலத்துக்கு முன்பு வாழ்ந்த இராஜாஜியின் மூதாதை நல்லான் சக்ரவர்த்தி" என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்த உண்மைக்குப் புறம்பாக மாணவர்களின் வானொலி உரையாடல் நிகழ்ச்சியில் "சக்ரவர்த்தி திருமகன்" என்ற இராஜாஜி எழுதிய நூலை இணைத்து, அதனால்தான் அவருக்குச் "சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்" என்று பெயர் எனக் குறிப்பிடப்பட்டது பெருங்குறையாகும்.

அதைப்போலவே மற்றொரு தவறு! அந்த மாணவர் இராஜாஜியின் சாதனைகளை வேகமாக அடுக்கிக் கொண்டே சென்றபோது;

"மதுவிலக்கைத் தமிழ்நாட்டில் ஒழித்தவர் இராஜாஜி!"

என்று அழுத்தம் திருத்தமாக உரத்த குரலில் வானொலியில் முழங்கினார். அதைக் கேட்டுக்கொண்டிருந்த நான் திடுக்கிட்டுப் போனேன்.

"மதுவை ஒழித்தவர் இராஜாஜி"

என்று கூறுவதற்குப் பதில், "மதுவிலக்கை ஒழித்தவர்" என்று கூறியதால் எவ்வளவு விபரீதமான பொருள் ஏற்படுகிறது என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

வானொலி நிலையத்தில் 12-12-76 ஞாயிறு பிற்பகல் நிகழ்ச்சிகளின் ஒலிப்பதிவு நாடாக்கள் இருக்கும். அவைகளை மீண்டும் இயக்கிப் பார்ப்பார்களேயானால் நான் சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை உணர்ந்துகொள்ள முடியும்.

மாணவர் நிகழ்ச்சிகள் மேலும் நல்ல முறையில் நடக்க வேண்டும் என்ற அக்கறையுடன் எழுதப்பட்ட கருத்துக்கள்தானே தவிர, வேறு நோக்கத்துடன் நான் இவற்றைக் குறிப்பிடவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

14-12-1976

342. அள்ளக் குறையாத செல்வம்!

உடன்பிறப்பே,

குறுந்தொகையில் ஒரு காட்சி! குருத்து மூங்கில் ஒன்றைப் பிடித்துத் தன் துதிக்கையால் காட்டு யானை யொன்று வளைத்துக் கொண்டிருக்கிறது. தினைப்புனத்தைக் காவல் புரியும் ஆட்கள் அதைப் பார்த்து விடுகிறார்கள். குருத்து மூங்கில் வளைந்து ஒடிந்து விடக்கூடாதேயென்று கருதி அந்த யானையை விரட்டக் கவண் கற்களை விடுகிறார்கள்.

கவண் கல் பட்டதும் யானை, மருண்டு போய் அந்த மூங்கில் குருத்தினை விட்டு விட்டு ஓட்டமெடுத்தது.

யானையின் துதிக்கையிலிருந்து விடுபட்ட அந்த மூங்கில் குருத்து எப்படி வேகமாக மேல் நோக்கி நிமிர்ந்து கொண்டது தெரியுமா?

பழந்தமிழ்ப் புலவர், எவ்வளவு அருமையான உவமையின் வாயிலாக அந்தக் காட்சியை விளக்குகிறார் என்பதைப் பார்!

ஆற்றிலோ, குளத்திலோ தூண்டில் போட்டு மீன் பிடித்துக் கொண்டிருக்கிறான் ஒருவன். தூண்டிலின் முள்ளில் உள்ள இரையை விழுங்கிட ஏமாளி மீன் ஒன்று வருகிறது. அது, இரையை உண்ணப் போய் முள்ளில் சிக்கிக் கொள்கிறது. அது சிக்கியதுதான் தாமதம்; உடனே அந்தத் தூண்டில்காரன் தூண்டிலை வேகமாகத் தூக்குகிறான். மீன் சிக்கியதும் தூண்டில் எவ்வளவு வேகமாகத் தண்ணீரை விட்டு மேலே எழும்புகிறதோ; அதைப் போலக் கவண் கல்லால் தாக்கப்பட்ட யானையின் துதிக்கையிலிருந்து விடுபட்ட மூங்கில் குருத்தும் மேலே எழும்பியதாம்!

தூண்டில் கயிற்றையும், மூங்கில் குருத்தையும்-உவமை நயம் திகழ, உயர் தமிழின் இனிமை தவழ, ஒப்பிட்டுக் காட்டும் அந்த ஒப்பற்ற புலமையைப் புகழ்வதற்கு இந்த ஒரு மடல் போதாது உடன்பிறப்பே; நிச்சயம் போதாது!

தூண்டிலில் பட்ட மீன்போலத் துடிக்கிறாளாம் காதலி யொருத்தி. அவள் இதயத்தைக் கொள்ளை கொண்ட இனியன் அவளை வந்து காணாத காரணத்தால் அவள் சோகப் பதுமை யாகிறாள். அந்தக் காதல் காட்சியை விளக்கத்தான் புலவர் இந்தப் பாடலை எழுதுகிறார். ஆனால் நமது கவனமெல்லாம் அந்தத் தோகையாள் மீதும் செல்லவில்லை. அல்லது அவளைத் துடிக்கவிட்டுப் பிரிந்து சென்ற அந்த ஆணழகன் மீதும் செல்லவில்லை. அந்த உயிரோவியங்களைவிடக் கவிஞர் பெருமான் தீட்டிக் காட்டியுள்ள 'உவமை ஓவியம்' நம் நெஞ்சைக் கவருகிறது. ஈர்க்கிறது. நினைப்பை வேறெங்கும் பாயவிடாமல் அப்படியே நெஞ்சில் பதியவைத்து விடுகிறது.

"யானே ஈண்டையேனே; என் நலனே
ஏனல் காவலா கவண்ஒலி வெரீ இக்
கான யானை கைவிடு பசுங் கழை
மீன் எறி தூண்டிலின் நிவக்கும்
கானக நாடனொடு, ஆண்டு, ஒழிந்தன்றே."

இந்தச் சிந்தைக்கு விருந்தளிக்கும் செந்தமிழ்த் தேனமுதப் பாடலைப் பாடிய புலவரின் இயற்பெயர் என்ன? தேடியும் கிடைக்கவில்லை. நம்மைப் போலவே குறுந்தொகைப் பாடல் களைத் தொகுத்தவர்களும் அவர் இயற் பெயரைத் தேடி அலுத்துவிட்டனர் போலும்!

அதனால் இதைப் பாடிய புலவருக்கு அவர் வழங்கிய உவமையின் அடிப்படையிலேயே "மீனெறி தூண்டிலார்" எனப் பெயர் சூட்டியுள்ளனர்.

தமிழ் இலக்கியக் கருவூலத்தில் இத்தகைய அள்ள அள்ளக் குறையாத செல்வத்திற்குக் குறைவே இல்லை.

அன்புள்ள,

மு. க.

15-12-1976

343. பஞ்சாப் வாஞ்சிநாதன்!

உடன்பிறப்பே,

டெல்லி செல்லும் வழியில் தமிழ்நாடு விரைவு புகைவண்டிப் பெட்டியில் இருந்தவாறு இந்தக் கடிதத்தை உனக்கு எழுதுகிறேன். 14-12-76 காலை 'ஜான்சி' என்னுமிடத்தில் புகைவண்டி நின்றபோது செய்தி ஏடுகள் வாங்க முடிந்தது. அந்த ஏடுகளில் என்னை மிகவும் கவர்ந்து விட்ட செய்தியொன்று காணப்பட்டது. இந்திய நாட்டு விடுதலைக்காக ரத்தம் சிந்திய இளங்காளை ஒருவனைப் பற்றிய செய்தியாகும் அது!

நாளிதழ் கிடைத்த ஊரின் பெயரும் 'ஜான்சி' என்கிறபோது, அந்த வீர வாலிபனின் வரலாற்றைத் தெரிந்து கொள்வதில் புதிய எழுச்சியும் உணர்ச்சியும் ஏற்படுவது இயற்கைதானே!

அறுபத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்து நாட்டில் தூக்கில் தொங்கவிடப்பட்டுப் புதைக்கப்பட்ட அந்த விடுதலை வீரனின் உடல் இப்போது இந்தியாவுக்கு எடுத்து வரப்பட்டு பஞ்சாபில் ஈமக்கடன்கள் நிறைவேற்றப்படுகின்றன.

13-12-76 அன்று டெல்லிக்குக் கொண்டு வரப்பட்டு பஞ்சாப் மாளிகையில் வைக்கப்பட்டிருந்த அவனது சவப்பெட்டிக்குப் பிரதமர் அவர்கள் மலர் வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்திய புகைப்படங்களை இங்குள்ள ஏடுகளில் காண முடிந்தது.

அந்த மாவீரன் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவன். அவன் பெயர் "ஷகீத் மதன்லால் திங்ரா" என்பதாகும்.

1909-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 17-ஆம் நாள் இலண்டன் மாநகரத்து "பெண்டோவிலே" சிறைச்சாலையில் தூக்குமேடைக்கு முத்தமளித்துவிட்டு, புன்னகை மலர்ந்த முகத்துடன் அவன் தன் உயிரைத் தியாகம் செய்கிறான்.

அமிர்தசரசில்; வசதியும் வளமும் மிக்க குடும்பத்தில் உதித்தவன்தான் அந்த தீரன்.

அமிர்தசரசில் தன்னுடைய படிப்பை முடித்துவிட்டு, லாகூர் கல்லூரியில் அறிவுச் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளச் சென்றான். கல்லூரிப் படிப்புக்குப் பிறகு அரசாங்க வேலையிலே கூட சில நாட்கள் சேர்ந்து வாழ்க்கையைத் தொடங்கினான்.

பொறியியல் துறைப் பயிற்சி பெறும் விழைவுடன் 1906-ஆம் ஆண்டு இலண்டன் சென்று அங்குள்ள யூனிவர்சிடி கல்லூரியில் தன்னை இணைத்துக் கொண்டான்.

வேலை பார்த்த சில நாட்களிலும் சரி, கல்வி பயின்ற நாட்களிலும் சரி, அவன் இதயத்தை இந்திய நாட்டு விடுதலைப் போர் நிகழ்ச்சிகள் ஈட்டிகொண்டு தாக்கிக் கொண்டிருந்தன. விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்ட தியாகச் செம்மல்களை ஆங்கிலேய ஆதிக்க வெறியர்கள், தூக்கிலிட்டுக் கொன்ற சம்பவங்கள் அவன் நெஞ்சைக் குலுக்கிய வண்ணம் இருந்தன. அவனது உள்ளத்தில் அமைதி இல்லை. வெளித்தோற்றத்தில் அதைக் காட்டிக் கொள்ளாமல் ஊமை போல உலவிக் கொண்டிருந்தான்.

இலண்டனில் உள்ள "இந்தியா இல்லம்" என்ற இடத்தில் அவன் சவர்க்காரைக் காணவும், பழகவும் அவரது கருத்துக்களைக் கேட்கவும் வாய்ப்புக்களைப் பெற்றான். லாலா லஜபதிராய் போன்ற விடுதலை வீரர்களைக் காணும் வாய்ப்பும் அவர்கள் உரைகளைக் கேட்கும் வாய்ப்பும் அவனுக்குக் கிட்டியதுண்டு.

அவன் யாரிடமும் அதிகம் பேசாமல்-அதே நேரத்தில் இந்தியத் திருநாட்டில் மூண்டெழுந்துள்ள சுதந்திரக் கிளர்ச்சியைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

அப்போது அவன் நெஞ்சில் சம்மட்டி அடிகள் விழுவது போன்ற செய்திகள் இந்திய மண்ணிலிருந்து அடுக்கடுக்காக வந்தன. ஆம்; விடுதலைப் போரில் ஈடுபட்ட ஆறு வீரர்கள் ஆங்கிலேய அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு இந்தியாவில் தூக்கிலிடப்பட்டார்கள் என்ற செய்திதான் அது! செந்தீயாக மாறிற்று அவன் விழி! பழி தீர்க்கப் புறப்பட்டான். அப்போது அவனுக்கு வயது இருபத்திரெண்டுதான்.

அவனுடைய பார்வை, இங்கிலாந்தில் இந்தியாவின் செயலாளருக்கு அரசியல் மெய்க்காப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த "சர். வில்லியம் கர்சன் வீலி" என்பவர் மீது விழுந்தது.

அந்த வில்லியம் கர்சன், ஒரு காலத்தில் தன் குடும்பத்தாருக்கு நண்பராகக் கூட இருந்தவர்தான். அதெல்லாம் அவன் நினைவுக்கு வரவில்லை.

இந்தியாவில் தூக்கிலிடப்பட்ட தியாகிகளுக்குப் பதிலாக அவர் உயிரைப் பறிக்க வேண்டுமென்று குறிவைத்தான்.

1909-ஆம் ஆண்டு ஜூலை முதல் நாள் இலண்டனில் இந்தியர்கள் நடத்திய விழா ஒன்றுக்கு சர். வில்லியம் கர்சன் அழைக்கப்பட்டிருந்தார். ஆங்கிலேய அரசின் விசுவாசமுள்ள இந்தியப் பெருமக்கள் சிலரால் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவாகும் அது! அந்த நிகழ்ச்சிக்கு "ஷகீத் மதன்லால் திங்ரா"வும் வந்திருந்தான். மகிழ்ச்சிகரமாக நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு விழாவுக்கு வந்தவர்களிடம் வில்லியம் கர்சன் பிரபு கை குலுக்கி விடைபெற்றுக் கொண்டபோது, அவருக்கு உலகத்திலிருந்தே விடை கொடுத்தனுப்பினான் வீர இளைஞன் "திங்ரா!"

அவனது கைத்துப்பாக்கி கர்சனின் உயிரைக் குடித்தது. ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்ற வீர வாஞ்சிநாதனைப் போல, அவனும் தன்னை அதே இடத்தில் சுட்டுக் கொண்டு உயிர்விட முயன்றான். அதற்குள் அந்தச் சிங்கம் பிடிபட்டு விட்டது.

ஜூலை 23-ஆம் நாளன்று இலண்டன் நீதிமன்றம் அவனுக்குத் தூக்குத்தண்டனை வழங்கிற்று. அந்தத் தீர்ப்பு வழங்கிய நீதிபதிக்கு அந்த இளைஞன் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டான்.

அவனுடைய இறுதியான மரண சாசனத்தைப் படிப்பதற்கு நீதிமன்றம் அனுமதிக்கவில்லை.

அதில் அவன் கடைசியாகக் குறித்துள்ள வார்த்தைகள் அழியா வரம் பெற்றவைகளாகும்.

> "என்னுடைய பிரார்த்தனையெல்லாம் நான் மீண்டும் இதே தாயின் வயிற்றில் பிறக்க வேண்டும். என் தாயின் விலங்குகள் அகற்றப்படும் வரையில் நான் அதே

குறிக்கோளுக்காக உயிரிழக்க வேண்டும்.”

இப்படியொரு வாஞ்சிநாதனை, அமிர்தசரஸ் ஈன்றெடுத் திருக்கிறது. அவன் உயிர் போக்கப்பட்டு, இலண்டனில் புதைக்கப் பட்டு அறுபத்தேழு ஆண்டுகள் ஆகிவிட்டன.

இப்போது, அந்த உடல் தோண்டப்பெற்று பஞ்சாப் மண்ணுக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

குடியரசுத் தலைவர் மேன்மைமிகு பக்ருதீன் அலி அவர்கள்,

“நாட்டின் விடுதலைக்காகப் போரிட்டு தியாகம் புரிந்த வீரர்களை நினைவில் நிறுத்த வேண்டுவது நமது தவறாத கடமையாகும்.”

என்று 11-12-76 அன்று விடுத்த செய்தியில் “தீரன் திங்ரா”வைப் பற்றிக் கூறியிருக்கிறார்.

“திங்ரா, அடிமை இந்தியாவிலிருந்து இங்கிலாந் துக்குச் சென்றான். இன்று அவனது உடல் சுதந்திர நாட்டுக்கு வந்துள்ளது.”

என்று, பஞ்சாப் ஆளுநர் மேதகு சௌதாரி அவர்கள், செய்தி யொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

இதில் நான் எழுதியுள்ள அத்தனை விபரங்களும் எனக்கு ஜான்சியில் கிடைத்த “நேஷனல் ஹெரால்டு” என்ற ஆங்கில இதழிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

அந்த வீரனின் நினைவாகப் பஞ்சாபில் பெரியதோர் நினைவுச் சின்னம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்றும் செய்திகள் வந்துள்ளன.

அந்த முயற்சியைப் பாராட்டுகிற நேரத்தில் - வீர வாஞ்சிக்கும், என்றும் மறவாத நினைவுச் சின்னமொன்றினை அமைத்திட வேண்டும் என்ற நமது ஆசையை மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்துவது எனது கடமையன்றோ?

அன்புள்ள,

மு. க.

17-12-1976

344. டெல்லிப் பயணம்!

உடன்பிறப்பே,

டெல்லியில் எதிர்க்கட்சிகளின் சார்பில் நடைபெற்ற இரண்டு கூட்டங்களிலும் கலந்து கொண்டு விட்டு, நானும் நண்பர்கள் ராசாராம், செழியன் ஆகியோரும் இன்று 18-12-76 காலை சென்னை திரும்பி விட்டோம். இன்று புகைவண்டி ஒரு மணி நேரம் தாமதமாகத்தான் வந்து சேர்ந்தது. இறங்கியவுடன் இல்லம் சென்று பணிகளைக் கவனிக்க முடியாத அளவுக்கு புகைவண்டி நிலையத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் சிக்கிக் கொண்டேன். எனவே ரயிலடியிலிருந்து பத்தரை மணி அளவில்தான் கிளம்ப முடிந்தது. நேராக சைதாப்பேட்டை நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டியிருந்தது. கொலை செய்ய முயன்றதாக - அந்த நீதிமன்றத்தில் என் மீதும் மற்றும் கழகத்தினர் சிலர் மீதும் ஒரு வழக்குத் தொடரப்பட்டிருக்கிற விபரங்களைத்தான் நீ அறிவாயல்லவா; அதனால் விளக்கத் தேவையில்லை.

நீதிமன்ற நடவடிக்கைகள் முடிந்ததும் 'அன்பகம்' வந்தடைந்தேன். நாவலர், பேராசிரியர் மற்றும் கழக முன்னணியினரிடம் டெல்லியில் நடைபெற்ற இரண்டு நாள் கூட்டங்களைப் பற்றிய நிகழ்ச்சிகள் அனைத்தையும் விளக்கிச் சொன்னேன்.

டெல்லிப் பயணம் மேற்கொண்டது ஏன் என்பதை நான் ஏற்கனவே கடிதங்கள் வாயிலாகவும் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டிகள் வாயிலாகவும் விளக்கியிருக்கிறேன்.

எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு நான் விடுத்திருந்த அழைப்பு மடலில் எந்தப் பொருள் பற்றி விவாதிக்கப் போகிறோம் என்பதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறேன். அது முரசொலி முதலிய ஏடுகளில் வெளி வந்துள்ளது. அந்தக் கருத்தின்

அடிப்படையிலேதான் கழகத்தின் சார்பில், எதிர்க் கட்சித் தலைவர்களிடம் தொடர்ந்து நடைபெற வேண்டிய பேச்சு வார்த்தைகளுக்கான முயற்சியின் தொடக்க நாளாக அந்த நாள் 15-12-76 அமைய வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

> "கௌகத்தி மாநாட்டில் இந்தியப் பிரதமர் அவர்கள் ஆற்றிய உரையினிடையே எதிர்க் கட்சிகளுடன் பேச்சு வார்த்தைக்கான வாய்ப்பு எப்போது அமையும் என்பது குறித்து அறிவித்துள்ள கருத்து அனைவரும் அறிந்ததேயாகும்; அது குறித்து எதிர்க் கட்சிகளின் நிலை என்ன என்பதை நாட்டு மக்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பதும் இயல்பேயாகும். நிபந்தனைகள் இரு தரப்பிலிருந்தும் எழுப்பப்பட்டு அவைகளை இரு தரப்பாரும் நிறைவேற்ற உடன்பட்ட பிறகே பேச்சு வார்த்தைக்கு இணங்க முடியுமென்று வாதிப்பது நடைமுறைக்கு ஒவ்வாததாகி விடும் என்பது என் தாழ்மையான கருத்தாகும். அரசாங்கம் என்ன கருதுகிறது என்பதையும் எதிர்க்கட்சிகளின் எந்தவிதமான போக்கு மாற்றப்பட வேண்டுமென்று விரும்புகிறது என்பதையும் நாடு, வலிவும் வளமும் பெற்றிட எதிர்க்கட்சிகள் எவ்வாறு ஒத்துழைக்க வேண்டுமென்பதையும் பேச்சு வார்த்தையில் கருத்துப் பரிமாற்றங்களின் வாயிலாகத் தான் தெரிந்து கொண்டு அதற்கேற்ப ஒரு முடிவுக்கு வர முடியும்."

இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வதில் எதிர்க் கட்சிகளிடையே ஒரு நாள் முழுவதும் விவாதம் நடைபெற்று, இறுதியாக அரசுடன் பேச்சு வார்த்தைக்குத் தயாராக இருப்பதாக ஒரு மனதான முடிவு எடுக்கப்பட்டு, முன் நிபந்தனைகள் எதுவுமில்லாத நிலையில் பேச்சு வார்த்தைக்கு உடன்படுவதே சுமுகமான சூழ்நிலைக்கு வழிகோலும் என்பதும் விளக்கப்பட்டு விட்டது.

எதிர்க்கட்சிகள், தங்கள் நிலையை விளக்கி ஒரு கருத்துரையை வெளியிட வேண்டுமென்றும் முதல் நாள் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

அந்தக் கருத்துரை தயாரிக்கப்பட்டு, 16-12-76 காலையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலருடைய பார்வைக்கு அனுப்பப்பட்டு -

அன்று மாலை திரு. எச். எம். படேல் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் அந்தக் கருத்துரையின் வரைவினை வைத்துக் கொண்டு கலந்துரையாடி பிறகு அதற்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு வெளியிடப் பட்டுள்ளது.

முதல் நாள் கூட்டம், அரசுடன் பேச்சு வார்த்தை நடத்துவது பற்றியது!

மறு நாள் கூட்டம், இன்றுள்ள அரசியல் நிலைமைகளை ஆராய்வது!

இரண்டும் வெவ்வேறு பொருள் பற்றிய கூட்டங்கள் என்றாலும் ஒன்றுக் கொன்று தொடர்பிருக்கிற காரணத்தினால் தான் முதல் நாள் கலந்து கொண்ட எதிர்க்கட்சிகள், மறுநாள் கூட்டத்திலும் பங்கு கொண்டன.

இரண்டும் வெவ்வேறு பொருள் பற்றிய கூட்டங்கள் என்று எச்.எம். படேல் கூறியதைச் சில ஏடுகள் திசை திருப்பிவிட முயன்றிருக்கின்றன.

16-12-76 அன்று வெளியிடப்பட்டு, பிரதமர் அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கருத்துரையில், "எதிர்க்கட்சிகள் ஜனநாயக செயல்முறைகளில் ஈடுபாடு உள்ளவை. தேசீயப் பிரச்சினைகளைப் பற்றி அரசாங்கத்துடன் பேசவும், குறிப்பாக நாட்டில் அரசியல் வாழ்வை சகஜப்படுத்துவது மிக அவசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்ற இந்தக் கூட்டத்தில் அரசுடன் பேச்சு நடத்த எதிர்க் கட்சிகள் தயாராக இருக்கின்றன" என்று தான் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உடன்பிறப்பே, சில ஏடுகள் நம் முயற்சிக்கு களங்கம் கற்பிக்க முயலுகின்றன.

நாம் நமது வழி - நமது அண்ணன் வகுத்தவழி - அமைதிவழி - பொறுமை வழி - அந்த வழியில் நடந்து கொண்டேயிருப்போம்.

அன்புள்ள,

மு. க.

19-12-1976

345. மகிழ்ச்சிக் கடலாகிறது, மனம்!

உடன்பிறப்பே,

நமது பேராசிரியருக்கு இந்த ஆண்டு டிசம்பர் திங்கள் 19 ஆம் நாள் 55-வது பிறந்தநாள் விழா, ஏறத்தாழ முப்பத்தி நான்கு ஆண்டு காலத் தொடர்பு எனக்கும் அவருக்கும் உண்டு. 1942 ஆம் ஆண்டு 'முரசொலி' இதழின் ஆண்டு விழாவுக்கு நாவலர், பேராசிரியர் இருவரையும் திருவாரூருக்கு அழைத்திருந்தேன். அன்று எங்களிடையே ஏற்பட்ட தொடர்பும் நெருங்கிய நட்பும் காலத்தாலோ அல்லது இடையிலே சிலர் செய்த கலகத்தாலோ ஒரு சிறிதும் ஊனமுறவில்லை என்பதை; உடன் பிறப்பே! நீ மிக நன்றாக அறிவாய்.

"மனதிற்பட்டதை ஒளிக்காமல் துணிந்து சொல்லக் கூடிய தம்பி அன்பழகன்" என்று அண்ணா பல நேரங்களில் எடுத்துக் கூறியிருக்கிறார்.

பொதுத் தொண்டிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வாழ்க்கையிலே மிகவும் நொந்துபோன அவரது அருமைத் தந்தையார்,

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

எனும் குறள் மொழிக்கேற்ப அவரது அன்புச் செல்வங்களை மெத்த இன்னல்களுக்கிடையே வளர்த்தார். அந்தச் செல்வங்களில் - தமிழ்ச் செல்வமாய், தியாகச் செல்வமாய், அறிவுச் செல்வமாய், அன்புச் செல்வமாய், நமக்குக் கிடைத்த பெருஞ் செல்வம் தான் பேராசிரியர் அன்பழகன் அவர்கள்,

எனக்கு இன்னமும் பசுமையான நினைவு இருக்கிறது. திருவாரூரில் நடைபெற்ற ஒரு இஸ்லாமியர் விழாவிற்கு அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்ற வந்திருக்கிறார். "அண்ணா பேசுவார்"

என்று விழாத் தலைவர் அறிவிக்கிறார். அப்போது அண்ணா எழுந்து "எனக்கு முன்பு ஒரு இளைஞர் இங்கு பேச இருக்கிறார். அந்த வளர்பிறையின் உரையினை முதலில் கேளுங்கள். பிறகு நான் பேசுகிறேன்" என்று கூறிவிட்டு அந்த இளைஞரையும் கூட்டத்தாருக்கு அறிமுகப்படுத்துகிறார். அவர்தான் அப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவராக இருந்த அன்பழகன். அன்று துடிப்பு நிறைந்த சொற்களின் சுரங்கமாக விளங்கிய அவர், இன்றைக்கு ஆற்றல் வாய்ந்த கருத்துகளை அள்ளி வழங்கும் கருவூலமாகத் திகழ்கிறார்.

அவசரமான முடிவுகளுக்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்ளாமல் ஆழ்ந்து சிந்தித்து - அதனையும் முக்கிய மாணவர்களுடன் விவாதித்து - அதற்குப் பிறகு ஏற்றுக் கொண்ட எந்த முடிவானாலும் அதற்குக் கட்டுப்பட்டு நடக்கக் கூடிய பண்பு படைத்தவர் அவர்.

அவருடன் நாங்கள் நடத்துகிற விவாதங்களில் சுவையும் இருக்கும். சூடும் இருக்கும். நாவலராகட்டும் நானாகட்டும் - பேராசிரியராகட்டும் - அண்ணா, பெரியார் அணியில் எங்களை ஒப்படைத்துக் கொண்ட இத்தனை ஆண்டுக் காலத்தில் எங்களுக்குள் எழுந்த எந்தக் கருத்து மாறுபாடும் இதயத்தில் அழியாத காயங்களாகவோ, மறையாத வடுக்களாகவோ நிலைத்ததில்லை என்பதை இந்தக் கழகத்தின் வரலாறு சொல்லும்.

அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு - கருணாநிதி, நெடுஞ்செழியன், அன்பழகன் மூவரையும் ஒற்றுமையுடன் இருக்கச் செய்த பெருமை தன்னையே சேரும் என்று ஒரு நண்பர், விழா ஒன்றில் குறிப்பிட்டார்.

அதுபற்றி நான் பேசும் போது; "எங்களை ஒற்றுமைப் படுத்தியதாக யாரும் பெருமை தேடிக் கொள்ள முடியாது. காரணம்; உடன்பாடு கொள்ளுகிற மனப்பக்குவமும், விட்டுக் கொடுக்கிற தன்மையும் எங்களிடையே இல்லாதிருந்தால் எவராலும் எங்களை ஒற்றுமைப்படுத்திட இயலாது. ஆகவே நாங்கள் ஒன்றுபட்டு இருப்பதற்குக் காரணம்; அண்ணா எங்களை வளர்த்த முறையே ஆகும்."

பேராசிரியர், இப்போதெல்லாம் அதிகம் எழுதுவதில்லை. முன்பு நிறைய கட்டுரைகள், நூல்கள் எழுதுவதுண்டு.

பத்து ஆண்டுகட்கு முன்பு அவரைப் பாராட்டி நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் அவரது எழுத்தின் சிறப்பு குறித்து நான் பின் வருமாறு குறிப்பிட்டேன்.

"நாங்கள் உங்களுக்காக எழுதுகிறோம், பேராசிரியர் போன்றவர்கள், எங்களுக்காக எழுதுகிறார்கள்" என்பது தான் அது!

தலைவர் - பொதுச் செயலாளர் - பொருளாளர் என்று மூன்று பொறுப்புகளைக் கழகத்தில் நாங்கள் ஏற்றிருந்தாலும், அமைச்சர்களாகப் பணியாற்றியிருந்தாலும், நாங்கள் பெரியாரின் மாணவர்கள், அண்ணாவின் தம்பிகள் என்ற நிலையில் எங்கள் நெஞ்சங்களை இணைத்துக் கொண்டிருக்கிறோம்.

இதயத்தால் என்றும் பிரியாத எங்களில் ஒருவருக்குப் பிறந்த நாள் விழா என்கிற போது மகிழ்ச்சிக் கடலாகிறது மனம்!

அந்த மகிழ்ச்சியில்
வாழ்த்துகிறேன்;

வாழ்க பேராசிரியர்!
வாழ்க! வாழ்க!!

அன்புள்ள,
மு. க.
20-12-1976

346. தலைத்தாழாத் தத்துவ அறிஞர்!

உடன்பிறப்பே,

இன்றைய கடிதம், ஒரு தத்துவ அறிஞனைப் பற்றியதாகும். உலகில் தத்துவப் பேரறிஞர்கள் பலர் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் எந்தக் காரணத்திற்காகவும் அல்லது எந்தச் சூழ்நிலைக்காகவும் தாங்கள் சரியென்று ஏற்றுக்கொண்ட தத்துவ உண்மைகளை விட்டுக் கொடுக்கத் தயாராக இருந்ததில்லை.

மேல்நாட்டில் தோன்றிய தத்துவ அறிஞர்களில் புகழ்பெற்ற ஒருவரின் பெயர் "ஸ்பினேசா" என்பதாகும்.

மறுமலர்ச்சி யுகத்தைத் தொடர்ந்து கம்பீரமாகத் தனது தத்துவக் கருத்துக்களை வெளியிட்ட சிறப்புக்குரியவர் அவர்.

அறிவியல் குறிக்கோளும், விஞ்ஞான நோக்கமும் கொண்டு அவரது தத்துவக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

கடவுளைப் பற்றியும், சமயங்களைப் பற்றியும் அவர் அறிவித்த தத்துவங்கள், பெரும் எதிர்ப்புக்கு உள்ளாக நேர்ந்தது.

யூத குடும்பத்திலே பிறந்த அவர், யூதர்களாலேயே வெறுத்து ஒதுக்கப்பட்டார். அவர் ஒரு "அறிவு முதற் கொள்கையாளர்" என்று யூதர்களால் விமர்சிக்கப்பட்டு தனிமையாக்கப்பட்டார்.

அப்படி அவர் தனிமையிலே விடப்பட்ட காரணத்தாலே தான் அவருடைய உயர்ந்த தத்துவ விளக்கங்கள் உலகிற்குக் கிடைத்தன என்று, தத்துவ அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு பற்றி எழுதிய மேதைகள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தான் கொண்ட கொள்கைகளுக்காக அந்த 'ஸ்பினேசா' எனும் மேதை எவ்வளவு இன்னல்களுக்கு ஆளாக நேர்ந்தது என்பதை; உடன்பிறப்பே! உனக்குச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

போர்த்துகீசிய நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டு ஆம்ஸ்டர்டாம் என்னுமிடத்தில் வாழத் தொடங்கிய யூதக் குடும்பம் ஒன்றில் தத்துவ அறிஞர் 'ஸ்பினேசா' தோன்றிப் புகழ்க்கொடி நாட்டினார். அவர் பிறந்த ஆண்டு கி.பி. 1632. நாற்பத்தி ஐந்து ஆண்டுகள்தான் அவர் வாழ்ந்தார், செல்வாக்கும் வளமும் வாய்ந்த குடும்பத்திலே பிறந்திருந்த போதிலும், மிகவும் எளிய வாழ்க்கையைத்தான் அவர் மேற்கொண்டார். இளம் பருவத்தில் கல்விப் பயிற்சி முடிந்ததும் தத்துவ ஆராய்ச்சியில் அவர் சிந்தனை சென்றது. அவரது போக்கும், கொள்கைகளும், எடுத்து வைக்கும் தத்துவ விளக்கங்களும் யூதர்களின் சமயக் குழுவிலே இருந்த முதியவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தின.

அந்த இளைஞரை அழைத்து அம்முதியோர் குழுவினர், வினாக்களை அடுக்கி, விளக்கங்களைக் கேட்டனர்.

அவைகளுக்கு இளைஞர் அளித்த பதிலிலேயிருந்து அவருடைய கொள்கைகள் முரட்டுத்தனமும் தீமையும் வாய்ந்தவை என்று குறை கூறி, உடனே அவைகளைக் கைவிட்டு மரபு வழி வந்த பழைய கொள்கைகளை ஏற்றுக் கொண்டு நடக்குமாறு வற்புறுத்தினர்.

அதை ஸ்பினேசா, மறுத்தார். முதியோர் வேறு ஒரு யோசனையைக் கூறினர். உள்ளத்தில் வேறு கொள்கைகள் இருந்தாலும் அவைகளை வெளிப்படையாகச் சொல்லாமல் வெளித் தோற்றத்திற்கு பழைய கொள்கைகளை ஏற்றுக் கொள்வது போல நடித்தால் மட்டும் போதும்; ஆண்டுதோறும் ஒரு கணிசமான தொகையை அவருக்கு வழங்குவதாக உறுதி அளித்தனர்.

"என் தத்துவங்கள், கொள்கைகள், விலை பொருள் அல்ல" என்று ஸ்பினேசா ஆணித்தரமாகப் பதில் அளித்தார். உடனடியாக அவர், யூதர்கள் குழுவிலேயிருந்து விலக்கப்பட்டார். யாரும் அவருடன் உரையாடவோ, அவருக்கு உதவி அளிக்கவோ கூடாது. அவரிடம் செல்வதோ, அவரால் எழுதப்பட்டதைப் படிப்பதோ, அவர் சொல்வதைக் கேட்பதோ கூடாது. இப்படி ஒரு கடுமையான ஆணையை யூதர் சமயக் குழுவினர் பிறப்பித்தனர். இப்படியொரு தண்டனைக்கு ஸ்பினேசா, ஆளாக நேரிட்ட போது அவருக்கு வயது இருபத்தி நான்கு!

அந்த வாலிப வயதினர், தனக்கேற்பட்ட எதிர்ப்பை வசந்த காலமாகக் கருதி மகிழ்ந்தாரே தவிர, வாடிப்போய் விடவில்லை. மதவெறி கொண்ட ஒருவன் அவரை உலகிலேயிருந்து தீர்த்துக் கட்டிவிடவும் முயற்சி செய்தான். அந்தக் கொள்கை வீரர், அதிலிருந்து தப்பி விட்டார்.

யூதர்களின் குழு மட்டுமல்ல; அவர் குடும்பத்தினரே அவரை வெறுத்தனர். அவரைப் பெற்ற தந்தை அவரைத் தன் மகனாக ஒப்புக் கொள்ள முடியாது என்று விரட்டியடித்தார். அந்தத் தந்தையின் மறைவுக்குப் பிறகு ஸ்பினேசாவுக்குச் சேர வேண்டிய சொத்துக்களை அவரது அக்காள் தானே கவர்ந்து கொண்டாள். அதை எதிர்த்து ஸ்பினேசா, வழக்குத் தொடுத்தார். அந்த வழக்கில் சொத்துக்கள் அனைத்தும் அவருக்கே சேர வேண்டுமென்று தீர்ப்பு கிடைத்தது. ஆனால், அவர் அந்தச் சொத்துக்கள் முழுவதையும் தன் அக்காளிடமே திருப்பிக் கொடுத்து விட்டு ஆம்ஸ்டர்டாமிலிருந்து வெளியேறி தனிமையான வாழ்க்கையைத் தொடங்கினார்.

கண்ணாடி வில்லைகளை மெருகேற்றித் தரும் தொழிலை நடத்திக் கொண்டு, வாழ்க்கையின் குறிக்கோளான தத்துவ ஆராய்ச்சியில் தொடர்ந்து ஈடுபட்டார்.

என்புருக்கி நோய் அவரைப் பற்றிக் கொண்டு, உடல் நலத்தைத் தேய்க்கத் தொடங்கியது. அவர் நல்ல உடைகளை அணிவதைக் கூட வெறுத்து ஒதுக்கினார். வசதி படைத்த பலரும் அவரது வாழ்க்கையை மேம்படுத்த முனைந்தனர். அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. நல்ல உடைகளை, ஆடம்பர உடைகளை அளித்தனர். "மட்டமான பொருளுக்கு உயர்ந்த உறைகள் தேவையில்லை" என்று அவர் கூறி, அந்த உடைகளைத் திருப்பித் தந்து விட்டார். மிகப் பெரிய வணிகர் "சைமன்டி விரிஸ்" என்பவர், ஸ்பினேசாவின் அறிவுத் திறனில் உள்ளத்தைப் பறிகொடுத்துத் தன் சொத்துக்கள் முழுவதையும் அவருக்கு எழுதி வைக்க முன் வந்தார். ஸ்பினேசா, அதை மறுத்து விட்டு அந்தச் சொத்துக்களை முறையாக உரிமை உடையவர்களுக்கே எழுதி வைக்குமாறு கூறிவிட்டார்.

பிரஞ்சு நாட்டு மன்னன் பதினான்காம் லூயி, அவரை அழைத்து ஒரு வேண்டுகோள் விடுத்தான்.

"உமது அடுத்த நூலை எனக்கு காணிக்கை என்று குறிப்பிட்டு வெளியிட்டால், நீ விரும்புகிற அளவுக்கு சன்மானம் வழங்குகிறேன்"

லூயி மன்னனின் இந்த வேண்டுகோளுக்கு ஸ்பினேசா அளித்த பதில் என்ன தெரியுமா?

நான் உண்மையாகப் பாராட்ட முடியாத ஒருவரை ஒப்புக்காகப் புகழ்ந்து பரிசு பெற விரும்பவில்லை."

தன்மானமுள்ள அந்தத் தத்துவ அறிஞனின் பதிலைக் கேட்டு பிரஞ்சு மன்னன் லூயி, தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான்.

1673 ஆம் ஆண்டு "ஹைடல்பர்க்" பல்கலைக் கழகம் அவரை அழைத்தது. வழி வழி வந்த சமயக் கோட்பாடுகளைப் பழிக்காமல் இருந்தால் தத்துவ சாத்திரப் பேராசிரியராக அந்தப் பல்கலைக் கழகத்தில் பதவி ஏற்கலாம் என்று ஆசை காட்டப் பட்டுள்ளது.

"நான் கண்ட உண்மைகளைக் கூறுவதற்குப் பட்டினி கிடப்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை."

என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டு, கண்ணாடி வில்லைகளைச் சாணைபிடித்து மெருகேற்றும் தொழிலுக்கே சென்று விட்டார்.

"அறிவியல்", "அறிவு வளர்ச்சி", "அரசியல்", "எபிரேய மொழி இலக்கணம்", போன்ற பல நூல்களை எழுதிய அந்த அறிஞர் கண்ணாடிக்கு சாணைபிடித்து, அதிலே எழுந்த தூசிகள் மூச்சுக் காற்றுடன் உட்கலந்து என்புருக்கி நோயை வளர்த்த போதிலும், கொண்ட கொள்கையை விட்டுச் சிறிதும் வழுவாமல் தன்மான வீரராகத் தலைதாழா மனிதராக விளங்கினார்.

நாற்பத்திஐந்து ஆண்டுகால வாழ்க்கைதான்!

யூதர்களின் குழுவே விரட்டிய போதும் அவர் கலங்கவில்லை.

தந்தையே வெறுத்த போதும் கொள்கைத் தாகம் தணியவில்லை.

சமூகத்திலிருந்து விலக்கப்பட்ட தனி மனிதராக ஆக்கப்பட்ட போதும் நம்பிக்கைத் தளரவில்லை.

பின்னர், பிரஞ்சு நாட்டு அரண்மனையின் வேண்டுகோளுக்கும் மயங்கவில்லை.

'ஹைடல் பர்க்' பல்கலைக் கழகத்தின் பெரும் பதவிக்கும் தன் இலட்சியத்தை விட்டுக் கொடுக்கவில்லை.

கண்ணாடிக்கு சாணை பிடித்தே வாழ்க்கை நடத்தினார். காலக் கண்ணாடியென கருத்துக்களை உலகிற்கு வழங்கினார்.

வாலிப வயதிலேயே சாவைத் தழுவினார் எனினும், சாகாத மனிதர்களில் ஒருவராக நிலைத்துவிட்டார்.

அன்புள்ள,

மு. க.

21-12-1976

347. காடு மணக்கும் கவிதை!

உடன்பிறப்பே,

கடைச்சங்க காலம் வழங்கிய தமிழ்க் கரும்புத் துண்டுகளில் ஒன்றுதான் அகநானூறு. ஆம்; "நெடுந்தொகை" என்றும் அழைக்கப்படுகிற இந்தத் தொகுப்பினைக் கடைச்சங்க காலத்திலே தான் படைத்தளித்தார்கள்.

காவன் முல்லைப்பூதனார் என்பவர் இயற்றிய கற்கண்டுப் பாடல் ஒன்றை உனக்கு நினைவூட்டுகிறேன்.

என்ன இது; கரும்பு - கற்கண்டு என ஏதேதோ ஒரே இனிப்பு மயமாக எழுதத் தொடங்குகிறாய் என்று தானே கேட்கிறாய்?

விரைவில் "பொங்கல் விழா" வர இருக்கிறதல்லவா? கரும்பு, கற்கண்டு, கனி, தேன், பாகு இவையனைத்தும் அந்த இனிய விழாவுக்குச் சுவை கூட்டுமன்றோ?

அன்புப் பேழையாம் ஆருயிர்க் காதலியைப் பிரிந்து சென்ற காதலன், காட்டு வழியே திரும்பி, அவளைக் காணத் துடிக்கிறான்.

அவன் துடித்து விட்டுப் போகட்டும்; அந்தத் துடிப்பு பற்றியே திரும்பத் திரும்ப எழுத விரும்பவில்லை நான்.

அவன் கடந்து தீர வேண்டிய காட்டுவழி, எத்தகையது என்பதைப் புலவர் எவ்வாறு சிறப்பித்துக் கூறுகிறார் என்பதை மட்டும் எத்தனைமுறை படித்தாலும் தெவிட்டுவதில்லை.

பருந்துகள் முட்டையிட்டு அடை காப்பதற்கு ஏற்றதும், ஓமை மரங்களால் சூழப்பட்டதுமான குகையொன்றில் பெண் நாய் ஒன்று குட்டிகளை ஈன்றெடுத்துக் களைத்துப் படுத்திருக்கிறது. குட்டிகளைக் காத்து நிற்கும் பெண் நாயின் பசிக் கொடுமையை அருகே இருக்கும் ஆண் நாய் உணருகிறது. "நாதா எனக்குப்

பசி எடுக்கிறது" என்று நாய் கேட்டிருக்கும்? முடியாதல்லவா? குறிப்பால் உணருகிறது. உணர்ந்தவுடன், தன் காதலிக்கு இரை தேடக் கிளம்புகிறது. எதிர்ப்படும் ஆண் பன்றி ஒன்றின் மீது பாய்கிறது. அந்தப் பன்றி வீழ்கிறது. அது கண்டு அந்தப் பன்றியுடன் இணைந்திருந்த பெண் பன்றி உராய்வதால் அசைந்திடும் ஈந்தின் செங்காய்க் குலைகள் உதிருகின்றன. உதிர்ந்த காய்களின் முற்றிய விதைகள் பரவிக் கிடக்கும் வன்மையான நிலம், அந்தக் காட்டு நிலம், அந்த வன்னிலத்தைக் கிணறு தோண்டுகிற தொழில் மேற்கொண்டுள்ள "கூழ் ஆர் கூவலர்" என்போர் கிணறுகளை உருவாக்குந் தாலி எனும் கருவிகளைக் கொண்டு ஆழப் படுத்துகின்றனர். வன்னிலமானதால் எவ்வளவு ஆழமாகத் தோண்டியும் கூட தண்ணீர் கிட்டவில்லை. எனவே அவர்கள் அந்த முயற்சியைக் கைவிட்டு, ஆழ் குழிகளை அப்படியே விட்டுவிட்டுப் போய் விடுகின்றனர்.

அந்தக் குழிகளின் வாயைக் காட்டுத் தழைகளும், கிளைகளும் மூடிக் கொண்டிருக்கின்றன.

யானைக் கூட்டமொன்று தம் கன்றுகளுடன் அவ்வழியே வருகிறது. அவற்றின் பார்வையில் அந்தத் தழை மூடிய குழிகள் பட்டுவிடுகின்றன.

"ஓகோ! நம்மை ஏமாற்றிக் குழியிலே விழவைத்து பிறகு பிடித்துக் கொள்ளும் நோக்கத்துடன் வேட்டுவர்கள் தழை பரப்பிய குழிகளைத் தயாரித்துள்ளனர்" என்று யானைகள் எண்ணுகின்றன.

அந்தக் குழிகளைத் தூர்த்து தங்கள் யானை இனத்தைக் காப்பாற்ற அங்குள்ள பெருங் கற்களையெல்லாம் அந்தக் குழிகளிலே தள்ளித் தூர்த்து விட்டுச் செல்கின்றன.

அப்படித் தூர்ப்பதற்குப் பயன்பட்ட பெருங் கற்கள் கிடக்கும் வழியாகும் அந்தக் காட்டு வழி!

உடன்பிறப்பே, கவிஞர் காடு பற்றித்தான் கூறுகிறார். அதிலும் எத்துணைக் கவிநயம்! காட்சி அழகு! இயற்கையின் செழிப்பு! இவற்றை விளக்கும் தமிழின் சிறப்பு!

பருந்து முட்டையிடும் இடத்தில் நாய் குட்டி போடுகிறது. பசிக்கு இரை தேட நாய், ஆண் பன்றியைக் கொல்கிறது. பெண் பன்றி ஓடும்போது உராய்ந்து வீழ்ந்த செங்காய்க் குலைகளின்

விதைகள் பரவியுள்ள வன்னிலத்தில் கிணறு தோண்டுகின்றனர். அவை நீரில்லாப் பாழ் குழிகளாகின்றன. அந்தக் குழிகள்; தம்மைப் பிடிக்கும் வலையோ என யானைகள் கருதுகின்றன. கல் கொண்டு குழிகளைத் தூர்க்கின்றன. அந்தக் கற்கள் நிரம்பிய வழியாம், அந்தக் காதலன் கடக்க வேண்டிய காட்டு வழி.

காட்டில், தமிழல்லவோ கமழ்கிறது; கவி மணத்தென்றல் அல்லவோ தவழ்கிறது!

“பருந்து இளைப்படூஉம் பாறுதலை ஓமை
இருங்கல் விடரகத்து, ஈன்று இளைப்பட்ட;
மென்புனிற்று அம்பிணவு பசித்தெனப், பைங்கட்
செந்நாய் ஏற்றை கேழல் தாக்க,
இரியற் பிணவல் தீண்டலின், பரீஇச்
செங்காய் உதிர்த்த பைங்குலை ஈந்தின்
பரல்மண் சுவல முரண்நிலம் உடைத்த
வல்வாய்க் கணிச்சி, கூழார், கூவலர்
ஊறாது இட்ட உவலைக் கூவல்,
வெண்கோடு நயந்த அன்பில் கானவர்
இகழ்ந்தியங்கு இயலின் அகழ்ந்தகுழி செத்து,
இருங்களிற்று இனநிரை, தூர்க்கும்
பெருங்கல் அத்தம் விலங்கிய காடே.”

உடன்பிறப்பே, அகநானூற்றில் நான் உனக்குக் காட்டியது கடும்வழிக் காடுதான் எனினும், களிப்பு குறையாமல், களைப்பு மேலிடாமல் இந்தக் கவிதை உனக்குத் தெம்பூட்டுகிறது அல்லவா?

அன்புள்ள,

மு. க.

22-12-1976

348. கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்!

உடன்பிறப்பே,

கிறிஸ்துமஸ் விழா உலகின் பல்வேறு பகுதிகளில் கொண்டாடப்படுகிறது. கிறிஸ்தவப் பெருமக்கள் போற்றி புகழ்ந்தேற்றும் இயேசுநாதரின் அமைதி நிறைந்த முகப்பொலிவு நம் கண் முன்னே தோன்றுகிறது. மனித சமுதாயத்தை நல்வழியில் நடத்திச் செல்ல அவர் எடுத்த முயற்சிகளுக்கு மனித சமுதாயத்தின் ஒரு பகுதியினரே குறுக்கே நின்றது மட்டுமல்ல; அவரை மிகக் கொடிய முறையிலே சிலுவையிலே அறைந்தும் களிப்புற்றுக் கூத்தாடினர்.

எந்தச் சிலுவையிலே அவரை வைத்து ஆணிகள் அடிக்கப்பட வேண்டுமோ, அந்தச் சிலுவையை நடவேண்டிய "கொல்கத்தா" என்னுமிடத்திற்கு அவரே தூக்கிச் செல்ல வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்படுகிறது. தன் உயிரை முத்தமிடத் துடிக்கும் அந்தச் சிலுவையை அவரே தூக்கிக் கொண்டு நடக்கிறார்.

சுமக்கும் சிலுவையின் கனம் தாங்க முடியாமல் மண்ணில் விழுந்தும் எழுந்தும் தன் பயணத்தை நிறுத்தாமல் தொடருகிறார். அந்தத் தியாகப் பயணத்தைக் கண்டு ஜெருசலேம் நகரத்துப் பெண்மணிகள் கதறி அழுகின்றனர். சிலுவையைத் தூக்கிக் கொண்டு நடக்கும் அந்தப் பொறுமையின் கருவூலத்தைச் சவுக்கு கொண்டு அடித்து வதைக்கிறார்கள். அந்தத் தியாகத் திருமேனி முழுதும் குருதி கொப்பளிக்கிறது. அடிகளின் தழும்புகள் பச்சை ரத்தக் கோடுகளாகக் காட்சி தருகின்றன. அப்போதும் அவர் கண்களின் ஒளி, மெழுகுவர்த்தியின் அமைதி தழுவும் ஒளியைத் தான் பொழிந்து கொண்டிருக்கிறது. அவர் படும்பாடு கண்டு பாவையர் கூட்டம் பதறிப் புலம்புகிறது. அவர்களை இயேசுபிரான் பரிவோடு நோக்குகிறார். "எனக்காக யாரும் அழாதீர்கள். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" எனக் கனிவுடன் கூறுகிறார்.

பின்னர், சிலுவையில் அவர் ஏற வேண்டிய இடம் வந்து விடுகிறது. அன்னை மரியா, "அய்யோ! என் கண்மணியை அழிக்கப் போகிறார்களே!" என்று ஓலமிட அருளப்பர் மரியாவுக்கு ஆறுதல் கூறி "அவரை யாரும் அழிக்க முடியாது" என்கிறார்.

இயேசுபிரானைச் சிலுவையில் அறையப் பதினெட்டு பேர் சூழ்ந்து நிற்கிறார்கள். அதிலே ஆறு பேர், அவரை வழிநெடுகக் கசையடி கொடுத்து இழுத்து வந்தவர்கள் நான்கு பேர் அவரை வழி நடத்திக் கொண்டு வந்தவர்கள் இரண்டு பேர் சிலுவைக் கயிற்றைப் பிடித்துக் கொள்வார்கள். மீதமுள்ள ஆறு பேர் இயேசுவையும், அவருடன் இருவரையும் சிலுவையில் வைத்து ஆணி அறைபவர்கள்.

அவர்கள் கூச்சலிடுகிறார்கள். அவர் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

"ஒழிந்தான் நமது பகைவன்."

"தேவதூஷணை செய்தவன் செத்து
மடியட்டும்."

"அறையுங்கள் சிலுவையில்! அறையுங்கள்!"

"மேலங்கியைக் கழற்றுக!"

"இரத்தத்துடன் ஒட்டிக் கொண்டிருக்கும் அந்த அங்கியை உரித்து எடுங்கள்."

"தலையில் முள் கிரீடத்தைக் கழற்றி பிறகு மாட்டுங்கள்."

"இடுப்பில் கச்சை மட்டும் இருந்தால்
போதும். மற்ற உடைகள் களையப் படட்டும்."

"கள்வர்கள் இருவருடன் சேர்ந்து
இந்தப் போதகரும் போகட்டும் உலகை
விட்டு."

"எல்லாரும் இந்தப் போதகரை ஏளனம்
செய்யுங்கள். சிரியுங்கள். கெக்கலி கொட்டுங்கள்.
ஆகாகா! இவர்தான் யூத குலத்தோன்ற
லாம்! யூதர்களின் மன்னராம்!"

இப்படிக் கொடுமையும், ஏளனமும் புடை சூழ மனித குல மேன்மைக்காக அனைத்தையும் பொறுத்துக் கொண்டு சிலுவையிலே தொங்கினார் இயேசு நாதர்!

அவரது தியாக வரலாற்றைத் தொழுது வணங்கும் கிறிஸ்தவப் பெருமக்களின் கிறிஸ்துமஸ் பண்டிகை உணர்வுகளை நாம் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

கடும் தண்டனை பெற்றவர்களின் உயிரைப் போக்கும் கழுமரம் போல் அந்நாள் வரையில் இருந்த சிலுவைக்கு, இயேசு நாதர் அதிலே அறையப்பட்ட பிறகு புதிய மகத்துவமே வந்து விட்டது! வெறுப்புக்கும், அச்சத்திற்கும் காரணமாக இருந்த அந்த மரத்துண்டங்களின் இணைப்பு, இயேசுவின் உடலைச் சுமந்த பிறகு அமைதிக்கும் தியாகத்திற்கும் எடுத்துக்காட்டுகளாக விளங்கிடத் தொடங்கி விட்டன.

மறைதிரு. இரோ. ஜான்பாஸ்கோ அவர்கள் எழுதியுள்ள இயேசுநாதர் பற்றிய நூலில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

“இருட்டிலே வாழ்ந்து கிடந்த
உலகிற்கு அவர் ஒளிச்சுடரானார்
வன்மையிலே ஊறிக் கிடந்த
உலகிற்கு அவர் புதுப்பிறப்பானார்
வேஷமும் நாசமும் மோசமடைய
அவர் ஓர் எழுச்சிக் குரலானார்
அறியாமையிலே முழ்கிய
உலகிற்கு அவர் அறிவொளியானார்”

இயேசுவின் வாழ்க்கை வெறும் வரலாற்று நிகழ்ச்சி மட்டுமல்ல; அது வரலாற்றையே வேறுபடுத்திய நிகழ்ச்சியாகும். அவரை இழித்துப் பழித்துப் பேசுபவர்கள் கூட, தாங்கள் வாழ்கின்ற காலத்தைக் குறிப்பிட அவரது சகாப்தத்தைத்தான் குறித்துக் கோடிட்டுக் காட்ட வேண்டியிருக்கிறது. அந்த மையக் கோடுதான் உலக வரலாற்றை இரு கூறுகளாகப் பிரித்து “இயேசுவுக்கு முன்” “இயேசுவுக்குப் பின்” என்று காலத்தைக் கணிக்கவும் உதவுகிறது எனவும் மறைதிரு ஜான்பாஸ்கோ கூறுவது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது.

இத்துணைப் பெருமை வாய்ந்த சரித்திரத்தின் புதல்வர்கள் கொண்டாடுகிற இந்த விழாவில் நமது இனிய வாழ்த்துக்களையும் உரியவர்களுக்கு அளித்திடுவோமாக.

அன்புள்ள,
மு. க.
24-12-1976

349. குளிர்நீர் கொதிக்கிறதோ?

உடன்பிறப்பே,

குறுந்தொகையில் "மிளைக் கந்தனார்" என்னும் புலவர் பெருமகனார்; அறிவு மிகுந்த தோழியொருத்தியைத் தமிழோவியமாகத் தீட்டிக் காட்டுகிறார். அவளுக்கு உயிர்த்தோழி ஒருத்தி, அந்தத் தோழி இளங் காளையொருவனை நம்பித் தன் இதயத்தைப் பறிகொடுத்தாள். இன்ப துன்பங்களில் இணைபிரியாது வாழ்வான் என்று நம்பினாள். அவள் நம்பிக்கையை நாசமாக்கி விட்டு அந்தக் காதலன் பிரிந்து சென்று விட்டான். காதலியின் நெஞ்சம் கலங்கியதை அவளின் ஆருயிர்த் தோழி உணர்ந்து வருந்தினாள். ஒரு நாள் அவனை அந்தத் தோழி காண நேர்ந்தது. பார்த்தவுடன் அவளுக்கு உள்ளம் கொதித்தது. "ஏன் இப்படிச் செய்து விட்டாய்?" என்று விழிகளில் பொரி பறக்க வினா எழுப்பினாள், அவனை நோக்கி!

அவனோ பதிலேதும் சொல்ல முடியாமல் திகைத்தான். அவள் அவனிடமிருந்து பதிலைப் பெறாமல் நகருவதாக இல்லை. ஏதாவது சொல்லிச் சமாளித்து விட்டு நழுவி விடவேண்டும் என்று அவன் முடிவு செய்தான். அதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை.

> "உன் தோழியை நான் பிரிந்தமைக்குக் காரணம் என்ன தெரியுமா? சொல்லுகிறேன், கேள்!
>
> பாரி மன்னன் வாழுகின்ற பறம்பு மலையின் கண் இருவரும் இன்பமாக நடந்து சென்ற போது அவளைத் தண்ணீர் கொண்டு வரச் சொன்னேன். அவளோ, உவர்க்கக் கூடிய கொதிக்கும் நீரைக் கொண்டு வந்து கொடுத்தாள்."

என்று ஏதோ ஒரு பதிலைச் சொல்லி மழுப்பினான்.

தோழிக்குச் சினம் பொங்கியது. அவனைத் தன் வார்த்தைகளால் வீழ்த்தி விட்டாள். அவனும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு அந்த இடம் விட்டு அகன்று விட்டான்.

அவன் நாணித் தலை தாழ்த்தும் வண்ணம், அந்தத் தோழி என்ன பேசினாள் என்பதைப் புலவர் அழகுறக் கூறுகிறார்.

"என் தோழியுடன் நீ பழகிக் கொண்டிருந்த போது, அவள்; வேப்ப மரத்தின் இளங்காயை உனக்குக் கொடுத்தால் கூட, அதை வாங்கிச் சுவைத்துப் பார்த்து - அடடா! கற்கண்டுக் கட்டியைப் போல் இனிக்கிறது உன் கையால் கொடுத்த காரணத்தால் - என்று அவளைப் புகழ்ந்து கொண்டிருந்தாய். இப்போது ஐயனே! உன் நிலை அவ்வாறல்ல! அன்பில்லாத காரணத்தால் அவள்மீது குறை சொல்லுகிறாய், பாரி மன்னனின் பறம்பு மலையில் பனியெனக் குளிர்ந்த சுனையிலேயுள்ள இயற்கையிலேயே குளிர்ந்த நீரை, தைத் திங்களில் உனக்கு அவள் அளித்த போதிலும் அது வெம்மையுடையது என்று கூறுகிறாய்! என் செய்வது? அன்று வேப்பங்காய் கற்கண்டாக இனித்தது! இன்றைக்கோ, குளிர்ந்து தெளிந்த பறம்புமலைத் தண்ணீர் கொதிக்கிறது என்கிறாய். அது நீரின் குற்றமல்ல. உன் மனத்தில் உண்மையான அன்பு இல்லை என்பதை அறியாமல் போனது தான் குற்றம்."

உடன்பிறப்பே, உரைநடையாகத் தீட்டியுள்ள இந்தக் கருத்தைத்தான் தோழி கூறுவது போல - தமிழ் வளம் கொழிக்கும் கவிதையாகத் தருகிறார் குறுந்தொகைப் புலவர்,

"வேம்பின் பைங்காய் என் தோழி தரினே
தேம்பூங் கட்டி என்றனிர் இனியே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்
ஐய! - அற்றால் அன்பின் பாலே."

பறம்புமலைச் சுனைநீர் போலக் கவிதையின்பம் பெற முடிகிறதல்லவா? இதுபோன்ற இலக்கியக் கற்பனைகள், இதயத்திற்கு எவ்வளவு இதமாக இருக்கின்றன; பார்த்தாயா?

அன்புள்ள,

மு. க.

28-12-1976

350. அடடா! அந்த நினைவுகள்!

உடன்பிறப்பே,

நண்பர் டி.எம். பார்த்தசாரதி அவர்கள் தி.மு.க. வரலாறு என்ற நூலை மூன்றாம் பதிப்பாக 1973ஆம் ஆண்டில் வெளியிட்டிருக்கிறார் அல்லவா; அதில் சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுக்கான காலக் குறிப்புக்களைத் தேடுவதற்காக இன்று அந்த நூலின் சில பகுதிகளைப் புரட்டிப் படித்துக் கொண்டிருந்தேன்.

சென்னை விருகம்பாக்கத்தில் நடைபெற்ற கழக மாநாட்டு நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் - அனைத்துக் கட்சித் தலைவர்களின் சொற்பொழிவுகள் - என் உள்ளத்தைத் தொட்டு எத்தனையோ பசுமையான உணர்வுகளை எழுப்பிக் கொண்டிருந்தன.

அந்த மாநாட்டின் திறப்பாளர் என்ற முறையிலும், மாநாட்டுப் பொருளாளர் என்ற முறையிலும் நான் பணியாற்றியது பற்றிய குறிப்புக்கள் அதிலே காணப்பட்டன.

மாநாட்டில் 1967 ஜனவரி முதல் தேதியன்று அண்ணா அவர்களின் பேருரை கேட்க இலட்சோப லட்சம் மக்கள் குழுமியிருந்தனர்.

அண்ணா உரையாற்றுவதற்கு முன்பு நான் மாநாட்டுப் பொருளாளர் என்ற முறையிலும், கழகத் தேர்தல் நிதி திரட்டும் பொறுப்பில் ஓராண்டுக் காலம் பணியாற்றியவன் என்ற முறையிலும் சிறிது நேரம் பேசினேன். நான் பேசியதையும், அதற்குப் பிறகு அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் முற்பகுதியையும் "தி.மு.க. வரலாறு" எனும் நூலில் சுருக்கமாக வெளியிடப்பட்டுள்ளது. அதை அப்படியே இங்கு உன் முன்னால் வைக்கிறேன்.

பொருளாளர் கருணாநிதி உரை

"திறப்பாளன் - என்ற முறையில் முதல் நாள் மாநாட்டில் உங்களிடையே உரையாற்றிய நான் - மீண்டும் - கடைசி நாளாகிய

இன்று உங்களிடையே மகிழ்ச்சியுடன் தோன்றியுள்ளேன் - கையில் ஒரு பையுடன் - மாநாட்டுப் பொருளாளன் என்ற முறையில்!

பதினோரு லட்சம் ரூபாய்களை நான் அறிஞர் அண்ணா அவர்களிடம் ஒப்படைக்கிறேன். அத்துடன், அதைச் சேர்க்கக் காரணமாக இருந்த பல இலட்சம் இதயங்களையும் அண்ணா அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

தேர்தலை நடத்துவதற்கு நியாயமான செலவினங்களுக்காக ஒரு பத்து இலட்சம் ரூபாய் தேர்தல் நிதி சேர்க்க வேண்டுமென்று முதலில் ஆசைப்பட்டு - மிகுந்த சிரமத்துடன் அறிஞர் அண்ணா அவர்களிடம் அனுமதி பெற்று - கழகத் தோழர்கள் - மாவட்ட கழக நிர்வாகிகள் - வட்டக் கழகத் தோழர்கள் - கிளைக் கழக நண்பர்கள் - சார்பு மன்றத்தார்கள் ஆகிய, அத்தனை பேர்களின் ஒத்துழைப்பால் நான் இதில் ஈடுபட்டு, வெற்றியும் காண முடிந்தது.

மாற்றார்கள் மலைக்கத்தக்க வகையிலும், நாமெல்லாம் பூரிக்கத் தக்க அளவிலும், கழகத்தின், வெற்றிக்கு இது வழி செய்கிறது என்று தெரிவித்துக் கொண்டு - அறிஞர் அண்ணா அவர்களின் ஆணைக்குத் தலை வணங்கத் தயாராக இருக்கும் நேரத்தில் - நாளை நடக்க இருக்கும் ஜனநாயகப் போராட்டத்தில் யார் யார் என்ன என்ன வகையில் போராட வேண்டும் - யார் யார் களத்தில் நிற்காமல் புறத்தே நின்று போராட வேண்டும் - என்று தமிழகத்தின் தலை எழுத்தை எழுத பேனாவை எடுத்துவிட்ட நேரத்தில் - பதினோரு லட்சம் ரூபாயைத் தங்கள் திரு முன்னிலையில் வைத்து விடைபெறும் நேரத்தில் - இந்த மாநாடு வெற்றி கரமாக அமைய உழைத்த சென்னை நகர நிர்வாகிகளுக்கும் என் சார்பிலும் நாவலர் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொண்டு இந்த பதினோரு லட்சத்தையும் தானைத் தலைவராம் அண்ணாவின் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்."

அறிஞர் அண்ணா உரை

"உங்களை விரைந்து அழைத்த போது - முக்கியமானவர்களை நான் அழைக்கத் தவறி விட்டேன்! பெரியோர்களே! என்று அழைத்தேன்; தாய்மார்களே என்று அழைத்தேன்! நண்பர்களே என்று அழைத்தேன்! ஆனால், உங்களை - 'லட்சாதிபதிகளே" - என்று அழைக்கத் தவறிவிட்டேன்! பின் இப்போது நீங்கள் பதினோரு லட்சம் ரூபாய்க்குச் சொந்தக்காரர்கள் அல்லவா?

ஆகவே, பல இலட்சத்திற்கு அதிபதிகளே! என்று அழைக்கிறேன், நீங்கள் கோபித்துக் கொள்ள மாட்டீர்கள் என்ற காரணத்தால்!

பதினோரு இலட்சம் ரூபாயைத் தம்பி கருணாநிதி என்னிடம் தந்தார். அண்ணனிடம் தம்பி தருவது சிறுகச் சிறுகத் திரும்பப் பெறத்தானே அல்லாது அண்ணனிடமே தங்கிவிட அல்ல!

தம்பி கருணாநிதி பேசும் போது, அவர் அந்தத் தொகையைச் சேர்க்க முடியுமா என்று என் விழிகள் வியப்பால் விரிந்தன என்றார். தம்பி! உனக்கு 'நிதி' என்று பெயரிட்டார்களே; உன் தாயார் - சும்மாவா இட்டார்கள்?

தமிழ் மொழியில் உள்ள சொற்கள் பொருள் உள்ளவை என்பதில், நான் அசையாத நம்பிக்கைக் கொண்டவன்! உன் தாயார் உனக்கு 'நிதி' என்று பெயரிட்டதே - உன்னை நாட்டு மக்கள் பயன்படுத்திக் கொள்ளட்டும் என்றுதான்! இன்றைக்கு இந்த காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தால், உனக்கு இட்ட பெயர் வீணாகி விடவில்லை - என்று உன் தாயார் மகிழ்ச்சி அடைவார்கள்.

நான் கேட்டது பத்து இலட்சம்! நீ கொடுத்தது பதினோரு இலட்சம்! ஆனால், மக்கள் மட்டும் சிக்க வேண்டிய நேரத்தில் உன்னிடம் சிக்கி இருந்தால் நீ இன்னமும் அதிகம் சேர்த்திருப்பாய்! எனவே, உனது உழைப்பு பொன்னே போல் போற்றத் தக்கது! நிதி அளித்த அன்பர்கள் யாவருக்கும் என் நன்றி?"

உடன்பிறப்பே, பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. எனினும் அண்ணனின் அந்தப் பாசமிகுந்த பேச்சு காதில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. அடடா! அந்த நினைவுகள் - நிகழ்ச்சிகள் - நெஞ்சுக்கு எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது!

அன்புள்ள,

மு. க.

29-12-1976

351. நாடு வாழ்ந்திட - நலிவு தீர்ந்திட!

உடன்பிறப்பே,

'குடும்ப நலத் திட்டம்' ஒரு பிற்போக்குத் திட்டம் என்று கூறினார்கள் வலதுகள்! அது எப்படிப் பிற்போக்குத் திட்டமென்று நாம் கேள்விமேல் கேள்வி கேட்டதும் "ஆகா ஊஹூ" என்று அலறுகிறார்கள். நம்மையே அந்தத் திட்டத்திற்குப் பகைவர்களைப் போலத் திசை திருப்புகிறார்கள். அரசுப் பொறுப்பிலே கழகம் இருந்த போது குடும்ப நலத்திட்டம் குறித்து விடுத்த வேண்டுகோள் ஒன்றினை உனக்கு நினைவுபடுத்துவதின் வாயிலாக அவர்களுக்கும் உணர்த்த விரும்புகிறேன்.

நாட்டுக்குத் தேவையான நல்வாழ்வுத் திட்டங்களையோ முற்போக்குத் திட்டங்களையோ ஆதரிப்பதில் தி.மு.கழகம் என்றைக்குமே முன் வரிசையில்தான் இருந்திருக்கிறது. இப்போதும் அப்படித்தான் அத்தகைய திட்டங்களை வரவேற்கிறது. குடும்பநலத் திட்ட விழா ஒன்றில் இரண்டொரு ஆண்டுகட்கு முன்பு நான் எடுத்து வைத்த கருத்துக்களை திரும்பவும் படித்துப் பார்த்தால் நாம் நல்ல திட்டங்களுக்கு விரோதிகளல்ல என்பது விளங்கும். இதோ; அது!

"நல்ல குடும்பம் பல்கலைக் கழகமென்றார் பாரதிதாசன். பல்கலைக் கழகத்து மாணவர் எண்ணிக்கை போல் குடும்பத்தில் பிள்ளைகள் தொகை கூடிட வேண்டும் என்பதல்ல அதற்குப் பொருள். அறிவும் திறனும் செறிந்த அழகோவியச் செல்வங்கள் ஒன்றிரண்டு பெற்று மனைத் தலைவனும், இல்லத்தரசியும் இன்புற்று வாழ்வதையே பல்கலைக் கழகத்திற்குப் பாவேந்தர் ஒப்பிட்டார் என்ற உண்மையை அனைவரும் உணர்ந்திட வேண்டும். குறிப்பிட்ட வருமானமுடைய ஒரு குடும்பத்தில்

ஆண்டுக்கொரு குழந்தை வருமானமும் பெருகிடுமானால், வசதிகளும் வாய்ப்புக்களும் எல்லாக் குழந்தைகளுக்கும் பங்கிடப் பட்டேயாக வேண்டும்.

எட்டு ரொட்டித் துண்டுகளை இரண்டு குழந்தைகளுக்கு நாலு நாலாகப் பிரித்துக் கொடுத்து அவைகள் மனநிறைவோடு உண்டது கண்டு உளங்களிக்கும் தாயும் தந்தையும், அதே எட்டு ரொட்டித் துண்டுகளை ஆறு குழந்தைகளுக்குப் பங்கிட்டு, அவர்களும் ஆறுதல் பெறாமல் குழந்தைகளும் களிப்படையாமல் அவதிப்படும் சாட்சிகள் தவிர்க்கப்பட வேண்டாமா?

வீட்டின் நிலையே இது எனில் நாட்டின் நிலையைச் சிந்திப்பது இன்றியமையாத ஒன்றல்லவோ? கோடி கோடியாகச் செலவழித்துத் திட்டங்கள் - கோபுர உயரத்தில் உணவு தானியக் குவியல்கள் - கோலமிகு சாலைகள் - குளிர் தரும் சோலைகள் - கல்விச் சலுகையா? கணக்கின்றி வழங்குவோம். மருத்துவ வசதியா? தடையின்றித் தருகின்றோம் - பின் தங்கியோர் நலனா? விரைந்து நிறைவேற்றுவோம் - தாழ்த்தப்பட்டோர்க்கு உயர்வா? தடையில்லை அளிப்பதற்கு.

எல்லாம் சரி; எட்டு ரொட்டித் துண்டு - இரண்டு குழந்தைகள் என்றால் வழங்குபவர்க்கும் மகிழ்ச்சி - பெறுபவர்க்கும் பேரானந்தம் ரொட்டித் துண்டு எட்டுத்தான், குழந்தைகள் ஆறு எனில் ரொட்டியும் எட்டியாகுமே; தேவைக்கேற்ப கிடைக்காத காரணத்தால்!

கடல்களை மூன்று பக்கமும் எல்லையாகக் கொண்டிராமல் கடலின் மீது மிதக்கும் ஒரு தெப்பமாக இந்தியா இருந்திருந்தால் இந்நேரம் கடலுக்குள் மூழ்கியிருக்கும் மக்கள் தொகை தாங்காமல்!

அந்த அளவுக்கு ஆண்டுக்கு ஆண்டு, ஆண்டவன் மீது பழியைப் போட்டுவிட்டு,

“அவன் கொடுத்தான்
நாமென்ன செய்ய!”

என்று குடும்பத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள் இந்திய நாட்டில்!

ஆண்டவர்களிலே கூட சிவனுக்கு இரண்டு பிள்ளைதான்! இருபத்தேழு பிள்ளைகளைப் பெற்ற குசேலர் தந்தை அவலுக்குப்

பதிலாக மாட மாளிகைகள், கூட கோபுரங்களைப் பரிசாக அளிக்க ஒரு கண்ணன் இருந்தால் அந்தக் கண்ணன் கூட எல்லோருக்கும் அருள முடியும். எப்போதும் அருள முடியுமா?

குழந்தைகளை மலர்கள் என்கிறோம் - மாணிக்க பரல்கள் என்கிறோம் - அதன் கண்கள் நீலோற்பலம் இதழ்கள் ரோஜா! சிரிப்பு பிறைநிலா! அசைவு தென்றல் வடிவு தங்கப்பதுமை! இப்படியெல்லாம் கொஞ்சு தமிழில் குழந்தைகளை வர்ணிக்கும் கவிதை உள்ளங் கொண்டவரை கொஞ்சம் என்னுடன் இந்தக் குடிசைப் பகுதிக்கு வாருங்கள் என அழைக்கிறேன்.

அதோ, கிழிந்த சாக்குப் படுதா தொங்குகிறதே. அதுதான் அந்த மாளிகையின் மரகதக் கதவு! சேறு சகதியும் வழிந்தோடுகிறதல்லவா வளைந்து வளைந்து அதுதான் அந்த அரண்மனையைச் சுற்றியுள்ள அகழி. அந்த அகழி மீது துள்ளி விளையாடுகிறதே தொப்பை சுருங்கிய ஒரு குழந்தை, அதுதான் அந்த வீட்டு மகாராணியின் முதல் இளவரசன் - அடுத்து ஒன்று சும்பிய கால் கைகளுடன் தள்ளாடித் தள்ளாடி ராகம் பாடுகிறதே அது இளவரசி - மகாராணியின் தோள் மீது ஒன்றும் மடிமீது ஒன்றும் எலும்புக் குச்சிகளாய்த் தேரைகள் போல் ஒட்டிக் கொண்டு சிணுங்கி அழுவதற்கும் ஜீவனில்லாமல் கிடக்கின்றனவே, அவைதான் மலர்க்கொத்துக்கள் - மாணிக்கப் பரல்கள் இப்படியொரு உலகம், இந்தியா முழுமையும் அழகு முகத்தின் குறுமருக்கள் போல் பரவிக் கிடக்கிறது.

திட்டங்களின் பயன்கள் அந்த 'நரகலோக' வாசிகளைச் சென்று தொட வேண்டாமா? பறவைகளும், விலங்குகளும் வாழ்கின்றன. மனிதன் வாழ்க்கை நடத்துகிறான். இதைச் சொல்லச் சுவையாக இருக்கிறது. ஆனால் நடைமுறையில், விலங்குகளை விட மனித சமுதாயத்தின் பெரும் பிரிவு வேதனையை அதிகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

அந்த வேதனை நீங்கிட அரசு திட்டங்களை உருவாக்குகின்றது. திட்டங்கள் பயன் விளைக்க, மக்கள் பெருக்கம் தடுக்கப்பட்டதாக வேண்டும். பிறந்த குழந்தைகளைப் பேணி வளர்க்க, இனியும் குழந்தைகள் பிறக்காமல் தடுத்திடல் வேண்டும். இந்தக் குடும்பக் கட்டுப்பாடு பாப காரியமா?

அளவுக்கு மீறி குழந்தைகளைப் பெற்றுவிட்டு, அவைகள் சரியான வசதி வாய்ப்புகளற்று ஆலாய்ப் பறக்கின்ற கொடுமைதான் கடைந்தெடுத்த பாப காரியமாகும். பாப - புண்ணியத்தின் உண்மையான பொருளை உணர்ந்து கொண்டு நடப்பவர்களே சமுதாயத்திற்கும் நாட்டுக்கும் நல்ல தொண்டாற்றுகிறார்கள் என்று போற்றிட முடியும்.

இந்தியாவில் வேலைவாய்ப்பு தருதல் என்பது இன்று விண்முட்ட எழுந்து நிற்கும் மிகப் பெரிய பிரச்சினையாகும். அதனைத் தவிர்ப்பதற்கு இதுவரை எடுத்துள்ள முயற்சிகள் யானைப் பசிக்கு சோளப்பொரி அளித்தது போலத்தான் என்று சொல்லிக் கொள்ள யாரும் வெட்கப்படத் தேவையில்லை. யானை பசிக்கேற்ற உணவினைத் தயாரித்து முடித்திடும் போது, யானை, பெரும் சேனையாகி விடக் கூடாதல்லவா? அதற்குத்தான் குடும்பநலத் திட்டத்தில் அனைவரும் ஆர்வத்துடன் அக்கறை காட்டிட வேண்டும்.

பிறந்துவிட்ட குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டம் மட்டுமன்றி, சத்துணவுத் திட்டம் ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டு குடிசைப் பகுதிகளில் உள்ள குழந்தைகள் வலிவோடும் பொலிவோடும் வளர்வதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. எந்தத் தீவிர முயற்சிகளானாலும் அவைகளின் பயன்கள் எத்தனை பேருக்குச் சென்றடைய வேண்டும் என்ற அளவுகளைப் பொறுத்தே வெற்றிகளை ஈட்டிட முடியும்.

அந்த வெற்றிகளை உருவாக்க அரசு - ஆடவர் - பெண்டிர் - இந்த மூன்று தரப்பினரின் ஒத்துழைப்பும் இருந்து குடும்ப நலத் திட்டம் நல்ல வகையில் பரவிட வேண்டும். இந்த மூன்று சாராரின் ஒத்துழைப்பைக் குறிக்கும் வகையில் அமைந்ததுதான் சிவப்பு முக்கோண அடையாளமாகும்.

குடும்ப நலத் திட்டம் பரவிட அரசாங்கம், அதிகாரிகளை நியமிக்கலாம் - ஆலோசனைகள் பலவற்றை விவரித்துச் சொல்லலாம். அறுவை சிகிச்சைக்கெனத் தனித்தொகை ஒதுக்கலாம் - இவைகளுக்கெல்லாம் மேலாக அவரவரும் குழந்தைப் பெருக்கத்தால் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படும்

நெருக்கடியையும் முன்னேற்றத் திட்டங்களில் ஏற்படும் முட்டுக் கட்டையையும் புரிந்து நடந்திட முனைந்திட வேண்டும்.

பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க என வாழ்த்திடுவர் முன்னோர்! பெறுவது என்றாலே குழந்தைகள்தான் எனப் பொருள் கொண்டு பதினாறு என்னும் குறிக்கோளை அடையத் தவங்கூட இருந்தவர்கள் உண்டு - பதினாறு பேறுகளைத்தான் பெறச் சொன்னார்கள் பெரியோர் - பதினாறு பேர்களை அல்ல!

படித்தோர், பாமரர்க்கு விளக்கிட வேண்டும் - பக்கத்து வீட்டார் இதுபற்றிப் பேசித் தெளிவடைய வேண்டும். அரசு, இதில் அக்கறை எடுத்திருக்கிறது. எல்லாமே அரசே கவனித்துக் கொள்ளும் என்று இல்லாமல் அவரவரும் தங்கள் கடமையை - பிறருக்கு எடுத்துச் சொல்வதின் மூலமும்; சொன்னதைத் தாங்களும் செயலில் காட்டுவதின் மூலமும் நாட்டுக்குச் செய்திட வேண்டும். மிகப் பொறுப்பு மிக்க பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ள இந்தத் துறை அதிகாரிகளும் - மிக்க நேர்மையுடனும், தொண்டாற்றும் தூய உள்ளத்துடனும் இந்தப் பிரச்சாரத்தைச் செய்து வெற்றி கண்டிட வேண்டும். வெறும் ஏட்டுக் கணக்கு மட்டும் காட்டினால் போதாது - எடுத்த காரியத்தில் ஒழுங்கான முன்னேற்றத்தைக் கண் எதிரே காண முனைந்திட வேண்டும்.

படித்த ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் அதிகம் சொல்லத் தேவையில்லை; பட்டிக் காட்டில் வாழ்வோர், பாமரர், படிப்பறிவு எட்டிப் பார்க்காத பகுதிகளில் உழல்வோர் இவர்களிடத்தில் எல்லாம் இந்த சமூகப் பணியை விரைந்து செய்திடல் வேண்டும். அம்மை, காலரா போன்ற தொத்து நோய்களைப் பரவாமல் தடுக்க அதிகாரிகள் எப்படி முடுக்கிவிடப்படுகிறார்களோ, அது போல இந்திய நாடு முழுமையும் எல்லாப் பகுதிகளிலும் குடும்ப நலத்திட்டப் பிரச்சாரப் பணி தீவிரப்படுத்தப்பட வேண்டும், இது அழிவு வேலையல்ல - ஆக்கப்பூர்வமான பணி.

“திட்டமிட்ட குடும்பம்
தெவிட்டாத இன்பம்”

“அளவோட பெற்று
வளமோடு வாழ்க”

"நாம் இருவர்-
நாம் பெறுவதும் இருவர்"

இது தனித்தனி குடும்பங்களுக்கான அறிவுரை மட்டுமல்ல; நாளைய நாட்டின் ஒளிமிகுந்த வருங்காலத்திற்கு வழி காட்டும் தத்துவம் மட்டுமல்ல; நாடு வாழ்ந்திட - நலிவு தீர்ந்திட அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய திட்டமாகும்.

இந்தத் திட்டத்தின் வெற்றியே நாட்டின் வெற்றியாகும். ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையின் வெற்றியுமாகும். வெற்றிமேல் வெற்றி குவித்திட இந்த வெற்றியே அடிப்படையுமாகும். அதனைத் தெளிந்து செயலாற்ற அனைவரையும் வேண்டுகிறேன்."

அன்புள்ள,
மு. க.
30-12-1976

352. புதிய ஏடு புரள்கிறது!

உடன்பிறப்பே,

புத்தாண்டு பிறந்துவிட்டது. 1976-ஆம் ஆண்டு எனும் வாழைமரம், எழுபத்தி ஏழாம் ஆண்டு எனும் இளங்கன்றைத் தந்துவிட்டுக் காலத்தின் மடியில் வீழ்ந்து விட்டது. பனிரெண்டு மாத வாழ்வை பாங்குற நடத்துவதற்கு 1977-ஆம் ஆண்டு பசுங்குருத்தினை விரித்துக் கொண்டு உலக மக்களின் வாழ்த்து கீதத்திலே மெல்ல அசைந்தாடுகிற காட்சியைக் காணுகிறோம். இது கி.பி.1977-ஆம் ஆண்டு அதாவது கிறிஸ்து பிறந்த பிறகு உருண்டோடியிருக்கிற ஆண்டுகளின் கணக்கு. கி.மு. 20-ஆம் ஆண்டு! அல்லது 30-ஆம் ஆண்டு என்றால் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு கணக்கிடப்படுகிற ஆண்டுகளைக் குறிக்கும். கிறிஸ்துவின் பிறப்பை மையமாக வைத்து உலகின் பொதுவான ஆண்டுக் கணக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

நாலைந்து நாட்களுக்கு முன்பு கிறிஸ்துமஸ் விழா வினையொட்டி நான் எழுதிய கடிதத்தில் ஏசுபிரான் தான் ஏறிட வேண்டிய சிலுவையைத் தானே சுமந்து சென்ற தியாக சரித்திரத்தின் புனித ஏடுகளை உனக்குச் சுட்டிக் காட்டியிருந்தேன்.

அவர் பிறந்தது முதல் சிலுவையில் அறையப்படும் வரையில் அந்தத் தூயவரின் வாழ்க்கைக் குறிப்புகளை முழுமையாகத் தரத் தேவையில்லை. காரணம் அவற்றை நீயே நன்கு அறிவாய்! எனினும் ஆங்காங்கே ஒன்றிரண்டை நினைவு கூர்ந்தால் புத்தாண்டில் அடியெடுத்து வைக்கும் போது அவைகள் உள்ளத்திற்கு ஊக்கமும், உற்சாகமும், உறுதியும் வழங்கிடக் கூடுமல்லவா!

> “யூதேயா நாட்டில் உள்ள பெத்லகேமே!
> நீ தலைமையான நகரங்களில் ஒன்றாவாய்.
> ஏனெனில் உன்னிடமிருந்து எங்களை ஆளுகிற
> தலைவர் ஒருவர் தோன்றிடுவார்.”

என்பதாக இறை வாக்குரைப்போரின் ஏட்டில் எழுதியிருப்பதாகத் தெரிந்த "மாகோய்" என்னும் ஞானிகள், அந்தச் செய்தியை ஏரோது மன்னனிடம் கூறி விடை பெற்றுப் "பெத்லகேம்" சென்று குழந்தை இயேசுவைக் கண்டு களிப்பெய்தினர்.

ஏரோது மன்னன், குழந்தையாக இருக்கும் போதே இயேசுவைக் கொன்றுவிடும் திட்டத்துடன் அங்கு வரப் போகிறான் என்பதை அறிந்த இயேசுவின் தந்தை யோசப்பும், தாய் மரியாளும் இரவோடு இரவாகக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு எகிப்துக்கு ஓடிவிட்டனர்.

தன் திட்டம் நிறைவேறாமற் போனது கண்டு ஏமாற்றமடைந்த ஏரோது மன்னன், பெத்லகேமிலும் அந்த நகரைச் சுற்றியுள்ள பகுதிகளிலும்தான் 'குழந்தை இயேசு' இருக்க வேண்டுமென்று கருதி, குறிப்பாக அந்தக் குழந்தையை அவனுக்கு அடையாளம் தெரியாத காரணத்தால், 'பெத்லகேம்' பகுதியில் பிறந்துள்ள இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் குழந்தைகளையுமே கொன்று விடுமாறு கட்டளையிட்டு அவ்வாறே அந்தக் கொடுமையைச் செய்தும் முடித்தான்.

ஏரோது இறந்த பிறகுதான் இயேசுவின் பெற்றோர் எகிப்தை விட்டுப் புறப்பட்டு கலிலேயா நாட்டுக்குச் சென்று நாசரேத்து என்னும் ஒரு கிராமத்தில் குடியேறி இயேசுவை வளர்த்தார்கள்.

வளர்த்த இயேசுவின் புகழ், பரந்து விரிந்தது. கலிலேயா, தெக்கப்போலி, ஜெருசலேம், யூதேயா, யோர்தான் போன்ற பகுதிகளிலேயிருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து அவரது அருள்மொழி கேட்டார்கள்.

அவ்வாறு நிகழ்த்திய சொற்பொழிவுகளில் இயேசுவின் மலைப்பிரசங்கம் வரலாற்றுச் சிறப்பினைப் பெற்றது.

- அடக்கமுடையவர்கள் நற்பேறு பெற்றவர்கள், அவர்கள் உலகத்தையே உடைமையாகப் பெறுவார்கள்.
- இரக்கம் காட்டுகிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள். கடவுள் அவர்களிடம் அன்பு காட்டுவார்.
- தூய உள்ளமுடையவர்கள் நற்பேறு பெற்றவர்கள், அவர்கள் உள்ளமே கடவுளின் அருளைப் பெறுகிறது!

- அமைதி நிலவச் செய்பவர்கள் கடவுளின் மைந்தர்கள் எனப் போற்றப்படுவார்கள்.
- நீங்கள் உலகிற்கு உப்பாக இருக்கிறீர்கள். உப்பு, அதன் சாரத்தை இழந்து விட்டால் ஒன்றுக்கும் உதவாமல் வெளியே எறியப்பட்டு மனிதர்களால் மிதிக்கப்படும். இதை அறிவீர்கள்.
- ஒருவன் உன்னோடு தகராறு செய்து, உன் துண்டை எடுத்துக் கொள்ள விரும்பினால் அவனுக்கு உன் சட்டையையும் எடுத்துக் கொள்ள இடம் கொடு. உன்னை ஒருவன் ஒரு கல் தொலைவு வரும் படியாகக் கட்டாயப்படுத்தினால் அவனுடன் இரண்டு கல் தொலைவு செல். உன்னை வலக் கன்னத்தில் அடிப்பவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டு.
- உங்களிடம் அன்புள்ளவர்களிடம் மட்டும் நீங்கள் அன்பு காட்டினால் பயனில்லை. உங்கள் எதிரிகளிடமும் அன்பு கொள்ளுங்கள். உங்களைத் துன்புறுத்துகிறவர்களின் நன்மைக்காகவும் பிரார்த்தனை செய்யுங்கள்.
- முதலில் உன் கண்ணில் உள்ள தூலத்தை எடுத்துவிடு. அப்போது தான் மற்றவனின் கண்ணில் உள்ள துரும்பை எடுக்க உனக்குத் தெளிவான பார்வை ஏற்படும்.
- உங்களிடமுள்ள ஒளி முத்துக்களைப் பன்றிகளின் முன்பு போடாதீர்கள். அவை, தங்கள் கால்களால் அவைகளை மிதித்துத் துவைத்து விட்டு திரும்பி உங்களையே பீறிவிடும்.
- கேளுங்கள், கொடுக்கப்படும். தட்டுங்கள் திறக்கப்படும். தேடுங்கள், அப்பொழுது கண்டுபிடிப்பீர்கள்.

கீர்த்திமிகுந்த மலைச் சொற்பொழிவுகளுக்குப் பிறகு, இயேசுபிரான் தனது பன்னிரு சீடர்களுடன் பயணம் தொடர்ந்தார். பனிரெண்டு சீடர்களையும் மக்களுக்குத் தொண்டு செய்யுமாறு இயேசு, பணித்தார். அப்படி அனுப்பும் போது சீடர்களுக்கு அவர் வழங்கிய அறிவுரையின் சில பகுதிகளை; உடன்பிறப்பே! உனக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

"சீடர்களே! உங்களை ஓநாய்களுக்கிடையே ஆடுகளைப் போல அனுப்புகிறேன். நீங்கள் பாம்புகளைப்

போல விழிப்பு உள்ளவர்களாகவும், புறாக்களைப் போல சாந்தமுள்ளவர்களாகவும் பணிபுரியுங்கள். மனிதர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனெனில் ஒரு சகோதரன், தன் சகோதரனைக் கொல்லுவான். தகப்பன், பிள்ளைகளையும் - பிள்ளைகள், தகப்பனையும் கொல்லும்படிச் செய்வார்கள். என் பொருட்டு நீங்கள் எல்லோருடைய பகை உணர்வுக்கும் ஆளாக நேரிடும். ஆனால் இறுதி வரையில் நிலை நிற்பவனே மீட்புப் பெறுவான் என்பதை மறந்து விடாதீர்கள்."

இத்தகைய அன்பான அறிவுரையை இயேசுபிரானிடம் பெற்ற சீடர்களில் ஒருவன்தான், அவரைக் காட்டிக் கொடுத்த 'யூதாஸ்' என்று அறியும் போது எவ்வளவு வியப்பாக இருக்கிறது.

எதிரிகளிடம் முப்பது வெள்ளிக் காசுகளைப் பெற்றுக் கொண்டு இயேசுவைக் காட்டிக் கொடுக்க அவன் தயாரானான்.

அவன் காட்டிக் கொடுக்கப் போவதை அறிந்திருந்தும் இயேசுநாதர் அமைதியாகவே இருந்தார்.

பனிரெண்டு பேரும் பந்தியில் அமர்ந்து இயேசுவுடன் உணவருந்தும் போது, அவர் திட்டவட்டமாகச் சொன்னார்; "நம்மிடம் இருக்கும் ஒருவனே என்னைக் காட்டிக் கொடுக்கப் போகிறான்" என்று!

"யார்? யார்?" என்று அனைவரும் கேட்டனர்.

"ஒரே பாத்திரத்தில் என்னுடன் கை நுழைத்துச் சாப்பிட்டவனே தான் என்னைக் காட்டிக் கொடுப்பான்" என்று இயேசு பதில் அளித்தார்.

"அந்த மனிதன் பிறக்காமல் இருந்திருந்தால் அது அவனுக்கே நலமாக இருந்திருக்கும்."

என்று இயேசு மெல்லிய குரலில் கூறியதும், யூதாஸ்; திடுக்கிட்டுப் போய் "யார் நானா?" என்று கேட்டு விட்டான்.

"ஆகா நீயே சொல்லி விட்டாயே!" என்று புன்னகை புரிந்தார் இயேசுநாதர்.

அதற்குப் பிறகும் கூட யூதாஸ் மனம் மாறவில்லை. அவரைக் காட்டிக் கொடுத்துக் கைக்கூலி பெற்றான். எப்படிக் காட்டிக் கொடுத்தான் தெரியுமா?

இயேசுவைப் பிடிக்க ஒரு பெருங்கூட்டம் வாட்களோடும், தடிகளோடும் வந்தது. அவர்களுக்கு "இயேசு நாதர் யார்?" என்று குறிப்பாக அடையாளம் தெரியவில்லை. அதற்காக யூதாஸ் ஒரு வழி சொன்னான். "நான், யார் கையை முத்தமிடுகிறேனோ அவர் தானே இயேசு! அவரைப் பிடித்துக் கொள்க" என்று எதிரிகளிடம் கூறிவைத்தான். அவ்வாறே அவன் இயேசுவிடம் சென்று "ரபீ வாழ்க! வாழ்க!" என்று கூறிக் கொண்டு அவர் கையை முத்தமிட்டான். அடையாளம் கண்டுகொண்ட எதிரிகள் இயேசுவைப் பிடித்தனர். பிறகு அவருக்குத் தண்டனை வழங்கப்பட்டது. தான் அறையப்பட வேண்டிய சிலுவையைத் தானே தூக்கிக் கொண்டு நடந்தார். அந்தச் சோக காவியத்தைத் தான் சென்ற கடிதத்தில் விவரித்திருந்தேன்.

உடன்பிறப்பே, அந்த யூதாசின் முடிவு என்ன ஆயிற்று தெரியுமா? காரியமெல்லாம் முடிந்தபிறகு அவன் மனச்சாட்சி பேசியது. அதற்குள் காலம் கடந்து விட்டது. இயேசுவைக் காட்டிக் கொடுத்தமைக்காக அவன் வாங்கிய வெள்ளிக் காசுகளை கோயிலில் வீசி எறிந்துவிட்டு, கீழே வீழ்ந்து இறந்து போனான். அந்தக் காசுகளை உண்டியலில் போடக்கூடாது என்றும் அவை இரத்தத்தின் விலையானதால் அவைகளைக் காணிக்கையாக்கக் கூடாதென்றும் கருதி, அந்தக் காசுக்கு ஒரு புதைக்குழிக்கான நிலத்தை விலைக்கு வாங்கி, அங்கே யூதாசின் உடலைப் புதைத்தார்கள். அந்த நிலத்திற்கு "இரத்த நிலம்" என்ற பெயர் ஏற்படலாயிற்று.

இயேசு பிறந்த நிலம், வாழ்ந்த நிலம், உலவிய நிலம், சிலுவையில் அறையப்பட்ட நிலம், அவரது போதனைகள் எதிரொலித்த நிலம் - அனைத்துமே புனித நிலமாயிற்று!

உடன்பிறப்பே, அவர் பிறந்த ஆண்டின் தொடர்ச்சியாக 1976 ஆண்டுகள் உலக வரலாற்று ஏடுகளாகப் புரண்டிருக்கின்றன. இதோ புதிய ஏடு; 1977 எனப் புரண்டிருக்கிறது. இந்த ஏடு, எங்கும் நன்மை பெருகும் ஏடாக விளங்கிட விரும்புவோமாக.

அன்புள்ள,

மு. க.

01-01-1977

353. பாவம்! விசித்திர மனிதர்கள்!

உடன்பிறப்பே,

- *அரசியல் ஞான சூன்யம்.*
- *அரசியல் அரைவேக்காடு.*
- *மடத்தனமான வாதம்.*
- *மட்டிகள்.*

இத்தகைய காரசாரமான சொற்களுக்குச் சொந்தக்காரர்கள் யார்? இந்தக் கடும் வார்த்தைகளை ஈன்றெடுத்த பேனா முனை எது? என்றெல்லாம் நீ கேள்விகளைக் கேட்பதற்கு முன்பு இந்தச் சொற்கள் யார்மீது பொழியப்பட்டுள்ளன என்பதை முதலில் சொல்லிவிடுகிறேன்.

வேறு யார்மீதும் அல்ல; என்மீதுதான்! மேற்கண்ட "எழுத்தாரம்" தொடுத்திருப்பது வலது கம்யூனிஸ்டு கட்சியின் அதிகாரபூர்வமான வார ஏடு.

அவர்களுக்கு எத்தனையோ கொள்கைக் குழப்பங்கள் இருந்த போதிலும் கருத்து மாறுபாடுகளை அரசியல் ரீதியாகச் சந்திப்பவர்கள் என்ற ஒரு நம்பிக்கை அவர்களைப் பற்றி நமக்கு இருந்ததுண்டு. அந்த நம்பிக்கையின் அடித்தளம் நான்கைந்து ஆண்டுக் காலமாகவே உடைந்து தூளாகி விட்டதென்றாலுங் கூட, ஏதோ அவர்களிடமுள்ள 'வாதத் திறன்' அடியோடு மாய்ந்து விடவில்லை என்று நினைத்திருந்தேன். வாதமில்லை, வசைவுதான் மிச்சமிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிற வகையில் இந்த வாரம் அவர்களது ஏட்டில் தங்களின் எஞ்சியுள்ள அரசியல் நாகரிகத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

"ஐந்து அம்சத் திட்டத்தை கம்யூனிஸ்டு கட்சி
எதிர்ப்பதாக எங்கே படித்தீர்? எதில் படித்தீர்?"

என்று சிறிது மரியாதை கொடுத்து என்னிடம் ஒரு கேள்வி கேட்டிருக்கும் அந்த 'வார ஏடு'.

"உம்மைப் பற்றி நாடே அறியும் போ!"

என்று தனக்கேயுரிய பண்புடன் கட்டுரையை முடித்திருக்கிறது.

"ஐந்து அம்சத் திட்டத்தை கம்யூனிஸ்டு கட்சி எதிர்ப்பதாக எங்கே படித்தீர்?"

என்று என்னைப் பார்த்துக் கேட்கிற அந்த வார ஏட்டுக்கு நான் சொல்லுகிற பதில் இதுதான்! அதாவது;

அய்யா! அரசியல் ஞானப்பிரகாசமே! அரசியலில் முழுமையாக வெந்து கருகிப் போனவரே! மகத்தான வாதம் புரிபவரே! மாமேதையே! ஐந்து அம்சத் திட்டத்தை கம்யூனிஸ்டு கட்சி எதிர்ப்பதாக எங்கே படித்தாய்? என்று என்னைக் கேட்கிறீரே; உமது கம்யூனிஸ்டு கட்சி வார ஏட்டில் தான் அதையும் படித்தேன்.

"காங்கிரசின் உள் விவகாரங்களில் நான் தலையிட்டதற்காக வருத்தம் தெரிவித்ததாகவும் காங்கிரஸ் கட்சி, இளைஞர் காங்கிரஸ் ஆகிய இரண்டின் இருபத்தைந்து அம்சத் திட்டத்தை நான் ஏற்றுக் கொண்டது குறித்தும் திருப்தி தெரிவித்து, சில காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையைப் பார்த்து வியப்படைந்தேன். இதில் வேடிக்கை என்னவென்றால் ஐந்து அம்சம், இரண்டே நாளில் இருபத்தைந்து அம்சத் திட்டமாக மாறிவிட்டது. எந்த அடிப்படையில் இத்தகைய இழிவான அறிக்கைகளை வெளியிடுகிறார்கள் எனத் தெரியவில்லை. நான் ஐந்து அம்சத் திட்டத்தை ஆதரிப்பதாகக் கூறி இளைஞர் காங்கிரசின் ஐந்து அம்சத் திட்டத்தை நான் ஆதரிப்பதாக எண்ணம் உண்டாக்கும் வகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. எனது அறிக்கையில் இருபது அம்சத் திட்டத்துக்குக் கம்யூனிஸ்டு கட்சியின் ஆதரவை மட்டுமே தெரிவித்தேன். வேறு எதையும் ஆதரிக்கவில்லை."

உடன்பிறப்பே, மேற்காணும் அறிக்கையை வலது கம்யூனிஸ்டு கட்சியின் அனைத்திந்தியப் பொதுச் செயலாளர் தோழர் சி. ராஜேஸ்வரராவ் விடுத்து, அந்த அறிக்கை "ராஜேஸ்வரராவின்

காட்டமான மறப்பு" என்ற தலைப்புடன் வலது கம்யூனிஸ்டு கட்சியின் 26-12-76 வார ஏட்டிலேயே முதல் பக்கத்தில் வந்திருக்கிறது.

தயவு செய்து, நம்மீது எரிச்சலைக் கக்கி ஏடா! வாடா! போடா! என்று நிந்தனைப் பாணங்களைப் பூட்டுகிறவர்கள் தோழர் ராஜேஸ்வரராவின் அறிக்கையை ஒரு முறைக்கு இருமுறை படித்துப் பார்க்கட்டும்.

குடியேற்றத்தில் நான் பேசிய போதும், கடிதத்தில் குறிப்பிட்ட போதும், "சாதி ஒழிய வேண்டுமென்றும் கல்வி பரவ வேண்டுமென்றும், காட்டு வளத்தைப் பெருக்க வேண்டுமென்றும், வரதட்சணைக் கொடுமை நீக்கப்பட வேண்டுமென்றும், மக்கள் பெருக்கம் கட்டுக் கடங்காமல் போவதைத் தடுக்க வேண்டுமென்றும் - யார் சொன்னாலும் சரி; சொல்லுகிறவர்களைப் பற்றிய ஆராய்ச்சியை விட்டுவிட்டு, சொல்லப்படுகிற கருத்துக்கள் நாட்டுக்குத் தேவையானவை தானா எனத் தெளிந்து தேவையெனில் அவைகளை ஆதரிக்க வேண்டும்" என்று தான்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற குறளையும் சுட்டிக் காட்டி விளக்கியிருக்கிறேன்.

காந்தியடிகளிடம் கூட கருத்து வேறுபாடு இருந்ததுண்டு கழகத்திற்கு! அதற்காக அவர் கூறிய தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு போன்ற திட்டங்கள் ஆதரிக்கத் தகுந்தவையல்ல என்று என்றைக்குமே கூறியது கிடையாது! சொல்லுகிறவர்களுக்கும் சொல்லப்படுகிற கருத்துக்களுக்கும் முடிச்சுப் போட்டுப் பார்த்து சொல்லுகிற மனிதரைப் பிடிக்கவில்லை; அதனால் அந்தக் கருத்துக்களையும் ஆதரிக்கவில்லை என்று எப்போதுமே தி.மு.கழகம் முடிவெடுத்தது, கிடையாது.

உடன்பிறப்பே, வலது கம்யூனிஸ்டு ஏடு இன்னொரு கேள்வியும் என்னைப் பார்த்துக் கேட்கிறது!

"இருபது கசந்த கருணாநிதிக்கு ஐந்து
மட்டும் இனிப்பதின் மர்மம் என்ன?"

இதுதான் அந்தக் கேள்வி! இதற்கு நானும் ஒரு கேள்வி மூலமே விடையளிக்க முடியும்.

"இருபது இனித்த வலதுகளுக்கு ஐந்து மட்டும் கசக்கும் மர்மம் என்ன?"

ஆனால் கேள்வியையே விடையாகத் தர விரும்பவில்லை. விளக்கமும் தர விழைகிறேன்.

இருபது அம்சத் திட்டத்தைத் தி.மு.க. ஆதரிக்க வில்லையென்று எங்கே அறிக்கை விட்டது? அல்லது எங்கே தீர்மானம் போட்டது? 1975 ஆம் ஆண்டு பிரதமர் அவர்கள் இருபது அம்சத் திட்டத்தை அறிவித்த போது அதனைத் தி.மு.க. சார்பில் வரவேற்பதாகத் தான் நிருபர்கள் கூட்டத்தில் தெரிவித்தேன். கழக அரசு, எந்தெந்த வகைகளில் இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது என்பதைச் சட்டப் பேரவையில் மிக மிக விளக்கமாக விவரித்தும் இருக்கிறேன். இருபது அம்சத் திட்டத்தில் கூறப்பட்டிருப்பவை ஒரு குறிப்பிட்டக் காலத்திற்குள் நிறைவேற்றி முடித்துவிடக் கூடியவைகள் அல்ல; முற்றுப்புள்ளி வைத்துவிடக் கூடியவையும் அல்ல; தொடர்ந்து நடைபெற வேண்டியவை என்றும் கழகத்தின் சார்பில் நானோ, நாவலரோ, பேராசிரியரோ, கழக முன்னணித் தலைவர்களோ கடந்த 1975, 1976 ஆம் ஆண்டுகளில் மேடைகளில் பேசியிருப்பதை யாரும் மறந்திருக்க முடியாது. வலதுகளுக்கு வேண்டுமானால்; இருபதா? ஐந்தா? என்று எடை போட்டுப் பார்த்து; எதை ஆதரிப்பது எதை ஆதரிப்பதில்லையென்று நாடகமாடத் தெரிந்திருக்கலாம். கழகத்தைப் பொறுத்த வரையில் மாற்றான் தோட்டத்து மல்லிகை என்பதற்காக அதில் மணமில்லை என்று வாதிடுகிற வக்கிரமான பண்பு என்றைக்குமே இருந்ததில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்திடுகின்றேன்.

உடன்பிறப்பே, வலதுகள் வேறொன்றும் கூறுகிறார்கள் – என் மீது வழக்குகள் இருக்கின்றனவாம்; அதனால் நான் அரசியல்

கருத்துக்களைப் பேசுவதோ, விமர்சிப்பதோ கூடாதாம்! அதை வேறு எழுதுகிறார்கள்! பேசுகிறார்கள்! கேலி புரிகிறார்கள்!

பயங்கரக் கொலை வழக்கொன்றில் ஆயுள் தண்டனைப் பெற்றுப் பல ஆண்டுகளுக்குப் பிறகு சிறையிலிருந்து விடுதலையான தோழர் பால தண்டாயுதம் அரசியல் பேசினார். நாடாளுமன்ற உறுப்பினராகக் கூட அமர்ந்திருந்தார். இந்திய நாட்டு அரசியலை மட்டுமல்ல; உலக நாட்டு அரசியலையெல்லாம் கூட விமர்சித்தார்.

அவரைத் தங்கள் வழிகாட்டிகளில் ஒருவராகப் பெற்றிருந்த வலதுகளும் அவர்தம் தோழர்களும், வழக்குகளில் தொடர்புபடுத்தப்பட்ட யாரும் அரசியல் பேசக் கூடாது என்று கூறுவது விந்தையாக இருக்கிறதல்லவா? பாவம்; விசித்திரமான மனிதர்கள்!

உடன்பிறப்பே, இப்படிப்பட்டவர்களின் உண்மை வடிவம் உலகிற்கு அம்பலமாகும் காலம் தொலைவில் இல்லை என்பதை மட்டும் உனக்குச் சொல்லி வைக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

04-01-1977

354. மறையாத மாணிக்கப் பரிதி!

உடன்பிறப்பே,

அண்ணனிடத்தில் அழியாத அன்பும், என்னிடத்தில் என்றுங் குறையாத பாசமும், நாவலர், பேராசிரியரிடத்தில் முறையே வற்றாத பணிவும் கனிவும், நமது பெருங் குடும்பமாம் கழகத்திடத்தில் தணியாத பற்றும், தளராத கொள்கை உறுதியும் கொண்டு கம்பீரமாக உலவி, கலகலவெனப் பேசி கடமையை முடிக்கும் வரையில் கண்ணுறக்கம் கொள்ளாது, பசி நோக்காது - தொய்வில்லாது தொண்டாற்றிய இயக்கத்தின் இலட்சியக் காளை தனது நாற்பத்தி ஐந்தாம் வயதிலேயே நம்மைப் பிரிந்து ஓய்வு கொள்ளப் போய் விட்டது பார்த்தாயா?

நேற்றெல்லாம் நினைத்து கூடப் பார்க்கவில்லையே; இப்படியொரு நெஞ்சைக் குலுக்கும் பூகம்பம் ஏற்படப் போகிறதென்று!

செயல்வீரன் வருவான், நம் சிந்தை மகிழ மீண்டும் பணி தொடருவான் என்று தானே வழி மேல் விழி வைத்துக் கிடந்தோம்.

அதற்குள் தன் அயராத உழைப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு மூச்சை நிறுத்திக் கொள்வான் என்று எதிர்பார்க்கவே இல்லையே!

"சிட்டி!" நமது அண்ணா; சிரிப்பு தழைக்கும் இதழ் திறந்து செல்லமாகக் கூப்பிடும் பெயர் அது.

அப்படித்தான் நாமும் வாய் நிறைய அழைத்தோம்; அந்த வலிமைமிகு தோளும், உறுதிமிகு உள்ளமும் படைத்த உடன்பிறப்பை!

"உடன்பிறப்பே" என்று நான் கடிதத்தை எழுதத் தொடங்கும் போதெல்லாம் இதயத்தின் ஒரு பகுதியில் பேரன்பு பீறிட்டுக் கிளம்பும், இன்னொரு பகுதியில் பாச உணர்ச்சியின் அலைகள் மோதும். அவை இரண்டறக் கலந்த பிறகே "உடன்பிறப்பே"

என்ற வார்த்தை வடிவம் கொள்ளும். அந்த 'உடன்பிறப்பு' என்ற சொல்லில் சங்கமமாகும் பெயர்களில் 'சிட்டி' என்னும் அந்த சிங்கத்தின் பெயரும் முதல் வரிசையில் நிற்கின்ற திருப்பெயர்களில் ஒன்றன்றோ?

கண்மூடித் துயில் கொள்வது போலத்தானே இருக்கிறது; அவன் காலத்தின் வாயில் விழுந்து விட்டதாக நம்பவே முடியவில்லையே!

அடடா! அந்த விழிக்க முடியாத உறக்கத்திலும் இதழ்களில் இளநகை மின்னுகிறதே! தூக்கத்திலும் கூட தூய நம் கழகத்தைப் பற்றிய இனிய கனவுகளைக் காணுகிறானா அந்தக் காளை?

சூழ்ந்து நின்று பத்து பேர் அடித்துத் துவைத்தாலும் வீழ்ந்து விடாத வீரத் திருவுருவம் ஆயிற்றே; எங்கள் சிட்டிபாபுவுக்கு!

அவனையா, சாவு-அவ்வளவு சுலபமாகக் கவ்விக் கொண்டு ஓடி விட்டது?

ஆரூர்த்தேர் அசைவது போல் அசைந்து வருவான் - அனலும் கனலும் ஆதாரபூர்வமான புள்ளி விவரங்களும் அவன் சொற் பொழிவில் கொட்டிக் கொண்டேயிருக்கும். எப்போதாவது நாம் கோபித்துக் கொண்டால், "போங்கண்ணே! என்னைக் கேலி செய்வதே உங்களுக்கு வேலை" என்று சொல்லிச் சிரித்தவாறே நமது சினத்தை அடக்கி விடுவான்.

உடன்பிறப்பே, அவனை மணந்தவர் கதறிப் புலம்பிடும் காட்சி! அவன் பெற்றெடுத்த மக்கள் கண்ணீரில் மிதக்கும் அவலம்! அவன் தமையனார் வேதனைக் கடலில் வீழ்ந்து தவிக்கும் கொடுமை! இவைகளுக்கிடையே அந்த இந்திரஜித்தனை ஈன்றெடுத்த எழுபது வயது மூதாட்டி சுருண்டு கிடக்கும் சோகப் பெருவெள்ளம்! அவனைத் தன் உடன்பிறப்பாகக் கருதி தலையிலும் மார்பிலும் அடித்துக் கொண்டு அழுது புரளும் கழகக் கண்மணிகள்! இவர்களில் நான் யாருக்கு ஆறுதல் சொல்ல முடியும்? ஆறுதல் கூறும் அந்தச் சக்தியை நான் இழந்து விட்டது போல் அல்லவா ஆகிவிட்டேன்.

> "மகனே! என் ராஜா! நான், உன்னை அடித்து வளர்த்ததில்லை - திட்டி வளர்த்ததில்லை - என் மீது என்னடா உனக்குக் கோபம்? ஏண்டா என்னை அழவிட்டு வேடிக்கை பார்க்கிறாய்?"

என்று சிட்டியைப் பெற்ற தாய், தன்னுடைய வரண்டு போன நாக்கினால் சோகக் கேள்வியை எழுப்பிய போது; அய்யோ! என் காதுகள் செவிடாகப் போயிருக்கக் கூடாதா? என்று எண்ணிக் கொண்டேன்.

தேக்கு மரத்தை அடியோடு வெட்டிச் சாய்த்தது போலல்லவா அவன் சாய்ந்து கிடக்கிறான்.

"பொரு தடக்கை வாளெங்கே; மணிமார் பெங்கே?
போர் முகத்தில் எவர் வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோள் எங்கே?"

என்ற கலிங்கத்துப் பரணியின் பாட்டுக்கு எடுத்துக்காட்டாக அல்லவா என் ஆருயிர் உடன்பிறப்பு, வீழ்ந்து கிடக்கிறான்.

"சுடரைச் சுடர் தூண்டு கண்ணான்
பல்லால் அதரத்தை அதுக்கி விண்மீது பார்த்தான்"

என்று இந்திரஜித்தனைக் கம்பர் வர்ணித்தமைக்கு ஈடான தீரவடிவங் கொண்ட வேங்கையல்லவா இன்று மரணத்தின் மடியில் கிடக்கிற கொடுமையைக் காண்கிறோம்.

கொள்கையில் தங்கம் எது? பித்தளை எது? என்று தேர்ந்தெடுக்கும் நேரம் வந்தபோது, தன்னைத் தங்கம் என நிரூபித்துக் காட்டிப் பித்தளைப் பித்தர்களை அடையாளம் சொன்ன அடலேறு அவன்!

அந்த அடலேறு அமைதி பெற்று விட்டது. அவசரமாக நம்மிடமிருந்து விடை பெற்றுக் கொண்டுவிட்டது. வீண்வம்புகள் சூழ் உலகில் இருந்தே விடுதலை பெற்றுக் கொண்டு விட்டது.

'சிட்டி' மறைந்து விட்டான். ஆம்; அந்தச் சீயம் மறைந்து விட்டது. தியாகத் திருவிளக்கு மறைந்து விட்டது. இறுதிவரைக் கொள்கை உறுதி கொண்டிருந்த இலட்சிய மனிதன் மறைந்து விட்டான்!

ஆனால்!

ஆனால்.....

அவன், நம் மனத்தை விட்டு மறையாத மாணிக்கப் பரிதி ஆகி விட்டான்.

அவன் காலடிகளுக்கு
என் கண்ணீர் வணக்கம்.

அன்புள்ள,
மு. க.
06-01-1977

355. படமெடுக்கிறார்களே, என்னைப் பார்த்து - ஏன்?

உடன்பிறப்பே,

திரு. ஏ.வி.எம். செட்டியார் அவர்கள் ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் கட்சிக்குள் ஏற்பட்ட பிணக்குகள் காரணமாக கருணாநிதி ஆட்சியில் சினிமாவுக்கு அதிக வரி விதிக்கப் பட்டது என்று ஒரு கருத்தினை வெளியிட்டுள்ளார். பட உலகில் பொறுப்புள்ள ஒரு பெரிய மனிதரிடமிருந்து நான் இதுபோன்ற ஒரு விமர்சனத்தை எதிர்பார்க்க வில்லையென்றாலும், இதைப் போலத் தொடர்ந்து செய்யப்படும் தவறான பிரசாரத்திற்கு நான் ஏற்கனவே அளித்துள்ள பதிலின் பகுதிகளை மீண்டும் ஏ.வி.எம். போன்றவர்களுக்கு நினைவூட்டுகிறேன். தேவையெனில் மீண்டும் பல விளக்கங்களை வழங்கவும் தயாராக இருக்கிறேன்.

சினிமாவை ஒழிப்பதற்குக் கருணாநிதி சதி செய்தார். கேளிக்கை வரியை உயர்த்தினார், யாரோ ஒரு குறிப்பிட்ட பெருமகனாரை வீழ்த்துவதற்காக "ஷோ டேக்ஸ்" என்ற காட்சி வரியை உயர்த்தினார் என்றெல்லாம் சிலர் அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

திரைப்பட அரங்குகளில் நடைபெறுகிற வரி ஏய்ப்புக்களைப் பற்றியும், சென்னை போன்ற நகர்ப்புற திரையரங்குகளில் வாராந்திர வாடகை என்ற பெயரால் அதிகத் தொகை வசூலிக்கிறார்கள் என்பது பற்றியும், சட்டப் பேரவையிலேயே நான் எடுத்துரைத்து அதன் காரணமாக கேளிக்கை வரி விகிதத்தில் சில மாற்றங்களைச் செய்து; சட்டப் பேரவையிலேயே உறுப்பினர்களாகவும், திரைப்படத்துறையில் தொடர்புகொண்டவர்களாகவும் இருந்த நண்பர்கள் சபையிலே தெரிவித்த சீரிய ஆலோசனைகளையும் ஏற்றுக் கொண்டு அந்த ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக்

குழுவில் திரைப்படத் துறை, திரையரங்குகள், விநியோகஸ்தர்கள் துறை பலரும் அங்கம் வகிக்கிற வாய்ப்பும் அளிக்கப்பட்டு, அந்தக் குழுவினர் இரண்டு மூன்று தடவை கூடிப் பேசியும் இருக்கின்றனர்.

1 வரி ஏய்ப்புக்களில் திரையரங்கினர் ஈடுபடாமல் இருப்பது.

2 திரையரங்குகளில் வாராந்திர வாடகை முறை இல்லாமல் வசூலின் அடிப்படையில் விகிதாச்சார முறையை கடைப்பிடிப்பது.

3 நகர்ப்புற திரையரங்குகள், கிராமப்புற "டூரிங் திரையரங்குகள்" - செலுத்த வேண்டிய கேளிக்கை வரிகளை எந்த வகையில் சீரமைப்பது போன்ற விஷயங்களை அந்தக் குழுவினர் ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை செய்வார்களேயானால் அதன் அடிப்படையில் கேளிக்கை வரி குறைப்பு சம்பந்தமான சில சலுகைகளை வழங்கலாமென்பது கழக அரசின் முடிவாக இருந்தது.

அந்தக் குழு, தனது பரிந்துரை அறிக்கையைத் தருவதற்கு முன்பாகத் தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டு விட்டது.

அந்தக் குழு கலைக்கப்படவில்லையென்று தான் நான் நம்புகிறேன். அந்தக் குழு தனது பரிந்துரைகளை விரைவில் வழங்கிடும் என்றும் எதிர்பார்க்கிறேன். கேளிக்கை வரி அதிகமாகிக் கொண்டே போனால் படத் தயாரிப்பு பாதிக்கப்படும் என்பதை நான் மறுக்கவில்லை. படங்கள் பாதிக்கப்படுவதற்குக் கேளிக்கை வரி மட்டும் அதனையொட்டி திரைப்படத் துறையினர் விடுத்த கோரிக்கை காரணமல்ல! அதைவிடப் பெரிய காரணங்கள் பல இருக்கின்றன.

படமெடுக்கிற சுருள்களின் விலை இப்போது எவ்வளவு? விலை உயர்ந்ததற்கு என்ன காரணம்? வரி அதிகமானது காரணமில்லையா? அந்த வரி மாநில அரசு விதித்ததா?

படம் எடுத்து முடிந்ததும், ஒவ்வொரு பிரதி எடுப்பதற்கும் மத்திய அரசுக்குக் கட்டணம் கட்ட வேண்டுமென்று பத்தாண்டுக்கு முன்பே யார் ஆணையிட்டது? கருணாநிதியா? இல்லையே! அந்தக் கட்டணங்கள் ஆண்டுக்கு ஆண்டு எவ்வளவு உயரத்தில் வளர்ந்திருக்கிறது என்பது படம் எடுப்பவர்களுக்குத் தெரியாதா?

சென்னையில் உள்ள முக்கியமான தியேட்டர்களில் நடுத்தரமான படங்களைக் கூட வெளியிட முடியாமல் தயாரிப்பாளர்கள் தவிப்பது ஏன்? தியேட்டர்காரர்கள் அதிக வாடகை கேட்கிறார்கள் என்பது காரணமல்லவா?

இதையெல்லாம் விட முக்கியமான காரணம் ஒன்று இருக்கிறதே!

பட விநியோகத்தில் F.H. என்று, அதாவது வரையறுக்கப்பட்ட வாடகை என்று ஒருமுறை உள்ளது. அதன்படி பட விநியோகஸ்தர், தியேட்டர்காரருக்கு படத்தை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு குறிப்பிட்ட தொகைக்கு திரையிடத் தருவார். ஒரு ஊரில் ஒரு தியேட்டர் இருந்தால் அந்த தியேட்டர்காரர் ஆயிரம் ரூபாய் செலுத்தி ஒரு வார காலத்திற்கு அந்தப் படத்தை திரையிடும் உரிமையைப் பெறுவார். ஆனால் இந்த முறையின் இடையே கறுப்புப்பணம் விளையாடும்! ஆயிரம் ரூபாய் செலுத்திய தியேட்டர்காரர் ரசீது பெறுவது ரூபாய் ஐநூறுக்காகத்தான் இருக்கும். கணக்கில் வரும் தொகை ஐநூறுதான்! மீதி ஐநூறு படத் தயாரிப்பாளருக்குச் செல்லாது! விநியோகஸ்தரின் கறுப்புப் பணப் பெட்டிக்குள் போய்விடும். விநியோகஸ்தருக்குத் தந்த கறுப்புப் பணத்தைச் சரிக்கட்ட தியேட்டர் உரிமையாளர் டிக்கெட் விற்பனையில் கள்ளத்தனம் செய்கிறார். அதற்காக ஒரு சில அதிகாரிகளையும் கறுப்புப்பண திருவிளையாடல் மூலம் கைக்குள் போட்டுக் கொள்கிறார். வரி ஏய்ப்பு நடைபெறுகிறது.

இது எல்லா தியேட்டர்காரர்களுமோ அல்லது எல்லா விநியோகஸ்தர்களுமோ அல்லது எல்லா அதிகாரிகளுமோ - செய்கிறார்கள் என்று நான் கூற மாட்டேன். ஆனால், இது தங்கு தடையின்றி பெரிய ஊர்களிலும், நகரங்கள் சிலவற்றிலும் கூட கணிசமான அளவுக்கு நடைபெறுகிறது.

இப்படி தியேட்டர் அளவிலே உற்பத்தியாகிற கறுப்புப் பணம், விநியோகஸ்தர் அளவிலே இரண்டு மடங்காகப் பெருகுகிறது.

உதாரணமாக தியேட்டர் அளவில் குறைந்த தொகையாக இரண்டாயிரம் ரூபாய் கறுப்புப்பணம் என்று வைத்துக் கொண்டால், அவைகளும், விநியோகஸ்தர் இவ்வாறு பல தியேட்டர்களில்

பெறுகிற கறுப்புப் பணமும் சேர்ந்து ஒரு பகுதியில் மட்டும் இரண்டு லட்ச ரூபாய்க்குக் குறையாத கறுப்புப் பணம் உற்பத்தியாகிறது.

பிறகு, இந்தக் கறுப்புப் பணமெல்லாம் சென்னையை நோக்கிச் சில தயாரிப்பாளர்களிடம் அணிவகுக்கத் தொடங்குகின்றன. படத் தயாரிப்பாளர் என்ன செய்கிறார்? ஒரு லட்சமோ இரண்டு லட்சமோ என்று ஒப்பந்தம் எழுதிக் கொண்டு, திரை மறைவில் மிச்சமுள்ள ஏழெட்டு லட்ச ரூபாய்களைப் பெற்றுக் கொள்கிற நடிகரைத் தன் படத்தில் நடிக்க வைக்கிறார்.

படம் எடுத்து முடிவதற்குள் அப்படிப்பட்ட ஒரு சில தயாரிப்பாளர்கள் படுகிற பாடு; அப்பப்பா! சொல்லத் தரமன்று!

"உடும்பு வேண்டாம்; கையை விட்டால் போதும்!" என்று பெரிய படத் தயாரிப்பாளர்கள், தங்கள் மிச்சமுள்ள கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளத் தமிழ்ப் படங்கள் எடுப்பதையே நிறுத்திக் கொண்டார்கள் என்பதை யாராவது மறுக்க முடியுமா?

பெரிய நடிகரைப் போட்டதால் படம் நல்ல விலைக்கு விற்பனையாகிறது. ஆனால் படத் தயாரிப்பாளருக்கு என்ன மிச்சம்? எடுத்த படத்தைத் திருப்பித் திருப்பி எடுப்பது! பாதி படத்தில் முக்கிய கதாபாத்திரங்களை மாற்றுவது! அல்லது, கதையையே மாற்றுவது-இப்படிப்பட்ட சோதனைகளுக்கெல்லாம் பாவம்; சில படத் தயாரிப்பாளர்கள் ஆளாக வேண்டி நேரிடுகிறது.

அதனால் படத்தை விற்ற விலையை விட, தயாரித்த செலவு சில நேரங்களில் அதிகமாகி விடுகிறது. விளைவு என்னவென்றால்; எங்கேயோ பொதுமக்கள் பொழுது போக்கிற்காகத் தந்த பணம் - அந்த ஊரிலேயே ஒரு பகுதி கறுப்புப் பணமாக மாறி, அரசாங்க வரி இலாகாவையும் ஏமாற்றி, விநியோகஸ்தர்கள் மூலமாக, தயாரிப்பாளர்களிடம் வந்து அவர்கள் வாயிலாகக் குறிப்பிட்ட சில நடிகர்களின் கைக்கு மாறி விடுகிறது.

இந்தக் கறுப்புச் சந்தை ஒழிக்கப்பட்டால் தமிழ்ப் படத் தயாரிப்பாளர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட முடியுமல்லவா? தயாரிப்பாளர்களில் சிலரும், இந்த அரசாங்க விரோதமான கறுப்புச் சந்தைக்கு விதிவிலக்கு அல்ல என்பதையும் நான் சுட்டிக் காட்டவே கடமைப்பட்டுள்ளேன்.

எனவே திரைப்படத் துறையில் அடிவாரத்திலிருந்து உச்சி வரையில், விரிவடைந்து பரவியுள்ள வரி ஏய்ப்பு கறுப்புப் பணம்

போன்றவைகளைக் களைந்திட, தொடர்புடைய அனைவரும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும்.

ஆந்திரத்திலும், கர்நாடகத்திலும் படம் எடுக்க உதவிப் பணம் தருகிறார்கள் என்றால்; அங்கே இதுவரை திரைப்படத்துறை வளர்ச்சி பெறவில்லை. அதனை ஊக்கப்படுத்திடத் தருகிறார்கள்.

தமிழகத்தில் திரைப்படத்துறை வளர்ச்சி பெற்ற ஒன்றாகும். நான் குறிப்பிட்டுள்ள சீர்கேடுகள், வரி ஏய்ப்புகள் அகற்றப்படுகிற அடிப்படையில் கேளிக்கை வரி சீரமைக்கப்பட்டாலே; இங்கும் அரசினரும், படத் துறையினரும் இழப்புக்கு ஆளாகாத அளவுக்கு முன்னேற்றம் ஏற்படக் கூடும்.

கழக அரசில்தான் "தற்காலிக நிரந்தர சினிமா தியேட்டர்கள்" கட்டுவதற்கான கடன் உதவிகள் தருகிற திட்டம் செயல்படுத்தப் பட்டது என்பதை மறந்து விடக் கூடாது.

எனவே, கழக அரசு திரைப்படத் தொழிலை அழிக்கக் கங்கணம் கட்டிக் கொள்ளவில்லை. கேளிக்கை வரி முதலியவற்றை சீரமைக்கக் குழு அமைத்திருப்பது ஒன்றே அந்தத் தொழில் அழியக் கூடாது என்பதில் கழக அரசுக்கு இருந்த அக்கறையையும், விட்டுக் கொடுக்கும் போக்கையும் நன்கு உணர்த்தும்.

இதையெல்லாம் மறைத்து விட்டு; படத் துறையைப் பாழாக்கத் திட்டமிட்டேன் என்று என்னைப் பார்த்துப் படமெடுக்கிறார்களே - நான் அவர்களைப் பற்றி என்ன சொல்ல!

அன்புள்ள,

மு. க.

08-01-1977

356. அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்!

உடன்பிறப்பே,

திராவிடர் இயக்க மணி விழாவினை பல நகரங்களிலும், பட்டி தொட்டிகளிலும் கூட நாம் நடாத்தி இயக்கத்தின் அறுபதாண்டு கால வரலாற்றினை மக்களுக்கு உணர்த்திடும் கடமையை நிறைவேற்றி வருகிறோம். இந்த இயக்கம் தோன்றுவதற்கே காரணமாக இருந்த பிரச்சினைகளை மூடிமறைத்து விட்டு, இந்த இயக்கத்தின் இலட்சியத்தையே - முதுகெலும்பை முறித்துப் போடும் வேலையில் நடிகர் கட்சியினர் மிகத் தீவிரமாக இறங்கியுள்ளனர். அண்மையில் நீதிக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான டாக்டர் ஏ. இராமசாமி அவர்களின் இரங்கற் கூட்டமொன்றில் பேசிய நண்பர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தன்னையும் தன் கட்சியையும் "நீதிக் கட்சியின் வாரிசு" என்று அறிவித்தார். அந்த அறிவிப்பு வந்த ஏடுகளின் பிரதிகள் எதுவும் காணாமற் போய் விடவில்லை. அதற்கிடையே மதுரையில் அவரது கட்சியைச் சேர்ந்த மாணவர்கள் கூடி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றனர்.

> "மாணவர்களுக்கு அரசினரால் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை சாதி அடிப்படையில் இல்லாது, கல்வித் தகுதி, பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் வழங்க, மத்திய அரசு தகுந்த சட்டம் இயற்ற ஆவன செய்ய வேண்டும்."

இதுதான் அந்தத் தீர்மானம், இப்போது நடிகர் கட்சி மாணவர்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மட்டுமல்ல, இதே தீர்மானத்தின் கருத்தை 21-3-75 அன்றைய தினம் சட்டப் பேரவையில் நடிகர் கட்சியின் துணைத் தலைவரும் நடிகர் கட்சி உறுப்பினர்களும் வலியுறுத்திப் பேசியதையும் யாரும் மறந்திருக்க முடியாது. என்ன பேசினார்கள் தெரியுமா?

"இந்த அரசு தாழ்த்தப்பட்டோருக்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும் சலுகைகளை அளித்துக் கொண்டே போனால் முன்னேற்றமடைந்த சமுதாயம் பின் தங்கிவிடும்."

இது நடிகர் கட்சியினர் எடுத்து வைத்த வாதம், உடனே நான் குறுக்கிட்டுக் கேட்டேன்:

"அப்படியானால் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சலுகை வழங்குவதாலேயே முன்னேறிய சமுதாயத்தினர் தாழ்ந்து விடுவார்கள் என்று உறுப்பினர் கருதுகிறாரா?"

இதுதான் என் கேள்வி, உடனே நடிகர் கட்சியினர் எனக்குப் பதில் அளிக்கும் வகையில்,

"இன்னும் ஐம்பது ஆண்டுகளில் முன்னேறிய சமுதாயம், பிற்படுத்தப்பட்ட சமுதாயமாக ஆகிவிடும்."

என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினர். அப்போது அந்தக் கட்சியைச் சேர்ந்த தியாகராயர் நகர் தொகுதி உறுப்பினர் கே.எம். சுப்பிரமணியம் அவர்கள், "இப்போதே அப்படி ஆகிவிட்டதே" என்று இடைமறித்துச் சொன்னார்.

எனவே, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் எனப்படும் கம்யூனல் ஜி.ஓ உரிமைச் சாசனத்தை உடைத்தெறிவதையே மூலநோக்கமாகக் கொண்டது நடிகர் கட்சி என்பதற்கு இவற்றைவிட வேறு எடுத்துக்காட்டுக்கள் தேவையில்லை. தியாகராயர், நடேசனார், டாக்டர் நாயர், பனகல் போன்றவர்களின் அயராத உழைப்பால்; அடித்தளத்தில் கிடந்த மக்களுக்குக் கிடைத்த 'ஒளிவிளக்கு' வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமையாகும்.

காங்கிரஸ் கட்சியின் தளபதிகளில் ஒருவராக இருந்து கொண்டே இந்தக் கோரிக்கைக்காக காங்கிரஸ் மாநாடுகளில் தீர்மானம் கொண்டு வந்து வாதாடியவர் பெரியார்.

பெரியார் அவர்கள் அவரது வாழ்நாள் முழுவதும் பாடுபட்டது இந்த உரிமையின் வெற்றி விளைவுகளுக்காகத்தான்! பேரறிஞர் அண்ணா வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கு இடையூறு நேராமல் பாதுகாக்கப் பெரும் பணியாற்றினார்.

இயக்கத்தின் இலட்சிய தீபம் அணையாமல் காக்கப்பட வேண்டுமென்று அண்ணாவும், அய்யாவும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் பெரும் வரலாறாகும். அந்த அடிப்படையில்தான் மேலும் ஒரு கட்டமாக ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு கழக அரசு தாழ்த்தப்பட்டோருக்கு 16 சதவிகிதம் என்றிருந்ததை 18 சதவிகிதமென்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 25 சதவிகிதம் என்றிருந்ததை 31 சதவிகிதமென்றும் உயர்த்தியது. இந்த உயர்வு, தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஆகிய வகுப்புகளின் "மக்கள் தொகை" எண்ணிக்கை அடிப்படையில் செய்யப்பட்ட ஒன்றாகும். கழக அரசு நியமித்த பிற்பட்டோர் நலக் குழுவினர் செய்துள்ள பரிந்துரைகளில் ஒன்று பிற்பட்டோரிலும் பணம் படைத்தவர்களை விட, அந்த வகுப்பில் உள்ள ஏழைகள் பயனடையுமாறு அந்த விகிதாச்சாரப் பலன் அமைய வேண்டும் என்பதாகும்.

அது போன்ற பரிந்துரைகளை ஆராய்ந்து, ஏற்றதை நடைமுறைப்படுத்தலாமே தவிர - அண்ணா - பெரியார் போன்றவர்களின் இலட்சியத்தை - அறுபதாண்டுக்கால இயக்கத்தின் மூத்த தலைவர்கள் அரும்பாடுபட்டுத் தேடிய வெற்றியை - நடிகர் கட்சியினர் முறியடிக்க வேண்டுமென்று முழங்குவதும் தீர்மானம் நிறைவேற்றுவதும் அவர்களுக்கு இந்த இயக்கத்தின் கொள்கைகளே புரியவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையை அழிப்பதற்கு ஒரு முயற்சி நடைபெற்றபோது - தியாகச் சுடர் காமராஜரே கூட அந்தக் கொள்கை அழியாமல் பாதுகாத்திட பக்கபலமாக இருந்தார்.

1949ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் "திராவிட நாடு" இதழில் எழுதியுள்ளதையாவது அண்ணாவின் பெயர் சொல்லி அவர் கொள்கைக்கு மாறாகச் செயல்படுவோர் படித்துப் பார்க்கட்டும்.

> "வகுப்பு வாரியாக உத்தியோகம் தரும் முறையும், கல்வி வசதி ஏற்படுத்தித் தரும் முறையும் இருப்பதால் - மற்ற வகுப்பார்களிலேயும் கல்வி பெறவும், உத்தியோகம் பெறவும் குறிப்பிடத்தக்க அளவுக்கு முடிகிற காரணத்தால் எங்கு பார்த்தாலும் 'பிராமண ஆதிக்கம்' என்கிற பேச்சுக்கு இருந்து வந்த பயங்கர சக்தி

ஓரளவுக்குக் குறைந்திருக்கிறது. எல்லா வகுப்பாரிலும் தானே படிக்கிறார்கள் என்று பேச முடிகிறது. சாந்தி உண்டாக்க சௌகரியம் ஏற்படுகிறது. வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை ரத்து செய்து விட்டால், பிறகு அணைக்க முடியாத நிலை கிளம்பும். இந்த கேட்டினைத் தான் தேடித் தேடி அழைக்கிறார்கள்.

27-2-49 திராவிட நாடு

நடிகர் கட்சி மாணவர் மட்டுமல்ல; சட்டப் பேரவையில் பேசிய அக்கட்சியின் உறுப்பினர்கள் மட்டுமல்ல; கட்சியின் தலைவர் திரு.எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்களே வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு எதிரான கருத்தைப் பல நேரங்களில் வெளியிட்டிருக்கிறார்.

என் செய்வது; இந்த இயக்கத்தின் இலட்சியம் - கொள்கை - குறிக்கோள் பற்றி அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்!

அன்புள்ள,

மு. க.

09-01-1977

357. தெளிவுபடுத்திவிடுகிறேன்!

உடன்பிறப்பே,

சென்னைக்கு வருகை தந்த வலது கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் இராஜேஸ்வர ராவ் அவர்கள் அவரது கட்சிக்கும் காங்கிரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் கருத்து வேறுபாடுகள் குறித்து விளக்கம் தந்துள்ளார். இருபது அம்சத் திட்டத்திலே தங்களின் கட்சி காட்டுகிற ஆழமான ஆதரவை ஐந்து அம்சத் திட்டத்திலே காட்டாததற்கான காரணங்களையும் குறிப்பிட்டிருக்கிறார்.

எடுத்துக்காட்டாக குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பற்றி அவர் விமர்சிக்கும் போது "வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஜனத்தொகைக் கட்டுப்பாடு அவசியம் என்பதை நாங்கள் ஒப்புக் கொள்ளவில்லை" என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

இதில் நம்மைப் பொறுத்தவரையில் இருபது அம்சம், ஐந்து அம்சம் என்ற எண்ணிக்கை கணக்குமல்ல; அல்லது அவைகளை யார் கூறுகிறார்கள் என்ற பிரச்சினையுமல்ல; எனினும் கூறப்படுகிற திட்டங்கள் முடுக்கிவிடப்பட்டு, முறையாக நிறைவேறுமேயானால் நல்வாழ்வை நோக்கி நாடு நடை போடும் என்பதில் நம்பிக்கை கொண்டவர்கள்தான். இந்தத் திட்டங்களின் வாயிலாகக் கூறப்படும் பல அம்சங்களை நமது கழகம் தனது கொள்கைகளாகவும், கோரிக்கைகளாகவும் நீண்டகாலமாகவே கொண்டிருக்கிறது. எனவே, கோபதாபங்கள் - மனக் கசப்புக்கள் - உறவு முறிவுகள் - இவைகளின் காரணமாக பொதுவான கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மன இயல்பைத் தி.மு.கழகம், என்றைக்கும் பெற்றிருந்ததில்லை. இன்றைக்கும் அப்படித்தான்!

இராஜேஸ்வரராவ் அவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க மக்கள் தொகை கட்டுப்பாடு அவசியம் என்பதைத் தனது கம்யூனிஸ்டுக் கட்சி ஒத்துக் கொள்ள முடியாது என்று கூறுவது எந்த வகையிலும் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை.

திட்டங்களின் மூலம்தான் வேலை வாய்ப்புக்களை அளிக்க முடியும். திட்டங்கள், நமது நாட்டின் பொருளாதார வாய்ப்புக்கு ஏற்ற வகையில்தான் தீட்ட முடியும். வேலை வாய்ப்புக்களை வழங்குகிற திட்டங்களைத் தீட்டும் போது, இன்னொரு புறத்தில் மக்கள் தொகை பெருகிக் கொண்டே போனால் - உருவாக்கப்பட்ட திட்டங்களின் பயனையும் மக்கள் அளவாகப் பகிர்ந்து கொள்ள முடியாமல் அதே நேரத்தில் வேலை வாய்ப்பு கேட்கிற பெரியதோர் மக்கள் கூட்டம் அணிவகுத்து நிற்கிற நிலையும் ஏற்படும். இந்தக் கேட்டினைக் களையத்தான் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை விரிவாகவும், விரைவாகவும் செயல்படுத்த வேண்டுமென்று கூறப்படுகிறது.

குடும்பக் கட்டுப்பாட்டுக்குத் தோழர் இராஜேஸ்வரராவ் ஒரு புதுமையான வழியையும் கூறியிருக்கிறார். "நிலமற்ற விவசாயத் தொழிலாளி ஒருவனுக்கு மூன்று ஏக்கர் நிலம் கொடுத்து, அதில் பயிரிட உதவியும் அளித்தால் அவனுடைய வாழ்வு உயரும். அவன் சிந்திக்கத் தொடங்குவான். அதிகக் குழந்தைப் பெற்றால் அனைவருக்கும் கல்வி அளிக்க முடியாது; அவர்களை செழிப்பாக வளர்க்க முடியாது என்று கருதி அவனாகவே குடும்பத்தை அளவோடு வைத்துக் கொள்வான்" என்பது தான் அவரது யோசனையாகும்.

இதற்கு இந்தியாவில் நிலமற்ற விவசாயத் தொழிலாளிகள் எவ்வளவு பேர் என்ற கணக்கை எடுக்க வேண்டும். அவ்வளவு பேருக்கும் தலைக்கு மூன்று ஏக்கர் வீதம் கொடுக்க நிலமிருக்கிறதா என்றும் கணக்கிட வேண்டும். அப்படிக் கணக்கிட்டு மூன்று ஏக்கர்கள் வீதம் விவசாயத் தொழிலாளிக்குத் தருவதைக் கழகம் மிக்கப் பூரிப்போடு வரவேற்றிடக் காத்திருக்கிறது.

ஆனால், அப்படி ஆளுக்கு மூன்று ஏக்கரா நிலம் கொடுக்கிற திட்டத்தை நிறைவேற்றுவதாக இருந்தாலும், அதற்கும் மக்கள் தொகை பெருக்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமல்லவா?

மக்கள் தொகை பெருகி, அதிலே நிலமற்ற விவசாயத் தொழிலாளர் எண்ணிக்கையும் பெருகிக் கொண்டிருந்தால், தலைக்கு மூன்று ஏக்கரா என்று பிரிக்க முடியாமல் "மூன்று சென்ட்" நிலம்கூட அளிக்க முடியாத நிலையல்லவா ஏற்பட்டுவிடக் கூடும்.

மூன்று ஏக்கரா ஒரு விவசாயத் தொழிலாளிக்குக் கிடைத்து விட்டால், அவன் சிந்திக்கத் தொடங்கிக் குழந்தைகளைக் குறைவாகப் பெறுவான் என்கிறார் அவர்.

இப்போது மூன்று ஏக்கரா நிலமுள்ள வீடுகள் அனைத்திலும் அளவோடுதான் குழந்தைகளைப் பெற்றிருக்கிறார்களா?

சரி; இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சினை, விவசாயத் தொழிலாளியுடன் முடிந்து விடுகிற ஒன்றா? இல்லையே! மற்றும் எத்தனையோ வகையான அலுவலர்கள், தொழிலாளி வர்க்கத்தினர், நடுத்தர வர்க்கத்தினர் - அவர்களுக்கும் இந்தப் பிரச்சினையில் ஒரு தீர்வு கண்டாக வேண்டுமல்லவா?

குடும்பக் கட்டுப்பாட்டை நிறைவேற்ற செயல்படுத்தப் படுகிற முறைகளில் குறைகள் இருந்தால் அவற்றைச் சுட்டிக் காட்டி சீர்படுத்த முனையலாமே தவிர, அந்தத் திட்டம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்காது எனக் கூறுவது ஏற்கத் தக்க வாதமாகாது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான வரைவுகள் விவாதிக்கப்பட்டபோது கழக அரசின் சார்பாக தெரிவித்த கருத்து ஒன்றை இப்போது நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஐந்தாண்டுத் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் மொத்தத் தொகையில் பத்து சதவிகிதத் தொகை குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டால்தான் திட்டங்களின் உரிய பயனை மக்கள் நிறைவான அளவுக்குப் பகிர்ந்து கொள்ள முடியும் என்பதுதான் அந்தக் கருத்தாகும்.

வேலை வாய்ப்புக்களை ஏராளமாக வழங்கிடவும், தொழிலாளர் நலன்களைப் பேணவும் அரிய யோசனைகளை வலது கம்யூனிஸ்டுக் கட்சி மட்டுமல்ல எல்லாக் கட்சிகளுமே சிந்தித்து அவைகளைச் செயல்படுத்திடத் தக்க முறைகளை எடுத்துரைக்கலாம்.

அதை விடுத்து, எந்தத் திட்டம் வெற்றி பெற வேண்டுமென்றாலும் இன்றுள்ள நிலையில் இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் வெற்றி பெற்றாக வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது.

இதைச் சொன்னால் உடனே வலது கம்யூனிஸ்டுகள் நமது கழகத்தையும் பிற்போக்கு சக்தி என்று வர்ணிக்கத் தொடங்கி விடுகிறார்கள்.

"கேப்டலிசம், சோஷலிசம், கம்யூனிசம் மூன்றும் சேர்ந்தது தான் அண்ணாயிசம்" என்று விளக்கமளித்த நடிக நண்பரின் கட்சி, வலதுகளுக்கு முற்போக்கு சக்தியாகத் தெரிகிறது. அவர்கள் விட்டாலும் அவர்களின் கூட்டை விட மாட்டேன் என்று கூறுகிறார்கள். நாம், அவர்களுக்குப் பிற்போக்கு சக்தியாகத் தோன்றுகிறோமாம்!

யானையின் காதைத் தொட்டுப் பார்த்துவிட்டு யானை, முறம் போல் இருக்கிறது என்றும் - காலைத் தொட்டுப் பார்த்துவிட்டு உரல் போல் இருக்கிறது என்றும் யாரோ கூறியதாக சிறு வயதில் வேடிக்கைக் கதை படித்திருக்கிறோமல்லவா? அதைப் போலத்தான் வலது கம்யூனிஸ்டுகள்; யார் தங்களை விமர்சித்தாலும் அவர்களைப் பிற்போக்காளர் பட்டியலில் சேர்த்து விடுவார்கள்.

அவர்களது கொள்கைக் குழப்பங்களை நாம் ஆதாரங்களோடு எடுத்துரைக்கிறோம்; அதனால் நம்மைப் "பிற்போக்கு" எனச் சாபம் கொடுத்து விட்டார்கள்.

எந்தச் சாபமாவது கொடுக்கட்டும், ஆனால் நாம் சொல்லாத ஒன்றை அவர்களாகவே இட்டுக் கட்டிச் சொல்லி அந்தத் தோழர் இராஜேஸ்வரராவ் அவர்களும் பேசியிருப்பதாக ஒரு மாலை ஏட்டுச் செய்தி பார்த்து நான் திடுக்கிட்டுப் போனேன்.

"இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியைத் தடை செய்யுமாறு தமிழ் நாட்டில் இருக்கும் கருணாநிதியும் குரல் எழுப்புகிறார்.

என்பதாக அவர் கூறியிருக்கிறார். அப்படி யாரோ அவருக்கு ஒரு தவறான தகவலைக் கூறியிருக்கிறார்கள். வலது கம்யூனிஸ்டுக் கட்சியுடன் கொள்கை வாதங்கள் நடத்தவும், அவர்களது கருத்துக்குக் கருத்து எடுத்து வைக்கவும் அரசியல் ரீதியாகத் தி.மு.கழகம் தயாராக இருக்கிறதே தவிர, அந்தக் கட்சியைத் தடை செய்ய வேண்டுமென்ற கருத்தை என்றைக்குமே வெளியிட்டது கிடையாது. அது போன்ற முறையைக் கழகம் விரும்பியதும் கிடையாது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெளிவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

11-01-1977

358. இப்படியொரு பொங்கல் வாழ்த்து!

உடன்பிறப்பே,

“பொங்கல் விழா!

தமிழர்களின் பொன்னான விழா!

புன்னகை தவழும் விழா!

குழலும், யாழும், குழந்தையின் மழலையும், கோதையர் ஆடலும், குமரர்கள் வீரமும் எங்கும் நிறைந்திடும் இனிய விழா!

எந்த ஒரு விழாவின் பெருமையும், உழைப்பின் விளைவாகத் தான் அமைய முடிகிறது. அந்த உழைப்பும், உறுதியும் பெருகிட இந்தப் பொங்கல் விழா ஊக்கமளிக்கட்டும்.

பொங்கல் பொங்கிடும் போது அரிசிகளில் வேறுபாடு இருப்பதில்லை. அவ்வாறே, தலைவர்கள் தொண்டர்கள் என்ற வேறுபாடின்றி தியாகப் பொங்கல் சமைத்திட வேண்டும். அரிசிக்கிடையிலேயும் ஓரிரு கற்கள் இருப்பதுண்டு. அவைகளை, முறத்திலிட்டுப் புடைக்கும் போதே தாய்மார்கள் பொறுக்கி எறிந்துவிடுவர். அதனையும் மீறி ஒரு கல், உலைப்பானைக்குள்ளே நுழைந்து, நம் பல்லைப் பதம் பார்ப்பதும் உண்டு. ஒரு இயக்கத்தை நடத்தும் நமக்கும் அந்த அனுபவம் நிறைய உண்டல்லவா?

பல்லில் பட்ட கல்லை, உடனே தொலைவில் உமிழ்ந்து விடுகிறோம். உலையில் நுழைந்து கொண்ட கல், தன் இயல்புக்கேற்ப இருக்குமே தவிர அரிசியுடன் கலந்து சோறாகும் பக்குவத்தைப் பெறுவதில்லை. எனினும்; அது - தானும் சோற்றுப் பானையில் இருந்தேன் என்ற பெருமையைச் சொல்லிக் கொள்ள முடியும்.

நாற்றாக இருந்து, பயிராக மாறி விளைச்சலில் நெல் மணிகளாகத் திகழ்ந்து பானைகளில் அழகாக அமர்ந்து, பின் உலைக்குள்ளே சென்று அமுதம் எனும் பெயரைத் தழுவிக் கொள்கிற பெருமையைப் பெறுகிறது அரிசி!

பொங்கல் கொண்டாடும் என் அன்பு உடன்பிறப்புகளே; அந்த அமுதமாக மாறிட நாம் நம்மை தயார்படுத்திக் கொள்வோம். இந்த உறுதியோடு பொங்கல் விழா கொண்டாடிடுவோம்."

இவ்வாறு சென்ற ஆண்டு பொங்கல் திருநாளின் போது உடன் பிறப்புகளுக்கு என் பொங்கல் வாழ்த்துக்களை வழங்கினேன்.

ஒரு சில இல்லங்களில் மகிழ்ச்சிக்குப் பதில், துயரம் மண்டிக் கிடப்பதுண்டு. அதற்காக ஒரு சமுதாயம் பொதுவாக எடுக்கிற விழா நின்று போய் விடுவதில்லை.

எனினும் உடன்பிறப்பே,

இந்த ஆண்டு பொங்கலில் புத்தாடை உடுத்திடவோ, சர்க்கரைப் பொங்கலைச் சுவைத்திடவோ, கரும்பின் சாறு பருகிடவோ நான் தயாராக இல்லை!

நீ உன் குடும்பத்தாருடன் களித்திரு! புனலாடி மகிழ்ந்திரு! புதிய ஆடை! புதிய எழுச்சி! 'பொங்கலோ பொங்கல்' என்ற முழக்கம் உன் இல்லத்தில் ஒலிக்கட்டும்.

ஆனால் ஒன்று, எங்கும் இன்பம் பொங்கிடும் ஏற்றமிகு திருநாளில் என்னைக் காண வேண்டுமென்று ஆர்வம் கரை புரள ஓடிவராதே! அன்று நான் யாரையும் காண்பதாக இல்லை. தயவு செய்து அந்த ஒரு நாள் எனக்கு நான் உன்னிடம் கெஞ்சிக் கேட்கிற அந்த உரிமையைக் கொடுத்திடுமாறு உன்னை வேண்டுகிறேன்.

இந்தக் கடித வாயிலாக என் பொங்கல் வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்! பொங்கலுக்கு மறுநாள் திருவள்ளுவர் நாளில் உன்னை உம்மிடியார் மண்டபத்துக் கூட்டத்தில் சந்திப்பேன். அதனால், பொங்கல் நாளன்று என்னைக் காண வருவதைத் தயவு செய்து தவிர்த்து விடுக என்று உன்னை ஆயிரம் முறை கேட்டுக் கொள்கிறேன்.

உனக்கும், உன் குடும்பத்தாருக்கும், உனக்கு எழுதும் இந்த மடல் வாயிலாகத் தமிழ் மக்கள் அனைவருக்கும் என் இதயமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள் உரியதாகுக.

அன்புள்ள,

மு. க.

13-01-1977

359. பயிற்சி முகாமினர் படிக்க மறந்தது!

உடன்பிறப்பே,

ஊழியர் பயிற்சி முகாமைத் துவக்கி வைப்பது என்ற பெயரால் மத்திய அமைச்சர்களில் ஒருவரான மாண்புமிகு ஓம்மேத்தா அவர்கள், தேர்தல் பிரசாரத்தைச் சென்னை நகரில் துவக்கி வைத்திருக்கிறார். மிக வேகமான பேச்சு, ஆவேசமான உரை. தி.மு.க. மீது எந்த அளவுக்கு அவதூறுக் கணைகளைத் தொடுக்க முடியுமோ, அந்த அளவுக்குத் தன்னால் முடிந்த மட்டும் தொடுத்திருக்கிறார். தி.மு.க. ஒரு பிரிவினைக் கட்சி என்று ஓங்கி அடித்திருக்கிறார். உரக்க முழங்கியிருக்கிறார். பொதுவாகச் சொன்னால் போர் முரசு கொட்டி விட்டார் என்றே எடுத்துக்கொள்ள வேண்டும். அதே பாணியில் பதில் எதுவும் எழுதுவதற்கு நான் அவர் அளவுக்கு உயர்ந்தவனுமல்ல; அந்த முறையைக் கற்றவனுமல்ல. ஏதோ சின்னஞ் சிறு வயதில் மேடைகளில் துடிப்பான வகையில் நான் பேசியிருக்கக் கூடும். பின்னர் படிப்படியாக அண்ணா தந்த பயிற்சியைப் பெற்று அடக்க உணர்வோடு பேசவும் எழுதவும் பழகிக் கொண்டவன். எனவே, கோலோச்சும் இடத்தில் இருந்து பேசுகிற ஓம்மேத்தா அவர்களின் அளவுக்கு குரல் உயர்த்திப் பேச என்னால் இயலாது. அவரைப் போன்ற பெரியவர்கள் என் விளக்கங்களைக் கேட்கத் தயாராக இருக்க மாட்டார்கள். என்றாலும் என் கடமை, விளக்கமளிப்பது என்பதை மிகப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தி.மு.க. பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டு, அதனை வெளிப்படையாக அறிவித்து அதன் தொடர்பாகக் கழகத்தின் சட்ட திட்டங்களையும் திருத்தியமைத்து ஆண்டுகள் பதின்மூன்றுக்கு மேல் ஆகி விட்டன.

> “தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய நான்கு மொழிவழி மாநிலங்களும் இந்திய அரசுரிமை - ஒருமைத் தன்மை - அரசியல் அமைப்புச் சட்டம்

ஆகியவற்றுக்குள் கலாச்சார அடிப்படையில் நெருங்கிய திராவிடக் கூட்டமைப்பாக நிலவப் பாடுபடுவது.”

என்ற வகையில் அண்ணா காலத்தில் வகுக்கப்பட்ட குறிக்கோளைத் தொடர்ந்து - “நோக்கங்கள்” என்ற தலைப்பில்;

“அறிஞர் அண்ணா வகுத்த, கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு அடிப்படையில் - அரசியல் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து, ஆதிக்கமற்ற சமுதாயத்தை உருவாக்கவும், பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப்பணி ஆற்றிடவும், பொருளாதாரத் துறையில் வறுமையை வென்று சமதர்ம அடிப்படையில் எல்லோரும் நல்வாழ்வு பெற வழிவகை கண்டிடவும், பிறமொழி ஆதிக்கத்திற்கு இடம் கொடாமல் அந்தந்த மாநில மொழிகளை வளர்த்திடவும், அவைகளுக்கான உரிய இடத்தைப் பெற்றுத் தரவும், மாநிலங்களில் முழுமையான சுயாட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் அமைந்திடவும் தொண்டாற்றுவது.”

என்றும் நமது கழக சட்டதிட்டப் புத்தகத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இந்தக் குறிக்கோள், நோக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில்தான் கழகம் இயங்கி வருகிறதேயல்லாமல் பிரிவினை எண்ணம் கழகத்திற்கு துளி அளவும் இல்லை என்பதைப் பல முறையும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் விளக்கியிருக்கிறோம்.

கழகத்தில் இருந்து கொண்டே பிரிவினை பற்றி எழுதிய ஒரு வார ஏட்டினைக் கழக ஆட்சிப் பறிமுதல் செய்தது. அந்த ஏட்டின் ஆசிரியர் பிரிவினை மாநாடு நடத்தப் போவதாகத் தனது ஏட்டில் விளம்பரம் செய்து ஒரு பெரிய கட்டுரையும் எழுதினார். அவரும், அந்த மாநாடு நடத்த முற்பட்டவர்களும் கழக ஆட்சியில் கைது செய்யப்பட்டனர். அது மட்டுமல்ல; அந்த ஆசிரியர் கழகத்திலிருந்து நீக்கி வைக்கப்பட்டார். இப்போது அவர், கழக நிழலில் இல்லை. புதிய காங்கிரசின் நிழலில் இருக்கிறார். ஏறத்தாழ ஓராண்டுக் காலத்திற்கு முன்பு பிரிவினை கோரிக்கை எழுப்பியவரைக் கழகம், நடவடிக்கை எடுத்து விலக்கி வைத்தது,

அவருக்கு இப்போது காங்கிரசில் புகலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. நாம், பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பிரிவினை பேசினோம். அதன் பிறகு இந்தியாவின் பாதுகாப்பு, இந்திய ஒருமைப்பாடு - இவற்றில் நமக்குள்ள அழுத்தமான நம்பிக்கையை செயல் மூலமே வெளிப்படுத்தியிருக்கிறோம். அந்நியப் படையெடுப்புக்களின் பொழுது கழகம் ஆற்றிய பணியும், கழக அரசு ஆற்றிய பணியும் அதற்குப் போதிய சான்றாகும்.

நாம் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்ட பிறகு அதனைக் காங்கிரஸ் தலைவர்களும் வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். 1967-ல் கழகத்துடன் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களும் தமிழரசுக் கழகமும் தேர்தல் உடன்பாடு கொண்டதற்குக் காரணம்; நாம் பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்டோம் என்பது தான்!

1968-ல் சென்னையில் நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாட்டில் முதல்வர் அறிஞர் அண்ணா, சிலம்புச் செல்வர், காயிதே மில்லத், கலியாணசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு மாநில சுயாட்சியை வலியுறுத்தி ஆற்றிய அரிய உரைகள் அப்போதே, எல்லாத் தமிழ், ஆங்கில ஏடுகளில் வெளிவந்துள்ளன. இப்போதும் என் கைவசமிருக்கின்றன. நூல் வடிவிலே கூட அந்த உரைகள் அச்சியற்றப்பட்டுள்ளன.

1971-ஆம் ஆண்டு தி.மு.கழக தேர்தல் அறிக்கையில் - பத்தாவது பக்கம் - நாலாவது "பாரா" வில்;

> "அதிகாரத்துறையிலும் நிதித்துறையிலும் மாநிலங்கள் செவ்வனே செயல்பட முடியாமல் தடைகள் இருப்பதால்; இந்தியா வலுப்பெற்றதாக இருக்க வேண்டுமென்ற இலட்சியத்திற்கு ஊறு தேடாமல் எந்தெந்த துறைகளில் வலுவான இந்தியா இயங்குவதற்காக மத்திய அரசு செயல்பட வேண்டுமோ, அந்த அதிகாரங்களை மட்டும் மத்திய அரசிடம் கொடுத்து விட்டு, இதர அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப்படும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தி; மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கருதுகிறோம்."

என்பதாகவும், அதற்கு அடுத்த ஐந்தாவது "பாரா" வில்;

"அந்த அடிப்படையில் அகில இந்திய ரீதியில் மாநில சுயாட்சி இயக்கத்திற்கான ஆதரவு திரட்டும் இயக்கத்தைக் கழகம் மேற்கொள்ளும்."

என்பதாகவும் கழகத்தின் சார்பில் மாநில சுயாட்சிக் கொள்கையைத் தெளிவாக்கியிருக்கிறோம்.

இவ்வாறு தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்ட போதுதான் 1971-ஆம் ஆண்டில், தி.மு.க.வுக்கும் இந்திரா காங்கிரசுக்கும் தேர்தல் உடன்பாடு ஏற்பட்டிருந்தது என்பதை நாடு மறந்து விடவில்லை.

"மாநில சுயாட்சி என்பது பிரிவினையல்ல; அது பிரிவினையிலிருந்து வேறுபட்டது" என்பதை 1973-ஆம் ஆண்டு, பிரதமர் அவர்களே கூட கோழிக்கோட்டில் நிருபர்கள் கூட்டத்தில் விளக்கியிருக்கிறார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தி.மு.க. தலைமைக் கழகச் சார்பில் வெளியிடப்பட்ட ஒரு சிறிய நூல் - என் பேச்சுக்களின் சுருக்கங்களைத் தொகுத்து வெளியிடப்பட்ட "மாநில சுயாட்சி" என்ற நூல் - அதன் இறுதிப் பகுதி பின்வருமாறு:-

"மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்பதுதான் மாநில சுயாட்சித் தத்துவமே யல்லாமல் மாநிலம், இந்தியாவிலிருந்து துண்டித்துக் கொண்டு சுதந்திர நாடாக வாழவேண்டுமென்பதற்காக நாங்கள் இந்தக் கோரிக்கையைச் சொல்ல வில்லை."

இப்படி நமது கொள்கைகள், நோக்கங்களுக்கான விளக்கங்கள் ஏராளமாகத் தரப்பட்டிருந்துங் கூட "பிரிவினை வாதிகள்" என்ற குற்றச்சாட்டைத் தொடர்ந்து கூறுவது - வேண்டுமென்றே கழகத்தின் மீது புழுதியை வாரி இறைப்பதாகத் தானே தெரிகிறது.

1973-ஆம் ஆண்டு அக்டோபர் 28-ஆம் நாள் கோழிக் கோட்டில் பிரதமர், நிருபர்களிடம் வெளியிட்ட கருத்தை; ஆங்கில ஏட்டில் வந்தவாறு அப்படியே தருகிறேன் இங்கே!

"Mrs. Gandhi said Autonomy was something different from separation. She recalled, that the D.M.K. remained isolated in Tamil Nadu so long as it also raised the Slogan of Separatism.

The situation changed when the Late Mr. Annadurai gave up that Demand. Since then no top Leaders of the D.M.K. had been raking up this Demand."

தலைமையில் இருப்பவர்கள் பேசவில்லை. ஒரு சிலர் பேசினாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தொடக்கத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன்.

உடன்பிறப்பே, பிரிவினை எண்ணமுடையோர்க்குக் கழகத்தில் இடமில்லை என்பதையும் எதிர்காலத்திலும் இதில் மிகக் கண்டிப்புடன் கழகத்தின் தலைமை இருக்கும் என்பதையும் நமது பொதுக் குழுக்களில் அறிவித்திருக்கிறோம். அந்த நிலையிலிருந்து இப்போதும் சரி; இனி எப்போதும் சரி; எந்த விதமான மாற்றமும் இருக்காது என்பதை நான் மீண்டும் ஒரு முறை இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓம் மேத்தா அவர்கள் வருகை தந்ததோ பயிற்சி முகாமுக்கு, பயிற்சி அளித்திருப்பதோ; தி.மு.கழகத்தை எப்படித் தாக்கிப் பேச வேண்டுமென்பதற்கு, கடுமை கனல் - இழிவு - ஏகடியம் - ஆத்திரம் - அவதூறு - இத்தனையும் கலந்து கழகத்தின் மீது புதிய காங்கிரசாரின் தேர்தல் பிரச்சாரப் பாணங்கள் பாயும் என்பதற்கான வெள்ளோட்டமாகத்தான் ஓம் அவர்களின் போர்ப்பரணி அமைந்திருக்கிறது.

உடன்பிறப்பே, தேர்தல் களத்தில் இறங்கிடும் நமது கழகத்தின் மீது நாராசச் சொற்கள் நாலா புறமிருந்தும் வீசப்படும் என்பதை நீயும் அறிவாய்! நானும் அறிவேன்! நாடும் அறியும்!

பதிலுக்குப் பதில் அவர்களது பாணியிலேயே இல்லாமல், நம்மீது கூறப்படும் பழிகளுக்குத் தெளிவான விளக்கங்களைத் தான் தேர்தல் மேடைகளில் நாம் தந்திட வேண்டுமேயல்லாமல் 'லாவணி' முறைகளைத் தயவு செய்து யாரும் மேற்கொள்ளக் கூடாது.

நமது வேட்பாளரின் வெற்றிதான் நமக்கு முக்கியமே தவிர, நம்மை எதிர்த்துப் போட்டியிடுவோரின் மனத்தைப் புண்படுத்துவது நமது குறிக்கோளாக இருக்கக்கூடாது.

விறுவிறுப்பு அடங்கிவிடக் கூடியது! வெற்றி, நமது கழகத்தின் வலிவினைக் காட்டக் கூடியது!

"கருணாநிதி ஒரு கொள்ளைக்காரன்" என்று மத்திய அமைச்சர் மரியாதைக்குரிய ஓம் மேத்தா வர்ணித்திருக்கிறார். இன்றைய மாலை ஏடுகளுக்கு அருமையான தலைப்பு! அதுவும் கொட்டை எழுத்துக்களில்! அதற்காக ஆத்திரப்பட்டு "ஆகா, எங்கள் தலைவனையா அப்படிச் சொன்னீர்கள்? உங்களை எங்களுக்குத் தெரியாதா?" என்று பேசி விடுவது சுலபம்! அப்படிப் பேசாமல் பொறுமையாக இருப்பதுதான் கடினம்! அந்தக் கடினமான வேலைக்குத்தான் நான் உன்னை அழைக்கிறேன்.

"ஓம் மேத்தாவின் உள்ளங் கொள்ளை
கொண்டவன் நான்"

என்று அவன் சொன்னதாகத்தான் எண்ணிப் பெருமைப் பட்டுக் கொள்கிறேன்!

பாரேன். அவரிடம் நான் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய "மந்திரி குமாரி" படத்தைப் பற்றியெல்லாம் கூட விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள்.

> "மந்திரி குமாரி என்னும் படத்தில் வசனம் எழுதிய தி.மு.க. தலைவர் 'கொள்ளையடிப்பது ஒரு கலை' என்று குறிப்பிட்டதாகக் கேள்விப்பட்டேன். அவர் பதவியில் அமர்ந்ததும் அந்தக் குறிக்கோளை நடைமுறையில் கொண்டு வந்தது ஆச்சரியமில்லை."

இவ்வாறு மாண்புமிகு ஓம் மேத்தா பேசியுள்ளார்.

உடன்பிறப்பே, மந்திரி குமாரி படத்தில் 'கொள்ளையடிப்பது சிறந்த கலை' என வாதிடும் பார்த்திபன் அந்தக் கதையிலே ஒரு வில்லன். அந்தப் படத்தில் வரும் கதாநாயகன் வீரமோகன். கதையில் வரும் 'வில்லன்' பேசுவதெல்லாம் கதாசிரியரின் கொள்கை என்றால்; கம்பராமாயணத்தில் இராவணன் பேசுவதெல்லாம் கம்பரின் கொள்கையா? பாரதக் கதையில் சகுனி அளிக்கும் விளக்கங்கள் எல்லாம் வேதவியாசர் ஏற்றுக் கொண்ட இலட்சியங்களா? அதைப் போலத்தான் ஒரு கதையில் வரும் வில்லன் பாத்திரங்கள் பேசும் தத்துவங்கள் கதாசிரியரின் தத்துவங்களாக இருக்க முடியாது. "இப்படித்தான் வாழ வேண்டும் என்பதல்ல; எப்படியும் வாழலாம் என்பது என் கொள்கை" என்று

நடிகவேள் ராதா ஒரு படத்தில் பேசுகிறார். அந்தக் கொள்கை அந்தப் பாத்திரத்தின் கொள்கையே தவிர, அந்த வசன கர்த்தாவின் கொள்கையாக இருக்க முடியாதல்லவா?

எப்படியோ, இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு நான் எழுதிய "மந்திரி குமாரி" படத்திற்கு மத்திய மந்திரி ஒருவரால் இப்போது விளம்பரம் கிடைக்கிறதென்றால் அதைப் பாராட்டி வரவேற்று அவருக்கு நன்றி தெரிவிப்பது என் கடமை அல்லவா?

தேர்தலில் ஈடுபட இருக்கும் கழக வேட்பாளர்களாம் உடன் பிறப்புகளுக்கும் சொல்கிறேன்; தேர்தல் விளக்கக் கூட்டங்களில் உரையாற்ற இருக்கும் உடன்பிறப்புகளுக்கும் சொல்கிறேன்; நமது பணியும் பதிலும் - நமது கொள்கை விளக்கங்களாக அமைய வேண்டுமே தவிர, எள் முனை அளவும் அமைதி குலைவதற்கு இடம் தரும் வகையில் இருந்திடலாகாது!

யாரையும் வீழ்த்துவது - அழிப்பது - நமது நோக்கமல்ல! நம்மை நாட்டுக்கு உணர்த்துவதே நமது நோக்கமாக இருக்க வேண்டும்.

இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு இந்தியப் பிரதமர் வானொலியில் பேசியதை நினைவுபடுத்தி இந்தக் கடிதத்தை முடிக்கிறேன்.

> "இழிவுபடுத்திக் கூறுவது அவதூறு பேசுவது ஆகியவற்றை விட்டொழிக்குமாறு அரசியல் கட்சிகள் அனைத்தையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்."
>
> பிரதமர் வானொலி உரை
> ஜன. 18

இவ்வளவு அருமையான ஒரு கருத்தைப் பிரதமரே வேண்டுகோளாக விடுத்திருக்கிறார்கள். பயிற்சி முகாமினர் தொடக்கத்திலேயே அதனைப் படிக்க மறந்தனரே! அதுதான் மெத்த வருத்தமாயிருக்கிறது.

அன்புள்ள,
மு. க.
23-01-1977

360. அணையா விளக்கென அறிவிப்போம்!

உடன்பிறப்பே,

ஜனவரி 26-ஆம் நாள் குடியரசுத் திருநாள்! மக்களாட்சியின் மாண்பினை ஒரு சிறிதும் ஊனப்படுத்தாமல், அதன் மகிமையை அகிலமறியச் செய்ய வேண்டிய நாள்! கடந்த 27 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியத் திருநாடு புதியதோர் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்தக் குடியரசு நாளில் அந்த அரசியல் சட்டம்; 42-வது திருத்தத்தைச் செய்து கொண்டு உலா வருகிறது. அரசியல் சட்டத்தில் திருத்தங்கள் தேவையென்றும் மத்திய மாநில உறவுகளின் அடிப்படையில் பல்வேறு திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்றும், அந்தத் திருத்தங்களின் வாயிலாக வலிமை வாய்ந்த கூட்டாட்சி மத்தியிலே மலரவும் மக்கள் வளம் பெருக்கும் வாய்ப்புக்களையும், கூடுதலான உரிமைகளையும் கொண்ட மாநில ஆட்சிகள் பூத்துக் குலுங்கவும் வேண்டுமென்றும், அரசமைப்புச் சட்டத்தின் அடித்தளம் நொறுங்கிடா வண்ணம் சமதர்ம திட்டங்கள் முற்போக்குக் கொள்கைகள் நிறைவேற்றப் படுவதற்கான வழிவகைகள் காண வேண்டுமென்றும் நாம் எடுத்துக் கூறிய கருத்துக்கள் புறக்கணிக்கப்பட்டு, தன்னைத் தானே நீடித்துக் கொண்ட நாடாளுமன்றம் 42-வது திருத்தத்தைச் செய்து முடித்து விட்டது.

அதற்குப் பிறகு கொண்டாடப் பெறுகிற முதல் குடியரசு நாள் இதுவெனக் கொள்ளலாம். இந்த நாளில் நாட்டு மக்களுக்குச் சிறிது ஆறுதல் தருகிற செய்தியாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, மார்ச் திங்களில் அதற்கான தேர்தல் நடத்தப்பட இருக்கிறது என்று அறிவிக்கப் பட்டுள்ளது, நெருக்கடி நிலை தளர்த்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

ஏடுகளின் நியாயமான எழுத்துச் சுதந்திரம் - அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சி ஏடுகளின் நியாயமான எழுத்துச் சுதந்திரம் - பறிக்கப்பட்டிருந்து இப்போது அந்த நிலை மாற்றப் பட்டுள்ளது.

நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கான அரசியல் கைதிகள், எந்தவிதமான நீதிமன்ற முறையீட்டுக்கும் வழியின்றி ஓராண்டுக்கும் மேலாக அடைத்து வைக்கப்பட்டிருந்து, அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று ஆணைகள் பிறப்பித்த பிறகும் நூற்றுக்கணக்கானவர்களே காவலில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். மக்களாட்சியின் மேன்மையை விளக்கும் நாள் இந்த நாள் என்கிறோம். ஆனால், மக்களில் ஒரு பகுதியினர் அரசியல் காரணங்களுக்காக சிறைச்சாலையில் வாடுகின்றனர். நியாயமான தேர்தல், நேர்மையான தேர்தல், எல்லாக் கட்சிகளுக்கும் சம வாய்ப்பு வழங்கும் தேர்தல் நிச்சயமாக நடக்கும் என்று மத்தியப் பேரரசில் பிரதமர் அவர்கள் வானொலியில் உரையாற்றி எட்டு நாட்களுக்கு மேலாகிறது. எல்லா அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று வானொலிச் செய்திகள் - டெலிவிஷன் செய்திகள் - பத்திரிகைச் செய்திகள் - ஆனால் தமிழ்நாட்டை மட்டும் எடுத்துக் கொண்டால் கூட அடைப்பட்டுள்ள ஐநூறு அரசியல் மிசா கைதிகளில் முதல் கட்டமாக 138 பேர், இரண்டாவது கட்டமாக 34 - பேர் — இதை நான் எழுதிக் கொண்டிருக்கும் போது மூன்றாவது கட்டமாக எத்தனை பேரோ தெரியவில்லை - இப்படிச் சிறு சிறு தொகையினராக விடுதலை செய்ய வேண்டிய காரணம் என்னவென்று புரியவில்லை.

கழக அரசு மதுவிலக்கு ஒத்திவைத்ததை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கானவர்களை ஒரு வார காலத்திற்குள்ளாக - அதுவும் தண்டனை காலத்திற்கு முன்னதாகவே "விறு விறு" என்று விடுதலை செய்த நிகழ்ச்சியை, அன்று பழைய காங்கிரசிலே இருந்து இன்று புதிய காங்கிரசின் பொறுப்புக்களில் அமர்ந்திருக்கிற பெருந்தகையாளர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

ஒருவேளை அவர்கள் மறந்திருக்கக் கூடும். அதனால்தான் குடியரசு தினச் செய்தி கூற வந்த; தமிழ்நாடு புதிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜனவரி 31ஆம் நாளுக்கும் சேர்த்து செய்தி அருளியிருக்கிறார்.

"ஜனநாயகமும், சோஷலிசமும், சமத்துவமும் இந்திய தேசீயக் காங்கிரசின் உயிர் அணுக்கள்."

என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்தக் கொள்கையில் கடுகளவு மாறுபாடும் கழகத்திற்கு இல்லை. ஆனால் அவைகள் உதட்டின் உச்சரிப்புக்களாக இல்லாமல் செயல் வடிவம் பெற வேண்டுமே! நாவின் நடனமாக இல்லாமல் நாட்டின் நடைமுறைக் காரியங்களாக வேண்டுமே!

ஜனநாயகம்

சோஷலிசம்

சமத்துவம்

மூன்றும் காங்கிரசின் உயிர் அணுக்கள் என்கிறார். பாராட்டுகிறேன். வரவேற்கிறேன்.

ஜனநாயக மணத்தை நாடாளுமன்றம் மட்டும் பெற்று, அதனைத் தமிழ்நாடு சட்டப் பேரவை பெற முடியாத சமத்துவமற்ற நிலையிருக்கிறதே; அது நியாயம் தானா? மார்ச் திங்களில் எப்படியும் ஒரு வாக்காளர் ஓட்டுச் சாவடிக்குப் போகப் போகிறார். அப்போது அவர் கையில் நாடாளுமன்ற உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க ஒரு ஓட்டுச் சீட்டைத் தரும்போது - அப்படியே சட்டப் பேரவை உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கவும் இன்னொரு சீட்டைத் தருவதில் என்ன சிரமம் இருக்க முடியும்? அரசுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் செலவு மிச்சம்! பணிகளில் ஏற்படுகிற தொய்வினையும் தவிர்க்கலாம்! எனவே நாடாளுமன்றம் பெறுகிற ஜனநாயகப் பரிசை சட்டப் பேரவைக்கும் தமிழ்நாட்டில் சமத்துவ உணர்வோடு வழங்கியிருக்கலாம் அல்லவா?

நெருக்கடியை தளர்த்தியிருப்பதால் நாடாளுமன்றத்துக்குத் தேர்தல் என்றால் அது தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலுக்கும் பொருந்துமே!

காங்கிரசின் உயிர் அணுக்களில் ஒன்றாக, தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் 'சோஷலிசம்' பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்.

உடன்பிறப்பே, சோஷலிசத்தில் "நில உச்ச வரம்பும்" அடங்குமென்பது உனக்கும் தெரியும். அவருக்கும் தெரியும். சரி; அது கிடக்கட்டும்!

அவரது குடியரசு தினச் செய்தியில் ஜனவரி 31 ஆம் நாள் லஞ்சமும் வஞ்சமும் ஒழிந்து தி.மு.க. ஆட்சி நீக்கப்பட்ட நாள் என்றும் அந்த நாளே காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரசாரத் தொடக்க நாள் என்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

கூறவந்த செய்தியோ குடியரசு தினத்தைப் பற்றி, நினைப்போ நம்மைப் பற்றி, இப்படிப்பட்டவர்களைப் பற்றித்தான் அண்ணா அவர்கள் தம்பிக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்.

> "கசப்பாலும், குரோதத்தாலும், பொறாமையாலும், சிலருக்கு இயல்பாகி விட்ட குணத்தாலும் தி.மு.கழகத்தைப் பற்றி மிகக் கேவலமாகப் பேசுகிறார்கள் என்றாலும், இன்றைய அரசியலில் கவனித்துத் தீர வேண்டிய பெரிய பிரச்சினையாகி விட்டிருக்கிறது தி.மு.கழகம்; என்ற பேருண்மையை எவரும் மறைத்திட முடியாது தம்பி! இப்படிப்பட்ட ஒரு பிரச்சினையை உருவாக்கியதிலே உனக்கும் எனக்கும் ஓரளவு பங்கு இருக்கிறது என்பது எண்ணி மகிழத் தக்கது, உரிமையுடன் பெருமிதம் கொள்ளத் தக்கதுமாகும்."

அண்ணா அவர்கள் அன்று குறிப்பிட்டது இன்றளவும் எவ்வளவு உண்மையாகித் திகழ்கிறது பார்த்தாயா? அந்தக் கடிதத்தில் அண்ணா, நம்மை மாற்றார் மனம் நோகப் பேசுவதை மட்டும் சுட்டிக் காட்டவில்லை. அவர்களுக்கு மத்தியில் நாம் நமது தொண்டினை எப்படி ஆற்றிட வேண்டும் என்பதையும் எடுத்துரைத்திருக்கிறார். அதையும் படித்துப் பார்.

> "திரட்டிக் காட்டக் கூடிய வேகம் அவ்வளவையும் துவக்கத்திலேயே கொட்டிக் காட்டி விட்டு, நின்று - நிதானமாக - நீண்ட காலம் - நெருக்கடிகளையேற்றுத் தொண்டாற்ற வேண்டிய நிலைமை ஏற்படும் போது வேகம் குன்றிப் போய், சோர்வு தட்டிப் போகும் நிலையை அடைவார்களானால் அவர்களால் இயக்கத்துக்குப் பலன் இல்லை. காகிதக் கப்பல் நொடியிலே தயாராகி விடுகிறது. கொளுத்தி வைக்கும் மத்தாப்பு, பளிச்சிட்டுக் காட்டுகிறது. ஒரு இயக்கத்தில் தொண்டாற்ற வேகம், வெடித்துக் கொண்டு வருவது மட்டும் போதாது! காட்டுத்

தீ போலன்றி வீட்டு விளக்கு நிதானமாக - சீராக - ஒளிவிட்டு இருளை அகற்றுவது போலத் தொண்டு புரிதல் வேண்டும்."

அண்ணா குறிப்பிட்ட காகிதக் கப்பல்கள் மூழ்கி விட்டன. மத்தாப்பு கருகி விட்டது. காட்டுத் தீயென எழுதிப் பேசினோர் இருந்த இடம் தெரியவில்லை. வீட்டு விளக்கென நமது கழகம் சீராக ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது. வேகமாக வீசிடும் புயலுக்கும் சூறாவளிக்குமிடையே இந்த விளக்கை அணையாமல் காத்து வருகிறோம்.

ஆனால் "இது அணைந்து விட்டது - அதற்காக ஜனவரி 31-ல் ஆண்டுவிழா கொண்டாடுக" என்று புதிய காங்கிரஸ் தலைவர் குடியரசு தினச் செய்தியில் கூறுகிறார்.

கொண்டாடட்டும்! நன்றாகக் கொண்டாடி மகிழட்டும்! கழகம் அணைந்த விளக்கா? அல்லது அணையா விளக்கா? என்பதை எனது அருமை நண்பர் - புதிய காங்கிரசின் தலைவர் விரைவில் உணரத்தான் போகிறார். அதை அரசியல் பண்புடனும், அமைதியுடனும், அவர் போன்றார்க்கு உணர்த்த வேண்டிய பொறுப்பு நம்மிடமுள்ளது. அண்ணன் தந்த கழகம் அணையா விளக்கு என்பதை அவருக்கும் அவனிக்கும் அறிவிப்போம்! அந்த உறுதியை இந்தக் குடியரசு நாளில் எடுத்துக் கொள்வோம்!

அன்புள்ள,

மு. க.

26-01-1977

361. குடிலர்கள் ஜாக்கிரதை!

உடன்பிறப்பே,

தமிழ்நாடு அரசின் நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்தாகப் பாடப்படுகிற "நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக்கு எழில் ஒழுகும்" என்ற ஏற்றமிகு கவிதையைத் தந்தவர் சுந்தரம் பிள்ளை. ஆம்; மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை. நாடகத் தமிழில் நல்ல நூல்கள் மலர்ந்திடவில்லை என்ற குறையைப் போக்கியவர் 'மனோன்மணியம்' எனும் மாண்புறு ஓவியத்தைப் படைத்த பேராசிரியர் சுந்தரனார்.

நாடகத்தில் வழக்கம் போல் கதாநாயகன், கதாநாயகி, அவர்களின் தோழர்கள், தோழிகள், அரசன், அமைச்சன், பகைவன் இப்படிப்பட்ட பாத்திரங்கள் நடமாடுகின்றன. பாத்திரங்கள்தான் அவை எனினும், அவைகளின் குணநலன்களும், நிகழ்ச்சிக் கோவையும் கதைப் பின்னலும் வியந்து பாராட்டுவதற்குரிய வைகளாகும்.

ஜீவகன் என்னும் பாண்டிய மன்னன், வெளுத்ததெல்லாம் பால் என நினைக்கும் கள்ளமில்லா வெள்ளை மனத்தினன். சூழ்ச்சியின் மொத்த உருவமாக குடிலன் என்னும் அமைச்சன். பாண்டிய மன்னன் மீது போர் தொடுத்திட முனைந்த புருடோத்தமன் என்னும் சேர மன்னன். அந்த மன்னனை நினைந்துருகும் மனோன்மணி! ஜீவகனின் மகள்.

புருடோத்தமனும் மனோன்மணியும் ஒருவரையொருவர் சந்திக்காமலே கனவுருவில் கண்டு, காதல் மயக்கத்தில் வீழ்ந்து விடுகின்றனர். பகைவனின் மகள் அந்தப் பாவை என்பது சேரமன்னனுக்கும் தெரியாது. தன்னைச் சேரத் துடிக்கும் அந்தத் தமிழ்ச் சேரன், தன் தந்தைக்கு எதிரி என்பது அந்தத் தையலுக்கும் புரியாது.

பாண்டியன் அரண்மனையைச் சுற்றி வளைக்கப் புருடோத்தமன் பாசறை அமைத்து விடுகிறான். ஆபத்தான சூழ்நிலை மனோன்மணியைக் குடிலனின் மகனுக்கு திருமணம் செய்து தருவதாக உறுதியளிக்க வேண்டிய கட்டாயம் ஜீவக மன்னனுக்கு ஏற்படுகிறது. அத்துடன் மனநிறைவு கொள்ளாத குடிலன், தந்திரமாக அரண்மனையை விட்டு வெளியேறி பகைமன்னனான சேரன் புருடோத்தமனைச் சந்திக்கிறான். இருவரிடையே உரையாடல் நடைபெறுகிறது.

புருடோத்தமன் : யார் நீர்? எங்கு வந்தீர்?

குடிலன் : நானே குடிலன், பாண்டியரின் அமைச்சன்.

புரு : வந்த காரியம் செப்புக விரைவில்!

குடி : சேர மன்னா! பாண்டியன் என்னை பாசமுடன் நேசித்தார் எனினும், உம்மீது நான் அழியாத அன்பு கொண்டேன்.

புரு : அதற்கென்ன இப்போது?

குடி : அரசே!

"பித்தன் ஒருவன் தன்னால் இத்தமிழ் நாடெலாம் வெறும் சுடுகாடாய் விடுமே. ஆவ! இப்பெரும் பாவமும் பழியும் அஞ்சினேன்! அஞ்சினேன்!"

புரு : குடில! நீரோ என் பகையரசர்க்கு அமைச்சன்! என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்?

குடி : பாண்டிய நாட்டை சுலபமாகக் கவர்ந்து கொள்ள ஒரு பாதை காட்டுகிறேன் உமக்கு!

புரு : பாதையா? பலே! பலே!! என்ன பாதை? எங்கேயிருக்கிறது?

குடி : என்னோடு வந்தீர்களேயானால் ரகசிய சுரங்கம் ஒன்றின் வழியாக உங்களை அழைத்துச் செல்கிறேன். நீங்கள் வீரர்களுடன் வருவீர்களேயானால் என் மன்னரை அந்தச் சுரங்க அறையில் கைது செய்து பெருவெற்றி பெற்று பாண்டிய நாட்டைக் கைப்பற்றலாம். நான் செய்யும் உதவிக்குப் பரிசாக அந்த நாட்டை எனக்கு வழங்கினால் போதுமானது.

புரு : சபாஷ்! அருமையான யோசனை, இப்போதே புறப்படுகிறேன். வீரர்களே! கைவிலங்கு கால் விலங்கு எடுத்து வாருங்கள்.

குடி : அரசே! விலங்கு எதற்காக?

புரு : உனக்கு மாட்டுவதற்காக! உம்! வீரர்களே! விலங்கை மாட்டுங்கள், அழைத்து வாருங்கள் இவனை! ஏய், குடிலா! முன்னே போ! சுரங்கப் பாதைக்கு வழிகாட்டிக் கொண்டு போ!

குடி : வேந்தே! என்ன இது?

புரு : காட்டிக் கொடுக்கும் உனக்குக் கை மேல் வழங்கப்படும் பரிசு! வா! எப்படிப் பட்டவனை அமைச்சராக வைத்துக் கொண்டு, பாண்டிய மன்னன் ஏமாந்து போயிருக்கிறார், என்பதை அவரிடமே கண்ணுக்கு மெய்யாகக் காட்டுகிறேன் வா!

என்றுரைத்துச் சேர மன்னன், குடிலனை இழுத்துக் கொண்டு, அவன் காட்டிய சுரங்கப் பாதை வழியே சென்று பாண்டியனையும், அவன் பெற்ற பைங்கிளி மனோன்மணியையும் சந்திக்கிறான். பாண்டியன், தன் பக்கத்திலேயே "பழுது எண்ணும்" மந்திரியை வைத்திருந்ததை உணர்ந்து, புருடோத்தமனைக் கட்டித் தழுவிக் கொள்கிறான். பகை ஒழிகிறது. சேரனும் பாண்டியனும் தோழமை பூணுகிறார்கள்.

தன் கனவுக் காதலி மனோன்மணியைப் புருடோத்தமன் பார்க்கிறான். அவ்வாறே மனோன்மணியும் திடுக்கிட்டு, நாணி, திங்கள் முகம் குனிந்து, தேனிதழை நாவால் தடவிக் கொள்கிறாள். குடிலன் மகனுக்காக குறிக்கப்பட்ட மணவிழா மாறுகிறது. புருடோத்தமனும் மனோன்மணியும் தம்பதிகளாகின்றனர்.

உடன்பிறப்பே,

மனோன்மணியம் நாடகத்தில் புருடோத்தமன் பாத்திரம் மிகப் புதுமையானது. மெத்தவும் நேர்த்தியானது.

பாண்டியனைக் காட்டிக் கொடுக்க வந்த குடிலனைத் தனக்கு நண்பனாக ஆக்கிக் கொள்ளாமல் - காட்டிக் கொடுப்பவர் எங்கிருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே எனும் சீரிய கொள்கைக்கே உருவமாகத் திகழ்கிறான் அல்லவா; அந்த வீரவேந்தன்.

இப்படிப்பட்ட அருமையான பாத்திரத்தைப் படைத்து, மனோன்மணியும் எனும் மங்கா புகழ்க் கருவூலத்தை நமக்கு அளித்த பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் புகழ் ஓங்குக என முழங்கிடுவோம். அவர் தனது காவியத்தில் படைத்துள்ள குடிலர்கள் போன்ற குணக்கேடர்களிடம் எதிர்காலத்திலாவது எச்சரிக்கையுடன் நடந்து கொள்வோம்.

அனபுள்ள,

மு. க.

28-01-1977

362. தேய்பிறையல்ல; வளர்பிறையே!

உடன்பிறப்பே,

1975ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31-ஆம் நாள் வரையில் நம்முடன் தோழமை பூண்டிருந்த முஸ்லீம் லீக் கட்சி, இப்போது உறவை முறித்துக் கொண்டதாக அறிவித்து அதற்குச் சில விளக்கங்களையும் வழங்கியுள்ளது.

திராவிடர் இயக்கத்திற்கும் முஸ்லீம் மக்களுக்கும் உள்ள உறவு இன்று நேற்று ஏற்பட்டதல்ல; அது தேர்தல் உடன்பாட்டுக்காக மலர்ந்த உறவுமல்ல. கட்சி ரீதியான உறவை அவர்கள் துண்டித்துக் கொண்டாலுங் கூட, தமிழகத்தில் சிறுபான்மைப் பிரிவினராக உள்ள அந்த சமுதாயத்துடன் நமக்கு ஏற்பட்டுள்ள பாசத்தையும் நேசத்தையும் எந்த அரசியல் சூழ்நிலையும் பாழாக்கிட முடியாது.

நமது கழக மேடைகளிலும் சரி; முஸ்லீம் லீக் மாநாடுகளிலும் சரி; சட்டப் பேரவை, சட்டமன்ற மேலவைகளிலும் சரி; ஏனைய நிகழ்ச்சிகளிலும் சரி - முஸ்லீம் லீக்கின் தலைவர்கள் ஆற்றிய உரைகளும் - அந்த உரைகளில் பெருக்கெடுத்தோடிய அன்பு வெள்ளமும் - பாராட்டும் வாழ்த்தும், இன்றளவும் நினைத்து நினைத்து மகிழத் தக்கவைகளாகும்.

அவர்களால் நம்முடன் தோழமைக் கட்சியாக இருக்க முடியவில்லை என்பதைவிட அவர்கள் வேறு இடத்தில் தங்கள் ஆதரவை அளிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை! அந்த நெருக்கடி நமக்கு நன்றாகப் புரிகிறது. புரிந்துகொண்ட பிறகும் "அய்யோ, இப்படிச் செய்து விட்டார்களே - இவ்வளவு நாள் தோழமையை மறந்து விட்டார்களே!" என்று நாம் வேதனைப் படுவதிலோ, அல்லது நம்மிலே சில அவசரம் மிக்கவர்கள் ஆத்திரப்படுவதிலோ அர்த்தமில்லை என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது கழகத்திலே இருந்த சிலர் - நம்மோடு ஒன்றாக அமர்ந்து உண்டு - ஒன்றாக உரையாடி - ஒன்றாக உறங்கி - ஓருயிர் ஈருடல்

என்று நினைக்கத்தக்க அளவுக்குப் பழகிய தோழர்களே கூட; கடுமையான இடுக்கித் தாக்குதல்களுக்கு ஆளாகி நம்மீது ஏதாவது கற்பனைக் குற்றச்சாட்டுகளை வாரி இறைத்து விட்டு வேறிடம் தேடி வேதனையைத் தணித்துக் கொள்ள வேண்டிய நிலைமை இருக்கும் போது - மற்ற கட்சிகளைப் பற்றி நாம் மனக்குறை பட்டுக் கொள்ள முடியுமா?

உடன்பிறப்பே, நமது கழகத்திலிருந்து வெளியேறியோ, அல்லது வெளியேற்றப்படுகிற அளவுக்கு நடந்து கொண்டோ என்மீது அவதூறு அபிஷேகங்களையும், ஆபாச அர்ச்சனைகளையும் செய்கிற சில நண்பர்கள் பனிரெண்டு மாதங்களுக்கு முன்பு தேனில் தோய்ந்த தமிழ் எடுத்து என்னை வர்ணித்தார்களே - பலாச்சுளையா? பாராட்டுப் பாடலா? என வியக்கும் வண்ணம் என்னையும் நமது கழகத்தையும் விண்முட்ட வாழ்த்தினார்களே - அவர்கள் இன்று சுடுகணைகள் தொடுக்கும் போது; அன்று அவர்கள் சுந்தரச் சொன்மாரி பொழிந்ததையல்லவா நான் நினைத்துப் பார்த்து எனக்குள்ளாகவே சிரித்துக் கொள்கிறேன்.

மனிதன் யாருக்குப் பதில் சொல்லா விட்டாலும் தன் மனசாட்சிக்குப் பதில் சொல்லியே தீரவேண்டும். வாழ்ந்த போதும் நம்மை வாழ்த்தி வாழ்ந்தார்கள் - இன்று நாம் தாழ்ந்து விட்டதாகக் கருதி இப்போதும் நம்மைத் தாக்கி வாழ்கிறார்கள். எப்படியோ அன்றும் இன்றும் அந்தச் சிலர் நம்மாலேயே வாழ்வைச் செப்பனிட்டுக் கொண்டார்கள். அவர்கள் வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துகிறேன்.

நம்முடன் கலந்து பழகிய கழகத்தினர் சிலருக்கே இப்படி ஒரு நிலை வந்திருக்கிறதென்றால், ஒரு கட்சியை அமைப்பு முறையில் நடத்திச் செல்லுகின்ற எனதருமை முஸ்லீம் லீக் தலைவர்களுக்கு எப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றனவோ; என்பதை சிந்தித்துப் பார்த்தால் அவர்கள் எடுத்த முடிவு கண்டு அதிர்ச்சி அடைந்திடத் தேவையில்லை. அதுகண்டு சீற்றமோ, ஏமாற்றமோ பிறப்பதும் நியாயமில்லை.

ஆனால் ஒன்று! எனக்குள்ள வருத்தமெல்லாம் - அவர்கள் கட்சி ரீதியாகத் தேர்தலில் யாரை ஆதரிப்பது? என்று முடிவு எடுக்க உரிமை பெற்றவர்கள். அந்த உரிமையில் நாம் யாரும் குறுக்கிட முடியாது. உதாரணம் கூற வேண்டுமேயானால்

குடியரசுத் தலைவர் தேர்தலில் தி.மு.கழகம் பக்ருதீன் அலி அகமது அவர்களுக்கு ஆதரவு நல்கியது. காங்கிரசுக்கும் கழகத்திற்கும் நல்லுறவு இல்லாத நேரத்திலும் பக்ருதீன் அலி அகமது அவர்களையே நாம் ஆதரித்தோம். அப்போது முஸ்லீம் லீக் அவரை ஆதரிக்க மறுத்துவிட்டது. அது அந்தக் கட்சியின் உரிமை. நாம் குறுக்கிடக் கூடாதல்லவா? அதுபோலத்தான் இப்போதும் முஸ்லீம் லீக் எடுத்த முடிவில் நாம் குறுக்கிடவில்லை. குறை காணவும் இல்லை. அத்துடன் அவர்கள் - தங்கள் கடமையினை ஆற்றி முடிக்காமல் - தி.மு.க.வுக்கும் முஸ்லீம் லீக்கிற்கும் ஏதோ நீண்ட நாட்களாகப் பிரச்சினைகள் இருந்ததாகக் கூறுவதும், சட்டசபை கலைக்கப்பட்ட பிறகு தி.மு.க. அழிந்துவிட்டது என்று குறிப்பிடுவதும், எப்போதோ மதுவிலக்கை ஒத்தி வைத்ததால் இரு கட்சிகளுக்கிடையே 'மனத்தாங்கல்' ஏற்பட்டதென்று சுட்டிக் காட்டுவதும் தேவையில்லாதவைகள் அல்லவா?

என் செய்வது; அவர்களுக்கு ஏதோ ஒரு காரணம் வேண்டும் - அதனால் கண்டுபிடிக்கிறார்கள்.

தமிழ்நாடு, குஜராத் இரு மாநிலம் தவிர இப்போது இந்தியா முழுவதும் மதுக் கடைகள் இருக்கத்தான் செய்கின்றன. முஸ்லீம் லீக்கின் கூட்டணியுடன் நடைபெறுகிற கேரள அரசாங்கத்திலே கூட மதுவிலக்குச் சட்டம் இல்லை. ஒருவேளை, இனிமேல் இந்தியா முழுவதற்கும் மதுவிலக்குச் சட்டம் கொண்டு வர வேண்டுமென்று வலியுறுத்துவதற்காக முஸ்லீம் லீக் இந்த முடிவினை மேற்கொண்டிருக்கக்கூடும். அப்படியொரு கோரிக்கையை முஸ்லீம் லீக் வைக்குமேயானால் அது நமக்கும் உடன்பாடான கோரிக்கைதானே!

விந்தையென்னவென்றால் மதுவிலக்கை சிலகாலம் ஒத்திவைத்து, மீண்டும் மதுவிலக்குச் சட்டம் கொண்டு வந்த போது முஸ்லீம் லீக்கின் சார்பாக கழக அரசின் மீது குவிந்த பாராட்டுக்களுக்கு அளவே இல்லை.

உடன்பிறப்பே, அவர்களுக்கும் நமக்குமிருந்த உறவை - எப்படி மறக்க முடியும்? அவர்கள் ஒரு வார்த்தையில் சொல்லிவிட்டுப் போய் விட்டார்கள்; உறவு கிடையாது என்று!

ஆனால் இந்தப் பாழும் நெஞ்சம், பல நிகழ்ச்சிகளை மறக்க முடியாமல் தவிக்கிறதே!

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் கடைசியாக விழிகளை மூடி நீடுதுயில் கொள்வதற்கு முன்பு, இந்தச் சாமானியனின் கரங்களைப் பிடித்துக் கொண்டு; "அய்யா! முஸ்லீம் சமுதாயத்துக்கு நீங்கள் செய்த நன்மைகளை மறக்க மாட்டேன். அதற்கு நாங்கள் நன்றியுடையவர்களாக இருப்போம்" என்று தழுதழுத்த குரலில் கூறியதை - நானல்ல; நமது முஸ்லீம் லீக்கின் தலைவர்களே பல கூட்டங்களில் கூறியிருக்கிறார்களே; அதை எல்லாம் மறந்துவிட இயலுமா? நினைக்கும் போதே நீர்த்துளிகள் விழிகளின் ஓரத்தில் அரும்பு கட்டுகின்றனவே!

உடன்பிறப்பே, முஸ்லீம் லீக் என்ற ஒரு அமைப்பின் உறவில் தான் இன்று கீறல் ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கீறலும் நான் அடிக்கடி கூறுவது போல் மண்பாண்டத்தில் விழுந்த கீறல் அல்ல; தங்கத் தட்டில் விழுந்த கீறல்தான்! என்றோ ஒருநாள் உருக்கி ஒன்றாக்கிக் கொள்ள முடியும். அமைப்பு ரீதியாக ஏற்பட்டுள்ள இந்த இடைவெளி கழகத்திற்கும் முஸ்லீம் சமுதாயத்திற்கும் நடுவே வெட்டப்பட்டுள்ள அகழி என்று யாரும் கருதத் தேவையில்லை.

நமது பணி, இஸ்லாமியப் பெருமக்களின் முன்னேற்றத்தையும், குறிக்கோளாகக் கொண்டுதான் வகுக்கப்பட்டுள்ளது.

தாவுத் ஷா நடத்திய "தாருல் இஸ்லாம்" என்ற பத்திரிகையை சிறுவனாக இருக்கும் போதே படித்து மகிழ்ந்தவன் நான்.

கான்பகதூர் கலிபுல்லா சாகிப் கலந்து கொண்ட திருவாரூர் மாநாட்டில் கொடி தூக்கி ஊர்வலம் சென்ற இளைஞன் நான்.

"கலிபுல்லா சாகிப் வாழ்க!" என்று நான் முழங்கிய போது சென்னையில் "காயிதே மில்லத் மகளிர் கல்லூரி" யைத் திறந்து வைக்கும் முதலமைச்சராக வருவேன் என்று எண்ணியது கூடக் கிடையாது!

"தாருல் இஸ்லாம்" காலத்திலிருந்து அரும்பிய கோரிக்கையாம் - தமிழ் பேசும் முஸ்லீம்களுடன் உருது பேசும் முஸ்லீம்களையும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பதை - தமிழக ஆளும் பொறுப்பையேற்று நானும் நமது கழகமும் நிறைவேற்றி வைக்க முடியும் என்று நான் அப்போது நினைத்தது கூடக் கிடையாது!

இவைகளோடு இஸ்லாமிய மக்களின் தேவைகள் முடிந்துவிடவில்லை.

அதுவும் தெரியும் நமக்கு!

அதற்கேற்ற பணியாற்ற அமைப்பு ரீதியாக கை குலுக்கிக் கொள்ள இப்போது இயலாவிடினும் - முஸ்லீம் சமுதாயத்தின் தோளோடு தோள் நின்று கழகம் தொடர்ந்து தொண்டாற்றும்!

அந்தச் சமுதாயத்துடன் நாம்
கொண்ட தோழமை தேய்பிறை அல்ல!
வளர்பிறை! வளர்பிறை!

அன்புள்ள,
மு. க.
29-01-1977

363. சோதிடங்கள் இன்னும் குறையவில்லை!

உடன்பிறப்பே,

இன்று உனக்கு ஒரு சிறுகதை; ஆம் உருவகக் கதை எழுதுகிறேன். தெளிவு படைத்த நீ புரிந்து கொள்வாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இதோ; அந்தக் கதை!

மலையூர் ஒரு சிறு கிராமம். அங்கு ஒரு சோதிடர் இருந்தார். பொய்யைத் தவிர எதுவும் சொல்ல மாட்டார். அவரைப் பற்றி மலையூர்க்காரர்களுக்கு நன்கு புரியும். தொலையட்டும்; ஏதோ இந்தத் தொழிலில் பிழைத்துப் போகட்டும் என்று ஊர் மக்கள் அவரைத் தொல்லைப்படுத்தாமல் விட்டு விட்டார்கள்.

காலம் சுழன்றது. அந்த ஊர் விவசாயிகளின் பிள்ளைகள் சில பேர் நகர்ப்புறங்களுக்குச் சென்று படித்து வந்தார்கள். அவர்கள், பெரியார், அண்ணா சொற்பொழிவுகளைக் கேட்டு "சோதிடம்" என்பது "பொய் மூட்டை" எனத் தெளிவடைந்தார்கள். பண்டித நேருவின் அறிவுரைகளிலும் அவர் சோதிடத்தை நம்பவில்லை என்பதைப் படித்தார்கள்.

படித்த பிள்ளைகளின் பேச்சை மலையூரில் உள்ள வாலிப விவசாயிகள் காது கொடுத்துக் கேட்கத் தொடங்கினார்கள். சோதிடருக்கும் அந்த ஊரில் உள்ள இளைஞர்களுக்கும் தகராறு பேச்சளவில் முற்றியது. பிறகு அது கலவரமாக ஆகிவிட்டது.

படித்த வாலிபர்கள் குறுக்கிட்டு சோதிடரிடம் யாரும் வம்பு செய்யக் கூடாது எனத் தடுத்து விட்டனர். கலவரம் நின்றது என்றாலும் சோதிடரின் பிழைப்பு குறைந்தது.

சோதிடர் மலையூரை விட்டுக் கிளம்பி, பக்கத்திலுள்ள சிறிய நகரமான அலையூருக்குச் சென்றார். அங்கு பெரிய மரத்தடியில் தன் சோதிடக் கடையை ஆரம்பித்தார். குருவி சோதிடம், ரேகை பார்த்தல், கிளி சோதிடம் இப்படிப் பலவகையான ஏமாற்று வேலைகளுடன் சோதிடத் தொழிலை நடத்தினார்.

அவரிடம் சோதிடம் கேட்க, அந்தப் பகுதியில் உள்ள வேலையற்றவர்கள் எல்லாம் வருவது வழக்கமாயிற்று. வருமானம் பெருகிற்று சோதிடருக்கு! விளம்பரத்திற்காகப் பல சிறுவர்கள், சிறுமிகள் வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். அவர்கள் ஊரெல்லாம் போய் சோதிடரின் மகிமையைச் சொல்லி ஆட்களைச் சேர்த்தார்கள்.

இந்தப் பித்தலாட்டத்தை அம்பலப்படுத்த ஒரு கிழவர் கிளம்பினார். அவருக்கு வயது தொண்ணூற்றி ஐந்து! ஆனாலும் வாலிபரைப் போல கம்பீரமாக இருப்பார். பந்தயக் குதிரைபோல நடப்பார். அவர் சோதிடரின் புளுகுகளை நம்ப வேண்டாமென்று மக்களைக் கேட்டுக் கொண்டார். அந்தக் கிழவர், சோதிடர் உட்கார்ந்து தொழில் நடத்தும் மரத்துக்கு அருகாமையிலேயே ஒரு மேடை போட்டுக் கொண்டு சோதிட எதிர்ப்புப் பிரச்சாரம் செய்தார். "பொய்களை நம்பாதீர்! சோதிடர் ஜாக்கிரதை" என்று முழங்கினார்.

சோதிடருக்குக் கோபம் வந்தது. பகுத்தறிவுக் கிழவரைப் பார்த்து "நீ சீக்கிரம் சாகப் போகிறாய் என்று என் குருவி சொல்கிறது!" என்றார்.

கிழவர் சிரித்துக் கொண்டே "எனக்கு தொண்ணூற்றி ஐந்து வயதாகிறது. நான் நூறு வயது வரை வாழ்வேன். இன்னும் ஐந்தாண்டு எனக்கு அழிவில்லை" என்று பதில் சொன்னார்.

"ஓகோ! நூறாண்டு வாழ விரும்புகிறாயா? அது தான் முடியாது. என் சோதிடப்படி இன்னும் ஐந்தே மாதங்களில் செத்து விடுவாய்" என்றார் சோதிடர்.

சோதிடர் சொல்வது பலிக்கும் என்று அவரது சீடகோடிகள் நம்பினார்கள். ஆனால் அந்தக் கிழவர் உடம்போ, மேலும் மேலும் உறுதியாக ஆயிற்று. ஐந்து மாதங்கள் ஓடின. ஐம்பது மாதங்கள் ஓடின. ஏன்? ஐந்து வருடங்களும் அநேகமாக ஓடிவிட்டன. நூறாண்டு முடிய கிழவருக்கும் இன்னும் ஐந்தாறு வாரங்கள் தான் பாக்கி! அந்த ஐந்தாறு வாரங்களும் முடிந்தால் அவர் நூறு வயதுக் கிழவராவார்.

சோதிடர், இப்போது கிழவரைப் பற்றிப் பேசுவதேயில்லை. அவர் சோதிடம் பலிக்கிறதா என்று ஒரு வருடம் வரையில் பார்த்தவர்கள், பிறகு கிழவரின் பக்கம் சேர்ந்து கொண்டு

சோதிடரைக் கேலி பேசத் தொடங்கி விட்டார்கள். சோதிடரிடம், இப்போது அவரது சீடர்களைத் தவிர, வேறு யாரும் மக்கள் கூட்டம் கிடையாது.

ஒரு நாள் கிழவர் மேடையில் நின்று அறிவுப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த போது, வேகமாக வந்த லாரி மேடை மீது மோதிக் கிழவரைத் தூக்கி எறிந்தது.

கீழே விழுந்த கிழவர், எழுந்து தள்ளாடி நடக்க முயன்றார். அப்போது, சோதிடர் அமர்ந்திருந்த மரத்தின் பெரிய வேர் ஒன்று அவர் காலில் தடுக்கியது. மீண்டும் கீழே விழுந்தார். தலையில் அடிபட்டு அந்த இடத்திலேயே கிழவரின் உயிர் பிரிந்தது. செய்தி கேட்ட கிழவரின் மகன் ஓடோடி வந்து, அவரைத் தூக்கிச் சென்றான் - அழுது புலம்பியவாறு!

"பார்! பார்! நான் சொன்னது பலித்து விட்டது. கிழவர் நூறு வயது வரை வாழ மாட்டார் என்று சொன்னேன் அல்லவா?" இப்படி ஆர்ப்பரித்தார் சோதிடர்.

கிழவர் மகனுக்கு சீற்றம் பிறந்தது.

"ஓய்! சோதிடரே! என் தந்தை 95-வது வயதிலேயே சாவார் என்று நாள் குறித்தாய். கிட்டத்தட்ட நூறு வயதுக்கு சில நாட்கள் குறைவாக, அவர் வாழ வேண்டிய வயது முழுமையாக வாழ்ந்து முடிந்து விட்டார்! இதில் உன் சாமர்த்தியம் என்ன இருக்கிறது?"

என்று பொறிபறக்கக் கேட்டுவிட்டுத் தந்தையைத் தூக்கிக் கொண்டு சென்றான்.

"என் தந்தையின் பணி, என் தந்தையோடு முடிந்து விடாது! அதை நான் தொடருவேன்" என்று கிழவரின் மகன் சபதம் எடுத்துக் கொண்டான்.

சோதிடர், கலகலவெனச் சிரித்தார்.

"முட்டாள்கள்! நான் சொன்னபடி, கிழவர் என்றோ ஒரு நாள் செத்தாரல்லவா? ஆகா! நான் அமர்ந்திருக்கும் இந்த மரத்தடியின் வேரல்லவா அந்தக் கிழவரைக் கீழே வீழ்த்திக் கொன்றது!" என்று கேலியாகக் கத்தினார்.

அவரது சீடகோடிகள் "சோதிடருக்கு ஜே!" என்று கோஷம் போட்டுக் கொண்டு மரக் கிளையில் ஏறி நடனமாடினார்கள்.

வானரங்களைப் போல குதித்தார்கள். தாவினார்கள். சோதிடரும் சிரித்துக் கொண்டே இருந்தார். அவர்கள் ஆடிய ஆட்டத்தில் மரக்கிளையொன்று முறிந்து விழுந்தது.

கிழவர், லாரியால் மோதப்பட்டு வேர் தடுக்கி விழுந்து மடிந்தார். சோதிடர் தலையிலோ கிளையே விழுந்து மாண்டார்.

கிழவர் பணியைத் தொடர அவன் மகன் இருக்கிறான்.

சோதிடர் உடலை, மரத்தடியில் அனாதையாக விட்டு விட்டு, சீடகோடிகள் ஓடிவிட்டார்கள் அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு!

இதுதான் சோதிடரின் கதை!

அன்புள்ள,

மு. க.

30-01-1977

364. உன்னையும் உன் உழைப்பையும் நம்பித்தான்!

உடன்பிறப்பே,

"The D.M.K. has already collected and deposited Rs. 59 Lakhs in the Bank as election fund."

என்பதாக "இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஏட்டில் ஒரு குறிப்பு வெளியாகியுள்ளது. அதாவது; "தி.மு.கழகம் ஏற்கனவே ஐம்பத்தி ஒன்பது லட்ச ரூபாய் சேர்த்து தேர்தல் நிதியாக வங்கியில் போட்டு வைத்துள்ளது" என்று அந்த ஏடு எழுதியுள்ளது. இந்தத் தவறான தகவலை எடுத்து வைத்துக் கொண்டு சில மாலை ஏடுகள் பெட்டிச் செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. அதுபற்றிய சில விளக்கங்களைப் பொதுவாக உனக்கு அளித்திட நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

தி.மு.கழகத்தைப் பொறுத்தவரையில் தேர்தல் நிதி திரட்டுவதாக இருந்தாலும், வழக்குநிதி திரட்டுவதாக இருந்தாலும், பாதிக்கப்பட்ட கழகத் தோழர்களின் குடும்ப நிதி திரட்டுவதாக இருந்தாலும் எந்த நிதியாயினும் அதன் விபரங்களைப் பத்திரிகைகளில் வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறது.

பத்துகாசு, ஒரு ரூபாய் என்ற அளவிலும் சரி; சிறப்புக் கூட்டங்களில் நுழைவுக் கட்டண வாயிலாக வழங்கப்படும் பெருந்தொகைகளாயினும் சரி; அப்படி அளித்தவர்களின் பெயர்களைக் கழகச் சார்புடைய ஏடுகளில் வெளியிட்டே வருகிறோம்.

நேற்று வரையில் வரவு எவ்வளவு என்பதையும் மொத்தம் கூட்டிப் போட்டு, இன்று வரவு எவ்வளவு என்பதற்கான

விபரங்களையும் குறிப்பிட்டு அதற்கான கூட்டுத்தொகை எவ்வளவு என்பதையும் அறிவித்து வருகிறோம்.

சில கட்சியினர், தாங்கள் திரட்டும் நிதிக்கான விபரங்களை முதல்நாள் வரையில் எவ்வளவு என்றோ, இன்றைய வரவு எவ்வளவு என்றோ மொத்தம் கூட்டிப் போடாமல் தங்கள் ஏடுகளில் குட்டையைக் குழப்புகிற மாதிரி நிதிக் கணக்குகளை வெளியிட்டு வருவதையும் நீ நன்றாக அறிவாய்.

நாம், எவ்வளவோ தெளிவாக கழக நிதி விவரங்களை வெளியிட்டுங்கூட 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு; அந்த விபரங்களைத் தவறாகப் புரிந்து கொண்டோ, அல்லது ஞாபக மறதியாகவோ ஐம்பத்தி ஒன்பது லட்சம் ரூபாய் தேர்தல் நிதியென்று குறிப்பிட்டுள்ளது வருந்தத்தக்க ஒன்றாகும்.

1976 ஜூன் திங்கள் 25-ஆம் நாள் தி.மு.க. தலைமைக் கழகத்தின் சார்பிலும், தி.மு.க அறக்கட்டளைகளின் சார்பிலும் இருக்கின்ற மொத்த நிதிக்கான விபரங்கள் தனித்தனியே துண்டு அறிக்கை வாயிலாக கழக அமைப்புக்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டன.

அதில் அப்போது அந்தத் தேதியில் தலைமைக் கழக இருப்பாக இருந்த தொகை ஏறத்தாழ முப்பத்து ஏழு லட்ச ரூபாய் என்றும், தி.மு.க. அறக் கட்டளை சென்னை, மதுரை இரண்டு இடங்களிலும் உள்ளவைகளுக்கு மொத்த நிதி இருப்பு ஏறத்தாழ இருபது லட்ச ரூபாய் என்றும் அவைகள் வங்கிகளில் இருக்கின்றன என்றும் விபரங்கள் தரப்பட்டிருந்தன. அந்த முப்பத்துஏழு லட்சத்தையும் தி.மு.க. அறக் கட்டளை இருபது லட்சத்தையும் ஒன்றாகக் கூட்டி, அதற்கு வட்டியும் இரண்டு லட்சத்தைச் சேர்த்து 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு, 59 லட்ச ரூபாய் தேர்தல் நிதி என்று தவறாக அறிவித்து விட்டது.

உடன்பிறப்பே,

25-6-1976-ல் அறிவிக்கப்பட்ட விபரங்களை மீண்டும் ஒரு முறை உனக்கு நினைவு படுத்துகிறேன்.

1. தலைமைக் கழகத்தின்
முக்கிய செலவுகள், மற்றும்
அன்றாட செலவுகளுக்காக
வங்கியில் இருப்புத் தொகை: ரூ. 489 58

2. கழகத்தின் தேர்தல் நிதியாக வங்கியில் மொத்த இருப்புத் தொகை: ரூ. 29 41 632

3. வழக்கு நிதியாக வங்கியில் சேர்ந்துள்ள தொகை: ரூ. 2 36 530

தி.மு.க அறக்கட்டளை

1. சென்னை அண்ணா அறிவாலயம் அமைக்க - அறக்கட்டளை நிதியாக வங்கியில் ரூ. 12 82 146

2. மதுரை தி.மு.க. அறக் கட்டளைக்காக வங்கியில்: ரூ. 7 50 000

இந்த விபரங்கள்தான் ஏழு மாதங்களுக்கு முன்பு கழக அமைப்புக்களின் நிர்வாகிகளுக்கும், கழக நண்பர்களுக்கும் அறிவிப்பாக அச்சியற்றி அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த ஏழு மாதங்களுக்குப் பிறகு இப்போதுள்ள நிதி நிலை விபரமென்ன என்பதையும் உனக்குத் தெரிவித்திட விரும்புகிறேன். தவறான செய்திகள் ஒரு ஏட்டில் வரப்போய், அதைத் தூக்கி வைத்துக் கொண்டு சில மாலை ஏடுகள் அவதூறு பரப்பி ஆட்டம் போட்ட காரணத்தால்தான்; நானும், பொதுச் செயலாளரும், பொருளாளரும் கலந்து பேசி, இதன் தொடர்பான விளக்கங்களை உனக்கு அறிவித்திட வேண்டுமென முடிவெடுத்தோம். அந்த முடிவின் விளைவே இந்தக் கடிதம்!

1976 ஜூன் திங்களில் இரண்டு லட்சத்து முப்பத்தி ஆறாயிர ரூபாயாக இருந்த வழக்கு நிதி, இப்போது ஆறு லட்சத்து ஐம்பதாயிர ரூபாய் என்கிற அளவுக்கு உயர்ந்திருக்கிறது கழகத்தினர் மீது வழக்குகள் அடுக்கடுக்காகப் போடப்பட்டதும், அதனைச் சமாளிக்க ஆர்வத்துடன் உன்னைப் போன்ற உயிரனைய உடன்பிறப்புக்களும், தமிழ்ப் பெருங்குடி மக்களும் நேரிலும் பணவிடைத்தாள்களின் மூலமும் வழங்கிய தொகை, அந்த அளவை எட்டியிருக்கிறது. வழக்குகள் முடிவுற்ற பிறகு எல்லா வழக்குகளுக்கும் எந்தெந்த வகையில் எவ்வளவு செலவாயிற்று என்ற கணக்குகளைக் கழகத்தின் தணிக்கைக் குழு ஆய்வு செய்து, செயற்குழு - பொதுக் குழுக்களில் வைக்க இருக்கிறது.

தேர்தல் நிதியாக 1976 ஜூன் திங்களில் இருபத்தி ஒன்பது லட்சத்து நாற்பதாயிர ரூபாய் வங்கியில் இருந்தது அதில் பத்து லட்ச ரூபாயை கடந்த டிசம்பர் திங்களில் செயற்குழு உறுப்பினர்களின் ஒப்புதலோடு தி.மு.க. அறக்கட்டளைக்கு நிதியாக வழங்கப் பட்டுள்ளது.

சென்னையில் தி.மு.க. அறக்கட்டளை சார்பில் அண்ணா சாலையில் "அண்ணா அறிவாலயம்" ஒன்றை அமைக்க 1972 ஆம் ஆண்டில் சுமார் பத்து லட்ச ரூபாய் விலையில் ஒரு பெரிய இடம் வாங்கப்பட்டிருப்பது உனக்கு தெரியும். அந்த இடத்தில் அறக் கட்டளையின் பணிகளை நிறைவேற்றுவதற்காகவும் தி.மு.க. அறக் கட்டளையின் தொடர் செலவுகளுக்கான வரவினங்களை உருவாக்கும் நோக்குடனும், அறக்கட்டளையின் இலட்சியங்களை நடைமுறைப்படுத்தும் திட்டத்துடனும் கட்டிடங்கள் அமைக்க முன் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அப்படிக் கட்டிடங்கள் அமைக்க இப்போதுள்ள சுமார் பதின் மூன்று லட்ச ரூபாய் போதாதென்றுதான் தேர்தல் நிதியிலிருந்து செயற்குழுவினர் அனுமதி பெற்று பத்து லட்ச ரூபாயை அண்ணா அறிவாலயம் அமைக்க நிதியாக ஒதுக்கியுள்ளோம். இந்தத் தொகையைக் கழித்துப் பார்த்தால் இப்போதுள்ள தேர்தல் நிதி வங்கியில் உள்ள கணக்குப்படி பத்தொன்பது லட்ச ரூபாய்தான்.

இந்தப் பத்தொன்பது லட்ச ரூபாயில்தான் நாடாளுமன்றத் தேர்தலையும், இன்னும் சில மாதங்களுக்குப் பிறகு சட்டப் பேரவைத் தேர்தலையும் நாம் நடத்த வேண்டியிருக்கிறது என்பதைத் தயவு செய்து மறந்து விட வேண்டாம்.

1967 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கே பதினோரு லட்ச ரூபாய் தேவைப்பட்டது. அப்போது நாடாளுமன்றம், சட்டப் பேரவை இரண்டுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல்! ஒரே செலவு! இப்போது இரு அவைகளுக்கும் தனித்தனியே தேர்தல்!

ஏழு மாதங்களுக்கு முன்பு தலைமைக் கழக செலவுகளுக்காக தலைமைக் கழகத்தில் சுமார் ஐந்து லட்ச ரூபாய் நிதி, வங்கியில் இருந்தது என்றால் அது ஓரளவு வளர்ந்துள்ளது எனினும் இந்த நெருக்கடியான நேரத்தில் தவிர்க்க முடியாத பல செலவுகளுக்கும் கழகம், ஈடு கொடுக்க வேண்டியிருந்தது.

அன்பகம், அறிவகம் எனும் தலைமைக்கழக அலுவலகங்கள் இரண்டிலும் சுமார் இருபது பேர் பணியாற்றுகிறார்கள். அவர்களின் மாதாந்திர ஊதியம், தொலைபேசிக் கட்டணம், அஞ்சல் செலவு, பெட்ரோல் செலவுகள் - இந்த விபரங்களின் படி மாதந்தோறும் எட்டாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் ஆகிறது.

"மிசா கைதி"களாக ஓராண்டு காலம் சிறையிலிருந்த நமது கழகக் கண்மணிகள்; வசதியற்ற நிலையிலே உள்ளவர்களின் குடும்பங்களுக்கு அவர்களின் முறையீட்டுக் கடிதங்களை அடிப்படையாகக் கொண்டு மாதந்தோறும் இருநூறு ரூபாய் வீதம் நூற்றி இருபத்தி நான்கு குடும்பங்களுக்கும், நூறு ரூபாய் வீதம் இருபத்தி மூன்று குடும்பங்களுக்கும் அனுப்பிய வகையில் ஒரு லட்சத்தி எண்பத்தி எட்டாயிர ரூபாய் செலவாகியுள்ளது.

இவ்வளவு விளக்கங்களுக்கும் பிறகு கழகத்தின் தேர்தல் நிதியைப் பற்றி உனக்கு ஒரு தெளிவு ஏற்பட்டிருக்குமென்று நம்புகிறேன்.

இன்னுமொன்றைச் சொன்னால், நீ அதிர்ச்சி அடைவாய்.

1972-73 ஆம் ஆண்டுக்கு பதின்மூன்று லட்ச ரூபாய் வருமான வரி கட்ட வேண்டுமென்று வருமான வரி இலாக்கா நெருக்கிக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து 1973 - 1974, 1974-1975, 1975-1976 ஆம் ஆண்டுகளுக்கான வருமான வரி தாக்கீதுகளும் தலைமைக் கழகத்திற்கு வரலாம்.

இந்தியாவில் வேறெந்த அரசியல் கட்சிக்கும் வருமான வரி விதிக்கப்படுவதாக நானறிந்த மட்டில் தெரியவில்லை.

அதிலும் தி.மு.கழகத்திற்குத்தான் சோதனை போலும்!

வருமான வரி கட்டத் தேவையில்லையென்று கழக சார்பில் 'அப்பீல்' செய்து கொண்டிருக்கிறோம். அதற்கிடையில் அந்தப் பதின்மூன்று லட்ச ரூபாய்க்கான "சொத்து ஜாமீன்" கேட்டு நோட்டீஸ் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வளவு விபரங்கள் உனக்குப் போதுமானவை என்று கருதுகிறேன்.

இந்தியன் எக்ஸ்பிரஸ், உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் எழுதியுள்ளதே தவிர; உள்நோக்கத்துடன் எழுதியதாகக் கூறமுடியாது.

ஆனால் அந்தச் செய்தியை எரிச்சல் ஏடுகள் சில உள் நோக்கத்துடன் பயன்படுத்த முனைந்ததால், உனக்கு இந்தக் கடிதம் எழுத நேரிட்டது.

எனவே, நாம் இரண்டு தேர்தலுக்காக வைத்திருக்கிற தொகை, குறைவானதுதான்! அடுத்து சட்டப் பேரவைத் தேர்தல் வேறு இருக்கிறது!

உடன்பிறப்பே, உன்னையும் உன் உழைப்பையும் ஆர்வத்தையும் நம்பித்தான் கழகம் தேர்தல் களத்தில் காலெடுத்து வைக்கிறது.

அன்புள்ள,

மு. க.

31-01-1977

365. இந்தி எதிர்ப்பு வீரர்!

உடன்பிறப்பே,

"He would emphatically say the people should necessarily learn Hindi if they had faith in national integration."

மத்தியப் பேரரசின் நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் கடந்த நவம்பர் திங்கள் 14-ஆம் நாள் சென்னையில் ஆற்றிய உரை 'இந்து' ஏட்டில் வெளி வந்துள்ளதைத்தான் மேலே சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

"இந்திய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டவர்களானால் அந்த மக்கள் அவசியம் இந்தி மொழியைக் கற்றுத் தீர வேண்டும்" என்று அவர் சி.சுப்பிரமணியம் வலியுறுத்திக் கூறினார்.

இப்படி ஒரு செய்தியை நவம்பர் திங்களில் "இந்து" ஏடு வெளியிட்ட பொழுது - அல்லது இப்படி ஒரு கருத்தை மாண்புமிகு சுப்பிரமணியம் அவர்கள் திட்டவட்டமாக அறிவித்த போது இவ்வளவு விரைவில் நாடாளுமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்படும் என்று அவருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இந்தியாவில் நெருக்கடி நிலையென்று 1975 ஜூன் 25ஆம் நாள் அறிவித்ததைக் கூட அவர் சென்னையிலிருந்தவாறு வானொலி வாயிலாகத்தானே செய்தியாகக் கேள்விப்பட்டார். எனவே அவருக்கு மார்ச் திங்களில் நாடாளுமன்றத் தேர்தல் வருமென்று நவம்பர் திங்களில் தெரியாது. அதனால் அவர் இந்தி படிக்காதவர்களுக்கு இந்திய ஒருமைப்பாட்டிலேயே நம்பிக்கை கிடையாது என்று ஆவேசமாகப் பேசி வைத்தார் அப்போது!

ஆனால் 'மார்ச்' வரப் போகிறதே இப்போது! அதை முன்னிட்டு ஜனவரி 31ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் மாபெரும் இந்தி எதிர்ப்பு

வீரராகத் தோற்றமளித்திருக்கிறார். தீக்குளித்த சின்னச்சாமி, சிவலிங்கம், அரங்கநாதன், மாயவரம் சாரங்கபாணி போன்ற மொழிப் போராட்ட வீரர்கள் எண்மரையும் வென்றிடக்கூடிய அளவுக்குத் தமிழ் மொழியின் காவலராகவும், இந்தி மொழிக்குத் தமிழ் நாட்டில் இடமில்லையென்று இடிமுழக்கம் செய்பவராகவும் அவர் நிமிர்ந்து நின்று இந்தி எதிர்ப்புப் போர் முரசு கொட்டியிருப்பது தமிழ் மக்களையெல்லாம் வீறு கொள்ளச் செய்யக்கூடிய ஒன்று என்றாலுங்கூட "அது தேர்தல் நேரத்துப் பேச்சு" என்று அனைவருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கி விட்டது என்பதை என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

> **"சுயநலத்தைக் கருத்தில் கொண்டு தி.மு.க.வினர் ஜனதா கூட்டணியில் சேருகிறார்கள். தமிழ் போனாலும் சரி; இந்தி வந்தாலும் சரி; நம்முடைய மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள ஜனதா கட்சியுடன் கூட்டு சேருவோம் - என்று போய்ச் சேருகிறார்களே - இந்த தி.மு.க.வினருக்கு உண்மையிலேயே தமிழ்நாட்டின் நலன் - தமிழர் நலன் ஆகியவற்றில் அக்கறை உள்ளதா?"**

சுப்பிரமணியனாரின் இந்தப் பேச்சு, தேர்தல் பிரச்சாரத் தொடக்கவிழாப் பேச்சு! அடடாவோ! என்ன அருமை! என்ன அருமை! என்று சொல்லத் தோன்றுகிறது அல்லவா?

- தமிழ்நாட்டின் நலன்
- தமிழர் நலன்

இந்த இரண்டு வாசகங்களையும் தி.மு.கழகம் பயன்படுத்தினால் அது பிராந்தீயப் பித்து! இந்திய ஒற்றுமைக்கு ஆபத்து! "தமிழர் நலன்" என்று பேசினாலோ எழுதினாலோ - அதனைத் தணிக்கை அதிகாரிகள் முரசொலி ஏட்டில் அனுமதிக்காத நிலை, பத்து நாட்களுக்கு முன்பு வரையில் இருந்தது இன்று சி. எஸ். அவர்கள் தமிழ்நாட்டு நலனிலும், தமிழர் நலனிலும் தனக்குள்ள மலையளவு அக்கறையை வெளிக்காட்டி, கழகத்திற்கு அவைகளில் கடுகளவு அக்கறையும் இல்லை என்று குற்றம் சாட்டியிருக்கிறார். அதுமட்டுமல்ல; "இந்தி வந்தாலும் சரி" என்று நாம் ஏற்றுக் கொண்டு விட்டோமாம்! அத்துடன் விடவில்லை; இந்தி வந்தால்

தமிழ் போய்விடும்- "அப்படித் தமிழ் போனாலும் சரி" என்று ஒரு முடிவுக்கு நாம் வந்து விட்டோமாம்! ஒரு உண்மையைத் தேர்தல் நேரத்திலாவது சுப்பிரமணியனார் ஒப்புக் கொண்டமைக்காக நாம் அவருக்கு நன்றி செலுத்தத்தான் வேண்டும்.

"தமிழ் போனாலும் சரி
இந்தி வந்தாலும் சரி"

என்று அவர் கூறுவதிலிருந்து "இந்தி வந்தால் தமிழ் போய்விடும்" என்பதை அவர் தெளிவாகத் தமிழ் மக்களுக்குத் தெரிவித்து விட்டார் அல்லவா?

சரி; அவருடைய வாதத்தைச் சற்று ஆராய்வோம்!

"ஜனதா கட்சி" இந்தி வெறி கொண்ட கட்சி என்கிறார். தி.மு.க.வுக்கு அந்தக் கட்சியுடன் உடன்பாடு ஏற்பட்டால் தி.மு.க.வும் இந்தியை ஏற்றுக் கொண்ட கட்சியாகிவிடும் என்று கூறுகிறார்.

ஜனதா கட்சி, புதிதாகத் தோன்றியுள்ள ஒரு கட்சி - அதனுடைய மொழிக் கொள்கை இன்னமும் வெளியிடப் படவில்லை. இந்தியைக் கட்டாயமாகத் திணிக்க வேண்டும் என்ற மொழிக் கொள்கையை அந்தக் கட்சி கொண்டிருப்பதாகவும் தெரியவில்லை. ஒரு கட்சியில் உள்ள தனி மனிதர்களை வைத்துக் கொண்டு அந்தக் கட்சியின் கொள்கைகளை எடை போட்டுவிடக் கூடாது. அந்தக் கட்சி எடுக்கும் கொள்கை முடிவுகளுக்குத் தான் அந்தத் தனி மனிதர்கள் கட்டுப்பட வேண்டும். அல்லது அந்தக் கட்சியை அந்தத் தனி மனிதர்கள் உதறி விட வேண்டும். மொரார்ஜி எங்கேயிருக்கிறார் தெரியுமா? என்று சுப்பிரமணியம் கேட்பாரேயானால், நாம் அவரைப் பார்த்துக் கேட்க முடியும் - 1965-ல் தமிழ் நாட்டில் இந்தியை எதிர்த்த மாணவர்களையும், தமிழ் மக்களையும் நூற்றுக்கணக்கில் கொன்று குவிக்கக் காரணமாக இருந்த பெரியவர் பக்தவத்சலம் இப்போது எங்கே இருக்கிறார்? எந்தக் கட்சியில் இருக்கிறார்?

எனவே, தனி மனிதர்கள் அல்ல பிரச்சினை! தி.மு.கழகத்தோடு 1971-ல் புதிய காங்கிரஸ் தேர்தல் உடன்பாடு கொண்டது. அப்போது கழகத் தேர்தல் அறிக்கையில் "மாநில சுயாட்சி" வலியுறுத்தப்பட்டுத்தான் இருந்தது. நம்மோடு புதிய காங்கிரஸ்

உடன்பாடு கொண்டது என்பதற்காக, அது நமது மாநில சுயாட்சிக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டது என்று கூறமுடியுமா?

அதைப் போலத்தான் தி.மு.க.வுக்கும் ஜனதா கட்சிக்கும் தேர்தல் உடன்பாடு ஏற்பட்டாலும் இதுவரை ஏற்படவில்லை அது ஜனநாயகத்தைக் காக்கும் பொதுப் பிரச்சினையில் ஏற்படுகிற உடன்பாடாக இருக்குமே தவிர, கழகத்தின் மொழிக் கொள்கையோ, தனித் தன்மைகளோ விட்டுக் கொடுக்கப்படுகிற நிலையிலே இருக்காது என்பதைத் திண்ணமாகக் கூறமுடியும். தமிழ் போகட்டும் - இந்தி வரட்டும் - என்று எங்கிருந்து எந்த நேரத்தில்; முழக்கம் கூட அல்ல - சிறு முணுமுணுப்புக் கேட்டாலும் "செந்தமிழுக்கொரு தீமை வந்தபின்னும் இந்தத் தேகம் இருந்தொரு லாபமுண்டோ?" எனக் கேட்டுச் சீறியெழும் சிங்கத் தமிழர் பாசறைதான் தி.மு.கழகம் என்பதை, சுப்பிரமணியனாருக்கு ஞாபகம் செய்கிறேன்.

"மங்கையொருத்தி தரும் சுகம்; எங்கள்
மாத தமிழுக்கு ஈடில்லை"

எனக்கூறி;

"எப்பக்கம் வந்து புகுந்துவிடும்-இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டிவரும்?"

எனக் கேட்டு,

உயிர் தரவும் ஒப்பி - ஓராயிரம் ஈராயிரம் இலட்சமெனத் தமிழ் காக்கத் துடிக்கும் புலிநிகர் இளைஞர்களின் முகாம்தான் தி.மு.கழகம்!

தேர்தலுக்காக இந்தி எதிர்ப்பாளராக மாறி, எதிர்காலத்திலே இந்திக்கு ஆலவட்டம் சுழற்ற நினைக்கும் சந்தர்ப்பவாதிகளைத் தமிழகம் உணர்ந்து தான் வைத்திருக்கிறது.

உடன்பிறப்பே, அண்ணா முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் பள்ளிகளில் இந்தியை அகற்றி மும்மொழித் திட்டத்தை மூலைக்கு அனுப்பிவிட்டு, இருமொழித் திட்டத்துக்கு வழிவகுத்தார். அப்படிச் செய்தது நமக்கு இந்தி மொழியின் மீதுள்ள வெறுப்பினால் அல்ல; அதன் மீதோ, வேறு எந்த மொழி மீதோ, பகையுமில்லை. ஒரு மொழி மற்றொரு மொழியினர் மீது கட்டாயமாகத் திணிக்கப்படலாகாது என்பதே நமது கொள்கை.

மும்மொழித் திட்டத்தைத் தமிழ்நாட்டில் மீண்டும் கொண்டுவர வேண்டுமென்பது தான் புதிய காங்கிரசின் கருத்து.

"மும்மொழிக் கொள்கை ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் இங்கு இந்தி விலக்கப்பட்டது. ஒன்றுபட்ட இந்தியாவில்தான் வாழ வேண்டுமென்று முடிவு செய்தபின்னர் இந்திப் படிப்பைப் புறக்கணித்தால் நமது எதிர்காலச் சந்ததி பாதிக்கப்படும்."

இதையும் நவம்பர் மாதத்துப் பேச்சிலே சுப்பிரமணியனார் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

ஜனவரி 20-ஆம் நாளன்று தமிழக ஆளுநர் மேதகு சுகாதியா அவர்கள் மும்மொழித் திட்டம் பற்றிக் குறிப்பிட்டபோது; அடுத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிற அரசாங்கம் அதுபற்றி முடிவு செய்யும் என்று தெளிவாக்கியிருக்கிறார்.

எனவே, அடுத்து தமிழ்நாட்டில் வருகிற அரசாங்கம் எந்த அரசாங்கமாக இருக்க வேண்டும் என்பதை நான் சொல்லாமலே நீ புரிந்து கொள்ள முடியும்.

தமிழ்நாட்டில் இந்தி, மும்மொழித் திட்டத்தில் நுழைய முடியவில்லை - இந்தி கட்டாயமில்லை; என்றெல்லாம் கூறப் பட்டாலும் இந்தியை மெல்ல மெல்லப் புகுத்துகிற முயற்சி மிகத் தீவிரமாக ஆக்கப்பட்டிருக்கிறது.

"இந்தி இஷ்ட பாடம்" என்ற பெயரில் உயர்நிலைப் பள்ளிகளில் மாலை நேரத்துப் படிப்பாக ஆக்கப்பட்டுள்ளது.

"மத்திய அரசு ஊழியர்கள், அலுவல் நேரத்தில் இந்தி வகுப்புக்கு வரவேண்டும். வரத் தவறினால் - அலுவலுக்கே வராததாகக் கருதப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்."

இந்தக் கட்டாய விதியை எதிர்த்து முரசொலி மாறனும், அஞ்சலகத்தில் பணியாற்றிய நண்பர் லட்சுமணனும் வழக்குப் போட்டு, உயர் நீதிமன்றத்தில் வெற்றி பெற்று பின்னர் உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கு சமீப காலத்திலேதான் தள்ளுபடி செய்யப்பட்டது.

சுப்பிரமணியனார் இன்னொரு செய்தியை மறந்திருக்க மாட்டார் என்று நம்புகிறேன். கட்டாய இந்தியை எதிர்த்து அடக்கு

முறைகளை ஏற்றுக் கொண்டு சிறை சென்ற தியாகிகளுக்குக் கழக அரசு மானியத் தொகை வழங்கியதைக் கூட இப்போது நிறுத்தி விட்டார்கள்!

நேராக வாயிற்புறமாக வராமல், ஜன்னல் வழியாகவோ சந்து பொந்துகளின் வழியாகவோ தமிழகத்தில் இந்தி மொழி ஆதிக்கம் உள் நுழைந்து உறுதியும் வலிவும் பெற - மறைமுகமான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டு தானிருக்கின்றன.

இவற்றையெல்லாம் மறைத்து விட்டு திடீர் இந்தி எதிர்ப்பு வீரராக திரு. சுப்பிரமணியம் அவர்கள் மாறுவதை தேர்தல் நேரத்துத் தந்திரம் என்றுதான் மக்கள் முடிவு கட்டிக் கொள்வார்கள்.

அன்புள்ள,

மு. க.

02-02-1977

366. "இருப்புக் கூட்டின் கதவு திறந்தது சிறுத்தையே வெளியில் வா!"

உடன்பிறப்பே,

"பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில் வா!
எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலி எனச் செயல் செய்யப் புறப்படு வெளியில்!"

எனப் பாவேந்தரின் கவிதை வரிகளாலேயே, கழகத்தின் கண்மணியே! உன்னை நான் இரு கையேந்தி அழைத்து மகிழ்கிறேன்.

ஓராண்டு காலம் உன்னையும் என்னையும் மறைத்து நின்ற வானுயர்ந்த சுவர்களை விட்டு வெளியில் வந்து விட்டாய்!

உன்னுடன் உள்ளே அடைபட்டவர்களில் இருவர் உறங்கிடும் கண்களுடன் வெளியே வந்தனர். ஆம், என்றுமே விழித்துப் பார்க்க இயலாத விழிகளுடன், காற்றை உள்ளே இழுத்து வெளியே விட முடியாத சுவாச கோசங்களுடன் வெளியே வந்து, குளிர்ந்து போன தங்கள் உடல்களுக்குத் தணலாடையைப் போர்த்திக் கொண்டு மண்ணோடு மண்ணாக மாறினர். இல்லை, இல்லை, எங்கள் கண்ணோடு ஒளியாகக் கலந்தனர். மூச்சோடு காற்றாக ஒன்றினர். இதய அசைவுகளின் துடிப்பாக இணைந்தனர்.

அந்தக் குமுறலை அடக்கிக் கொண்டு தமிழகத்தின் பல்வேறு சிறைக் கொட்டடிகளில் பூட்டப் பட்டுக் கிடந்த உனக்கு விடுதலையே கிடைக்காது என்றுதான் நினைத்து நினைத்து என் உள்ளம் களைத்துப் போயிற்று. உடலும் இளைத்துப் போயிற்று. எத்தனை ஆண்டுகளாயினும் கழகத்தின் பத்தரை மாற்றுப் பசும் பொன்னாகத்தான் இருப்பேன் என்று சூளுரைத்து ஓராண்டு காலம் வரலாறு காணாத அடக்குமுறையைச் சிறைக் கோட்டத்தில்

தாங்கிக் கொண்ட என் சிங்கம் நிகர் உடன்பிறப்பே, உன் தியாகத் திருவடிகட்கு என் சிரம் தாழ்த்துகிறேன்.

நீ, மல்லிகை முல்லை ரோஜா மலர் மாலைகளைக் கொண்டு வந்து என் கழுத்திலே சூட்டுகிறாய்!

உனக்கு மாலை சூட்டிய மங்கை நல்லாள் ஓராண்டு காலம் உன்னைப் பிரிந்து அனுபவித்த வேதனையும், அந்த மயிலைப் பிரிந்து நீ அனுபவித்த கொடுமையும் - எண்ணிப் பார்த்திடவே நெஞ்சுக்கு பூகம்ப அதிர்ச்சியைத் தரும் நிகழ்ச்சியாக அன்றோ இருந்தது! இருக்கிறது!

உன்னைப் பிரிந்து உன் அன்னை வடித்த கண்ணீர் - உன் தந்தையின் இதய ஓலம் - உன் அருமை மழலைகளின் வாடிவதங்கிய முகங்கள் - உனை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றவளின் உள்ளத்து உலைக்களம்-

உடன்பிறப்பே, இந்த ஓராண்டுகாலம் அவைகளுக்கு ஆறுதல் கூற முடியாமல் வெளியில் இருந்து நாங்கள் பட்ட அவதி - இவற்றையெல்லாம் மாற்றிட, இருள் நீக்க எழுந்த கதிர்போல் உன் விடுதலைச் செய்தி கிட்டியது.

இருப்புக் கூட்டின் கதவு திறந்ததும் இல்லம் நோக்கி விரைந்திடவில்லை உன் கால்கள். சென்னை நோக்கிப் பறந்திட பாச இறக்கைகள் உனக்கு திடீரென முளைத்து விட்டன.

அடடா! நீ வந்த நேரம் - செயற்குழு என்றும் - ஆய்வுக்குழு என்றும் ஆயிரம் வேலைகள் - ஆரத் தழுவிட வேண்டும் - ஆண்டொன்றாயிற்றே இடைவெளி ஏற்பட்டு; அந்தக் காலத்துக் கதைகளையெல்லாம் பேசிட வேண்டுமென்று துடிக்கிறேன் என்றாலும் வேலைகள் குறுக்கிடுகின்றன. ஓடிவந்த உன்னிடம் ஒரு வருடச் செய்திகளைப் பரிமாறிக் கொள்ள முடியவில்லை யென்றாலும் ஒருவரையொருவர் இமை கொட்டாமல் பார்த்துக் கொள்கிறோமே; அதிலே எத்தனை நிகழ்ச்சிகளைக் காட்சியாக்கி விடுகிறோம் - எத்தனை சரித்திரங்களைப் படித்து விடுகிறோம் - பார்த்தாயா?

சிலர் உன்னை அணுகி,

“சாகிற வரையில் சிறைதான்” என்றனர்.

“என் சாம்பல் தமிழ் மணந்து வேகும்” என்றாய்.

“கட்சியைத் துறந்திடு! கதவு திறந்திடும்” என்றனர்.

“கடையைக் கட்டிடு! நடையைத் தொடங்கிடு” என்று நறுக்கெனப் பதில் அளித்தாய்!

“தலைமையைத் தாக்கி ஒரு அறிக்கை அளித்திடு! தளைகள் அறுபடும் தப்பிடலாம்” என்றனர்.

“அதற்கு எம்முடன் சில எட்டப்பர்கள் வந்துள்ளனர். அவர்களை அணுகிடுக. தலையே அறுபடினும் துரோகம் செய்யும் ரத்தம் இந்த ரத்தமல்ல!” என நிமிர்ந்து நின்று விடையளித்தாய்.

வீரத்தின் திருஉருவே! மான மரபின் குலவிளக்கே! மாணிக்கத் தமிழே! மரகதச் சுடரே! முன்னூறு நாட்களுக்கு மேலாக நீ ஓய்வெடுத்துக் கொண்டிருந்து விட்டு வெளியே வந்ததும் வராததுமாக நீ ஆற்றிட வேண்டிய பணி உன் எதிரே மலைபோல் உயர்ந்து நிற்கிறது!

உன் தோளில் தோள் இணைத்து நானும் நமது உடன் பிறப்புகளும் முடித்திட வேண்டிய அந்த ஜனநாயகப் பணிக்கு நேரமும் நாளும் குறித்தாகி விட்டது.

போதிய நாட்கள் இல்லை. குறுகிய நேரம்தான் எனினும் நம் கடன் பணி செய்து கிடப்பதேயன்றோ?

நீ பெற்றுள்ள தியாக முத்திரைகள் - விழுப்புண்கள் - எதையும் எதிர்பார்த்துப் பெற்றவை அல்ல!

ஆனால் அவைகள் என்றென்றும் மதிக்கத் தகுந்தவை!

இன்றில்லா விட்டால் - நாளை - நாளை தவறினால் மறுநாள் - என்று நாட்கள் தள்ளிப் போடப் படலாமே தவிர, புடம் போட்ட தங்கமாம் உனக்குப் பொருத்தமான புகழாரம் அணிவிக்கப் பட்டே தீரும்! அது இந்தக் கழகத்தின் மாண்பு! ஆம், நமது பாசறையின் மரபு! எத்தனையோ நன்றி கெட்டவர்கள் நம்பிக்கைத் துரோகிகள், உதித்த வயிற்றைப் பிளந்தவர்கள், குடித்த மார்பை அறுத்தவர்கள் - அவர்களையெல்லாம் அடையாளம் தெரிந்து கொள்ளாமல் மேலே ஏற்றிவிடும் ஏணியாகவன்றோ எனது தோள்கள் இருந்திருக்கின்றன! தூய்மையின் வடிவே! தும்பைப்பூ உள்ளமே! உனக்கா எனது தோள் இடம் தராது என்று கருதுகிறாய்?

நிச்சயம் இடம் தரும்! இப்போது நீயும் நானும் நமது உடன்பிறப்புத் தலைவர்களும், தளநாயகர்களும், செயல் வீரர்களும் ஈடுபடும் தேர்தல் களத்தில் வெற்றி வாகை சூடுவது ஒன்றே குறிக்கோளாக இருந்திட வேண்டும்.

யார் வாயிலாக அந்த வெற்றியைப் பெறுவது? அதற்கான யோசனையைச் சொல்! முடிவைத் தலைமையிடம் விட்டுவிடு!

எடுத்த முடிவுக்கு என்றுமே கட்டுப்பட்டுப் பழகிய உடன் பிறப்பல்லவா; அதனால் சொல்லுகிறேன்-

நிறைய இருக்கிறது பணி!
நேரம் குறைவு!
நகர்ந்து செல்லும் ஒவ்வொரு
மணித் துளியும் மிக முக்கியமானது!
காலம் பொன் போன்றது-
கடமை கண் போன்றது-

புதிதாகப் புரிந்து கொள்ள வேண்டியவைகளா; இவைகள்? அல்லவே! அதனால் புறப்படு!

"பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில் வா!
வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!
கையிருப்பைக் காட்ட எழுந்திரு!
குறிக்கும் உன் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணாக் கடல் போல் மாப்பதை மேல்விடு!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!
கைக்குள திறமை காட்ட எழுந்திரு"

அன்புள்ள,
மு. க.
05-02-1977

367. வெற்றிக் கனி பறித்திடுவோம்!

உடன்பிறப்பே,

திடீர் என்று நாடாளுமன்றத் தேர்தலை அறிவித்து விட்டு இதுவே எங்கள் ஜனநாயகப் பற்றுக்குத் தலையாய அடையாளம் என்று புதிய காங்கிரஸ்காரர்கள் முழங்கிக் கொண்டிருக்கிறார்கள். திடீர் தேர்தல் அறிவிப்பின் காரணமாக எதிர்க்கட்சி அணிகள் தங்களைத் தேர்தல் களத்திற்குத் தயார்படுத்திக் கொள்ள முடியாது என்று திட்டமிட்டுச் செய்யப்பட்ட காரியம் இதுவெனப் பல முனைகளில் இருந்து கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டாலுங் கூட தேர்தலைச் சந்திக்க எல்லாக் கட்சிகளுமே தயாராகி விட்டன.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் எதிர்க்கட்சிகளின் தேர்தல் உடன்பாடு எப்படி அமையப் போகிறது என்பதற்கான ஆரூடங்களை வெறும் வியாபார நோக்கத்துடன் சில ஏடுகள் வெளியிட்டு வருகின்றன. "ஜனதா கட்சியுடன் உறவு கொள்ளத் தி.மு.க. துடிக்கிறது. ஆனால் அந்தக் கட்சியோ அல்லது அதில் தலைமைப் பொறுப்பில் உள்ள பழைய காங்கிரஸ் கட்சியோ தி.மு.க.வுடன் சேரத் தயாராக இல்லை" என்ற வகையிலே ஒரு செய்தி வரும். அதே ஏட்டின் அடுத்த பக்கத்திலோ, அல்லது அந்த ஏட்டுக்குரிய தி.மு.க. எதிர்ப்பு லட்சியத்தை உயிராகக் கொண்ட மற்றொரு ஏட்டின் முதற் பக்கத்திலோ "கருணாநிதி - ப.ராமச்சந்திரன் காந்தர்வ மணம்" என்று மற்றொரு செய்தி தலை நீட்டும்.

அத்துடன் விடுவார்களா? "ஜனதாவுடன் உறவு கூடாது என்று அன்பழகன் கண்டிப்பாகக் கூறிவிட்டார். அதனால் அவருக்கும் கருணாநிதிக்கும் கடுமையான மோதல்" என்று பொய்யை விற்றுப் பிழைக்கும் போக்கில் செய்திகளையும் நாள்தோறும் வெளியிட்டு வருகிறார்கள்.

தேர்தல் நேரத்தில் யூகங்களை வெளியிடுவது என்பது ஏடுகளுக்கு வழக்கம்தான். அதற்காகக் கற்பனைக் கதைகளைக் காலுமின்றி தலையுமின்றி அச்சு வாகனத்தில் ஏற்றுவதில் என்ன சுவையைக் கண்டார்களோ தெரியவில்லை.

நெருக்கடி நிலையை அறிவித்த நேரத்திலிருந்து ஒன்றரை வருட காலமாக "வதந்திகளைப் பரப்பாதே" என்ற முழக்கத்தைப் புதிய காங்கிரசார் "வந்தே மாதர"த்தைப் போல முழங்கி வருகிறார்கள். ஆனால் இந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில் வதந்திகளைப் பரப்பிய ஏடுகளுக்குப் பரிசு தரவேண்டுமேயானால், அந்தப் போட்டியில் எல்லாப் பரிசுகளையும் தட்டிக் கொண்டு போகக் கூடிய அளவுக்கு ஆளுங் காங்கிரஸ் கட்சியினர், தங்கள் ஆற்றலைக் காட்டியுள்ளனர், அவர்கள் நடத்தும் ஏடுகளின் வாயிலாக!

தமிழ்நாட்டில், தி.மு.கழகம் வேறு ஒரு கட்சியுடன் உறவு கொண்டால் அது சரணாகதி! அல்லது காந்தர்வத் திருமணம்! இப்படி கேலி பேசுகிற கட்சியினர் பத்து நாட்களாக டெல்லிக்கு ஆளைக் கூப்பிட்டும், டெல்லியிலிருந்து ஆளை அனுப்பியும், டெல்லியிலேயே போய் முகாமிட்டுக் கொண்டும் தமிழ்நாட்டில் ஒரு கூட்டணி அமைக்கப் படாதபாடு படுகிறார்களே; அது மட்டும் சரணாகதி இல்லையா? அந்த மணத்திற்குக் காந்தர்வ மணம் என்ற பெயர் பொருந்தாமல் போய்விடுமா?

உடன்பிறப்பே, நாடே அதிர்ச்சி கொள்ளும் அளவுக்கு ஜெகஜீவன்ராம், பதவியிலிருந்தும் புதிய காங்கிரஸ் கட்சியிலிருந்தும் விலகி விட்டார். அவர் விலகியது பற்றி எந்தக் கருத்தையும் கழகச் சார்பில் நான் அறிவிக்க வில்லை. அவர் விடுத்த அறிக்கை பற்றி நிருபர்கள் கேட்ட போது அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள 'நெருக்கடி நிலை நீக்கம்' பற்றிய கருத்துக்களும் கழகச் செயற்குழு தீர்மானங்களும் ஒன்றுக்கொன்று உடன்பாடானவைகள் என்று தெரிவித்தேன்.

உடனே ஆளுங் காங்கிரஸ் வட்டாரத்திலிருந்து அர்ச்சனை! அபிஷேகம்! எல்லாம் ஆரம்பமாகி விட்டன.

> "காமராஜ் பெயரால் தனியாகக் கட்சி நடத்தியே தீருவேன் என்று வீராப்புப் பேசிய பி.ராமச்சந்திரன் சத்தமில்லாமல் சோரம் போயிருக்கிறார்."

இந்திரா காங்கிரசின் பொதுச் செயலாளர்களிலே ஒரு 'புண்ணியவான்' - எழுதியுள்ள வாசகங்கள் இவை!

காமராஜ் காங்கிரசில் இருந்தவர்கள், தி.மு.க.வுடன் தேர்தல் உறவு கொண்டால் அது "சத்தமில்லாமல் சோரம் போவது" என்று சொன்னால்; காமராஜ் காங்கிரசில் இருந்தவர்கள், நடிகர் கட்சியுடன் தேர்தல் உறவு கொள்ளப் பேச்சுவார்த்தை நடத்துகிறார்களே தமிழ் நாட்டில்; அது "சத்தம் போட்டுக் கொண்டே சோரம் போவதா?" என்று திருப்பிக் கேட்க எவ்வளவு நேரமாகும்?

ஆளுங் காங்கிரசின் பொதுச் செயலாளர், தாழ்த்தப் பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிடும் ஜெகஜீவன்ராமைப் பற்றி எழுதியுள்ள வரிகளையும் படித்துப்பார்.

"தி.மு.க. பாசிஸ்ட் ஆட்சியின் கொடுமைகளுக்கு நாம் ஆளான போதெல்லாம் தமிழகத்திற்கு வந்து தி.மு.க. அமைச்சர்கள் அளித்த லீலாவிநோத சுக போகங்களில் திளைத்து எழுந்தவர் ஜெகஜீவன்ராம் என்பதை நாடு மறக்கவில்லை."

உடன்பிறப்பே, "லீலாவிநோத சுகபோகங்களாம்" அதில் திளைத்து எழுந்தாராம் ஜெகஜீவன்ராம் - தி.மு.க. அமைச்சர்கள் ஏற்பாடு செய்து கொடுத்தார்களாம்! இரத்தம் கொதிக்கத்தான் செய்கிறது அந்த எழுத்துக்களைப் படிக்கும் போது!

"அரசியல் கட்சித் தலைவர்களை இழிவு படுத்திப் பேசக் கூடாது" என்று பதினைந்து நாட்களுக்கு முன்பு தான் பிரதமர் அவர்கள் வானொலியிலே அறிவுரை கூறினார். வேண்டுகோள் விடுத்தார். சுதந்திரப் போராட்ட வேள்வியிலே தன்னை அர்ப்பணிக்கத் தயாராகி விடுதலைப் போர்க் கொடியை ஏந்தி நின்ற மிகப் பெரிய இந்திய நாட்டுத் தலைவர்களில் ஒருவராம் ஜெகஜீவன் ராம் அவர்களைப் பற்றி, பிரதமரின் கட்சியைச் சேர்ந்த பொதுச் செயலாளர் ஒருவர் தீட்டியுள்ள ஓவியம் இது!

ஒருவேளை இவைகள் எல்லாம் "இழிவுபடுத்திக் கூறுதல்" எனும் பட்டியலில் வராதோ; என்னவோ!

உடன்பிறப்பே, தேர்தல் நெருங்கிட, நெருங்கிட இது போன்ற ஆபாசத் தாக்குதல்களை எதிர்க்கட்சியினர் எதிர்பார்த்துத்தான் தீர வேண்டும்.

ஆனால், உன்னைப் பொறுத்தவரையில் நான் கேட்டுக் கொள்கிறேன்; ஆபாச எழுத்துக்கும் - அவதூறுப் பேச்சுக்கும் அவர்களின் கையும், வாயுமே - கருப்பைகளாக இருக்கட்டும். அந்தக் கருப்பைகள், இந்தக் கர்ண கடூரச் சொற்களைப் பிரசவித்துக் கொண்டிருக்கட்டும். அவைகளை அலட்சியப்படுத்துவதும் - புன்னகையால் புறங்காட்டி ஓடச் செய்வதும் - தேர்தலுக்குத் தேவையான விளக்கங்களை அளிப்பதும் - எதிரிகள் நடமாட விடும் குழப்பச் செய்திகளுக்குக் கொள்கை ரீதியான தெளிவுரைகள் வழங்குவதும் - உன் தேர்தல் பிரச்சாரப் பணியாக இருக்கட்டும்.

நாம் தனித்தே நின்று போட்டியிடுகிறோமா? அல்லது பிற கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு உண்டா?

இந்தக் கேள்விக்கு நானும், நாவலரும், பேராசிரியரும், நமது செயற்குழுவும் நாட்டுக்குப் பதில் அளித்து விட்டதை நீ அறிவாய்!

ஜனநாயகத்தைக் காக்க விரும்புகிற வாக்காளர்கள் திரட்டித் தரும் வலிமை, சிதறிப் போய்விடக் கூடாது என்பது நமது கருத்து.

கொள்கை வேறுபாடுகளுக்கிடையிலேயும் ஜனநாயகம் போற்றும் பொதுப் பிரச்சினையில் ஓரணியில் நிற்கலாம் என்று நாம் அறிவித்து நாட்கள் எத்தனையோ ஓடிவிட்டன.

"கால தாமதத்திற்குக் காரணம் நாமல்ல!" அதையும் கூறியாகி விட்டது.

உரிய நேரத்தில் உகந்த முடிவுக்கு வரமுடியுமேயானால் அது உனக்கும், ஊராருக்கும் உவமை தரும் செய்தி!

வரமுடியாவிட்டால், "பழி நம்மீது இல்லை!" என்பதைப் பாருக்கு அறிவித்து விட்டு, நமது பணியினைத் தொடர்ந்திடுவோம்!

வெற்றி வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் நமது வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் இறங்கிடுவர்!

அவை எத்தனை இடங்கள்?

அதைத்தான் வரும் பத்தாம் தேதி வியாழக்கிழமையன்று சென்னை சீரணி அரங்கக் கூட்டத்தில் அறிவிக்க இருக்கின்றோமே!

உடன்பாடு ஏற்பட்டால் எத்தகைய உற்சாகத்துடன் பணிபுரிவாயோ, அதே உற்சாகம் - கடுகளவும் குறையாமல்,

கழகத்தின் கண்மணியே! உடன்பாடு ஏற்படா விட்டாலும் நீ பணி புரிந்தாக வேண்டும்!

உடன்பாடு ஏற்பட்டால், ஜனநாயகம் காத்திடும் கட்சிகளை எப்படி மதித்து நடப்பாயோ, அதே மதிப்பு மரியாதையை உடன்பாடு ஏற்படாவிட்டாலும் நீ அந்தக் கட்சிகளுக்கு அளித்திட வேண்டும்.

இன்னொன்றையும் மறந்து விடாதே! நம்மை ஒழிப்பதற் கென்றே ஓரணியில் கூடுகின்ற கட்சிகள் எனினும் அந்தக் கட்சிகளைப் பற்றிய உனது தேர்தல் விமர்சனங்களும்; அமைதி ஒழுங்கு, அரசியல் நாகரிகம் இவற்றுக்கு சிறிதளவு ஊனமும் ஏற்படாத வகையில் அமைந்திடுதல் வேண்டும்.

எதற்கும் தயாராக - அதாவது எதையும் தாங்கத் தயாராக - வெற்றிக் கனி பறிப்பதிலே உன் கவனம் செல்லட்டும்!

யாரையும் வீழ்த்துவது நம் நோக்கமல்ல! நம்மை யார் என்று நாட்டுக்கு உணர்த்துவதே நோக்கமாக இருக்க வேண்டும்!

இந்தத் தேர்தலிலே செலவு அதிகமாகும்! சமாளித்துத் தான் ஆகவேண்டும்! அள்ளிக் கொடுக்கப் போகிறாயா? என்று என்னைக் கேட்டு விடாதே! "செலவு" என்பதற்குத் தமிழிலே "பயணம்" என்று ஒரு பொருள் உண்டு! அந்தப் பயணத்தைத் தான் குறிப்பிடுகிறேன்; பணத்தை அல்ல!

பணமில்லை - ஏற்கனவே கணக்கு விவரம் கண்டிருக்கிறாய் அயராத பணியின் மூலம் வெற்றிக்கனி பறித்திடுக!

அன்புள்ள,

மு. க.

06-02-1977

368. மதகரியா? சிறு நரியா?

உடன்பிறப்பே,

அண்ணா ஒருமுறை தம்பிக்கு எழுதிய மடலில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"என்ன சிறிதளவு வாட்டமுற்றது போலக் காணப் படுகிறாய்? வீரத்திருமுகத்தில் விசாரக் குறிகள் தெரிகின்றனவே! வந்துற்ற இடுக்கண் யாது? வந்திடில் என்ன? வாட்டம் கொள்ளப் போமோ? வள்ளுவப் பெருந்தகையை மறந்தனையோ? இடுக்கண் வருங்கால் நகுக, என்றாரே! தமிழரின் நெறியினை அழித்திட வல்ல தீநெறி தமிழகத்திலே நெளிந்திடக் கண்டு போலும், வள்ளுவர், இடுக்கண் தமிழினத்தைத் தாக்கக் கூடும் என்று அறிந்து அவ்விதமானதோர் தாக்குதல் ஏற்படினும் கவலை கொள்ளல் ஆகாது; கொண்டிடின் இடுக்கண்களை எதிர்த்து நின்று வெற்றி பெற இயலாது என்று எடுத்துக்காட்ட, நகுக; என்று கூறினார். குறள் நெறி நின்றிடும் குறிக்கோளுடைய உனக்கு ஏற்படலாமா, வாட்டம், வருத்தம்! மாற்றார்கள் மனம்போன போக்கில் ஏசுவது கேட்டா வாட்டம்? மறக்குலத்துதித்தவனே! மார்பில் பாய்ந்த வேலினைப் பறித்தெடுத்து மதகரிமீது வீசினானாமே உன் முன்னோரில் ஓர் வீரன், களத்தில்; மறந்தனையோ? வீசினான் என்றவுடன் வசை மொழியினை விருப்பம் தீருமட்டும், விசாரம் குறையும் அளவு நானும் வீசவா என்று கேட்கத் தோன்றும் தம்பி! ஆனால் வீரன் வேல் வீசியது மதகரி மீது, சிறு நரி மீதல்ல தெரிகிறதா?"

1960-ஆம் ஆண்டிலே அண்ணன் இதனை எழுதிய போது தமிழ்நாட்டு அரசியல் களத்தில் எதிர்க்கட்சியினர் என்ன போக்கினைக் கொண்டிருந்தனரோ, அதே போக்கில்

தான் இன்றைக்கும் ஏசுகின்றனர், எழுதுகின்றனர். அதுவும் தேர்தல் சூடு பிடிக்கத் தொடங்கி விட்டால் கழகத்தின் மீது சேற்றையும் சகதியையும் அளவுக்கு மீறி அள்ளி வீசிக் கொண்டு தானிருப்பார்கள். அது கண்டு நீ இப்போது வாட்டமடையப் போவதில்லையென்று எனக்குத் தெரியும்.

பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இது போன்ற இழிமொழிகள் கேட்டுப் பதறினாய்; துடித்தாய் - பதிலுக்குப் பதில் கூறியாக வேண்டுமென்று துள்ளினாய்; ஆனால் இன்று - அந்த முறையைத் தங்கள் அரசியல் கட்சிகளின் ஆயுதமாக்கிக் கொண்டு நம்மை ஏசித் தீர்த்தவர்கள், வெற்றி காண முடியவில்லை என்பதையும் - அவர்கள் அவதூறு கூறக்கூற - ஆபாசங்களை எழுத்தாக ஆக்கிக் கொண்டு குதித்திடக் குதித்திட நாம் ஓங்கி உயர்ந்து நாளும் வளர்ந்து கொண்டிருக்கிறோம் என்பதையும் கண்டுணர்ந்து அந்தக் கடுமொழிகளுக்காகக் கவலை கொள்ளத் தேவையில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டாய்.

ஜெயப்பிரகாஷ் - செல்லாக்காசு.

அசோக்மேத்தா - அமெரிக்காவின் கூலி.

மொரார்ஜி தேசாய் - கள்ள நாணயம்.

ஜெகஜீவன்ராம் - லீலாவிநோத மனிதன்.

கருணாநிதி - கொலைகாரன், கொள்ளைக்காரன்.

இப்படித் தேர்தல் நேரத்துப் பட்டமளிப்பு விழாக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பாவம், அவர்களுக்கு அரசியலைப் பற்றிச் சிந்திக்க நேரம் கிடையாது.

காழ்ப்பு உணர்ச்சியைக் கொட்டித் தீர்ப்பதைத் தவிர வேறு எந்தப் பணியினாலும் அவர்களுக்கு நிம்மதி ஏற்படுவதில்லை.

இப்படிப்பட்டவர்களை எண்ணிடும் போது எனக்கு "யசோதரா காவியம்" என்ற ஒரு பழைய கதையைத்தான் உனக்குச் சொல்லத் தோன்றுகிறது.

கண்ணைப் பறிக்கும் மாளிகை, அதிலே அழகு மிழும் அம்சதூளிகா மஞ்சம் - தென்றலை வரவேற்றுச் சந்தன மணத்துடன் கலக்க வைக்கும் பளிங்குப் பலகணி - பழச்சாறு - தேனமுதம் -

பக்கத்திலே பட்டாளத்துச் சக்ரவர்த்தி - அனைத்தையும் அனுபவித்தவாறு வண்டு விழிகளை அங்குமிங்கும் உருட்டிக் கொண்டு புரண்டு புரண்டு படுக்கும் மயில் கழுத்து மகாராணி! மன்னன் தூங்கத் தொடங்கியதும் அந்த "மாதுசிரோன்மணி" எழுகிறாள்.

பஞ்சுப் பாதம் பட்டு ஒலி கேட்டுவிடக் கூடாதே என்று மெல்ல மெதுவாக நடக்கிறாள். அந்தப்புரத்தை விட்டு நந்தவனத்தின் பக்கம் வருகிறாள். யாரையோ ஆவலுடன் தேடுகிறாள்.

அதோ அவள் தேடிய "தேவன்" வந்துவிட்டான். ஆகா! என்ன அழகு! என்ன அழகு!

இருட்டை வெல்லும் கரிய திருமேனி, பிதுங்கி வெளியே தொங்கும் நீலக்குறு நயனங்கள், மேனியெங்கும் ரத்தமும் சீழும் சந்தனம் பூசிக் கொண்டிருக்கின்றன. பற்களிலே ஒன்றிரண்டைக் காணவில்லை என்பதை அவனது கிழிந்து போன உதடுகள் காட்டிக் கொண்டிருக்கின்றன.

ஆம்; அந்தத் தொழுநோய் பிடித்தவன்தான் அந்தத் தோகையின் காதலன். அவனைத்தான் காலில் விழுந்து தொழுகிறாள். தழுவிக் கொள்கிறாள். அந்த அலங்கோல மேனியில் முகம் புதைத்துக் கொஞ்சுகிறாள்.

உடன்பிறப்பே, மகாராணிக்கு எப்படி ஒரு ஆசை பார்த்தாயா?

கட்டழகுக் கணவன், கட்டிலிலே கண்ணயர்ந்து கிடக்கும் போது அவனை விடுத்துத் தொழுநோயாளியின் தோளில் தொத்தும் கிளியாகிறாள்.

இதைப் போலத்தான் இன்றைக்குச் சில எழுத்தாளர்கள், பேச்சாளர்கள்; தங்கள் கட்சிப் பிரச்சாரத்திற்காக மாற்றுக் கட்சியினை, அதிலும் குறிப்பாக நம்மைத் தாக்குவதற்காக எங்கே இழிமொழிகள் இருக்கின்றன எனத் தேடி ஓடுகிறார்கள்; தேன் சொட்டும் தமிழ்ச் சொற்கள் இருந்தாலும் அதனை விடுத்துத் தேள் கொடுக்குச் சொல் தேடி அலைகின்றார்கள். அரசியல் விளக்கம் தர தமிழ் அகராதியில் வார்த்தைகளா இல்லை? ஏராளம் இருக்கின்றன. அவர்களுக்கு அந்த வார்த்தைகள் சுவைக்கவில்லை.

'யசோதரா' காவியத்தில் வரும் மகாராணிக்கு தொழுநோய் கொண்ட யானைப் பாகனின் மீது காதல் ஏற்பட்டது போல

இவர்களுக்கு இப்படிப்பட்ட வார்த்தைகள் மீதுதான் வற்றாத பாசம்! தணியாத அன்பு! எனவே அவர்கள் அந்த வழியே தங்களுக்கேற்ற அரசியல் வழி எனத் தேர்ந்தெடுத்துவிட்ட பிறகு இனி அவர்களைத் திருத்துவது என்பது முடியாத காரியம்!

நான் உன்னைக் கேட்டுக் கொள்வதெல்லாம் அண்ணா அன்று எழுதியதை மறந்துவிடாதே என்பதுதான்.

"மதகரி மீது வேல் வீசுபவனே வீரன்!
சிறுநரி மீது வேல் வீசுவது வீரமல்ல."

ஆதிக்க வெறி, ஏகாதிபத்திய சக்தி, சர்வாதிகாரத் தன்மை யெனும் மதகரிகள் மீது வேல் வீசத்தான் இந்தத் தேர்தல் களம் புகுந்துள்ளோம் என்பதை மனதிற் கொண்டு பணியாற்றிடுக!

உடன்பாடு கொண்டு நின்றிடினும், நாம் எடுத்த முயற்சி ஈடேறாமல் தனித்து நின்று போரிடினும், அண்ணா தந்த வாசகத்தை நெஞ்சில் நிறைத்து குவித்திடுக வெற்றிகளை!

அன்புள்ள,
மு. க.
07-02-1977

369. வருக! வெற்றியினைத் தருக!!

உடன்பிறப்பே,

ஒரு விநாடியும் ஓய்வில்லாத பணிகள், இதற்கிடையே உனக்கு நான் தனியாகக் கடிதம் எழுதி அழைக்கா விட்டால் கோபித்துக் கொள்வாயே!

எதற்கு என்றுதான் உனக்குத் தெரியுமே! பிப்ரவரி 10 ஆம் நாள் சென்னைக் கடற்கரைக் கூட்டத்திற்கு!

1975 ஆம் ஆண்டு "ஜனநாயகத்தைக் காப்போம்" என்று சூளுரை எடுத்துக் கொண்டோமே; அதற்குப் பிறகு அந்தக் கடற்கரையில் உன்னைச் சந்தித்து அரசியல் நிலவரங்கள் குறித்து உரையாற்றும் வாய்ப்பு கிட்ட வில்லையல்லவா?

மண்டபக் கூட்டங்கள் - சுற்றடைப்புக்குள் கூட்டங்கள் - என்று கடந்த ஓராண்டுக் காலமாகக் கழகக்குரலை ஒலித்து வந்த நமக்கு இப்போது கடற்கரையின் வெண்மணற்பரப்பு கிடைத்திருக்கிறது. சீரணி அரங்கிற்குப் பின்னேயுள்ளது கடலா? அல்லது முன்னேயுள்ளது கடலா? என வியப்புறும் வண்ணம் கூட்டம் அமையும் என்பது தெரியும்.

அந்தக் கூட்டத்தில்தான் எந்தத் தொகுதியில் எந்த வேட்பாளர் நமது கழகத்தின் சார்பில் தேர்தல் களம் நுழைகிறார் என்று அறிவிக்கப்பட இருக்கிறது.

அதுவரையில் ஏடுகளில் வரும் தொகுதி எண்ணிக்கை யானாலும் சரி; வேட்பாளர்களின் பெயர்களானாலும் சரி; எல்லாம் வெறும் யூகங்களே!

அன்று அறிவிக்கப்பட இருக்கும் வேட்பாளர் பட்டியல் அதிகார பூர்வமானது, உனக்கு உற்சாகமூட்டக் கூடியது. நாட்டுக்குத் தெம்பு தரவல்லது.

தேர்தல் அறிக்கையையும் அன்றைக்குத்தான் மக்கள் முன்னே கழகம் வைக்கிறது. அது அறிக்கை மட்டுமல்ல; இந்திய நாட்டு ஜனநாயகத்தைக் காத்திடும் கவசம்!

மறவாதே! பிப்ரவரி பத்தாம் நாள்!

குலக்கொடி அருகே வந்திட, கையில் கொள்கைக் கொடியாம் கழகக் கொடி ஏந்திக் குடும்பத்துடன் வந்திடுக!

உற்றார், உறவினர், நண்பர் குழாம் புடைசூழ வந்திடுக!

கடற்கரைப் பெருவெளியில் உன்னைக் கண்குளிரப் பார்த்து எத்தனை மாதங்கள் உருண்டோடி விட்டன!

இயக்கத்திற்கு வந்த பேராபத்துக்களையெல்லாம் சமாளித்து, இன்னல்களையும் கன்னல்களெனக் கருதி, சிறை சென்று, தழும்பேற்று, சித்ரவதைகளை ஏற்றுக் கொண்டு - சித்தம் கலங்காமல் நீ அரிமா நடைபோட்டு வரும் அழகை சீரணி அரங்கிலிருந்து நான் கண்டிடும் போது சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்த்திடத்தான் செய்யும்!

நீ, உன் உழைப்பால் வழங்கப்போகும் வெற்றிப் பட்டியலுக்கு வழிவகுக்கும் பட்டியலே பிப்ரவரி 10ஆம் நாள் கழகம் வெளியிட இருக்கும் வேட்பாளர் பட்டியல் என்பதை மறவாதே!

நான் உன்னை நேரிலே அழைத்ததாகக் கருதி - இல்லை! இல்லை! உன் வீட்டுக்கே வந்து அழைத்ததாகக் கருதி வந்திடுக!

என் இனிய உடன்பிறப்பே!
இதயத்தின் துடிப்பே!
வெட்டிவா என்றுரைத்தால்
கட்டி வரும் கழகத்தின் மாமணியே!

வருக! வருக!!
வெற்றியினைத் தருக!

அன்புள்ள,
மு. க.
08-02-1977

370. எதிர்க்கட்சிகளின் நிலை - ஒரு எடுத்துக்காட்டு!

உடன்பிறப்பே,

- நட்ட நடுநிசி!
- பாழடைந்த பங்களா!
- சால்வையைப் போர்த்திக் கொண்டு வந்தார் கருணாநிதி
- காரை மாற்றிக் கொண்டு வந்தார் பி. ராமச்சந்திரன்
- இரண்டு மணி நேரம் ரகசிய சந்திப்பு
- காமராஜர் கண்ணீர் வடிக்கிறார்.

- இப்படித் தலைப்புச் செய்திகளுடன் மாலை ஏடுகள், தங்கள் விற்பனையை ஒருநாள் பெருக்கிக் கொண்டிருக்கின்றன. அதுவரையில் எனக்கு மகிழ்ச்சிதான். சஞ்சீவ ரெட்டி அவர்களையோ, பி. ராமச்சந்திரன் அவர்களையோ நானும் நண்பர் ராஜாராமும் சந்திப்பது என்பது காமராஜர் கண்ணீர் வடிக்கத்தக்க காரியம் என்று கூறுகிறார்களே; அதுதான் எனக்குப் புரியவில்லை. ஒரு வேளை அப்படிப்பட்ட ஒரு சந்திப்பு நடைபெறுவதைக் கேட்டு இவர்கள் கண்ணீர் வடித்து அழுது புலம்புகிறார்கள் போலும்!

ராஜாஜி நினைவாலயத்தின் மண்டபத்திற்கு மேலே அமைந்துள்ள சிறிய கோபுரத்தை "இராமர் கிரீடம்" போல உருவாக்கியது போலவே - காமராஜர் நினைவிடத்திலும் அந்த மண்டபத்தின் முகப்பில் "கைராட்டை" யொன்றைப் பெரிய அளவில் கழக அரசு அமைத்திருந்தது. ஆனால் கழக ஆட்சி அகற்றப்பட்ட ஒரு வாரத்திற்குள்ளாக அந்த "கைராட்டை" எடுக்கப்பட்டு விட்டது. காமராஜரின் காந்தீயப்பற்றையும் எளிமையையும் உணர்த்தவே அந்த முகப்பு

அமைக்கப்பட்டிருந்தது. புதிய காங்கிரஸ், பழைய காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளின் கொடிகளிலும் கைராட்டைச் சின்னம்தான் இப்போதும் இருக்கிறது. ஆனால் காமராஜர் மண்டபத்தில் கழக அரசு மிகப் பெரிய அளவில் அமைத்திருந்த ராட்டையைத் தூக்கித் தூளாக்கி எறிந்து விட்டார்கள். அப்பொழுது காமராஜரின் "ஆத்மா" கண்ணீர் வடிக்கவில்லையாம்! இப்பொழுது கருணாநிதியும், ப.ராமச்சந்திரனும் சந்தித்தால் மட்டும் அந்த "ஆத்மா" கண்ணீர் வடிக்குமாம்.

அரசியலில் எத்தனையோ மாறுதல்கள்! உறவு கொண்ட கட்சிகள் உறுமிக் கொள்வதும் உண்டு! உறுமிக் கொண்டிருந்த கட்சிகள் உறவு கொண்டாடுவதும் உண்டு!

இந்திராகாந்தி அவர்களைக் காங்கிரசின் உறுப்பினராகக் கூட இருக்கக் கூடாதென்று காமராஜர் தீர்மானம் நிறைவேற்றிய காலமும் இருந்தது! பிறகு அதே காமராஜரும் இந்திரா காந்தி அம்மையாரும் புதுவை மாநிலத் தேர்தலில் கட்சி உடன்பாடு கொண்டு ஒரே மேடையில் பேசியதும் உண்டு. அதற்குப் பிறகு இந்திராகாந்தி அவர்கள் அவசர நிலைப் பிரகடனம் செய்ததையும் அரசியல்வாதிகளை மிசாவில் கைது செய்ததையும் பத்திரிகைத் தணிக்கை கொண்டு வந்ததையும் காமராஜர் அவர்களே மிகக் கடுமையாகக் கண்டித்துப் பேசிய பேச்சுக்கள் அப்போதே 'நவசக்தி' ஏட்டில் கொட்டை எழுத்தில் வெளிவந்ததும் உண்டு.

சஞ்சீவரெட்டியும் நானும் நண்பர் ப.ராமச்சந்திரனும் நண்பர் ராஜாராமும் சந்தித்தோம் என்பது உண்மைதான் பொய்யல்ல! ஆனால் நாங்கள் மறைந்து மறைந்து நள்ளிரவில் சந்திக்க வேண்டிய அளவுக்குப் பயங்கரமான சதித் திட்டங்கள் எதுவுமில்லை. அது பழக்கப்பட்ட ஒன்றுமல்ல! பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்களின் கோரிக்கையை முன் வைத்து நடத்தப்பட்ட ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு இரவு பத்து மணி அளவில் ராஜாராம் என் இல்லத்திற்கு வந்தார். தலைமைக் கழகத்தின் காரில் ஏறி நானும் அவரும் திரு. சஞ்சீவரெட்டி அவர்களை ஒரு நண்பர் வீட்டில் சந்திக்கச் சென்றோம். அங்கே தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் நண்பர் ராமச்சந்திரன் அவர்களும் இருந்தார். கலந்துரையாடினோம், ஒருமணி நேரத்திற்குப் பிறகு திரும்பி விட்டோம்.

நானும் ராஜாராம் அவர்களும் அண்ணாமலைபுரத்தில் இருந்து புறப்படும் போதே துப்பறியும் காவல்துறையினர் மாறு வேடங்களில் அந்தப் பகுதியில் அலைந்து கொண்டிருந்தனர். எங்கள் காரைப் பின் தொடர்ந்தும் வந்தனர். பொதுவாகத் துப்பறியும் காவல்துறை ஒற்றர்கள் தாங்கள் அறிந்திடும் செய்திகளை காவல்துறை மேலதிகாரிகளுக்குத்தான் தருவது வழக்கம். ஆனால் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட பிறகு மத்திய அரசு ஒற்றர்களாயினும், மாநில அரசின் ஒற்றர்களாயினும் தாங்கள் அறிந்த செய்திகள் சரியோ - தவறோ - எதுவாயினும் அதனை உடனே கழகத்திற்கு எதிர் வரிசையில் உள்ள ஏடுகளுக்கு அறிவித்திடும் நிருபர்களாகச் செயல்பட்டு வருவது வாடிக்கையாகி விட்டிருக்கிறது. டெல்லியில் ஜெகஜீவன்ராம் போன்ற தலைவர்கள், தங்கள் வீட்டு வாயிற்புறத்தில் அரசு ஒற்றர்கள் நின்று கொண்டு, வருகிற கார்களின் எண்களையெல்லாம் குறித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று குறை கூறியிருக்கிறார்.

தி.மு.கழகம் வன்முறையிலோ - சதி வேலைகளிலோ ஈடுபடுவதுமில்லை; நம்பிக்கை கொண்டதுமில்லை யென்று அனுபவரீதியாகத் தெரிந்து கொண்டிருக்கிற அரசு, கழகத்தினர் வீடுகளைச் சுற்றிலும் - அவர்கள் சுற்றுப் பயணம் செய்யுமிடங்களிலும் - இதுபோன்ற ஒற்றர்களைப் பல்வேறு உருவங்களில் நடமாடவிட்டு "வேவு" பார்க்கச் சொல்வது அவசியம் தானா? என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும். கிளர்ச்சிகள், அமளிகள், கலவரங்கள் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும் போது வேண்டுமானால் அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட கட்சித் தலைவர்களைக் காவல் துறையினர் கண்காணிப்பது என்பது சில வேளைகளில் தேவைப்படலாம்.

அதற்கு மாறாக மாலை நேரத்து ஏடுகளுக்கு "விஷயதானம்" செய்யும் அளவுக்கு "ஒற்றாடல்" எனும் பணி போய்விடக் கூடாது என்பதே நமது கவலையாகும்.

மத்திய - மாநில அரசுகளின் காவல்துறை ஒற்றர்கள் திறமைசாலிகள்! வல்லவர்கள்!

அதற்காக அவர்களின் தொண்டு;

இரவு பத்துமணியை நடுநிசி என்று வர்ணிக்கவும்
நடுத்தரமான ஒரு இல்லத்தை பாழடைந்த பங்களா

என்று குறிப்பிடவும்; அரசியல் தலைவர்களின் சந்திப்பை; ஏதோ துப்பறியும் கதையின்; மயிர்க் கூச்செறியும் சம்பவத்தோடு ஒப்பிடவும்;

பத்திரிகைக்காரர்களுக்குப் பயன்படக்கூடாது என்பதே என் பணிவன்பான வேண்டுகோள்!

பத்திரிகை நிருபர்கள் எங்களையே சந்தித்துக் கேட்டால் "சந்தித்தோமா? இல்லையா?" என்பதைக் கூறிவிட்டுப் போகிறோம். அதிலும் சில கட்சித் தலைவர்களைப் போல நான் குறிப்பிட்ட சில பத்திரிகை நிருபர்களைச் சந்திக்க முடியாதென்றோ, அவர்கள் நிருபர் கூட்டத்திற்கு வரக்கூடாதென்றோ தந்திடும் பண்பு கொண்டவனல்ல என்பது பத்திரிகையாளர்களுக்கே தெரியும்.தெரிந்திருந்தும் இதுபோலச் செய்திகளை நேரடியாக ஒற்றர்களிடமிருந்து பெற்று - உண்மையும் பொய்யும் கலந்து வெளியிடுவது முறையற்ற காரியமாகும்.

உடன்பிறப்பே, ஏதோ நான் எழுத வேண்டியதை எழுதி விட்டேன். எதிர்க்கட்சிகள் எவ்வளவு சிக்கலுக்கும் - முற்றுகையிடப்பட்ட நிலைமைகளுக்குமிடையே தேர்தல் பணிகளைக் கூட ஆற்ற வேண்டியிருக்கிறது என்பதற்கு நேற்றைய ஏடுகளில் வெளிவந்துள்ள செய்திகள், அவைகளுக்குக் கிடைக்கப் பெற்ற வழிவகையே போதுமான எடுத்துக் காட்டாகும்!

அன்புள்ள,

மு. க.

09-02-1977

371. மாலை - பூச்செண்டு - மணம் தரும் அத்தர்!

உடன்பிறப்பே,

விடுத்த அழைப்பினையேற்று கையில் ஓங்கிப் பிடித்த கொடியுடன் வியாழனன்று மாலை கடற்கரை வெண்மணற் பரப்பை நோக்கி அணி அணியாக நீ வந்த காட்சி கண்டு பூரித்துப் போனேன். சென்னைச் சீரணி அரங்கை நோக்கிக் காமராஜர் சாலையைக் கடந்து கடற்கரைப் பெருவெளியில் சங்கமமாவதற்காக வந்து கொண்டிருந்த சைக்கிள்களாயினும், குதிரை வண்டிகளாயினும், அணி வகுப்புக்களாயினும் இருவண்ண இலட்சியக் கொடியை ஏந்தியிருந்த எழிலையும் - எழுச்சியையும் - எழுத்துக்களால் விவரித்திட இயலாமல் திண்டாடுகிறேன். அந்தக் காட்சியின் மாட்சிக்கோர் உவமை தேடி அலைகிறேன் கிடைக்கவில்லை.

ஆண்டு ஒன்று கடந்த பிறகு பெருவெளியில் கூடுகிறோமே; ஆயிரம், பதினாயிரம் - அதிகம் போனால் ஐம்பதாயிரம், லட்சம் என்ற அளவில்தான் இருக்கும் கூட்டம்; அதிலும் விடுமுறை நாள் அல்லாத வியாழக்கிழமை கூடுகிறோம் என்றுதான் முதலில் நினைத்தேன். ஒருசில கட்சிகள் இருக்கின்றன - அவைகளைப் போல் ஆட்களையும் லாரிகளையும் வாடகைக்குப் பிடித்துச் சேர்க்கப்பட்ட கூட்டமல்ல அது! ஆயிரமாயிரமாய்க் கூடினர் என்று கூறுவதற்குப் பதிலாக லட்சோப லட்சம் மக்கள் கூடினர் என்று கூறிடும் வண்ணமன்றோ அமைந்தது அந்தக் கூட்டம்!

நீயும் நானும் ஊரும் உலகமும் அந்த வரலாற்றுச் சிறப்புமிகு கூட்டம் கண்டு முகம் மலர்ந்து அகம் குளிர்ந்த போது - "அம்மவோ! இவ்வளவு ஆதரவா? அழிந்தது கழகம் என்றல்லவோ எண்ணியிருந்தோம்? வாடியதாகக் கருதியிருந்தது வான்முட்ட வளர்ந்து நிற்கிறதே! வரண்டு போனதாக நினைத்து மகிழ்ந்தோம் - அது வற்றாத கடலாக அலைமோதியெழுகிறதே! குழிக்குள்

போய்விட்டதாகக் குதூகலித்தோம் - அது கோபுரம் போல் உயர்ந்து கம்பீரம் காட்டுகிறதே!" என மனம் புழுங்கி வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டவர்கள் எதிர்க்கட்சியிலே கூட அதிகமென்று சொல்ல மாட்டேன், எட்டப்பர்களின் பட்டியலில் இடம் பெற்றவர்கள், குடிலர்களின் வரிசையில் பங்கு கொண்டவர்கள் நமக்கெதிராகப் பல்வேறு கட்சிகளில் சென்று தஞ்சம் புகுந்து நெஞ்சம் கொதித்துப் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள் என்று உன்னைப் போல ஒரு உடன்பிறப்பு எனக்குச் சொன்னதைத்தான் இந்தக் கடிதத்தில் குறிப்பிடுகிறேன்.

கழக அரசு ஏன் கலைக்கப்பட்டது? எப்படிக் கலைக்கப்பட்டது? என்ற விளக்கத்தை நாவலர் அவர்கள் அவருக்கேயுரிய நடையில் விவரித்த போது இலட்சக்கணக்கான விழிகள் விண்மீன்களென ஒளியுமிழ்ந்தன. கண்டேன். களிபேருவகை கொண்டேன். கழக அரசு மாலையில் கலைக்கப்படுகிறது என்றார், அன்று காலையிலே கூட காந்தி மண்டபத்து விழாவில் கவர்னர் அவர்கள் கழக அரசு காந்தியடிகள் பாதையில் நடைபோடுகிறது என்று குறிப்பிட்டாரே; சில மணி நேரங்களுக்குள் அந்தப் பாதை எப்படி மாறிப் போய் விட்டது? என்று நாவலர் கேட்ட போது அலையின் முழக்கம் அடங்கிப் போயிற்றல்லவா, உன் கையொலியின் முழக்கத்தின் முன்னே!

கழக அரசு கலைக்கப்பட்ட பிறகு ஓராண்டுக் காலத்தில் "நல்வாழ்வை நோக்கி நாடு நடையா போடுகிறது? நடை தள்ளாடுகிறது!" என்று புள்ளி விவரங்களை அள்ளிக் குவித்துப் பேராசிரியர் ஆற்றிய உரையின் அழகை நீயும் நானும் நினைத்து நினைத்து மகிழ்கிறோம் அல்லவா?

எனக்குத்தான் அன்று சற்று கடினமான வேலை! ஆம்; வேட்பாளர்களின் முதல் பட்டியலைப் படித்தேனே - அதைத்தான் சொல்கிறேன். எதிர்பார்த்தவாறு நடந்திருந்தால் கழகத்திற்கும் - ஜனதா கட்சிக்கும் - சமநிலை எண்ணிக்கையில் இடங்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் பத்தொன்பது இடங்களுக்கான வேட்பாளர்களைத்தான் தலைமைக் கழகச் சார்பில் அறிவித்திருப்பேன். அதற்கு வழியில்லாமல் போயிற்று. நல்லதோர் முடிவு வரும் என்று நானும் மற்ற கழகத் தலைவர்களும்

ஆட்சி மன்றக் குழுவினரும் கடற்கரைக் கூட்டத்திற்குக் கூட சற்று தாமதமாக வரலாம் என்று கட்சி அலுவலகத்தில் காத்திருந்தோம்.

காத்திருக்கும் போதே ஜனதா கட்சியின் சார்பில் பதினோரு வேட்பாளர்களின் பெயர்களும், தொகுதிகளும் வானொலியில் அறிவிக்கப்பட்டதைக் கேட்டோம்.

அதன்பிறகே இருபத்திநான்கு பேர் போட்டியிடும் முதல் பட்டியலை அறிவிப்பது என்ற முடிவுக்குத் தள்ளப்பட்டோம்.

இரு கட்சிப் பேச்சுவார்த்தை என்பது எண்ணிக்கையைப் பொறுத்தது மட்டுமல்ல; யார் யாருக்கு எந்தெந்தத் தொகுதிகள் என்பதையும் இருசாராரும் விவாதித்து ஒருமித்த முடிவுக்கு வந்தாக வேண்டிய ஒன்றாகும். அந்த நிலை இந்தப் பேச்சுவார்த்தையில் கடைப்பிடிக்கப்படவில்லை.

அதனால்தான் இவ்வளவு குழப்பங்களும்!

உடன்பாடு பேசுகிற கட்சிகளின் பிரதிநிதிகள் ஒரு மேஜையைச் சுற்றி அமர்ந்து தொகுதி நிலவரங்களை எடுத்துரைத்து அங்கே கட்சியின் வலிவை விளக்கிக் கூறி வேட்பாளரின் வெற்றி வாய்ப்புக்களைச் சுட்டிக் காட்டி ஒரு கழகமான முடிவுக்கு வருவது தான் 1962லும் சரி; 1967லும் சரி; 1971லும் சரி; தி.மு.கழகமும் அதன் தோழமைக் கட்சிகளும் கடைப்பிடித்த முறையாகும்.

இப்போது அதற்கு இடமில்லாமலே போயிற்று. தனித்தனியாகப் பேசுவது, மனம் விட்டுப் பேச முடியாமல் தவிப்பது. இது போன்ற நடைமுறைக் கொவ்வாத செயலால் தேர்தல் உடன்பாடு எதிர்நோக்கிய வெற்றியைத் தந்திடவில்லை.

இந்தக் காரணங்களால்தான் கழகம் தனது நிலைமையைக் கடற்கரைக் கூட்டத்தில் தெளிவாக விளக்க நேரிட்டது.

அறிவிக்கப்பட்டுள்ள இருபத்திநான்கு இடங்களாயினும் சரி; அல்லது இனிமேல் கூட பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கழகச் சார்பில் ஜனதா கட்சியுடன் சம நிலையில் உடன்பாடு ஏற்பட்டு அந்த அடிப்படையில் அமையும் இடங்களாயினும் சரி; மொத்தம் கழகச் சார்பில் போட்டியிட விரும்பி, தலைமைக் கழகத்திற்கு மனுச் செய்து கொண்டவர்கள் அனைவரையும் தேர்ந்தெடுத்து வேட்பாளர்களாக நிறுத்துவதென்பது இயலாத காரியம் என்பதை நீ அறிவாய்!

ரோஜா மலர்க் குவியலில், மாலைக்கென எடுத்துக் கொள்ளப்பட்டு தொடுக்கப்பட்ட மலர்கள் போக எஞ்சிய மலர்கள் பூச்செண்டில் வைத்துக் கட்டப்படும். அதற்குப் பிறகும் எஞ்சிடும் மலர்கள் அருமையான மணம் வழங்கும். "அத்தர்" தயாரிக்கப் பயன்படுத்தப்படும்.

அதுபோலத்தான் கழக மலர்களும்! மாலையாக! பூச்செண்டாக! மணம் தரும் அத்தராக!

எந்த மலரும் தூக்கி எறியப்படுபவை அல்ல!

தேவைக்கேற்ப - காலமறிந்து - அவற்றைப் பயன்படுத்தும் பழக்கமும், பாசமும், அண்ணன் தந்த பயிற்சியும் பெற்றவர்கள் தான் தி.மு.கழகத் தலைமையில் இருக்கிறார்கள் என்பதை மட்டும் யாரும் மறந்திட வேண்டாம்! இதனை மறந்து மனம் நொந்திடுவோர் யாரேனும் இருந்தால்; என் இனிய உடன்பிறப்பே! அவர்களுக்கு நினைவுபடுத்துக "இந்த நெஞ்சம் அவர்களை என்றும் மறப்பதில்லை" என்பதை!

அன்புள்ள,

மு. க.

13-02-1977

372. மாருதி, மயிலைப் பழிக்கும் காலத்தை மாற்றிடுவோம்!

உடன்பிறப்பே,

துள்ளிவரும் வேல் எனத் தொடங்கிவிட்டாய் தேர்தல் பணிகளை! இறங்கி விட்டாய் ஜனநாயகம் காத்திடும் போர்க் களத்தில்! உன் தடைபடாத பணி கண்டு மாற்று முகாம்களில் எந்த அளவுக்கு மனக்கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை அவர்தம் எழுத்தும், பேச்சும் அறிவித்துக் கொண்டிருக்கின்றன. அமைப்பு ரீதியாக இயக்கத்தை வளர்த்துள்ள பெருமை உனக்கு உண்டு. "அட்ஹாக்" கமிட்டிகளை அமைத்துக் கொண்டும், அவ்வப்போது அழைக்கப்படுகிறவர்களே செயற்குழுவுக்கும், பொதுக் குழுவுக்கும் உறுப்பினர்கள் என்றும், அள்ளித் தெளித்த அவசரக் கோலம் தான் சட்டதிட்டமென்றும், ஐந்தாறு ஆண்டுகளானாலும் கட்சியை ஆரம்பித்து அந்தக் கட்சிக்கெனச் சேர்க்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு கிளைக் கழகத் தேர்தலோ, மாவட்டக் கழகத் தேர்தலோ, பொதுக் குழுத் தேர்தலோ, பொதுச் செயலாளர் தேர்தலோ நடத்தாமல் இருப்பதும், எல்லாவற்றுக்கும் நியமன முறைதான் என்று அறிவிப்பு மூலம் அமைப்புகளை உருவாக்குவதும் தமிழகத்தில் வேறு சில கட்சிகள் கடைப்பிடிக்கும் ஜனநாயக முறை?யாக இருக்கும் போது, அண்ணா காலத்திலிருந்தே கழகத்திற்கெனச் சட்டதிட்டங்களை உருவாக்கி, அமைப்பு ரீதியாகச் செயல்பட்டு உண்மையான ஜனநாயக நெறியை வளர்க்கும் பண்பு உனக்கு உண்டு!

கட்சியிலேயே கட்டிக் காக்கப்படும் ஜனநாயகக் கொள்கையும், கடமை உணர்வும், கட்டுப்பாட்டுத் தன்மையும், கண்ணியம் வாய்ந்த செயலும் பல கட்சிகள் உள்ள இந்த நாட்டிலும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டுமென்று நீ விரும்புவதிலே வியப்பிருக்க முடியாதல்லவா?

அதனால் தான் ஆட்சிப் பொறுப்பு நம்மிடம் இருந்தபோது கூட, அதனை எப்படியாவது காப்பாற்றிக் கொள்ள வேண்டுமேயென்று யாரையும் நத்திக் கிடக்காமல், இந்தியாவில்

பிரகடனப்படுத்தப்பட்ட நெருக்கடி நிலையை எதிர்த்து முதன் முதலாக அமைப்பு ரீதியாகக் குரல் கொடுத்த கட்சியாக தி.மு.க. விளங்குகிறது.

"ஆகா! அவசரநிலை நெருக்கடிப் பிரகடனமா? அதுதான் ஜனநாயகத்தைக் காக்க ஒரே வழி!" என்று சொல்லியிருந்தால்,

"அரசியல் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் தொண்டர்கள் நாடு முழுவதும் லட்சத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு, விசாரணையில்லாமல் வைக்கப்பட்டிருக்கிறார்களா? இதைவிட ஜனநாயகத்திற்கு எடுத்துக்காட்டு எங்கே காண முடியும்? ஓராண்டு அல்ல, ஈராண்டு அல்ல-உயிர் போகும் வரையில் அவர்கள் சிறையிலேயே கிடக்கட்டும்" என்று அங்கீகரித்து அறிக்கை விட்டிருந்தால்,

"பத்திரிகைச் சுதந்திரத்தைத் தானே பறித்து விட்டீர்கள்! பரவாயில்லை - உங்களுக்குப் பிடிக்காத கட்சிகளின் ஏடுகளுக்கு முன்தணிக்கை என்ற 'சென்சார்' முறையை ஏற்படுத்தி அதனைக் கடுமையாக்கிவிட்டு உங்கள் பக்கம் "லாலி" பாடுகிற ஏடுகளையெல்லாம் வதந்திகளைப் பரப்புகிற அளவுக்கும், வாந்தியெடுக்கக்கூடிய வாசகங்களை எழுதுகிற அளவுக்கும், பொய்ச் செய்திகளையே வெளியிடுகிற அளவுக்கும் வளர்த்து விடுங்கள். அதுதான் பாரபட்சமற்ற மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பு! ஜனநாயக மரபு!" என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தால்,

நமது ஆட்சியைக் கலைத்திருக்க மாட்டார்கள்!

விசாரணைக் கமிஷன் வந்திருக்காது!

வழக்குகள் வகைவகையாக ஜோடிக்கப்பட்டிருக்காது!

"மிசா"வைக் காட்டி மிரட்டி சாட்சிகளைத் தயாரித்திருக்க மாட்டார்கள்!

சிறைச் சாலையில் இருபத்தி ஐயாயிரம் கழகத்தினர் அடைபட்டுக் கொடுமை அனுபவித்திருக்க மாட்டார்கள்!

ஐநூறு கழகத்தினர் ஓராண்டுக்காலம் 'மிசா' கைதிகளாக வேதனைகளைத் தாங்கிக் கொண்டு சிறைக்கோட்டங்களில் கிடந்திருக்கத் தேவையில்லை!

பாலகிருஷ்ணனையும், சிட்டிபாபுவையும் பறிகொடுத்திருக்கவும் தேவையில்லை.

சென்னை சிறைக் கோட்டத்தில் பல உடன்பிறப்புகள் தங்கள் உடலில் விழுப்புண்கள் ஏற்றிடும் நிலையும் ஏற்பட்டிருக்காது.

ஆனால், நாமோ - இவ்வளவு தொல்லைகளும் விளைந்திடும் என்று தெரிந்தும் அண்ணன் தந்த கொள்கைகளையும், கோட்பாடுகளையும் காப்பாற்றுவதற்காக எதனையும் ஏற்கும் நெஞ்சுரத்துடன் 1975-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27-ஆம் நாள் செயற்குழுவில், இந்தியாவில் பிரகடனப்படுத்தப்பட்ட நெருக்கடி நிலையை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றினோம்.

நம்மிடத்தில் கொள்கைக் குழப்பம் கிடையாது! சில பொதுவான பிரச்சினைகளுக்காக ஒன்றுபடக்கூடிய சூழ்நிலைகள் மற்ற கட்சிகளுடன் வந்தபோது கூட, கழகத்தின் தனித் தன்மையையும், கொள்கையையும் யாருக்கும் விட்டுக் கொடுத்தது கிடையாது! விட்டுக் கொடுக்கவும் மாட்டோம்.

"கம்யூனிசம், கேப்டலிசம், சோசலிசம் மூன்றும் சேர்ந்ததே அண்ணாயிசம்" எனக் கூறி அண்ணனின் தெளிவான சமதர்மக் கொள்கைக்குக் குழிதோண்டியவர்கள் அல்ல நாம்!

"இந்தியா முழுவதுமுள்ள இந்தியர்கள் எல்லாம் திராவிடர்களே அதனால் நாங்கள் "அகில இந்தியா" ஆகிறோம்" என்று சொல்லி அண்ணன் கட்டிக் காத்த திராவிடக் கலாச்சார உணர்வுகளை, தமிழ்மொழி உணர்வைக் கேலிக்குரியதாக ஆக்கி அவைகளை கழகத்தின் சட்டதிட்டத்திலேயிருந்து எடுத்து விட்டவர்களல்ல நாம்!

இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேராவண்ணம் அதிக அதிகாரங்களை மாநிலங்கள் பெற வேண்டுமென்ற கருத்தைக் கொள்கைகளில் ஒன்றாக அண்ணன் எழுதியதையும் நாம் மறக்கவில்லை. அவர் முதல்வரான பிறகு 1968-ஆம் ஆண்டு மாநில சுயாட்சியின் முக்கியமான தேவை குறித்துப் பேசியதையும் மறக்கவில்லை. அவர் எழுத்தும், பேச்சும் அதில் ஒளிவிடும் ஆழமான கருத்தும் கொண்டுதான் நமது கழகத்தின் சட்டதிட்ட புத்தகம் உன் கையிலே திகழ்கிறது.

"மும்மொழித் திட்டம் தேவையில்லை. எமக்கு இருமொழித் திட்டமே போதும்" என்று அன்றைய தினம் அண்ணா எடுத்த முடிவுதான் என்றைக்கும் நமது கழகத்தின் முடிவு!

இவ்வாறு அண்ணனின் கொள்கை வழி நின்று நமது இயக்க வரலாற்றைத் தொடர்ச்சி கெடாமல், தொய்வு விழாமல் - எழுதுகிற நம்மை அழிக்க - எத்தனையோ முயற்சிகள்!

இழிவுபடுத்தி வீழ்த்தி விடலாம் என்பதற்கு எத்தனையோ திட்டங்கள்!

என் செய்வது!

மாருதி, மயிலைப் பழிக்கும் காலத்தில் அல்லவா வாழ்கிறோம்?

அந்தக் காலத்தை மாற்றத்தான் கழகக் கண்மணியே! நீ தேர்தல் களத்தில் இறங்கியிருக்கிறாய்.

பஞ்சாபில் அகாலி தளத்து முன்னாள் முதல்வர் பாதல் மீது வழக்கு!

ஒரிசாவில் நந்தினி சத்பதி மீது விசாரணைக் கமிஷனாம்!

இங்கேதான் ஏற்கனவே வழக்கும், விசாரணைக் கமிஷன்களும் தொடங்கப்பட்டு விட்டன, உனக்குத் தெரியும்!

நான்கு ஆண்டுகளுக்கு முன்பே நூற்றுக்கு மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரியானா முதல்வர் மீது புகார் மனு கொடுத்தார்கள். அதற்கு விசாரணைக் கமிஷன் வரவில்லை.

அதைப் போலவே மூன்றாண்டுகளுக்கு முன்பு கர்நாடக முதல்வர் மீது அவரது கட்சி சட்டமன்ற உறுப்பினர்களே புகார் மனு கொடுத்தனர். அதற்கும் நடவடிக்கை எதுவுமில்லை.

ஆனால் கருத்து மாறுபாட்டின் காரணமாக நம்மீது கடும் பாய்ச்சல் நடத்துகிறார்கள்.

அரசியலில் வஞ்சம் தீர்க்கும் இந்தப் போக்கிற்கு மாற்றம் காண - மக்கள் சுதந்திர சுவாசத்தைப் பெறுவதற்கான ஜனநாயகக் கோட்பாட்டைக் காத்திட,

தொடரட்டும் உன் பணி!
தொல்லை பல ஏற்றுக்
கழகத்தைக் காத்திட
மாமணியே! அயராது
உழைத்திடுக! அண்ணன்
கொள்கைக்கு வெற்றியினைத் தந்திடுக!

அன்புள்ள,
மு. க.

14-02-1977

373. என் வாழ்க்கையில் சிறந்த நாள்!

உடன்பிறப்பே,

இன்று உனக்கு எழுதும் கடிதத்துடன் இணைத்திருக்கும் புகைப் படத்தினைப் பார்த்தாயா? உடன் பிறப்புகள் சூழ்ந்து நிற்க, அண்ணாசாலையில் உள்ள அண்ணா சிலையின் முன்னால் கையில் கழகக் கொடி ஏந்தி நிற்கிறேன். "அண்ணா வாழ்க! ஜனநாயகம் வெல்க! ஜனநாயகம் வாழ்க!" என்று முழங்கியவாறு இருவண்ணக் கொடியைப் பிடித்துக் கொண்டு நிற்பது எதற்காகத் தெரியுமா?

கடந்த ஆண்டு ஜூன் திங்கள் இரண்டாம் நாள் காலையில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சிதான் இது!

எழுத்துரிமை பறிக்கப்படுவது சகிக்க முடியாமல் நாவலருக்கும், பேராசிரியருக்கும், மற்ற கழக முன்னணியினர்க்கும் தெரிவித்துவிட்டு - தவிர்க்க முடியாத சூழ்நிலையில் நான் அமைதியான முறையில் அந்த அறப்போர்க் களத்தில் குதித்திட்டேன். வன்முறைக்குச் சிறிதும் இடம் அளிக்காமல், என்னையே நான் அந்தக் காரியத்திற்கு ஒப்படைத்துக் கொண்டு தொண்டனுக்குரிய உறுதியோடு தோள் உயர்த்தி, இலட்சியக் கொடியைத் தூக்கிப் பிடித்து, அண்ணா சிலைக்கருகே நான் சென்றதற்கு என்ன காரணம் என்பது உனக்கு இதுவரையில் விளக்கப்படாமலே இருந்தது அல்லவா? விளக்காதது என் குற்றமல்ல! ஓராண்டுக் காலமாக நமது கழக ஏடுகளின் எழுத்துச் சுதந்திரம் முழுமையாகப் பறிக்கப்பட்டிருந்ததால் எதையும் விளக்கிட முடியாமல் தவித்தேன், திகைத்தேன்!

தளைகள் இன்று ஓரளவு தளர்த்தப்பட்டிருப்பதால் அந்தக் காரணத்தை விவரித்திடும் வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

கடந்த ஆண்டு ஜூன் முதல் நாள் இரவு முரசொலிக்கான கடிதத்தை எழுதி முடிக்கிறேன். அந்தக் கடிதம், ஜூன் மூன்றாம் நாள் என் பிறந்த நாளைப் பற்றிய கடிதமாகும்.

எழுதப்பட்ட கடிதம் தணிக்கை அதிகாரியிடம் செல்கிறது. பல பகுதிகள் அந்தக் கடிதத்திலே வெட்டப் படுகின்றன.

ஒவ்வொரு நாளும் "உடன்பிறப்பே!" என அழைத்து எழுதும் நான், அன்றைய தினம் "அண்ணனே!" என அழைத்து மடல் தீட்டியிருந்தேன்.

அதில், "என் அன்னை தந்தையை விட அதிகமான பாசத்தை, அண்ணனே! நீ என் மீது பொழிந்தாய்!" என்று ஒரு இடத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

அந்தப் பகுதி வெட்டப்பட்டு விட்டது தணிக்கையில்! நானும் சிந்தித்துப் பார்த்தேன். நெருக்கடி நிலைக்கு இந்த வாசகத்தில் என்ன விரோதமான கருத்து இருக்கிறதென்று! எனக்குப் புரியவில்லை!

அடுத்து, அண்ணா! உன்னிடம் நான் எதை யாசித்தேன்? கணையாழியையா? கனம் மந்திரிப் பதவியையா? உன் காலுக்கு அணியாக இருந்து, உன் கட்டளைக்குக் காத்துக் கிடந்த இந்தத் தம்பி, உன்னிடம் யாசித்தது என்ன? என் கல்லறை மீது நீ சிந்துகிற கண்ணீரைத் தானே யாசித்தேன்! அந்தப் பிச்சையை நீ எனக்கு அளித்தாயா? இல்லையே!" என்று எழுதியிருந்தேன். அதையும் தணிக்கை அதிகாரிகள் அடித்து விட்டனர்.

இந்த வாசகம் என்ன தேசவிரோதமானதா? அவசரகாலச் சட்டத்திற்கு முரண்பாடானதா? இல்லை! இல்லவே இல்லை! ஆயினும் தணிக்கையிலே அனுமதிக்க மறுத்து விட்டார்கள்!

"நீ உருவாக்கிய கழகம் -

நீ உருவாக்கிய கொள்கை -

நீ உருவாக்கிய கொடி -

இவற்றைக் காத்திட, அண்ணனே!

இந்த நாளில் சூளுரை மேற்கொள்கிறேன்"

சென்சாரின் அனுமதி இந்தச் சொற்கோவைக்கும் கிடைத்திட வில்லை. அதிலும் குறுக்கே ஒரு கோட்டினைக் கிழித்து விட்டார்கள்.

"இவை எதுவும் தேச விரோதமானவையல்ல! அவசர காலத்திற்கு எதிரிடையானதல்ல!" என்று அதிகாரிகளிடம் எவ்வளவோ வாதாடினேன். பயன் இல்லை. அதன் பிறகு சென்சார் துறையை விட்டுவிட்டு, அன்றிரவே அரசுத் துறையின் மேலதிகாரிகளுக்கு விவரத்தைச் சொன்னேன். அதற்கும் பலன் ஏற்படவில்லை. பிறகு என் முடிவு பற்றி அதிகாரிகளுக்கு அறிவித்து விட்டுப் பின்வரும் துண்டு அறிக்கையையும் வெளியிட்டேன்.

அந்தத் துண்டு அறிக்கையில்;

"வாழ்க அண்ணா! வாழ்க ஜனநாயகம்!! கழகத்தினர் நூற்றுக்கணக்கில் சிறையில் வாடுகிறார்கள். மண்டபங்களில் கூட்டம் போட்டு பேசவும் நமக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. நெருக்கடி நிலைக்கு எதிராகவோ, தணிக்கை விதிகளுக்கு மாறாகவோ எதுவும் எழுதாமல் முரசொலியில் எழுதப்படுகிற கருத்துகளுக்கும் கூட தணிக்கை அதிகாரிகள் தடை விதித்து விடுகிறார்கள்.

நான் எழுதிய பிறந்தநாள் செய்தியில் பெரும் பகுதியை வெட்டி விட்டார்கள். உதாரணமாக, "என் அன்னை, தந்தையை விட அதிகமான பாசத்தை அண்ணா என் மீது பொழிந்தார்" என்ற வாசகம் கூட என் பிறந்தநாள் செய்தியில் இடம் பெறக் கூடாதாம். இப்படிப்பல பகுதிகளை வெட்டி எறிந்து விட்டனர்.

எனவே, குறைந்தபட்சம் - பத்திரிகைச் சுதந்திரம் நியாயமான அளவில் முறைப்படி பாதுகாக்கப்பட என்னையே நான் அர்ப்பணித்துக் கொள்ளும் இந்த அறவழிமுறையை தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ளேன். எதுவரினும் தாங்கிக் கொள்ளத் தயாராயிருக்கிறேன். கழக உடன்பிறப்புகள் அமைதி காத்திட வேண்டுகிறேன்."

உடன் பிறப்பே!

அந்தத் துண்டு அறிக்கையை நானே ஜூன் இரண்டாம் நாள் அனைவருக்கும் வினியோகித்தவாறு அண்ணா சிலைக்குச்

சென்றேன். என் முடிவை முதல் நாள் இரவே அதிகாரிகளுக்கும் முன் கூட்டித் தெரிவித்திருந்தேன்.

அண்ணா வழியில், காந்திய நெறியில் நான் மேற்கொண்ட அந்த முடிவை கையில் கொடிதாங்கி, ஜனநாயகம் வாழ்க! என்று ஒலித்தவாறு நிறைவேற்றிக் கொண்டிருந்தேன். நான் திடீரென்று அண்ணா சிலைக்குக் கீழே நிற்பதையும், ஒலியெழுப்புவதையும் கண்டு மக்கள் சூழ்ந்தனர். அவர்களும் ஜனநாயக முழக்கமிட்டனர்.

உடனடியாக காவல்துறையினர் வந்தனர். என்னையும் என் அனுமதியின்றியே ஆர்வத்துடன் அங்கு வந்துவிட்ட கழகத்தினர் சிலரையும் போலீஸ் வண்டியில் ஏற்றிச் சென்றனர். நான்கைந்து மணி நேரம் கைதியாக இருந்த பிறகு மேலிடத்திலிருந்து வந்த ஆணைக்கேற்ப எங்களை விடுவித்து வீட்டுக்கு அனுப்பினர்.

சென்னை மாவட்ட துணைச் செயலாளர் மனோகரன், ஆலந்தூர் பாரதி, ரத்தினசபாபதி, பெருமாள், சேவியர், தியாகராசன், செயல்மணி, மருமகன் செல்வம், மகன் அழகிரி ஆகியோரும் என்னுடன் அந்த நான்கைந்து மணி நேரத்தைக் கழிக்க நேர்ந்தது.

ஓராண்டு சிறையிலிருந்து விழுப்புண்களையும் பெற்று வந்துள்ள உன்னிடம், நான்கைந்து மணி நேரம் நான் அடைபட்டிருந்ததைச் சொல்வது எனக்கே கூட நாணமாகத் தானிருக்கிறது.

இருப்பினும், எழுத்துரிமை, கடந்த காலத்தில் எந்த அளவுக்குப் பறிக்கப்பட்டிருந்தது என்பதையும் - ஒரு எழுத்தாளன் என்ற முறையிலே கூட தாங்கிக் கொள்ள முடியாத அந்த வேதனையை, ஒரு கட்சியின் தலைவன் என்ற முறையில் எப்படித் தாங்கிக் கொண்டிட முடியும் என்பதையும் - ஊருக்கு உணர்த்தவும், உண்மைகளை நாட்டுக்கு அறிவிக்கவுமே, நான் அன்று அந்த முடிவுக்குத் தள்ளப்பட்டேன்.

அதற்கு முன்பு இந்தியப் பிரதமருக்குக் கூட தந்தி வாயிலாக விளக்கம் தெரிவித்து விட்டுத்தான் அந்த முடிவினையும் மேற்கொண்டேன்.

ஜூன் மூன்றாம் நாள், எனக்குப் பிறந்தநாள் என்றாலும் - அதற்கு முதல் நாளாம் அந்த ஜூன் இரண்டாம் நாள்தான் கடந்த ஆண்டு என் வாழ்க்கையில் சிறந்த நாளாகும்.

உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்பது கழகத்தின் எழுச்சி முழக்கம் மட்டுமல்ல! அதனைக் காத்திட உயிரும் கொடுப்போம்! என்பது நமது திடமான உறுதியுமாகும்.

இழந்த உரிமைகளை, சிறிது இடையிலே பெற்றுள்ளோம் எனினும், எதிர்காலத்தில் அந்த உரிமைகள் நிலையானவைகளாகி விட ஜனநாயகக் கடமையாற்றத் தொடங்கிடுவோம்! வெற்றி உண்டு! நிச்சயம் உண்டு!

அன்புள்ள,

மு. க.

15-02-1977

374. அணி கண்டு எழுந்ததுபார் ஆத்திரம்!

உடன்பிறப்பே,

“தி.மு.கழகம் - ஜனதா கட்சி உடன்பாடு ஏற்பட்டு விட்டதா?” என்று டெல்லியிலிருந்து ஒருவர் மிக்க ஆவலுடன் தொலைபேசி வாயிலாக என்னைக் கேட்டார். “கருணாநிதி மீதும் மற்றும் சில முன்னாள் அமைச்சர்கள் மீதும் மேலும் சில புதிய வழக்குகள் தொடுக்கப்படும் - என்று வானொலியிலும், பத்திரிகைகளின் மூலமும் செய்திகள் பரப்பப்படுகின்றனவே! அதிலிருந்தே தெரியவில்லையா? - தி.மு.க. - ஜனதா உடன்பாடு ஏற்பட்டு விட்டது என்பது?” என்று நான் அவரிடம் பதிலுக்குக் கேட்டேன். அவருக்கு மெத்த மகிழ்ச்சி! உடன்பாடு ஏற்பட்டதில்! எனக்கும் மிக்க மகிழ்ச்சி, புதிய வழக்குகள் வருவதில்!

ஒவ்வொரு வழக்கிற்கும் ஐந்து ஆண்டு - பத்து ஆண்டு என்று தண்டனை வழங்கப்பட்டு அந்தத் தண்டனைகளைத் தனித் தனியாக அனுபவிக்க வேண்டுமென்று தீர்ப்பு அளிக்கப்பட்டாலும் ஒரு முப்பது அல்லது நாற்பது ஆண்டுக்கால தண்டனை எனக்குக் கிடைக்கும். இப்போது வயது எனக்கு ஐம்பத்து மூன்று நடக்கிறது. வயதைக் குறைத்துச் சொல்லவில்லை என்பது உனக்குத் தெரியும். உண்மையான வயதைத்தான் குறிப்பிடுகிறேன். இன்னும் என்னதான் வாழ்ந்தாலும் பத்து அல்லது இருபது ஆண்டுகளுக்கு மேல் வாழ்வதென்பது இயலாத காரியம். அதற்குள் எப்போதோ? அதுவும் சொல்ல முடியாது. எனவே, வழக்குகளின் மூலம் எனக்கு வலை பின்னி சிறைக் கொட்டடியிலேயே எனது இறுதி மூச்சு கலந்து விடக்கூடும். அந்த முடிவை முகமலர்ச்சியோடும், அகமகிழ்வோடும் ஏற்றுக்கொள்ள நானும் மற்றும் சிலரும் தயாராகி விட்ட பிறகு எத்தனை வழக்குகள் வந்தால் என்ன?

எங்கள் வழக்குகளுக்கு சாட்சிகள் உருவாக்கப்படுகிறார்கள்.

மேலிடத்து வழக்குகளிலே சாட்சிகள் உயிரோடு "மேல் உலகிற்கு" அனுப்பப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டது.

அதெல்லாம் பெரிய கதைகள்!

பெரிய இடத்துக் கதைகள்!!

இன்றில்லாவிட்டாலும், ஒரு நாளைக்கு அந்தக் கதைகள் இந்திய நாட்டு மக்கள் அனைவராலும் படிக்கப்படப் போகின்றன என்பது வரலாற்றின் கட்டாயமாகும்.

விசாரணைகள் மூலம் தீர்ப்புகள்

பிறக்கலாம்!

பிறந்த தீர்ப்புகள்,

விசாரணையைச் சந்திக்கவும் நேரலாம்!

இவைகள் காலத்தின் உத்தரவுகள்! காலத்தின் ஆணைகளை இன்று கால்கொண்டு மிதிக்கலாம். மிதிக்கப்படும் புழுக்கள் புலிகளாக மாறும் என்பது மிகைப்படுத்தப்படும் வாசகம் அல்ல! சரித்திரத்தில் ஏறிவிட்ட கடந்தகால நிகழ்ச்சிகள்!

உடன்பிறப்பே,

நானும் நமது கழகமும் செய்த குற்றமெல்லாம் - ஜனநாயகத்தைக் காப்பாற்ற அவசரகாலப் பிரகடனத்தைத் திரும்பப் பெறுக என்று கூறியதுதான்!

அதற்கான விலையை நாம் கொடுத்துத்தான் தீர வேண்டும்.

ஒன்றரை ஆண்டுக் காலமாக நாடு சித்ரவதையை அனுபவித்தது!

பெற்ற உரிமைகளைப் பேணிக் காக்க அனைவரும் தியாகம் செய்யத் தயாரானோம்.

டெலிவிஷனில், வானொலியில் ஜெயப்பிரகாசரையும், மொரார்ஜியையும் கொள்ளைக் கூட்டத்தின் தலைவர்களாகப் படம் பிடித்துப் பிரச்சாரம் செய்தார்கள்.

அகாலிதளத் தலைவர் முன்னாள் முதல்வர் பாதல் மீது "கிரிமினல் வழக்கு!"

நந்தினி சத்பதிமீது விசாரணைக் கமிஷன் என்று அறிவிப்பு!

ஓராண்டாக என் மீதும், கழகத் தலைவர்கள் மீதும், கழகத்தின் மீதும் தொடர்ச்சியான அவதூறுத் தாக்குதல்கள்!

இத்தனையும் மீறி மக்களின் அன்பும், பரிவும், ஆழ்ந்த நம்பிக்கையும் நம்மீதுதான் வெள்ளமெனப் பெருக்கெடுத்துக் கொண்டிருக்கிறது.

"ஏன்? என்று கேட்க ஆள் இருக்காது!"

"எதிர்த்துப் பேச நாதி கிடையாது!"

"இட்டதே சட்டம்!"

"இனிமேல் நமதே கொட்டம்!"

இப்படிக் குரல் எழுப்பி ஒன்றரை ஆண்டுக் காலமாக ஜனநாயகத்தின் குரல் ஒடுக்கப்பட்டிருந்தது.

"ஏன்" என்ற கேள்வி.

நீறுபூத்த நெருப்பாக இருந்தது!

இதோ அதன் தணல் ஒளி தெரிகிறது!

எதிர்ப்பு அணி - ஒன்றுபட்டு நிற்கிறது.

அந்த அணி இங்கே உருவாகாது எனக் கருதினர்.

உருவாகாத அளவுக்கு நமக்குள்ளே ஒருவரையொருவர் உசுப்பிவிட்டுப் பார்த்தனர்.

அந்த அரசியல் சாகசங்களையெல்லாம் இடறி எறிந்துவிட்டு,

இதோ! இங்கேயும்

தி.மு.க - ஜனதா அணி!

இந்தச் செய்தி கேட்டதும் மேலிடத்தாருக்குச் செந்தீயாகிறது உள்ளம்!

ஆத்திரம் கொப்பளிக்கிறது!

ஆவேசம் கொந்தளிக்கிறது!

அலறுகிறது வானொலி!
அவதூறு வழக்குகள் என்று!

இன்னும் அடுக்கடுக்காகத் தொல்லைகள் தொடரக் கூடும்!

தேர்தலுக்கு இடையில் உள்ள இந்த ஒரு மாத காலமும் நானும், கழகமும் சல்லடைக் கண்களாகத் துளைக்கப் படுவோம்!

ஆனால் எதற்கும்

சளைக்கப் போவதில்லை.

அதனைத் தாங்கிக் கொண்டால்தான் தேர்தலில் நமது ஜனநாயக நோக்கம் நிறைவேறும்!

அந்த நோக்கம் வெற்றிபெற

எதுவரினும், எப்போது வரினும்

ஏற்பதெனச் சபதம் செய்வோம்.

உடன்பிறப்பே,

"இடையூறு வந்தபோது அதற்காக மனங்கலங்காதவர், அந்த இடையூறுக்கே இடையூறு விளைவித்து அதனை வென்று விடுவர்."

என வள்ளுவர் குறள் வாயிலாக எடுத்துக் காட்டியிருக்கிறார். அந்த உறுதியுடன் நாம் இந்த அறைகூவல்களை ஏற்றுக் கொள்வோம்! ஜனநாயகத்திற்கு விடப்படும் 'சவால்'களைச் சந்திப்போம். அந்த ஒரே ஒரு பொது நோக்கத்திற்காகவே இந்த அணி! ஆம்! தி.மு.க.- ஜனதா உடன்பாட்டு அணி!

இந்த அணி கண்டு அக்னியாஸ்திரம் பொழிவோர், அவர்தம் கை வலிக்கும் மட்டும் அதைப் பொழியட்டும்! பொழிந்து கொண்டேயிருக்கட்டும்!

நம் பணி நிற்காது;
தொடரும் என்பதை
நிலை நாட்டுவோம்.

அன்புள்ள,
மு. க.

18-02-1977

375. அரசியல் நாகரிகத்தை எதிர்பார்த்து....!

உடன்பிறப்பே,

இன்றையக் கடிதத்தில் சில பழைய குறிப்புகளை எழுதி, "அரசியல் விகடர்"கள் சிலரின் ஐயப்பாட்டை அகற்றலாமென முனைகிறேன். பழைய குறிப்புகள் என்றால் மிகப் பழமையானவையல்ல!

கடந்த மாதத்துச் செய்திக் குறிப்புகள்தான்!

ஜனவரி பதினெட்டாம் நாளன்று நாடாளுமன்றம் கலைக்கப் பட்டுத் தேர்தல் நடைபெறும் என்ற செய்தியைப் பிரதமர் அவர்கள் வானொலி வாயிலாக அறிவித்தார்கள்.

என்னைச் செய்தியாளர்கள் உடனடியாகச் சந்தித்துக் கருத்துகளைக் கேட்டனர்.

"தேர்தல் அறிவிப்பை வரவேற்கிறேன்" என்று பதில் அளித்தேன்.

"தி.மு.கழகத்தின் தேர்தல் உடன்பாடுகள் எவ்வாறு இருக்கும்?"

இது செய்தியாளரின் கேள்வி.

"இதன் தொடர்பான கருத்து எதையும் நான் அறிவிக்க இயலாது. அதிகாரபூர்வமான கட்சியின் அமைப்பைக் கலந்த பிறகே தெரிவிக்க முடியும்."

இது நிருபருக்கு நான் அளித்த விளக்கம். இவை அனைத்தும் மறுநாள் ஜனவரி 19-ஆம் தேதி காலை ஏடுகளில் வெளிவந்துள்ளன.

மீண்டும் பத்திரிகையாளர்கள் என்னை ஜனவரி 20-ஆம் நாள் பேட்டி காணுகிறார்கள். தேர்தலைப் பற்றிப் பல கேள்விகளைக் கேட்கிறார்கள்.

கேள்வி:- தேர்தலைப் பற்றி யோசிக்க செயற்குழு கூடப் போகிறதா?

என் பதில்:- பிப்ரவரி முதல் வாரத்தில் செயற்குழு கூட இருக்கிறது. நானும் கழகப் பொதுச் செயலாளர் நாவலரும், பொருளாளர் பேராசிரியரும் தேர்தல் குறித்துக் கலந்து பேசி வருகிறோம். தேர்தல் எல்லா வகையிலும் எல்லாக் கட்சிகளுக்கும் சம வாய்ப்பு அளிக்கத்தக்க வகையில் நடைபெற வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

நிருபர் கேள்வி:- 1971ஆம் ஆண்டு ஏற்பட்ட உடன்பாடு போல ஏதாவது தேர்தல் உடன்பாடு ஏற்படுமா?

என் பதில்:- பொதுவாக உடன்பாடு பற்றிய சில சிந்தனைகள் உள்ளன. எந்தக் கட்சியுடன் எந்த அடிப்படையில் என்பது பற்றி இன்னும் முடிவாகவில்லை.

இந்த விளக்கமான பதில்களும் எல்லா ஏடுகளிலும் வெளிவந்துள்ளன.

அதன்பிறகு கோவை மாவட்டத்தில் நாவலர் சுற்றுப் பயணம் செய்கிறார். அந்தக் கூட்டங்களில் தேர்தல் உடன்பாடு பற்றி அவர் கூறியதாக சில ஏடுகளில் வெளிவந்துள்ள செய்தியைப் பற்றி ஜனவரி 24-ஆம் நாளன்று நிருபர்கள் நாவலரைக் கேட்கிறார்கள் சென்னையில்!

“நடைபெற இருக்கும் தேர்தலில் 39 தொகுதிகளிலும் கழகம் போட்டியிடும் என்று கோவை மாவட்டப் பொதுக் கூட்டத்தில் நான் பேசியதாக வந்த செய்தி முழுமையாகச் சரியல்ல! தி.மு.கழகத்தை மதித்து உடன்பாடு கொள்கிற கட்சிகளுடன் கூட்டணி அமையும். அந்தக் கூட்டணி 39 இடங்களிலும் போட்டியிடும். உடன்பாடு ஏற்படாவிட்டால் கழகம் 39 இடங்களிலும் தனித்தே போட்டியிடும்.”

இப்படி ஒரு தெளிவான பதிலை நாவலர், நிருபர்களுக்கு அளித்து அதுவும் ஏடுகளில் வெளியாகியுள்ளது.

இவ்வளவையும் தேதி வாரியாகப் படிக்கும் போது நமது கழகம், தேர்தலைப் பற்றியே சிந்திக்காமல் இருந்தது என்று யாராவது கூறமுடியுமா? அல்லது நான், தேர்தலில் போட்டியிட விரும்பாமல்

இருந்தேன் என்றாவது யாராவது நினைக்க முடியுமா? ஆனால், "ஆனந்த விகடன்" ஏடு எழுதுகிறது பார்!

> "தேர்தல் அறிவிப்பு வந்து பல நாட்களாகியும் தேர்தலில் போட்டியிடுவது பற்றி, தி.மு.க. எந்தவித அறிவிப்பும் வெளியிடாமல் இருந்தது. தேர்தலில் தி.மு.க. போட்டியிடாது என்று சில பத்திரிகைகளில் செய்தி வந்த போதும் உடனே மறுப்பு வரவில்லை. பிப்ரவரி 3-ஆம் தேதி ஆட்சி மன்றக்குழு கூடி முடிவெடுக்கும் என்று மட்டும் சொன்னார் கருணாநிதி. ஆனால் நெடுஞ்செழியன் 39 இடங்களிலும் போட்டியிடுவோம் என்று கோபிசெட்டிப் பாளையத்தில் அறிவித்தார். தேர்தலில் போட்டியிடுவோம் என்று அன்பழகனும் பேசினார். உடனே இதைக் கருணாநிதியும் ஏற்றார்."

விகடனின் வாசகத்தைக் கவனித்தாயா? நான் தேதி வாரியாகத் தந்துள்ள செய்தியாளர்களின் பேட்டிகளுடன் விகடனின் கட்டுரையையும் ஒப்பிட்டுப்பார்!

> செயற்குழு கூடி தேர்தல் உடன்பாடுகள் பற்றிய முடிவுகளை எடுக்கும் என்ற கருத்துப்பட நான் சொன்னதை "ஆட்சிமன்றக் குழு" என்று ஆனந்த விகடனார், மாற்றிக் கொண்டிருக்கிறார்.

தேர்தலில் எந்தக் கட்சியுடன் உடன்பாடு என்பது குறித்து யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று விளக்கிய பிறகு, "தேர்தலில் தி.மு.க. போட்டியிடாது" என்ற "மஞ்சள் செய்தி"களுக்கு எதற்காக மறுப்பு தெரிவித்துக் கொண்டிருக்க வேண்டும்?

தி.மு.க. - ஜனதா கட்சிகளிடையே உடன்பாட்டுப் பேச்சு வார்த்தைகள் எல்லாம் நிறைவேறி, இரு கட்சிகளுக்கும் உரிய இடங்கள் ஒதுக்கப்பட்ட பிறகு, விகடன் இப்படியொரு கட்டுரையை எழுத வேண்டிய கட்டாயத்திற்கு ஏன் ஆளானது? என்பதுதான் புதிராக இருக்கிறது!

அதாவது தி.மு.க.வுக்கு தேர்தலில் நிற்கவே அச்சம்! பீதி! அதனால் அந்தக் கட்சியின் தலைவர் பல நாட்கள் எந்தவித அறிவிப்பும் தராமல் இருந்தார், என்ற ஒரு எண்ணத்தை மக்களிடம் பரப்பிட வேண்டுமென்று விகடனுக்கு ஒரு ஆசை!

அதற்காகச் செய்திகளையெல்லாம் திசை திருப்பக் கூடாதல்லவா? அதே கட்டுரையில் என்னைப் பற்றி மற்றொரு குறிப்பு!

"முதலமைச்சராக இருந்தபோது நிருபர்களை எப்படிச் சந்திப்பாரோ அதே "பாணி"யில் - அதே "பந்தா" வில்தான் இப்போதும் நிருபர்களைச் சந்தித்துப் பேசுகிறார் கருணாநிதி!"

பாணி, பந்தா - பற்றி எழுதி விகடன், தனக்கென்று அமைத்துக் கொண்டிருந்த பண்பாட்டை மறுபடியும் ஒரு முறை கெடுத்துக் கொண்டிருக்கிறது.

பத்திரிகை நிருபர்களுக்குத் தெரியும். நான் அவர்களுடன் எப்படிப் பழகுகிறேன் என்பது!

அமைச்சராவதற்கு முன்பு நிருபர்களிடம் எவ்வளவு தோழமையுடன் உரையாடினேனோ அதே நிலையில்தான், நான் அமைச்சரான பிறகும் உரையாடி உறவாடியிருக்கிறேன். அதே நிலைதான் இன்றளவும் நீடிக்கிறது.

கடந்த ஓராண்டுக் காலம் நிருபர்கள் என்னைச் சந்திக்கவே வரவில்லை. காரணம் நான் அளிக்கும் பேட்டிகளை ஏடுகளில் வெளியிட முடியாமல் "சென்சார்" தடுத்துக் கொண்டிருந்தது.

இப்போது தான் ஒருமாத காலமாக நிருபர்கள் வருகிறார்கள். எல்லா ஏடுகளின் நிருபர்களையும் நான் சந்திக்கிறேன். விகடனுக்கு மிக மிக விருப்பமான சில தலைவர்களைப் போல சில குறிப்பிட்ட ஏடுகளின் நிருபர்களை நான் சந்திக்க முடியாதென விரட்டுவதில்லை. நிருபர்கள், தங்களுக்கென ஒரு அமைப்பைக் கூட கேட்டாலே சொல்வார்கள். நான் எப்போதும் அவர்களிடம் எப்படிப் பழகி வருகிறேன் என்று.

விகடனுக்கு ஒரு ஆசை! அதைச் செயல்படுத்திப் பார்க்கிறது! நிருபர்களுக்குக் கருணாநிதியின் மீது கசப்பை ஏற்படுத்தி விட்டால், பிறகு அவனைப் பற்றிய செய்திகளே வராமல் போய்விடுமென்று திட்டமிடுகிறது போலும்! என்னிடம் பழகி, என்னை அறிந்துள்ள நிருபர்களிடம் விகடனின் "பாணி - பந்தா" சாகசம் எடுபடாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

பெரியவர் வாசன் அவர்கள் இருந்த போதே, அவர் அறியா வண்ணம், சில நேரங்களில் விகடனில் விளையாடியவர்கள். இப்போது வாசன் இல்லாத காலத்தில் விளையாடுவதற்குக் கேட்கவா வேண்டும்?

என் செய்வார்கள் பாவம்! தமிழ்நாட்டில் எதிர்க்கட்சி அணி உருவாகக் கூடாது என்பதற்கு எவ்வளவோ அற்புதச் சித்துக்களைப் புரிந்தார்கள்! ஏடு கொள்ளாமல் எழுதினார்கள், அவர்களின் சூழ்ச்சிக் கோட்டைகளைத் தவிடு பொடியாக்கி தி.மு.க. - ஜனதா அணி ஆர்த்தெழுந்து நிற்கிறது!

ஆம்! சர்வாதிகார இருள் விலக

உதயசூரியன் எழுகிறான்.

நாட்டைக் காக்க ராட்டை, சுழல்கிறது.

தமிழ்நாடு முஸ்லீம் லீக், தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி, குடியரசுக் கட்சி ஆகிய கட்சிகளின் ஆதரவுக் கரங்களும் நீட்டப்படுகின்றன.

இந்தச் செய்திகள் விகடனுக்கு வேம்பாக இருப்பதில் வியப்பில்லை!

எனினும் விளக்கம் தர வேண்டியது
என் பொறுப்பு!
அதனால் இவ்வளவு எழுத
நேரிட்டது!

அதுவும், விகடன் என்பதால்! அதனிடம் இன்னும் அரசியல் நாகரிகத்தை எதிர்பார்ப்பதால்!

அன்புள்ள,
மு. க.
19-02-1977

376. உண்மை - உழைப்பு - ஒற்றுமை!

உடன்பிறப்பே,

தேர்தலில் தொகுதி உடன்பாட்டுப் பேச்சு வார்த்தைகள் ஒருவாறு இறுதியாக முடிவுற்று, தி.மு.க. 19 தொகுதிகளிலும், ஜனதா கட்சி 19 தொகுதிகளிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி இரண்டு தொகுதிகளிலும் போட்டியிடுவதென்று ஒப்பந்தமாகி, அந்த ஒப்பந்த அறிக்கையில் கழகத்தின் சார்பில் நானும், ஜனதா கட்சியின் சார்பில் திரு. பா.இராமச்சந்திரன் அவர்களும், கம்யூனிஸ்டு கட்சி சார்பில் திரு.பி.இராமமூர்த்தி அவர்களும் கையொப்பமிட்டு அதனை ஏடுகள் வாயிலாக நாட்டுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் நாடாளுமன்றத்துக்கான தேர்தல் அறிவிப்பு வந்தவுடனேயே நடைபெறத் தொடங்கி யிருக்குமேயானால் முதல் பட்டியல், இரண்டாவது பட்டியல், வெளியிட்டு விட்டு அதற்குப்பிறகும் பேச்சுவார்த்தை களிலே ஈடுபட்டிருக்கவோ அல்லது வேட்பு மனு தாக்கல் செய்தவர்களைத் திரும்பப் பெறுமாறு செய்கிற மனச்சங்கடங் களுக்கு ஆளாக்கவோ வேண்டிய நிலைமைகள் ஏற்படா வண்ணம் தவிர்த்திருக்க முடியும்.

எனினும், இவ்வளவு தொல்லைகளுக்கிடையே விட்டுக் கொடுக்கச் சொன்ன தொகுதிகளை விட்டுக் கொடுத்தும் - வேட்புமனுக்களை திரும்பப் பெறுமாறு கூறியவுடன் தலைமையின் விருப்பத்திற்கிணங்க திரும்பப் பெற்றும் - கட்சிகளிடையே நல்லதோர் உடன்பாடு காண ஒத்துழைத்த எல்லாக் கட்சிகளின் கட்டுப்பாடு மிக்க தொண்டர்களையும், வேட்பாளர்களையும் நான் வாழ்த்திப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எப்படியும் எதேச்சாதிகாரத்தை முறியடிக்க எதிர்க் கட்சிகளின் கூட்டணி அமைந்தால் போதும். அதற்கு

வாய்ப்பாகவும் வசதியாகவும் - எங்கள் கட்சிகளுக்கென்று தொகுதிகள் கேட்பதைக்கூட நாங்கள் வலியுறுத்த மாட்டோம் என்று ஜனதா அணியிலுள்ள சில கட்சித் தலைவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி, போற்றிப் புகழத்தக்க ஒன்றாகும். அவர்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கோபி தொகுதியில் நண்பர் சாமிநாதன் அவர்கள் போட்டியிடுவதாக முதல் பட்டியலிலேயே அறிவிக்கப்பட்டது, உனக்குத் தெரியும். அது, தொகுதி உடன்பாட்டில் கழகத்தை விட்டுப் போகவே போகாது என்ற நம்பிக்கையுடன் அவரும், மற்றும் கழக உடன்பிறப்புகளும் தேர்தலுக்கான பணிகளில் பாதிக்குமேல் நிறைவேற்றி விட்டனர். அப்படி யிருந்தும் கூட அந்தத் தொகுதியை விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. நண்பர் சாமிநாதன், கோவை மாவட்டத்தின் செயலாளர், மிசா கைதியாக ஓராண்டுக் காலம் சிறையில் வாடியவர். கட்சிகளின் உடன்பாட்டுக்கு இதையும் ஒரு தியாகமாகச் செய்கிறேன் என்று கூறினாரே தவிர, எள்ளளவு மனவருத்தமும் கொள்ளவில்லை. கோபி தொகுதியின் கழகக் கண்மணிகளும் தலைமையின் முடிவுக்குக் கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி அளித்துள்ளார்.

சென்னை மத்திய தொகுதியை எடுத்துக் கொண்டாலும் அவ்வாறே! விட்டுக் கொடுக்க மாறன் முன்வந்த போதிலும், மத்திய சென்னை உடன்பிறப்புகள் எளிதில் இணங்கிட வில்லை. எனினும் ஜனதா கட்சியின் தலைவர் திரு.இராமச் சந்திரன் அவர்களே நிற்கிறார் என்கிறபோது தலைமைக் கழகத்தின் முடிவினை ஏற்றுக் கொண்டது மாத்திரமல்ல; மாறனுக்காக எவ்வளவு உற்சாகத்துடன் பணியாற்றினார்களோ, அதே உற்சாகத்துடன் அந்தத் தொகுதியில் ஜனதா கட்சியின் வெற்றிக்காகப் பணியாற்றுகிறார்கள்.

இந்த உளமார்ந்த ஒத்துழைப்பை ஒவ்வொரு கட்சியும் வழங்குமேயானால், தேர்தலில் பெரும்பான்மையான வெற்றியைப் பற்றி நாம் மிக்க உறுதியான நம்பிக்கையுடன் இருக்கலாம்.

தி.மு.க.

ஜனதா.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு.

இந்தக் கட்சிகளிடையே கொள்கை வேறுபாடுகள் இருக்கலாம். இவைகள், தங்களுக்குள்ள தனித் தன்மையைக் கெடுத்துக் கொள்ளாமல் நாட்டின் பொதுவான பிரச்சினைகளில் கைகோத்து நிற்பது இன்றைய நிலையில் தவிர்க்க முடியாததாகி விட்டது. அப்படி நின்றே தீரவேண்டும்.

வீடு இருந்தால்தான் ஓடு மாற்ற முடியும் என்பது போல, ஜனநாயகம் இருந்தால்தான் ஒவ்வொரு கட்சியும், ஏன் ஒவ்வொரு தனிமனிதனுங்கூட கருத்துகளைச் சொல்ல முடியும்.

நாட்டில் என்னதான் வறுமையும், துன்ப துயரங்களும் ஏற்பட்டாலும், அவைகளைச் சமாளிக்க புதிய காங்கிரஸ் கட்சியால் முடியா விட்டாலுங் கூட, ஜனநாயகத்திற்கு அவர்கள் உலைவைத்து விட மாட்டார்கள் என்றுதான் எண்ணியிருந்தோம். ஆனால்...?

அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை அமைப்பையே தகர்த்தெறியும் வகையில் அல்லவா இப்போது திருத்தங்களைச் செய்து விட்டார்கள்!

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற நிலை இல்லை.

மிசா போன்ற சட்டங்களை அரசியல்வாதிகளிடம் பயன் படுத்த மாட்டோம் என்று உறுதியளித்தார்கள். ஆனால் இந்தியா முழுவதும் இலட்சத்திற்கு மேற்பட்ட அரசியல்வாதிகள் மிசா சட்டத்தினால் வேட்டையாடப்பட்டு, விசாரணையின்றி ஓராண்டுக் காலத்திற்கு மேலாகச் சிறையில் அடைக்கப்பட்டு வாடினார்கள்.

மாற்றுக் கருத்துக் கூறுவோரை அரசியல் வஞ்சம் தீர்த்துக் கொள்வதையே தங்கள் ஆட்சிமுறையாக ஆக்கிக் கொண்டார்கள்.

இன்றைய ஜனதா கட்சியில் உள்ள தலைவர்கள், கழகத்தின் உடன்பிறப்புகள், மார்க்சிஸ்ட் தோழர்கள், அனைவருமே சிறைக் கோட்டங்களில் கடந்த ஓராண்டுக் காலத்திற்கு மேலாக கூண்டுப் பறவைகளாக இருந்தவர்கள்தான்!

இன்று தோன்றியுள்ள கூட்டணி, நமது முயற்சியால் மட்டும் உருவானதல்ல!

அரசாங்கமே எதிர்க்கட்சியினரையெல்லாம் சிறையில் சேர்த்து அடைத்து, அங்கிருந்தவாறே, இந்த அணி சேரும் உணர்வை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றுதான் கூற வேண்டும்.

கொடுமைகளை அனுபவிப்பதில் பங்கேற்ற கட்சிகள், இதோ! அந்தக் கொடுமைகளைக் களைந்தெறியக் கூட்டு சேர்ந்து நிற்கின்றன.

இதை ஒவ்வொரு கட்சியின் செயல்வீரர்களும் உணர்ந்து, ஒற்றுமையுடன் ஒத்துழைப்பை நல்கி, வெற்றியினைக் குவித்திட வேண்டும்.

அடடா! அந்தத் தொகுதியைக் கொடுத்து விட்டார்களே - இந்தத் தொகுதியை விட்டு விட்டார்களே - என்றெல்லாம் பேசிக் கொண்டிருப்பதற்கு நேரம் இதுவல்ல!

தி.மு.க., ஜனதா, மார்க்சிஸ்ட் - போட்டியிடும் தொகுதிகள் அனைத்திலும் அந்தக் கட்சிகளின் வெற்றி, தங்கள் கட்சிகளின் வெற்றி என்ற உணர்வோடு பாடுபட்டு உழைத்திட வேண்டும்!

உண்மை தோற்றதில்லை!
உழைப்பு வென்றே தீரும்!
ஒற்றுமையுடன் பணிபுரிய
வேண்டுகிறேன்.

அன்புள்ள,
மு. க.
20-02-1977

377. இப்போதே புறப்படு, இனிய உடன்பிறப்பே!

உடன்பிறப்பே,

தேர்தல் களத்திலிருந்து வருகிற செய்திகள் தெம்பூட்டத் தக்க வகையில் இருக்கின்றன. கழகமும், ஜனதா கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும் தமிழ் நாட்டிலும், புதுவையிலும் உள்ள நாற்பது தொகுதிகளிலும் ஒரே எதிர்க்கட்சி அணியாக அமைந்து தனது வேட்பாளர்களை நிறுத்தி வைத்துள்ளன.

இந்த அணிக்கு ஆதரவு தருகிற வகையிலே தமிழ்நாடு முஸ்லீம் லீக், தமிழ்நாடு கம்யூனிஸ்டு கட்சி, திராவிடர் கழகம், குடியரசுக் கட்சி ஆகிய கட்சிகள் தங்கள் அமைப்புகளின் சார்பில் முடிவுகளை எடுத்து அறிக்கைகள் விடுத்திருக்கின்றன.

நான் குறிப்பிட்டுள்ள எல்லாக் கட்சியின் தொண்டர்களும் ஒவ்வொரு தொகுதியிலும் தங்கள் கட்சிதான் போட்டியிடுகிறது என்ற உணர்வுடன் எழுச்சி கொண்டு பணியாற்றுகின்றனர். திரு.ஜெகஜீவன்ராம் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தமிழ் நாட்டில் உள்ள ஜனநாயக காங்கிரஸ் கட்சியும் தனது ஒத்துழைப்பை வழங்குமென்று எதிர்பார்க்கிறேன்.

சென்னையில் திரு.கிருபளானி அவர்கள் கலந்து கொண்ட தியாகராய நகர் கூட்டமும், கடற்கரையில் கழகத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டமும், நேற்று கடற்கரையில் திரு.மொரார்ஜி அவர்கள் உரையாற்றிய கூட்டமும் நாட்டு நிலையை மக்களுக்கு உணர்த்தி, எதிர்காலத்தை ஒளிமயமாக்குவதற்குப் பயன்பட்ட பேரணிகளாகும்.

வருகிற 28-ஆம் நாள் ஞாயிறன்று திரு.ஜெகஜீவன்ராம் அவர்கள் சென்னையில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்ள இருக்கிறார்கள். ஜனநாயகம் காக்கும் அணியில் உள்ள தலைவர்கள் அனைவரும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

கட்சிகளுக்கிடையே உள்ள வேற்றுமைகளையெல்லாம் மறந்துவிட்டு, ஒரே குறிக்கோளுக்காக - ஜனநாயகத்தை வாழ வைக்கும் குறிக்கோளுக்காக - சர்வாதிகாரத்தைத் தடுத்து நிறுத்தும் குறிக்கோளுக்காக - நாம் இப்போது ஒன்றுபட்டு நடை போடுகிறோம் என்பதை மறந்து விடக்கூடாது!

தெருவிலே தீப்பற்றிக் கொண்டதென்றால் அதை அணைப்பதற்கு ஓடி வருகிறவர்களுக்கிடையே ஆயிரம் கருத்து வேறுபாடுகள், பூசல்கள் இருக்கலாம்; ஆயினும் தீயை அணைப்பது ஒன்றையே அவர்கள் குறிக்கோளாகக் கொள்வது போல - இன்றைக்கு இந்திய நாட்டில் பரவியுள்ள எதேச்சாதிகாரத் தீயை அணைப்பதற்கு எல்லாக் கட்சிகளும் பதறியடித்துக் கொண்டு ஓடி வரவேண்டும்.

அப்படி வந்துள்ள கட்சிகளின் ஒருமுகமான கேள்விதான் இன்றைக்கு வான் முட்ட எழுந்து நிற்கிறது!

சர்வாதிகாரமா?

ஜனநாயகமா?

இரண்டில் எது தேவை?

இதுதான் எழுந்துள்ள அந்தக் கேள்வி.

நாங்கள் தேர்தல் கொண்டு வந்து விட்டோமே! இதுவே நாங்கள் ஜனநாயகவாதிகள் என்பதைக் காட்டவில்லையா?

இப்படிக் கேட்கிறார்கள், இந்திரா காங்கிரசார்! 1978 வரையில் பாராளுமன்றத்தை நீடித்துக் கொண்டது எதற்காக? அது தவறு என்று கூறியபோது - தேர்தல், குறித்த காலத்தில் நடக்க வேண்டுமென்று கேட்டபோது, இப்போது தேர்தல் முக்கியமல்ல, தேசம்தான் முக்கியம்! என்று கூறியவர்கள், திடீரென்று தேர்தலைக் கொண்டு வருவானேன்? இவர்கள் நினைத்தால் தங்களுக்குத் தாங்களே நாடாளுமன்றத் தேர்தலை ஒத்தி வைப்பார்கள்! பிறகு அவர்களே அந்தக் கருத்தினை மாற்றிக் கொண்டு உடனடியாகத் தேர்தல் என்று அறிவிப்பார்கள். இதுவே ஒருவகையான சர்வாதிகார முறை என்பதுதான் நமது குற்றச்சாட்டு!

ஜனநாயகத்தின் மீது திடீரென்று ஏற்பட்டுவிட்ட பாசத்தால் தேர்தலை வைத்து விட்டது உண்மையென்றால், அந்தப் பாசம்

- பாராளுமன்றத் தேர்தலோடு நிற்பானேன்? சட்டப் பேரவைத் தேர்தல் வரையில் அந்த ஜனநாயகப் பாசம் பரவியிருக்கலாமே!

ஓராண்டுக்கு மேலாகத் தமிழ் நாட்டில் கவர்னர் ஆட்சியல்லவா நடைபெறுகிறது? மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசு ஒன்று தமிழ் நாட்டில் அமையக்கூடாது என்று அவர்களது ஜனநாயகம் கூறுகிறதா?

இரண்டுக்கும், ஒரே நேரத்தில் தேர்தலை வைப்பதால் என்ன தீமை ஏற்பட்டு விடும்?

ஜனநாயகத்தில் தேர்தல் மூலம் தங்களுக்குத் தேவையான ஆட்சியை அமைத்துக் கொள்வது மக்களுக்கு உள்ள உரிமை! அது சலுகையல்ல!

ஏதோ, தேர்தல் நடத்துவதைச் சலுகை அளிப்பது போல எண்ணிக்கொண்டு பேசுவதும், எழுதுவதும் பித்துப்பிள்ளை விளையாட்டேயாகும்.

ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட அரசியல்வாதிகளை ஓராண்டுக்கு மேலாக விசாரணையின்றி மிசா கைதிகளாகப் பூட்டி வாட்டியவர்கள் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவது விந்தைதான்!

அலகாபாத் தீர்ப்புக்குப் பிறகு அரசியல் சட்டத்தையே திருத்திக்கொண்டு அந்தத் திருத்தங்களின்படி, தங்கள் தேர்தல் செல்லும் என்று ஆக்கிக் கொண்டவர்கள் ஜனநாயகம் பற்றிப் பேசுவது வேடிக்கைதான்!

இந்த வேடிக்கை விநோதங்களுக்கு விடை காணும் நேரம்தான் நெருங்கிக் கொண்டிருக்கிறது!

அணுப்பொழுதும் வீணாக்காமல், அயர்வின்றி உழைத்திட்டால் நாட்டுக்கு வந்துற்ற கேட்டினை அகற்றிட இயலும்.

எப்படியாவது வெற்றிபெற்றே தீர வேண்டுமென்று ஆளுங்கட்சியினரும், அவர்தம் அணியினரும் அள்ளி இறைக்கின்றனர் நோட்டுக் கத்தைகளை!

தேர்தல் களத்தில் ஜீப்புகள் - ஆம்! புத்தம் புதிய ஜீப்புகள் - டாங்கிகளைப் போல அணிவகுத்திடுகின்றன.

அவற்றையெல்லாம் சமாளிப்பது எப்படியென்று ஆயாசம் சிறிதளவும் கொள்ளத் தேவையில்லை!

விமானங்கள் குண்டுமாரி பொழிந்தபோதும் தங்கள் கைகளையே போர்க் கருவிகளாகக் கொண்டு வியட்நாம் மக்கள் உறுதியுடன் நின்று வெற்றி காணவில்லையா!

அதைப் போலத்தான் நாற்பது தொகுதிகளிலும் நமது பணி நடைபெற்றாக வேண்டும்.

உடன்பிறப்பே, நீ உழைத்திடவும் வேண்டும்! உண்டியல் குலுக்கி நிதி சேர்த்திடவும் வேண்டும்! வெற்றி வாய்ப்புள்ளவர்கள்; ஆனால் வசதியற்றவர்கள்தான் வேட்பாளர்களாக நமது அணியின் சார்பில் நிற்கிறார்கள்! எனவே தேர்தல் செலவுகளுக்கும் உன்னை நம்பித்தான் இருக்கிறது, கழகம்!

தலைமைக் கழகத்தின் சார்பில் பொதுவான பிரச்சாரச் செலவுகளைக் கவனிக்கவே போதுமான பொருளாதார வசதியில்லை. அதனை விளக்கியிருக்கிறோம் பலமுறை!

எனவே, எறும்பெனச் சுறுசுறுப்புக்காட்டி, எஃகு இதயங்கொண்டு எதிர்ப்புக்களைச் சமாளித்து, எத்திக்கும் போற்றிடும் வண்ணம் தித்திக்கும் வெற்றிச் செய்தியினை அளித்திட இப்போதே புறப்படு என் இனிய உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு. க.

21-02-1977

378. சுற்றுப்பயணம் - சில குறிப்புகள்!

உடன்பிறப்பே,

வரும் 23, 24, 25, 26, 27, 28 ஆகிய நாட்களில் சென்னையிலுள்ள மூன்று தொகுதிகளிலும், செங்கற்பட்டு, அரக்கோணம் ஆகிய தொகுதிகளிலும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு விட்டு, மார்ச் முதல் நாள் சென்னையிலிருந்து புறப்பட்டு தேர்தல் பிரச்சாரத்திற்கென இரண்டாவது கட்ட சுற்றுப்பயணத்தை மார்ச் 7-ந் தேதி முடிய மேற்கொள்கிறேன். அதன் பிறகு 8-ந்தேதி, 9-ந்தேதி சென்னையில் தங்கி கூட்டங்களில் கலந்து கொண்டு விட்டு 9-ந்தேதி புறப்பட்டு, மார்ச் 10 முதல் 14-ந்தேதி மாலை முடிய மூன்றாவது கட்ட சுற்றுப்பயண நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு 15, 16, 17 ஆகிய நாட்களில் சென்னை செங்கற்பட்டுத் தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவதாக இருக்கிறேன்.

பொதுச் செயலாளர் நாவலர் அவர்களும், பொருளாளர் பேராசிரியர் அவர்களும் சுற்றுப் பயணங்களை வகுத்துக் கொண்டு தேர்தல் பிரச்சாரத்தைத் துவக்கி விட்டனர்.

கழக முன்னணியினர் அனைவருமே கருத்து விளக்கங்களை அளிக்கும் வகையில் எல்லாத் தொகுதிகளுக்கும் சென்றிடவும், இந்த நேரத்தில் வசதிக் குறைவுகள் எதனையும் பார்க்காமல் தொண்டுள்ளத்தோடு பணியாற்றவும் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கழகத்தின் சொற்பொழிவாளர்கள், கலை நிகழ்ச்சி நடத்துவோர், எல்லோருமே, எதிர் நிற்கும் அறைகூவலை ஏற்றுக் கொண்டு இடுக்கண்கள் எத்தனை ஏற்படினும் பொருட்படுத்தாமல் கடமையாற்றிட வேண்டுமென்று கோருகிறேன்.

என்னுடைய சுற்றுப்பயணத்தில் நான் சென்றிட வேண்டிய ஊர்கள் அதிகம்! நாட்கள் குறைவு! எல்லா ஊர்களுக்கும் வரவேண்டும் என்று வலியுறுத்துகிற உடன்பிறப்புகள் என்

மனக்கண்ணில் தெரிகிறார்கள். அவர்கள் வழியை மறைப்பார்கள். அந்தச் சிற்றூரில் நூறு வாக்குகள் இருக்கின்றன. அங்கே வா.! வராமல் விட்டால் அவ்வளவும் போய்விடும் என்பார்கள். அதற்கெல்லாம் நான் இணக்கம் தெரிவிப்பது என்று ஆகிவிட்டால் திருநெல்வேலி தொகுதியை விட்டே ஒரு வாரத்திற்கு வெளியே வரமுடியாது.

எனவே, எல்லாத் தொகுதிகளுக்கும் நான் சென்றிட வேண்டும் என்ற கட்டாயத்தையும் அவசியத்தையும் உணர்ந்து அதற்கேற்ப இந்தச் சுற்றுப் பயணத் திட்டத்தை அமைத்துத் தர வேண்டுமென்று மிக்க அன்புடன் வேண்டுகிறேன்.

என் தொகுதிக்கு ஒருநாள் தானா? அரை நாள் போதுமா? இந்தக் கேள்விகள் நியாயமானவைகளாக இருக்கலாம்! இருக்கின்ற நாட்களை வைத்து இதற்கு மேல் நான் என்ன செய்ய முடியும் என்பதைத் தயவு செய்து சிந்தித்திட வேண்டுகிறேன்.

குறித்த காலத்தில் நிகழ்ச்சிகள் நடைபெறவும், ஒரு தொகுதியிலிருந்து மற்றொரு தொகுதிக்கு அதிகத் தொலைவு பயணம் செய்யாமல், அதற்கேற்ற முறையிலும் வழிகளை வகுத்திடும் பொறுப்பை அந்தந்த தொகுதியில் பணியாற்றுகிற குழுவினர் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

உதாரணமாக, திருநெல்வேலி தொகுதியில் காலை 10 மணிக்கு சுற்றுப்பயணம் தொடங்குகிறது என்றால், மறுநாள் மூன்றாம் தேதி ராமநாதபுரம் தொகுதியில் உள்ள ஊருக்கு அருகாமையில் என் பயணத்தைத் தொடங்கும் வண்ணம் திருநெல்வேலியில் இரண்டாம் தேதி நிகழ்ச்சி ஏற்பாடுகள் இருந்திட வேண்டும்.

அதேபோலப் பத்தாம் தேதி காலையில் பெரம்பலூர் தொகுதியில் பயணம் தொடங்கினால், பிற்பகலில் அரியலூர் வழியாக மாலையில் தஞ்சைத் தொகுதி சுற்றுப் பயணத்திற்குச் சென்று கலந்து கொள்வதற்கு வசதியாக ஏற்பாடுகள் அமைந்திட வேண்டும். தஞ்சையிலிருந்து மறுநாள் பிற்பகல் புறப்பட்டு நாகைத் தொகுதி நிகழ்ச்சிகளுக்குச் சென்றிட வழிவகுத்திட வேண்டும்.

எப்படியோ வந்துவிட்டான், கசக்கிப் பிழிந்துதான் அடுத்த தொகுதிக்கு அனுப்புவது என்று மட்டும் முடிவு கட்டிக்

கொள்ளக் கூடாது. தாங்குவதற்கு உடலில் வலி வில்லை. ஓராண்டுக் காலமாகக் கசக்கிப் பிழியப்பட்டவன் நான் என்பதை நீ அறிவாய்! உடல், களைப்புற்றதையும் கவனிக்காமல், உள்ளத்து உளைச்சலையும் தாங்கிக் கொண்டு ஓய்வின்றி உழைத்தவன் என்ற முறையில் என்னிடம் வேலை வாங்குவதில் கொஞ்சம் அனுதாபம் காட்டுவாய் என்று நம்புகிறேன். அனுதாபம் காட்டிட வேண்டுகிறேன்.

மார்ச் 5, 6 ஆகிய தேதிகளில் பழனி, பொள்ளாச்சி, திருச்செங்கோடு என்று சுற்றுப் பயண திட்டம் அமைந்துள்ளது அல்லவா?

நேற்று நமது பொறுப்பாளர் சாதிக்கும், கோவை இராமநாதனும் அமர்ந்து இரண்டு நாட்களிலும் அதிக அலைச்சலின்றி ஒரே வழியில் திரும்பத் திரும்ப வராமல் நேரம் கெடாமல் மூன்று தொகுதிகளையும் பின்னிப் பின்னி இணைத்து 7-ந்தேதி காலையில் திருச்செங்கோட்டிலிருந்து சேலம் செல்லுகிற வரையில் ஒரு சுலபமான, சிக்கலற்ற பயணத் திட்டத்தைத் தீட்டிக் காட்டினார்கள்.

அதைப் போலவே எல்லாத் தொகுதிகளிலும் இந்தச் சுற்றுப்பயணத்திற்கான ஒத்துழைப்பு கிடைக்குமென்று நம்புகிறேன். என் வேண்டுகோளையும் இந்த நிலைமை விளக்கத்தையும் ஏற்றுக்கொண்டு ஆவன செய்திடுவாய் என எதிர்பார்க்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

22-02-1977

379. தேர்தல் வான வேடிக்கை!

உடன்பிறப்பே,

வேடிக்கை பார்த்தாயா? முற்போக்கு பற்றி மூப்பனார் பேசுகிறார்! மும்மொழித்திட்டம் கூடாது என்று நடிகர் கட்சியினர் முழங்குகின்றனர்!

புகழ்பெற்ற பொருளாதார வல்லுநர், மத்திய அரசினாலேயே விவசாய வருமான வரி பற்றிய ஆய்வு நடத்திய குழுவுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டவர் டாக்டர் கே.என்.ராஜ் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1976 நவம்பர் 15-ஆம் நாள் உரையாற்றியபோது, உச்சவரம்புச் சட்டத்தை ஏமாற்றிவிட்டுப் பல பினாமி பெயர்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைப் பிரித்து வைத்துக் கொண்டிருக்கிற கபிஸ்தலத்துக் குடும்பம் பற்றியும், அந்த நிலங்களுக்கு இப்போது இருபது அம்சத் திட்டத்தின் கீழ் பாசன வசதிகள், உற்பத்தித் திறனைப் பெருக்கும் காரியங்கள் நடைபெறுகின்றன என்றும் குறிப்பிட்டார் அல்லவா? அந்தக் கபிஸ்தலம் எது தெரியுமா? அதுதான் காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனாருக்கு பல பெயர்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலமிருக்கும் கபிஸ்தலமாகும்.

இந்த மூப்பனார்தான் உச்சவரம்புச் சட்டத்திற்கு டாடா! காட்டித் தப்பித்துக் கொண்டவர். இந்த மூப்பனார்தான் இருபது அம்சத் திட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு பல பெயர்களில் உள்ள தனது நிலங்களை வளப்படுத்திக் கொண்டிருப்பவர்.

இவர்தான் ஊழல் பற்றி ஊர் அதிரக் கூவுகிறார்!

இவர்தான் முற்போக்கு பற்றி முரசு கொட்டுகிறார்!

முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கரா என்று 1962-ஆம் ஆண்டு உச்சவரம்பு வந்தபோது; சட்டம் வராததற்கு முன்பு கபிஸ்தலம் மூப்பனாருக்கு இருந்த நிலம் எவ்வளவு?

சட்டம் வருவதற்கு சில மாதங்களுக்கு முன்பு, அவர், பல பெயர்களில் பிரித்து வைத்த நிலம் எவ்வளவு? உபரி நிலமென்று அவர் அறிவித்தது எவ்வளவு? அதில் அரசு எடுத்துக் கொண்டது எவ்வளவு?

ஆயிரக்கணக்கான ஏக்கர்களை, உச்சவரம்பு சட்டத்தை ஏமாற்றிப் பாதுகாத்துக் கொண்டதற்குப் பெயர் ஊழல் அல்லாமல் வேறு என்ன?

இவர்கள் எல்லாம் முற்போக்கு அணியின் தலைவர்களாம்! வலது கம்யூனிஸ்டுகள் கூட வாழ்த்தி வரவேற்கிறார்கள்!

இன்னொரு ஆச்சரியம் தெரியுமா? நடிகர் கட்சியினர், திடீரென்று இந்தி எதிர்ப்பு வீரர்களாகக் காட்சி அளிக்கிறார்கள். மொரார்ஜி தேசாய் மூன்று மொழிக் கொள்கையை ஆதரித்துப் பேசினாராம்! ஆவேசம் வந்ததுபோல் குதிக்கிறார்கள் நடிகர் கட்சியினர்! அகில இந்திய வானொலி வேறு அதையே திருப்பித் திருப்பிச் சொல்கிறது! இந்திரா காங்கிரசின் கொள்கையும் மும்மொழிக் கொள்கைதான் என்பதை மறந்து விட்டார்களா? அல்லது மறைக்கப் பார்க்கிறார்களா? யாராவது ஒரு இந்திரா காங்கிரஸ்காரர் - முக்கியமானவர் - அறிவிக்கட்டும், தங்கள் கொள்கை இருமொழிக் கொள்கைதான் என்று!

நாடாளுமன்றத்தில் 10-3-76 அன்று நடிகர் கட்சி செயலாளர் நண்பர் மனோகரன் பேசியது சமாச்சார் நிறுவனத்தின் செய்தியாக எல்லா ஏடுகளிலும் வெளி வந்திருக்கிறது.

"He Karunanidhi raked up the Hindi Issue. We are for Hindi.".

இந்திப் பிரச்சினையைக் கருணாநிதி தூண்டினார். நாங்கள் இந்திக்கு ஆதரவாளர்கள்!

இந்த வாசகம், நாடாளுமன்றத்தின் நடவடிக்கைக் குறிப்பிலும் இருக்கிறது.

இந்திப் பிரச்சினையை நான் தூண்டுகிறேன் என்று தூபம் போட்டு அதன் காரணமாகக் கழகத்திற்கு ஏதாவது தொல்லை கொடுக்க முடியுமா என்று கடந்த ஆண்டு மார்ச் மாதம் நாடாளுமன்றத்தில் பேசியவர்கள், தங்களை இந்தி மொழியின் ஆதரவாளர்களாகக் காட்டிக் கொண்டவர்கள், இந்த ஆண்டு

மார்ச் மாதம் திடீரென்று தேர்தலுக்காக இந்தி எதிர்ப்பாளர்களாக மாறிவிட்டார்கள் பார்த்தாயா?

கழகத்தின் மொழிக் கொள்கை, உறுதியானது! அது சலனத்திற்கு உட்படாதது! சபலத்திற்கு இரையாகாதது!

இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!

இந்த உறுதியின் காரணமாகத்தான் கழகம் பல உயிர்களைப் பலி கொடுத்தது. தீரர்கள் எண்மர் தீக்குளித்து செத்தனர். அப்போது கொடுமைக் கனல் வீசிய அடக்கு முறைகளை ஏற்றவர்கள் நாம்! அப்போது கோவாவில் இன்பகீதம் இசைத்துக் கொண்டிருந்தவர்களைத் தலைவர்களாகப் பெற்றுள்ளவர்களுக்கு இந்தித் திணிப்பை எதிர்க்கும் உணர்ச்சி இருப்பதற்கு நியாயமில்லை!

இப்போது தேர்தலுக்காக, இந்தி எதிர்ப்பாளர்களாக மாறுகிறார்கள்.

ஒரு காலம் வந்து, அப்போது மீண்டும் மொழிப் போர்க்களம் புகவேண்டிய அவசியம் ஏற்படின், இவர்கள் நம்மைக் காட்டிக் கொடுத்துவிட்டு வழக்கம்போல் எட்டப்பர்களாவார்கள்!

நாம்தான் அப்போதும் அந்தச் சோதனைச் சூறாவளியைச் சந்திப்பவர்களாக இருப்போம்!

எனவே, உடன்பிறப்பே! மூப்பனார் பேசும் முற்போக்கும் - நடிகர் காட்டிடும் மொழிப் பற்றும் - தேர்தல் காலத்து வாண வேடிக்கைகள்; அவ்வளவுதான்!

அன்புள்ள,

மு. க.

23-02-1977

380. நாடு விரும்புகிற நல்லதோர் மாற்றம்!

உடன்பிறப்பே,

19 மாத காலம் நாட்டிலே நடைபெற்ற கொடுமைகள் நியாயமானவைகள்தான்! ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோரை அரசியல் மிசா கைதிகளாக விசாரணையின்றி சிறையில் அடைத்ததுதான் நேர்மை! வேண்டாதவர்கள் மீது அரசியல் வஞ்சம் தீர்த்துக் கொள்வதுதான் முறை!

என்று வக்காலத்து வாங்கிப் பேசுகிற கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் ஒன்றுகூடி வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

அதில் அவர்கள் குறிப்பிட்டுள்ள லட்சியங்கள் என்ன தெரியுமா? அதனை அவர்கள் வாசகத்தைக் கொண்டே அப்படியே குறிப்பிடுகிறேன்.

நாட்டில் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மையைப் பாதுகாப்பதும் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதும் வறுமை, கல்லாமை, வேலையில்லாமையை அகற்றுவதும், வலிமையான, நிலையான, மத்திய அரசை அமைப்பதும் பாரதப் பிரதமர் இந்திரா காந்தியிடம் நாம் கொண்டுள்ள நம்பிக்கையை வலியுறுத்துவதும் நம்முடைய இலட்சியங்கள்! நமக்கு எதிர்ப்பாக பிற்போக்கு, பிரிவினை, பாசிசக் கட்சிகள் கூட்டு சேர்ந்திருக்கின்றன.

இந்த லட்சியங்களை விளக்கிடும் அந்தக் கூட்டு அறிக்கையில் காங்கிரஸ் தலைவர் மூப்பனாரும், நடிகர் கட்சித் தலைவரும், வலது கம்யூனிஸ்டு தலைவரும், கையொப்பமிட்டிருக்கின்றனர். நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்துதல் - இது எல்லா கட்சிகளுக்கும் பொதுவான லட்சியம்தான்!

அதைப்போலவே இறையாண்மையையும், ஒருமைப் பாட்டையும் காப்பாற்றுவதிலும் எல்லாக் கட்சிகளுக்கும் அக்கறை

உண்டு! குறிப்பாக தி.மு.கழகச் சட்ட திட்ட நூலிலேயே இது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வறுமையும், அறியாமையும், வேலையில்லாமையும் தேவை என்று எந்தக் கட்சியும் சொல்லாது!

ஆகவே, மற்ற கட்சிகளின் லட்சியத்திலிருந்து மாறுபட்டு இந்த மூன்று கட்சியினரும் புதிதாகச் சொல்லுகிற மகத்தான லட்சியம், பிரதமர் இந்திரா காந்தியிடம் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை வலியுறுத்துகிற லட்சியம்தான்! அவர்களின் அசைக்க முடியாத அந்த லட்சியத்தில் நாம் குறுக்கிட விரும்பவில்லை.

சில வாரங்களுக்கு முன்புதான் வலது கம்யூனிஸ்டுகளைப் பற்றி இந்திரா காந்தி அம்மையார் சாடினார்! என் மகனைத் தாக்கிப் பேசினால், அவன் சரியானபடி பதிலுக்குத் திருப்பித் தாக்குவான்! என எக்காளக் குரல் எழுப்பி எச்சரித்த பிறகும் வலதுகள், பிரதமரிடம் கொண்டுள்ள நம்பிக்கையை வலியுறுத்தி அறிக்கை விடுகிறார்கள் என்றால், அவர்களது லட்சியத்தைப் பாராட்ட வேண்டியதுதான்!

வறுமையே வெளியேறு! என்று ஏழாண்டு காலமாகத்தான் கூவுகிறார்கள். ஆனால் அது வெளியேறியதாகக் காணோம்! அதற்குப் பதிலாக அது ஏழைகளின் முதுகெலும்பின் மீது சிம்மாசனம் போட்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறது! வறுமையே வெளியேறு! என்பது இனிமையான, புரட்சிகரமான, கோஷமாக இருக்கிறதே தவிர செயல்பட்டதாகத் தெரியவில்லை!

அறியாமையையும், வேலையின்மையையும் ஒழிக்கத் திட்டங்கள் தேவை!

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் வரைவு எவ்வளவு? இறுதி மதிப்பீடு எவ்வளவு? இவ்வளவுக்கும் பிறகு அந்தத் திட்டத்தின் கதி என்ன?

இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்காத ரசிகப் பெருமக்கள், பாமர மக்கள் - இன்னும் இருக்கிறார்கள் என்ற துணிவில்தானே அறியாமை வாழ்க! என்று ஒலித்துக்கொண்டு வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறார்கள்!

தங்கள் கட்சியின் லட்சிய விளக்கத்தோடு விட்டார்களா?

எதிர்க்கட்சிகளின் தேர்தல் உடன்பாட்டு அணியைப் பார்த்து பிற்போக்குவாதிகள், பிரிவினைவாதிகள், பாசிச சக்திகள் என்று அர்ச்சனை வேறு!

காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்களிலே மாஜி மகாராஜாக்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். சித்தார்த்த சங்கர் ரே, நந்தினி சத்பதி, ரஜனி பட்டேல் போன்ற முற்போக்கு வாதிகளைத் தலையெடுக்கவொட்டாமல், காங்கிரசைப் பிற்போக்குவாதிகள் பிடித்துக்கொண்டு விட்டனர் என்று கடந்த மாதம் தான் வலது கம்யூனிஸ்டு கட்சியின் ஏடுகள் கட்டுரைகள் தீட்டின. அதற்குள் காங்கிரஸ் கட்சி முற்போக்குக் கட்சியாகி விட்டது!

கேப்டலிசமும், சோஷலிசமும் கலந்ததுதான் பாசிசம் என்பர்! அதுதான் அண்ணாயிசம் என்று விளக்கமளித்து அண்ணாவின் லட்சியத்திற்கே மாசு கற்பித்தவர்கள், நம்மைப் பார்த்துப் பாசிசவாதிகள் என்கின்றனர்.

ஒரு பிற்போக்குவாதி - ஒரு பிரிவினைவாதி - திடீரென்று இவர்களுடைய அணியிலே சேர்ந்து விட்டால் அவன் உடனே முற்போக்குவாதியாகி விடுகிறான். இந்திய ஒருமைப்பாட்டின் பாதுகாவலனாகி விடுகிறான்.

ஒருவன் பிற்போக்குவாதியா? அல்லது முற்போக்கு வாதியா? என்பதற்கு மாற்றுரைத்துப் பார்க்கும் கல்லே இவர்களிடம்தான் இருக்கிறது போலும்!

உடன்பிறப்பே, ஒன்று கவனித்தாயா? இவர்களுடைய லட்சியத்திலே ஜனநாயகத்தை வலுப்படுத்துவதையும் ஒன்றாக இணைத்திருக்கிறார்கள்.

அட்ஹாக் கமிட்டிகளிலேயே ஐந்து ஆண்டுகளாகத் தங்கள் கட்சிகளை நடத்துகிறவர்கள், ஜனநாயகம் பற்றிப் பேசுவது விந்தையிலும் விந்தைதான்!

நாடாளுமன்றத் தேர்தலோடு கேரளத்துக்கு மட்டும் சட்டமன்றத் தேர்தலை நடத்துவார்களாம்! தமிழ்நாட்டுக்கு நடத்த மாட்டார்களாம்! அதற்காக இப்போது இரண்டு நாள் ராஜ்ய சபையைக் கூட்டித் தீர்மானம் போடப் போகிறார்களாம்! அதாவது, தமிழ் நாட்டில் கவர்னர் ஆட்சியே நீட்டிக்கும் தீர்மானம்!

இவர்களன்றோ, ஜனநாயகத்தை வலுப்படுத்தப் போவதாகப் பேசுகிறார்கள்?

அவதூறாக எழுத அல்ல - ஆபாசமாக எழுத அல்ல - கருத்துக்கு எதிர்க் கருத்து கூற பத்திரிகைகளுக்கு நியாயமான சுதந்திரம் வழங்கிட 19 மாதமாக மறுத்து வந்தவர்கள், ஜனநாயகம் பற்றிப் பேசுவது கைகொட்டிச் சிரிக்க வேண்டிய மகத்தான நகைச் சுவையன்றோ?

உடன்பிறப்பே, இவர்களை ஊருக்கு அடையாளம் காட்டு!

நீயும், ஜனதா கட்சித் தொண்டரும், மார்க்சிஸ்ட் தோழரும், மற்றும் நம்மை ஆதரிக்கிற கட்சிகளின் செயல் வீரர்களும் - சர்வாதிகாரத்திற்கு முடிவுரை எழுதத் தயாராகுங்கள்! மக்களின் சக்தியைத் திரட்டிடுக! அமைதியான முறையில், நாடு விரும்புகிற நல்லதோர் மாற்றத்தை மலரச் செய்திடுக!

அன்புள்ள,

மு. க.

24-02-1977

381. நீ தேனீயே தான்!

உடன்பிறப்பே,

பழனித் தொகுதியில் எப்படியும் திரு.சுப்பிரமணியம் அவர்களை வெற்றிபெறச் செய்திட வேண்டும் என்ற அடங்காத ஆர்வத்தில் ஆனந்த விகடன் ஏடு, தனது அரசியல் கட்டுரையை வரைந்து தள்ளியிருக்கிறது. மற்றவர்களைக் குறை கூறிப் பேசி விடுவதாலேயே தங்களைப் போன்ற பத்தரை மாற்றுத் தங்கங்கள் உலகத்தில் வேறு யாருமே இல்லை என்ற நினைப்பு சில பேருக்கு! அந்த நினைப்பில் குளித்துக் கொண்டிருப்பவர்களில் ஒருவர் விகடன் ஆசிரியர்.

அவரது உள்ளத்தைப் பல நேரங்களில் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் நாட்டுக்குக் காட்டிக் கொள்ள அவர் தவறியதில்லை. அந்த வகையில்தான் இந்த வாரம் அவர், பழனித் தொகுதியைப் பற்றி எழுதியுள்ள அரசியல் கட்டுரை அமைந்துள்ளது. அவர் எழுதியுள்ள குறிப்புகளைப் பற்றிச் சில விளக்கங்களை அளிக்க வேண்டியது எனது கடமையாகிறது. கருத்து மோதுதல்கள் வரவேற்கத்தக்கவை என்ற நிலையில் விகடன் ஆசிரியர் இந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்படுபவைகளை எடுத்துக்கொள்வார் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

பழனித் தொகுதி கட்டுரை பின்வருமாறு ஆரம்பமாகிறது.

கணீரென்ற குரலில் நாடாளுமன்றத் தேர்தலைப் பாரதப் போருக்கும், எதிர்க்கட்சிகளின் கூட்டணியை கௌரவர்களுக்கும் ஒப்பிட்டு தனது பிரச்சாரத்தைத் துவக்கினார் பாரத நிதி அமைச்சர், சி. சுப்பிரமணியம்.

உடன்பிறப்பே,

பாண்டவர்கள், கௌரவர்களால் காட்டுக்குத் துரத்தப்பட்டு வனவாசத்தை முடித்து விட்டு, மீண்டும் தங்களுக்குரிய நாட்டைக்

கேட்டு, அதற்குக் கௌரவர்கள் இணங்காத காரணத்தால் விளைந்ததுதான் பாரதப் போர்! வனவாசம் புரிந்தவர்கள் பாண்டவர்கள்! நாட்டை ஆண்டு கொண்டிருந்தவர்கள் - ஆணவ ஆட்சி நடத்தியவர்கள் கௌரவர்கள்! இதுதான் பாரதக் கதை!

சுப்பிரமணியம் கூற்றுப்படி இந்தத் தேர்தல் ஒரு பாரத யுத்தம் என்றால் இதில் கௌரவர்களாக எதிர்க்கட்சியின் கூட்டணியை ஒப்பிட முடியுமா? இதுவரை நாட்டை ஆண்டவர்கள்தானே கௌரவர்களாக இருக்க முடியும்?

வனவாசத்தைவிட கொடுமையான மிசா சிறைவாசத்தை அனுபவித்து விட்டுத் திரும்பியிருக்கும் எதிர்க்கட்சிக் கூட்டணியினர்தானே பாண்டவர்களாக இருக்க முடியும்! எப்படியோ, தெரிந்தோ தெரியாமலோ சுப்பிரமணியம் அவர்கள் இந்தத் தேர்தலை பாரதக் கதைக்கு ஒப்பிட்டது ஒருவகையில் வரவேற்கத்தக்கதேயாகும்! அந்த உவமையை மிகச் சுவையுடன் வெளியிட்ட விகடன் ஆசிரியரையும் பாராட்டத்தான் வேண்டும்.

சி.எஸ். பழனியிலே நின்றால் மிக நன்றாக இருக்கும். அவருக்கு ஏற்ற தொகுதி. அதோடு இந்தப் பகுதியின் வறட்சியைப் போக்கவும் முயற்சி செய்யக்கூடியவர் என்று காமராஜர் அவர்கள் சிந்தனையில் ஆழ்ந்தவாறு குறிப்பிட்டிருக்கிறாராம்.

இதையும் விகடன்தான் எழுதியிருக்கிறது.

சர்க்காரியா கமிஷனுக்கு சாட்சிகளைத் தயாரித்ததைப் போல இதற்கும் ஒரு சாட்சியைத் தயாரித்திருக்கிறது விகடன்.

அதுவும் காமராசர் மறைவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு அவர் வெளியிட்ட கருத்தாம்! என்ன வேடிக்கை பார்த்தாயா?

காமராஜர் மறைவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு தேர்தலைப் பற்றி யாராவது பேசியது உண்டா? எதிர்பார்த்தது உண்டா? சுதந்திரத்திற்காகப் போராடிய மூத்த தலைவர்கள் எல்லாம் சிறையில் வாடிய நேரம் அது!

நெருக்கடிநிலைப் பிரகடனம் பற்றிக் காமராஜர் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த காலம் அது! அந்த நேரத்தில் பழனியைப் பற்றியும், சுப்பிரமணியத்தைப் பற்றியும், அங்கே அவர் தான் நிற்க

வேண்டும் என்பது பற்றியும் காமராஜர் அவர்கள் நினைத்துக்கூடப் பார்த்திருக்க முடியுமா?

விகடன் எப்படி மாயவலை பின்னுகிறது பார்த்தாயா?

முதலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கிருஷ்ணகிரியை அப்படியே வளமான பகுதியாக அவர் ஆக்கி விட்டார்! கிருஷ்ணகிரியின் தோற்றமே மாறி விட்டது. கிருஷ்ணகிரியின் வறட்சியை மாற்ற முயற்சி எடுப்பேன் என்று தேர்தலில் அளித்த வாக்குறுதியை முடிந்த வரை அவர் நிறைவேற்றியுள்ளாராம்.

விகடன் எழுதுகிறது இப்படி.

இதிலிருந்து என்ன தெரிகிறது? சுப்பிரமணியம் இந்தியாவுக்கு மந்திரியாக இருந்தாலும், தமிழ் நாட்டுக்குச் சொந்தக்காரராக இருந்தாலும் அவற்றையெல்லாம் மறந்துவிட்டுத் தனது சொந்தத் தொகுதியைத்தான் கவனிப்பார்!

அப்படியாவது கிருஷ்ணகிரி தொகுதியில் தேர்தலில் நின்றபோது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றினாரா? வெற்றிபெற்ற பிறகு அந்தத் தொகுதிக்கு எத்தனை முறை சென்றார்? கேரளத்துத் தண்ணீரைக் கொண்டு வருவாராம் - இப்போது உறுதிமொழி அளித்துள்ளார்.

கழக அரசு, கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி அதன் வெற்றிகரமான விளைவாகப் பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தின் வாயிலாக மேலும் சுமார் ஒரு லட்சம் ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கியது. அதற்குள், கழக அரசு, கவிழ்க்கப்பட்டது. கவர்னர் ஆட்சியில் அந்தத் திட்டம் இப்போது ஒத்தி வைக்கப்பட்டு விட்டது.

இருந்ததையே கெடுத்தவர்கள், இனிமேல் புதிதாகக் கேரளத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரப் போகிறார்களாம்! கேழ்வரகில் நெய் வடிகிறது! கைலாச நாதரிடமும், கைலாச நாயகியிடமும் கோபித்துக்கொண்டு மலை மீது ஏறி நின்ற முருகனின் பழனியம் பதியிலேயிருந்து, சுப்பிரமணியனார் தி.மு.க. ஆட்சியின் மீது தூற்றல் பாணங்களை அள்ளி வீசுகிறார்.

தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு அதல பாதாளத்தில் விழுந்து விட்டது.

இது சுப்பிரமணியனார் திருவாய்மொழி. விகடன் வெளியிட்டுள்ளது!

ஆம்! அதல பாதாளத்தில் விழுந்த தமிழ் நாட்டைக் கைலாசத்தில் தூக்கி உட்கார வைக்கப் போகிறார்! அமீர்சந்த் பியாரிலால் விவகாரம்! அழகிரிசாமி நியமனம்! சிண்டிகேட் வங்கியில் ஐந்து லட்சம்! இப்படிப் பல்வேறு புகழ்பெற்ற மாமனிதர் அவர்!

தி.மு.க. ஆட்சியில் உருத்தெரியாமல் போன தமிழ் நாட்டைப் பார்த்து என் வயிறு எரிகிறது, இதுவும் சி. சுப்பிரமணியம் அவர்களின் மணிவாசகம்தான்! விகடன் வெளியிட்டு மகிழ்கிறது!

ஒன்பது ஆண்டுக் கால கழக ஆட்சியில் தமிழ்நாடு வளர்ச்சி பெற்றிருக்கிறதா? இல்லையா? என்பதை இந்நாள் மத்திய நிதி அமைச்சரான சுப்பிரமணியமும் - தமிழ் நாட்டின் முன்னாள் நிதி அமைச்சரான நானும் - விவாதக் கட்டுரை களின் மூலம் விளக்குவதற்கு விகடன் இதழில் இடம் ஒதுக்குவார்களேயானால், தேர்தல் நேரத்தில் வாக்காளர் களுக்குத் தெளிவு ஏற்படுத்த வழியேற்படும். சுப்பிர மணியனாரும் விகடனாரும் தயாரா?

உடன்பிறப்பே, இந்தக் கேள்விக்கு நான் அவர்களிடமிருந்து பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

உடுமலை நாராயணன் அல்ல! வைகுந்த நாராயணனே வந்தாலும் தோற்கடிப்பேன் என்று 1967-ஆம் ஆண்டு கர்ச்சனை செய்த சுப்பிரமணியம் என்ன ஆனார்? என்பதை விகடன் மறந்திருக்கலாம். நாடு மறக்கவில்லை.

என் ஆருயிர்க் கழகக் கண்மணியே! விகடன் உன்னையும் கேலி செய்து தனது கட்டுரையை முடித்திருக்கிறது.

தி.மு.கழகத்திற்கு முன் போல் தேனீத் தொண்டர்கள் இருக்கிறார்களா? என்று விகடனின் நிருபர்கள் சந்தேகப் படுகிறார்களாம்!

பார்த்தாயா? பார்த்தாயா? உன்னையும்! உன் உழைப்பையும்! உன் சுறுசுறுப்பையும் எவ்வளவு கேலிக்குரியதாக ஆக்கிக் காட்டுகிறது, விகடன்!

நீ, முன்புதான் தேனீயைப் போல் உழைத்து வெற்றியினைக் குவித்தாயாம்! இப்போது நீ சோம்பேறி ஆகி விட்டாயாம்! மெத்தனமாகி விட்டாயாம்!

உன்னால் கழக வேட்பாளர்களை ஊராருக்கு அறிமுகப் படுத்தக் கூட முடியாதாம்!

யாரோ ஒரு உடன்பிறப்பு, எங்கேயோ ஒரு கிராமத்தில் அயர்ந்து தூங்கியதைப் பார்த்துவிட்டு ஆனந்த விகடன் நிருபர், எல்லா உடன்பிறப்புகளையும் ஒரே வரியில் பழித்தும் இழித்தும் பேசிவிட்டாரே!

வெட்டி வா என்றுரைத்தால்

கட்டி வரும் உன்னைப் பார்த்து,

உண்ணாமல் உறங்காமல் ஓய்வு

கொள்ளாமல் உழைத்துச்

சுழன்றிடும் உன்னைப் பார்த்து,

உன்னைத்தான் தம்பீ என்று

அண்ணன் அழைத்து ஆணையிட்ட

போதெல்லாம் என்னைத்தான்

என் அண்ணன் அழைத்தார்

என்று பணியாற்ற ஓடிவரும்

உன்னைப் பார்த்து,

விகடனார் கேலி பேசி விட்டாரே! நீ இப்போது தேனீ அல்லவாம்!

அப்படி எந்த நிருபர் உன்னைப் பார்த்து, நீ பணியேதும் ஆற்றிடாமல் படுத்துக் கிடந்தாய்?

பசை காய்ச்சிடவும் தெரியும் - வருகின்ற சுவரொட்டிகளை ஒட்டிடவும் முடியும் - வாக்காளர்களைச் சந்திக்கவும் கற்றிருக்கிறாய் - கொடியும் பிடிப்பாய் - கூட்டமும் நடத்துவாய் - கொள்கையை முழங்குவாய் - குறிக்கோள் நோக்கி நடந்திடுவாய் - வீணர் வீழ்ந்துபட வெற்றிகளை வழங்கிடுவாய் - நீயா தேனீ அல்ல!

நான் நம்ப மாட்டேன்!

என் கண் எதிரே காண்கிறேன்;

கண்ணின் மணியே!

உன் உழைப்பை!

பழனிக்கும் மற்றும் பல தொகுதிகளுக்கும்

வரத்தான் போகிறேன், நேரில்

பார்க்கத்தான் போகிறேன்.

நீ தேனீதான்! கழகமெனும் தேன் கூட்டைக் கலைப்பவர்க்கு நீ தேனீயே தான்!

அன்புள்ள,

மு. க.

26-02-1977

382. காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது!

உடன்பிறப்பே,

சுவரொட்டிகள் கொடுக்கப்படவில்லை. துண்டு அறிக்கைகள் கூடத் தரப்படவில்லை. தலைமைக் கழகத்திலிருந்து சுவரொட்டிகள் வரவும் தாமதம்! வந்தவைகளையும் அந்தந்தப் பகுதிகளுக்குத் தேர்தல் அலுவலகங்களில் இருந்து குறித்த நேரத்தில் அனுப்பி வைக்கப்படுவதுமில்லை. சட்டசபைத் தொகுதிக்கு ஒரு கார் வீதம் ஆறு தொகுதிகளுக்கும் ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு ஆறு கார்களாவது வேண்டாமா? அவைகள் தள்ளுமாடல் வண்டிகளாக இருந்தாலாவது பரவாயில்லை. இதுவரையில் ஒரு கார் கூட ஏற்பாடு செய்யப்படவில்லை. நமக்குத்தான் வாக்களிப்பதென்று பெரும்பான்மையோர் காத்திருக்கிறார்கள் நேரத்தை எதிர்பார்த்து - அவர்களையெல்லாம் ஒன்று சேர்த்து அமைப்பு முறையோடுச் செயல்பட வைக்கும் வசதி வாய்ப்புகளை உருவாக்குவதற்கு ஓடியாடி உழைப்பவர்களுக்கு ஒரு கோப்பைத் தேநீர் அருந்திடவாவது காசு இருக்க வேண்டாமா? வேட்பாளரைத் தேடி அலைகிறோம். அவர் ஆறு தொகுதிகளில் எந்தத் தொகுதியில் எந்தக் கிராமத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறார் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரு சைக்கிளாவது வாடகைக்கு எடுத்துக் கொடுத்தால் நாங்கள் நாலைந்து கிராமங்களிலாவது வட்டமிட்டுத் தேர்தல் பணிகளை ஆற்றிக் கொண்டிருக்க முடியும். கூட்டம் நடத்த, ஒலி பெருக்கி வைக்க, விளம்பரம் செய்ய ஏதோ எங்களால் முடிந்ததை வசூல் செய்கிறோம் நன்கொடையாக! அந்தக் கஷ்டத்துக்கிடையே நடத்துகிற கூட்டங்களுக்கும் சில நேரங்களில் ஒத்துக்கொண்ட பேச்சாளர்கள் வராமல் இருந்து விடுகிறார்கள். எங்கள் உள்ளத்தில் அந்தச் செய்தி இடி விழுந்ததுபோல் ஆகி விடுகிறது. மக்கள் ஆர்வமாக இருக்கிறார்கள். இருந்தாலும் நாம்

அயராமல் தொண்டாற்ற வேண்டாமா? அதற்குச் சிறிதளவு வசதி வாய்ப்பையாவது வேட்பாளரோ அல்லது தேர்தல் குழுவினரோ எங்களுக்குச் செய்து தர வேண்டாமா?

உடன்பிறப்பே, ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் தி.மு.க.செயல்வீரர்களானாலும் சரி, ஜனதா-மார்க்சிஸ்ட் கட்சிகளின் செயல்வீரர்களானாலும் சரி மேற்கண்ட குறைபாடுகளைச் சொல்லியவாறு இருக்கின்றனர்.

வசதி வாய்ப்புகள் குறைவுதான் என்பது தெரிந்திருந்தும் இதுபோன்ற குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதையே தங்கள் வேலையாகக் கருதாமல், அவரவர்களும் தங்களால் இயன்ற அளவுக்கு உழைத்திட வேண்டுமென்பதே என் வேண்டுகோளாகும்.

சுருக்கமாகச் சொன்னால், ஒவ்வொருவரும் வேட்பாளர் என்ற உணர்வோடு காரியங்கள் நடைபெற்றாக வேண்டும்.

எப்படியோ கஷ்டப்பட்டு ஒரு பகுதிக்கு நூறு சுவரொட்டிகளை அனுப்பினால், அது எப்படிப் போது மானதாக இருக்கும்? இன்னும் ஒரு ஐம்பது சுவரொட்டியாவது வேண்டும் என்று கேட்கத்தான் தோன்றும். போஸ்டர் வந்தது சரி; அதனை ஒட்டிக் கட்டுவதற்குத் தட்டிகள் வேண்டாமா? இந்தக் கேள்வியும் கூடவே தோன்றிடத்தான் செய்யும்!

காரே ஒன்று கிடைப்பதாக வைத்துக் கொண்டாலும், அத்துடன் பிரச்சினை தீர்ந்து விடுகிறதா? இல்லையே! கால் டேங்க் பெட்ரோலில் எத்தனை ஊர் சுற்ற முடியும் - அது என்ன தண்ணீரில் ஓடுமா? என்ற கேள்விக்குரல் கோபத்தோடு கிளம்பிடத்தான் செய்யும்!

ஒப்புக்கொண்டவாறு ஒரு பேச்சாளர் குறிப்பிட்ட கூட்டத்திற்கு வந்துவிட்டதாகவே வைத்துக்கொள்; அரை மணி நேரம்தானே பேசினார். அதுவும் நாலு ஊர் பேசுவதாக அறிவித்து விட்டு மூன்று ஊர்தானே பேசினார் - எப்படியோ இவர் வந்தார் சரிதான் - ஆனால் அவர் வரவில்லையே என்ற குறைபாடு, தொடர்கதையாகத்தான் நீளும்!

எனவேதான் உடன்பிறப்பே, உனக்குச் சொல்கிறேன்! இன்னும் இடையிலே இருப்பது இருபது நாட்கள்கூட இல்லை!

சுவரொட்டி இல்லாமல் போனால்கூட நீயே விளம்பரக் கருவியாக மாறிக் கொண்டாக வேண்டும்.

தொகை தொகையாக நீ வாக்காளர்களைச் சந்தித்து நேருக்கு நேர் எடுத்து வைக்கும் விளக்கங்கள் ஆயிரக்கணக்கான துண்டு அறிக்கைத் தெளிவுரைகளுக்குச் சமம் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

கடமையாற்றுவதென்ற உறுதியுடன் நீ களத்தில் இறங்கி விட்டால் கார்கள் என்ன; உன் கால்களைவிட வேகம் வாய்ந்தவைகளா?

கட்சியின் தலைவர்களும், முன்னணிப் பேச்சாளர்களும், எடுத்து வைத்த ஜனநாயகக் கருத்துகளை நெஞ்சில் பதிய வைத்து நடமாடும் நீ இருக்கும்போது மேலும் விளக்கங்களைத் தர வெளியூர்களில் இருந்தா சொற்பொழிவாளர்கள் வந்திட வேண்டும்?

தேவையில்லை, எல்லாம் உன்னாலேயே முடியும்! உன் ஆற்றல் பெரிது! உன் உழைப்பு, வீண்போனதில்லை!

வேட்பாளர்கள், தங்களால் முடிந்த வசதியைத்தான் செய்யமுடியும். அவர்களில் யாரும் கஞ்சத்தனம் செய்ய வேண்டுமென்று கருதுகிறவர்கள் இல்லை. உன் செலவிலேயே வெற்றி பெற வேண்டுமென்று எண்ணுகிற உலோபக் குணம் கொண்டவர்களுமல்ல.

என் செய்வது, முன்பெல்லாம் சட்டசபைத் தொகுதி களுக்கும், நாடாளுமன்றத் தொகுதிக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடந்தபோது செலவுகளும், முயற்சிகளும் பகிர்ந்து கொள்ளப்பட்டன. அதனால் பளு, குறைவாக இருந்தது. இப்போது ஏற்பட்டிருப்பது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் புதிய அனுபவமல்லவா? சற்று சங்கடமாகத்தானிருக்கும். சங்கடங்கள் எத்தனை வரினும் அத்தனையும் சமாளிக்கக் கூடிய உடன்பிறப்பாயிற்றே, நீ! முகம் கோணலாமா இப்போது? அகம் மலர்ந்து ஆர்வம் கரைபுரள அல்லும் பகலும் நீ உழைத்திட்டால்தான் காணலாம் வெற்றி!

நீர் தேக்கி, நிலம் உழுது, நாற்று நட்டு, களையெடுத்து, கழனிதனைக் கண்போலக் காத்திடும் உழவன்தானே நல்ல அறுவடையைக் காணமுடியும்!

மூச்சடக்கி ஆழ்கடலின் அடிவரையில் மூழ்கினால்தானே முத்துச்சிப்பி எடுத்து வரமுடிகிறது!

பூமிப்பந்தின் வயிற்றைப் பிளந்து சாவுக்கு அஞ்சாமல் சுரங்கம் நுழைந்து வெட்டி எடுப்பதுதானே பொன்னும், நிலக்கரியும்!

முத்துநகை - மோகனச் சிரிப்பு - தங்கமேனி - தளிர்ப்பாவை - இன்ப அரும்பு - இனிய வீணை - என்றெல்லாம் கொஞ்சுகின்றாளே, தாய் - தன் குழந்தையை! அந்த அழகு நிலவைப்பெற அவள் பத்து மாதம்பட்ட சிரமம் எவ்வளவு? பேறு காலத்தில் தாங்கிய வலிதான் எத்தகையது?

உடன்பிறப்பே, நாம் பெற வேண்டிய வெற்றியும் அப்படித்தான்!

கழனியில் பயிர்போல, கடலில் முத்துப் போல, சுரங்கத்துப் பொன்போல், சுவைமிகு கனிரசக் குழந்தைபோல - கஷ்டங்களுக்குப் பிறகே, வெற்றியினைப் பெற்றிட முடியும். அதற்கு நீயும் நானும் சிந்திட வேண்டிய வியர்வை, மேலும் தேவைப்படுகிறது.

இடையில் உள்ள நாட்களின் எண்ணிக்கையை மனத்திற் கொள்!

எதற்கும் யாரையும் எதிர்பார்ப்பதில்லை, நம்மால் முடிந்த உழைப்பினை, சிறிதும் ஓய்வின்றித் தருவது என்று உறுதி செய்துகொள்!

நீயே சுவரொட்டி!

நீயே துண்டு அறிக்கை!

நீயே கார், சைக்கிள்!

நீயே பேச்சாளர்!

நீயே வேட்பாளர்!

இப்படி உன்னை ஆக்கிக் கொள்வாயானால், கடல் முத்து மேலே வந்து கையில் குந்திக்கொள்வது போல் - சுரங்கத்துத் தங்கம் தானே எழுந்துவந்து அணி மணிகளாவது போல் - வெற்றிக் கனியும் எளிதில் கிட்டும்!

எனக்கு எழுதிக் கொண்டிருக்கவும் நேரமில்லை! உனக்கோ என் கடிதத்தைப் படிக்கவும் நேரமில்லை!

ஆம், அவ்வளவு கடமைகள் எதிர் நிற்கின்றன! கிளம்பு, அதனை நிறைவேற்ற!

மறவாதே,

காலம் பொன் போன்றது,

கடமை கண் போன்றது!

அன்புள்ள,

மு. க.

27-02-1977

383. காக்கி உடையணியாத காவலராகப் பணியாற்றுக!

உடன்பிறப்பே,

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள்; ஆம்! தி.மு.க., ஜனதா, மார்க்சிஸ்ட் கட்சிகளின் அணியும் அவற்றின் தோழமைக் கட்சிகளும் நடத்துகிற கூட்டங்கள் மாநாடுகள் போல் விளங்குகின்றன. அவற்றைக் கண்டு மனம் கலங்கியுள்ள மாற்றார், அந்தக் கூட்டங்களில் அமளிதுமளிகளை உருவாக்கலாம் என்று திட்டமிட்டுச் செயலாற்றுகிறார்கள். மத்திய சென்னையில் நானும், பேராசிரியர் ராமச்சந்திரன் அவர்களும் கலந்துகொண்ட கூட்டம் அந்தப் பகுதியின் வரலாறு கண்டிராத கூட்டமாகும். வடசென்னையில் நண்பர் ஆசைத்தம்பி அவர்களை ஆதரித்து ஓட்டேரிப் பகுதியில் நான் உரை நிகழ்த்திய கூட்டத்தில் மக்களின் தொகை, லட்சத்தை எட்டிப் பிடிக்கும் அளவுக்கு இருந்தது. தாய்மார்களே பல்லாயிரவர் குழுமியிருந்தனர். திருவொற்றியூர் கூட்டமும் அவ்வாறே!

தென்சென்னையில் சைதைத் தேரடித் தெருவில் இரவு 10 மணிக்குக் கூடியிருந்த மக்கட் கடல்கண்டு பொறாமை கொண்டோர், சோடாப்புட்டிகளை வீசி, சிறு சலசலப்புக் காட்டினர்.

அவர்தம் முயற்சி பலிக்கவில்லை. இந்தப் பெருங் கூட்டங்களுக்கு ஒரு சில பகுதிகளில் காவல்துறையினர் பாதுகாப்புக்கு வருகின்றனர். பல பகுதிகளில் நாலைந்து பேர் வருகின்றனர். வருகின்றவர்களும் தங்கள் கடமையைச் செய்வதில்லை.

கடமை செய்ய அவர்கள் விரும்பினாலுங்கூட, மேலிடத்து உத்தரவு என்னும் தளை, அவர்களைத் தடுத்து விடுவதாகச் சொல்லப்படுகிறது.

சைதாப்பேட்டைத் தேரடிக் கூட்டத்தில் எங்கோ ஒரு மூலையில் சோடாப் புட்டிகளை வீசி, டியூப் விளக்குகளை உடைத்தனர். கூடியிருந்த பொது மக்கள் அலை அலையாக எழுந்தனர். விளக்குகள் வேறு அணைக்கப்பட்டன. இல்லையேல் மின்சாரத் தாக்குதலுக்குப் பலர் ஆளாகியிருக்கக்கூடும்.

தாய்மார்கள் அந்த இருட்டில் மிதிபட நேர்ந்தது. குழந்தைகள் அலறின.

இருண்டு கிடந்த மேடையைச் சுற்றித் தொண்டர்கள் சூழ்ந்து கொண்டனர். தாய்மார்களையும், குழந்தைகளையும், முதியோரையும் - அவர்கள் காப்பாற்றிட அரும்பாடு பட்டனர்.

இவ்வளவு அமளியிலும் காவல்துறையைச் சேர்ந்த ஒருவர்கூட அங்கு வந்து கூட்டத்தை ஒழுங்குபடுத்தவோ, பாதுகாப்பு அளிக்கவோ முன்வரவில்லை. எல்லாமே முன்கூட்டித் திட்டமிடப்பட்டதுபோல் நடந்தது.

கண்டும் காணாதவர்களைப் போலக் காவல்துறையினர் நடந்து கொண்டது எனக்கு மிக்க வியப்பைத் தந்தது.

என் செய்வது, எய்தவன் இருக்க அம்பை நொந்திட முடியுமா?

ஒன்று நிச்சயமாகப் புரிகிறது; எனக்குக் குறி வைத்திருக்கிறார்கள் என்று!

நடப்பது நடக்கட்டும் - ஆறிலும் சாவுதான்! நூறிலும் சாவுதான்! ஆனது ஆகட்டுமென்று எனது சுற்றுப் பயணத்தைத் தொடங்கி விட்டேன்.

கூட்டங்கள் அமைதியாக நடைபெற - ஒழுங்குற அமைய - பொதுமக்களுக்கு ஒரு சிறிது இடையூறும் ஏற்படாமல் இருக்க - கழகக் கண்மணிகள், தோழமைக் கட்சிகளின் செயல் வீரர்கள், இனிமேல் காவல்துறையினரை நம்பிப் பயனில்லை. அவர்களை எதிர்பார்க்காமலே ஒவ்வொரு தொண்டரும், காக்கி உடை அணியாத காவலராகத் தங்களை எண்ணிக்கொண்டு, கூட்டங்களை ஒழுங்குபடுத்திட முன் வரவேண்டும். நமது அணியினர், அந்தந்தக் கட்சிக்குரிய அடையாள உடைகளையோ, சின்னங்களையோ அணிந்து - கூட்டங்கள் நடைபெறும் இடத்தில்

பதட்டம், பரபரப்பு, கட்டுக்கடங்காத தன்மை ஆகியவற்றுக்கு இடந்தராமல், தலைவர்களை மேடைக்கு அழைத்து வரும்போதும், அனுப்பி வைக்கும் போதும் - அணி வகுத்து நின்று அமைதி காத்திட வேண்டும்.

அதுபோலவே கூட்டங்களையும் செம்மையாக நடைபெற ஆங்காங்கு பரவலாக இருந்து, பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

காவல் துறையினரின் நடுநிலையற்ற போக்கை பொதுமக்கள் புரிந்து கொள்ளட்டும்! அவர்களைவிடச் சட்டம், ஒழுங்கு, அமைதி காப்பதில் நாம் அக்கறை அதிகம் உடையவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டுவோம்!

அன்புள்ள,

மு. க.

28-02-1977

384. வாகை சூடிடுவோம் வாரீர்!

உடன்பிறப்பே,

தோழமைக் கட்சிகளின்

தொண்டர்களே!

ஆற்றல்மிகு செயல்வீரர்களே!

அன்புள்ள உடன்பிறப்புகளே!

இடையில் ஒரு வார காலம் கூட இல்லை. நீங்கள் இடையறாது பணியாற்றிட வேண்டும். பசி, தூக்கம், சொந்த அலுவல், வீட்டு வேலை அனைத்தையும் பற்றிப் பத்தொன்பதாம் தேதிக்குப் பிறகு கவலைப்பட்டுக் கொள்ளலாம். அதுவரையில் உழைப்பு! உழைப்பு! ஓயாத உழைப்பு! ஒரு நிமிடமும் அயராத உழைப்பு!

உங்களை மட்டும் உழைக்கச் சொல்லி விட்டு, நான் எங்கும் உட்கார்ந்திருக்கவுமில்லை. ஓய்வு கொள்ளவுமில்லை. வைகறைப் பொழுது வரையில் பசியைத் தாங்கிக் கொண்டு பயணம் செய்கிறேன். ஒரே நாளில் நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறேன். என் உடல் வலிவு பற்றித்தான் உங்களுக்கே தெரியும் - எனினும் ஏதோ ஒரு உறுதி, உள்ளத்தைத் தெம்பாக்கி வைத்திருப்பதால் தொண்டை முழுவதும் ரணமாக இருப்பதையும் பொறுத்துக்கொண்டு எல்லா நிகழ்ச்சிகளிலும் கருத்து விளக்கங்களை அளிக்கிறேன்.

நான் ஏறி வரும் பிரச்சார வண்டி, ஆம் - அந்த வேன் - அதற்கு மட்டும் வாயிருந்தால் அய்யோ என்னால் தாங்கமுடியவில்லையே, கொஞ்சம் ஓய்வு கொடுங்களேன் என்று கெஞ்சி அழும்! அவ்வளவு தொலைவுப் பயணத்தை ஒவ்வொரு நாளும் மேற்கொள்கிறேன். அங்கெல்லாம் உங்கள் உற்சாக மிகு பணிகளைக் கண்டு உவகை பொங்கிட உளமார வாழ்த்தினேன். எல்லாத் தொகுதிகளுமே வெற்றிக்கனி வழங்கிடும் விதத்தில் உங்கள் உழைப்பால் உயர்ந்து நிற்பதை என்னால் உணர முடிந்தது. நீங்கள் இப்போது உருவாக்கியிருக்கும் அரண்களை, இனி யாராலும் உடைத்திட

முடியாது என்பது உண்மைதான்! எனினும் அதற்குள் யாரும் ஊடுருவிடாவண்ணம் காவல் புரிந்திட வேண்டுமல்லவா?

தோட்டம் போட்டு, காய்கறிகள் உற்பத்தி செய்து, அவை செடி கொடிகளில் குலுங்கிடும் போதுதானே பாதுகாப்பு பலமாக இருக்க வேண்டும். வேலிகளைத் தாண்டுவோரைத் தடுக்க விழியுறக்கம் கொள்ளாமல் இருந்திட வேண்டிய வேளையல்லவா இது!

நமது ஜனநாயக அணியின் கொள்கை விளக்கங்களைப் பட்டி தொட்டிகளுக்கெல்லாம் பரப்பி விட்டீர்களா?

சுவரொட்டிகள் அனைத்தையும் ஒன்று கூட வீணாக் காமல் மக்களின் பார்வையில் படும் இடங்களில் ஒட்டி வைத்து விட்டீர்களா?

வாக்காளப் பெருமக்களைச் சந்தித்து விட்டீர்களா?

அவர்கள் வாக்குச் சாவடிக்குச் செல்லவேண்டிய நாளையும், வாக்களிக்க வேண்டிய நமது அணியின் சின்னங்களையும் அவர்கட்கு நினைவுபடுத்தி விட்டீர்களா?

கொடிகள், தோரணங்கள் கட்டி விட்டீர்களா?

மாற்றார், தங்கள் தோல்வியை முன்கூட்டி அறிந்து கொண்டு வன்முறைச் செயல்களில் ஈடுபடத் தொடங்கி விட்டனர். நமது அணியில் பணிபுரிவோர் குத்துப்படுகின்றனர். வெட்டப்படுகின்றனர். ஜனநாயகம் காத்திட அணிவகுத்து நிற்கும் நீங்கள், இமயமென நிமிர்ந்து நில்லுங்கள்! ஒன்று கூடி விஷமிகளை வெல்லுங்கள்!

அமைதி செயலிலும், துணிவும் உறுதியும் நெஞ்சிலும் இருக்க வேண்டும். அதை மறந்து விடாதீர்கள்! பெரியகுளம் தொகுதியில் ராசிங்கபுரம் என்ற ஊரில் என் தோள்பட்டை மீதும்கூட கல்லால் அடித்து விட்டார்கள்.

அவர்கள், தாங்கள் யார் என்பதை மக்களுக்கு அவர்களே உணர்த்திக் கொள்ளும்போது நமக்கு வேலை மிச்சம் தானே!

நீங்கள் ஒன்றுபட்டு நின்றாலே போதும் - உங்கள் பார்வைபட்ட மாத்திரத்தில் பகையொடுங்கும் என்பது எனக்குத் தெரியும்.

சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் பறிகொடுத்துவிட்டு நாம் கோழைகளாக வாழத் தேவையில்லை. எதிர்கால நமது சந்ததியினர் நம்மைச் சபிக்காமல் இருக்க, பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்போம். ஜனநாயகத்தின் கழுத்தை நெரிக்கும் சர்வாதிகார வேதாளங்களுக்குச் சரியான பாடத்தை அறவழியில் அளிக்கத் தயாராவோம்!

அதற்கு உங்களின் பணியை மேலும் சற்றுக் கடுமையாக்குங்கள்!

ஒரு வார காலம் தான்! உங்களுக்கு இந்தத் தேர்தலைத் தவிர வேறு வேலையில் நாட்டமே செல்லக்கூடாது.

நான் விசாரித்துக் கொண்டுதானிருக்கிறேன். தொகுதிகளின் ஒவ்வொரு கோடியிலும் ஒரு குக்கிராமத்திலேகூட உங்களின் பணி, எவ்வாறு நடைபெறுகிறது என்பதை விளக்கமாகவே என்னால் அறிந்து கொள்ள முடிகிறது.

உங்கள் பணி தொடரட்டும்!
உழைப்பு வெல்லட்டும்!
ஓயாது ஆற்றிடுக தேர்தல் பணி!

ஒப்பற்ற வெற்றி
குவித்திடுக, நமது
ஜனநாயக அணிக்கு!

இம்! சுடர் முகம் தூக்குக!
சுறுசுறுப்புக் காட்டுக!
வெற்றி நமதே!
வெற்றி நமதே!
வாகை சூடிடுவோம் வாரீர்!
வாரீர்!!

அன்புள்ள,

மு. க.

10-03-1977

385. தேன் மழைச் செய்தி!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில் நமது அணிக்கு ஏற்பட்ட தோல்வியைக் கண்டு கலங்காதே!

இந்தியாவில் புதிய ஆட்சி அமைகிறது என்பதை எண்ணி ஆறுதல் பெற்றிடு!

வெற்றியில் வெறியாட்டம் நடத்துவதும், தோல்வி கண்டு துவளுவதும் கூடாது என்று நமது அண்ணன் கூறிய மொழிகளை உள்ளத்தில் பதிய வைத்திருக்கும் உனக்கு நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை.

தமிழ்நாட்டில் நம்மை வென்றுவிட்ட அணியினருக்கு மொத்தம் நூற்றி மூன்று லட்சம் வாக்குகள் கிடைத்திருக்கின்றன. நமது அணியினருக்குக் கிடைத்த மொத்த வாக்குகள் அறுபத்தி ஆறு லட்சம். இந்தப் புள்ளிவிவரத்தை வானொலி அறிவித்துள்ளது. நூற்றி மூன்று லட்சம் வாக்குகள் பெற்ற அணி, முப்பத்தைந்து இடங்களையும், அறுபத்து ஆறு லட்சம் வாக்குகள் பெற்ற அணி நான்கே நான்கு இடங்களையும் பெற்றிருக்கிறது. இதுதான் இன்றுள்ள தேர்தல் முறை. இந்த முறையில் மாற்றம் தேவையென்பது குறித்துக் கருத்துப் பரிமாற்றங்கள் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பொதுவாக, தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய தெற்கு மாநிலங்களில் இந்திரா எதிர்ப்பு அலை, வலுப்பெற்று இருக்கவில்லையென்பதை தேர்தல் முடிவுகள் அறிவிக்கின்றன.

பாபு ஜெகஜீவன்ராம் கூறியுள்ளதுபோல நெருக்கடி நிலையின் கொடுமைகளை இந்த மாநிலங்களின் மக்கள் உணர்ந்து கொள்ளவில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

குறிப்பாகத் தமிழ் நாட்டில் இந்திரா ஆதரவு அலையுடன் கூட சினிமாக் கவர்ச்சி அலையும் நமது அணியின் வெற்றியைப் பாதித்திருக்கிறது. அத்துடன் பெரும் பொறுப்பான பதவியில் உள்ளவர்கள், தாங்கள் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட இடத்தில் இருக்கிறோம் என்பதை மறந்துவிட்டு, ஆளுங் காங்கிரசின் கூட்டணிக்கு வசூல் செய்து கொடுத்தல், வாக்குச் சேகரித்துக் கொடுத்தல் போன்ற பணிகளில் வெளிப்படையாகவே ஈடுபட்டனர்.

இந்தச் சூழ்நிலைகளையும், நெருக்கடி நிலைப் பயமுறுத்தலையும், மிசா மிரட்டல்களையும் கடந்து அறுபத்து ஆறு லட்சம் பேர் நமது அணிக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்றால், அவர்கள் அரசியல் தெளிவையும், துணிவையும் பாராட்டத்தான் வேண்டும்.

ஓராண்டுக் காலம் நம்மீது வாரி இறைக்கப்பட்ட அவதூறுகளுக்கு விடையளிக்கவோ, அவற்றை மறுத்து விளக்கமளிக்கவோ, நமது சார்புடைய ஏடுகள் அனுமதிக்கப்படவில்லை. முன்தணிக்கைமுறை மூலம் அந்த விளக்கங்கள் ஏடுகளில் வராமல் தணிக்கை அதிகாரிகளால் தடுக்கப்பட்டன. அதே சமயம் நம்மீது அவதூறுகளைப் பரப்ப, அரசின் எல்லாச் சாதனங்களும் - செய்தித்துறை, வானொலி, டெலிவிஷன், மற்றுமுள்ள மஞ்சள் பத்திரிகைகள், அனைத்தும் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. அவற்றுக்கெல்லாம் பதில் கூற நமக்குக் கிடைத்தது தேர்தல் காலத்தில் சில நாட்களேதான்!

எனினும், தமிழ்நாட்டில் நமது அணிக்குக் கிடைத்த தோல்வியை ஜனநாயக ரீதியில் நாம் ஒப்புக்கொண்டு, மாற்றார் அணிக்குக் கிடைத்த வெற்றியை மதித்திடக் கடமைப் பட்டிருக்கிறோம்.

நமது அணி, குறிக்கோளில் குழப்பமின்றி ஒன்றுபட்டு நின்றது. ஆம்! சர்வாதிகாரத்திற்கு விடை கொடுக்க வேண்டுமென்ற குறிக்கோளில் நமது அணிக்குள் கொள்கைக் குழப்பமில்லை.

ஆளுங் காங்கிரஸ் அணியோ, தன்னை முற்போக்கு அணி என்று கூறிக் கொண்டது. அந்த அணியில் உள்ள வலது கம்யூனிஸ்டுகள், இந்திரா காந்தியின் தோல்விக்கும், சஞ்சய் காந்தியின் தோல்விக்கும் வெவ்வேறு மாதிரியான காரணங்களைச்

சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நிலை, ஒரு மாநிலத்துக்கு ஒரு நிலை! சில மாநிலங்களில் இந்திராவுடன் கூட்டு! சில மாநிலங்களில் இந்திராவுக்கு எதிர்ப்பு! அதுபோன்ற குழப்ப நிலை நமது அணியில் உள்ளவர்களிடம் இல்லை.

இந்திரா ஆட்சி மாற்றப்பட வேண்டும் என்ற ஒரே குறிக்கோள்தான் நாம் இந்தத் தேர்தலின்போது மக்களின் முன் வைத்த பிரகடனம்!

சர்வாதிகாரத்தை வீழ்த்த இந்தியாவில் அமைப்பு ரீதியாக நாம்தான் முதல் குரல் கொடுத்தோம். நெருக்கடி நிலையை எதிர்த்து நமது செயற்குழு போட்ட தீர்மானம், வரலாற்றில் இடம்பெறத் தக்கது.

சர்வாதிகாரம் சாய்க்கப்பட்ட செய்தி, நமது செவிகளுக்கும், சிந்தைக்கும் தேன்மழையாக இருக்கிறது.

ஒரு போரில் வெற்றி பெற்ற பிறகு அந்தப் படையில் சில வீரர்கள் களம்பட்டு வீழ்ந்துதான் கிடப்பர்.

அந்த இழப்பை எண்ணினால், பெற்ற வெற்றியின் இனிப்பை சுவைக்க முடியாது.

களம்பட்ட வீரர்களைப்போல நமது அணியில் ஏற்பட்ட சேதத்தைக் கருதிக் கொள்வோம்!

நாட்டில் சர்வாதிகார இருள் விலகுகிறது! ஜனநாயக ஒளி பரவுகிறது!

அந்த வெற்றியை எண்ணி மகிழ்வோம். அந்த வெற்றிக்குக் கொடுத்த விலையாக நமது இழப்புகளை எண்ணி ஆறுதல் பெறுவோம்.

அறுபத்தாறு லட்சம் வாக்குகளைப் பெற்ற சக்தி, அற்பமான சக்தி அல்ல!

அந்த வலிவினை வளர்ப்போம்.

அன்புள்ள,

மு. க.

22-03-1977

386. விழா எடுப்போம் வாராய்!

உடன்பிறப்பே,

1975-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இருபத்தி ஆறாம் தேதி முரசொலி இதழ் சர்வாதிகாரியாகிறார் இந்திரா என்ற முதல்பக்கத் தலைப்புச் செய்தியுடனும், இந்த மடலுடன் இணைக்கப்பட்டுள்ள கார்ட்டூன் படத்துடனும் வெளிவந்தது.

இந்தக் கார்ட்டூனை பிரபல வார ஏடான நியூஸ் வீக் 16-2-76 இதழில் வெளியிட்டது. அந்த இதழ் இந்தியாவிற்குள் வர அனுமதிக்கப்படாமல் தடுக்கப்பட்டது. உலகத்தின் பல ஏடுகளில் இந்தச் சித்திரம் வெளியாயிற்று.

உள்நாட்டுக் கலவரங்கள் ஏற்படும் ஆபத்து இருப்பதால் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்படுகிறது என்று பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அறிவித்துவிட்டு நள்ளிரவில் எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரைக் கைது செய்யுமாறு ஆணையிட்டார்.

ராணுவ ஆட்சி உள்ள நாடுகளிலும், சர்வாதிகார ஆட்சி நடக்கும் தேசங்களிலும் மாத்திரமே நடைமுறைப் படுத்தப்படுகிற பத்திரிகைச் செய்தித் தணிக்கையையும் பிரகடனப்படுத்தினார்.

நள்ளிரவில் கைது செய்யப்பட்ட ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள், போலீஸ் வண்டியில் ஏறும் பொழுது விநாச காலே - விபரீத புத்தி என்று கூறிக்கொண்டே ஏறினார் எனச் செய்திகள் வந்தன.

நெருக்கடி நிலைப் பிரகடனம் வெளியிடப்பட்டு இந்திய நாடு பரபரப்புக்கு ஆளான அடுத்த நாளே தி.மு.கழகத்தின் செயற்குழு கூடியது. செயற்குழு நிறைவேற்றிய தீர்மானத்தின் ஒரு பகுதியை உனக்கு மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.

உண்மையின் உருவம் மறைக்கப்பட்டு, பொய்யின் நிழலில் நின்று கொண்டு எதிர்க்கட்சிகளை அடக்குவதற்குத் திட்டம் தயாரித்து, அந்தத் திட்டம் ஏன் தேவைப்படுகிறது என்பதற்கான போலிக் காரணங்களைத் தேடி அலைந்து, வீண் அபவாதங்களை வாரியிறைத்து - எடுத்ததற்கெல்லாம் சரி, வெளிநாட்டுத் தொடர்பு, பிற்போக்குவாதிகள் என்ற சொற்கணைகளைப் பொழிந்து காலா காலத்திற்கும் இந்திய நாட்டு மக்களுக்கு மாசு ஏற்படுத்தும் வகையில் திருமதி இந்திரா காந்தி நேற்றைய தினம் 26-6-75 அதிகாலையில் சர்வாதிகாரத்திற்கான தொடக்க விழாவை நடத்தியிருக்கிறார்.

வெளிநாட்டார் பகையிலிருந்து நாட்டை மீட்க அணி திரண்டு நின்றவர்களையெல்லாம், இன்று உள்நாட்டைப் பாதுகாக்கிறேன் என்ற பெயரால் சிறைக் கொட்டடிகளில் தள்ளியிருக்கிறார். இந்திய மண்ணின் விடுதலைக்காகத் தியாகத் தழும்புகளை ஏற்ற பழம்பெரும் தேசபக்தர்கள், கைதிகள் என்ற பரிசினை இந்திரா ஆட்சியில் பெற்றிருக்கிறார்கள். வெள்ளையர் ஆட்சியின் போதும் இல்லாத கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தேசத் தலைவர்களின் மீது ஏவி விடப்பட்டுள்ள அடக்குமுறை கண்டு நாடு குமுறி எழுந்துள்ளது. எல்லாச் செய்திகளும் இருட்டடிப்புச் செய்யப்பட்டு விட்டன. அப்படியொரு சட்டம் பாய்ந்துள்ளது இப்போது! வையகம் புகழ் தலைவர்கள் கைது செய்யப்பட்ட செய்தியைக்கூட வானொலி வெளியிடவில்லை. சிலர் கைது என்று கூறி நாட்டின் நாயகர்களை நபர்களில் சிலராக வானொலி வர்ணிக்கிறது. தணிக்கை செய்யப்பட்ட பிறகே பத்திரிகைகளில் செய்திகள் வெளிவர வேண்டுமாம்.

விடுதலை பெற்ற இந்தியாவில், எத்தனையோ முறை எதிர்க்கட்சிகளின் எழுச்சிமிக்க கிளர்ச்சிகள் எரிமலைகளாக வெடித்திருக்கின்றன.

அப்போதெல்லாம் ஜவகர் காலத்திலோ, லால் பகதூர் காலத்திலோ, பாயாத உள்நாட்டு பாதுகாப்பு அவசரச் சட்டம், இன்று முதன்முறையாகப் பாய்வானேன்?

சதி நடத்துவோர், வன்முறையில் ஈடுபடுவோர், தகாத முறையில் பேசுவோர், எழுதுவோர் தண்டிக்கப்பட ஏற்கனவே எத்தனையோ சட்டங்கள் இருக்கும் போது, நாட்டை சர்வாதிகாரப்

பாதைக்கு இழுத்துச் செல்லும் வகையில் இந்த அவசரச் சட்டம் அமலுக்கு வருவது தேவைதானா? ஜனநாயகத்தைப் பாதுகாக்கிறோம் எனக் கூறி, சர்வாதிகாரக் கொற்றக் குடையின் கீழ் தர்பார் நடத்திட எடுக்கப்படும் முயற்சி நாட்டுக்கு ஏற்றதுதானா?

இவைகளையெல்லாம் இந்திரா காந்தி அம்மையார் சிந்தித்துப் பார்த்து நேற்றைய அவசர காலப் பிரகடனத்தினைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, நாட்டின் புகழ்மிக்க தியாகத் தலைவர்களை உடனடியாக விடுதலை செய்திட முன்வர வேண்டும்.

பத்திரிகையாளர்களின் கைக்கட்டுகளை அவிழ்த்து விட்டு பத்திரிகைகளுக்குரிய நியாயமான உரிமைகளைத் தடையின்றி வழங்க வேண்டும். அதுவே இந்திய ஜனநாயகத்திற்குப் பெருமை சேர்க்கும் காரியமாகும் என்று தி.மு.க. செயற்குழு சுட்டிக் காட்டுவதோடு, ஜனநாயகத்தைப் பாதுகாக்க இந்த செயற்குழு பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு விடுக்கும் இந்த வேண்டுகோள் வெற்றிபெற இந்திய நாட்டு மக்கள், சிறப்பாகத் தமிழ்நாட்டு மக்கள், காந்தியடிகள் நெறியை மறவாமலும், ஜனநாயகச் சின்னமாம் அறிஞர் அண்ணாவின் பாதையிலிருந்து தவறாமலும் தமக்கேயுரிய தனிப் பண்பாட்டுடன் அமைதியான முறையில் வன்முறை தவிர்த்த வழியில் சட்டம், ஒழுங்குக்கு ஊறு நேராவண்ணம் நாட்டுக்கு வந்துள்ள நெருக்கடிக்குத் தீர்வுகாண வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறது.

கழக வரலாற்றிலும் சரி, இந்திய நாட்டு வரலாற்றிலும் சரி இடம்பெற்றுவிட்ட இந்தத் தீர்மானத்தின் விளைவாக, தி.மு.கழகம், இந்திரா ஆட்சியில் அனுபவித்த கொடுமைகள் கொஞ்சமல்ல! அத்தகைய பயங்கர விளைவுகளுக்கு நாம் ஈடு கொடுத்தாக வேண்டும் என்று தெரிந்துதான் நெருப்பாற்றில் நீந்துவதற்கு இறங்கியது போல நாம் அந்தத் தீவிரமான தீர்மானத்தை நிறைவேற்றினோம். அந்தத் தீர்மானத்தின் பலனாக, கழக ஆட்சிக்கு மத்திய ஆட்சி பல்வேறு தொல்லைகளைக் கொடுத்தது. அவற்றையெல்லாம் நெஞ்சுயர்த்தி நின்று சமாளித்தோம். இறுதியாக கழக ஆட்சியையே கலைத்துவிட்டுத் தங்கள் வெறியைத் தணித்துக்கொண்டனர், டில்லியில் இருந்தோர்!

ஆட்சிக் கலைப்புடன் நிற்கவில்லை. ஐநூறுக்கு மேற்பட்டவர்களைத் தமிழ்நாட்டில் மிசா கைதிகளாக்கித்

துன்புறுத்தினர். சென்னை சிறைச்சாலையில் செங்குருதி பெருகிற்று. சென்னையில் சிட்டிபாபுவையும், மதுரையில் பாலகிருஷ்ணனையும் பலிகொடுத்தோம்! ஆம், அந்தச் சிங்க மறவர்கள், சிறைக் கைதிகளாகவே செத்து மடிந்தனர்.

நாடு முழுதும் நாசத்தின் நர்த்தனம் நடைபெற்றது. ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட அரசியல்வாதிகள் சிறைக் கூண்டுகளில் தள்ளப்பட்டிருந்தனர். வடபுலத்து மாநிலங்களில் சிறையில் மாண்டோர் பிணங்கள்கூட விலங்கு பூட்டியபடியேதான் அவர்தம் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டன. தொழிலாளர் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் மீது சதி வழக்கு தொடரப்பட்டது. விலங்குடன் இழுத்து வரப்பட்டார் நீதிமன்றத்துக்கு!

மொரார்ஜி, தனிமைச் சிறையில் பத்தொன்பது மாத காலம் அடைபட்டிருந்தார்.

ஜெயப்பிரகாசர், மிகவும் உடல் நலிவுற்ற நிலையில்தான் விடுவிக்கப்பட்டார்.

நாட்டில் நடைபெற்ற செய்திகளை யாரும் அறிந்திட முடியவில்லை. எத்தனையோ இடங்களில் துப்பாக்கிப் பிரயோகங்கள்! பிணக் குவியல்கள்! கட்டாயக் கருத்தடை அறுவைக்கு உடன்பட மறுத்த முஸ்லிம் பெண்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இந்தச் செய்திகள் எல்லாம் இருட்டடிப்பு செய்யப் பெற்றன.

இந்திய மக்கள் சிந்திய ரத்தத்தைக் கொண்டு இந்திரா காந்திக்குப் புகழ்பாடும் விளம்பரப் பலகைகள் எழுதப் பட்டன.

அகில இந்திய வானொலி, ஜெயப்பிரகாசரையும், மொரார்ஜி போன்ற சுதந்திரப் போராட்டத் தலைவர்களையும் கொள்ளைக்காரர்கள், சதிகாரர்கள் என்று நாள் தவறாமல் வர்ணித்துக் கொண்டிருந்தது.

டெலிவிஷன் மூலம் ஜெயப்பிரகாசரும், மொரார்ஜி போன்ற தலைவர்களும் பயங்கரமாக உருவகப்படுத்தப்பட்டார்கள். மிகக் கேவலமாக இழித்துக் கூறப்பட்டார்கள். நாட்டைக் கவிழ்க்கும் சதிகாரர்கள் என்று விமர்சிக்கப்பட்டார்கள்.

தமிழகத்தில், தி.மு.க. மீது அவதூறுகளை வீசி அழித்துவிட வேண்டும் என்று திட்டமிட்டு அதற்குரிய சாதனங்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டன.

யார் வரி ஏய்ப்பவர்களோ, யார் அந்நியச் செலாவணி மோசடியில் சிக்கியிருப்பவர்களோ, யார் ஊரார் பணத்தைக் கொள்ளையிட்டுவிட்டு உத்தமர்களைப் போல நடிப்பவர்களோ, யார் திண்டுக்கல் வைரத் திருடர்களோ, யார் கப்பல் வியாபாரத்தில் கமிஷன் பெற்று கையும் களவுமாக மாட்டிக் கொண்டிருப்பவர்களோ, யார் சடையப்ப வள்ளல்களின் தயவால் தங்கக் கடத்தல் செய்த பரங்கிமலைப் பாரி வள்ளல்களோ, அவர்களெல்லாம் தங்கள் அடிமைகளாகி விட்டனர் என்பதற்காக விட்டு விட்டு, கழக அமைச்சர்கள் மீதும், கழக முன்னணியினர் மீதும் வழக்குகளை ஜோடித்தது இந்திரா ஆட்சி!

இந்திரா அம்மையின் சுபாவமே அதுதான்! தனக்கு வேண்டாதவர் மீது வீண்பழி சுமத்துவது அவருக்கு உடலோடு பிறந்த ஒரு நோய்! கொள்கை மாறுபாடு, கருத்து மாறுபாடு உள்ளவர்களை அடியோடு அழித்துவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு புழுதிவாரி இறைப்பதில் இந்திராவுக்கு இணை இந்திராவேதான்! அந்த வகையில்தான் பஞ்சாப் மாநிலக் கட்சியான அகாலிதள கட்சியின் மீது அவதூறுக் கணைகளைப் பொழிந்தார். அந்தக் கட்சியின் முன்னாள் முதலமைச்சர் பாதல் அவர்களின்மீது விசாரணைக் கமிஷன்! அதன் தொடர்ச்சியாக கிரிமினல் வழக்கு வேறு தொடுக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அதைப் போலவே தன்னுடன் கருத்து வேறுபாடு கொண்ட நந்தினி சத்பதி, ஒருகாலத்தில் தன் ஆருயிர்த் தோழியாக இருந்ததையும் மறந்துவிட்டு வேண்டுமென்றே விசாரணைக் கமிஷன் மிரட்டல்! கிரிமினல் வழக்கு மிரட்டல்!

அடடா! தேர்தல் நேரத்திலே கூட இந்திரா காந்தியும், அவரது படைத் தளபதிகளும் பேசிய ஆணவ மொழிகள் கொஞ்சமா?

சிறைக் கதவு இன்னும் திறந்தே இருக்கிறது

இப்படியொரு மத்திய அமைச்சர் பேசினார்.

உங்களைத் தூக்கில் போடுவதற்குப் பதிலாக சிறையில் போட்டோம்

இவ்வாறு ஒரு மாநில முதலமைச்சர் தருக்கு மொழி பகன்றார்.

அந்த ஆணவமிக்க வாசகங்களைக் கேட்டுக் கொண்டு, தமிழ்நாட்டில் உள்ள இந்திரா காந்தியின் ஆலவட்டங்கள் எவ்வளவு நாக்குத் துடிப்புடன் அறைகூவல் விட்டார்கள் தெரியுமா?

கருணாநிதிக்குச் சிறை தயாராக இருக்கிறது என்று எச்சரித்தார் நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரன்!

மீண்டும் மிசா காத்திருக்கிறது என்று சண்டியர் பாணியிலே முண்டா தட்டிக் காட்டினார் ஒருவர்.

அமெரிக்க அடிவருடி அசோத் மேத்தா

கள்ள நாணயம் அதுல்யா கோஷ்

செல்லாக் காசு மொரார்ஜி

கள்ளக் குழந்தை ஜனதா கட்சி.

நடிகரும், அவர் கட்சியின் துணைப் பொதுச் செயலாளரும் மேடையில் உதிர்த்த வாசகங்கள் இவை!

நடிகர் ராமச்சந்திரன், கூட்டத்தில் பொது மக்களிடம் கேள்விகள் கேட்டுப் பதிலைப் பெறுவார். எப்படித் தெரியுமா?

நடிகர் : மொரார்ஜி தேசாயை யார் என்று உங்களுக்குத் தெரியுமா?

மக்கள் : தெரியாது.

நடிகர் : அசோக்மேத்தா என்பவரையாவது தெரியுமா?

மக்கள் : அவரையும் தெரியாது.

நடிகர் : இப்படி யாருக்கும் தெரியாதவர்கள் ஆட்சிக்கு வந்தால் நாடு என்ன ஆகும்? ஜனதா கட்சி வந்தால் பெண்கள் எல்லாம் கற்பழிக்கப் படுவார்கள்.

இந்த மாதிரியான தேர்தல் பிரச்சாரத்தை நடிகர் ராமச்சந்திரன் நடத்தினார்.

வரும் 24-ந் தேதிக்குப் பிறகு நடிகர் ராமச்சந்திரனுக்கு மொரார்ஜி என்றால் யார் என்றும், அசோக்மேத்தா என்றால் யார் என்றும் தெளிவாகத் தெரியும் என்று நம்பு வோமாக!

உடன்பிறப்பே, 1975 ஜூன் 26-ஆம் நாள் காலை அறிவிக்கப்பட்ட அவசரகால நிலை - இந்திய நாட்டு மக்களின் வலிமை மிக்க கரங்களால் உடைத்துத் தூளாக்கப்பட்டு விட்டது.

அவசரகாலச் சட்டம் தேவை என்பதற்கு ஆயிரம் காரணங்களைச் சொல்லிக் கொண்டிருந்த இந்திரா அம்மையார் அவர்கள், தான் தோற்றுப் போனதாக அறிவிக்கப்பட்ட அடுத்த விநாடியே அவசர அவசரமாக அந்த அவசர கால நிலையை ரத்து செய்யக் காரணம் என்ன?

தான் உருவாக்கிய பூதம் எங்கே தன்னை விழுங்கி விடுமோ என்ற அச்சம்! அர்த்தமற்ற திகில்! அம்மையார் ஆட்சியிலே இருந்தால் அவசர காலம் நல்லது - ஆட்சி போய்விட்டால், அவசர காலம் தேவையற்றது! என்னே நீதி! என்னே சமத்துவம்? என்னே நேர்மை? என்னே ஜனநாயகம்?

இந்த அடாவடிப்போக்கையும் ஜனநாயகம் என்று மெய்ப்பிக்க ஒரு கூட்டம், தமிழ்நாட்டில் உலவுகிறதே அதுதானே வேடிக்கை!

பாவம், அப்படிச் சொல்லித்தானே அவர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடிந்தது!

பச்சைப் பாம்பை பச்சைக்கொடி என்று எண்ணியது போல இந்திராவின் போலி ஜனநாயகத்தைப் பத்தரைமாற்றுத் தங்கமென நம்பி, தமிழ்நாட்டு மக்கள் மோசம் போய் விட்டார்கள். அருகிருந்து கொடுமைகளை அனுபவித்த வட இந்திய மக்கள், சர்வாதிகாரப் பாம்பை அடையாளங் கண்டு கொண்டு அடித்து வீழ்த்தி விட்டனர்.

நெருக்கடியின் கொடுமை நேரடியாக மக்களைத் தொடாதபடி நமது கழக ஆட்சி அவசரநிலை அறிவிக்கப்பட்ட பிறகும் ஏழெட்டு மாதங்கள் தமிழகத்தில் இருந்ததால் பாதுகாப்புக் கேடயமாகத் திகழ்ந்தது. ஆட்சி கலைக்கப்பட்ட பிறகும், வேதனைகளைத் தாங்கும் முக்கியப் பொறுப்பைக் கழகம் ஏற்றுக் கொண்டது.

கழகம், எல்லா முனைகளிலும் தாக்குதலைத் தாங்கியது.

பட்ட வேதனைகளுக்கெல்லாம் பரிசாக இன்று இந்திய நாட்டில் சர்வாதிகாரம் வீழ்ந்து ஜனநாயகத்தின் புத்தொளி பரவிடத் தொடங்கி விட்டது.

சர்வாதிகாரத்தை வீழ்த்தும் போரில் வெற்றி பெற்றோம். எனினும் கழகம், பெரும் இழப்புக்கு ஆளாகியிருக்கிறது.

தீப்பிடித்த வீட்டுக்குள் ஓடி, தொட்டிலில் கிடக்கும் குழந்தையைக் காப்பாற்றிய தாய்க்கு உடம்பெல்லாம் தீக்காயம் ஏற்பட்டு விடுவதில்லையா? அதைப்போல எண்ணிக் கொள்வோம் நமக்கேற்பட்ட இந்த இழப்பை!

மக்களாட்சித் தத்துவமெனும் மழலையைக் காப்பாற்றிய பெருமையில் நமக்கும் பங்கு உண்டல்லவா?

இந்தியாவின் தென் பகுதியில் தோல்வி! வட பகுதியில் பெரும் வெற்றி!

மொத்தத்தில் ஜனநாயகத்தின் வெற்றி!

இந்த வெற்றியினை விழா எடுத்துக் கொண்டாடுவோம்!

சர்வாதிகாரத்தைச் சாய்த்த ஜனநாயக வெற்றித் திருவிழா எடுத்திடுவோம்!

அது குறித்து நமது நாவலரின் வேண்டுகோளும், அறிவிப்பும் உனக்குக் கிடைக்கும்.

கிடைத்த வெற்றிகளுக்கும், இனி கிடைக்க இருக்கிற வெற்றிகளுக்கும் சேர்த்தெடுப்போம் ஜனநாயக விழா!

அன்புள்ள,

மு. க.

24-03-1977

387. வெற்றிகள் நம்மை நாடி வரும்!

உடன்பிறப்பே,

ஒரு கட்சியில் இணைந்து தன்னை உறுப்பினர் என்று சொல்லிக் கொள்பவராயினும், அந்தக் கட்சியில் முக்கிய பொறுப்புகளை வகிப்பவராயினும், அந்தக் கட்சியில் முன்னணியில் இருப்பவர்களாயினும், அவர்கள் எந்த அளவுக்கு அந்தக் கட்சிக்கு விசுவாசமுள்ளவர்களாகவும், உறுதி வாய்ந்த கொள்கைப் பிடிப்பு உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் அல்லது இருப்பார்கள் என்பது அந்தக் கட்சிக்கு ஏற்படும் சோதனைகள் அல்லது தோல்விகளைப் பொறுத்த ஒன்றாகும்.

நமது கழகத்துக்கு சென்ற ஆண்டு மிகக் கடுமையான சோதனை ஏற்பட்டது. அப்பொழுது சலனத்திற்கு ஆட்பட்டவர்களையும், இங்கிருந்து கொண்டு இன்னல்களை அனுபவிக்க இயலாது என்று அறுநீர்ப்பறவைகளாக ஆகிவிட்டவர்களையும், ஓடி விட்டவர்களையும், ஒதுங்கிவிட்டவர்களையும் நீ அறிவாய்.

அதற்குப் பிறகும், நமது கழகம் உறுதி குலையாமல் நிமிர்ந்தே நின்றது. எதிரிகள் வீசிய கணைகளைக் காட்டிலும், நண்பர்களாக நடித்துக் கொண்டிருந்தவர்கள் அருகேயிருந்தே முதுகில் குத்திய கட்டாரிகள் ஏற்படுத்திய வலியைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லைதான். அந்த வேதனையைத் தாங்கும் சக்தியை உன்னைப் போன்ற உடன்பிறப்புகள் இந்தக் கழகத்திற்கு ஒரு வரம்போல் வழங்கிக் காத்ததை நாடு மறக்காது. நானும் இறுதியாகக் கண்மூடும் வரையில் மறக்கவே மாட்டேன்.

சென்ற ஆண்டின் தொடக்கத்தில் கழகத்திற்குச் சோதனை! இந்த ஆண்டின் தொடக்கத்தில் கழகத்திற்குத் தேர்தலில் தோல்வி!

தோல்விச் செய்தியைத் தொடர்ந்து மறுநாளே நமது கழகத்தின் செயற்குழு கூடியது. செயற்குழு உறுப்பினர்கள்

மொத்தம் ஐம்பத்தி ஐந்து பேரில் நாற்பத்தி எட்டு பேர் உறுதி சிறிதும் தளராத உள்ளத்தினராய் வருகை தந்தனர். அவர்களில் சிலர் வேட்பாளர்களாக நின்று வெற்றி வாய்ப்பை இழந்தவர்கள். வெயிலில் அலைந்து தேர்தல் பணிகளில் ஈடுபட்டதால் அவர்களின் முகம்தான் கறுத்துப் போயிருந்ததே தவிர, ஏற்பட்ட தோல்வியினால் யாரும் களைத்துப் போனதாகத் தெரியவில்லை. காரணம், அவர்கள் எப்படியும் பதவிக்குப் போகவேண்டும், இல்லாவிட்டால் இந்த ஜென்மம் சாபல்யமடையாது என்று தவித்துக்கிடந்தவர்கள் அல்ல! இந்தியாவில் ஜனநாயகம் காப்பாற்றப்படவேண்டும் என்பதற்கானப் போராட்டத்தில் வெற்றி பெற்றோம் என்ற மகிழ்ச்சிப் பெருக்குடன், தமக்கேற்பட்ட விழுப்புண்களைத் தடவிக் கொண்டு செயற்குழுவுக்கு வந்தார்கள் அவர்கள்! அவர்கள், இந்தத் தேர்தல் தோல்வியை தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டுவிட்ட பெரும் அதிர்ச்சியாக எண்ணிடவில்லை. அவர்களும், மற்ற செயற்குழு உறுப்பினர்களும் சேர்ந்து, கழகத்தின் எதிர்காலப் பணிகள் குறித்து விவாதித்தோம்.

ஒரு கட்சிக்குச் சோதனையோ, தோல்வியோ ஏற்படும்போது அந்தக் கட்சிக்குரியோர் கூடி, கட்சியின் எதிர்காலம்பற்றி யோசிப்பதுதான் அவர்களுக்குக் கட்சியின் மீதுள்ள உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டக் கூடிய அடையாளம். அஃதன்றி, கட்சியில் உள்ள சிலர், தங்களின் சொந்த எதிர்காலம் என்ன என்பதுபற்றியும் - எங்கே போனால் சுகம் பெறலாம் என்பதுபற்றியும் யோசிக்கத் தொடங்குவார்களேயானால், அவர்கள்தான் இதுவரையில் அந்தக் கட்சியை மறைமுகமாக அரித்துக் கொண்டிருந்த கறையான்களாவார்கள்.

இந்த உண்மையை முழுமையாகவும், உளப்பூர்வமாகவும் உணர்ந்த நமது கழகத்தின் செயற்குழு உறுப்பினர்கள், கழக ஆக்கப் பணிகள் குறித்து அருமையான கருத்துகளை யெல்லாம் எடுத்துரைத்தார்கள். அவைகளைக் கழகத் தலைமை, ஆங்காங்குள்ள அமைப்புகளின் வாயிலாகச் செயல்படுத்தத் தொடங்கிவிட்டது என்பதையும் நீ அறிவாய் என நம்புகிறேன்.

விரைவில் சட்டப் பேரவைத் தேர்தல் வரக்கூடும் என்று செய்திகள் உலவுகின்றன. இந்தக் கடிதம் உன் கைக்குச் சேருமுன்,

அப்படியொரு அறிவிப்பு வரக்கூடுமெனவும் எதிர்பார்க்கலாம். அந்தத் தேர்தலில் நமது கழகத்தின் வெற்றி வாய்ப்பு எப்படியிருக்கும்? என்ற கேள்வி எழும்! நான் எதிர்பார்க்கிற கேள்வி அது! நிச்சயமாகச் சொல்கிறேன், நாடாளுமன்றத் தேர்தலின்போது இருந்த பாதகமான சூழ்நிலைகள் எதுவும் அப்போது இருக்காது.

கவர்னர் சுகாதியாவுக்கும், கருப்பையா மூப்பனாருக்கும் வித்தியாசம் தெரியாமல் இருந்தது இந்தத் தேர்தலில்!

இந்திரா காங்கிரஸ் கொடுத்த பல லட்ச ரூபாய்களும், இங்கே கவர்னரே வசூலித்துக் கொடுத்த பல லட்ச ரூபாய்களும் தொகுதிகளில் ஆறாகப் பெருக்கெடுத்தோடியது இந்தத் தேர்தலில்!

மிசா சட்டம் இருக்கிறது ஜாக்கிரதை! நெருக்கடி நிலை இருக்கிறது எச்சரிக்கை! தேர்தல் முடிந்த மறுநாளே சிறையில் தள்ளுவோம் என்று அதிகாரிகள் மூலமும், ஆளுங் கட்சி அணியின் பேச்சாளர்கள் மூலமும் மிரட்டல்கள் அவிழ்த்து விடப்பட்டு, எதிர்க்கட்சி அணியின் தொண்டர்களின் பணிகள் குந்தகப்படுத்தப்பட்டன இந்தத் தேர்தலில்!

இந்திரா ஒரு மேதை! அந்த அம்மையை யாராலும் அசைக்க முடியாது என்ற ஒரு அர்த்தமற்ற நம்பிக்கை இந்தப் பகுதி மக்களிடம் குடி கொண்டிருந்தது இந்தத் தேர்தலில்!

இவையனைத்தும் வரப்போகிற சட்டமன்றத் தேர்தலில் தலைகாட்ட முடியாது –

எல்லாம் சரி, சினிமாக் கவர்ச்சி ஒன்று இருக்கிறதே என்று அடுத்த கேள்வி பிறக்கும்.

சினிமாக் கவர்ச்சிக்கு நூற்றுக்கு இருபது எண்களுக்கு மேல் மதிப்பு தருவது தவறு என்பதே என் கருத்தாகும்.

தினமணி ஆசிரியரும், பழுத்த அரசியல்வாதிகளில் ஒருவரும், பத்திரிகைத் துறையில் பெரும் அனுபவம் படைத்தவருமான மதிப்பிற்குரிய சிவராமன் அவர்கள் கூட, அண்மையில் எழுதிய தலையங்கமொன்றில் 1967, 1971 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் சினிமாக் கவர்ச்சிக்கு வாக்குகள்

கிடைத்தது பற்றி எழுதியுள்ளார். நடிகர் ராமச்சந்திரன் கூட தனது சினிமாப் புகழால்தான் தி.மு.க. ஆட்சிக்கு வந்தது என்று பெருமை அடித்துக் கொள்கிறார்.

கலைக்கு நாம் விரோதிகள் அல்ல! கலைஞர்களுக்கு ஆரம்ப கால முதலே நாம்தான் நண்பர்கள்! அவர்கட்கு மதிப்பு வழங்கியவர்கள்கூட! அரசியலில் கலைத் தொடர்பு, சேலைக்கு முந்தானை போல இருக்கவேண்டும். முந்தானையில்லாமல் சேலையை உடுத்தலாம். சேலையின்றி முந்தானையை மட்டும் உடுத்திக் கொண்டு உலவிட இயலாது. கழகம், சில நடிகர்களுக்கு அதிகப்படியான முக்கியத்துவம் கொடுத்துவிட்ட ஒரு தவறைச் செய்தது உண்மைதான்! அதற்காக அவர்களால்தான் 1967-லும் 1971-லும் கழக ஆட்சியே அமைந்தது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

1967-ல் நடிகர் ராமச்சந்திரன் சுடப்பட்ட போது, மருத்துவமனையில் எடுக்கப்பட்ட புகைப்படம் போட்ட சுவரொட்டிகளை அவர் போட்டியிட்ட பரங்கிமலைத் தொகுதிக்காகத்தான் அச்சடித்தார்கள். வேறு சில தொகுதிகளிலும் அவற்றில் ஒன்றிரண்டு ஒட்டப்பட்டிருக்கலாம். அதே சமயம் 1967-ல் பரங்கிமலைத் தொகுதியில் நடிகர் ராமச்சந்திரன் வெற்றி பெற கழகத்தின் முன்னணி வீரர்கள் எத்தனை பேர் அரும்பாடு பட்டார்கள்? கழகச் சொற்பொழிவாளர்கள், கழகத் தலைவர்கள் எத்தனை பேர் அந்தத் தொகுதியில் கருத்து விளக்கமளித்தார்கள்? இவைகளைத் தவிர அவர் அந்தத் தொகுதியில் செலவிட்ட பணம் எவ்வளவு? இவற்றையெல்லாம் மறைத்து விட முடியாது. 1971-ஆம் ஆண்டு தேர்தலில் மொத்தமுள்ள இருநூற்றி முப்பத்து நான்கு தொகுதிகளில் அவர் சென்று வாக்கு கேட்ட தொகுதிகள் நூற்றுக்கும் குறைவான தொகுதிகளேயாகும்.

அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் மறந்துவிடக் கூடாது! 1971-க்குப் பிறகுதான் புதுவையில் அரியாங்குப்பம் தொகுதியில் இடைத் தேர்தல்! அரியாங்குப்பம் தொகுதி சில ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட தொகுதி! அங்கே நடிகர் ராமச்சந்திரன் வீதி வீதியாகச் சென்று வாக்கு கேட்டார். முடிவு என்ன? தி.மு.கழகத்தின் வலிவு, வலது கம்யூனிஸ்டு ஆதரவு, முஸ்லிம் லீக் உதவி, நடிகர் ராமச்சந்திரன் பிரச்சாரம் எல்லாம்

இணைந்திருந்தாலும் கூட கழக வேட்பாளர் வெற்றிபெற முடியவில்லையே ஏன்?

1972-ல் நடிகர் ராமச்சந்திரன் கழகத்தைவிட்டு வெளியேறுகிற சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு வெளியேற்றப்பட்டதும் தமிழகத்தில் தி.மு.க.வுக்கு எதிராக உள்ள கட்சிகள் அனைத்தும் அந்த நடிகரை உச்சிமேல் ஏற்றி உட்காரவைத்து, அவரைப்போல் புனிதர் கிடையாது - புத்தரே அவர்தான் என்று செய்த பிரச்சாரத்தின் காரணமாக அவரது சினிமாக் கவர்ச்சி புதுமெருகேறிப் பாமர மக்களை ஈர்த்திடத் தொடங்கியது. கழகத்தின் மீதுள்ள காழ்ப்பின் காரணமாக மாற்றுக் கட்சியினர் அவரை மாற்றுக் குறையாத் தங்கமெனப் போற்றிப் புகழ்ந்தனர். மத்திய அரசில் இருந்த கட்சிக்கும் அவர் தேவைப்பட்டார் கழகத்தைப் பிளந்திட! வீரபாண்டிய கட்டபொம்மனை வீழ்த்த வெள்ளையருக்கு ஒரு எட்டப்பன் கிடைக்கவில்லையா, அதைப் போல!

வீரபாண்டியன் வீழ்ந்தான் எனினும், வரலாற்றில் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறான்.

நமது கழகமோ, வீழ்ந்துவிடாது! நிலைத்து நிற்கும். தொடர்ந்து தொண்டினைச் செய்யும். தேர்தல் வெற்றி தோல்விகள் ஒரு கட்சியை நிலைகுலையச் செய்து விடுமேயானால் அது ஒரு கட்சியாக இதுவரையில் இயங்கியதே தவறு என்று ஆகிவிடும். எனவே, நூற்றுக்கு இருபது எண்களே பெறத்தக்க சினிமாக் கவர்ச்சியால் நமது எதிர்கால வெற்றியினைத் தடுத்து விட முடியாது. மத்திய அரசின் பணபலம், அதிகார பலம், நெருக்கடி நிலை பின்னணி, மிசா மிரட்டல், ஆகிய இத்தனைப் பாதுகாப்புகளுடன் இந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற சினிமாக் கவர்ச்சி, வர இருக்கும் சட்டசபைத் தேர்தலில் தமிழக முழுவதும் வடசென்னைகளையும், மத்திய சென்னைகளையும்தான் சந்திக்கும் என்பதை நான் திடமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடன்பிறப்பே, அந்த வெற்றிக்காகக் காத்திரு! ஓயாது பணியாற்று! நிலை விளக்கம் தந்திடு! அரசியலில் அவசரம் கூடாது! விரைவு தேவை! விரைவுக்கும் அவசரத்திற்குமுள்ள வேறுபாட்டை உணர்ந்து கொள்!

இதோபார், சென்ற ஆண்டு இதே நாளில் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களைக் குண்டர் என்றும் கொள்ளைக்காரர் என்றும், தேசத் துரோகி என்றும் வர்ணித்த வானொலி, இன்றைக்கு இதோ கேளீர்; ஜெயப்பிரகாசரின் குரலை! என்றல்லவா ஒலிபரப்புகிறது!

அவருக்கு எத்தனை ஆண்டுகாலப் போராட்டம்! எவ்வளவு வேதனை! எத்துணை தியாகம்! அரசியலில் அவர் அவசரப்படாததால் ஏற்பட்ட வெற்றியல்லவா இது!

விரக்தி அடையாமல், விரைந்து பணியாற்றினால் - வெற்றிகள் நம்மை நாடி வரும்!

அன்புள்ள,

மு. க.

25-03-1977

388. இரட்டை நாக்குச் சின்னத்தார், இவர்!

உடன்பிறப்பே,

"இந்திரா காந்தியின் ஆட்சி இன்றுடன் முடிவுற்றது" என்று செய்தி அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து நடிகர் ராமச்சந்திரன் கட்சியினரும், அந்தக் கட்சியின் எடுபிடி ஏடுகளும் தங்களுக்கு ஏற்பட்டுள்ள பலமான அதிர்ச்சியிலேயிருந்து மீள முடியாமல், தவித்துக் கொண்டிருக்கிற காட்சியைக் காண முடிகிறது.

அந்நியச் செலாவணி மோசடி, வருமானவரி ஏய்ப்பில் பழைய அரசுடன் செய்துகொண்ட சமரச உடன்பாடு, ச்டையப்ப வள்ளலுடன் சேர்ந்து பரங்கிமலைப் பாரிவள்ளல் நடத்திய தங்கக் கடத்தல் வியாபாரம், திண்டுக்கல் வைரத் திருடர்களின் கதை, கப்பல் வியாபாரக் கமிஷன் பேரம், மந்திரக் கோலருக்குச் சென்னையில் உள்ள மாளிகையின் மர்மம், வங்கியொன்றில் ஏராளமான தொகை "ஓவர்டிராப்ட்" பெற்று தேர்தல் செலவு செய்த அநியாயம், கவர்னரின் மாளிகை காங்கிரஸ் அலுவலகமாகவும், நடிகர் கட்சி அலுவலகமாகவும் மாறிய கொடுமை, இவைகளைப் போன்ற பல விவகாரங்கள் விசாரணைக்கு விரைவில் வர இருக்கின்றன. அதனால் துடித்துப்போன நிலையில் அவர்கள் கை பிசைந்து நிற்கிறார்கள்.

நடிகர் கட்சித் தலைவர் புதிய பிரதமர் மொரார்ஜி அவர்களுக்குக் கொடுத்துள்ள தந்தியில் கருணாநிதியின் மீதுள்ள விசாரணைகள் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறாராம். அந்தச் செய்தியைப் பார்த்து நாம் பயந்து நடுங்கி விடுவோம் என்று நடிகர் நப்பாசை கொள்கிறார் போலும்!

விசாரணைக் கமிஷன் தொடர்ந்து நடக்க வேண்டுமென்று தான் நாமும் விரும்புகிறோம். அதே நேரத்தில் நம் சார்பில் வழக்கறிஞர் சாந்தி பூஷண் அவர்கள் சர்க்காரியா கமிஷன் முன்னே வைத்துள்ள கோரிக்கைகள் ஏற்கப்பட்டு அந்த அடிப்படையில்

அந்த விசாரணை தொடர வேண்டும் என்பதே இப்போதும் நாம் வலியுறுத்துவதாகும்!

புகார் மனு கொடுத்த நடிகர் ராமச்சந்திரனும், கல்யாண சுந்தரம், மனோகரன் வகையறாக்களும் குறுக்கு விசாரணைக்கு வந்தாக வேண்டும். அதே போல முன்னூறு சாட்சிகள் அந்த விசாரணைக் கமிஷனுக்காகத் தயாரிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த முன்னூறு சாட்சிகளையும் நமது தரப்பில் குறுக்கு விசாரணை செய்திட அனுமதித்திட வேண்டும். இந்த அடிப்படையில் விசாரணை நடைபெறுமேயானால், உண்மையின் ஒளியை உலகிற்குக் காட்டிட இயலும். அப்படியில்லாமல் நெருக்கடி நிலை, மிசா சட்டம் இப்படிப்பட்ட பயங்கரப் பின்னணியில் சர்க்காரியா விசாரணை இதுவரை நடைபெற்றதும் - முதல்கட்ட அறிக்கை யொன்றை வெளியிட்டிருப்பதும் - நமது சார்பில் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையும், புகார் கொடுத்தவர்களைக் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையும் ஏற்கப்படாமல் கமிஷனின் அறிக்கை தரப்பட்டிருப்பதும் - எந்த வகையில் முறையானது என்பதை இன்றைய மத்திய அரசு ஆராய்ந்து பார்த்திடக் கடமைப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் நமது கோரிக்கைகள் ஏற்கப்பட்டு விசாரணைக் கமிஷன் நடைபெறுமேயானால் அதில் நாமும் கலந்து கொண்டு உண்மைகளை உலகிற்கு உணர்த்த முடியும்.

அதற்கு மாறாக "பழைய குருடி! கதவைத் திறடி!" என்பது போல விசாரணைக் கமிஷன் நடைபெற்று அறிக்கைகளைத் தரவேண்டுமென்று நடிகர் ராமச்சந்திரன் விரும்புகிறார் பாவம்!

அந்த அவசரத்தில் தான் பிரதமர் மொரார்ஜிக்கு தந்தியடித்துள்ளார்! என் செய்வார் பாவம்! அவர் நாடி நரம்புகள் இப்போது தந்தியடித்துக் கொண்டிருக்கின்றன. அதன் விளைவே இந்தத் தந்தி! மொரார்ஜியை வாழ்த்துகிறாராம்! அடடா! என்னே அரசியல் நாகரிகம்!

ஒவ்வொரு கூட்டத்திலும் "மொரார்ஜி என்பவரைத் தெரியுமா?"

என்று கேட்டு, ரசிகப் பெருமக்களை "தெரியாது" என்ற பதிலை - ஒத்திகைக்கேற்பச் சொல்ல வைத்த,

நடிகர் ராமச்சந்திரன் இப்போது மொரார்ஜியை யார் என்று தெரிந்து கொண்டு வாழ்த்துத் தந்தி அடிக்கிறார்.

"ஜெயப்பிரகாசரையும் மற்றவர்களையும் இந்திரா காந்தி தூக்கிலே போடாமல் சிறையிலேதான் போட்டார்கள்" என்று மேடைக்கு மேடை பேசியவர்கள், நாட்டு விடுதலைக்காகப் போராடிய பழம்பெரும் தலைவர்களைக் கொள்ளைக்காரர்கள் என்றும், குண்டர்கள் என்றும், அந்நிய நாட்டு ஏஜெண்டுகள் என்றும், தேசத் துரோகிகள் என்றும் ஏசியவர்கள், இன்று அலறி அடித்துக் கொண்டு வாழ்த்துத் தந்தி அடிக்கிறார்கள். மொரார்ஜியின் அருமை பெருமைகளை அருகிருந்து பார்த்தவர்களைப் போலப் பாராட்டி எழுதுகிறார்கள்.

இரட்டை இலைக்குப் பதிலாக இரட்டை நாக்கினைச் சின்னமாக வைத்துக் கொள்ள வேண்டியவர்கள்!

உடன்பிறப்பே, இவர்களின் வேடம் கலையும் நாள் வெகு தொலைவில் இல்லை. விரைவில் எதிர்பார்ப்போம் அந்தத் திருநாளை!

அன்புள்ள,

மு. க.

26-03-1977

389. நீடித்த பதவியும் - நடத்திய பணியும்!

உடன்பிறப்பே,

தமிழ்நாடு ஆளுநர் மோகன்லால் சுகாதியா அவர்கள் ராஜபவனத்தில் நிருபர்களைச் சந்தித்து பல தகவல்களைத் தந்துள்ளார். அவற்றில் நம்மையெல்லாம் ஆச்சரியத்தில் மூழ்கவைக்கும் தகவல் ஒன்றும் வெளியாகியுள்ளது.

“கவர்னராக நியமனம் பெற்று ஐந்தாண்டுகள் ஆந்திராவிலும், கர்நாடக மாநிலத்திலும் பணியாற்றினேன். இந்த ஆண்டு பிப்ரவரியிலேயே எனது பதவிக்காலம் முடிவுற்றது. பதவியை நீடித்து உத்தியோகப் பூர்வமான முறையில் உத்தரவு எதுவும் வரவில்லை. எனினும் கவர்னராக நீடித்து வந்தேன்.”

கவர்னர் சுகாதியா அவர்கள் நிருபர்களிடம் மேற்கண்ட தகவலைக் கூறி, இது எல்லா ஏடுகளிலும் வெளியாகியுள்ளது. வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டுள்ளது.

பிப்ரவரி மாதத்துடன் பதவிக்காலம் முடிவுற்ற ஒருவர், அதற்குப் பிறகும் எந்தவித உத்யோகப்பூர்வமான உத்தரவும் வராமல் அந்தப் பதவியில் எப்படி நீடிக்க முடிந்தது என்பது புரியாத புதிராக இருக்கலாம்.

தேர்தல் பணிகளைக் கட்சி ரீதியாக ஆற்றுவதற்காக, வசதியாக இருக்கும் பொருட்டு - அப்படி ஒரு உத்திரவு அவரது பதவியை நீடித்துப் போடப்படாமல் விடப்பட்டு விட்டதா? என்ற சந்தேகமும் ஏற்படலாம்.

அப்படியானால், இந்த இடைக்காலத்தில் அவர் அரசாங்க “பைல்”களைப் பார்த்ததும், அவற்றில் கையெழுத்துகள் இட்டதும் கவர்னர் என்ற முறையிலா? அல்லது வெறும் சுகாதியா என்ற நிலையிலா? என்ற ஐயமும் எழலாம்.

கவர்னர் என்ற முறையிலோ, சுகாதியா என்ற முறையிலோ, “பைல்”களில் அவர் கையெழுத்திட்டிருப்பாரேயானால், அவரால்

பிறப்பிக்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஆணைகள் செல்லத் தக்கவைகள் தானா? என்ற சட்டப் பிரச்சினை கூட கிளம்பலாம்.

ஆனால் இவைகளுக்கெல்லாம் விடையளிக்கும் முறையில் "அரசியல் அமைப்புச் சட்டம், பிரிவு 156-3 விளக்கப்படி புதிதாக ஒரு ஆளுநர் நியமிக்கப்பட்டு பொறுப்பேற்றுக் கொள்ளும் வரையில் பழைய ஆளுநர் தொடர்ந்து பதவியில் நீடிக்க வேண்டும்" என்று இருக்கிறது. இப்படி ஒரு நிலை அரசியல் அமைப்புச் சட்டத்தில் இருக்கும் போது கவர்னர் சுகாதியா அவர்கள், நிருபர்கள் கூட்டத்தில், தான் பதவிக் காலம் முடிந்த பிறகும் பதவியில் நீடித்துக் கொண்டிருப்பதை ஒரு புதிர் போலச் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் என்ன?

அரசியல் சட்ட நுணுக்கம் தெரியாத பொதுமக்களைக் குழப்பத்தில் ஆழ்த்த வேண்டிய காரணம் என்ன?

கடந்த பிப்ரவரி 28-ந் தேதி கூடிய மாநிலங்கள் அவையில் தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியை நீடிக்க ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அந்த ஒரு தீர்மானத்திற்காகவே முக்கியமாக மாநிலங்களவை கூட்டப்பட்டது. ஆனால் அதனையொட்டி கவர்னர் சுகாதியாவின் பதவிக்காலம் நீடிக்கப்படாதது எந்த அடிப்படையில்? அல்லது எந்தவிதமான பதவிக்குரிய வாக்குறுதி அவருக்கு மேலிடத்தால் அளிக்கப்பட்டிருந்தது? இவை தெளிவாக்கப்பட வேண்டும்.

தேர்தல் நேரத்தில் கவர்னர் என்ற அந்தஸ்துகளுடனும், அதிகாரிகள் புடைசூழ்ந்த நிலையிலும் - எந்தவித அரசாங்க நிகழ்ச்சி நிரலும் இல்லாமல் அவர் பல மாவட்டங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்த நோக்கம்தான் என்ன? மேலிடத்தார் உறுதியளித்திருந்த பரிசைப் பெறத்தானே! அதனால் தானே அவருக்குப் பதவி நீடிப்பு செய்யப்படாமல் இருந்தது?

பிப்ரவரி மாதத்துடன் பதவி முடிகிறது. அதற்குப் பிறகு பதவியில் நீட்டிக்கலாம் என்ற அதிகார பூர்வமான ஆணை பிறப்பிக்கப்படவில்லை. எனினும் அவர் தொடர்ந்து கவர்னர் என்ற அந்தஸ்தில் தேர்தல் பணியாற்றியிருக்கிறார். இன்னமும் அந்தப் பதவியில் இருக்கிறார். இதை அரசியல் சட்டம் அனுமதிக்கிறது.

ஒரு "அரசு அலுவலாளரின்" பணிக்காலம் முடிந்து ஓய்வு பெறுகிறார் என்றால், அந்தக் குறிப்பிட்ட தேதிக்கு மேல் ஒரு

நாள்கூட அந்தப் பணியில் அவர் இருக்க முடியாது. மேலும் மூன்று மாதமோ ஆறு மாதமோ பதவி நீடிப்பு அளிக்கப்பட்டிருப்பதாக, முன்னதாகவே ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் மாத்திரமே அந்த அலுவலாளர் பணியில் இருந்திட இயலும். கவர்னர் பதவிக்கு இது விதிவிலக்கு!

தன் பதவி நீடிக்கப்படாத அந்த இடைக் காலத்தை திரு.சுகாதியா அவர்கள் வீணாக்கிவிடவில்லை. அவரே கூறியிருப்பது போல "கட்சி விசுவாசத்தில் எந்தவித மாறுபாட்டுக்கும் இடமில்லை" என்ற அளவில், அவர் தனது கட்சிக்காகவும், தன் கட்சியுடன் கூட்டு சேர்ந்த கட்சிகளுக்காகவும் தேர்தல் பணிகளை மிகத் தீவிரமாக ஆற்றியுள்ளார்.

> "கிண்டி கவர்னர் மாளிகையைக் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அலுவலகமாக நீங்கள் மாற்றி விட்டதாக குற்றம் சாட்டப் பட்டுள்ளதே?"

என்று நிருபர்கள் கேட்கிறார்கள்.

> "இந்தச் சர்ச்சையில் நான் இறங்கத் தயாராயில்லை."

என்று அவர் விடையளித்திருக்கிறார்.

நாம், கேள்விப்பட்ட வரையில் அரசியலில் இருந்து சில மாதங்கள் ஒதுங்கியிருந்த ஒருவரை இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேர்த்த நிகழ்ச்சியே கவர்னர் மாளிகையில்தான் நடைபெற்றிருக்கிறது எனத் தெளிவாகத் தெரிய வருகிறது.

உடன்பிறப்பே, சுதந்திரம் பெற்றபிறகு முப்பது ஆண்டுக்கால தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் எந்த ஒரு கவர்னரும், தனது பதவியைக் கட்சியின் தேர்தல் வெற்றிக்காகத் தவறான முறையில் பயன்படுத்திய செய்தியை இவருக்கு முன்பு நாம் கேள்விப் பட்டதே இல்லை.

இனியாவது இத்தகைய முறைகேடுகள் முளைத்திடாமல் பார்த்துக் கொண்டால்தான் ஜனநாயகம் சீரான பாதையில் நடைபோட முடியும்.

அன்புள்ள,

மு. க.

27-03-1977

390. "நெருக்கடி, எத்தனை நெருக்கடி"!

உடன்பிறப்பே,

"This Government and those who are running this Government should not arrogate to themselves the monopoly of patriotism, and consider that others do not have patriotic instincts at all. Therefore I would demand of this Government that they should forthwith lift this Emergency and this DIR, and release those who are kept in jail for a long number of years. And unless and until they do that, they would not have a claim to decency and democracy."

இதன் பொருளைச் சுருக்கிக் கூறுகிறேன்.

"இந்த அரசோ அரசை நடத்துபவர்களோ, நாட்டுப் பற்றுக்குத் தாங்கள் தான் மொத்தக் குத்தகைதார்கள் என்றும் மற்றவர்கள் நாட்டுப் பற்று இல்லாதவர்கள் என்றும் கருதுவது பெருந்தவறு! அதனால்தான் நெருக்கடி நிலையையும், பாதுகாப்புச் சட்டத்தையும் ரத்து செய்து நெடுங்காலமாக சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கோருகிறேன். இந்த வேண்டுகோளை நிறைவேற்றாவிட்டால் ஜனநாயகத்தைப் பற்றியும் அரசியல் நோ்மையைப் பற்றியும் பேசுவதற்கு உங்களுக்கு அருகதையில்லை."

எத்துணை ஆணித்தரமான சொல்லடுக்குகள் காண்டீபத்திலிருந்து கிளம்பும் கணைகளைப் போல் கிளம்புகின்றன பார்த்தாயா?

இந்த அழுத்தம் திருத்தமான வார்த்தைகளுக்குச் சொந்தக் காரராக யார் இருக்க முடியுமென்று கருதுகிறாய்?

நம்மை ஆளாக்கிய அண்ணன் தொடுத்த அம்புகள்தான் இவைகள்!

அண்ணனா? நெருக்கடி நிலைபற்றியா? இதை எப்போது பேசினார்? என்று வினவிடத் தோன்றும் உனக்கு!

ஆம்! நம் அண்ணனே தான்! நெருக்கடியைக் கண்டித்து அதைத் திரும்பப் பெறுமாறு கூறினார். நாட்டுப்பற்று உங்களுக்கு மட்டும் ஏகபோக உரிமையல்ல! எங்களுக்கும் நாட்டுப்பற்று உண்டு என்பதை அறிவீர் எனச் சாடினார். நெருக்கடியை ரத்துச் செய்யாமல், பாதுகாப்புச் சட்டங்களைத் தூக்கி எறியாமல், அரசியல் கைதிகளை விடுவிக்காமல், ஜனநாயகத்தைப் பற்றிப் பேச அரசு புரிவோர்க்கு தகுதி கிடையாது என்று பிரகடனம் செய்தார்.

இத்தனையும் எங்கே? எப்போது? என்று கேட்பாய்! டெல்லி மாநிலங்கள் அவையில் 1966 பிப்ரவரி மாதம். இந்திராகாந்தியின் அரசைப் பார்த்துத்தான் அண்ணா அவர்கள் இவ்வாறு கண்டனம் பொழிந்தார்.

1975-ஆம் ஆண்டு இந்திராகாந்தி அறிவித்த நெருக்கடி நிலை உள்நாட்டு அபாயத்தைத் தடுப்பதற்கு என்ற அடிப்படையில் நடைமுறைக்கு வந்ததாகும்.

1966-ஆம் ஆண்டு இருந்த நெருக்கடி நிலை, வெளி நாட்டு அபாயத்தைத் தடுப்பதற்கு என்பதற்காக அதற்கு முன்பு சில ஆண்டுகளுக்கு முன்பு அறிவிக்கப்பட்டதாகும்.

இந்த "வெளிநாட்டு அபாய நெருக்கடி நிலை" கூடத் தேவையில்லையென்று 1966-ஆம் ஆண்டிலேயே எதிர்க்கட்சிகள் குரல் கொடுத்தன. அதில் அப்போது "ராஜ்ய சபை"யில் ஓங்கி ஒலித்த குரல்தான் அண்ணாவின் குரல். ஆனால் அதற்கு இந்திரா அரசு, இணங்கவில்லை. வெளிநாட்டு அபாய நெருக்கடிநிலை தொடர்ந்து நீடித்தது. அதனை நீக்கவேண்டுமென்று 1974-75-ஆம் ஆண்டுகளில் நாட்டில் உள்ள எல்லா எதிர்க்கட்சிகளும் வலதுகள், நடிகர் கட்சி தவிர பொதுக் கூட்டங்கள் வாயிலாகத் தீர்மானங்களை நிறைவேற்றி இந்திரா அரசுக்கு அனுப்பி வைத்தன. அதற்குக் கிடைத்த பலன்தான், "ஒட்டகக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்பது போல வெளிநாட்டு அபாய நெருக்கடி நிலையுடன் கூட, உள்நாட்டு அபாய நெருக்கடி நிலையையும் அறிவித்து 19 மாத காலம் இந்தியாவைப் படாத பாடு படுத்திய பயங்கர நிகழ்ச்சியாகும்.

இந்திராவின் சர்வாதிகார ஆட்சி முடிந்து, ஜனதா ஆட்சி அமைகிற செய்தியைத் தொடர்ந்து "உள்நாட்டு அபாய நெருக்கடி நிலை" ரத்து செய்யப்பட்டது.

இன்று வந்துள்ள செய்தியின் படி, 1966-க்கு முன்பு அறிவிக்கப்பட்டு இதுவரை இருந்து வந்த "வெளிநாட்டு அபாய நிலை" நெருக்கடியும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

அண்ணா அவர்கள் 1966-ல் எழுப்பிய குரலுக்குப் பதினோரு ஆண்டுக் காலம் கழித்து பதில் கிடைத்திருக்கிறது.

"வெளிநாட்டு அபாய நெருக்கடி" இனியும் தேவையில்லை என்று எதிர்க்கட்சிகள் முழங்கிய போது நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்களைப் பார்த்து ஜனநாயக விரோதிகள், தேசத் துரோகிகள், வெளிநாட்டு ஏஜெண்டுகள் என்று ஏடுகளில் அறிக்கைகள் விடுத்தார்.

தேசத் தலைவர்களைக் கைது செய்து, ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் அரசியல்வாதிகளை விசாரணையின்றிச் சிறையிலே அடைத்து, பத்திரிகைகளின் நியாயமான சுதந்திரங்களைத் தடுத்து நிறுத்தி, எழுத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் போன்ற உரிமைகளை முடக்கி, உள்நாட்டு அபாயம் என்ற பெயரால் இந்திரா காந்தி அவர்கள் மற்றொரு நெருக்கடி நிலையை மக்கள் மீது திணித்த போது அண்ணா வழி நின்று நமது கழகம் அதனை எதிர்த்துத் தீர்மானம் போட்டது! அதன் காரணமாகவே ஆட்சியும் கலைக்கப்பட்டது! ஆனால் அண்ணா பெயரால் கட்சி நடத்தும் நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள், "நெருக்கடி நிலை நாட்டுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்றும், ஜெயப்பிரகாஷ், மொரார்ஜி போன்ற தேசத் தலைவர்களைத் தூக்கிலே போடாமல் சிறையிலே போட்டதே இந்திராவின் ஜனநாயகப் பண்புக்கு அடையாளம்" என்றும் மேடைகளில் பேசியும், ஏடுகளில் எழுதியும் வருவதைத் தனது கடமையாகக் கொண்டார்.

இந்திரா காந்தி தேர்தலில் ஊழல் நடந்தது என்று அலகாபாத் நீதிமன்றம் அறிவித்து இந்திரா காந்தி ஆறு வருடம் எந்தத் தேர்தலிலும் நிற்கக் கூடாது என்று தடை விதித்தது. உடனே பாராளுமன்றத்தைக் கூட்டி தேர்தல் சட்டத்தையே தலைகீழாக மாற்றிக் கொண்டு அந்த திருத்தப்பட்ட சட்டத்தின் துணையோடு சுப்ரீம் கோர்ட்டில் இந்திரா காந்தி, தனக்குச் சாதகமான தீர்ப்பைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. "சட்டத்தின் முன் அனைவரும் சமம்" என்ற கொள்கைக்குச் சமாதி கட்டினார் இந்திராகாந்தி! இந்த நீதியற்ற போக்கை நாடு கண்டித்தது. நமது கழகமும் கண்டித்தது. ஆனால் இந்திரா காங்கிரசாரும், நடிகரும் இணைந்து கொண்டு

அலகாபாத் நீதிபதி மீது அவதூறு அர்ச்சனைகளைச் செய்தார்கள். இந்திரா அம்மையார் செய்தது தான் 'ஜனநாயகம்' என்று நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் மேடை போட்டுக் கொக்கரித்தார்.

நெருக்கடி நிலையை அறிவித்து விட்டு எல்லாத் தலைவர்களையும் கைது செய்துவிட்டு, அந்தச் செய்தி வெளியே செல்லாமல் இருக்க டெல்லியில் உள்ள தினசரி இதழ்களின் அலுவலகங்களில் மின்சாரத் துண்டிப்பைச் செய்து எந்தப் பத்திரிகையும் மறுநாள் வெளிவராமல் இந்திராகாந்தி தடுத்து நிறுத்தினார். இந்தச் செயல் ஜனநாயகத்தின் உச்சம் என்று நடிகர் கட்சித் தலைவர் வியந்து பாராட்டினார். வெளிநாட்டிலிருந்து வரும் ஏடுகள் தடுக்கப்பட்டன. அதன் நிருபர்கள் வெளியேற்றப்பட்டனர். எதிர்க்கட்சிகள் பலவற்றை தடை செய்து அவற்றின் தலைவர்களைக் கைது செய்தனர். இது நியாயமா? என்று கேட்ட இந்திரா காங்கிரஸ் எம்.பி.க்கள், எம்.எல்.ஏக்கள் கூட "மிசா"க் கைதிகளாயினர். சிறையிடப்பட்ட அரசியல் வாதிகள் சிறைக்குள் தாக்கப்பட்டனர். நூற்றுக் கணக்கானவர் சிறையில் மாண்டனர். இறந்தவர் சிலரின் பிணங்கள் கைவிலங்குடன் வீட்டாருக்குத் தரப்பட்டன.

இந்த இட்லரிச நடவடிக்கைகளை நியாயப்படுத்த நெருக்கடி நிலைப் பிரகடன அங்கீகாரத்திற்கு நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடைபெற்றது. 1976 ஜூலை 23-ந் தேதி நடைபெற்ற வாக்கெடுப்பின் போது, கொடுமையான நெருக்கடிச் சட்டத்தை ஆதரித்து வலது கம்யூனிஸ்டுகளும், நடிகர் கட்சியினரும் வாக்களித்தனர். இதுவே அன்னை இந்திராவின் ஜனநாயக வழிகாட்டி என்று நடிகர் ராமச்சந்திரன் அறிக்கை விடுத்தார்.

நெருக்கடியைத் தொடர்ந்து வந்த சட்டங்களால் நீதி மன்றங்களும் கட்டுப்படுத்தப்பட்டன. நெருக்கடி நிலையை ஆதரிக்காத தமிழ்நாடு கழக அரசும், குஜராத் பழைய காங்கிரஸ் அரசும் கலைக்கப்பட்டன. தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி அறிவிக்கப்பட்டது. கலைத்ததற்குக் காரணம் கண்டுபிடிக்க, வழக்குகள் ஜோடிக்கப்பட்டன. விசாரணைகள் விளம்பரப் படுத்தப் பட்டன. நெருக்கடி நிலையை எதிர்த்த ஜார்ஜ் பொன்னாண்டஸ் மீது வெடி மருந்துச் சதி வழக்கு! சென்ற வாரம் வரையில் அவர் கைகளில் விலங்கு! இந்திரா அரசை எதிர்த்த அகாலி தளத் தலைவர் பாதல் மீது விசாரணைக் கமிஷன்! கிரிமினல் வழக்கு! அவ்வாறே நந்தினி சத்பதி மீது நடவடிக்கை எடுக்க முயற்சிகள்!

ஜார் அரசனின் ரஷ்யாவையும், இட்லரின் ஜெர்மனியையும், முசோலினியின் இத்தாலியையும், இந்திராவின் ஆட்சி மிஞ்சிவிட்ட அக்கிரமத்தைக் காணச் சகிக்காத பிரபாகர் சர்மா என்ற வினோபாவின் சீடர், அக்டோபர் 11-ஆம் நாள் வார்தாவில் தீக்குளித்து மாண்டுவிட்டார் என்ற செய்தி! அதையும் அப்போது ஏடுகளில் வெளியிடத் தடை! தீக்குளித்து மாண்ட பிரபாகர் சர்மா, இந்திராகாந்திக்கு எழுதிய கடிதத்தில் இறுதியாகக் கீழ்க்கண்ட வரிகளைக் குறிப்பிட்டிருந்தார்.

"உங்களுடைய 'மிசா' சட்டம் மக்களைக் கோழைகளாக்கி விட்டது. நீதி, நியாயத்துக்கு இடமில்லை, நீதிபதிகள் உங்களது அடிமைகளாக ஆக்கப்பட்டுவிட்டார்கள்! காந்தியடிகள் "யங் இந்தியா" ஏட்டில் குறிப்பிட்டது போல உரிமையுடன் வாழ முடியாத ஒரு ஆணோ பெண்ணோ இறப்பது மேல், என்ற முடிவுக்கு வந்து விட்டேன். நான் உங்களுக்கு கடிதம் எழுதுவது கூட ஒரு குற்றமாகலாம். எனவே, உங்களுடைய பாபகரமான பரிபாலனத்திலிருந்து விடுபடுகிறேன்."

இந்த மடலைக் கண்டும் மனங் கலங்காத இந்திரா காந்தியை மங்கையர்குலதிலகம் என்றும், வீரமாதேவி என்றும், அவர் இல்லையேல் இந்தியா இல்லை யென்றும் நடிகர் ராமச்சந்திரன், கடந்த 22-ஆம் தேதி வரையில் விமர்சித்துக் கொண்டிருந்தார். இந்திரா காந்தியின் இத்தகைய நடவடிக்கைகள் தான் இந்திய ஜனநாயகத்தின் ஏற்றமிகு அடையாளங்கள் என்று எழுதச் சொல்லிக் கையெழுத்துப் போட்டு "இரத்தத்தின் இரத்தங்களை" ஏமாற்றினார்.

இந்த மாதம் 22-ந் தேதி வரையில் - மொரார்ஜியின் ஜனதா கட்சி, கொள்கையற்ற கூட்டணியாக இருந்தது நடிகர் ராமச்சந்திரனுக்கு!

"ஜனதா ஆட்சிக்கு வந்தால் பெண்கள் கற்பழிக்கப்படுவார்கள்" என்று இந்தப் புனிதர், போதனை புரிந்தார்.

இத்தனை ஆதரவு இந்திராவுக்கு ஏன் கொடுத்தார்?

இவர் மீதுள்ள விவகாரங்களிலேயிருந்து தப்புவதற்காகத் தான்!

இவர், கழகக் கட்டுப்பாட்டை மீறிப் பேசியதே - இந்திரா காங்கிரசாரின் அறிவுரையின் படியேதான்!

இல்லையேல் - அந்நியச் செலாவணி மோசடி எனும் அரவம் தலை தூக்கிப் படம் எடுக்குமே!

இந்திரா காங்கிரஸ் யோசனைப்படிதான் புதுக்கட்சி கண்டார்!

புதுக்கட்சிக்கு ஏற்பட்டுள்ள வெற்றிகளுக்கு அவருக்கே காரணம் புரியும்!

இன்று செய்தி வருகிறது. நடிகரின் கட்சி, நாடாளுமன்றத்தில் ஜனதாக் கட்சியை நிபந்தனையின்றி ஆதரிக்கும் என்பதாக! இந்தத் தகவலைப் பிரதமர் மொரார்ஜியே வெளியிட்டுள்ளார்!

"ஜனதா ஆட்சிக்கு வந்தால் பெண்கள் கற்பழிக்கப் படுவார்கள்" என்று பேசிய பேச்சு சென்ற வாரம்!

இந்த வாரம், நிபந்தனையற்ற ஆதரவு ஜனதாவுக்கு!

உடன் பிறப்பே, உனக்குக் காரணம் புரிகிறது அல்லவா?

விவகாரத்திலிருந்து தப்புவதற்கே விதவிதமாக வேடம் புனைகிறார் நடிகர்!

மடியில் கனமில்லாதவனுக்கு வழியில் பயமில்லை என்பதற்கேற்ப, நாம், இந்திராவின் ஜனநாயக விரோதச் செயல்களை எதிர்த்தோம். எத்தனையோ தொல்லைகள்! துன்பங்கள்! இன்னல்கள்! இடையூறுகள்! நீடித்த விசாரணைகள்! ஜோடித்த வழக்குகள்! நாம், எதற்கும் வளையவில்லை - குனியவில்லை! எதையும் தாங்கத் தயார் என்று இந்திராவின் சேட்டைகளைச் சமாளித்து நிமிர்ந்து தான் நின்றோம்!

நடிகர், பாவம் - அவர் என்ன செய்வார்? விவகாரங்களில் இருந்து தப்பிட வேறு வழியில்லை.

அதனால் அன்று, "அன்னையே இந்திரா" என்று அலறினார்.

இன்று "ஆண்டவரே மொரார்ஜி" என்று கதறுகிறார்!

இவர் ஏதோ சட்டப்பேரவைத் தேர்தலிலும் பெரும் வெற்றி பெற்று விடப் போகிறாராம்! அறிவித்து இருக்கிறார் இன்று!

அப்படியொரு விபத்து, தமிழ்நாட்டில் நடக்காது என்றே நான் நம்புகிறேன். ஒருவேளை, நடந்து விட்டாலும் அதற்காகத் தோல்வி அடைந்த கட்சியினர் தூக்கு மாட்டிக் கொண்டா செத்து விடுவார்கள்?

138 இடங்களை சட்டப் பேரவையில் பெற்றிருந்த காங்கிரஸ் கட்சி 50 இடங்களை 1967-ல் பெறவில்லையா?

அதற்காகப் பக்தவத்சலம் அவர்கள் பொதுவாழ்வை விட்டே ஓடிவிட்டாரா?

1967-ல் 50 இடங்களைப் பெற்றிருந்த காங்கிரஸ் கட்சி 1971-ல் 15 இடங்களைப் பெற்றுப் பெரும் தோல்வி அடைந்ததே! அதற்காகப் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், கட்சியைக் கலைத்து விட்டாரா?

19 மாத காலம் தனிமைச் சிறையில் கிடந்த மொரார்ஜிதான் இன்றைய இந்தியப் பிரதமர்!

இவைகள் எல்லாம் அரசியல்! ஏன், சினிமாவிலே கூட வில்லன் பாத்திரம் ஏற்பவன், கடைசிக் காட்சிக்கு முதல் காட்சி வரையில் வெற்றிகளையேதான் பெற்றுக் கொண்டு வருவான். கடைசிக் காட்சியிலேதான் கதாநாயகன் வெற்றி பெறுவான். சினிமா பாணியில் சொன்னால்தான் சிலருக்குப் புரியும் என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

ஜனநாயக அமைப்பில் கட்சிகள், மாறி மாறி ஆட்சிக்கு வருவது இயல்புதான்!

உடன்பிறப்பே, இதையெல்லாம் எழுதுவதால், எம்.ஜி.ராமச்சந்திரனின் கட்சி ஆட்சிக்கு வந்துவிடப் போகிறது என்று அவர் நம்புவாரேயானால், தமிழ்நாடு அப்படியொரு வேதனையான வேடிக்கையைச் சந்திக்க வேண்டுமென்றிருந்தால் அதை நாம் தடுத்துவிட முடியாமல் கூடப் போய்விடலாம்.

"விடமாட்டோம்! தமிழக அரசின் அரியணை, அரசியல் தெளிவு படைத்த தலைவர்களுக்கே இடம் தரும்."

என்று நீ வீரமுழக்கமிடுவது செவிகளில் விழுகிறது.

ஆனால் எம்.ஜி.ராமச்சந்திரன் சொல்கிறார்-

"கருணாநிதி மீது தமிழக மக்கள் வெறுப்புக் கொண்டுள்ளனர். அவர் சுயநலமிக்கவர் என்றும்,

லஞ்ச ஊழல்வாதி என்றும், கொலை பாதகத்திற்குச் சொந்தக்காரர் என்றும் அவர்களது அனுபவத்தினாலேயே முடிவு கட்டிவிட்டனர்."

உடன்பிறப்பே, நடிகர் எழுதியுள்ள வாசகத்தின் தரத்தைப் பார்த்தாயா?

நான் சுயநலமிக்க லஞ்ச ஊழல்வாதியாம்! நடிகர் கூறுகிறார்!

அதற்காகத்தான் மோகன் குமாரமங்கலத்தின் உத்தரவுப்படி என்மீதும், கழக அமைச்சர்கள் மீதும் புகார் கொடுத்தார். ஆனால், புகார் பற்றிய சர்க்காரியா விசாரணைக் கமிஷனுக்கு வந்து சாட்சி சொல்லவோ, அல்லது நமது தரப்பு குறுக்கு விசாரணைக்கு உட்படவோ முடியாது என்று கோழை போல வாதாடி விட்டு ஓடி விட்டார்.

நான் கொலை பாதகத்திற்குச் சொந்தக்காரனாம்!

இதுவும் நடிகரின் கூற்றுத்தான்!

கொலை பாதகத்திற்கு யார் சொந்தக்காரர் என்பதை, பல படத் தயாரிப்பாளர்களின் கல்லறைகள் கண்ணீர் பொங்கக் கூறிக் கொண்டிருக்கின்றன. கொலை பாதகம் புரிய 1972 டிசம்பர் மாதம் ஒரு நாள் நள்ளிரவில் கையில் துப்பாக்கி ஏந்தி காரில் சென்றவர் யார் என்பதற்கு அழிக்க முடியாத ஆதாரங்கள் இருக்கின்றன.

இதுபோன்ற பல விவகாரங்கள் வெளிவந்து சிக்கிக் கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான் இப்போது புதிய வேடம் பூணுகிறார்!

நெருக்கடிக்கு ஆதரவாக இருந்ததும் தனக்கு ஏற்பட்ட நெருக்கடியினால்தான்!

இன்று நெருக்கடி நிலையை நீக்கிவிட்ட ஜனதாவுக்கு ஆதரவு தருவதாக அறிவிப்பதும், தனக்குள்ள நெருக்கடியிலிருந்து தப்புவதற்காகவே!

"நெருக்கடி எத்தனை நெருக்கடி!"

என்று பாடத் தோன்றுகிறதா?

அன்புள்ள,

மு. க.

28-03-1977

391. புதிய நாடகத்துக்கு ஒரு ஒத்திகை!

உடன்பிறப்பே,

நாட்டு மக்களுக்கு - ஏழை எளிய மக்களுக்கு நன்மை தரும் திட்டங்களை எந்த மத்திய அரசு கொண்டு வந்தாலும் எங்கள் கட்சி ஆதரிக்கும். நாட்டு மக்களுக்குத் தீமை பயக்கும் திட்டங்களை எந்த மத்திய அரசு கொண்டு வந்தாலும் எதிர்த்துப் போராடும்.

இப்படியொரு விளக்கத்தை நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரன், தனது சொந்தப் பத்திரிகையின் மூலமாக வழங்கியுள்ளார் நேற்றைக்கு!

இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னையிலிருந்து தொலைபேசி வாயிலாக டெல்லியில் உள்ள நடிகர் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கட்டளையிட்டு, உடனே சென்று புதிய பிரதமரைச் சந்தித்து, இந்திரா காந்தியை ஆதரித்ததுபோல உங்களையும் ஆதரிப்போம் என்று வலியக் கூறுமாறு செய்த எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள், இன்று அதற்கான விளக்கத்தையளித்து, வழக்கம்போல் அவரது அரசியல் தெளிவைக் காட்டிக் கொண்டிருக்கிறார். கேப்டலிசம், சோஷலிசம், கம்யூனிசம் மூன்றும் சேர்ந்ததே அண்ணாயிசம் என நவின்று அண்ணாவின் கொள்கைக்கே விசித்திரமான - விபரீதமான - வியாக்யானம் செய்த வித்தகராயிற்றே அவர்!

மத்திய அரசுடன் முன்பு இருந்த கழக ஆட்சி, வீணாக மோதிக் கொண்டதுபோல கற்பித்துக்கொண்டு நாங்கள் மத்திய அரசுடன் வீணாக மோதுதலை நடத்த மாட்டோம் என்று அவர் திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறார்.

கழக ஆட்சி எந்த நேரத்திலும் மத்திய அரசுடன் வீணான மோதுதலை உண்டாக்கிக் கொண்டதேயில்லை. உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்பதுதான் கழக அரசு மத்திய அரசிடம் கடைப்பிடித்த

கொள்கையாகும். மத்திய மாநில உறவுகளில் இருக்கின்ற சிக்கல்களைத் தீர்க்க வேண்டுமென்பதற்காகக் குரல் கொடுத்திருக்கிறோம்.

மொழிப்பிரச்சினையில், அண்ணா அவர்களின் காலத்திலேயே மத்திய அரசின் கொள்கைக்கு மாறாக இருமொழித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருக்கிறோம். காவிரிப் பிரச்சினையில், அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டங்களை அடிக்கடி கூட்டி, அதில் எடுத்த முடிவுகளுக்கேற்ப மத்திய அரசுடன் வாதிட்டிருக்கிறோம். நிதி ஒதுக்கீடு விவகாரங்களிலும் சரி; அதிகாரத்தை மத்தியில் குவித்துக் கொண்டிருக்கிற நிலைமையிலும் சரி; அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சட்டப்பேரவையில் எப்படிப்பட்ட உரிமைக் குரலை மத்திய அரசை நோக்கி எழுப்பினாரோ, அதே குரலைத்தான் அவர் வழி நின்று கழக அரசும் தொடர்ந்து எழுப்பியது. உலகத் தமிழ் மாநாட்டில் தபால் தலை வெளியிட்ட நிகழ்ச்சியில் அண்ணா அவர்கள் மத்திய அரசை எதிர்த்துக் கொடுத்த குரல், மறந்துவிடக் கூடிய ஒன்றா?

அவர் வழியில் நாம் பணியாற்றுகிற காரணத்தால்தான் இந்தியாவில் தேவையற்ற முறையில் நெருக்கடி நிலையை இந்திரா காந்தி அறிவித்து, ஜெயப்பிரகாஷ், மொரார்ஜி போன்ற பெருந்தலைவர்களையும், இலட்சக்கணக்கான அரசியல்வாதிகளையும் சிறையில் அடைத்து, பத்திரிகை சுதந்திரத்தையும் பறித்து, அரசமைப்புச் சட்டத்தின் அடித்தளத்தையே ஊனமாக்கித் திருத்தி, எதேச்சாதிகாரக் கூத்து நடத்தியபோது நமது கழகம், ஜனநாயகத்திற்கான உரிமைக்குரலை எழுப்பியது.

தீமை பயக்கும் திட்டங்களை எந்த மத்திய அரசு கொண்டு வந்தாலும் எதிர்த்துப் போராடுவோம் என்று இன்றைக்குத் தோள் தட்டுகிற நடிகர் ராமச்சந்திரன் அவர்கள், இந்திரா காந்தி நெருக்கடி நிலையைக் கொண்டு வந்து நாட்டில் எல்லா உரிமைகளையும் பறித்துக் கொண்டபோது எங்கே போயிருந்தார்?

மொழிப் போராட்டத்தின் போது கோவா!

சென்னையில் வெள்ளம் பெருகி, மக்கள் ஓலமிட்டபோது மைசூர்!

உள்நாட்டு நெருக்கடிச் சட்டம் வந்தபோது, வெளி நாட்டிலா இருந்தார்?

பிரதமர் தேர்தலை எதிர்த்து யாரும் நீதிமன்றத்துக்குச் செல்லக்கூடாது என்று சட்டம் திருத்தப்பட்டபோது அதனை ஆதரித்தவர், இன்றைக்குத் தீமைகளை எதிர்த்துப் போராடுவேன் என்கிறாரே! எந்தப் படத்தில்? எப்போது வெளிவருகிறது அந்தப் படம்?

42-வது அரசியல் சட்டத் திருத்தம் உட்பட, எல்லாவிதமான தடை சட்டங்களையும் நீக்குவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு நேற்றைய தினம் தற்காலிகக் குடியரசுத் தலைவர் உரையாற்றியிருக்கிறார், நாடாளுமன்றத்தில்!

குடியரசுத் தலைவர் உரை என்பது அரசின் கொள்கை விளக்க உரைதான்!

இந்தத் திருத்தங்கள் வந்த போதும், தடைச் சட்டங்கள் வந்த போதும் ஒப்புக்காக ஒன்றிரண்டு கருத்துகளை நடிகர் கட்சியினரும், வலதுகளும் வெளியிட்டார்களே தவிர, ஒட்டு மொத்தமாக வரவேற்றுத் தானே வாக்களித்து இந்திராவின் ஜனநாயகத்துக்கு? வாழ்த்துக் கூறிக்கொண்டிருந்தனர்.

42-வது அரசியல் சட்டத் திருத்தம் ஜனநாயகத்தின் மூலாதாரத்தையே ஒழிக்கிறது. அது குடிமக்களின் அனைத்துரிமைகளை, உயிர் வாழும் உரிமை உட்பட எல்லா வற்றையும் ஒழித்துக்கட்ட அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கிறது

என நாட்டில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்களும், அரசியல் அறிஞர்களும், சட்டத் துறை மேதைகளும் எடுத்துக் கூறியுங் கூட அதனைக் காதில் போட்டுக் கொள்ள மறுத்த இந்திராவின் அரசைக் கண்ணை மூடிக்கொண்டு ஆதரித்து விட்டு, இன்றைக்கு நாங்கள் யாரையும் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்க மாட்டோம் என்று பசப்பு மொழி பகன்றால் அதனை நம்புவது எப்படி?

அரசியல் கட்சி, சமூக இயக்கங்கள் போன்ற எந்த அமைப்புக்கும் தடை விதிக்கப்பட மாட்டாது

என்று நேற்றைய தினமல்லவா நாடாளுமன்றத்தில் நல்ல செய்தி கூறப்பட்டுள்ளது? இதற்கு முன்பு எத்தனை கட்சிகளுக்குத் தடை! இன்னும் எத்தனை கட்சிகள் குறி வைக்கப்பட்டன!

அதனால்தானே அஞ்சி நடுங்கிய நடிகர், தன் கட்சிக்கு முன்னால் அனைத்து இந்திய என்ற சொல்லை ஒட்டவைத்துக் கொண்டார். அனைத்து இந்திய என்று மாறிவிட்ட பிறகு திராவிட என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது முரண்பாடாக இருக்கிறதே! எனக் கேட்ட நிருபர்களைப் பார்த்து - இது தெரியாதா? இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் திராவிடர்களே என்று பொக் கென்று ஒரு பதிலைப் புயல் வேகத்தில் தந்த புதுமைத் தலைவரல்லவா அவர்? எந்த சரித்திர ஆராய்ச்சியாளரும் இதுவரை கண்டுபிடிக்காத பேருண்மையை அல்லவா, நடிகர் ராமச்சந்திரன் கண்டுபிடித்து இந்தியர் அனைவரும் திராவிடரே என்று திட்டவட்டமாகக் கூறினார். இதைத்தான் இந்து ஏடு அவரது இயல்பான அறிவாற்றல் என்று பாராட்டி மகிழ்கிறது!

அவர் அச்சமுற்று கட்சிக்குப் பெயரை நீட்டிக் கொள்ள வேண்டிய அளவுக்கு அன்று கொண்டு வரப்பட்ட தடைச் சட்டத்தைப் பற்றி அவர் கூறிய எதிர்க் கருத்து என்ன? அதற்கும் சேர்த்துத்தானே அவர் கட்சியினர் நாடாளுமன்றத்தில் இந்திராவை ஆதரித்து வாக்களித்தனர்?

அந்தக் கொடும் தடைச் சட்டங்களை நடைமுறைப் படுத்தமாட்டோம் என்று, இன்று உதயமாகியுள்ள அரசல்லவா கூறியிருக்கிறது - அந்தவிதமானத் தடைச் சட்டங்களைப் பயன்படுத்தி தி.மு.கழகத்தையே தடை செய்துவிட வேண்டுமென்று குரல் கொடுத்த கட்சியல்லவா நடிகரின் கட்சி!

அதுமட்டுமல்ல! ஆட்சேபகரமான விஷயங்கள் பிரசுரத் தடைச் சட்டம் நீக்கப்படும் என்றும் நேற்றைய தினம் தற்காலிகக் குடியரசுத் தலைவர் புதிய அரசின் கொள்கையைத் தெளிவாக்கியிருக்கிறார்.

இந்த ஒரு சட்டத்தை வைத்து எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகள் அனைத்தையும் ஒரு அரசு, முடக்கிவிட முடியும். தோற்றத்துக்கு நல்லது போலக் காணப்பட்டாலும், இதைப் பழிவாங்கும் எண்ணத்துடன் ஒரு அரசு பயன்படுத்தினால், எழுத்துரிமை, பேச்சுரிமை, எதிர்க்கட்சிகள் நடமாடும் உரிமை அனைத்தும் பறிபோகும் என்று நாட்டில் உள்ள அரசியல் தெளிவு படைத்தோர் அனைவரும் ஒருமுகமாகக் கூறினர்.

பழுத்த காந்திய வாதியும், வினோபாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவருமான ஸ்ரீமந் நாராயண் அவர்கள், தேச விரோதச் செயல்கள் எவை என்று அறிவிக்கும் பட்டியலில் தேச விரோதத்திற்குச் சம்பந்தப்படாத பல விஷயங்கள் இருக்கின்றன. இந்தத் திருத்தங்கள், புதிய சட்டங்கள் எல்லாம் எதிர்காலத்தில் நாட்டை எதேச்சாதிகாரத்தில் கொண்டு போய் நிறுத்தும் என்று எச்சரிக்கை செய்தார்.

இப்படிப்பட்ட ஜனநாயகக் கருத்துகளைக் கழகம் எதிரொலித்து, இந்திரா அரசு கொண்டு வந்த இட்லர் பாணி சட்டங்களை எதிர்த்து நின்ற போது - எதையும் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்க மாட்டோம் என்று, இன்றைக்குக் கூறுகிற நடிகர் ராமச்சந்திரன் என்ன செய்து கொண்டிருந்தார்?

இவைகள் எல்லாம் தீமை பயக்கும் திட்டங்கள் என்றோ, சட்டங்கள் என்றோ - அவருக்கு யாரும் சொல்லவில்லையா?

ஒருவேளை அவைதான் நாட்டுக்கு நன்மை பயக்கும் சட்டங்கள் என்று அன்றைக்கு வாதாடி, இந்திரா காந்தியை ஆதரித்தாரே! அதைப் போல இப்போதும் வாதாடப் போகிறாரா?

எதை வேண்டுமானாலும் பேசலாம் - எப்படி வேண்டுமானாலும் பேசலாம் - பிறரைக் குறைகூறிக் குற்றம் சொல்வதாலேயே, தன்னைச் சத்தியகீர்த்தி என்றும், மகாத்மாவின் மறுபிறவியென்றும் மக்கள் எண்ணி ஏமாறுவார்கள் என்று அவர் நம்புகிறார். அந்த தைரியத்தில்தான் இன்றைய பிரதமர் மொரார்ஜி அவர்களைப் பற்றி, தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் மிக இழிவாக நடிகர் ராமச்சந்திரன் கூறினார்.

இந்திராவையும் மொரார்ஜியையும் ஒப்பிட்டுப் பாருங்கள். மொரார்ஜி ஆர்.டி.ஓ.வாக பணியாற்றியபோது லஞ்சம் வாங்கினார் என்பதற்காக வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.

இப்படியொரு கேவலமான பச்சைப் பொய்யை தேர்தல் கூட்டங்களில் அவர் பேசி, அந்தப் பேச்சு ஏடுகளிலும் வெளிவந்துள்ளது. இந்த நாகரிகமான பேச்சைத்தான் இந்து ஏடு, பாராட்டிப் போற்றி நடிகரை உச்சிமேல் வைத்துக் கொண்டாடி, அரசியல் உலகில் குறுகிய காலத்தில் நடிகர் ராமச்சந்திரனைப் போல வேறு யாரும் தன்னுடைய தனி முத்திரையைப் பதித்திருக்க

முடியாது என்று புகழ்ந்து எழுதியுள்ளது. தனி முத்திரையின் தரத்தைப் பார்த்தாயா?

அந்நியச் செலாவணி மோசடி! வருமான வரி ஏய்ப்பில் பழைய அரசுடன் உடன்பாடு! விதவிதமான விவகாரங்களில் இருந்து தப்பிடக் கழகத்திற்கே துரோகம் செய்த அநியாயம்!

அண்ணா என்ற பெயரை மட்டும் உச்சரித்துக் கொண்டு அண்ணாவின் கொள்கைகள் அனைத்துக்கும் விரோதமான அரசியல் விளக்கங்கள் தரும் வேதனை!

இந்தத் தனி முத்திரைகளைத் தனக்குரிய புதுமுத்திரைகளாக ஆக்கிக் கொண்டு, உத்தமரைப் போல நடித்து ஊரை ஏய்ப்பவர்களை தமிழ்நாட்டு மக்கள் விரைவில் அடையாளம் கண்டுகொள்ளத்தான் போகிறார்கள். இருள் நிரந்தரமானதல்ல! ஒளி விளக்கு, தமிழ்நாட்டுக்குக் கிடைத்தே தீரும்! மாயை, மாற்ற முடியாததல்ல! மறுமலர்ச்சி ஏற்பட்டே தீரும்.

இந்திராவை அசைக்கவே முடியாது என்று சென்ற இருபதாம் தேதி வரையில் எக்காளமிட்டு, ஆணவ ஆர்ப்பாட்டங்களை நடத்தியவர்கள் இப்போது எங்கே?

அந்த இந்திராவின் வழியே இந்தியாவின் வழி என்று கூறி, அண்ணா போற்றி வளர்த்த ஜனநாயகத்திற்கு மாறாக - இந்திராவின் சர்வாதிகாரத் திட்டங்களுக்கு தலையாட்டிக் கொண்டிருந்தவர்கள் இன்று தீமைகளை எதிர்ப்போம் - நன்மைகளை ஆதரிப்போம் என்று அறிவித்திருப்பது புதிய நாடகத்துக்கு ஒரு ஒத்திகையே தவிர, வேறல்ல என்பதை நாடு புரிந்து கொள்ளத்தான் போகிறது.

அன்புள்ள,

மு. க.

29-03-1977

392. சூளுரைத்திடு; சுடர் முகந்தூக்கிடு!

உடன்பிறப்பே,

பொய்ப் பிரச்சாரம் செய்தே பொது மக்களையும், குறிப்பாக தாய்மார்களையும் ஏமாற்றி வரும் நடிகர் ராமச்சந்திரன், நேற்றைய தினம் அந்தப் பொய் பிரச்சாரத்தின் எல்லைக்கே போய் எழுதியிருக்கிறார்.

தேர்தலில் தி.மு.க. நிற்பதில்லை - முழுக்க முழுக்க ஆதரிக்கிறோம். வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டது சரணாகதி இல்லையா?

- என்று நடிகர் கேட்கிறார். அவருடைய குணம் அவருக்கு! தன்னைப்போல பிறரையும் எண்ணிக் கொண்டார்! தேர்தலில் தி.மு.க. நிற்பதில்லை என்ற முடிவை என்றைக்குமே யாரும் எடுத்திடவில்லை. அப்படியே ஒரு முடிவினை அரசியல் ரீதியாக, கழகம் எடுப்பதாக இருந்தாலும் அதற்காக எங்கள் மீது போடப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் வாங்குங்கள் என்று யாரையும் போய்க் கெஞ்சிடும் சிறுமதி கழகத்திற்குக் கிடையாது. அப்படிப் போய் அய்யோ! வழக்குகளை வாபஸ் பெறுக! என்று எவரிடமும் மண்டியிட்டதும் இல்லை. அவ்வாறு கெஞ்சிக் கூத்தாடி இந்திரா அம்மையாரின் காலில் விழுந்து கழகத்திற்குத் துரோகம் செய்த எட்டப்பன் வேலையை எம்.ஜி.ராமச்சந்திரன்தான் 1972-ஆம் ஆண்டு செய்தார். இப்போதும் புதிய அரசின் காலில் விழ ஒரு முதலாளியைப் பிடித்து அவர் மூலம் தூது அனுப்பிக் கொண்டிருக்கிறார்.

இந்திரா காந்தி அம்மையாரிடம் நண்பர் ராஜாராம் அவர்களை அனுப்பியது சரணாகதியாம். விசாரணையின்றி மிசாக் கைதிகளாக ஐநூறுக்கு மேற்பட்டோர் தமிழகச் சிறைக் கோட்டங்களில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்யுமாறு கோரி, ஒரு கட்சி தனது சார்பில் பிரதிநிதிகளை ஒரு அரசின்

பிரதமரிடம் அனுப்புவது எவ்வகையில் தவறாகும்? நண்பர் ராஜாராம் அவர்களை அனுப்பியது மட்டுமல்ல; நானே கூட இந்திரா காந்தி அம்மையாருக்குக் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதங்களில் இங்குள்ள அதிகாரிகள் கழகத்தினர் மீது நடத்துகிற கடுமையான தாக்குதல்களை விளக்கியிருக்கிறேன். என்னை எவ்வளவு கொடுமைக்கு வேண்டுமானாலும் உட்படுத்துங்கள். அதனை நான் தாங்கிக் கொள்கிறேன். ஆனால் ஆயிரக்கணக்கான கழகத் தோழர்களை அவதிக்கு ஆளாக்காதீர்கள் என்றுதான் அந்தக் கடிதங்களில் குறிப்பிட்டிருக்கிறேன்.

ஜோடிக்கப்பட்டுள்ள வழக்குகளிலும், அமைக்கப் பட்டுள்ள விசாரணைக் கமிஷனிலும் அதிகாரிகள் சாட்சியங்களைத் துன்புறுத்தியும், மிசாவைக் காட்டி மிரட்டியும் தயாரித்துள்ளார்கள். நேர்மையான முறையில் விசாரணை நடத்திட வழி வகுத்திடுங்கள் என்று முறையிட்டிருக்கிறேன். உங்கள் காலில் விழுகிறேன் என்னை விசாரணையில் இருந்து விடுவித்து விடுங்கள் என்றோ, ஜெயப்பிரகாஷையும், மொரார்ஜியையும் கொள்ளைக்காரர்கள் என்று கூட்டத்திற்குக் கூட்டம் பேசுகிறேன், என்னை அன்னியச் செலாவணி மோசடியிலிருந்து காப்பாற்றுங்கள்! என்று நிபந்தனை கூறியோ, எம்.ஜி.ராமச்சந்திரன் இந்திரா காந்திக்கு அடிமை முறிச்சீட்டு எழுதிக் கொடுத்ததைப் போல, எழுதிக் கொடுத்திட எள்ளளவு நினைப்பும் என் நெஞ்சில் என்றைக்கும் எழுந்ததில்லை.

உற்ற நண்பர்கள், உயிர்த் தோழர்கள் கூட அறிவுரை கூறினார்கள். ஆட்சி கலைக்கப்பட்டு ஆயிரக்கணக்கானோர் சிறைப்பட்டபோது தலைமைப் பதவியிலிருந்து இறங்கி விட்டால் வழக்குகள் வராது, சர்க்காரியா விசாரணையும் இராது என்று!

என்ன சொன்னேன் அப்போது என்று எம்.ஜி.ராமச்சந்திரனுக்குத் தெரிந்திருக்க வழியில்லைதான்!

கொன்று குவித்தாலும், கொடுமை பல புரிந்தாலும் அவற்றைக் குளிர்ந்த முகத்துடன் ஏற்றுக் கொள்வேனே தவிர, நான் மட்டும் தப்பித்துக் கொள்ளக் கோழை போலக் கழகத் தலைமையை விட்டு ஓடி விட மாட்டேன் என்று தான் சொன்னேன்.

நான் என்ன நடிகர் ராமச்சந்திரனா? நம்பிய கட்சியை நடுத்தெருவில் விட்டு விட்டு ஓடிவிட!

நமக்கு வந்ததுபோல துன்பம், நடிகர் ராமச்சந்திரனுக்கு முழுமையாக அல்ல, ஒரு முள் முனையளவு வந்திருந்தால்கூட இந்நேரம் அவர் அரசியலுக்கே முழுக்குப் போட்டு விட்டல்லவா போயிருப்பார்!

அவரைப் போன்ற உறுதியற்ற உள்ளம் நமக்கு என்று கருதிக்கொண்டார். அதனால்தான் கிடைத்துள்ள வெற்றியின் கிறுகிறுப்பில் ஏதேதோ கூறுகிறார், என்னவெல்லாமோ எழுதுகிறார்.

வழக்குகளில் இருந்து தப்பித்துக்கொள்ள டெல்லிக்கு நான் ஆள் அனுப்பியிருக்கிறேனாம்! தவறான கணக்கு - மிகத் தவறான கணக்கு!

நடிகர் ராமச்சந்திரன், இந்திரா ஆட்சி மாறியதும் தன்னைப் பயங்கரமான வழக்குகளிலேயிருந்து விடுவித்துக் கொள்ள இந்திராவை ஆதரித்தது போல மொரார்ஜியை ஆதரிப்போம் என்று அவசர அறிக்கை விடுத்தாரே, அதைப்போல மற்றவர்களையும் நினைத்துக் கொண்டார் போலும்!

புதிய அரசை ஆதரிப்போம் என்று கூறுவது அரசியல் நாகரிகமாம்! அண்ணாவை வேறு உதாரணத்துக்கு அழைத்து வாதம் புரிகிறார்! கடந்த 17-ஆம் தேதி வரையில்,

''மொரார்ஜி தேசாய் ஆர்.டி.ஓ.வாக வேலை பார்த்தபோது லஞ்சம் வாங்கினார் என்பதற்காக வேலைநீக்கம் செய்யப் பட்டவர்''

என்பதாகத் தேர்தல் பிரச்சாரம் செய்தாரே இந்த நடிகர், இப்போது மொரார்ஜி பிரதமரானதும் அந்த லஞ்சக் குற்றச்சாட்டு மறைந்துவிட்டதா? அல்லது, இந்திராவுக்கு ஆதரவாகவும், மொரார்ஜிக்கு விரோதமாகவும் அப்படியொரு பொய்ப்பிரச்சாரம் செய்தேன் என்று நடிகர் தன் கன்னத்தில் போட்டுக் கொண்டு பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கத் தயாராக இருக்கிறாரா?

மூன்று நாட்களாக நான் கடிதங்களில் எழுப்பியுள்ள எந்தப் பிரச்சினைக்கும் பதில் சொல்ல வகையற்றுப்போன நடிகர், வழக்கு என்றும், விசாரணை என்றும், அவைகளை வாபஸ் பெறுவதற்காக நான் அலைகிறேன் என்றும் பச்சைப் பொய்களை அள்ளிக் கொட்டுவானேன்?

இதோ, 1976-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11-ஆம் நாள் கோவை செழியன், இந்திரகுமாரி, விசுவநாதன் ஆகியோரைக் கொலை செய்ய முயன்றதாக நடிகர் கட்சித் தோழர்கள் சிலர் மீது கவர்னர் சுகாதியா ஆட்சியில் தொடரப்பட்டு ஐந்து மாதமாக நடைபெற்ற வழக்கை, நேற்று 28-3-77 அன்று அரசாங்கத் தரப்பில் வாபஸ் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று நடிகர் கட்சி ஏடுகள், கொட்டை எழுத்தில் பிரசுரித்துக் கும்மாளம் போடுகின்றனவே!

அதே 28-3-77 அன்று நானும் நண்பர்கள் கண்ணப்பன், கோவை. ராசமாணிக்கம், லட்சுமணன் எம்.பி., கோபாலசாமி, செபஸ்டியன் ஆகியோரும் கொலை முயற்சியில் ஈடுபட்டதாகக் கோர்ட்டுக்கன்றோ செல்ல வேண்டியிருந்தது?

இன்னும் எங்கள் மீதுள்ள வழக்கிற்கு ஏப்ரல் திங்கள் 18-ந் தேதி வாய்தா அன்றோ போடப்பட்டிருக்கிறது!

வழக்கை உடனே நடத்துக! அரசுத் தரப்பு சாட்சிகளை உடனே அழைத்து வருக! என்றுதானே எமது வழக்கறிஞர் பாளையங்கோட்டை சண்முகம் அவர்கள் வற்புறுத்தி வாதாடியுள்ளார்.

கோவை செழியனையும் மற்றவர்களையும் கொல்ல முயன்றதாகப் போட்ட வழக்கு பொய்யான ஜோடனை வழக்கு என்று நடிகர் கட்சித் தலைவர்கள் கவர்னர் சுகாதியாவைப் பார்த்துச் சொன்னார்களாம். அதையொட்டி அந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது என்று அவர்களது ஏட்டில் செய்திக் குறிப்பு வருகிறது.

நம்மீது போடப்பட்டுள்ள வழக்குகள் மட்டும் ஜோடனைகள் அல்லவாம்! அரசியலில் பழி வாங்கும் நோக்கத்துடன் போடப்பட்டவைகள் அல்லவாம்!

இதோ, அரசியலில் வஞ்சம் தீர்க்கும் நோக்குடன் தொடரப்பட்ட வழக்குகள், புதிய அரசில் வாபஸ் பெறப்படும் செய்திகள் நாள்தோறும் வருகின்றனவே! அதற்கு நடிகர் கூறும் பதில் என்ன?

ஜார்ஜ் பெர்னாண்டஸ் மீது இந்திரா அரசு தொடுத்த சதி வழக்கு.

சுப்பிரமணியசாமி மீது இந்திரா அரசு தொடுத்த அன்னியச் செலாவணி வழக்கு.

இவற்றையெல்லாம் புதிய அரசு, திரும்பப் பெற்றுக் கொண்டுள்ள செய்தியை நடிகர் அவர்கள், ஏடுகளில் காணவில்லை போலும்!

வழக்கு, விசாரணை, சர்க்காரியா என்று வாய் நீளம் காட்டுகிற நடிகரைக் கேட்கிறேன்;

கழக ஆட்சியைக் கலைத்துவிட்டு கழகத்தின் மீது களங்கம் சுமத்தியே அதனை அழிக்க வேண்டுமென்று திட்டமிட்டு இந்திரா அரசு பிரச்சாரம் நடத்தவில்லையா?

முப்பது கோடி ரூபாய்க்கு எனக்குச் சொத்து இருப்பதாக ஒரு பொய்ச் செய்தியை டெல்லியிலேயே லட்சக்கணக்கான துண்டு அறிக்கைகளை அவதூறாக அச்சிட்டு, அவற்றைப் போலீஸ் வேன்களிலும், ஜீப்களிலும் கொண்டு போய் சிற்றூர், பேரூர்களில் இந்திரா அரசு விநியோகிக்கவில்லையா?

எங்கள் மீது புகார் கொடுத்த எம்.ஜி.ஆர். போன்றவர்களைக் குறுக்கு விசாரணை செய்யவேண்டுமென்றும், அதைப்போல அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட முன்னூறு சாட்சிகளையும் குறுக்கு விசாரணை செய்யவேண்டுமென்றும் எங்கள் சார்பில் வாதாடியவரும் இன்றைய மத்திய சட்ட அமைச்சருமான சாந்திபூஷண் அவர்கள், எடுத்துரைத்த கருத்துகளை அரசுத் தரப்பு ஏற்றுக் கொள்ளாததும், அவ்வாறே சர்க்காரியா கமிஷனும் ஏற்றுக் கொள்ளாததும் நாட்டுக்குத் தெரியாதா?

வானொலியில், டெலிவிஷனில், ஏடுகளில் வாரி இறைக்கப்பட்ட அவதூறுகளுக்குப் பதில் கூற முடியாதபடி எங்கள் ஏடுகள் தடுக்கப்படவில்லையா?

கூட்டத்தில் பதில் கூறுவதே கூட தவறு என்று இந்து போன்ற பத்திரிகா தர்மம்? கொண்ட ஏடுகள் கண்டித்துத் தலையங்கம் தீட்டவில்லையா?

நெருக்கடி - மிசா சட்டம் - அச்சுறுத்தல் - உத்தியோகம் போய்விடும் என்ற எச்சரிக்கை - உள்ளே தள்ளுவோம் - என்ற மிரட்டல், இவைகளுக்கிடையே நடைபெற்ற எந்த விசாரணைதான் நடுநிலையாக விளங்கிட முடியும்?

மீண்டும் நடிகர் எழுதியிருக்கிறார் பார்!

உடன்பிறப்பே,

நான் லஞ்சவாதியாம்!

ஊழல் வாதியாம்!

கொலைக்கு அஞ்சா கொடியவனாம்!

இதையே இவர் தொடர்ந்து எழுதி வருகிறார். இவர் என்னைப் பழிப்பதும், இழித்துரைப்பதும் வேடிக்கை தான்!

உதயசூரியனைப் பார்த்து ஓணான் பழிப்பதைக் கிராமத்துக் குப்பை மேடுகளில் காணலாமல்லவா?

அதையேதான் நினைத்துக் கொள்கிறேன், இவரையும் இவர் எழுத்தையும் காணும்போது!

கியூராஜ் - ச்சேஸிஸ் பேரத்தில் இவர் பேசிய லஞ்சம் எவ்வளவு? பெற்றது எவ்வளவு?

ஒரு லட்ச ரூபாய் வெள்ளைப் பணத்திற்குக் கையெழுத்துப் போட்டு விட்டு படமொன்றுக்கு ஏழு லட்ச ரூபாயைக் கறுப்புப் பணமாக வாங்கி, நாள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்களை தன் தனி வாழ்வுக்காகச் செலவிடுகிற இவர், என்னைப் பார்த்து ஊழல்வாதி என்கிறார்!

நள்ளிரவு! கள்ள உறவு! கையில் துப்பாக்கி! கண் எதிரே மற்றொரு கதாநாயகன்! நல்ல வேளை தப்பிப் பிழைக்கிறார்கள் அர்த்தஜாமத்து ஆருயிர்கள்! கைலியையாவது திருப்பி அனுப்புக!

இந்த பயங்கர நாடகத்தின் வில்லன், மறுநாள் காலையில் கதாநாயகனாகி ஊர் மக்களை ஏமாற்றி, நிரபராதிகளைப் பார்த்து கொலைகாரர்கள் என்று உரைக்கிறார் என்றால்?

உடன்பிறப்பே, இனித் தாமதிப்பதில்லை! இந்தப் பொய்யர்களின் இரட்டை வேடத்தை - இன்றே நாடு முழுவதும் எடுத்துக் கூறக் கிளம்பிடுவோம்! வஞ்சகத்தின் வடிவத்தை - வண்ணப் பூச்சினைக் கலைத்து அனைவரும் அறிய அடையாளம் காட்டுவோம்!

வரம்பு மீறுகிறார், வன்முறைக்குத் தூபம் போடுகிறார்! இதோ அதற்கு எடுத்துக்காட்டு, அவர் பெயரால் வந்துள்ள கட்டுரையில் காணப்படுகிறது.

‘கருணாநிதியைப் பொறுத்தவரையில் ஆபத்து இருக்கிறது. அது என்ன ஆபத்து என்பது இன்னும் ஓரிரு வாரங்களில் தெரியும்’

இப்படி எழுதியுள்ளார் அவர்.

இந்த ஆபத்து நடிகர் ராமச்சந்திரன் போட்டுள்ள திட்டத்தின்படி வெற்றிகரமாக நிறைவேறக் கூடும்.

உடன்பிறப்பே, அப்படி அவர் அந்தத் திட்டத்தில் வெற்றி பெற்று விட்டால் கருணாநிதியென்னும் ஒரு தனி நபர்தானே பாதிக்கப்படப் போகிறேன். பரவாயில்லை - எனக்குப் பிறகும் இந்தக் கழகத்தை வளர்க்க என் ரத்தத்தின் சாட்சியாக சூளுரைத்துச் சுடர்முகம் தூக்கி அண்ணன் தந்த இருவண்ணக் கொடியை உயர்த்திப் பிடித்தவாறு இலட்சியப் பயணத்தை நடத்திட வேண்டுகிறேன்.

ஒருவாரம் தானே எனக்குக் கெடு வைத்திருக்கிறார், நடிக நண்பர்!

அதனால்தான் உனக்குச் சொல்ல வேண்டியதை முன்கூட்டியே சொல்லி வைக்க வேண்டியது என் கடமையாகிறது! நடிகர் கூறும் ஆபத்து என்னை அணைத்துக் கொள்ளுமேயானால், ஓய்வின்றி உழைத்த ஒரு தொண்டன் இங்கே ஓய்வு பெறுகிறான் என்று, எனக்கோர் கல்லறை எழுப்பப்படுமேயானால் அங்கே எழுதிடுமாறு, என்னைப் போன்ற தொண்டனே! உன்னைக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

30-03-1977

393. துள்ளிவரும் வேலெனத் தொண்டாற்றக் கிளம்பிடு!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில் சட்டப் பேரவைத் தேர்தலுக்கான நாள் விரைவில் அறிவிக்கப்பட இருக்கிறது. இந்தக் கடிதம் உன் கையில் கிடைக்கும் நாளுக்கும், தேர்தல் நடைபெறப் போகும் நாளுக்கும் இடையே சில வாரங்கள்தான் இருக்கும். சட்டப் பேரவைத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தலைப் போல நெருக்கடி நிலையின் பின்னணியிலோ, மிசா போன்ற ஆளை மிரட்டும் சட்டங்களின் அட்டகாசத்திற்கு மத்தியிலோ, தேர்தல் முடிந்த மறுநாள் வாக்களித்தவர்களின் கதி என்ன ஆகும் என்ற அச்சத்துடனோ, அல்லது வாக்காளர்களைச் சந்திக்கும் நமது தொண்டர்களை பயமுறுத்தும் அளவிலோ நடைபெறாது என்பது மட்டும் திண்ணமாகும்.

நாடாளுமன்றத் தேர்தலில் ஆளுங் காங்கிரஸ் கட்சியின் கூட்டணிக்கு 103 லட்சம் வாக்குகளும், நமது ஜனநாயக அணிக்கு 63 லட்சம் வாக்குகளும் கிடைத்திருக்கின்றன. வித்தியாசம் 37 லட்சம் வாக்குகள்!

யாரையும், எந்த நேரத்திலும், எந்தக் கொடுமைக்கு வேண்டுமானாலும் ஆளாக்கக்கூடிய அதிகாரங்களையும், சட்டங்களையும் இயற்றி வைத்துக் கொண்டிருந்த இந்திராகாந்தி அம்மையாரை எந்தச் சக்தியாலும் அசைக்க முடியாது என்று முழுமையாகத் தமிழ்நாட்டு மக்கள் நம்பிக் கொண்டிருந்த பீதி நிறைந்த சூழ்நிலையிலேயே நமது அணியினர் 66 லட்சம் வாக்குகளைப் பெற்றார்கள் என்பது சாதாரண விஷயமல்ல.

கவர்னர் சுகாதியா அவர்களின் கடுமையான சுற்றுப்பயணங்கள்! மாவட்ட அதிகாரிகள் ஆளுங்கட்சிக் கூட்டணிக்காக நடத்திய தீவிரத் தேர்தல் பணிகள்! தேர்தலில் எல்லாவகையான முறைகேடுகளும் நடத்தப்பட்ட நிலைமைகள்!

தேர்தல் பணியாற்றிய நமது அணியினர், தமிழ் நாட்டுத் தேர்தலிலும் மேற்கு வங்கத்தைப் போல ஏதாவது தில்லுமுல்லுகள் நடைபெற்றிருக்கக் கூடுமோ என்று ஐயமுறுவதில் வியப்பில்லை. லட்சக்கணக்கான வாக்குச் சீட்டுகள் ஒரே எண் கொண்டவை இரட்டிப்பாக அச்சடிக் கப்பட்டுள்ளன என்று மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ஜோதிர்மயிபாசு அவர்கள் நாடாளுமன்றத்தில் சான்றுகளுடன் எடுத்துக் கூறியுள்ளார்.

தமிழகத்திலும் அதுபோல ஏதாவது நடைபெற்றிருக்கக் கூடுமென்றுதான் பலரும் கருதுகின்றனர். தமிழ்நாடு ஜனதா கட்சித் தலைவர் பேராசிரியர் ராமச்சந்திரன் அவர்கள், தேர்தல் முடிந்ததும் விடுத்த அறிக்கையில் தேர்தலில் பல முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்று சுட்டிக் காட்டியுள்ளதையும் மறந்துவிடுவதற்கில்லை. நடுப்பகல், நடுநிசி, விடியற்காலை இப்படிப்பட்ட நேரங்களில் எல்லாம் மக்கள் லட்சக்கணக்கில் கூடியிருந்து, நெடுநேரம் மணிக்கணக்கில் காத்திருந்து, நமது அணியின் தலைவர்கள் பேசிய கூட்டங்களில் கருத்து விளக்கம் பெற்றிருக்கின்றனர். எழுச்சியை உணர்த்தியிருக்கின்றனர். இருப்பினும் இவ்வளவு பெரிய இழப்பு எப்படி ஏற்பட்டது என்பது வியப்புக்குரியதாகவே இருக்கிறது.

தவறுகள் உத்திரப்பிரதேசத்திலோ, ராஜஸ்தான், பீகாரிலோ ஏன் நடக்கவில்லை என்று கேட்கக்கூடும். வட மாநிலங்களில் உள்ள அதிகாரிகள் துணிவுடன் செயல் பட்டார்கள் என்பதும், தென் மாநில அதிகாரிகள் அப்படிச் செயல்பட முடியாமல் கவர்னர்கள் மிரட்டிக் கொண்டிருந் தார்கள் என்பதும் மறுக்கக்கூடிய விஷயங்கள் அல்ல!

நடந்து முடிந்தவைகளைப் பற்றி நாள்தோறும் ஆராய்ச்சி செய்துகொண்டிருப்பதை விட இனி நடக்க வேண்டியவைகளைப் பற்றிச் சிந்திப்பதே சிறந்தது என்ற வகையில் நமது கழகச் செயற்குழுவும் எதிர்காலத்திற்கான ஆக்க ரீதியான முடிவுகளை மேற்கொண்டு அதன்படி கழகப் பணிகள் விரைவுபடுத்தப் பட்டிருக்கின்றன. வாக்காளர்களைப் புதுப்பித்தல், தவறாகப் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர் பெயர்களைக் கண்டுபிடித்துத் திருத்துமாறு செய்தல், அல்லது நீக்குதல், விடுபட்டுப் போன வாக்காளர்களைச் சேர்த்தல் போன்ற மிக முக்கியமான

பணிகளை உன் போன்ற உடன்பிறப்புகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும். யார் வேட்பாளராக நிற்கப் போகிறாரோ, அவருக்கில்லாத அக்கறையா நமக்கு? என்று கருதாமல் அந்தப் பணியை உடனே தொடங்கிடு! ஒருவேளை நீயே கூட உன் தொகுதியில் வேட்பாளராக நிறுத்தப்படக் கூடும். யார் நின்றாலும் நமது கழகம் நிற்கிறது - அல்லது நமது கழகத்தின் தோழமைக் கட்சி நிற்கிறது என்ற உணர்வுதானே முக்கியம்! அதுதானே நமக்கு வெற்றியினை ஈட்டித்தர வல்லது!

இன்னொரு பணியும் உனக்கு இருக்கிறது! கடந்த ஓராண்டு காலமாக கழகம் உன்னை மிகவும் கசக்கிப் பிழிந்து இருக்கிறது. நான் அறிவேன் - இருப்பினும் தேர்தல் என்றால் நிதி முக்கியமன்றோ அவசியமான செலவுகளுக்கு?

இன்று முதலே தேர்தல் நிதியை தலைமைக் கழகத்திற்கு, நமது பொருளாளர் பேராசிரியர் அவர்களின் பெயருக்கு அனுப்பி வைக்கத் துவங்கிவிட வேண்டுகிறேன். கழகத்திற்கு நீ அனுப்புகிற எந்த நிதியாக இருந்தாலும் அதன் விபரம், முகவரி உட்பட, முரசொலி ஏட்டில் முதல் நாள் வரையில் வசூல் தொகைக்கான மொத்தம் கூட்டிப் போட்டு ஒவ்வொரு நாளும் அறிவிக்கப்படுவதை நீ உணர்வாய்!

தலைமைக் கழகத்தில் நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செலவானது போக மிகக் குறைந்த தொகைதான் மிச்சமிருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தலில் செலவுக்குப் போதுமான பணம் இல்லாததும் நமது தோல்விகளுக்கு ஒரு காரணம்.

எனவே,

உன் கையில் கிடைத்த ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் அதற்குமேல் எவ்வளவு முடிகிறதோ அந்தத் தொகையை உடனடியாகத் தலைமைக் கழகத் தேர்தல் நிதிக்கு அனுப்பி வைத்திட வேண்டுகிறேன். நடிகர் கட்சித் தலைவர் 17 உறுப்பினர்களிடமும் தலைக்கு பத்து இலட்சம் ரூபாய் வீதம் 1 கோடியே 70 லட்சம் ரூபாய் தேர்தல் நிதிக்குக் கேட்டிருக்கிறார். அவரது கட்சி, தனது கூட்டணிக் கட்சிகளுக்கு இடம் ஒதுக்கியது போக 170 இடங்களில் நிற்பதாக வைத்துக் கொண்டாலும் தொகுதி ஒன்றுக்கு குறைந்தது ஒரு லட்சம் செலவு செய்யத் திட்டமிட்டுள்ளது என்பது தெளிவாகிவிட்டது. நமக்குக் கோடிக்

கணக்கில் தேர்தல் நிதி தேவையில்லை. இருபது லட்ச ரூபாய்க்குக் குறையாமல் தேர்தல் நிதி சேர்ந்தாலே போதுமானது.

ஆகவே, கிளை அமைப்புகள், துணை மன்றங்கள் கணிசமான தொகையினைத் தேர்தல் நிதியாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்புவதைத் தம்தலையாய கடமையாகக் கொண்டிட வேண்டும்.

பணவிடைத்தாள், டிராப்ட்கள் மூலம் பணம் அனுப்புவதோடு அல்லாமல் நேரிலோ, கூட்டங்களிலோ தலைவர்களிடம் நிதி தருகிறவர்கள், அந்த நிதியுடன் தங்கள் பெயர் முகவரியையும் ஒரு துண்டுத் தாளில் இணைத்து வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டில் பேசியதை மறந்துவிடாதே!

கழகம், ஆட்சி பீடம் ஏறினாலும்கூட அத்துடன் முடிந்து விடுவதில்லை நமது பணி! இன்னும் ஐம்பதாண்டு காலத்துக்குக் கழகத்தின் பணி, தமிழ் நாட்டுக்கு, தமிழ் மொழிக்கு, தமிழ் மக்களுக்கு தேவைப்படுகிறது.

அண்ணன் அன்று முழங்கியதை நினைவில் வைத்துக் கொண்டு இன்று முதற்கொண்டே இடைவிடாது பணியாற்றப் புறப்படு!

வாக்காளர் சேர்த்தல்

புதுப்பித்தல்

திருத்தி முறைப்படுத்துதல்

இவற்றுடன், இயன்ற அளவு தேர்தல் நிதியை அனுப்பி வைத்தல் -

என் ஆருயிர் உடன்பிறப்பே, இவற்றை நிறைவேற்றிட

துள்ளி வரும் வேலெனத்

தொண்டாற்றக் கிளம்பிடு!

அன்புள்ள,

மு. க.

31-03-1977

394. வெங்கட்ராமனும் சில விபரங்களும்!

உடன்பிறப்பே,

தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆர். வெங்கட்ராமன் அவர்கள், நாடாளுமன்றத்தில் பேசும் பொழுது தி.மு.கழகத்தின் அமைச்சர்கள் மீது வழக்குகளையும், விசாரணைகளையும் விட்டுவிடாமல் நடத்த வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறார். கழக அரசைக் குறிப்பிடும் போது Corrupt D.M.K. Government "ஊழல் தி.மு.க.அரசு" என்று அடைமொழியுடன் குறிப்பிட்டுள்ளார்.

இவர் தமிழ்நாட்டுத் தொழில் அமைச்சராக இருந்த போது அந்தத் துறையிலும், மற்றும் இவர் தொடர்பு கொண்டிருந்த துறைகளிலும் எவ்வளவு பயங்கரமான ஊழல்களைப் புரிந்தார் என்று அப்போது இவரது காங்கிரஸ் கட்சியின் ஏடான 'நாத்திகம்' ஏட்டில் வாரா வாரம் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளினார்கள். அதுகுறித்துச் சட்டசபையில் வெங்கட்ராமனைக் கேட்டபோது அதெல்லாம் சாக்கடைப் பத்திரிகைகள் என்று ஒரே வரியில் பதில் கூறிவிட்டு உட்கார்ந்தார். அவரது கட்சிப் பத்திரிகைக்கே அவர் சூட்டிய மகுடம் அது!

எனவே வெங்கட்ராமன் தி.மு.க. அரசை, ஊழல் அரசு என்று கூறுகிற போது நாமும் பதிலுக்கு "அதெல்லாம் சாக்கடைப் பேச்சு" என்று கூறிவிட விரும்பவில்லை.

ஊழல்வாதிகள், லஞ்சம் பெற்றவர்கள் என்று எங்களை மக்கள் மத்தியில் செல்வாக்கு அற்றவர்களாக ஆக்கிட பொய் வழக்குகளையும், போலி விசாரணைகளையும் நடத்தி, சாட்சிகளைத் தயாரித்து - அவர்களை 'மிசா'வைக் காட்டி மிரட்டி எழுதிக் கொடுத்த வாக்குமூலத்தில் கையெழுத்துப் போடச் செய்து, வேண்டுமென்றே அரசியல் வஞ்சம் தீர்ப்பதற்கு நடத்தப்பட்ட நாடகங்கள் சட்டப்படி நடைபெற்ற காரியங்களா? நீதிமுறைப்படி

நடைபெற்ற நிகழ்ச்சிகளா? என்ற கேள்விகளுக்கு விடை காணும் கட்டத்தை நாடு விரைவில் சந்திக்கத்தான் இருக்கிறது.

நகர்வாலா ஊழலின் சட்டைப் பைக்குள் கங்காருக் குட்டி போல் அமர்ந்து கொண்டு, மாருதி ஊழல் என்ற பெரியதோர் உத்திரம், தன் கட்சியின் கண்ணில் கிடப்பதையும் மறந்து விட்டு "தி.மு.க ஊழல்!! தி.மு.க. ஊழல்! விடாதே பிடி!" என்று வெங்கட்ராமன் கோஷ்டியினர் அலறுவது எப்படியிருக்கிறது என்றால், திருவிழாக் கூட்டத்தில் ஜேப்படி செய்த திருடன், போலீஸ்காரருடன் சேர்ந்து கொண்டு "அதோ ஓடுகிறான் திருடன்! விடாதே. பிடி!!" என்று கூவிக் கொண்டே ஓடி, தான் தப்பிவிடுவதற்கு முயற்சிப்பதைப் போலத்தான் இருக்கிறது.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரியாரையும், நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரனையும் நமது இரு கண்களாக பாவிக்க வேண்டும் என்று கூறி, நடிகர் ராமச்சந்திரன் அவர்களுக்குப் பாதபூஜை செய்து தென் சென்னைத் தேர்தலைப் பல லட்ச ரூபாய் செலவில் முடித்துக் கொண்டு, டெல்லிக்குப் போய் - பாவம்! எந்தப் பதவியும் கிடைக்காத காரணத்தால் ஆத்திரத்திற்கு ஆளாகி அதன் விளைவாக தி.மு.க. மீது அர்ச்சனை புரியக் கிளம்பி விட்ட வெங்கட்ராமன் அவர்களின் விரக்தி மனப்பான்மை, நமக்குப் புரியாமல் இல்லை.

அவர் நாடாளுமன்றத்தில் பேசும் போது, தமிழ்நாடு, வறுமைக் கோட்டில் இருக்கிறது என்றும், அதற்குக் கழக அரசுதான் காரணமென்றும் குறிப்பிட்டிருக்கிறார். இந்தியா முழுவதும் மாநில வாரியாக வறுமை நிலையின் அளவை அவர் எடுத்துக்காட்டி, தமிழ்நாட்டு நிலையை ஒப்பிட்டுக் கூறுவாரேயானால், அதற்குரிய காரணங்களை விளக்கிடுவது எளிதாக இருக்கும்.

இந்தியா முழுவதற்கும் சேர்த்துத்தான் "வறுமையே! வெளியேறு!!" என்ற கோஷத்தை இந்திராகாந்தி அம்மையார் பத்தாண்டுக் காலத்திற்கு மேலாக முழக்கி வந்தார்கள்! தமிழ்நாட்டில் மட்டும்தான் வறுமையிருப்பதாக இந்திராகாந்தி கூறிடவில்லை. தமிழ்நாடு தவிர மற்ற மாநிலங்கள் அனைத்தும் குபேரபுரிகளாகக் காட்சியளித்திடுவது போல வெங்கட்ராமனைப் போன்றவர்கள் பேசுவதைக் காணும் போது இவர்களையெல்லாம்

பொருளாதார மேதைகள் என்று புகழ்ந்து கொண்டிருந்தது நமது குற்றம் என்பது புலப்படுகிறது.

குடிசைகளில் வாழ்ந்தவர்களுக்கு நகர்ப்பகுதிகளில் இதுவரையில் இருபத்தி ஐயாயிரம் மாடி வீடுகளைக் கட்டிக் கொடுத்த அரசு, கழக அரசைத் தவிர வேறு எந்த மாநில அரசையாவது சுட்டிக் காட்ட முடியுமா?

கிராமங்களில் எல்லா ஹரிஜனங்களுக்கும் இலவசமாகக் "காங்ரீட் வீடுகள்" நாலாயிர ரூபாய் பெறுமானத்தில் கட்டித் தருவதெனத் திட்டமிட்டு, ஒரே ஆண்டில் முதற் கட்டமாக முப்பத்தி ஐயாயிரம் வீடுகளைக் கட்டித் தந்த பெருமை கழக அரசைத் தவிர, இந்தியாவில் வேறு எந்த அரசுக்காவது உண்டா?

இவைகள் எல்லாம் வறுமை ஒழிப்புப் பணிகள் அல்லவா?

"நபர்வாரித் திட்டச்செலவு" தமிழ்நாட்டில் தி.மு.க. அரசின் காலத்தில் 35 ரூபாய் அளவுக்குக் குறைந்து விட்டது என்கிறார். இதுகுறித்து 1976-ஆம் ஆண்டு ஜனவரி முதல் வாரத்தில் இந்திராகாந்தி அம்மையார் நாடாளுமன்றத்தில் பேசி, அதற்கு அப்போதே நான் விளக்கமளித்திருக்கிறேன். அந்த விளக்கம் கண்டு மதுரைச் சிவனார் போல அம்மையார் வெகுண்டார்கள்! "நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம், குற்றமே!" என்ற நக்கீரன் பரம்பரைக்கு எடுத்துக்காட்டாக நாம் நின்று நமது ஆதார பூர்வமான புள்ளிவிவரங்களைத் தந்தோம்!

நான், முன்னாள் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அம்மையார் அவர்களுக்குப் பதில் அளிக்கும் வகையில் 16.1.1976 அன்று வெளியிட்ட அறிக்கையை, மீண்டும் நினைவு படுத்துவது இப்போது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

"இந்தியப் பிரதமர் அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசும் போது நபர்வாரித் திட்ட ஒதுக்கீடு - அனைத்து இந்தியாவிலும், தமிழ்நாட்டில் தான் குறைவாக உள்ளது என்று கூறினார். ஆனால் சென்னையில் அவர்கள் பேசும் போது 1974-75-வது ஆண்டின் திருத்திய மதிப்பீடுகளை ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ்நாட்டில் நபர்வாரித் திட்ட மதிப்பீடு, ரூ. 36 ஆகவும், அனைத்திந்திய சராசரி ரூ. 51 ஆகவும் இருப்பதாகச் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

நான் முதலிலேயே சொன்னபடி நடப்பு நிதி ஆண்டில், அதாவது 1975-76-ல் திட்டக் குழுவால் நமக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது ரூ. 142 கோடி என்றாலும் நமது மொத்தத் திட்டச் செலவு ரூ. 165 கோடிக்குக் குறையாமல் இருக்கும். இதை, நபர்வாரி முறையில் பார்த்தால் ரூபாய் 41 ஆகும். இதில், நடப்பு ஆண்டில் திட்டத்துக்காக மத்திய அரசிடமிருந்து தமிழ் நாட்டுக்குத் தருவதும், தருவதாகக் கூறியிருப்பதும் நபர் வாரியாக 14 ரூபாயாகும். மீதமுள்ள நபர் வாரியான 27 ரூபாய், மாநில அரசின் பொறுப்பாகும்.

மேற்குறிப்பிட்ட மத்திய அரசு உதவியான 14 ரூபாயில் 70 ச.வீ. கடன் 30 ச.வீ. மானியம். தமிழ்நாட்டில் பூரண மதுவிலக்கு கொண்டு வரப்பட்ட காரணத்தினால் நமக்கு நடப்பு நிதி ஆண்டில் ரூ. 56 கோடி வருவாய் குறைந்தது.

வரலாறு காணாத வறட்சியை நாம் சமாளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் நமக்கு எதிர்பாராத அளவில் 24 கோடி ரூபாய் செலவு ஏற்பட்டது. இந்த 56 கோடி ரூபாய் இழப்பும், 24 கோடி ரூபாய் அதிகச் செலவும் இந்த ஆண்டில் நம்முடைய ஆண்டுத் திட்ட அளவையும் பாதித்துள்ளது. இந்த 80 கோடி ரூபாய் இழப்பால் திட்டச் செலவு நபர் ஒன்றுக்கு ரூ. 20 குறைந்து விட்டது. இந்த இழப்பை மத்திய அரசு நம்முடைய கோரிக்கைகளை ஏற்று ஓரளவாவது சரிக்கட்டியிருந்தால் நமது நபர் வாரித் திட்டச் செலவு அனைத்திந்திய சராசரியை விட அதிகமாகியிருக்கும்.

பூரண மதுவிலக்குக் காரணமாகவும், வறட்சியால் ஏற்பட்ட செலவின் காரணமாகவும் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசின் உதவி வேண்டுமென்று நான் பலமுறை நேரில் கேட்டும், கடிதங்கள் எழுதியும் நமக்கு எந்தப் பயனும் கிடைக்கவில்லை. எனவே நபர்வாரி திட்டச் செலவு குறைவதற்குக் காரணம் மத்திய அரசு நமது முக்கியக் கோரிக்கைகளுக்கு இணங்காதது தானே தவிர, நாம் அல்ல என்பது இதிலிருந்து தெளிவாகும்.

மத்திய அரசிடம் தமிழ்நாடு அரசு கோரிய தொகையை, திட்டத்தில் நமக்கு வழங்காமையினால் தான் நபர்வாரித்

திட்டச் செலவு குறைவாக இருக்கிறது என்று நாம் வாதாடி வருவதைத்தான் இப்போது பிரதமர் ஒப்புக் கொண்டிருப்பதாக நான் கருதுகிறேன்.

ஒரு மாநிலத்தை முன்னேறிய மாநிலங்களின் வரிசையில் சேர்த்து விட்டுத் திட்டத் தொகையையும் குறைக்கிற போது அந்த மாநிலத்தின் மக்கள் தொகை அப்படியே இருக்கிறது அல்லது பெருகுகிறது என்பதையும், அந்த மக்கள் தொகையால் வகுத்துப் பார்க்கிற போது நபர் வாரித் திட்ட ஒதுக்கீடு குறைகிறது என்பதையும் நாம் நன்றாகப் புரிந்து கொள்ளலாம்.

ஆயினும், திட்டத்திற்கென ஒதுக்கப்படுகிற தொகை அன்னியில் நமது மாநில அரசு, திட்டத்தில் சேராத வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவிடுகிற தொகையையும் சேர்த்து மொத்தமாக வளர்ச்சிப் பணிகளுக்கு அதிகம் செலவிடுகிறது என்ற புள்ளி விவரங்களை நான் என்னுடைய முதல் அறிக்கையிலேயே தெளிவாக்கி இருக்கிறேன்.

வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவிடும் தொகைகளைக் கணக்கிடும் போது திருப்பிக் கொடுக்கும் கடன் தொகைகளையும், வட்டியையும் மொத்தச் செலவிலே இருந்து கழிப்பது சரியல்ல என்று வாதிடப்பட்டாலும் அந்த இனங்கள் நமது அரசியல் சட்டத்தின் அடிப்படையில் சாட்டிய இனங்கள் Charged items ஆகும். அந்த இனங்கள் சட்டப்பேரவையின் ஓட்டெடுப்பிற்கு அப்பாற்பட்டவை. அந்த இனங்களைக் கழித்து விட்டு மொத்தச் செலவைக் கணக்கிடக் கூடாது என்று கூறுகிற வாதத்தின் படி பார்த்தாலும் 1975 செப்டம்பர் மாதத்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கையின் படி வளர்ச்சிப் பணிகளுக்காக நம்முடைய தமிழ்நாடு எந்த அளவு தொகை ஒதுக்கியிருக்கிறது என்பதை நாம் புரிந்து கொண்டு பெருமைப்பட முடியும் என்றே நம்புகிறேன்.

மூன்று மாநிலங்களை உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டு வளர்ச்சிப் பணிகளுக்காகச் செலவிடும் தொகையை ஒப்பிட்டுப் பார்க்க நான் விரும்புகிறேன்.

முதலாவதாக திரு. சித்தார்த்த சங்கர் ரே முதல்வராக இருக்கிற மேற்கு வங்கத்தைப் பார்ப்போம். அந்த மாநிலத்தில் மொத்த மக்கள் தொகை 4 கோடியே 44 இலட்சம். ரிசர்வ் வங்கியின் அறிக்கையின் படி 1975-76-ஆம் ஆண்டில் மொத்த பட்ஜெட் ஆகும். இதில் வளர்ச்சித் திட்டங்களுக்கு அந்த மாநிலம் செலவழிப்பது 381.72 கோடி ரூபாய். வளர்ச்சியில்லாத திட்டங்களான நிர்வாகம், போலீஸ், கடன், பென்ஷன் போன்ற செலவுகளுக்கு அந்த மாநிலம் செலவழிப்பது 162.79 கோடி ரூபாய். உள்ளாட்சித்துறை, கிராமப் பஞ்சாயத்து நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு அந்த மாநில அரசு கொடுக்கும் மானியம் ரூ. 12.29 கோடி. ஆக, மொத்த பட்ஜெட்டில் மேற்கு வங்கம் வளர்ச்சிப் பணிகளுக்காக ஊராட்சி நிறுவனங்கள் உட்பட செலவு செய்கிற தொகை 394.01 கோடி ரூபாய். இதை அந்த மாநிலத்தின் மக்கள் தொகையால் வகுத்துப் பார்த்தால் வளர்ச்சிப் பணிகளுக்கான நபர்வாரிச் செலவு 88.74 ரூபாய்.

அடுத்தது, இந்தியாவின் மிகப்பெரிய மாநிலமான உத்திரப்பிரதேசம். அந்த மாநிலத்தின் மொத்த மக்கள் 8.84 கோடி. அந்த மாநிலத்தின் 1975-76-ஆம் ஆண்டில் மொத்த பட்ஜெட் 934.19 கோடி ரூபாய். இதில் வளர்ச்சித் திட்டங்களுக்கு 665.05 கோடி ரூபாய். வளர்ச்சி அல்லாத, நிர்வாகம், போலீஸ், கடன், பென்ஷன் போன்றவைகளுக்கு 259.51 கோடி ரூபாய். உள்ளாட்சித்துறை, கிராமப் பஞ்சாயத்துகளுக்கு அந்த மாநில அரசு மானியமாக வழங்குகிற தொகை 9.63 கோடி ரூபாய். எனவே ரிசர்வ் வங்கியின் அறிக்கையின் படி உத்திரப் பிரதேச மாநிலத்தில் வளர்ச்சிப் பணிகளுக்காக, உள்ளாட்சி நிறுவனங்கள் உட்பட செலவிடப்படுகிற மொத்தத் தொகை 674.68 கோடி ரூபாய். இதனை அந்த மாநிலத்தின் மக்கள் தொகையால் வகுத்துப் பார்த்தால் நபர்வாரி வளர்ச்சிப் பணியின் செலவு 76.32 ரூபாய் ஆகும்.

இப்பொழுது தமிழ்நாட்டிற்கு வருவோம். ரிசர்வ் வங்கியின் அறிக்கையின் படி தமிழ்நாட்டின்

1975-76-ஆம் ஆண்டின் மொத்த பட்ஜெட் 579.26 கோடி ரூபாய் ஆகும். இதில் வளர்ச்சித் திட்டங்களுக்காகச் செலவிடப்படுவது 388.83 கோடி ரூபாய். வளர்ச்சிப் பணிகளல்லாத, நிர்வாகம், போலீஸ், கடன், பென்ஷன் போன்றவைகளுக்கு 175.44 கோடி ரூபாய். ஊராட்சி மன்றம் மற்றும் கிராமப் பஞ்சாயத்து நிறுவனங்களுக்கு நமது மாநில அரசு கொடுக்கும் மானியம் 14.99 கோடி ரூபாய். எனவே மொத்த வளர்ச்சிப் பணிகளுக்காக, ஊராட்சி மன்றத்திற்கு அளிக்கும் மானியம் உட்பட 403.82 கோடி ரூபாயைத் தமிழக அரசு 1975-76-ஆம் ஆண்டில் செலவழிக்கிறது.

இந்தத் தொகையைத் தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான 4 கோடியே 11 இலட்சத்தால் வகுத்துப் பார்த்தால் நபர்வாரி வளர்ச்சிப் பணிகளுக்கான செலவு 98.25 ரூபாய் ஆகும்.

நபர்வாரி வளர்ச்சிப் பணிக்கான செலவு என்பது அந்தந்த மாநிலத்தினுடைய மக்கள் தொகையால் வகுத்துப் பார்க்கிற ஒன்றாகும். எனவே நாம் ஒப்பிட்டுக் காட்டிய வகையில் 1975-76-ஆம் ஆண்டில் ரிசர்வ் வங்கியின் அறிக்கையின் படி மேற்கு வங்கம் 88.74 ரூபாயும், உத்திரப் பிரதேசம் 76.32 ரூபாயும், தமிழ்நாடு 98.25 ரூபாயும் வளர்ச்சிப்பணிகளுக்குச் செலவிடுகிறது என்பது விளங்கும். குறைந்த மக்கள் தொகை கொண்ட மாநிலங்கள், திட்ட ஒதுக்கீட்டுக்காக அனுசரிக்கப்படும் முறைகளால் சில சிறப்புப் பயன்களைப் பெறுகின்றன என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

இதை ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் படிக்கிறாரோ இல்லையோ, அவரது "புனிதக் கரங்கள்" இந்த தாளை தொடுமோ இல்லையோ, அவரது "புனித விழிகள்" இந்த விபரங்களைக் காணுமோ இல்லையோ, நாட்டில் உள்ளவர்களை வெங்கட்ராமனைப் போன்றவர்கள் குழப்புகிறார்களே? அந்தக் குழப்பத்திலிருந்து மக்களை விடுவிக்க இந்த விவரங்கள் உனக்குப் பயன்படும் என்று நான் நம்புகிறேன்.

ஏழை - எளியோர் - ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் பற்றியெல்லாம் இன்று பேசுகிற இந்த வெங்கட்ராமனார் தொழில் அமைச்சராக இருந்த போது எப்படிப் பணியாற்றினார் என்பதை நமது அண்ணா, எவ்வளவு அருமையாக வெங்கட்ராமனாருக்கு எதிரிலேயே சுட்டிக் காட்டியிருக்கிறார் தெரியுமா?

தமிழக மேலவையில் திரு.வெங்கட்ராமனை டெல்லித் திட்டக் குழுவுக்கு வழியனுப்பி வைத்து முதலமைச்சர் அறிஞர் அண்ணா ஆற்றிய உரையில் குறிப்பிட்டதாவது:-

> "வெங்கட்ராமன் வளர்த்த தொழில்துறை ஒரு சிலருக்கே பயன்பட்டது. இதிலிருந்து மாற்றி தொழிலாளர்களுக்கு நன்மை செய்யும் திருத்தங்களை நாங்கள் செய்தால் அவர் மகிழ்ச்சியடைவார் என்று நம்புகிறேன்."

எவ்வளவு சூசகமாக அண்ணா அவர்கள் வெங்கட்ராமன் வளர்த்த தொழில்துறை யாருக்குப் பயன்பட்டது என்பதைத் தெளிவாக்கியிருக்கிறார் பார்த்தாயா?

இப்படிப் பட்டவர்கள் கையில் இன்று 'சமதர்மம்' சிக்கி மிகவும் சங்கடப்படுகிறது. என் செய்வது! காலம் மாறும் - காத்திருப்போம்!

அன்புள்ள,

மு. க.

01-04-1977



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022